தாயின் சீற்றம்



கே.பி. நீலமணி

காலையில் எழுந்ததுமே வெட்டுக் கத்தியும் கையுமாகக்கொல்லைப்புறம்நோக்கிப் போனான் கோபி. தொழுவத்தில் போடப்பட்டிருந்த மரக் கட்டையின் மீது சிறிது பொடி மணலைத் தூவிக் கத்தியை முன்னும் பின்னுமாகத் தீட்டத் தொடங்கினான்.

கட்டைக்கும் கத்திக்கும் இடையில் அகப்பட்ட பொடி மணல் மேலும் பொடியாகியது. 'சர் சர்' என்ற ஒலியுடன் தீப்பொறிகள் பறந்தன. அதைப் பார்க்கப் பார்க்கக் கோபியின் மனத்தில் எல்லையில்லாத ஆனந்தம் ஏற்பட்டது. தன் உள்ளத்தில் பெரிதாகக் குமுறிக் கொண்டிருக்கும் பெரு நெருப்பின் பிரதிபலிப்பைக் காண்பதில் அவனுக்குக் களிப்பு.

சட்டென்று தீட்டுவதை நிறுத்தி இடக்கை விரல் நகத்தின்மீது இலேசாக ஒரு தேய்ப்புத் தேய்த்தான். அப்படியே இழைப்புளியில் மரம் சுருண்டு வருவதுபோல் நகத்தைச் சுரண்டிக் கொண்டு வந்தது.

அப்பா! வெட்டுக் கத்தியால் க்ஷவரமே செய்து கொள்ளலாம் போலிருக்கிறது. அவ்வளவு கூர்மை. சட்டென்று கோபி அருகிலிருந்த வாழை மரத்தில் ஒரு சொருகு சொருகினான்.

கத்தி பாதிக்கு மேல் மரத்தில் பாய்ந்து விட்டது. அந்த இடத்திலிருந்து பால் கசிந்து கொண்டிருந்தது.


''இது போல ஒரு திவசம் வெட்டி, ஆ பட்டருடே சோரெயெ கொட்டிப்பிச்சு ஞான் கொல்லும்'' – (இதுபோல் ஒரு நாள் வெட்டி, அந்தப் பட்டரின் ரத்தம் சிந்த நான் கொல்லுவேன்) – கோபி முணுமுணுத்தான்.

வீட்டை மெழுகுவதற்கு வாளியில் சாணத்தைக் கரைத்துக் கொண்டிருந்த பகவதி ஓரக்கண்ணால் மகனைப் பார்த்துவிட்டுத் தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவளுக்கும் அது அன்றாட வேலை, அவனுக்கும் அது அன்றாட வேலை. வெட்டுக் கத்தியைத். தீட்ட வேண்டியது. தென்னையிலோ முருங்கையிலோ ஒரு வெட்டு வெட்ட வேண்டியது. 'பட்டரை' இரு முறை திட்ட வேண்டியது.

ஆரம்பத்தில் சில காலம் பகவதி மகனைக் கண்டித்துக் கட்டுப்படுத்தி வைத்திருந்தாள். பிறகு வர வர அவனுக்கு ஈடு கொடுக்க அவளால் ஆகவில்லை. எத்தனை சொன்னாலும் அவன் கேட்பதும் இல்லை – அதோடு அவளையே எதிர்க்கவும் தொடங்கி விட்டான். ஆகவே வர வர அவளும் பார்த்தும் பார்க்காததுமாகப் போய் விடுவாள்.

அன்று அவனது வெறி [illegible] அதிகமாகிவிட்டதோ என்னமோ... குருத்தும் குலையுமாக இருந்த வாழையின் இடுப்பில் நாலைந்து



சிறப்புச் சிறுகதை

மைனர் மகாதேவனைத் தீர்த்துக் கட்டிவிடுவது என்று கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்த கோபி, கடைசியில் அந்த மைனருக்கே உயிரூட்டும் பணியில் ஈடுபடும்படியாயிற்று....ஏன்? எதற்காக? உணர்ச்சிக் கொந்தளிப்புக்களும், மனப் போராட்டங்களும் கொண்ட இந்தக் கதையின் அழகைக் கொஞ்சும் மலையாள மொழியும் மெருகேற்றுகிறது. ★

போடு போட்டு விட்டான். அவை தன்னை வளர்த்து நிறுத்தியிருக்கும் பகவதியிடம் உடம்பை யெல்லாம் காட்டிக் கண்ணீர் சிந்தியது.

பகவதிக்குத் தாளவில்லை. துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. சாணிக் கையாலேயே மகனை ஓர் உந்து உந்தித் தள்ளினாள்.

''அடா... நினிக்குப் பிராந்தோ......! வாழையை எந்தினடா வெட்டிக்களையுன்னு?'' (டேய் உனக்குப் பைத்தியமா! வாழையை எதற்காகவடா இப்படி வெட்டி வீணாக்கு கிறாய்?) கொடுவாளை அவன் கையிலிருந்து பிடுங்கி எறிந்தாள்.

''இது போலெ, ஆ பட்டரை என்றெ கையால் வெட்டிக் கொல்லணும் அப்போள் தன்னே என்றெ ஹிருதயத்தினு சமாதானம் கிட்டும்'' (இதுபோல் அந்தப் பட்டரை வெட்டிக் கொல்ல வேண்டும். அப்பொழுது தான் என் மனம் சமாதானமடையும்)—

''அம்மே...! ஆ ஆளு யாராணுன்னு நீ பறயு யில்லா... அல்லே?'' (அம்மா! அந்த ஆள் யாரென்று நீ சொல்ல மாட்டாயல்லவா?)

கோபம் நீங்கிப் பொங்கி வந்த துக்கத்தை அடக்க முடியாமல் கேட்டான் கோபி. பகவதி சட்டென்று தன் மகனைத் தாவி அணைத்துக் கொண்டாள். அவள் கண்களிலும் கண்ணீர் கசிந்தது.

வடக்கன் பாறையிலிருந்து பத்தாவது மைலில் இருக்கும் ஒற்றப் பாலம் மைனர் என்றால் அந்த வட்டாரத்தில் அறியாதவர்களே இருக்க மாட்டார்கள். நஞ்சையும் புஞ்சையுமாக அவருக்கு ஏராளமான சொத்து. எல்லாம் வழி வழியாக வட்டியும் முதலுமாகப் பெருகி வந்த பிதுரார்ஜிதச் சொத்துத்தான்.

மைனர் மகாதேவனுடைய பத்தாவது வயதில் அவன் மேஜராவதற்கு முன்னமே அவனது பெற்றோர்கள் இறந்து விட்டனர். பெற்றோருக்கு அவன் ஒரே பிள்ளை. அவனைக் கேள்வி கேட்பாரில்லை. சிறு வயதில் உற்றார் உறவினர்களுக்குச் சிறிது கட்டுப்பட்டிருந்த மாதிரி மகாதேவன் நடந்து கொண்டிருந்தான். மீசை முளைத்தவுடன் அதுவும் அஸ்தமித்துவிட்டது.

''மைனர்வாள்!'' — என்று அழைத்துக் கொண்டு அங்கு போலி உறவு கொண்டாடுபவர்களுக்கெல்லாம் ராஜ உபசாரம் நடந்தது. மைனர் வியாபகம் சுற்று வட்டாரம் முழுவதும் வியாபித்தது. அவனது நடத்தை பிடிக்காமல் உண்மை உறவினர்கள் ஒதுங்கிப் போய் விட்டனர். ஆனால் அதைப் பற்றியெல்லாம் மகாதேவனுக்குச் சிந்திக்க நேரமே இருக்கவில்லை.

மைனரின் செல்வமும் நண்பர்களின் ஆலோசனையும் பெட்ரோலும் நெருப்புமாக இணைந்து செயல்பட்டன. சொத்துக்கள் எல்லாம் விரைவிலேயே முக்கால்வாசிக்கு மேல் அழிந்து போயின. கால்வாசி வயதை எட்டிப் பிடிக்கு முன்னரே முக்கால்வாசி வாழ்க்கை வாழ்ந்து விட்டதைப் போல் தளர்ச்சியும் தள்ளாமையும் தன்னைத் தாவிப் பிடித்துக் கொண்டுவிட்டதை உணர்ந்த மகாதேவன் பற்றுக் கோடைத் தேடிக் கையை வீசினார். பக்கபலமாக இருந்த நண்பர்கள் எல்லாம் நகர்ந்து விட்டதை மைனர் அப்போதுதான் உணர்ந்தார்.

தனிமை வந்து மொய்த்துக் கொண்ட போதுதான் மைனரின் மனத்தில் தனக்கென்று ஓர் இல்லாள் இல்லாத குறை தோன்றவாரம்பித்தது. அப்போதெல்லாம் அவர் பகவதியைத்தான் நினைத்துக் கொள்வார்.

ஆம்! உண்மையிலேயே அவர் மைனராக இருந்த காலத்தில் அவரது ஆசை வார்த்தைகளில் நம்பி விழுந்து நாசமாய்ப் போன பெண்களில் பகவதியும் ஒருத்தி. ஆனால் மற்றவர்களை யெல்லாம் மறந்துவிட முடிந்த அவரால் பகவதியை மட்டும் மறக்கவே முடியவில்லை.

அதற்குக் காரணம், இறுதிவரை அவளை அவருடைய பணத்தினாலோ, பசப்பு வார்த்தைகளினாலோ ஏமாற்றவே முடியவில்லை. ஏழைப் பெண்ணாக இருந்தாலும் அழகிய அவள் பெரிய அரசியைப் போல் சிறந்து விளங்கினாள். அவளுடைய பிடிவாதத்தினாலேயே மைனருக்கு அவளிடம் பற்றுதல் அதிகமாயிற்று. அவளைப் பணிய வைக்காமல் விடுவதில்லை என்று மைனரின் 'நண்பர்கள் துரோக வலை விரித்தனர்.

''பகவதி, உன்னை நான் நிச்சயம் 'சம்பந்தம் (திருமணம்) பண்ணிக் கொள்கிறேன்'' என்று அவள் தலை மேல் அடித்து நம்ப வைத்து வயிற்றில் ஓர் உயிரையும் குடியேற்றிவிட்டுத் தனக்கு ஒரு சம்பந்தமுமே இல்லாதவன் போல் ஒரு நாள் குடிசையிலிருந்து வெளிவந்து விட்டான் மகாதேவன்.

அப்போது ரத்தத்திலே ஜீவ அணுக்கள் அதிகமாகத் துள்ளித் திரிந்து கொண்டிருந்த காலம். எதுவும் இலட்சியமில்லை — லட்சியம் எதுவுமில்லை — லட்சியத்துக்கு மதிப்புமில்லை என்று எண்ணிக் கொண்டிருந்த காலம்.



இன்று அந்த இறந்த காலம் அவர் கண் முன் பேயாட்டம் ஆடிக் கொண்டிருந்தது.

பகவதிக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்ததாக அவர் கேள்விப்பட்டார். ஆனால் மனைவியோடு இருக்கிற அந்த நேரத்தில் அது மறைக்க — அல்லது மறந்துவிட வேண்டிய ஒரு விஷயமாகவே மகாதேவனுக்குத் தோன்றியது.

ஆனால் வர வர இப்போது அவரது மனத்தில் ஒரு புதுச் சபலம் அடிக்கடி தோன்றி வேதனைப்படுத்திக் கொண்டே யிருந்தது.

இன்று பகவதியின் மகனுக்குப் பதினைந்து பதினாறு வயதுகூட இருக்கலாம். அவனைப் போய்ப் பார்த்தால் என்ன? அவள்தான் எப்படி யிருப்பாள்? பகவதிக்குத் தன்னை இப்போது பார்த்தால் கூட அடையாளம் தெரியுமோ என்னமோ — அது கிடக்கட்டும். அடையாளம் தெரியாவிட்டால் என்ன? தம் நினைவாவது இருக்குமல்லவா? — இப்படி அவர் எண்ணிக் கொண்டிருக்கும்போதே, ''சுரீர்'' என்று யாரோ தம் முதுகில் சவுக்கால் ஓங்கி அடிப்பதைப் போல் மகாதேவன் ஒரு கணம் துடித்தார்.

மனச்சாட்சியின் சவுக்கடிகளுக்கு ஈடு கொடுக்க முடியாத மகாதேவன் திக்கித் திணறினார். அதன் பிறகு அவளைத் தேடிக் கண்டுபிடித்துத் தம்முடன் அழைத்து வைத்துக்கொண்டுவிட வேண்டும் என்று மகாதேவன் மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் வீணாயின. அவள் தன் மகனையும் அழைத்துக் கொண்டு எங்கேயோ சென்றுவிட்ட செய்தி பிறகு அவருக்குத் தெரிய வந்தது. ஆனால் அதன் பிறகும் அவர் அவளைத் தேடுவதை நிறுத்தவில்லை.

கட்டுக் கட்டாக வெட்டி வைத்திருந்த 'மரச் சீனி'ச் செடிகளை வரிசையாக இடைவெளி விட்டு நட்டுக் கொண்டிருந்தாள் பகவதி. அது முடிந்ததும் அழகாகக் கட்டி முடித்திருந்த பாத்திகளுக்குக் கமலையால் தண்ணீர் இறைத்து விட்டுக் கொண்டிருந்த பகவதியிடம் ஓடிவந்து அவளுடைய சிநேகிதி பாருக்குட்டி சேதி ஒன்றைக் கூறினாள்.

அதைக் கேட்டதும் பகவதியின் கையிலிருந்த கமலை தானே நழுவிக் கிணற்றில் விழுந்து தண்ணீரை வாரி இறைத்தது. மறு கணம் கையையும் காலையும் உதறிவிட்டுப்

பகவதி கண் மண் தெரியாமல் ஓடினாள். எங்கோ உலகத்தில் மறு கோடியை நோக்கி ஓடுவது போல் ஓடிக் கொண்டிருக்கும் பகவதி சிறு புள்ளியாகத் தெரியும்வரையில் இமைக்காமல் அந்த இடத்திலேயே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள் அவளுடைய சிநேகிதி.

ஆம்! பகவதி அத்தனை வேகமாக எங்கோ இருக்கும் தன் குடிசையை நோக்கித்தான் ஓடிவந்து கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் இருந்த ஒரே பிரார்த்தனை எல்லாம், "தன் பிள்ளை அந்த வேளையில் எங்கேயும் போகாமல் வீட்டில் இருக்க வேண்டுமே" என்பதுதான். அந்தக் கவலையுடனேயே கண் மண் தெரியாமல் களத்து மேட்டிலிருந்து வேகமாக ஓடி வந்தவள், குடிசை திறந்திருப்பதைக் கண்டதும் எல்லை மீறிய மகிழ்ச்சியோடு உள்ளே பாய்ந்தாள்.

மறு கணம்...?

"கோபி...!" என்று அலறியவண்ணம் தடால் என்று தரையில் சாய்ந்தாள் பகவதி. ஆம்! ஓடிவந்த வேகத்தில் குடிசையின் நிலைப்படி அவளது நெற்றியைப் பிளந்து கீழே தள்ளி விட்டது.

கொல்லையில் கொடுவாளைத் தீட்டிக் கொண்டிருந்த கோபி, தாயாரின் அலறலைக் கேட்டுப் பதறிப்போய் உள்ளே ஓடி வந்தான். கீழே ரத்த வெள்ளத்தில் பகவதி புரண்டு கொண்டிருந்தாள். அவளது தலையிலிருந்து ரத்தம் 'குபுகுபு'வென்று கொட்டிக்கொண்டிருந்தது.

கையிலே பளபளத்துக் கொண்டிருந்த அரிவாளை வீசி எறிந்து விட்டு "அம்மா!" என்று அலறியவண்ணம் கோபி தன் தாயாரது தலையை இறுகப் பிடித்துக் கொண்டான். ரத்தம் வீணாகாமல் தன் தோளிலிருந்த துண்டால் வெட்டுண்ட பாகத்தை அழுந்தப் பிடித்துக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் கண் விழித்த பகவதி தன் மகனைத் துரிதப்படுத்தினாள்.

"மகனே, கோபி! வேகம் நின்றே ஏழெட்டு பெடைக் கோழிக் குஞ்சுங்களையும் எடுத்தோண்டு, குஞ்சுண்ணி மரக்காயருடே பெரயடத்தேக்கு ஓடிப்போ... அவிடே யாரோ ஒரு ஆளுனெ, 'மூர்க்கன்' பாம்பு கடிச்சுக்களஞ்சு... தாமதிக்காதே ஓடிப்போ... ஓடிப்போ" என்று துரிதப்படுத்தினாள்.

மூர்க்கன் என்பது மலையாளப் பிரதேசத்தில் தோட்டம் துரவுகளில் சகஜமாகக் காணப்படும் ஒரு வகைக் கொடிய விஷப் பாம்பு. அது ஒரு மனிதனைத் தீண்டிவிட்டால் அதன் பிறகு அந்த மனிதன் பிழைப்பது அரிதுதான். அதற்கு ஒரே ஒரு வைத்தியம் உண்டு. — கடிபட்டவனுக்கு ஆயுசு கெட்டியானால் அருகில் எங்கேயாவது கோழி வளர்ப்பு இடம் இருக்கும்.

சட்டென்று ஒவ்வொரு பெட்டைக் கோழியாகக் கொண்டு வந்து பாம்பு கடித்த கடிவாயில் கோழியின் அடிவயிற்றை வைத்துப் பிடித்துக் கொள்ளுவார்கள். அந்தக் கோழி தனது அடிவயிற்றால் மனிதன் உடலிலிருக்கும் விஷத்தை உறிஞ்சும். உடனே அது இறக்கும். இப்படிப் பலப் பல கோழிகள் விஷம் இறங்கும்வரை தேவைப்படும். அந்த உதவிக்குத்தான் பகவதி இப்போது தன் மகனைக் கோழிகளுடன் செல்லத் தூண்டினாள். ஆனால் கோபி தன் தாயின் அருகிலிருந்து அசையவேயில்லை.

சட்டென்று உத்தரத்திலிருந்தும், கதவிலிருந்தும், ஜன்னலிலிருந்தும் 'பூச்சைக்கூடை' பிய்த்துக் கொண்டு வந்து தன் தாயின் நெற்றியில் வைத்து அமுக்கி, ரத்தத்தைக் கட்டுப்படுத்த இன்னும் தனக்குத் தெரிந்த என்னவெல்லாமோ செய்து கொண்டிருந்தான்.

மீண்டும் மகன் தன் அருகிலேயே இருப்பதைக் கண்ட பகவதி, "அடா....இனியும் நீ இவிடே யிருந்து போயில்லியோ?" என்று கேட்டு வெறி பிடித்தவள்போல் அவனை உந்திக் கொண்டு எழுந்திருக்க முயன்றாள். ஆனால் அவளால் தள்ளவில்லை.

"அம்மா... நின்னே இவிடே இங்ஙனே விட்டுமச்சு, ஞான் போவு இல்லா. எட்டடியோ, பத்தடியோ மூர்க்கன் யாரையோ எந்தினே கடிச்சால் எனிக்கு எந்து? ஞான் நினிக்கு வைத்தியரே விளிச்சோண்டு வரான் போவுன்னு!"

பகவதி இரும்புப் பிடியாக மகன் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள்.

"அடா.... நினக்கு அம்மே வேணோ வேண்டியோ? பாம்பு கடிச்ச ஆளு, யாரோணென்னு, நீ அறியுமோ? அடா.... அது நின்றே அச்ஞனு. கோழியேயும் எடுத்தோண்டு ஓடிப் போடா — நீ இப்பொழே போயில்லங்கில் ஞான் ஈ வெட்டுக் கத்தி கொண்டு, என்றே தலையே அறுத்துக் கொள்ளும்."

சட்டென்று அவள் தரையில் கிடந்த அரிவாளைக் கையில் எடுத்துக் கொண்டாள். கோபி அப்படியே ஒரு கணம் வெலவெலத்துப் போய்ச் சிலையாக நின்று விட்டான்.

யாரை அவன் வாழைக் குலையைச் சீவி எறிவது போல் சீவி எறிய வேண்டும் என்று விவரம் தெரிந்த நாள் முதல் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தானோ, அவருக்கே அவன் உயிர்ப் பிச்சையளிப்பதா? தன் தாய்க்கு அவர் செய்த துரோகத்துக்குத் தெய்வத்தினிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் அரவம் தீண்டிச் சாகப் போகிறவருக்குத் தன் கையினாலேயே உயிரூட்டுவதா?

'நிச்சயம் முடியாது. அதைவிடத் தன் தாயார் அவள் கையிலிருக்கும் அரிவாளால் தன்னைக் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டாலும் போடட்டும்.' அது அவனுக்குப் பிடித்தது.

"அம்மே... ஞான் போவு இல்லா."

"அட துரோகி... எந்தடா பறஞ்சு? நீ போவு இல்லா...அல்லோ? வேண்டா. இதோ ஞான் போவாம். இனி நீ என்ற மவனுமல்ல- ஞான் நினக்குத் தள்ளயு (தாயு)மல்ல."

எங்கிருந்துதான் அவளுக்கு அப்போது அப்படியொரு தெம்பு வந்ததோ! பத்திர காளி மாதிரி ரத்தம் வழிந்தோடும் முகத்தோடு கூடையைத் தூக்கி ஏழெட்டுக்

கோழிக் குஞ்சுகளின் காலைப் பிடித்துத் தூக்கினாள்.

''தடால்'' என்று கோபி அவள் காலில் வந்து விழுந்து, அந்தக் கோழிகளைத் தன் கையில் சேர்த்துப் பிடித்துக் கொண்டான்.

''அம்மே... இதோ ஞான் போகுன்னு. நினிக்கே இல்லாத்தது எனிக்கெந்து? ஆ பாபிக்கு இப்பொழுங்கிலும் என்றே பொன்னு அம்மெயுடெ நெஞ்சு அறியட்டே!''

—கூறியவன் பதிலுக்குக் கூடக் காத்திருக்கவில்லை. கைகளில் கோழிக் குஞ்சுகளுடன் பருந்தைவிட வேகமாகப் பறந்து சென்று குஞ்சுண்ணி மரக்காயருடைய தோட்டத்தை அடைந்தான்.

அங்கே...!

தம்முடைய நிலத்தை மரக்காயருக்குப் பேச வந்த இடத்தில் பாம்பு கடிபட்ட ஒற்றப்பாலம் மைனர் பேச்சு மூச்சு இல்லாமல் மல்லாந்து கிடந்தார். சுற்றிலும் ஆட்கள் பேச்சு மூச்சில்லாமல் நின்றுகொண்டிருந்தனர். முழங்காலுக்கு மேல் விஷம் ஏறுமல் இருக்கப் பலமாக ஒரு கட்டுப் போடப்பட்டிருந்தது.

கோழிக் குஞ்சுகளோடு அங்கு வந்து சேர்ந்த சிறுவனைக் கண்டதும் அங்கிருந்த அனைவருக்கும் கடவுளையே நேரில் கண்டு விட்டது போலிருந்தது.

எல்லோரும் வைத்த கண் வாங்காமல் அழகே உருவான அந்தச் சிறுவனையே பார்த்த வண்ணமிருந்தனர். வேறு சிலர் மைனரையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தனர். அதில் ஏதோ ஓர் அதிசயம் இருப்பதை அவர்கள் தேடினர். அவர்கள் விஷயம் அறிந்தவர்கள்.

கோபியின் ஆறு கோழிகளின் உயிரையும் குடித்துவிட்டு மைனரின் விஷம் இறங்கியது.

''யார் இந்தப் பையன்? தக்க சமயத்தில் வந்து உயிர்ப் பிச்சை கொடுத்தானே...'' என்கிற அனைவருடைய சந்தேகத்தையும் பகவதியின் சிநேகிதி பாருக்குட்டிதான் வந்து விளக்கினாள்.

''இது... மோட்டுவிளை பகவதியுடே மகனுணு!'' அவளுடைய குரலில் இதைக் கூறும்போது ஒருவிதப் பெருமிதம் பொங்கி வழிந்தது.

மைனரின் கண்களோ தனக்கு உயிர்ப் பிச்சை அளித்த சிறுவனையே துழாவியது. ஆனால் அவன் அங்கிருந்தால்தானே! காரியம் முடிந்ததும் தாயைக் காணச் சிட்டாய்ப் பறந்தோடி விட்டான்.

பிறகுதான் அவன் யார் என்பதை மைனருக்கும் பாருக்குட்டியே விளக்கினாள். ''பகவதி'' என்ற சொல்லைக் கேட்டதும் மைனர் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்திருந்தார். அத்தனை நேரம் விஷம் பரவிக் கிடந்த உடம்பில் அந்தப் பெயரைக் கேட்டதும் அமிர்தம் பாய்ந்ததைப் போல் உடனே புதுத் தெம்பு அவர் உடலில் பரவியோடியது.

மைனரைத் தொடர்ந்து ஒரு கூட்டமே சென்றது, அவர்களைப் பார்க்க. ஆனால் பகவதியின் வீட்டினுள் அடியெடுத்து வைத்த போது கோபியின் பெரும் அழுகுரல்தான் அவர்களை வரவேற்றது.

தொண்டை நரம்புகளே வெடித்துவிடும் படி தன் தாயின் தலைமாட்டில் நின்று கோபி பெரிதாகக் கதறிக் கொண்டிருந்தான். பகவதியுடைய அன்பு உள்ளத்தால் கவரப்பட்ட அக்கம் பக்கம் உள்ளவர்கள் அனைவரும் அங்கு வந்து கூடி அழுத வண்ணம் இருந்தனர்.

''மண்டை பிளந்து விழுந்த தன் தாயாருக்கு அருகில் இருந்து முதல் உதவிகூடச் செய்ய முடியவில்லையே. அதற்குக்கூடத் தன்னைக் காத்திருக்க அனுமதிக்காமல் யாரோ ஒரு துரோகியைக் காப்பாற்றத் தன்னைத் துரத்திவிட்டாளே தன் அருமைத் தாய்'' என்று ஆறுதலே பெற முடியாமல் முகத்திலே அறைந்து கொண்டான் கோபி.

ரத்த வெள்ளத்தில் புரண்டு கிடக்கும் பகவதியையும் அருகில் இருக்கும் மகனையும் மாறி மாறிப் பார்த்தார் மைனர். புத்திர பாசம் அவர் உள்ளத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தது. ''இத்தனை நாட்களுக்குப் பிறகு பகவதியை இந்த நிலையிலா சந்திக்க வேண்டும்?'' என்று அவர் மனம் கலங்கியது. தம்மையும் மீறிப் ''பகவதி!'' என்று அலறிய வண்ணம் அவள் அருகில் சென்றார்.

மறு கணம்...?

தரையிலே கிடந்த அரிவாளைப் பாய்ந்து எடுத்துக் கொண்ட கோபி அந்த வீடே அதிரும் வண்ணம் கத்தினான்.

''தொடாதே...!''

மைனர் அப்படியே ஒரு கணம் பிரமித்து நின்றுவிட்டார். ஆவேசம் வந்தவனைப் போல் கோபி கூவினான்.

''என்றே பொன்னு அம்மையைக் கொன்ற மகாபாவி; நின்றே பாபக் கரங்களால் ஆ தெய்வத்தினே தொடாதே.''

''கோபி.. அங்கத்து யாராணன்னு அறியுமோ...? நின்றே அச்சனுணு!'' என்று ஒரு பெரியவர் விளக்கினார்.

''எனிக்கு யாரும், ஏதும் பறஞ்சு கொடுக்காண்டா.'' கோபி சீறி விழுந்தான்.

''அட, நின்னே அத்தேகம் பங்களாவுக்கு விளிச்சோண்டு போவான் போகுன்னு.''

''ஞான் யாரு கூடேயும் வரான் தயாராயில்லா. நிங்களெல்லாம் இப்போழே இவிடந்து ஓடிப்போய்க் கொள்ளணும். அல்லங்கில் நிங்கள் அத்தனை பேரையும் ஞான் வெட்டிக் கொல்லும்.'' வெறி பிடித்தவனைப் போல் அரிவாளைக் கோபி உயர்த்தினான்.

மறு கணம் உயிரின் மேல் ஆசை கொண்ட உயிர்கள் அனைத்தும் தங்கள் தங்கள் உடலைச் சுமந்தவண்ணம் கொல்லையாலும் வாசலாலும் ஓடி மறைந்தன. — குடிசையினுள் ஒரே ஒரு உயிரும், ஒரே ஒரு உயிரற்ற உடலும் தான் எஞ்சின. கோபி கையிலிருந்த அரிவாளை வீசி எறிந்தான். தன் எண்ணம் ஈடேறாத வருத்தம் இப்போது அவனுக்கில்லை. அதைவிடத் தன் தாயின் இறுதி விருப்பத்தைப் பூர்த்தி செய்துவிட்ட ஆத்ம திருப்தியே அவன் முகத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

கண் விழித்துப் பார்த்தபோது வண்டி பண்ருட்டியிலேயே நின்று கொண்டிருப்பது தெரிந்தது. ஜன்னல் ஓரத்தில் கண்ணுடித் தடுப்பில் தலை சாய்த்தவாறு ஒருக்களித்துப் படுத்திருந்த நண்பர் அனுதாபமாக ஒரு புன்முறுவலை வீசி விட்டு, ''வண்டி இப்போ தைக்குப் புறப்படாது போலிருக்கிறது, ஸார்! திண்டிவனத்துக்குப் பக்கம் – 'குட்ஸ்' வண்டி தடம் புரண்டு விட்டதாம்'' என்றார்.

நான் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி எட்டு ஆகியிருந்தது. இந்நேரம் சென்னையில் அல்லவா இருக்க வேண்டிய வண்டி அது !

''சாப்பிடுவதற்கு ஏதாவது கிடைக்குமா?'' என்று கேட்டவாறே மேல் பலகையிலிருந்து இறங்கினேன். பசி வயிற்றில் தடம் புரண்டு கிடந்தது.

சாதாரண நாட்களில் ஈ ஓட்டிக் கொண்டிருக்கும் மரக்கறி உணவுச் சாலையிலும், ஈ ஓட்டாமலிருக்கும் பலாப்பழ் வியாபாரிகளைச் சுற்றிலும் அன்று சொல்ல முடியாத கூட்டம். முந்திரிப் பழக் கூடை ஒன்றைச் சுமந்து கொண்டு வந்த கிழவன் மடி நிறையச் சில்லறையைக் கட்டிக் கொண்டு பத்தே நிமிடங்களில் திரும்பிப் போனான். நுங்கு வியாபாரிகளின் கூடைகள் இரண்டே நிமிடங்களில் காலியாயின.

பசியை ஓரளவு தணித்துக் கொண்டு திரும்பி வந்து பிளாட்பாரத்தில் நின்றேன். திருச்சியில் ஏறியபோது என்னுடன் மூன்று பேர்கள்மட்டுமே இருந்த பகுதியில் இப்போது மேலும் மூன்று பேர்கள் வந்து சேர்ந்திருந்தார்கள். ஒருவன் இளைஞன். இருபத்தாறு அல்லது இருபத்தேழு வயதுக்கு மேல் இராது அவனுக்கு. மற்றொருவர் நாற்பது வயதுக் காரர். மூன்றாவது பிரயாணி ஒரு பெண் மணி! அவளுக்கு இருபது வயது இருக்கலாம்.

இளைஞன் உல்லாச புருஷன் என்பது முதற் பார்வையிலேயே தெரிந்து விட்டது. அடிக்கடி தலையை வாரிவிட்டுக் கொண்டே இருந்தான். பெட்டியிலிருந்து விதம் விதமான கிரீம்களையும், வாசனைத் தைலப் புட்டி

தோற்றம்



களையும் எடுத்து மாற்றி மாற்றி அடுக்குவதை ஒரு பொழுதுபோக்காக அவன் செய்துகொண் டிருந்தான். புகைப்பட ஆல்பம் ஒன்றை எடுத்து வெளியே போட்டான். ஆனால் யாரும் அதை ஆர்வத்தோடு வாங்கிப் பார்க்க முன்வராதது அவனுக்கு ஏமாற்றமாக இருந் திருக்க வேண்டும். கற்றைக் கடிதங்களை எடுத்துப் பரப்பினான். அவற்றில் ஒரு கடிதத் தின் தலைப்பில் காலஞ்சென்ற மகாராஜா ஒருவரின் பெயர் கொட்டை எழுத்துக்களில் கண்ணைக் குத்திற்று. இன்னொரு கடிதம் அயல்நாட்டு உறைக்குள் தவித்துக் கொண் டிருந்தது.

நாற்பது வயதுக்காரர் ஓர் அப்பாவி மனிதர். அவருடைய தோல் பையில், 'வைத்தா' என்ற பெயர்ச் சீட்டு தெரிந் தது. குறுகிய நெற்றியில் முட்டைக் கண் களுக்கு மேலே புருவங்களின் அடர்த்தியான கேசத்தைத் தவிர அவருடைய தோற்றத்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவும் இல்லை.

அந்தப் பெண் நல்ல அழகி. எளிமையான உடை தரித்திருந்தாள்.

இந்த மூவரும் மூன்று கோணங்களில் அமர்ந்திருந்தார்கள். ஜன்னல் ஓரத்து நண்ப ருக்கு இருப்புக் கொள்ளவில்லை. ''என்ன ஸார், இப்ப ஆகிப் போச்சு?... வண்டி புறப் படுமா புறப்படாதா? எனக்கு அவசர ஜோலி இருக்கு பட்டணத்திலே'' என்றார்.

இளைஞன் ஏதோ கிரீமை முகத்தில் தேய்த்த படியே அவரைப் பார்த்து, ''எனக்கு அவசர வேலை எதுவும் இல்லை, ஸார்! வண்டி எப்போது போனாலும் சரிதான். போகாமலே இருந்து விட்டாலும் சரிதான்'' என்றான். சொல்லி விட்டுக் கடகடவென்று சிரித்தான்.

நான் முகத்தைச் சுளித்தேன். பைய னுடைய முதல் பேச்சே நன்றாக இல்லையே!

சிரித்ததோடு மட்டுமில்லை; ஒரு மூலையில் 'தேமே' என்று உட்கார்ந்திருந்த அந்தப் பெண்ணின் பக்கம் பார்வையை ஓட்டி, தன் ஹாஸ்யத்தை அவள் எப்படி ரசித்தாள் என் பதைக் கவனித்தான் அவன். அவளோ இந்தப் பக்கமே தலையைத் திருப்பவில்லை.

இளைஞன் தொடர்ந்தான்: ''சில நாட் களில் எனக்குப் பொழுதே போகாது.... அப்போதெல்லாம் இப்படியே கிளம்பிவிடு வேன்...... அவசரத்துக்கும் அவசியத்துக்கும் நான் ரயிலை நம்புவதில்லை. சொந்தக் காரிலே தான் போவது. என் கார் இப்போது கொஞ் சம் பழுதாகி யிருப்பதால் ரிப்பேருக்கு விட்

ஏ.எஸ்.ராகவன்



சிறப்புச் சிறுகதை

ரயில் பிரயாணத்தில் எத்தனை எத்தனையோ ரஸமான சம்பவங்கள். இந்தச் சம்பவங்களை யெல்லாம் நன்ருகப் பார்த்து அனுபவித்து, மகிழ்ந்தவர் அந்த இலாகாவில் பணி புரியும் ஏ. எஸ். ராகவன். அந்த இளைஞன் முரடன், அயோக்கியன் என்று முதலில் நினைக்கிருேம். ஆனல் கடைசியில் கதையில் ஒரு திருப்பத்தைத் தந்து விடுகிருரே! ★

டிருக்கிறேன்..... அக்கிரமம் ஸார், ஐந்நூறு ரூபாய் 'பில்' பண்ணுருன்!

''அடுத்த மாதம் ஸ்டேட்ஸுக்குப் போகலாம் என்றிருக்கிறேன். அப்பொழுது...''

எனக்குப் பொறுக்கவில்லை. ''ஆஹா.... தாராளமாகப் போய் வாருங்கள்'' என்றேன்.

''நீங்கள் சொல்லி விட்டால் போதுமா? அரசாங்கத்திடமிருந்து அனுமதி கிடைக்க மாட்டேன் என்கிறதே!''

''சே! சே! என்ன அரசாங்கம் இது! உங்களைப் போன்றவர்கள் அயல்நாடு போவது இந்தத் தேசத்துக்கு எவ்வளவு நன்மை!'' என்றேன் கிண்டலாக.

'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டது. சிரித்தவள் பெண்மணி. ஜன்னலோரத்து நண்பருக்கு உள்ளூற மகிழ்ச்சி ஏற்பட்டது, இளைஞனின் மூக்கை நான் நன்ருக உடைத்து விட்டேன் என்று.

அவனுக்கு அது தெரிந்தால்தானே! ஒரு தைலப் புட்டியை மூக்கில் வைத்து ஓர் இழுப்பு இழுத்துவிட்டு, 'அதை ஏன் கேட்கிறீர்கள், ஸார்?.... வாஸ்தவத்தில் நான் புறப்படுகிறேன் என்ருல் கண்ணை மூடிக் கொண்டு 'பாஸ்போர்ட்' தர வேண்டியது தான் நியாயம்..... எங்கள் குடும்பத்தின் பெருமை என்ன, அந்தஸ்து என்ன! கேவலம் ஒரு கிராம முன்ஸீப் வில்லாய் விறைக்கிருன், ஸார்! சொத்து பற்றி அத்தாட்சி வேண்டுமாம். அதற்காக அவனிடம் போய் நிற்க வேண்டியிருக்கிறது..... ஏன், ஸார்! இந்த அரசாங்க அமைப்பையே மாற்றினல் என்ன?'' என்று கேட்டான்.

''மாற்றலாமே..... நம்முடைய சௌகரியத்துக்கு இல்லாத அரசாங்கம் இருந்தென்ன, போயென்ன?''

''அப்படிச் சொல்லுங்கள்....'' என்றவன் அந்தப் பெண்ணைக் கடைக் கண்ணுல் பார்த்தான். அதே சமயம் அவள் பார்வையும் பட்டது போலும். இளைஞன் முகத்தில் அசடு வழிந்தது.

பெட்டியை மறுபடியும் குடையலானன் அவன். ஒரு கண்ணுடியை வெளியே எடுத்து அதில் தன் முக அழகைப் பரீட்சித்தான். அழகைவிட அசடு அதிகம் வழிந்ததைப் புரிந்து கொண்டு விட்டான் போலிருந்தது. உடனே அதை துடைத்தெறியச் சங்கல்பம் செய்து கொண்டவனய்ச் சோப்பு, சீப்பு, துண்டு முதலிய உபகரணங்களுடன் தண்ணீர்க் குழாயை நாடி ஓடினன்.

ஜன்னலோரத்து நண்பரும், நாற்பது வயதுக்காரரும் காற்ருட நடக்கலாம் என்று வெளியேறினர். அந்தப் பெண்ணும் இறங்கினுள். நான் மட்டும் உட்கார்ந்திருந்தேன்.

இளைஞன் திரும்பி வந்தான். அந்தப் பெண்ணைக் காணேம் என்றதும் படபடப்புடன், ''எங்கே ஸார், அவள்?'' என்ருன்.

''ஏன்?'' என்றேன் கோபமாக.

அவன் சிரித்தான். முகத்தைத் துடைத்தவாறே கிண்டலாக, ''அவளைக் கவனித்தீர்களா, ஸார்?'' என்ருன். அடுத்து என் பதிலுக்குக் காத்திராமல், ''பெண் 'ஒரு மாதிரி' என்பது முதல் பார்வையிலேயே தெரியவில்லையா உங்களுக்கு?'' என்று கேட்டான்.

இதுகாறும் போனுற் போகிறதென்று பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்த எனக்குக் கோபம் வந்துவிட்டது. ''இதோ பாருங்கள், மிஸ்டர்...'' என்றேன்.

இளைஞன் பின்வாங்கி விட்டான். ''அதாவது.... ஸார்.... நீங்கள் கவனிக்கவில்லை போலிருக்கிறது. அவள் ஒரு மாதிரிதான். அதாவது, ஸார், இவ்வளவு அழகான பெண் தனியாக வரலாமா?... இருங்கள் வந்து விட்டேன்...'' அவசரமாக இறங்கிப் பிளாட்பாரத்தில் ஓடினன். பிறகு அவளோடு திரும்பி வந்தான். அந்தப் பெண்ணே முகத்தைத் திருப்பிக் கொண்டு வண்டிக்குள் நுழைந்து விட்டாள். அசடு வழிய நின்ருன் அவன் வெளியே.

''ஏனம்மா, இந்தப் பையனை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டேன்.

அவள் திடுக்கிட்டவள்போல் விழித்தாள். பிறகு நிதானமாகத் தலையைப் பலமாக ஆட்டி, ''தெரியாது'' என்ருள். தன் அவஸ்தைகளுக்கு ஒரு விடிவு வந்துவிட்டது போன்ற நிம்மதி அவள் முகத்தில் பளிச்சிட்டது.

நாற்பது வயது வண்டிக்குள் வந்தது. அவரைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது.

இளைஞனும் வந்துவிட்டான் அவசரமாக.

நான் அவனை முறைத்துப் பார்த்தவாறு, ''தம்பி, நீயார்? எந்த ஊருக்குப் போகிருய்?'' என்று கேட்டேன்.

''என்னைச் சேகர்னு கூப்பிடுவாங்க. நான் சென்னை வரை வரலாமென்றிருக்கிறேன். ஆனல் ஒரு குறிப்பில்லை. நீங்கள்?...''

நான் பதில் சொல்லவில்லை. ஒரு குறிப்பில்லாமல் இவன் பயணம் செய்வானும். நான்மட்டும் எங்கே போகிறேன் என்பதை இவனுக்குச் சொல்லியாக வேண்டுமோ?

''நீங்கள் எதுவரையில்?'' கேள்வியை அப்பெண்ணை நோக்கி வீசினன் அவன்.

அஜந்தா
டூத் பிரஷ்



புதிய
பெட்டி

அஜந்தா டூத்
பிரஷ்கள்
பற்களைத் துப்புர
வாகச் சுத்தம்
செய்வதற்கும்,
ஈறுகளில் இரத்த
ஓட்டத்தைக்
கொடுப்பதற்கும்
ஏற்றபடி
அமைக்கப்பட்டவை.

தி பாம்பே பிரஷ் கம்பெனி
பிரைவேட் லிமிடெட்,
பம்பாய்

RB/BB/TAM/04

தென்னிந்தியர்களின்
சுவைக்கேற்றபடி
பிரத்தியேகமாகத்
தயாரிக்கப்பட்டது





ஜி.பி
பெருங்காயம்

உயர்தர மிஸ்கி கலவை
கோபால்ஜீ அண்டு கம்பெனி, 218, ஸாமுவல்
ஸ்ட்ரீட், பம்பாய் 3

ஏஜெண்ட்: தென் இந்தியா
கோபால்ஜீ அண்டு கம்பெனி, 203, கோவிந்
தப்ப நாயக்கன் தெரு, தபால் பெட்டி எண்
1255, மதராஸ்-1


ஏஜெண்டுகள் தேவை—
எல்லா முக்கிய பலசரக்கு கடைகளிலும்
கிடைக்கும்

பதில் வரவில்லை. அவன் அதற்காகக் கவலைப்பட வில்லை. ஆல்பத்தை எடுத்து வைத்துக் கொண்டு, ''இப் படத்தில் இருக்கிறதுயார்னு சொல்லுங்க, பார்ப்போம்'' என்றான்.

கம்பளிக் கோட்டும், தலைச் சுமையுமாக ஒரு பைராகி நின்றுகொண்டிருந்தார் படத்தில்.

''தெரியல்லியா?...நானே தான் ஸார்..... காஷ்மீர் போனபோது எடுத்தது. ரவிலால் கோஷ்டி சினிமாப் படம் எடுக்கப் போச்சில்ல, அப்போ, 'சேகர், நீயும் வாடா'ன்னு கூப்பிட்டாரு ரவிலால். அவர் எனக்கு 'திக்' பிரண்டு ஸார். போயிட்டு வந்தேன். அது கிடக்குது. இந்தப் படத்தைப் பாருங்க..''

கையில் கத்தியுடன் பல்லைக் கடித்தவாறு ஒரு முரடனின் படம் அது.



''டிராம் வண்டி போனப்பறம் ஜெயந்தி சமயத்திலே சீடை ஹாஸ்யங்களுக்கெல்லாம், நம்ம வண்டியைத் தான் உபயோகப்படுத்திக் கொள்ளுங்க அண்ணே!''

''நாடகத்திலே வில்லன் வேஷம் போட்டேன். அப்போ எடுத்த படம், ஸார் இது.''

''பொருத்தமான வேஷம்தான்'' என்று கூறினேன்.

மீண்டும் களுக்கென்ற சிரிப்பொலி கிளர்ந்தது அந்தப் பெண்ணிடமிருந்து. இளைஞன் முறுவல் பூத்துக் கொண்டான். ''இதோ, இந்தப் படம் என் சேவைகளைப் பாராட்டி விழா நடந்தபோது எடுத்தது...'' என்றான் மற்றொன்றைக் காட்டி.

''என்ன சேவை செய்தீர்கள்?''

இளைஞன் கடகடவென்று சிரித்தான். ''சேவை செய்தாத்தான் பாராட்ட வேண்டுமா ஸார்?... இதெல்லாம் ஒரு பப்ளிசிடி... நாலு பேரு மாலை போட்டால், விழா நிகழ்ச்சி நிரலில் கண்டபடி பேசினால் பாராட்டு.''

''கண்டபடி பேசினால் பாராட்டா?''

''கேலி செய்யாதீங்க ஸார்...''

வண்டி ஒரு வழியாகப் புறப்பட்டது.

பிறகு சிகரெட்டைப் பற்றவைத்தான். குப்பல் குப்பலாகப் புகையை ஊதினான்.

விழுப்புரம் வந்தது. ஆம். அதுதான் வந்தது. வண்டி அங்கே போய்ச் சேர்ந்ததாகச் சொல்ல முடியாது. வாஸ்தவத்தில் அது நின்றதற்கும் ஓடியதற்கும் அதிக வேற்றுமையே தெரியவில்லை.

அந்தப் பெண் கைப் பையுடன் கீழே இறங்கினாள். நாற்பது வயதுக்காரரும் தோல் பையுடன் இறங்கினார். அதைப் பார்த்ததும் இளைஞனும் அவசர அவசரமாகத் தன் பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்க ஆரம்பித்து விட்டான். ''சென்னைக்கு வரவில்லையா தம்பி?'' என்றேன். ''இல்லை, இல்லை. இங்கே இறங்க வேண்டியிருக்கிறது'' என்று பதில் சொல்லிவிட்டு ஓட்டமாக ஓடினான் அவன்.

ஜன்னல் ஓரத்து நண்பர் அநுதாபத்துடன் என்னைப் பார்த்தார். ''பாவம், அந்த அரைப் பைத்தியத்தைச் சமாளிக்க மிகவும் சிரமப்பட்டு விட்டீர்கள்'' என்றார்.

நான் சிரித்தேன்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அந்தப் பெண் மட்டும் திரும்பி வந்து, எதிரே பிளாட்பாரத்தில் நின்றாள். இளைஞனும் நிச்சயம் வந்துவிடுவான் என்ற உறுதியில் தலையை வெளியே நீட்டினேன். வியர்க்க விறுவிறுக்க அவன் வந்தே விட்டான். வண்டிக்குள் வந்து உட்கார்ந்தான். அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். நாற்பதைக் காணவில்லை.

வண்டி புறப்படுவதற்கு முதல் மணி அடித்து விட்டார்கள். பிளாட்பாரத்தில் நின்றவள் நகரத் தொடங்கினாள். இளைஞன் கீழே இறங்கி அவளருகில் ஓடி, அவள் கையை இறுகப் பற்றிக்கொண்டு விட்டான். அவள் திமிறினாள். அவன் விடவில்லை.

இரண்டாவது மணியும் அடித்து வண்டி புறப்படவும் தொடங்கிவிட்டது.

இளைஞன் அவளை இழுத்துக்கொண்டு எப்படியோ வண்டிக்குள் ஏறிவிட்டான்.

''சீ! ஒரு பெண்ணிடம் இப்படி நடந்து கொள்ள வெட்கமாக இல்லை?'' என்று சீறினாள் அவள்.

''சரி, சரி...சும்மா உட்கார்...'' என்றான்.

அவள் உட்காரவில்லை. என்னைப் பார்த்து, ''போலீசைக் கூப்பிடுங்கள் ஸார்... இவனைச் சும்மா விடக் கூடாது. கும்பகோணத்திலிருந்தே என்னை நிழல் போலத் தொடர்ந்து வருகிறான் இவன்'' என்றாள்.

இளைஞனின் முகம் கறுத்துவிட்டது. ''என்னிடமிருந்து நீ தப்பித்துக்கொண்டு போக முடியாது, தெரிந்துகொள்'' என்றான்.

நான் அவனை உற்றுப் பார்த்தேன். அவன் தலை குனிந்திருந்தது. ''மிஸ்டர்... என்ன இதெல்லாம்?'' என்றேன்.

''நீங்கள் சும்மா இருங்கள் ஸார்!'' என்றானே தவிர ஏதும் சொல்லத் தயாராக இல்லை அவன்.

''பண்பாடு, நாகரிகம் இன்னதென்று தெரியாமல் நடக்கிறவர்களைப் போலீசில் பிடித்துக் கொடுக்க வேண்டும்'' என்றேன்.

அவன் என்னை முறைத்துப் பார்த்தான். பிறகு ஒரு புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு படிக்கிற பாவனையில் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளோ இப்போது அழத் தொடங்கிவிட்டாள். இடையிடையே தனக்குத்தானே ஏதேதோ பேசிக் கொண்டு பல்லைக் கடித்தாள். சில சமயம் அழுகையையும் மீறிச் சிரிக்கவும் செய்தாள்.

நான் முடிவு செய்துவிட்டேன், திண்டிவனத்தில் வண்டி நின்றதும், முதல் வேலையாகப் போலீசிடம் இவனை ஒப்படைத்துவிடுவதென்று.

''ஸார்... ஸார்... என்ன, ஸார், இது?'' குழறினான் அவன்.

''ஒன்றுமில்லை... உங்கள் சேவைகளைப் பாராட்டி விழா நடத்துகிறோம்'' என்றேன்.

போலீஸ்காரர் அவனருகில் சென்று, ''மிஸ்டர்! எழுந்திருங்கள்...உம்..'' என்றார்.

''எதற்காக?'' என்றான் இளைஞன்.

''எதற்காகவா? என் நகைகளையெல்லாம் பெட்டியில் பூட்டி வைத்துக் கொண்டிருக்கிறீர்களே...அதற்காக...'' என்றாள் பெண்.

இளைஞனின் வாய் அடைத்து விட்டது. பரிதாபமாகச் சுற்று முற்றும் பார்த்தான். தான் இதுகாறும் நடத்திய பெரிய மனித வேஷம் பொல பொலவென்று அவிழ்ந்து விட்டதே என்கிற துயரம் நாணத் திரையாகப் படர்ந்து விட்டது.

''நகைகளா?... நான் எடுக்கவில்லை ஸார். அவளேதான் கொடுத்தாள் என்னிடம்'' என்றான் படபடப்புடன். ஆனால் குரலில் வேகம் இல்லை.

''அதை ஸ்டேஷனில் வந்து சொல்லுங்கள்'' என்றார் போலீஸ்காரர்.

''நான் வரமாட்டேன். என்னிடம் டிக்கட் இருக்கிறது. பிரயாணம் செய்யும் உரிமையை யாரும் பறிக்க முடியாது'' என்றான் இளைஞன் பிடிவாதமாக.

அதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது.

''செங்கல்பட்டில் உன்னைக் கவனித்துக் கொள்கிறேன்'' என்றார் போலீஸ்காரர்.

இளைஞன் புத்தகத்துக்குள் தலையைப் புதைத்தான். ஒரு தடவையாவது மறந்தும் கூட அந்தப் பெண் இருந்த திசையை அவன் பார்க்கவில்லை. போலீஸ்காரர் முன்னால் வாலாட்டவாமா? பரம சாதுவாக மாறி விட்டான். ஆனால் நெடு நேரம் புத்தகத்துக்குள் ஆழ்ந்திருக்கவும் அவனால் முடியவில்லை.

''ஏன் ஸார், இப்போ ஐ. ஜி. யாரு?'' என்று கேட்டான்.

''உங்க தாத்தா...'' என்றார் போலீஸ்.

''நீங்க தமாஷ்காரர், ஸார். எங்க தாத்தா ஐ. ஜி.யா இருந்தவர்தான். ரத்தின வேலு முதலியார் தெரியுமா? அவர் இருந்த போது டப்பின்டன் துரைதான் கலெக்டர். எங்க வீட்டிலே குரூப் போட்டோ கூட இருக்குது.''

போலீஸ் விழித்தார்.

''சர்க்கிள் யாரு இப்போ?'' இளைஞன் கேட்டான்.

பதில் சொல்லிக் கொண்டிருக்கப் போலீஸ்காரருக்குப் பைத்தியமா, என்ன?

இளைஞன் அதற்காகக் கவலைப்படவில்லை. ''ராமமூர்த்தி இருந்தாரே, அவரேதான் இருக்காரா? இப்பவும்? எங்க அப்பாவுக்கு அவர் ரொம்பவும் வேண்டியவர். அடிக்கடி எங்க வீட்டுக்கு வருவார். நான் ஒரு நாள் புலி வேட்டைக்குப் போனபோது அவரும்கூட வந்திருந்தார்... நான் புலியெல்லாம் கூடச் சுட்டிருக்கேன் ஸார். ஆல்பம் பார்க்கிறீங்களா?'' போலீஸ்காரர் எழுந்து கதவருகில் போய் நின்றுகொண்டார்.

செங்கல்பட்டு வந்தது. இளைஞன் எழுந்தான். அந்தப் பெண்ணைப் பார்த்து, ''உம்.. நீயும் வா போலீஸ் நிலையத்துக்கு'' என்றான்.

''நான் வரவேண்டிய அவசியம் இல்லை'' என்றாள் அவள்.

போலீஸ்காரர், அவன் கைகளைப் பற்றி, ''வாப்பா...இங்கே கலாட்டா செய்தாயானால் தெரியும் சேதி'' என்றார்.

இச்சமயம் ஜன்னலுக்கு வெளிப்புறமிருந்து ''சேகர், என்னப்பா இது?... காலையிலிருந்து உனக்காகக் காத்திருக்கிறேன்... ஏன் இவ்வளவு நேரம்?'' என்ற குரல் கேட்டது. அடுத்து அதே குரல் ஒரு துள்ளுத் துள்ளி, ''அடேடே, மாலதியா?... என்னம்மா இது? ஒரு தகவலும் இல்லாமல் திடீரென்று புறப்பட்டு வந்திருக்கிறாய்?'' என்று விசாரித்தது.

''அதை ஏன் கேட்கிறாய் போ'' என்றான் சேகர். ''உன் தங்கையைப் போலீஸ் பந்தோபஸ்துடன் அழைத்து வந்திருக்கிறேன்'' என்று தொடர்ந்தவன் என்னைச் சுட்டிக் காட்டி, ''ஸார்தான் போலீஸை வரவழைத்தார்'' என்றான்.

எனக்கு எதுவும் விளங்கவில்லை.

அவனே விளக்கினான்: ''திருச்சி போவதற்காகக் கும்பகோணம் ஸ்டேஷனுக்கு வந்தேன். அங்கே மாலதியைப் பார்த்தேன். உடனே என் பயணத்தை மாற்றிக்கொண்டு, உனக்கும் தந்தி கொடுத்துவிட்டு இங்கே வந்து நிற்கிறேன். அடுத்த வாரம் நான் ஸ்டேட்ஸுக்குப் போயாக வேண்டும். சித்த சுவாதீனம் இல்லாத பெண்ணை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டாமோ? நான் வராமல் இருந்தால் இந்நேரம் அவளுடைய நகைகளை யெல்லாம் பிடுங்கிக்கொண்டு அந்த முட்டைக் கண் வைத்தா அவளைப் பாண்டிச்சேரியில் நடுத் தெருவில் நிறுத்திவிட்டுப் போயிருப்பான். விழுப்புரத்தில் இவளை இறக்கி அழைத்துக் கொண்டு போனான் வைத்தா. கையில் நகைப் பை இல்லை என்று தெரிந்ததும் அவன் மட்டும் நழுவி ஓடிவிட்டான். இந்த அசடும் வரமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தது. சரி... சரி... அந்தக் கதை எல்லாம் எதற்கு? அவளை ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு போ... நான் ஸ்டேட்ஸுக்குப் போனதும் கடிதாசு போடுகிறேன்.''

போலீஸ்காரர் போய்விட்டார். என்னால் அந்த இளைஞனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. சித்தசுவாதீனம் இல்லாமற்போனது யாருக்கு? எனக்கா, அந்தப் பெண்ணுக்கா? இறைவா, மனிதத் தன்மை என்கிற ஜோதியைத் தரிசிக்கச் சாதாரண, சாமான்யக் கண்களுக்குச் சக்தி இல்லையே!



மீண்டும் குலுக்கத் தொடங்கினாள். உண்மையில் குழந்தை இத்தனை ரகளையிலும் நன்றாகத் தூங்கிக் கொண்டுதான் இருந்தது. அப்பாவைக் கொண்டிருந்தது போலும்!

அறை வாசலில் நமட்டுச் சிரிப்புடன் நின்றான் நமச்சிவாயம்.

''ருக்மிணியம்மா, காரியம் செய்ய விடாமலா கொழந்தை ரோதனை செய்யறது? இன்னிக்குத்தான் உனக்கு 'ரெஸ்ட்' ஆச்சே! இப்போதானே சொன்னே, 'காப்பி போடப் போறதில்லை'ன்னு! அப்படின்னா சமையல் மட்டும் பண்ணுவியாமா? 'ரெஸ்ட்' இருக்கறத்துக்குக் கொழந்தையைத்தான் பாத்துக்கோயேன்'' என்று முகம் நிறையச் சிரிப்பை வழியவிட்டுக் கொண்டு சொன்னான் அவன்.

'குத்துக்கல்லாட்டமா! பெண்ஜாதி இத்தனை சொல்கிறாளே என்று கோவம் வராவிட்டாலும் ஒரு புருஷனுக்கு ரோசமாவது வராது? ஆமாம், ரோசமும் கோவமும் ஏதுக்கு வரணும்? ஒருபிடியா தங்கள் காரியத்தைச் சாதிச்சுக்கிறவங்களுக்கு எதிராளி கிட்ட ஆத்திரம்தான் ஏன் வரப் போகுது?' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட ருக்மிணி, ''ஆமா, கேடுகெட்ட எனக்கு இந்த வீம்புச் சவாலெல்லாம் முடியுமா? காப்பியும் நான்தான் போடணும், அப்புறம் சமைக்கணும், இன்னும் எல்லா வேலைகளும் நான்தான் செஞ்சாகணும்'' என்று அலுத்துக் கொண்டே சமையலறைக்குள் நுழைந்தாள்.

அவள் ஏற்கனவே மூட்டி வைத்திருந்த அடுப்புடன் இன்னோர் அடுப்பையும் இப்போது மூட்டி வைத்திருந்தது. இரண்டிலும் இரண்டு பால் பாத்திரங்களும் ஆரோகணித்திருந்தன. கணவனுடைய காரியம்தான்!

அடுப்புத் தணலைப் போலவே ருக்குவின் நெஞ்சும் எரிந்தது.

''இந்தாங்க! எனக்கு நீங்க பதில் சொல்லாம உங்க வழியிலேயே போகலாம். என்னைத் துரும்பா நினைச்சு — இவளோடு சண்டை பிடிக்கிற அளவுக்குக்கூட இவளை இலட்சியம் செய்யக் கூடாதுன்னு நினைச்சு—உதாசீனம் செய்யலாம். ஆனால் ஆண்டவனுக்கு நீங்க ஒரு நாள் பதில் சொல்லத்தான் வேணும்!'' என்று படபடத்த ருக்மிணி

சிறப்புச் சிறுகதை

பக்தி புரியவேண்டியதுதான். ஆனால் புத்தி பூர்வமாகப் பக்தி புரிய வேண்டும் என்று இன்றைய உலகம் நினைப்பதையேதான் நமச்சிவாயமும் நினைத்தான். ஆனால் பொன்னுத்தாவின் செயல் - பக்தி புரிய புத்தி தேவை தானு என்று அவனைச் சிந்திக்க வைத்துவிட்டது! ★

காப்பி ஃபில்டரைக் கிடுக்கியால் ஒரு தட்டுத் தட்டினாள். தடதடவென்று படுவேகமாக 'டிகாக்ஷன்' இறங்கிற்று.

''காப்பி எஸென்ஸு அப்பிடியே வீணுப் போறதே ருக்கு! கிடுக்கியை ஏன் ஃபில்டர் தலையிலே போடறே? இங்கே கொண்டாம்மா, என் தலையிலே போட்டுக்கறேன்'' என்று கூறியபடி அவளுக்கு அருகிலே வந்து 'பவ்வியமாக' அமர்ந்தான் நமச்சிவாயம். கேலித்தனத்தில் குழைவைப் பிசைந்து அதைத் தன் குரலுக்கு ஊட்டிக்கொண்டு, ''அது போகட்டும், ஆண்டவனுக்குப் பதில் சொல்லணும்னியே. கேள்வி கேட்டாத்தானே பதில் சொல்லணும்? ஆண்டவன் என்ன கேள்வி கேட்பான், அதையும் சொல்லு. நீ தர்மபத்தினியாச்சே, புருஷனைக் காப்பாத்த வேண்டாமா? கேள்வியை நீ சொன்னு நான் பதிலைத் தயாரித்து வைச்சுப்பேன். அப்புறம் ஆண்டவன் கேக்கறச்சே 'ஜம்'னு பதில் சொல்லித் தப்பிச்சுப்பேன்'' என்றான்.

''என்னங்க வெளையாட்டு வேண்டிக் கிடந்தது? உங்க வீட்டிலே வண்டி மாடா உழைச்சுக் கொட்டற பெண்பிள்ளை இத்தனை தூரம் படிச்சுப் படிச்சுச் சொல்லியும் காதிலேயே போட்டுக்கத் தோணலியே! நீங்க ஒரு மனுஷரா?''

அவள் எதிர்பாராமலேயேதான் அந்தக் கடைசி மூன்று வார்த்தைகள் வந்துவிட்டன. இப்போது அந்தக் 'குத்துக்கல்லு'க்குக்கூடக் கோபம் பொத்துக் கொண்டுதான் வரப் போகிறது என்று விலவிலத்துப் போனாள்.

நமச்சிவாயமோ நமட்டுச் சிரிப்பு மாறாமலே பேசினான்: ''பாத்தியா! அதுதான் தரும பத்தினிங்கறது! உன் வாயாலேயே நான் மனுஷன் இல்லே, தேவன்னு ஒப்புக்கிட்டேயில்லியா? நான் தேவனானபடியாலே ஒரு நாளும் தெய்வக் குத்தம் செய்ய முடியாது.''

பொங்கிக் கொண்டிருந்த பால் பாத்திரங்களில் ஒன்றை அடுப்பிலிருந்து இறக்கினான் அவன். அதுதான் தன் வீட்டுக்கென்று அவன் வாங்கியது. ''என்ன, இந்த அடுப்புலே உலைநீர் வைக்கட்டுமாம்மா?'' என்று மனைவியிடம் பரிவொழுக விசாரித்தான்.

''என் வயித்திலேதான் உலை கொதிக்கிறதே!'' என்ற ருக்கு வெண்கலப் பானையில் நீரைச் சரித்து அந்த அடுப்பில் ஏற்றினாள்.

இதற்குள் இன்னொரு அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த பாலும் பொங்கிற்று. நுரை கட்டி, கொசிறு போடச் செய்து அவன் பார்த்துப் பார்த்து வாங்கியிருந்த பால் இது. அந்தப் பாலையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன வெண்மை? வெண்மையா, பசுமையா?' உலகத்துக்கெல்லாம் அம்மாவாக மடி கனக்கப் பாலைத் தரித்து நிற்கும் பசு அவன் கண் முன் வந்து நின்றது. 'பசுவின் பால் என்பதால்தான் வெண்மையானாலும் அதில் பசுமை கலந்திருக்கிறதோ? பசு, பசுமை — என்ன அழகாகச் சேருகிறது? பச்சுப் பச்சென்ற உடம்போடும், மனசோடும் இருப்பதால் பசு என்ற பெயர்தான் எவ்வளவு அழகாகப் பொருந்துகிறது? பசுவைப் பச்சை வகைகளில் — மரம் செடி கொடி வகைகளில்— தான் சேர்க்க வேண்டும். ஆமாம், அதைச் சுயநலம் பிடித்த மற்ற விலங்குகளோடும், மனிதர்களோடும் சேர்க்கக்கூடாது. மரத்தில் ஊருக்கெல்லாம் பழம் பழுப்பது போலவும், செடியில் ஊருக்கெல்லாம் பூப் பூப்பது போலவும், கொடியில் ஊருக்கெல்லாம் காய் காய்ப்பது போலவும் அல்லவா பசு ஊருக்கெல்லாம் பால் பாலிக்கிறது?'

அந்தப் பசுவின் குணத்தை நாமும்தான் எடுத்துக்கொள்வோமே என்று அவனுக்கு ஆசை. பசு வெளிமனிதருக்கும் பால் தருவது போலவே தானும் பாலுக்கு ஏங்கும் ஓரிரு பாலருக்காவது பால் வாங்கித் தர வேண்டும் என்று அவனுக்கு ஆசை.

இந்த ஆசை அவனுக்கு ஏற்பட்டதற்குக் காரணம் ருக்குதான். சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டாள். அவள் சொன்னது ஒன்று; அதிலிருந்து அவன் எடுத்துக் கொண்டது முற்றிலும் மாறுபட்ட வேறொன்று.

திருமணமாகி ஆறாண்டுகளாகியும் தாய்மை எய்தாத ருக்கு பிள்ளை வரம் கிடைத்தால் உள்ளூர் தண்டாயுதபாணிக்குத் தினமும் கால்படி பாலபிஷேகம் செய்து வைப்பதாக வேண்டிக் கொண்டாள். தண்டபாணிக்கு அபிஷேகம் செய்வதைவிட இரண்டு ஏழைப் பிள்ளைகளுக்கு அந்தப் பாலை வார்ப்பது அதிகப் பிரயோஜனமாயிற்றே என்று நமச்சிவாயத்தினுடைய சிந்தனை சென்றது. இதுதான் இன்றைய காலை நடப்புக்களுக்கெல்லாம் காரணம்.

நமச்சிவாயத்தை நாத்திகன் என்று சொல்ல முடியாது. 'இருந்தாலும் புத்தியைப் பறிகொடுக்கும் ஆஸ்திகம் தனக்கு வேண்டாம்' என்றிருப்பவன் அவன். சுவாமிக்குப் பாலை அபிஷேகம் செய்வதைவிடப் பாலுக்குத் தவிக்கும் பிள்ளைகளுக்கு அதை அளிப்பதே முறை என்று அவனுடைய புத்தி கூறிற்று. ஓரிரு நிமிஷங்கள் சிலையின்மீது வழிவதைவிட ஒரு குழந்தையின் வயிற்றுக்குள் சென்று அதற்குப் போஷணை அளிப்பதற்கே ஏற்பட்டிருப்பது பால் என்று அவனுடைய அறிவு கூறிற்று.

இப்போதுதான் பிள்ளைக் குழந்தையைப் பெற்றெடுத்துக் கொண்டு ருக்மிணி தன் வீட்டுக்குத் திரும்பியிருக்கிறாள். முன்பு பிரார்த்தித்துக்கொண்டபடி தினமும் காலை இரண்டு ஆழாக்குப் பால் முருகனுக்காக ஊற்றும்படி பால்காரனிடம் பேசிவிட்டாள். ஆனால் நமச்சிவாயமோ அந்தப் பாலை முருகனுக்குச் சேர விடமாட்டேன் என்கிறான். எதிர்ச் சிறகில் சிறிது தள்ளி, தாயைப் பறிகொடுத்த இரண்டு பேரக் குழந்தைகளுடன் வசித்து வந்த பொன்னாத்தாவிடம் அந்தப் பாலைத் தருவது என்று அவன் தீர்மானித்தான்.

இதோ, தீர்மானத்தைக் கிரியாம்சையில் நிறைவேற்றியும்விடப் போகிறான். சுடச் சுட இருக்கும் பால் பாத்திரத்தை மேல் துண்டினால் பிடித்துக்கொண்டு பொன்னாத்தாவின் வீட்டுக்குக் கிளம்பியே விட்டானே!

ருக்மிணிக்கு உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரையில் ஒரு பதைபதைப்பு உண்டாயிற்று. கத்திவிட்டாள்: "முருகனுக்கு நீங்க பதில் சொல்லணும்னேனே! அது தப்பு. உங்களை அவன் கேள்வி கேக்க மாட்டான். அதோ தூளியிலே கெடக்குதே அந்த அறியாக் குழந்தையைத்தான் கேள்வி கேட்டுடப் போறான். 'உன் பிரார்த்தனையை ஏன் செலுத்தலை?'ன்னு அதைப் பழிவாங்கிடப் போறான். நீங்க 'ஒழிஞ்சுது பீடை'ன்னு பொன்னாத்தாவின் பேரப் பசங்களையே சுவீகாரம் பண்ணிக்குவீங்க!"


நமச்சிவாயம் தயங்கினான். பால் பாத்திரத்தைக் கீழே வைத்தான். அந்த க்ஷணத்தில் ருக்குவின் வயிற்றில் பாலை வார்த்தாற்போல் இருந்தது. பெரிய வார்த்தையாக அல்லவா போட்டு விட்டாள்? யாரும் கலங்க வேண்டியதுதானே?

ஆனால்... நமச்சிவாயம் புத்திபூர்வமாகச் செயலாற்றுபவனாயிற்றே! அவனுடைய அறிவு ஒருசில விநாடிகளிலேயே விழித்துக்கொண்டு பேசிற்று. அதையே அவன் அவளிடம் பேசினான். ரொம்பவும் கத்திவிட்டாளே என்பதால் அவளிடம் பரிவு கொண்டான் போலும், வழக்கத்துக்கு விரோதமாக அவளிடம் காரண காரியம் காட்டிப் பேசினான்.

"ருக்கு! நீ ரொம்ப அசடாயிட்டே! நான் தெய்வக் குத்தம் செய்யறேன்னு சொன்னியே. உண்மையிலே நீதான் தெய்வக் குத்தம் செய்யறே. ஆண்டவனை இப்படிப் பட்ட பழிகாரனாகவா நினைக்கிறே? ருக்கம்மா, கொஞ்சம் நிதானமா யோசிச்சுப் பாத்தா உனக்கே புரியும். முருகன் தனக்கு அபிஷேகம் பண்றதைவிடப் பொன்னாத்தா பேரங்களுக்கு இந்தப் பால் பிரயோசனமானாத்தான் அதிகம் திருப்திப்படுவான்."

அவள் வாயைத் திறந்து ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால் அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக வழிந்த நீரே அவனுக்குப் பதில் சொல்லிற்று. நமச்சிவாயத்துக்குப் பரிதாபமாகிவிட்டது.

"இதோ பாரம்மா! நீ வேண்டிக்கிட்ட இரண்டு ஆழாக்குப் பாலுக்குப் பதிலா தினம் புஷ்ப கைங்கரியமா நாலு முழம் பூவுக்குக் கட்டளை செலுத்திடறேன். 'பட்ஜெட்' **கொஞ்சம் உதையும் என்றாலும் உனக்காக**



"வரன் 'பசை'யுள்ள இடம்தானே?"

"சந்தேகமே வேண்டாம். பெரிய பாக்டரியிலே 'கம்' - பசை தயார் பண்றான்னா!"

இதைச் செய்யறேன். பால் அவன் மேலே விழுந்து ஓடிப்போறாப்பலே பூ ஓடாது. அடுத்த பூஜை மட்டும் அவன் மேலேயே மணந்துக்கிட்டு இருக்கும். பூவுக்கு மனுஷங்க வச்சா என்ன பிரயோசனமோ அதுவே தெய்வத்துக்குச் சாத்தினாலும் கிடைக்கிறது. ஆனா பால் விஷயம் அப்படியில்லை. யோசிச்சுப் பார்த்தா நீயே புரிஞ்சுக்குவே. இதோ பார்—ருக்கு! மொத்தத்திலே ஒண்ணு சொல்றேன். நீ பக்தியாயிரு. வேண்டாமிங்கலே. அதுக்காகப் புத்தியோட இருக்க மாட்டேன்னு அடம் பண்ணாதே. பக்தி வேணும்கிற மாதிரியே புத்தியும் வேண்டாமா?"

பால் பாத்திரத்துடன் அவன் கிளம்பினான். ருக்குவுக்கு 'புத்தி' வந்ததோ இல்லையோ, வேறு வழியின்றி சமாதானமடைந்துவிட்டதாக பாவித்[illegible] கொண்டு, "காப்பி சாப்பிட்டுத்தான் போகலாமே" என்றாள் மூக்கை உறிஞ்சிக் கொண்டே.

"ஆ, அதுதான் சமத்துப் பிள்ளை" என்று 'ஷொட்டு'க் கொடுத்தான் நமச்சிவாயம்.

பூரிப்புடன் பால் பாத்திரத்தை வாங்கிக் கொண்ட பொன்னாத்தா "கொதிக்குதுங்களே" என்றாள். அவளுடைய பேரப் பசங்கள் அது பருகவேண்டிய ஒரு திரவம் என்பதைக் கூடப் புரிந்துகொள்ளாததால், தம்பாட்டுக்கு விளையாட்டோ, சண்டையோ எதையோ செய்து கொண்டிருந்தன. தாயில்லாத அந்தக் குழந்தைகளைக் கண்ட நமச்சிவாயத்துக்குத் தன்னுடைய தருமம் தன்னையும்விடப் பெரியதாகத் தோன்றியது. "ஆமாம்,

உனக்கு விறகு செலவில்லாமல் நானே காச்சிக் கொடுத்திடறேன்'' என்றான். அவனுடைய வார்த்தைகளில் அபிஷேகம் செய்விக்கும் பக்தனின் உணர்ச்சி துடித்தது.

''வேணுமுங்க! ஒங்களுக்கு ஏன் அந்தச் செரமம் வேறே? கரும்பு இனிக்குதுன்னு வேரோட கசக்குவாங்களா?'' என்று கூறிய கிழவி சிறிது நேரம் பேசாதிருந்தாள். பிறகு, ''புள்ளேங்களுக்கு வாயிலே ஒரே புண்ணு. பச்சைப் பாலு நுரையோடு சாப்பிட்டாக் குணமாகும்'' என்றாள்.

''அப்படியே செஞ்சுட்டாப் போச்சு'' என்றான் நமச்சிவாயம்.

ஒருமாதிரி நமச்சிவாயத்தோடு ஒத்துப் போய் மகிழ்ச்சியைத் தேடிக்கொண்டு விட்ட ருக்மிணிக்கு அந்தக் கனவு வந்திருக்க வேண்டாம்! வேண்டாமென்று சொல்லி என்ன பயன்? அவள் கனவு கண்டுவிட்டாள்.

அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்த ருக்குவுக்குத் தான் ஏதோ பயங்கரக் கனவு கண்டதாக மட்டும் தெரிந்ததேயன்றி என்ன கனவு என்று சொல்லத் தெரியவில்லை. தூளியிலிருந்த குழந்தையைத் தன்னிடம் எடுத்து விடுமாறு கணவனிடம் கூறினாள். அதை அப்படியே அணைத்துக்கொண்டு விம்மினாள். குறைத் தூக்கத்தில் விழித்துக் கொண்ட குழந்தை வீல்—வீல் என்று கத்த ஆரம்பித்தது. அதைச் சமாதானப்படுத்துவதற்குள் நமச்சிவாயத்துக்குப் போதுமென்றாகி விட்டது. அதன் பின்னரும் அவன் சமாதானம் செய்வதற்காகக் காத்திருந்தாள் துர்ச்சொப்பனம் கண்ட ருக்கு.

என்ன சமாதானம் சொல்லியும் அவள் தெளிகிற பாடாயில்லை. ''நாளைக்குத் தண்டாயுதபாணி கோயிலுக்குப் போகலாம். பால் அபிஷேகமும் செய்யலாம். முருகனையே நினைத்துக் கொண்டு தூங்கு'' என்று அவன் முடிவாகச் சொன்னான்.

ஆச்சரியம்! முருகனையே நினைத்துக் கொண்டு தூங்கி விட்டாள் ருக்கு.

புத்தி உபயோகப்படாத சமயங்களில் பக்தி உபயோகப்படத்தான் செய்கிறது என்பதை ஒப்புக் கொண்டு அவனும் உறங்கினான்.

மறுநாள் தண்டபாணி சந்நிதியில் குழந்தையை அணைத்த கையையே கும்பிடாக்கிப் பக்திபுஞ்சிதமாக நின்றாள் ருக்கு.

அவளுடைய பிரீதிக்காக சுவாமி அபிஷேகத்துக்கென வாங்கிய கால் படிப் பாலுடன் எதிர்ப்புறத்தில் நின்று கொண்டிருந்தான் நமச்சிவாயம்.

உள்ளே பெருமானுக்குத் தீர்த்தம் ஊற்றி அபிஷேகம் செய்து கொண்டிருந்த அர்ச்சகர் குடத்தைக் கீழே வைத்து விட்டு கர்ப்பக்கிருக வாசலருகே வந்து சேவார்த்திகள் மீது பார்வையைச் சுழல விட்டார். 'சரி, இன்னிக்குப் பால் வரல்லையாக்கும். அவன் அதிர்ஷ்டமும் என் அதிர்ஷ்டத்துக்கு மேலே தான் இருக்கு' என்று முணு முணுத்துக் கொண்டு கருவறைக்குத் திரும்பினார்.

''ஐயரே! இந்தாங்க, இதோ பால்'' என்று செம்பை நீட்டினான் நமச்சிவாயம்.

அதிருஷ்டத்தில் தம்மோடு சுவாமியை ஒன்றுபடுத்திக் கொண்டதாலோ என்னவோ, இப்போது அர்ச்சகர் சிறிது மனம் ஒன்றியே பாலை நிதானமாக அபிஷேகம் செய்தார்.

ஆகா! கருமையாக நின்ற சிலையில் பால் வழிய வழிய ஜீவன் ததும்பும் வடிவமும் தலையிலிருந்து கால்வரையில் வழிந்தது!

முதலில் 'கண்டார்தம் மனம் கவரும் முண்டிதமாம் சிரத்தழகு.'

சிரத்தழகுக்கு விளிம்பு கட்டினாற் போல் தலையைச் சுற்றி அமைந்திருந்த ருத்திராட்ச மணிகள் பாலில் உருவத்தைப் புலர்த்திக் கொண்ட போது பால் துளிகளும் ருத்திராட்சமணிகளாகவே உருண்டு இண்டு இடுக்குகளில் தங்கி மகிழ்ந்தன.

'நீறிடு நெற்றியஞ்'ன ஆறுமுகனின் நெற்றியில் விபூதிச் சாறுகவே வழிந்தது பால். அவனது நீண்ட புருவத்தையும், கருணைப்பால் சுரக்கும் திருவிழிகளையும், வேல் நுனியோடு பொருந்திய செவி மூலத்தையும், 'சுவாசிக்கிறதோ' என வியக்க வைக்கும் அலர்ந்த நாசியையும், கதுப்புக் கன்னங்களையும், பால் மணம் மாறா முறுவல் செவ்வாயையும், திலகம் தீற்றும் போது பராசக்தி அன்புறப் பிடித்துப் பிடித்து அழுத்தம் பெற்ற முகவாயையும்,

சத்வைத்தியசாலை, நஞ்சன்கூடு, ஆயுர்வேத வைத்தியர் B. V. பண்டிட் அவர்களின்
லக்ஷக்கணக்கான குடும்பங்களில்
நஞ்சன்கூடு-பல்பொடி
சிறந்த குணம், நீண்டநாள் வருவது
பல் உபாதைகளைத் தடுக்க I.D.L 61 மெடிகேட்டட் ரகம்
கூலெக்ஸ் — ஸ்நானதைலம்
நீலா — கூந்தல்தைலம்
ஜிஞ்சிப் — ஜீரண உதவி
பாதாமிர்தம் — பெயின் பாம்
சோல் ஏஜண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை-1 (டில்லி 96, போர்ட் ரோடு)

மதுரத்தின் பிறப்பிடமான கண்டத்தையும், ருத்திராட்சமன்றி வேறு திரு ஆபரணமேதும் பூணாத இளந் துறவுத் திருமேனியையும், தண்டம் பிடித்த தளிர்க்கரத்தையும், இடையில் பொருத்திய இடக்கரத்தையும், 'பண்டாய நான்மறைக் கோவணச் சீரை'யும், நிற்க இயலுமோ என்று எண்ணச் செய்யும் நைந்த தொடைகளையும், 'நிற்கச் செய்வேன்' என்று முட்டுக் கொடுக்கும் முழந்தாள் சில்லுகளையும் பால் தடவியும் தழுவியும் கொடுத்து நழுவி விழுந்தது. அவனது கோமள சரணங்கள் பிலிற்றும் அமுதத்துடன் இணைவதற்கே பால் இழிந்து வந்ததோ என்று எண்ணிய மெய்யடியார்களுக்குத் தங்கள் பாதங்களே தணுத்துப் போனது போன்ற குறுகுறுப்பு ஏற்பட்டது. நமச்சிவாயத்துக்கு இத்தகைய அற்புத அநுபவம் ஏற்படாவிடினும் பால் வடித்த சல்லாவினுள்ளே குளிர் நீலமாக, தளிர் நீலமாக, மிளிர் நீலமாக நின்ற முருகன் அவனது கண்களில் ஒரு தண்மையை நிறைவிக்கத்தான் செய்தான். கங்கா தீர்த்தமோ, தேனோ, சந்தனமோ, பஞ்சாமிருதமோ எதைக் கொண்டு அபிஷேகம் செய்யினும் சுவாமியின் ஸ்வரூப அழகை உள்ளபடி எடுத்துக் காட்ட கோமாதாவின் அன்புச் சாற்றுக்கு இணையாகுமா என்ற எண்ணம் அவன் மனத்தில் ஓடியது.

வைத்த கண் வாங்காதபடி அபிஷேகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ருக்மிணி அபிஷேகம் நடக்கிறது என்ற ஓர் அழகை அநுபவிப்பது தவிர, அந்த அழகின் அம்சங்களைச் சிந்தித்து ரஸிக்கும் நிலேயிலே இல்லை.

பாலில் கசிந்து கொண்டு நின்ற பாலன் மீது ஊற்றுவதற்காக ஒரு குடம் நீரைத் தூக்கினர் அர்ச்சகர்.

''இதோ, அபிசேகத்துக்குப் பால் வந்துட்டுதுங்க சாமீ'' என்ற குரல் அவரை இழுத்தது. அந்தக் குரல் நமச்சிவாயத்தையும் இழுத்தது.

ஆம், இரண்டு பேரப் பசங்களும் பால் பாத்திரத்தைப் பிடித்து நிற்கப் பொன்னுத்தா தான் வந்திருக்கிருள் !

''என்ன கிழவி, இன்னிக்கு இந்நேரம் பண்ணீட்டே! அபிஷேகத்துக்குப் பால் இல்லாமப் போச்சேன்னு வருத்தப்பட்டுண்டேன். கடைசியில் இன்னிக்குத்தான் இரண்டு மடங்கு அபிஷேகம் பண்ணிக்கிருன் அதிருஷ்டக்காரன்'' என்று கூறியபடியே அர்ச்சகர் பாலைப் பெற்றுக் கொண்டார்.

மீண்டும் பால் அபிஷேகம் நடைபெற்றது.

இப்போது நமச்சிவாயம் எம்பெருமானைப் பார்க்கவில்லை. அந்த ஏழையர் மூவரையும் தான் பார்த்துக் கொண்டிருந்தான். கிழவி சந்தோஷப்படுவது சரி, இந்தச் சிறுவர்கள் கூட அல்லவா தங்கள் வயிற்றில் சேர வேண்டிய பால் இங்கே விழுகிறபோது குதித்துக் கும்மாளி போடுகிருர்கள்? அவர்கள் வயிற்றில் இந்தப் பால் சேர்ந்தால்கூட இவ்வளவு மகிழ்ச்சி அடைவார்களோ?

''நல்லாப் பாருங்கடா! அந்தத் தேவாதி தேவன், ராசாதி ராசன் தினமும் ஆண்டிப் பரதேசியான நாம தர்ற பாலுலே முழுவறதைப் பாருங்கடா'' என்று கிழவி அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தாள். முருகனைத் தொழுத அதே பாங்கில் இப்போது பொன்னுத்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ருக்கு. இனம் இனத்தோடு சேர்ந்தது!

''திரைதான் போட்டாச்சே! இன்னும் என்ன இங்கேயே நின்னுட்டே? பிரகாரம் சுத்திக்கிட்டுச் சந்நிதிக்குத் திரும்புலாம்! அதுக்குள்ளே புஷ்பாலங்காரம் செய்திருப்பாங்க'' என்று மனைவியிடம் தன் தோல்வி தெரியாதபடி ஆண்மையோடு அவசரப்படுத்தினன் நமச்சிவாயம்.

'கடைசியில் பார்த்தீங்களா? பால் அபிஷேகம், புஷ்பக் கைங்கரியம் இரண்டும் உங்களாலேயே நடக்குது!' என்று அவள் தனக்கு மகுடம் சூட்டுவாள் என்று ஆசைப்பட்டுத்தான் புஷ்பாலங்காரம் பற்றிச் சொன்னன்.

ஆனல் ருக்குவோ தன் வாழ்நாளில் கிடைத்த இந்த ஒரே வாய்ப்பை நழுவ விடாமல் அவனை அலட்சியம் செய்து பழிவாங்கி விட்டாள்!

வெளிப் பிரகாரத்தில் கிழவியைப் பின் தொடர்ந்த நமச்சிவாயம், ''பலே, பொன்னுத்தா! பாலைக் காச்ச வேண்டாம்கிறதுக்கு என்னென்னவோ காரணம் சொன்னியே'' என்று சிரித்துக் கொண்டே சொன்னபோது அவள் திடுக்கிட்டாள். உடனே சமாளித்துக் கொண்டாள்.

''அதுக்கென்ன சாமி, செய்யலாம்? மனுசங்களுக்கு வவுறு மட்டும் இல்லையே!'' என்று மாத்திரம் பதில் கூறினள். அதற்கு மேல் அவள் எதுவும் பேசவில்லை.

அவள் கூறவேண்டியது இன்னும் எவ்வளவோ இருந்தது. சுவாமியின் மீது சில விநாடிகள் பால் விழுந்தால் போதுமா என்ற கேள்விக்கு அவள் பதில் சொல்லி யிருக்க வேண்டும். சங்கீத சஞ்சாரம் தோன்றும் போதே மறைந்தாலும் அதனல் ஏற்படும் இன்பம் சாசுவதமாக இல்லையா? தொண்டையில் சில விநாடி பாய்வதால் பால் தருகிற ருசியைவிட இந்தச் சில விநாடிகளில் அதிக ருசி தர முடிந்தது என்பதை அவள் சொல்லி யிருக்க வேண்டும். வயிற்றில் ஊறிப் போஷணை தருவதைவிட அதிகமாகவே அதனல் உள்ளத்தில் ஊறிப் போஷணை தர முடிகிறது என்றும் சொல்லி யிருக்க வேண்டும். அழகுக்கும் பொருளாதாரத்துக்கும் ஈடுகட்டுவதற்கு 'ஈக்வேஷன்' போட முடியாது என்பது பற்றியும், நெஞ்சத்துக்குப் பஞ்சம் வராத கோடீசுவரர்கள் பலர் பரம ஏழையரிடையே இருப்பது பற்றியும் பொன்னுத்தா பேசி யிருக்க வேண்டும். ஆனல் அப்படியெல்லாம் பேசவேண்டுமானல் அவளுக்கு ஒன்று தேவை. 'பக்தி வேணும் என்கிற மாதிரியே புத்தியும் வேண்டாமா?' என்று நமச்சிவாயம் புகழ் பாடிய அந்தப் 'புத்தி' தான் தேவை.

ஆனல் இப்போதோ நமச்சிவாயம் கேட்டுக் கொண்டான்: 'புத்தி அவசியம்தானா?'

பிரகாரத்தில் கேட்பாரின்றிப் போய்க் கொண்டிருந்த ஒரு பசு அவனுக்கு விடை சொல்லுவது போல் அதன் குலுங்கத் தலையை ஆட்டிற்று.

காலத்தினாற் செய்த உதவி

தி.சா.ராஜு

பெரிய முதலாளி ரத்தினம் பிள்ளை தம்முடைய கணபதிநகர்ப் பங்களாவின் நடுக்கூடத்தை அடுத்த முன் அறையில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். அந்த அறையில் எல்லாப் பொருள்களும் கவர்ச்சிகரமாகவும் ஒழுங்காகவும் வைக்கப்பட்டிருந்தன. கீழ்ப்புறத்து மூலையில் மரக்கட்டில் கிடந்தது. அதில் அவருடைய மெத்தை சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பக்கத்தில் ஒரு சிறிய மேஜை. அதன் மேல் ஒரு துணி விரிப்பு. மேஜையின் நடுவில் ஒரு பழைய நாளைய பஸ்ஸின் மர உருவம். இருபது பிரயாணிகள் எதிரும் புதிருமாக அமர்ந்து செல்லக் கூடிய பஸ்ஸின் பொம்மை அது. அதில் டி. ஏ. என். 555 என்ற எண்கள் பளபளத்தன. அதற்குப் பக்கத்தில் மூன்று சிறு புத்தகங்கள். புனிதச் சிலுவை உருவத்தின் சிறிய மாதிரி ஒன்றில் படிக ஜபமாலை ஒன்று தொங்கியது. பிள்ளை வாடிகன் நகருக்குச் சென்றிருந்த போது போப்பாண்டவர் அவருக்குத் தந்த அன்பளிப்பு அது. ஒரு குறிப்பு நோட்டும் பென்சிலும் கூட மேஜையின் மேலேயே இருந்தன.



இளம் பச்சை வர்ணம் அடித்த சுவரில் ஒரே ஒரு இயேசுவின் படம். மைக்கேல் ஆஞ்சலோ வரைந்த ஓவியத்தின் பிரதி அது. பெருமான் தம் கையில் உலக உருண்டையைத் தாங்கியிருந்தார்.

ரத்தினம் பிள்ளை தம் அறையில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த போதிலும் அவருடைய கவனம் முழுவதும் நடுக் கூடத்தில் நடக்கும் உரையாடலைச் சுற்றியே யிருந்தது. அங்கே அவருடைய மகன் மோஸஸ், வக்கீல் செல்வராஜ், அவருடைய குமாஸ்தா அந்தோணி மூவரும் அமர்ந்திருந்தனர். நடுவில் மேஜை மேலிருந்தவை அனைத்தும் பழைய தஸ்தாவேஜிகள், ஸ்டாம்பு காகிதம்.

''கோர்ட்டில்தான் நமக்குச் சாதகமாகத் தீர்ப்பாகியிருக்கிறதே, நாம் ஏன் சந்திரனுடைய சாமான்களை யெல்லாம் எடுத்து வெளியில் எறிந்து விட்டு, தர்வானிடம் சொல்லி அவனுடைய காரை நிறுத்தச் சொல்லக் கூடாது?' மோஸஸ் பதற்றத்துடன் கேட்டான். அவனுடைய முகத்தில் அமைதியின்மை பிரதிபலித்தது.

வழக்கறிஞர் மோஸஸை ஏறிட்டு நோக்கினார்: ''இவ்வளவு படபடப்புத் தேவையில்லை, சின்ன முதலாளி. நாற்பது வருடங்களாய்த் தொடர்ந்து வருகிற ஓர் உறவை இவ்வளவு மனக் கசப்போடு முறித்து எறியணுமா? முதலில் நோட்டீஸ் கொடுப்போம். பிறகு தவணை தருவோம். ஆகக்கூடி அவரும் சட்டத்துக்கும் நியாயத்துக்கும் கட்டுப்பட்டவர்தானே!''

''அதிலே ஓர் அபாயம் இருக்கிறது வக்கீல் சார். நிலைமை இதே மாதிரி நீடித்திருந்தால் அவன் ஸுப்ரீம் கோர்ட்டிலே ரிட் மனுவைத் தாக்கல் செய்து விடுவான். அங்கே தீர்ப்புக் கிடைப்பதற்கு வருஷம் மூணாகலாம். அது வரை அவனும் டைரக்டர் என்ற பெயரை வைத்துக் கொண்டு ஆபீஸ் காம்பவுண்டுக்குள் பயமில்லாமல் வளைய வருவான். அதை என்னால் பொறுக்க முடியாது.''

''சிறுபிள்ளைத்தனமாகப் பேசுகிறீர்கள், மோஸஸ்!'' தம் கழுத்துடையைச் சரி செய்தவாறே கூறினார் செல்வராஜ். ''சந்திரனுக்கு ஆதரவு தரக்கூடிய பல உழைப்பாளிகள் அங்கு இருக்கத்தான் செய்வார்கள். நாம் அவனை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப் போய் வழக்கு கிரிமினல் உருவம் எடுத்தால் என்ன ஆகும்? யோசித்துப் பாருங்கள். இந்த விவகாரம் முள்ளின் மேல் போட்ட துணிமாதிரி. கையும் காயமாகக் கூடாது,

சிறப்புச் சிறுகதை

நகமும் சதையுமாகப் பழகினர் முத்து அய்யரும், ரத்தினம் பிள்ளையும். இவர்கள் பிள்ளைகள் தலையெடுத்ததும் இந்த விபரீதம் ஏற்படுமென்று யாருமே எதிர்பார்க்கவில்லை. காலத்தினால் செய்த உதவியை ரத்தினம் பிள்ளையின் மகன் மோஸஸ் மறந்தது எத்தகைய பேரிழப்புக்குக் காரணமாக அமைந்து விட்டது. இந்த நஷ்டம் ஈடு செய்ய முடியுமா? தி. சா. ராஜுவின் எளிமையான நடையிலே பழைமைக்கும் புதுமைக்குமுள்ள வேற்றுமையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

துணியும் கிழியக் கூடாது. விவகாரத்தை என்னிடம் விட்டுவிடுங்கள்.....சரி, உங்கள் கிரிக்கெட் கிளப் விஷயம் என்ன ஆயிற்று? வெஸ்ட் இண்டீஸ் டூர் தான் நிச்சயமாயிடுச்சே!'' பேச்சை வேறு திசைக்குத் திருப்பினார்.

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் இசையுடன் பத்தடித்து ஓய்ந்தது. பரபரப்புடன் எழுந்திருந்தார் வக்கீல். ''சரி, கோர்ட்டுக்கு நேரமாகி விட்டது. நான் வரட்டுமா?'' செல்வராஜ் புறப்பட்டார். காகிதக் கட்டுக்களைத் தோல் பையில் அடைத்தார் அந்தோணி. மோஸஸ் உடன் நடந்தான். போர்ட்டிகோ வரையில் வந்து வழி அனுப்பினான். காரில் ஏறி உட்கார்ந்த பிறகு தலையை வெளியே நீட்டினார் வக்கீல். ''என்னுடைய ஃபோன் நம்பர் மாறியிருக்கிறது. இருநூற்றுப் பத்து இல்லை. முந்நூற்று ஐந்து. இந்த வழக்கு விஷயமாக எனக்கு மேலும் அட்வைஸ் கொடுக்க விரும்பினால் மாலை மூன்று மணிக்கு மேல் ஃபோன் செய்யுங்கள்'' — பிளிமௌத் கார் சிமெண்ட் தரையில் வழுக்கிக் கொண்டு சென்றது. ரோஜாப் பாத்திகளை அடுத்து நடந்தான் மோஸஸ். அதையடுத்த கட்டாந்தரையில் சமாந்திர பார் இருந்தது. மரத்தின் மீதிருந்து தோலுறை போட்ட இரு இரும்பு வளையங்கள் தொங்கின. பார்க் கம்புகளைத் தடவிப் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். தந்தையின் அறையை எட்டிப் பார்த்தான். அவர் கையில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருந்தார்.

மோஸஸ் பணிவுடன் அறையினுள் நுழைந்தான். ''நாங்கள் பேசியதையெல்லாம் கேட்டுக்கிட்டுத்தானே இருந்தீக?'' என்று மெள்ள வினவினான்.

பெரியவர் தலையை அசைத்தார்.

''விவகாரம் முழுவதையும் வக்கீல் ஐயாவிடமே விட்டிருக்கிறேன். அவருக்கு இந்த விஷயங்களில் அநுபவம் மிகுதி.'' மகன் பேசுவதைக் கேட்க விரும்பாதவர் போல் ரத்தினம் பிள்ளை முகத்தை மூடிக் கொண்டார். தந்தையின் மன நிலை தெரிந்து மோஸஸும் பக்குவமாக எழுந்து வெளியேறினான்.

பிள்ளை தம் அறைச் சாளரத்தின் வழியாகப் பார்த்தபோது ஒரு பழைய செவர்லட் லாரி கலகலத்த சத்தத்துடன் நெடுஞ்சாலையில் செல்வது தெரிந்தது. அதன் பின்புறத்து மர உடல் முழுவதும் ஆடியது. டிரைவர் க்ளச்சை முழுதும் அழுத்தாமல் கியரை மாற்றினார். 'கர்ர்' என்று ஒலித்தது அவர் செவிக்கு நாராசமாக இருந்தது. இரண்டு விரல்களினால் அவர் செவிகளை நன்றாக மூடிக் கொண்டார்.

'இயந்திரங்களுக்கும் உயிர் இருக்கிறது. அவைகளைச் சிரத்தையோடு கையாளணும். உறுப்போடு உறுப்பு தோழன் மாதிரி இணையணும், இடையிலே லூப்ரிகேஷன்னு சொல்றது என்ன, நட்பின் கசிவுதானே! ரத்தினம்பிள்ளை இயந்திரத் தத்துவ சிந்தனையில் ஒட்ட வைத்து எண்ணிப் பார்த்தார். இந்த நெடுஞ்சாலை வழியாக ஒரு நாளைக்கு இருநூறு வண்டிகள் போகின்றன. வண்டிகளின் எண்ணிக்கை இப்போது நூறு மடங்கு அதிகமாகியிருக்கிறது. பெட்ரோல் எஞ்சின்களையெல்லாம் பிடுங்கிவிட்டு டீஸலைப் பொருத்திப்புட்டானுக. பயன் என்ன? பாதிக்குமேல் டீஸல் நாக் கேக்குது. கல் ஏத்தற வண்டிக்கு டீஸல் ஃபிட் பண்ண வேண்டியதுதான். ஆனால் இவங்க பருத்திக்கொட்டை வண்டிக்குமில்ல அதையே மாட்டறானுக. அவருடைய இயந்திர மனம் தொடர்ந்து சிந்தித்தது. தம் மேஜையின் மேலிருந்த பஸ் உருவத்தைப் பரிவுடன் தடவிக் கொடுத்தார் ரத்தினம் பிள்ளை.

'கவிஞன் பிறக்கிறான், ஆக்கப்படுவதில்லை' என்று ஒரு பழமொழி உண்டு. அது எல்லாத் தொழில்களுக்கும் பொருந்தும் என்று வெகு பேருக்குத் தெரியாது. ரத்தினம் பிள்ளை பிறவிப் பொறி இயல் நிபுணர். அவருடைய விரல்களில் இயந்திரங்களை உருவாக்குவதற்கும் ஒக்கிடுவதற்குமான உயிர்ச் சக்தி எப்போதும் துடிதுடித்துக் கொண்டிருந்தது. திருவையாற்றிலிருந்து தஞ்சாவூருக்குச் செல்லும் நெடுஞ்சாலையின் மூலையில் ஒரு சிறிய கடையில்தான் அவர் தொழிலைத் தொடங்கினார். ஈயம் பூசினார், சிறு பித்தளை, டின் வேலைகளை மேற்கொண்டார். கத்தி, அரிவாள் கோடரி முதலியவைகளுக்குச் சாணை தீட்டினார். ஊருக்குச் சைக்கிள் வந்த புதிசு. அவற்றை ஒக்கிடும் சாமான்களைச் சேகரித்தார். நெல் மிஷின் ரிப்பேராகிப் போனால் ஊரில் குஞ்சுவைத்தான்—ரத்தினம்பிள்ளையை அப்படித்தான் கூப்பிடுவார்கள் — அழைப்பார்கள். காப்பிக் கொட்டை இயந்திரம், பெட்ரோமாக்ஸ், ஸ்டவ், தையல் இயந்திரம், டைப்ரைட்டர், கிராமஃபோன், — ஊற்றுப் பேனா எல்லாப் பொருள்களையும் அவர் ஒக்கிட்டுக் கொடுத்தார். ஸப்தஸ்தானத்துத் திருவிழாக்களுக்குப் பல்லக்கிலும் தேரிலும் பாட்டரி விளக்கு அமைக்க ரத்தினம் பிள்ளைதான் முக்கியஸ்தர்.

இப்போதெல்லாம் ஒவ்வொரு துணைத் தொழிலுக்கும் தனித்தனி ஆட்கள் இருக்கிறார்கள். அவர் பழைய நாளைய எல். எம். பி. டாக்டரைப் போல. வெல்டர், டர்னர், எலக்ட்ரிஷியன், ஃபிட்டர், கருமான், தச்சர் எல்லாமே அவர்தான். அவருக்குத் தெரி

யாத பொறி இயல் தொழில் என்று தனியாக ஏதும் கிடையாது. எத்தனை புது மாதிரி இயந்திரமாக இருந்தாலும் அதை உறுப்பு உறுப்பாகப் பிரித்து ஒரு மரை, ஆணி, வில்கூட மிச்சமில்லாமல் நினைவோடு அனைத்தையும் ஒக்கிட்டுப் பொருத்தி விடுவார்.

அப்போது புதிதாக அந்த ஊருக்கு பஸ் வரத் தொடங்கியது. ஒரு முழு பஸ்—பழைய நாளைய உடலுடன் இரண்டாயிரம் ரூபாய் தான் விலை. திருவையாறு, தஞ்சாவூர், கும்பகோணம் பாதையில் நிறையக் கோயில்கள். வருஷம் முழுதும் திருவிழா இருக்கும். ஜனக் கூட்டம் மிகுதி. பிர யாணிகள் அதிகம். இந்தத் தொழிலில் புகுந்தவர்கள் நிறையப் பணம் பண்ணத் தொடங்கினார்கள். அந்த நாளிலே கலம் நெல் ஒன்றே முக்கால் ரூபாய்க்கு விற்கும். அப்படியும் நிலச்சுவான்தார்களிடையே பணம் மிஞ்சிற்று. அவர்களில் பலர் பஸ் வாங்கிவிடத் தொடங்கினார்கள்.

பல்லைப் பிடித்துப் பார்க்க அறியாத வர்கள் மாட்டுப் பண்ணை வைத்தது போல் ஆயிற்று அவர்கள் நிலை. முதல் இரு வரு ஷங்கள் பஸ் புதிதாக இருக்கும் வரையில் அவர்களிடம் செல்வம் கொழித்தது. பாதை யும் நன்றாக இல்லை. பஸ்களில் தேய்மானம் அதிகம் கண்டது. சரியான சமயத்தில் தையல் போடாத துணியைப் போல் வண்டிகள் சீரழிந்தன. இந்தத் தொழிலில் புகுந்த பலருக்கு இயந்திர நுட்பம் தெரி யாது. ஆகவே வெகு விரைவில் கீழே சரியத் தொடங்கினார்கள்.

அப்போது இந்தத் தொழிலில் புகுவதற்குத் துடித்துக் கொண்டிருந்தார் ரத்தினம்பிள்ளை. மூதாதையர் வைத்து விட்டுப் போன பூஸ்திதி, மனைவியின் நகைகள் அனைத்தையும் விற்றும் அவரிடம் எண்ணூற்றுச் சொச்சம் ரூபாய்தான் தேறிற்று. கும்பகோணத்து மூப்பனார் ஒருவர் தம்முடைய ஒரே பஸ்ஸை விற்று விடுவதாக இருந்தார். இரண்டே வரு ஷங்கள் ஓடிய பஸ் ஆயிரம் ரூபாய்க்கு வந்தது. இன்னும் நூறு ரூபாய் வேண்டும். தெரு மூலையில் தாற்காலிகப் பட்டறை வைத் திருக்கும் தொழிலாளியை நம்பி யார் நூறு ரூபாய் கடன் கொடுப்பார்கள்? எந்த ஆதாரத்தின் பேரில்? அந்த நாளில் நூறு ரூபாய் என்பது பெரிய விவகாரம்.

அப்போதுதான் தில்லை ஸ்தானத்துப் பட்டாமணியம் முத்து ஐயர் அவருக்குப் பழக்கமானார். முதல் நாள் மூப்பனா[illegible] சென்று நான்கு நாட்கள் தவணை கே[illegible] கொண்டு திரும்பி வந்திருந்தார் ரத்[illegible] பிள்ளை. அதை அடைவதற்கு என்ன [illegible] என்று நிராசையுடன் துடித்துக் கொண்டி[illegible] தார். ஒரு வேலையும் ஓடவில்லை. வாழ்க்[illegible] யின் மாபெரும் சந்தர்ப்பம் மறுபடி[illegible] எளிதில் கிட்டக் கூடாதது எதிரே வ[illegible] நிற்கிறது. அதை அடைய நூறு ரூபா[illegible] பாலம் தேவை. அது இல்லாமல் போகிற[illegible] என்று அவர் பதறினார்.

முற்பகல் மணி பதினொன்றிருக்கும். ஒ[illegible] யோசனையும் ஓடாமல் ரத்தினம் கடையி[illegible] உட்கார்ந்திருந்தார். சைக்கிள் ஒன்றை[illegible] தள்ளிக் கொண்டு வியர்க்க விறுவிறுக்க அ[illegible] ரிடம் வந்தார் முத்து ஐயர். ''குஞ்[illegible] கொஞ்சம் அவசரம். பின்சக்கரத்தில் காற்[illegible] இறங்கி விட்டது. சரியாக இந்த நேரத்தில் நான் ஜமாபந்தியில் இருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அபராதம் விழும்'' — முத்து ஐயர் அவசரப்பட்டார்.

ரத்தினம்பிள்ளை எழுந்திருந்து ரிப்பேருக்கு வந்திருந்த சைக்கிளை எடுத்து அவரிடம் கொடுத்தார். ''நீங்கள் கச்சேரிக்குப் போங்க சாமி! நான் அதற்குள் இதைச் சரி பார்த்து விடுகிறேன்!''

நன்றி அறிவுடன் அவரைப் பார்த்த வாறு சைக்கிளின் பெடலை மிதித்தார் முத்து ஐயர். இவ்வளவுக்கும் இதற்கு முன்பு ஒரே ஒரு தரம்தான் அவர் பிள்ளையிடம் பழகியிருக்கிறார். தம் நண்பர் ஒருவரின் சைக்கிளை எடுத்துக் கொண்டு போய்க் கட்டை வண்டியில் மோதி உருமாற்றிய பிறகு அதைப் பிள்ளையிடம் தள்ளிக் கொண்டு



ர். அது மறுபடியும் நேராகும் என்ற கையே அவருக்கு இல்லை. ஆனால் சைக்கிளை ஒக்கிட்டு வர்ணம் பூசிப் போல் ஆக்கிக் கொடுத்தார். அவர் றகாகப் பெற்றுக் கொண்டது இரண்டே ய்தான். அது நடந்தது மூன்று மாதங் க்கு முன்பு.

ிற்பகல் ஒரு மணிக்குத் திரும்பி வந்தார் ்து ஐயர். ''உன்னுடைய உதவியில்லா டால் நான் ரொம்பக் கஷ்டப்பட்டிருப் ன். ஜமாபந்தி என்னவோ நடக்கவில்லை ம். ஸப் கலெக்டருக்கு உடம்பு சரியில்லை ம். என்றாலும் நான் நேரம் கழித்துப் பாயிருந்தால் அந்தத் தாசில்தார் என்னை வமானப்படுத்தி யிருப்பார். எப்போதுமே னக்கும் அவருக்கும் ஆகாது.''

''உட்காருங்கள் சாமி!''

முத்து ஐயர் கடையினுள் உட்கார்ந்தார். மேல் துண்டினால் கழுத்துப் பிடியையும், நெற் றியையும் துடைத்து விட்டுக் கொண்டார். ''உனக்கு எவ்வளவு தரவேண்டும் குஞ்சு?''

''ஒண்ணுமில்லே சாமி.'' பிள்ளை கூறினார். ''அதன் வால்ட்யூப்தான் போயிருந்தது. அதற்காக உங்களிடம் காசு வாங்குவார் களா?'' ரத்தினம் பிள்ளையின் பெருந்தன்மை அவருடைய நெஞ்சைத் தொட்டது. ''பிள்ளை!'' - இப்போது குஞ்சுவை அவர் மரியாதையோடு விளித்தார். ''பக்ஷி கடை யிலிருந்து காப்பி வரவழையுமே!''

ஹோட்டல் பையன் அல்வாவும் தோசை யும் இரண்டு முக்கால் காப்பியும் கொண்டு வந்தான். பிள்ளைக்கு அது சாப்பாட்டு நேரம். ஐயருக்கு டிபன் வேளை. குஞ்சு டிபனை ஆவலோடு உண்பதைக் கவனித்தார் முத்து. அன்புடன் விடைபெற்றுக் கொண்டு நெகிழ் வுடன் புறப்பட்டார். அவர் தமது சைக் கிளில் ஏறிப் பத்தடிதான் சென்றிருப்பார். பிள்ளை அவரை விளித்தார். ''பணப்பையை மறந்து விட்டீங்களே!'' தோல் பையை எடுத்துக் கொடுத்தார் ரத்தினம்.

''சகுனம் சரியாகவில்லை'' என்று கூறி மறுபடியும் கடையில் உட்கார்ந்தார் முத்து. தபால்காரன் ஒருவன் காலணாக் கார்டைக் கொண்டுவந்து கொடுத்தான். மறுநாள் பணத்தைக் கொடுத்து வண்டியை எடுத்துக் கொள்ளாவிட்டால் நாகூர் சாயபு ஒருவருக்கு பஸ்ஸை விற்று விடுவதாகக் கும்பகோணம் மூப்பனார் எழுதியிருந்தார். அதைப் படித்துக் கவலையில் ஆழ்ந்தார் ரத்தினம்.

''என்ன சமாசாரம் பிள்ளை?''

கடிதத்தை ஐயரிடம் கொடுத்தார் ரத் தினம். அதைப் படித்த முத்து ஒரு நிமிஷம் யோசனையில் ஆழ்ந்தார். ''உமக்கு எவ் வளவு பணம் வேண்டும்?''

''நூற்றி இருபத்திஏழு ரூபாய்தான் குறை கிறது....''

முத்து ஐயர் தோல் பையைத் திறந்தார். ஒரு நூறு ரூபாய் நோட்டையும் இருபத்தேழு வெள்ளிப் பணத்தையும் எடுத்து அவரிடம் கொடுத்தார். அப்போதெல்லாம் ஒரு ரூபாய்க்கு நோட்டுக் கிடையாது. தோல் பையை மூடிச் சைக்கிளின் பின் ஸீட்டில் வைத்துக் கொண்டு தில்லைஸ்தானத்தை ... ார் முத்து ஐயர். ஐயா

றப்பன் பல்லக்கில் போவதைப் பார்ப்பது போல் பரவசமடைந்து போய் நின்றார் ரத் தினம் பிள்ளை.

''பிள்ளைவாள்!''

''ஸ்வாமிகளே!''

இப்படித்தான் இரண்டுபேரும் ஒருவரை ஒருவர் அழைத்துக் கொண்டார்கள். மூப்ப னாரிடம் பணத்தைக் கொடுத்துக் கும்ப கோணத்துத் தொழில் பட்டறையில் இலே சாக ஒக்கிடுதல் செய்த பிறகு வண்டியைப் பட்டாமணியத்தின் வீட்டுக்குத்தான் ஓட்டி வந்தார். ''ஸ்வாமிகளே, நாளைக்குக் கிருத் திகை. முதன் முதலில் ஸ்வாமி மலைக்குப் போய் வருவோம், வாருங்கள்'' என்று ரத்தினம் பிள்ளை கூறினார். அதற்கடுத்த நாள் ரத்தினம் பிள்ளையின் மனைவி குழந்தைகளுடன் அவர்கள் மைக்கேல் பட்டி மாதா கோவிலுக் குப் போய் வந்தார்கள்.

இப்படித் தொடங்கிற்று அவர்கள் நட்பு. ரத்தினம் பிள்ளை முத்துவிடம் வாங்கிய தொகையைத் திருப்பித் தரவில்லை. ஆனால் பிள்ளை அவரைத் தமது கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டார். அந்த ஐயர் வீட்டுப் பிள்ளை வண்டி கழுவி, கியர்பாக்ஸுக்கு எண்ணெய் மாற்றி, ஸ்பிரிங்குகளுக்கு கிரீஸ் போட்டுக் கணக்கும் எழுதிற்று. பாட்டரி சார்ஜ் செய்து தந்தது. அடுத்த மூன்று ஆண்டுகளில் ஐயர், குஞ்சு கூட்டுறவில் அந் தப் பாதையில் இரண்டு பஸ்கள் ஓடின. முத்துவும் பஸ் ஓட்டினார், டிக்கட் கிழித்துக் கொடுத்தார். வண்டி அடியில் படுத்து யூனி வர்ஸல் ஜாயிண்டுகளின் கிரீஸ் நிப்பிள்களை நிரப்பினார். ப்ரேக் 'ப்ளீட்' செய்யக் கற்றுக் கொண்டார். ரேடியேட்டர் தண்ணீர் மாற்றினார். பளபளவென்று பூசணிப் பழம் போலிருந்த உடல் கறுத்தது, தொப்பை சுருங்கிற்று. ஆனால் மாதாமாதம் மனைவியின் கழுத்தில் பொன் நகை ஏறிற்று. பெண் குழந்தைகள் வைரத்தோடு அணிந்துகொண் டனர். ஐயர் பரம்பரையாகச் செய்து வந்த கிராம முன்சீப் வேலையை விட்டபோது ஊரே அதிசயித்தது. அவருடைய செல்வம் பெருகு வதைக் கண்டு பொறாமை கொண்டது. முத்து ஐயர் பெட்ரோல் பங்க் திறந்தார். கூடவே ஒரு மெயிண்டனன்ஸ் ஸ்டேஷன் ஏற்பட்டது. அதற்குப் பக்கத்தில் இருந்த காலி இடம் விலைக்கு வந்தபோது வாங்கிப் போட்டார். அங்கு தகரக் கொட்டகை எழும்பிற்று. நாளடைவில் தொழிற்சாலையாக உருவெடுத் தது அந்தக் கட்டாந்தரை.

அவர்கள் நடந்த பாதை எப்போதுமே தார்ச் சாலையாக இல்லை. ஓரிரு முறை பஸ்கள் விபத்துக்குள்ளாகிப் பொருட் சேதம் ஏற் பட்டது. அந்தச் சமயங்களில் இருவரும் தம் மனைவிமார்களின் நகைகளை விற்றார்கள். முத்து ஐயர் தமது பூர்வீக நிலத்தையெல்லாம் அடகு வைத்து இந்தச் சூதாட்டத்தில் இறங் கினார். ஆனால் அவர் பிழைத்துக் கொண்டு கரை ஏறி விட்டார்.

காரைக்கால் ரூட் கிடைத்தபோது இவர் களுக்குக் கொள்ளை லாபம் கிடைத்தது. தொழில் என்று இறங்கிவிட்டால் அப்புறம் நியாய அநியாயம் பார்க்க முடியாது. அங்



கிருந்து துணிமணிகளும், போலி வைரங்களும், பகட்டுச் சாமான்களும் வந்தன. ஒன்றுக்கு ஐந்து விலை கிடைத்தது. ஒரு தரம் சுங்க அதிகாரிகளிடம் மாட்டிக் கொண்டு சிறைக்குச் செல்லவிருந்தார் ரத்தினம் பிள்ளை. எப்படியோ தப்பி விட்டார்.

இரண்டாவது உலகப் போர் இவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. பெட்ரோல் கிடைப்பது நின்று போயிற்று. பஸ்கள் கரித் தூளில் ஓடின. முத்து ஐயரின் பூர்வீகப் புளியந் தோப்பு பொன்னை வாரிச் சொரிந்தது.

ஐயரும் பிள்ளையும் பூண்ட நகச் சதை உறவு மேலும் மேலும் இறுகிற்று. அவர்கள் ஒரே தாலத்தில் உண்டார்கள். ஒரே படுக்கையில் உருண்டார்கள். என்றாலும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் மரியாதை, பரிவு, நாணயம் இவற்றுடன் பழகினார்கள். இருவருக்கும் குடும்பம் வலுத்தது. பஸ்களின் எண்ணிக்கை பெருகிற்று. வாழ்க்கை வசதிகளும் அவர்களுக்கு வளர்ந்தன.

ஆபீஸ் கணக்குகள், வருமானவரி, வழக்கு, மற்ற அலுவலகங்களுடன் கடிதப் போக்குவரத்து, இவ்வாறாக அலுவலகப் பணிகள் பெருகின. அவற்றையெல்லாம் முத்து ஐயர் தமது கூரிய அறிவுத் திறனால் நிர்வாகம் செய்தார். அந்த வேலை அளவில் விரிந்தது. அங்கே தமது பல உறவினர்களைக் கொண்டு வந்து சேர்த்தார்.

பிறவிப் பொறிஇயல் நிபுணரான பிள்ளையால் தொழிற்சாலையை விட்டே வெளியே வர முடியவில்லை. தகரக் கொட்டகையின் நடுவிலிருந்த பரணில் நின்றுகொண்டே, 'அடைக்கலத்தின் வண்டியில் இரண்டு ஸிலிண்டர் அவுட், முந்நூற்றுப் பத்தின் அவுட்டர் பேரிங் சத்தமிடுகிறது, ஸேவியர் பெட்ரோல் ரொம்பச் சாப்பிடுகிறான்' என்று அவர் கூச்சலிடுவார். தொழிற்சாலை முழுதும் பம்பரமாகச் சுழலுவார். காய்ந்து கொண்டிருக்கும் பாட்டரிகளுக்குச் சுத்த நீர் வார்ப்பார். கட் அவுட் 'அட்ஜஸ்ட்' செய்து கொடுப்பார். இஞ்செக்டரின் ஊசியை எண்ணெய்க் கல்லில் தேய்த்துத் தருவார். ரேடியேட்டருக்குப் பற்ற வைப்பார். இடையே ப்ரேக் ஷூவையும் அராவுவார். தொழிற்சாலையில் பெரும்பாலும் அவருடைய நண்பர்களும் உறவினர்களுமே இருந்தனர்.


அவர்களுடைய டிரான்ஸ்போர்ட் கம்பெனி இந்த இரண்டு சிறகுகளின் உதவியோடு உயர உயரப் பறந்தது; அதாவது அவருடைய பிள்ளைகள் தலையெடுக்கும் வரை. சந்திரன் முத்து ஐயரின் மூத்த பிள்ளை. மோஸஸ் ரத்தினம் பிள்ளையின் இரண்டாவது மகன். இரண்டுபேரும் உயர்தரப் பள்ளியில் ஒன்றாகப் படித்தார்கள். கல்லூரி ஹாஸ்டலிலும் அடுத்தடுத்த அறைகளில் வசித்தார்கள். சமூக இயல், அரசியல் சூழல், பழக்க வழக்கம் அனைத்தும் இருவரையும் வெவ்வேறு திக்கில் கொண்டு சென்றன. மோஸஸ் விளையாட்டுக்களில் தீவிரம் காட்டினான். சந்திரன் கணக்கில் புலி. காமர்ஸில் மாநிலத்திலேயே முதலாவதாக விளங்கினான். இருவருக்கும் நண்பர் குழாம் வேறு; அபிலாஷைகள் வேறு— இருவரும் எதிரெதிரான திசையில் அடியெடுத்து வைத்தனர்.

ஆண்டுகள் சென்றன. முத்து ஐயர் காலமானார். பெரியவர் ரத்தினம் பிள்ளையினால் முன்னைப் போல் ஓடியாடி வேலை செய்ய முடியவில்லை. தமது இறுதி நாட்களைச் சமய வாழ்க்கையில் செலவிட்டார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பக்க வாதம் வந்து அவருடைய நாவு புரள மறுத்தது. செவி எல்லாவற்றையும் கேட்டது. சைகையினால் பதில் கூறினார். நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் காட்டினார். எப்போதாவது ஓரிரு நிமிஷம் பேச வந்தது. அப்போதெல்லாம் தமக்கும் முத்து ஐயருக்கும் இருந்த இறுகிய உறவைப் பற்றித்தான் அவர் பேசுவார். தமது அடுத்த தலைமுறையும் அதே நேச பாவத்தில் வாழ வேண்டும் என்றுதான் அந்த வேளைகளில் வற்புறுத்தினார்.

முத்து ரத்தினம் டிரான்ஸ்போர்ட் இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றது. சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் சந்திரனும் மோஸஸும் மோதிக் கொண்டார்கள். தொழிற்சாலைக்குள் எந்தப் படத்தை வைப்பது, புதிய மோட்டாருக்கு என்ன பெயரிடுவது, யாரை வேலையிலிருந்து நீக்குவது, சேர்ப்பது என்ற எல்லா விஷயங்களிலும் இருவருக்கும் தனித் தனி அமைச்சர்கள் இருந்தார்கள். இவர்களுடைய பிளவை விரிவுபடுத்தினர். இருவரும் வழக்கு மன்றம் ஏறினார்கள். மன்றாடும் படலம் தொடங்கியது.

இரண்டு பேருமே பணத்தை நீராகச் செலவழித்தார்கள். துவேஷம், பொறாமை,

அசூயை, இலேசான கை கலப்பு, கடைசியில் ஹைகோர்ட் தீர்ப்பு மோஸஸுக்குச் சாதக மாக முடிந்தது. பரஸ்பர நம்பிக்கையின் ஆதாரத்திலை் பழைய தஸ்தாவேஜுகளில் முத்து ஐயர் எழுதாமல் விட்ட சில வாசகங்கள் சந்திரனுக்கு அந்தக் கம்பெனியில் உள்ள உரிமையைத் தர மறுத்தன. சட்டம் எப்படி இருந்தாலும் நியாயம் சந்திரனின் பக்கம் இருப்பதை ரத்தினம் பிள்ளை உணர்ந்தார். அவர் சந்திரனுக் காக வாதாடினர். ஆனல் மகன் அதை ஏற்கவில்லை.



பிற்பகல் ஒரு மணிக்கு வீடு திரும்பிய மோஸஸ் தந்தை உணவு உட்கொண்டாரா என்று சமையற்கார ஜோஸப் பைக் கேட்டான். இல்லை என்று அவன் பதிலளிக்கவும் தந்தையின் அறைக்குச் சென் ருன் மோஸஸ். ரத்தினம்பிள்ளை கட்டிலில் சோர்ந்து படுத்திருந் தார். அவருடைய பார்வை எதிரே யிருந்த இயேசு பெருமா னின் திருவுருவத்தில் பதிந்திருந் தது. தனயன் தந்தையின் நெற்றியைத் தொட்டுப் பார்த் தான். பெரியவரின் கண்கள் கசிந்து வந்தன. 'நோட்டீஸ் கொடுத்தாயிற்ரு?'' என்று சைகையின் மூலம் கேட்டார். ''சாயங்காலம் டெலிவரி ஆகும், அப்பா. அதைப் பற்றியெல்லாம் நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டான் மோஸஸ். ரத்தினம் பிள்ளை கண்களை மூடிக் கொண்டார். அவர் கண் முன்பு தோல் பையிலிருந்து முத்து ஐயர் பணத்தை எடுத்துக் கொடுத்த காட்சி நின்றது. மேஜையிலிருந்த மோட்டாரின் மாடலை அவர் தொட்டுக் காட்டினர். மூப்ப ரைிடமிருந்து வாங்கிய 555 எண் வண்டியை அவனுக்கு நினைவூட்டினர். மோஸஸுக்கு எரிச்சல் வந்தது. அரை குறையாக அந்த ஞாபகங்கள் வந்து அவனுடைய மனச் சாட்சி யையும் துன்புறுத்தத் தொடங்கின. அதைத் தன் நெஞ்சிலிருந்து அழிக்க முயன்ருன்.

இந்தக் காட்சியை நெடு நாட்களாக அவர்கள் வீட்டில் வேலை செய்து கொண் டிருந்த சொக்கலிங்கம் கண்டான். அவனு டைய கண்கள் கலங்கின. மோஸஸை அவன் தனியாக அழைத்தான். 'பெரிய விஷயத்தில் எல்லாம் நான் தலையிடக் கூடாது என்ரு லும் ஐயா மனத்தை நோக விடாதீர்கள்'' என்று பணிவுடன் கூறினன்.

''சரி, சரி, வாயை மூடு.'' — மோஸஸ் தன் அறைக்குச் சென்ருன். 'வயதான கிழங்கள் தங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு போகாமல், ...தூ, இது என்ன தொந்தரவு?' — அவனுக்கு அப்போது சாப் பிடக் கூடப் பிடிக்கவில்லை. சட்டையையும் கழற்ருமல் சாய்வு நாற்காலியில் மல்லாந்து படுத்துக் கண்ணயர்ந்தான்.

மணி மூன்றிருக்கும். பெரியவரின் அறை யின் அழைப்பு மணி ஒலித்தது. சொக்கலிங்கம் உள்ளே ஓடினன். சற்று நேரத்துக்கெல்லாம் அவருடைய குறிப்புப் புத்தகத்துடன் மோஸ ஸின் அறையினுள் நுழைந்தான் அவன்.

ரத்தினம் பிள்ளை தெளிவான எழுத்துக் களில் எழுதியிருந்தார்:

'முத்து ஐயரின் கடனை நான் இதுவரை தீர்க்கவில்லை. பாக்கி நிற்கிறது. எனக்கு உடனடியாக நூற்று இருபத்தேழு ரூபாய் வேண்டும்.'

மோஸஸின் உடம்பு புல்லரித்தது. முத்து ஐயர் தன் தந்தையின் தொழிலுக்கு விளக் கேற்றி வைத்த சம்பவம் அவனுக்குத்தெரியும். அது அவனுடைய அடி மனத்தில் ஆழப் பதிந் திருந்தது. எழுந்து டெலிபோன் மேஜையை அணுகினன். மூன்று பூஜ்யம், ஐந்து என்று அவனுடைய விரல்கள் தடுமாறின.

ஜோஸப் உள்ளே ஓடிவந்தான்.

மோஸஸ் புருவத்தை உயர்த்தினன்.

''ரெவரண்ட் ஃபாதருக்கும் செய்தி கொடுத்திடுங்க — ஐயா — கர்த்தர்......'' அதற்கு மேல் பேச அவனல் இயலவில்லை.

உடல் வலுவெல்லாம் இழந்து திகைத்துப் போய் நின்ருன் மோஸஸ். எதிர்ப்புறத்தி லிருந்து 'ஹல்லோ. ஹல்லோ' என்ற குரல் கேட்டுக் கொண்டே யிருந்தது.

கு
ப்புவது



புகழ் பெற்ற போலிகள்

கொடுத்து வைத்தவன்

பிரஞ்சுக்காரர்களுக்கு அமெரிக்கர்கள் மீது ஒரே கோபம்; ஆத்திரம். 'யுத்தத்தை முடித்துக் கொண்டு இந்த அமெரிக்கர்கள் ஹாய்யாக பாரிசை, நியூயார்க்காகவோ, சிகாகோவாகவோ நினைத்துக் கும்மாளம் அடிக்கிறார்களே தவிர வெளிப் பிரதேசங்களில் அகப்பட்டுக் கொண்ட பிரஞ்சு யுத்தக் கைதிகளை மீண்டும் தாய் நாட்டுக்கு அழைத்து வந்து விடுவதில் அக்கறை காட்டவில்லை' என்ற தாபம். இந்த நிலை படித்தவர்கள், பாமரர்கள் என்ற வித்தியாசமில்லாமல் பிரஞ்சு மக்களிடையே 1945ல் பரவியிருந்தது. புதிதாகக் கைப்பற்றப்பட்ட ஜெர்மானியப் பிரதேசங்களில் கடின உழைப்புக்காகப் பிரஞ்சுக்காரர்களை வேண்டுமென்றே அமெரிக்கர்கள் விட்டு வைத்திருக்கிறார்கள் என்ற அபவாதமும் ஏற்பட்டது.

உண்மையோ இதற்கு முற்றிலும் மாறுபட்டது. பிரஞ்சுப் போர்க் கைதிகளை, சீராகப் பிரித்து அவ்வப்போது ஆயிரக்கணக்கில் கொண்டு வந்து சேர்த்துக் கொண்டுதான் இருந்தார்கள் அமெரிக்கர்கள். ஆனாலும் பிரஞ்சுக்காரர்கள் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. குற்றம் சாட்டுவதிலேயே குறியாக இருந்தார்கள். இந்த அவநம்பிக்கை உணர்ச்சியை எப்படி அவர்கள் மனத்திலிருந்து அகற்றுவது என்று அமெரிக்க அதிகாரிகள் தீவிரமாகச் சிந்தித்தார்கள். கடைசியில் இந்த நம்பிக்கையைப் பெரிய அளவில் தடபுடலாக உருவாக்கப்பட்ட நிகழ்ச்சி மூலம் பிரஞ்சுக்காரர்கள் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும் என்று தீர்மானமாயிற்று. அதன் பூர்வாங்கப் பொறுப்பை ஜான் ஹோம்ஸ் என்று புனை பெயரில் அழைக்கப்பட்ட பத்திரிகைக்காரரிடம் ஒப்படைத்தார்கள். 'பத்து லட்சத்தியோராவது பிரஞ்சுக் கைதிக்குப் பார்ப்போர் வியக்கப் பாரிஸ் நகரில் வரவேற்பு' என்ற அடிப்படையில் விஷயங்களைக் கவனித்து ஏற்பாடு செய்ய ஜான் ஹோம்ஸ் ஜெர்மனியிலுள்ள ஃபிராங்பர்ட்டுக்குக் கிளம்பினான். இந்தப் பிரம்மாண்ட ராஜ வரவேற்புக்குத் தகுதியான நபரைத் தேர்ந்தெடுக்க வேண்டியதும் அவன் பொறுப்புக்களில் ஒன்று.

ஃபிராங்பர்ட்டுக்கு ஹோம்ஸ் வந்து சேர்ந்த பொழுது அவனுக்கு மாபெரும் அதிர்ச்சியே காத்திருந்தது. ஜெர்மானியப் பிரதேசங்களிலிருந்து பரிவர்த்தனை செய்யும் படியாக ஒரு பிரஞ்சுப் போர்க் கைதிகூட அங்கு கிடையாது. எல்லாரும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்கள். ஹோம்ஸுக்கு மற்றொரு விஷயமும் தெரிய வந்தது. ஏற்கனவே பன்னிரண்டு லட்சம் நபர்களுக்குமேல் தாயகமாகிய பிரான்சுக்குத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்கள். துல்லியமாகச் சொல்ல வேண்டுமானால் பன்னிரண்டு லட்சத்து நானூற்று முப்பது பேர்கள் திரும்பிப் போயிருக்கிறார்கள். இந்த விஷயங்களை எப்படி எடுத்துச் சொன்னாலும் பிரஞ்சு மக்கள் நம்ப மாட்டார்கள் என்று ஹோம்ஸுக்குத் தெரியும். ஒரு பிரும்மாண்ட நிகழ்ச்சியினால்தான் நம்பிக்கை ஊட்ட முடியும். யாராவது எங்கேயாவது மறைந்திருக்கும் போர்க் கைதியைப் பிடித்துத் திருப்பி அனுப்பினாலும் அவன் பன்னிரண்டு லட்சத்து நானூற்று முப்பத்தி ஒன்றாவது ஆசாமியாகத்தான் இருக்க முடியும். இந்த எண்ணிக்கைக்கு விளம்பர மதிப்பு கிடையாது. ஆகவே அவன் பத்து லட்சத்து ஒன்று (ஒரு மிலியன் கடந்த முதல் ஆசாமி) என்ற எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் அளித்து அந்தப் பெருமைக்கு ஆளாக்க ஒரு நபரைத் தேட முயன்றான்.



ஜெர்மனியில் அமெரிக்க பிரஞ்சுப் பகுதிகளில் ஓர் ஆசாமிகூட அந்த அந்தஸ்தைப் பெறத் தகுதியுள்ளவனாக இல்லை. பிரிட்டிஷ் பகுதியில் ஒருவன் இருந்தான். அவன்கூட ராணுவத்தில் எந்த முக்கியத்துவமும் பெற்றவன் இல்லை. தன் நண்பர்களெல்லாம் பிரான்சுக்குத் திரும்பிய பிறகும் அவன், பிரத்தியேக அனுமதி பெற்று அங்கேயே தங்கி விட்டான். அவனுக்கு அந்த ஜெர்மானியப் பிரதேசம் பிடித்துப் போய்விட்டது. அங்கேயே ஏதோ சிறு தொழில் செய்து பிழைக்க ஆரம்பித்து விட்டிருந்தான். அவனுக்கு ஒரு காதலியும் கிடைத்து விட்டாள். அவள் பெயர் ஜீன்ஸ்.

ஹோம்ஸ் லூன்பர்க் என்ற இடத்தில் வசித்த ஜீன்ஸைக் கண்டுபிடித்து விட்டான். பத்து லட்சத்தி ஓராவது ஆ[illegible] என்ற பெருமையை அவன் த[illegible] மத்தத் தீர்மானித்து விட்டான். [illegible] அதை அவன் விளக்க முற்பட்[illegible] ல் சீறி விழுந்தான். தான் [illegible] டும்

வெளியாகும் என்று பிரகடினான். அவன் வாயை அடைக்க அந்த பாங்கி, ஏற்கனவே இழந்த இருபத்தி ஐயாயிரத்துக்குத் துணையாக மேலும் ஆயிரம் டாலரையும் கொடுத்தது!

இந்த வகையில் மேலும் பல சாகஸ மோசடிகளைச் செய்துவிட்டு விக்டர் லஸ்டிக் பாரிஸ் நகருக்கு வந்து சேர்ந்தான். பாரிஸில் அவனுக்கு ஒரு கூட்டாளியும் கூட. டேப்பர் டான் என்பது அந்தக் கூட்டாளியின் பெயர். இருவருமாக 'உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு' என்ற ரீதியில் சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தார்கள். பத்திரிகைகளில் யதேச்சையாக வெளியான செய்தி ஒன்று அவர்கள் உதவிக்கு வந்தது.

'பிரசித்திபெற்ற பாரிஸ் எஃபில் எஃகு கோபுரத்துக்குச் சிறு ரிப்பேர்கள் செய்வதற்கே ஆயிரக் கணக்கான பிராங்குகள் செலவாகிறதென்றும், அந்தக் கோபுரத்தையே பிரித்து இரும்பாக விற்றுவிடுவது சர்க்காருக்குச் சாதகமா யிருக்கும்' என்றும் யாரோ எழுதியிருந்தார்கள்.

இதைப் படித்த விக்டர் தன் கூட்டாளி டேப்பர் டானிடம் ''இந்தக் கோபுரத்தை நாமே சர்க்காருக்குப் பதிலாக விற்றுவிடலாம்'' என்றான் அலட்சியமாக. டேப்பர் டானுக்கு தன் நண்பன் ஏதோ பைத்தியக்காரத்தனமாக உளறுவது போலத்தான் தோன்றியது. ஆனால் சீக்கிரமே அவன் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அவனையே வியப்பிலாழ்த்தின.

சில நாட்கள் கழித்துப் பாரிஸ் நகரிலுள்ள ஐந்து பெரிய வியாபாரிகளுக்குச் சர்க்கார் டெபுடி டைரக்டர் ஜெனரலிடமிருந்து தனித் தனியே கடிதங்கள் வந்தன. விக்டர் தான் சர்க்கார் முத்திரையிட்ட கடிதங்களை எப்படியோ தயார் பண்ணி அவைகளை அனுப்பி வைத்தான்.

குறிப்பிட்ட நாளில் ஒரு பிரபல ஹோட்டல் அறையில் அந்த ஐந்து நபர்களும் விக்டரைச் சந்தித்தார்கள். விக்டர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, 'நண்பர்களே! இந்த நாட்டு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும், சம்பந்தப்பட்ட உத்தியோகஸ்தனான எனக்கும் மாத்திரம் தெரிந்த ஒரு மாபெரும் ரகசியத்தை இப்போது உங்களிடம் பகிர்ந்து கொள்ளப் போகிறேன். ஆகையால் விஷயம் முக்கியத்துவம் வாய்ந்தது. 1889ம் ஆண்டில் ஏழு ஆயிரம் டன் உயர்ந்த ரக எஃகைக் கொண்டு எழுபது லட்சம் பிராங்குகளுக்கு மேலாகச் செலவழித்து எழுப்பப்பட்ட நம் எஃபில் கோபுரம் பராமரிப்பு என்ற வகையில் நிறையப் பணத்தை விழுங்குகிறது. அது மாத்திரமல்ல! அந்தக் கோபுரத்தினால் எந்தவிதப் பிரயோசனமுமில்லை. ஆகவே சர்க்கார் அதைப் பிரித்து இரும்பாக விற்கத் தீர்மானித்துவிட்டது. உங்களில் யார் அதிகமான தொகைக்கு டெண்டர் போடுகிறார்களோ அவர்களுக்கு அந்தக் 'கோபுரத்தைப் பிரித்து எடுத்துப் போகும் உரிமை கிடைக்கும்'' என்றான்.

கூடியிருந்த ஐவரும் இந்த வியாபாரத்தில் எவ்வளவு லாபம் கிடைக்கும் என்று கணக்கிட்டார்கள்; குறிப்பிட்ட தேதிக்குள் டெண்டர் அனுப்புவதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பினார்கள். அவர்களில் சற்று ஏமா[illegible] னை ஆண்ட்ரீ போஷன் என்பவனை போதே விக்டர் இந்த வியாபாரத்து[illegible] தேர்ந்தெடுத்துவிட்டான் மானசீகமாக.

டெண்டர்கள் ஒழுங்காக வந்தன. [illegible]பர் டான் ஆண்டிரீயைச் சந்தித்து அ[illegible] டெண்டர் ஒப்புக் கொள்ளப்பட்டதா[illegible] சொல்லிப் பணத்துடன் ஓட்டல் அறைக்கு வரச்சொன்னான். இந்தச் சர்க்கார் விவகார[ம்] ஓட்டல் அறையில் நடப்பது பற்றி ஆண்ட்ரீக்கு ஒருவிதச் சந்தேகம் தோன்றுவதை[க்] கவனித்த டேப்பர் டான், தன் குருவா[ன] விக்டரிடம் சொன்னபோது அதற்கும் ஒ[ரு] நாடகமாடத் திட்டமிட்டான் விக்டர்.

ஆண்ட்ரீ பணத்துடன் ஓட்டல் அறைக்கு வந்தபோது விக்டரும் டேப்பர் டானு[ம்] இருந்தார்கள். ஆண்ட்ரீயை அமரச் சொல்[லி]விட்டு விக்டர், டேப்பர் டானைப் பார்த்[து] ''நான் இந்தப் பேரத்தை முடித்துக்கொண்[டு] சரியாக மூனு மணிக்கு அரசாங்கக் கட்டிடத்தில் உள்ள என் காரியாலயத்துக்கு வந்துவிடுவேன். அப்போது கையெழுத்துக்கான இதர பேப்பர்களை எடுத்து வை'' என்று அவனை அனுப்பி வைத்தான். ஆண்ட்ரீ முகத்தில் நம்பிக்கை மலர்வது கண்டு தணிந்த குரலில் 'இந்தப் பேரத்தை நியாயமாக என் காரியாலயத்தில்தான் நடத்த வேண்டும். ஆனால் அங்கு நாலு பேர் கூட இருக்கும் போது மனம் திறந்து பேச முடியாது. இந்தப் பேரங்களில் என்போன்றவர்கள் தனிப்பட்ட முறையில் கொஞ்சம் கிம்பளம் எதிர்பார்ப்பது உங்களுக்குத் தெரியும். அதற்காகத் தான் இந்த ஓட்டல் அறை. நாளைக்கு நீங்கள் முடிவான உத்தரவை அங்கே வந்து பெற்றுக் கொள்ளலாம்'' என்றான்.

அப்பாவி ஆண்ட்ரீ அசட்டுச் சிரிப்புடன் 'இது தெரியாதா? உங்களுக்குத் தனிப் பணம் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று சொல்லி டெண்டர் தொகையுடன் விக்டருக்கும் தனிப்பட்ட சன்மானம் அளித்தான்.

அன்று இரவே விக்டரும் டேப்பர் டானும் பாரிஸிலிருந்து கிளம்பி அண்டை தேசத்துக்குப் போய்விட்டார்கள். மறுநாள் முதல் பிரஞ்சுச் செய்திகள் வரும் பத்திரிகைகளை உன்னிப்பாய்க் கவனிக்கத் தொடங்கினார்கள். ஆண்ட்ரி போஷன் எஃகுக் கோபுரத்தை விலை பேசிய செய்தி வெளியாகவே இல்லை. பாவம் ஆண்ட்ரீ தான் ஏமாந்ததை வெளியே சொல்ல வெட்கப்பட்டுச் சும்மா இருந்துவிட்டான்!

இதைப் பயன்படுத்திக் கொண்டு விக்டர் மீண்டும் சில நாட்கள் கழித்து அதே கோபுரத்தை வேறு ஆசாமியிடம் விலை பேசிப் பணத்தை அமுக்கினான்.

கடைசியாக அமெரிக்க டாலர் நோட்டுக்களைச் சொந்தத்தில் தயாரித்த குற்றத்திற்காக 1935ம் ஆண்டில் இருபது ஆண்டு தண்டனை பெற்ற கவுண்ட் விக்டர் லஸ்டிக் பன்னிரண்டாவது ஆண்டு சிறைவாசத்தின் போது காலமானான்! திறமையாக மோசடி செய்வதில் அப்புறம் அவனை யாரும் மிஞ்சவில்லை!

— திருவேரகத்தான்

ஆதாரம்: ரீடர்ஸ் டைஜஸ்ட்

சுகி உள்ளே நுழைந்தாள். சுவர்க் கடி
ந் ஏழு அடித்தது. ரங்கதுரை படிப்பதாக
னை செய்து கொண்டிருந்த செய்தித்
ள மடித்து மேஜை மேல் வைத்து
டுச் சோம்பல் முறித்தான்.

'அப்பாடா! அலுப்பாயிருக்கு வாசுகி.
 மணிக்கே சாப்பிட்டுப் படுத்து விட்டால்
வலை . போல் இருக்கு.'' ஒரு நிமிஷம்
றுத்திவிட்டு அவளைப் பக்க நோக்காகப்
ார்த்தான். ''என்னமோ தெரியவில்லை,
ப்போதெல்லாம் சீக்கிரமே பசிக்க ஆரம்
ச்சுடுது.''

அவள் முகம் சட்டென்று சிவந்தது,
அவன் பேச்சின் ரீங்காரத்தைப் புரிந்து
கொண்டதன் விளைவாக. தெரிந்த பேச்சுத்
தான். புதிதல்ல. திங்கள், புதன், வெள்ளி
மூன்று தினங்களிலும் மாலை ஆறு முதல்
ஏழு வரை அவனிடம் இந்தப் பரபரப்பு.
அவள் சென்று வரும் வரையில் படிப்பதாய்
ாவனை, சிந்தனை படிந்த மேல் பார்வையின்
ியிப்பு, அருவமான எண்ணப் பிசிறல்களுக்கு
ஈடு கொடுக்க முடியாத சலனம். நேராகச்
சொல்ல மாட்டான்; தடுக்க மாட்டான்.
ஆனால் மௌனத்தையே கண்டனமாக்கி
விடும் தன்மை. தன் உணர்ச்சிகளையே
நிமிர்ந்து பார்க்கத் துணிவின்றி அந்தக்
குழறுபடியில் தன்னையும் அவளையும் ஒருங்கே
வருத்திக் கொள்ளும் பொருமல். அவளுக்குத்
தெரிந்ததுதான் இதெல்லாம். ஆயினும்
ஒவ்வொரு முறையும் அதிர்ச்சியே.

''என்ன, பதிலையே காணோம்?''

''இனி மேல் ஆறு மணிக்கே சமையலை
முடிச்சு வைச்சுடறேன்.''

''ஏன், எட்டரை மணிக்குள் ஆறி அவ
லாய்க் கிடக்கவா?''

''இப்போத்தானே சொன்னீங்க, ஏழு
மணிக்கே பசிக்கிறதுன்னு?''

அவன் சட்டென்று உதட்டைக் கடித்துக்
கொண்டான். ஒரு நிமிஷத்துக்குள் முன்னுக்
குப் பின் முரணாகப் பேசி விட்டதன் அவ
மானத்துடன், தன் வார்த்தைகள் உண்மை
யில் வெளிப்படையான பொருளுடையவை

குரு



அவன் ஆத்திரத்துடன், "எனக்கு அந்தக் காம்போதி ராகமே ஆகிறதில்லை, பாடாதே" என்றான்.

"இது காம்போதி இல்லை, சங்கராபரணம்!" அவள் சிரித்துக் கொண்டே அங்கிருந்து சென்றாள்.

அவனுக்கு முகம் சிவந்து விட்டது. சங்கீதத்தைப் பற்றி அவனுக்கு எதுவும் தெரியாது. அதை அவள் சுட்டியது ஒரு நுட்பமான வகையில் அவர்களிடையே வேறுபாடுவிளைந்து விட்டதை உணர்த்துவது போல் இருந்தது. அவள் அவனிடமிருந்து விலகி வேறொன்றுடன் இசைவை அவளோடு சமமாய்ப் பங்கிட்டுக் கொள்ளும் ஒன்றுடன் — கட்சி சேருகிறாளா? குருதட்சிணை என்று வித்துவான் எதைக் குறிப்பிட்டார்? அவளிடம் என்ன எதிர்பார்க்கிறார்?......

ரங்கதுரை சட்டென்று சுற்று முற்றும் பார்த்துக் கொண்டான், உரக்க ஒருவரைத் திட்டும் போது யாராவது கேட்டு விட்டார்களோ என்ற குற்ற உணர்வோடு சுற்றிலும் பார்ப்பது போல். பிறர் அறிய முடியாத படி மனசில் மற்றொருவரைப் பற்றி இழிவு நினைவு தோன்றும் போதுகூடச் சட்டென்று சுற்று முற்றும் பார்த்துக் கொள்ள உந்தும் குற்ற உணர்வை எண்ணி அவனுக்கே வியப்பாயிருந்தது.

மாலையில் அவன் வீடு திரும்பும் போது அவள் சில நாள் தோட்டத்தில் மரத்தடியில் நின்று கொண்டிருப்பாள். இலைப் பச்சை மீதெங்கும் விரிப்பாய் மிதக்கும் செக்கச் சிவந்த காட்டுத் தீ மலர்கள் ரத்தச் சுடர் படர்ந்தது போல் கனன்று காட்சியளிக்கும். அவற்றின் கீழே அவள் நிற்பாள். ஒரு சமயம் சிவப்புச் சேலை அணிந்து அவள் அப்படி நின்று கொண்டிருந்த போது அவளும் காட்டுத் தீயின் ஓர் உயிர்க் கொழுந்தாய்த் தெரிந்த காட்சி நெஞ்சில் அச்சத்தை அப்பியது. அந்தத் தீச் சிறலை யாராவது அணுகி விடத்தான் முடியுமா? விளையாட நெருங்கும் கையை அது பொசுக்காமல் விடுமா?

கண நேரம் அவன் ஸ்தம்பித்து அந்தப் பயங்கரப்பேரெழில் முன் செயலற்றுநின்றான். சிவப்புச் சேலைக்கு எடுப்பாக அவள் அதே ரகச் சிவப்பில் சோளியும் அணிந்திருந்தாள். நாகரிக முறைப்படி தைத்த சோளியின் குட்டைக் கையிலிருந்து அவள் கரத்தின் கொழுமிய வெண்மை விடுபட்ட நீரருவி போல் பீறி வந்து கொண்டிருந்தது. காட்டுத் தீ வளைந்த விதானத்தின் கீழ் பஞ்சபூதங்கள் தீண்டாத ஏதோ ஒரு பவித்திர மனக் கோலம் போல் அவள் நின்றிருந்த தோற்றத்தில் அவன் தன் கீழெண்ணங்களுக்காக ஒரு நிமிஷம் வெட்கிப் போனான்.

அவளது ஒருமித்த நிலை கலைந்தது. தலையைச் சாய்த்தவாறு அவனைப் பார்த்தாள். முகப் பொலிவின் தூய்மைச் சூனியத்துள் புன்னகை ஒன்று பெருகி வந்து நிறைந்தது. மீண்டும் அவன் நெஞ்சில் சலனம் கிளர்ந்தது.

"எப்போ வந்தீங்க? ரொம்ப நேரமாய் நிற்கிறீங்களா? காப்பி டிபன் சாப்பிட உள்ளே வாருங்களேன்!"



"டே! இந்த உலகத்திலேயே பெரிய சோம்பேறி கோடி வீட்டுக் குப்புசாமிதான்!"

"பெரிய சோம்பேறியா? அவர் எவ்வளவு உயரம் இருப்பார்?"

"தெரியாது. அவர் எழுந்து நின்றதையே நான் பார்த்ததில்லை!"

"உனக்கு ஒரே அவசரம்! இல்லையா? இன்னிக்கு வெள்ளிக்கிழமையாச்சே!"

அவள் எதுவும் பேசாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு உள்ளே போக முற்பட்டாள். புன்னகையின் எலும்புக் கூடுதான் மிஞ்சியது.

"வாசுகி!"

அவள் நின்றாள். "என்ன?"

"இன்று இவ்வளவு அழகாயிருக்கே! அதுக்கும் அதுதான் காரணமா?"

"எதுதான்?"

'இன்று வெள்ளிக்கிழமையாய் இருப்பது தான்' என்று சொல்ல நா எழவில்லை. அவளது சோளிக் கையின் கீழே இரண்டு அங்குலத்துக்கு உடலின் சதை அதற்குக் கீழே தெரிந்த கரத்தின் நிறத்தைவிடச் சற்று அதிக வெண்மையாய்க் காட்சியளித்தது. முன்பு நீளக்கை ரவிக்கையினால் மூடப்பட்டிருந்தது இப்போது மாறிய நாகரிகத்தூடே வந்த குட்டைக் கைச் சோளியினால் மூடப்படாத பாகமாய் இருப்பதன் காரணமாய்க் கரத்தின் அந்த இடத்தில் அந்தச் சிறிய நிற பேதம். யோசனையில் லயித்த குருட்டுக் கண்களை அந்த இடத்தில் பதிய விட்டவாறு ரங்கதுரை சிறிது நேரம் நின்றான்.

பிறகு திடீரென்று கேட்டான். "இன்னிக்கு நாம் கோவிலுக்குப் போகலாமா?"

"ஏது, திடீர்னு பக்தி!"

"ஒண்ணுமில்லே. வெள்ளிக்கிழமையாய் இருக்கேன்னு சொன்னேன்."

"நாளைக்குப் போவோமே?"

"நாளை வெள்ளியில்லையே!"

"அதனால் என்ன? வெள்ளிக்கிழமையன்று வந்தால்தான் அருள் செய்வேன் அப்படின்னு சுவாமி ஏதாவது நியமம் வைத்துக் கொண்டிருக்கிறாரா, என்ன?"

''நான் சொல்றதைக் கேக்கற வழக்கமே போய் விட்டது.''

''இன்று ஒரு நாள்தானா, இல்லை வாரா வாரம் வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போகணும்கிறீங்களா ?''

''ஏன், போனால் என்ன? அதுவும் நல்ல வழக்கம்தான்.''

''சரி. உங்களுக்கேன் குறை? அப்படியே போவோம். அப்படின்னா, இன்மேல் திங்கள், புதனுக்கப்புறம் வெள்ளிக்குப் பதிலாய்ச் சனிக்கிழமைகளில் டியூஷனுக்கு வரேன்னு பாட்டு வாத்தியார்கிட்டச் சொல்லட்டுமா?''

அவள் பார்வை அவனை ஊடுருவியது. அவன் ஒரு சொல்லால் அன்பின் உறுதியை உருக்காட்டி விட்டால் போதும்; மொழி வேண்டாம், நம்பிக்கையைக் காட்டும் ஒரு முறுவல் தந்தாலும் போதும், அவள் ஆறுதலடைந்து விடுவாள். பெண்ணின் உரிமை என்பது மட்டுமல்ல; உறவு துளிர்ப்பதற்கான அமுதபிந்துவே அந்த நம்பிக்கைதான். அது வாதாடிப் பெறுவதல்ல. உணர்த்தி உணர்வதல்ல. கொள் என்றும் கொடு என்றும் அமைவதல்ல. கொடையும் ஏற்பும் உண்டானால் பின் சமத்துவம் எங்கே ? மண்ணிலே ஈரம் சுரப்பது போல் அவனுள் நம்பிக்கை சுரக்க வேண்டும். அவள் கண்ணிமைகள் துடித்துக் கொண்டிருந்தன. அவன் அவள் பார்வையைச் சந்திக்க வில்லை. மரத்தின் மீது கொழுந்து வரிசைகளாக விரிந்திருந்த காட்டுத் தீப் பூக்களின் வழியாக அவன் வானத்தை அண்ணாந்து பார்த்தான். திட்டுத் திட்டாக வான நீலம் கிளைப் பின்னல்களிடையே சிறையுண்டிருந்தது.

''சீக்கிரம் உள்ளே வர்றீங்களா? உங்களுக்குச் சிற்றுண்டி கொடுத்துட்டு நான் போகணும். மாஸ்டர் காத்திருப்பார்'' என்றவாறு அவள் வீட்டினுள் நுழைந்தாள்.

தயக்கத்தினிடையே நாட்கள் ஊர்ந்தன. அவன் ஒரு நாள் அழைத்தான். ''வாக்கிங் போய்ட்டு வரலாம், வரியா வாசுகி?''

''இதோ.''

அன்று டியூஷன் தினமல்ல. செவ்வாய்க் கிழமை. இருவரும் உலாவக் கிளம்பினார்கள்.

இதயத் தந்திகளை மீட்டும் இனிய தென்றல். அல்லி மலர்களையும் அரும்பவிழும் கனவுகளையும் அலுங்காமல் தலை மேல் சுமந்து கொண்டு மாலைக் கன்னி மென்னடை பயின்று வந்து கொண்டிருந்தாள். முன்னிலாக் காலம். மரமொன்றின் உச்சாணிக் கிளை மீது மதிய வட்டம் ஒரு குறும்புக்காரப் பையன் போல் அமர்ந்திருந்தது. அந்தரங்கமாய் நெஞ்சில் வந்து கிளுகிளுக்கும் இயற்கையின் மெல்லோசைகளை அமுக்கி மும்முரமான நகர வாழ்வின் நெரிசலும் இரைச்சலும் எங்கும் ஆக்கிரமித்திருந்தன. கவனிப்பாரற்ற குழந்தை போல் அழகு கிடந்தது.

அவர்களும் கவனிக்கவில்லை. இருவருக்கும் தத்தம் தனியான எண்ண ஓட்டம். நெருங்கி நடக்கின்ற இரு உடல்களைப் பிரிக்கும் எத்தனை 'எத்தனையோ உணர்ச்சி பேதங்கள். இணையாய்ப் பகிர்ந்து கொள்ள வேண்டிய இளமைகளின் மேல் ஒரு திரை. உள்ளத்தின் அடித்தளத்தில் ஒட்டாத கலக்க அலைகள். அவற்றின் மோதலில் அவனுக்கு மூச்சு முட்டியது. ஆனால் கரை சேரத் தெம்பில்லை. புணையைப் பற்றித் தள்ளக் கோலில்லை. அப்படி என்பதாக ஒரு மலைப்பு. கோல் என்று நினைப்பது பாம்பாக இருந்து விட்டால்?.... அவளும் மௌனமாகவே நடந்தாள். அந்த மௌனத்தில் கணக்கற்ற அர்த்தச் சிதறல்கள். சில சமயம் அவனுக்கும் பொருள் புரிவது போல் இருந்தது. ஆயினும் அந்தப் பொருளுக்கு அவள் ஏன் வாக்குருவம் தரக் கூடாது? 'நான் நல்லவள்' என்று ஒரு முறை வாய்விட்டுச் சொன்னால் என்னவாம்?


வாய் பேசாமல் நடந்து சென்று கடற்கரையை அடைந்தார்கள்.

''கொஞ்ச நேரம் உட்காரலாமா வாசுகி?''

''ம்.''

உட்கார்ந்த நிலையில் நேரம் கரைந்தது. அமுதமயமாய்க் கங்குல் படர்ந்து விட்டது. நிலவின் பொழிவிலே மணற்பரப்பெங்கும்

உபகாரி உத்தண்டன்



பொடித்தெழுந்தன. திடீரென்று அருகில் பேச்சொலி. முகம்கூடத் தெரியவில்லை.

''ஆமாமாம், நானும் கேள்விப்பட்டேன். அவர் ரொம்பப் போக்கிரிதானும். என்ன வித்துவானுயிருந்தால் என்ன? மனுஷனுய்ப் பிறந்தவனுக்கு ஒழுக்கம் இருக்கணும்......''

''உண்மைதான். அங்கே பாட்டுச் சொல்லிக்கப் போகிற பெண்களுக்கு ரொம்பத் துணிச்சல்.''

''பாட்டுச் சொல்லிக்கவா போருங்க அங்கே?''

''இப்போகூட.... யாரோ வாசுகின்னு பேராம். கல்யாணம் ஆனவள்னு சொல்லிக்கிருங்க. கல்யாணமான பொம்புளைக்கு எதற்கையா இந்த எழவெல்லாம்? என்னமோ, நம்ம வாயாலே இதை யெல்லாம் சொல்லக் கூடாது!.......''

பேசியவர் மேலே தொடரவில்லை. அவர் சட்டைக் காலர் ரங்கதுரையின் கைப் பிடிக்குள் இருந்தது. அவருடைய கன்னத்தில் கொடுத்த அறையினுல் அவன் கை இன்னும் விறுவிறுத்துக் கொண்டிருந்தது.

''என்ன சொன்னே? எவண்டா நீ அவளைப் பற்றி இப்படி யெல்லாம் பேச? அவள் நல்லவள், தெரியுமா? என் வாசுகி தூய்மையானவள். அவளைப் பற்றி இந்த மாதிரி அபாண்டம் பேசற அற்பப் பயல்களின் பல்லை உடைச்சுடுவேன், ஜாக்கிரதை!'' இன்னேர் அறை, இன்னுமொன்று. ஆத்திரத்தில் அவன் அறைய அறைய வாசுகி மெய் மறந்து போனுள்.

கணப் பொழுதில் சுற்றிலும் கூட்டம், பிரிந்த கட்சிகள், வாக்கு வாதங்கள், போலீசை அழைப்பதான மிரட்டல்கள்—கடைசியில் ஒருவாறு எல்லோரும் விலகி இடம் காலியாயிற்று. கூட்டம் கலைந்த வெறுமையை வெறித்தவாறு ரங்கதுரை மெல்லிருளில் மூச்சிரைத்தபடி ஆவேசமாய் நின்முன். அவன் வாயினின்று என்ன வார்த்தைகள்! அவள் தூய்மையானவள்! அவள் தூய்மையானவள்! அவனுள் வெள்ளமிட்டுப் பொங்கிப் பாய்ந்தது இந்தஉணர்வு ஒன்றே. இழிவு பேசிய ஈனன் மீது கனன்றெழுந்த சீற்றத் தீயிலே அசுத்தங்கள் பொசுங்கிப் போய் அடியில் நின்ற பொன் மய அன்புதான் ஒரே நித்தியப் பொருளாய்ச் சுடர்ந்து நின்றதா? அந்த அன்பும் நம்பிக்கையும் உறுதியும் அவனுள் எப்போதுமே இருந்தவைதானே? இந்த மோதல் தேவைப்பட்டதா, அவற்றை மூடியிருந்த கறையான் விலக? அவனே தன்னுள் நோக்கி உண்மையை உணர்ந்து கொள்ள?


புதிதாய் உதித்த விழிப்பின் தெய்விகக் கிளர்ச்சியிலே அவன் திரும்பி அவளைப் பார்த்தான். வாசுகி இதயம் இன்பத்தில் பொங்கிப் பூரிக்க அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்கள் பனித்து விட்டன. அவன் நம்பிக்கை அவளுடைய பெண்மையின் பெருமிதம். சட்டென்று நிலவொளியில் இருவர் முகங்களிலும் புன்னகை ஆம்பலாய் அலர்ந்து விட்டது. அவனுக்கு உள்ளத்தில் ஏதோ விடுதலை உணர்ச்சி. சிறிது நேரம் உண்மையின் சந்நிதியிலே அன்பின் மோன நிறைவை ஏந்தி இருவரும் அமர்ந்திருந்தனர். பிறகு அவள் கூறினுள். ''நாளை மாஸ்டருக்கு நான் குருதட்சிணை கொடுத்துடறேன்.''

''செய்.''

''நீங்க என்னை நம்பறீங்க. அப்படின்னு என் ஒருத்தி விஷயத்திலாவது அவரைத் தவறுதவர்னு நீங்க ஒப்புக் கொள்வதாய் ஆகிறது, இல்லையா? நல்லவரான அவருக்கு ஊர் முழுதும் அவப் பெயர். நாளைக்கு என்னேடு நீங்களும் அவர் வீட்டுக்கு வந்து நட்பு முறையிலே பேசிட்டு வாங்க. அப்போ உங்க நம்பிக்கை அவருக்குப் புரியும். தன்னை ஒருவராவது நம்பறுர் என்கிற திருப்தி அவருக்கு ஏற்படும். தவருய் எடை போடப்படும் அவருக்கு அந்த நம்பிக்கையைவிடப் பெரிய குரு தட்சிணை வேறு என்னதான் கொடுக்க முடியும்?''

''ரொம்ப சரி. அப்படியே செய்வோம்.''

இருவரும் எழுந்து வீடு நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். அவன் அண்ணுந்து வானத்தைப் பார்த்தான். தடையாய் இருந்து சிறைப்படுத்துவது போல், பிரமை எழுப்ப மரங்களோ கிளைகளோ அருகில் இல்லை. தங்கு தடையின்றி விண்வெளி அண்டமெங்கும் பரந்திருந்தது.





தெளிந்த நீர் மொள்ளுவதற்காக ஆற்றுப் பரப்பில் குடத்தைக் கொண்டு நீரைத் துழாவினாள் பரிமளம். இடுப்பளவு ஆழத்தில் நின்று கொண்டிருந்த நிலையில் பாதங்களின் கீழ் மணல் பரிந்து கொடுத்தது. ஒரு விநாடி அடித்தளத்தைத் தொட்டுக் கொண்டும், மறு விநாடி பட்டும் படாமலும் நீரில் நின்றாடிக் கொண்டும் குடத்தைக் கவிழ்த்து நீர் மொள்ள முனைந்தாள். நீந்தத் தெரிந்த தைரியம்; அந்த இதவான உணர்வில் சிறிது நேரம் நிலைபெற விழைந்தது அவள் உள்ளம்.

பரிமளத்தின் பார்வை நீர்ப்பரப்பில் நீண்டபோது அவள் உணர்வை ஒரு சிறு காட்சி அசைத்தது. நூல் பிடித்தாற்போல் நட்ட நடுப் பரப்பில் சிவப்புக் கொத்தாய் ஒரு மலர் மிதந்து கொண்டிருந்தது. 'செம் பருத்திப் பூ' என்று அவள் தனக்குள்ளே கூறிக் கொண்டு, அது மிதந்து வரும் அழகை ரஸித்துக் கொண்டிருந்தாள். நீரின் மேல் அந்த மலரின் ராஜ பவனி அவள் உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்தது.

'இந்த மலர் எங்கிருந்து வரக் கூடும்?' என்றொரு கேள்வி எழுந்தது அவள் மனத்தில்.

அவளைப் பொறுத்த வரை இதற்கு விடை கிடையாது; ஆனால், கற்பனை பண்ணினால் அவள் ஆயிரம் விடைகள் காண்பாள்.

மலர் அவள் முகத்தருகே வந்து விட்டது. அதன் மலர்ச்சியில் அது தன் இதழ்கள் விரித்துச் சிரிப்பதாகத் தோன்றியது; அதன் மௌனத் தோற்றத்தால் அது தன் அறிமுகத்துக்குப் பிறகு கலகலவென்று ஏதேதோ பேசுவது போலிருந்தது. நீருடன் அந்த மலரையும் குடத்தினுள் முகர்ந்தாள் பரிமளம். நீரோட்டத்தின் குறுக்கே நடந்து விடுவிடெனக் கரையேறினாள்.

ஆற்றங் கரையேறி வீதியுள் நுழைந்து செல்லும்போது பரிமளம் எப்போதும் குனிந்த தலை நிமிராமல்தான் நடப்பாள். அவள் பார்வை இப்போது குடத்தில், குறுகிய நீர் வட்டத்தில் – மிதந்து கொண்டிருந்த செம் பருத்திப் பூவின் மீதே யிருந்தது; நினைவும் அதைச் சுற்றியே படர்ந்திருந்தது.

தெரு முனையில் ஒரு சிறிய பிள்ளையார் கோயில் இருந்தது. வழக்கமாய்ப் பரிமளம் பின்புறத்து நுழைவிடம் வழியாக வந்து, குடத்தை இறக்கிச் சந்நிதியில் ஒரு கருங்கற் படியின் மேல் வைத்து விட்டு, நாலைந்து சுற்றுக்கள் பிள்ளையாரை வலம் வந்துவிட்டு மீண்டும் குடத்தை எடுத்துக் கொண்டு போவாள். அன்று குடத்தை இறக்கிப் படியின் மீது வைத்தவுடனேயே அவள் உள்ளத்தில் திடீரென ஏதோ புரண்டது. அந்தப் புரட்சி அவளுள் ஓர் ஒளியை விசிறிக்கொண்டு நேர்ந்த மாதிரி இருந்தது; ஏதோ ஓர் ஒலியையும் இசைத்துக் கொண்டு தோன்றினாற் போலிருந்தது. அந்த இரண்டுமே அவளுடைய நினைவின் எதிரொலிகள்தாம். பிள்ளையாரை நிமிர்ந்து நோக்கும்போது நாள் தவறாமல் அவள் நெஞ்சில் முந்திக் கொண்டு வரும் அந்த நினைவு ஆறு வருடங்களாக வளர்ந்து, பெருகி, கற்பனைக்குப் பிடிபடாததாய் – ஆனால் நெஞ்சில் அடைபடுவதாய் நிறைந்திருந்தது.

குடத்தினுள்ளிருந்து அந்த மலரைக் கையில் எடுத்த போது அந்த மலரின் நினைவும் நெஞ்சில் மலர்ந்திருந்த அந்த மாபெரும் பழைய நினைவும் ஒன்றாய்க் கூடிய போதுதான் அவள் நெஞ்சில் அந்தப் புரட்சி ஏற்பட்டது. 'இந்த மலர் எங்கிருந்து வந்திருக்கக் கூடும்?' என்ற கேள்விக்கு விடை கிடைத்தாற்போல் தோன்றியது அவள் மனத்தில். அந்த விடையின் ஒலி உருவமும் இப்படித்தான் அவள் இதயத்தில் ஒலித்தது: 'இந்த மலரை அவர் தான் பறித்து நீரில் மிதக்க விட்டு அனுப்பியிருக்கக் கூடும் !'

பிள்ளையாரின் பாதங்களில் சாற்றுவதற்கென்று கையில் எடுத்த அந்த மலரைத் திரும்பவும் அவள் குடத்தினுள்ளேயே போட்டாள். திரும்பவும் நீருள் வீழ்ந்த புளகத்தில் அந்தச் செம்பருத்திப் பூ ஆனந்தமும் புத்துயிரும் கொண்டாற்போல் அந்தச் சிறு வட்டத்தில் ஆடி மிதந்தது.

பரிமளம் வீட்டுக்குள் நுழையும்போதே 'ஸௌந்தர்ய லகரீ' ஸ்தோத்திரங்களைச் சொல்லிக் கொண்டுதான் வருவாள். பிறகு பாசுரங்களைப் பாடுவாள். இன்று பாசுரங்களுக்கிடையில் 'தட்'டென்று ஒரு சொல் அடிக்கடி அவள் நாவில் வந்து குதித்தபடி இருந்தது. தன் காதுகளுக்காகத்தானே அவள் ஒலித்த சொல்தான் அது. 'அவர்' என்ற அந்தச் சொல்லில் அவள் புதியதொரு சக்தியைக் கண்டாள்.

என்றைக்குமே அந்த 'அவ'ரைக் குறித்தவைதாம் இந்தப் பணிகளும் பாசுரங்களும். என்றைக்கு இவற்றுக்குப் பலன் கிடைக்கும் என்று தெரியாமலே ஆறு வருஷங்களாய் இந்தப் புனித நோம்பில் மனம் ஒன்றியிருக்கிறாள் பரிமளம். இன்றைக்கு முன் வரை 'அவ'ரைக் குறித்த பொதுவான வேண்டல்களும் பிரார்த்தனைகளும் 'அவர்' என்ற தனிச் சொல்லில் இடைப்பட்டு நின்றதில்லை; இன்று பரிமளம் பிரமை பிடித்து நின்று விட்டாள். கை ஆடவில்லை; கால் ஓடவில்லை; காரியங்கள் புரியவில்லை. மனம்தான் ஓடியது. அந்த மனவேகத்துடன் அந்த மலரை எடுத்து நீரை உதறி, குவிந்த இரு கரங்களுள்ளும்

அதை ஏந்தி, கூடத்துக்குச் சென்று அவளுடைய 'அவ'ரின் படத்தில் சாற்றிவிட்டு மெய்ம்மறந்து நின்ருள் பரிமளம்.

ஆறு வருடங்களுக்கு முன்பு முதன் முதலாகப் பரிமளத்தை வீட்டுக்கு 'அழைத்' திருந்தார்கள். ஊரே திரண்டு வந்து 'புதுப் பெண்'ணை வேடிக்கை பார்த்துச் சென்றது.

'பொண்ணு எப்படித்தான் இருக்குங்கறேன்! மகாலட்சுமியாட்டம் மூஞ்சி கிளி கொஞ்சுது !'

'சாமியாடி வீட்டுக் குடும்பத்துக்கென்ன! எல்லாத்துக்கும் கொடுத்து வைச்சவங்க. மருமவப் பொண்ணு குத்து விளக்காட்டம் வந்து நிக்கக் கேக்கனுமா?'

காற்றில் வந்த இந்தப் பேச்சொலிகள் பரிமளத்துக்குப் பெருமையைத் தந்தன.

வீட்டில் விருந்துக்குப் பறைசாற்றி நாலா புறமிருந்தும் ஒவ்வொரு மணமாய்ப் பரிமளிக்கத் தொடங்கியது. எல்லோரும் பார்த்து, பேசி, சடையை இழுத்துப் பரிசோதித்து, காதையும் மூக்கையும் நிமிண்டி மின்னியவற்றின் மதிப்பை எடை போட்டு, புடவைக் கொசுவத்தை உதறிக் கட்டக் கற்றுக் கொடுத்து ஒருவாறு எல்லாரும் நகர்ந்த பிறகு பரிமளம் தனிமை கிடைத்து விடுபட்டாள். கழுத்து மாலையைக் கழற்றிக் கூடத்தில் மாட்டப் போகும்போது அந்தப் படத்தைப் பார்த்தாள். பத்து நாட்களுக்கு முன் திருமணத்தின் போது ஒரு நாள் ஒரு பொழுது பார்த்த முகம். நிமிர்ந்து பார்க்க இயலாத தருணத்தில், அசப்பில் பார்க்க நேரிட்ட போதும் நழுவி ஓடிய முகம்; இப்போது நிலைகுத்தி அவளைப் பார்த்தது. அவளும் வேட்கை எழப் பார்த்தபின் தலை குனிந்தாள்.

'படமாய்ச் சுவரில் சிரிக்கும் உருவம் இப்போது இந்த வீட்டில் எங்கே யிருக்கிறது? யாரும் தானுகச் சொல்லவில்லை; யாரையும் நானுகக் கேட்க முடியாது. இந்தச் சமயம் அவர் இங்கே இல்லாமல் எங்கேதான் போனர்?'

வாசல்புறம் ஒரு சிறிய அறை; நடையையொட்டி அதிக வெளிச்சம் இல்லாமல் — ஒரே இருளாயும் இல்லாமல் திறந்திருந்தது. பரிமளம் எச்சரிக்கையுடன் அடி அளந்து நடை போட்டு அந்த அறையுள் நுழைந்தாள். ஒரு சிறு மேஜை, நாற்காலி; சுவர் ஓரம் ஒரு நாடாக் கட்டில். ஒரு சுற்றில் இவற்றையும் அறையில் யாரும் இல்லை என்பதையும் அவள் தெரிந்து கொண்டாள்.

இன்னும் ஒரு சுற்று நோட்டம் விட்டதில் சுவரில் அங்கங்கே ஏதோ எழுதியிருப்பது தெரிந்தது. ஆங்கிலத்தில் இருந்தன எழுத்துக்கள்: 'ஆர். வாசுதேவன், 8-ம் வகுப்பு, போர்ட் மத்தியதரப் பாடசாலை....... ஆர்வி. தேவன், ஆர். வி. டி., ஸன் ஆப் கே. ராமானுஜலு, மிராசுதார், பூவிருந்தநல்லூர், சாமியாடி ஃபாமிலி.....திரும்பத் திரும்ப வாசுதேவனும், ஆர். வி. தேவனுமாகச் சுவரில் மனம் நிறையும் வரை எழுதியிருந்தது. எழுத்துக்கள் ஒன்றை விழுங்கி, ஒன்றைக் குட்டி போட்டாற் போல் பெரிதும் சிறிதும் கோணலும் மாணலுமாய் இருந்தன.

'அவர் கிறுக்கியதுதான் போல் இருக்கிறது! எட்டாவது படிக்கும் போது சுவரை ஒரு கை பார்த்திருக்கிருற் போல் இருக்கிறது. இப்போது பி. ஏ.வாமே..... இத்தனை வருஷங்களாய் இந்த வீடு சுண்ணும்பையே காணவில்லை போலிருக்கிறது. அதுதான் போகட்டும்; அவரே இதை எப்போதாவது பார்த்துச் சிரித்து அழித்திருக்கமாட்டாரோ!'

பரிமளம் உதட்டைச் சுழித்து ஒரு புன்னகை புரிந்தாள். இடதுபுறத் திருப்பத்தில் கூடத்திலிருந்த அந்தப் படம் அவள் பார்வையில் பட்டது. 'இதெல்லாம் உங்கள் இளம் பிராயத்து நினைவுச் சின்னங்களா ?' என்று ஓர் இரகசியக் கேள்வியைத் தன்னுள்ளே — அந்தப் படத்தைப் பார்த்தபடி— கேட்டுக் கொண்டாள் பரிமளம்.

'வாசு' என்று வெளியில் பேச்சுக் கேட்டது. ''மணி இரண்டடிக்கப் போகிறது. இன்னுமா அவன் வரவில்லை? இன்றைக்கு என்று என்ன வேலையை வைத்துக் கொண்டு அப்படிச் சுற்றுகிருன்?'' என்று யாரோ யாரிடமோ கேட்டது அவள் காதுகளில் வந்து விழுந்தது.

''அவனுக்கு வெட்கமாக இருக்கும் ; அதுதான் வீட்டுக்கு வராமலேயே சுற்றுகிருன்...''



''இன்னொரு ஜன்மத்தில் நீங்கள் இப்படிச் செய்தால்கூட நான் வர மாட்டேன். என்னைப் பார்க்க வரவேண்டியது உங்கள் கடமை இல்லையா? இன்னொருத்தி உங்களுக்கு வருவாள் என்று வைத்துக் கொண்டால் கூட அவளும் அந்தத் தவறைச் செய்யமாட்டாள்!'' இப்படிப் பெண் தெய்வமான பரிமளம் சீற்றமடையும்படி வாசு என்னதான் செய்துவிட்டான்? ❋

''வெட்கம் என்னய்யா வெட்கம்! தொட்டுத் தாலி கட்டின பெண்டாட்டி வீட்டுக்கு வருகிறாள் என்றால் வெட்கம் வருவதாவது! நீயும் நானுமே அப்போது வெட்கப்பட்டிருக்க மாட்டோமே ஐயா!....''

மணி மூன்று இருக்கும்; எல்லோரும் விருந்து சாப்பிடுவது தெரிந்தது. சாப்பாட்டினிடையில் முன்பு கேட்ட குரல் இப்போதும் கேட்டது :

''வெள்ளத்தை வேடிக்கை பார்க்கப் போயிருக்கிறானாம்! சின்னப் பையனா இவன்? பி. ஏ. படித்தவன்; இதற்கு வெட்கப்பட வில்லையாமா?......''

சிறிது நேரத்தில் பரிமளத்தை அவள் மாமியார் வந்து அழைத்தாள்: ''நீயும் ஒரு பிடி சாப்பிட்டு விடடியம்மா. அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். அவன் இத்தனை நாழி ஒன்றும் சாப்பிடாமல் நம்மைப் போல் பட்டினி கிடக்க மாட்டான்; ஹோட்டலில் கீட்டலில் சாப்பிட்டிருப்பான்.''

''எனக்குப் பசி இல்லையம்மா. பசித்தால் நானே வந்து சாப்பிடுகிறேன்......'' என்று கூறி விட்டாள் அவள். அவள் இதயம் எதிலும் ஈடுபடவில்லை. காலையில் மலர்ந்திருந்தது போல் இப்போது கிளுகிளுக்க வில்லை. 'அவர் ஏன் வரவில்லை?' என்று கடந்த நான்கு மணி நேரமாகத் தன்னையே கேட்டு, தன்னால் விடை காண முடியா நிலையில் அவள் தவித்துக் கொண்டிருந்தாள். அந்தத் தவிப்பில் அவள் இதயம் கனத்தது.

இரவு நன்றாக மழை பெய்து கொண்டிருந்தது. வீட்டின் அகலக் கதவு நீண்டிருந்த நெடும் திண்ணையில் ராமானுஜுலு படுத்துக் கொண்டிருந்தார். சாரல் மறைப்புக்குச் சம்பந் தட்டி தொங்கவிடப்பட்டிருந்தது. பரிமளம் அந்த அறையிலேயே மேஜை ஓரம் ஒரு பாயைப் போட்டுக் கொண்டு, படுக்கை கொள்ளாமல் முழந்தாளிட்டு உட்கார்ந்திருந்தாள்.

ராமானுஜுலுவுடன் நாலைந்து பேர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஊரைச் சுற்றி வெள்ளக் காடு என்று பேச்சில் அடிபட்டது புரிந்தது பரிமளத்துக்கு. வாசுவைப் பற்றிய கவலையில் அவள் பேச்சை உற்றுக் கேட்டாள்.

'உண்மையாகவே அவர் வெள்ளத்தை வேடிக்கை பார்க்கவா போயிருப்பார்?' என்று நினைவு ஓடியது அவள் உள்ளத்தில்.

அரை மணி நேரம் கழித்து ஒரு புதிய குரல் கேட்டது. பரிமளம் பாயின் மீது நின்று கொண்டு மெல்ல எட்டிப் பார்த்தாள். ஒரு மின்வெட்டில் தெப்பமாய் நனைந்து நடுங்கிக் கொண்டு வந்திருந்த ஒருவர், ''ராமானுஜுலு மாமா!'' என்று அவசரமாகக் கூப்பிட்டார்.

''யார்ரா அது?'' என்று எழுந்து உட்கார்ந்தார் ராமானுஜுலு.

''வாசு சாயங்காலம் பஸ்ஸிலே மாயவரம் போயிட்டுது. உங்ககிட்டே தகவல் சொல்லச் சொல்லிச்சு. நான் நனைஞ்சவாக்கிலே ஊருக்குப் போயிடறேன்...... குளிரு தாங்க முடியலே!'' என்றபடி தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு ஓடினார் அவர்.

''அட, பைத்தியமே! மாயவரம் பயணம் கட்ட இண்ணைக்குத்தான் நாளு பார்த்தானா?'' என்று முனகியபடி கூறினார் ராமானுஜுலு.

ஒரு மாதமாக வாசுவிடமிருந்து ஒன்றும் தகவல் இல்லை. பரிமளம் இப்போது வீட்டில் நன்றாகப் பழகிக் கொண்டு விட்டாள். மாமியாருக்கும் மாமனாருக்கும் அவள் செய்த சேவைகளில் அவர்கள் நெஞ்சு நெகிழ்ந்து போய் விட்டார்கள். மிகுந்த நேரத்தில் அவள் வாசு அங்கேயே இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு விட்டவள் போல் அவனுக்காகவென்று யோசித்து யோசித்துச் சில பணிகளைப் புரியத் தொடங்கினாள். வாசல் பக்கத்து அறையைப் புதுப்பித்து விட்டது போல் சில மாறுதல்களைச் செய்திருந்தாள். சுண்ணாம்பு தயார் செய்து சுவர்களுக்கு அடித்தாள். வாசுவின் படத்தை அந்த அறையில் கொண்டு வந்து மாட்டினாள். அங்கே காலையும் மாலையும் வத்தியும் சாம்பிராணியுமாகப் புகைந்து மணத்தன.

பிள்ளையைப் பார்த்து வரவென்று ராமானுஜுலுவும் அவர் மனைவியும் வண்டி கட்டிக் கொண்டு கிளம்பினார்கள். பரிமளத்திடம் வந்து, ''நீயும் வருகிறாயா? எங்களை விட உன் மனசு எப்படி அடித்துக் கொள்ளும் என்று எனக்குத் தெரியும். வா, போய்ப் பார்த்து விட்டு வரலாம். பார்க்கிறதென்ன, அவனை எப்படியாவது கட்டி இழுத்து வருவதற்குத்தான் இந்தப் பயணமே!'' என்றாள் அவள் மாமியார்.

''வேண்டாம், அம்மா! நீங்கள் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள். எனக்கு என்னவோ ஒரு மாதிரியாக இருக்கிறது. எப்படியும் வர வேண்டியவர்தானே அவர்! உங்களுடன் நிச்சயமாய் வந்து விடுவார். நான் வேறு எதற்கு?'' என்று நாசூக்காக மறுத்து விட்டாள் பரிமளம்.

மறுநாள் திரும்பி வந்த வண்டியில் போனவர்கள் மட்டும்தான் வந்தார்கள்.

''உன் புருஷன் டில்லிக்குப் போயிருக்கிருனு மடி!'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் பரிமளத்தின் மாமியார்.

பரிமளம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வாசல் அறைக்கு வந்துவிட்டாள். கதவை மெல்லச் சாத்தி விட்டு, வாசுவின் படத்தின் முன் போய் நின்று அதை வெறிக்கப் பார்த்தாள். படத்தில் வாசுவின் கண்கள் களங்கமற்றுத் தெரிந்தன. அவை உட்கொண்டிருந்த அமைதியின் எதிரொலிப்பு பரிமளத்தின் இதயத்தில் சுரீர் என்று ஒரு புயலுணர்வை எழுப்பியது. அவள் பாதங்களின் விரல் நுனிகளில் 'தட் தட்' டென்று சுடும் நீர் முத்துக்கள் உதிர்ந்தன.

ஒரு வாரத்துக்குப் பிறகு ஒரு நாள் பரிமளம் ஆற்றில் நீராடிவிட்டு இடையில் குடத்துடன் வீடு திரும்பியபோது வீட்டு வாசலில் சைக்கிளுடன் தபால்காரர் நிற்பதைக் கண்டாள். வேகமாக நடை போட்டு வீட்டையடைந்து உடை மாற்றிக் கொண்டு அவள் வாசல்புற அறைக்கு வந்தபோது ராமானுஜுலு மனேவிக்குக் கடிதம் ஒன்றைப் படித்துச் சொல்லிக் கொண்டிருந்தார் :

'....... இந்த வேலேக்கு என்னே நியமித்துள்ள ஸ்தாபனத்தினரே அவர்கள் செலவில் என்னே மேல்நாட்டுக்கு அனுப்புகின்றனர். நான் துளியும் நினேக்கவில்லே; உங்களிடமும் அம்மாவிடமும் நேரில் விடைபெற்றுக் கொள்ள இயலாமல் இப்படி எதிர்பாராமல் குறுகிய அவகாசத்துடன் புறப்பட நேர்ந்து விட்டது. ஆனுல் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். எனக்கு இதில் ஒரு நிம்மதிகூட. என்னே வேண்டி வேண்டி நீங்கள் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைத்தீர்களல்லவா?....'

அதற்கு மேல் அவர் இரைந்து படிக்காமல் வார்த்தைகளே விழுங்க ஏதோ ராகம் போட்டு இழுத்து விட்டு விட்டார்.

பரிமளத்தின் உள்ளத்தில் துக்கம் உருகிப் பெருகி வந்ததில் பொருமல் ஒலிகள் முட்டி மோதிக் கொண்டு கிளம்பின. வாசு தன்னே விட்டு ஒதுங்கிக் கொண்டு வந்தது தற்செயலாய் நேர்ந்ததல்ல என்று தோன்றியது.

சிறிது நேரம் பொறுத்து வாசுவின் தாயார் அவளேத் தேற்றும் முயற்சியுடன் அவளிடம் வந்தாள். ''மாமா கடிதாசு படிச்சாங்களே; கேட்டுக் கொண்டிருந்தியா?''

''அவர் வெளிநாடு போகப் போகிருர் என்று தெரிந்தது. ஆனுல் முழுக் கடிதமும் படிக்கக் கேட்கவில்லே.''

வாசுவின் தாயார் அவள் தோளேத் தொட்டுத் தலேயை வருடிக் கொண்டு கூறினுள்; கடித விஷயத்தைப் பேச்சிலிருந்து ஒதுக்கியபடிதான் கூறினுள் : ''அவன் எங்களுக்குப் பிறந்த பிள்ளேயே தவிர அவன் அத்தையிடம்தான் வளர்ந்தான். இந்த ஊரில் எட்டாங் கிளாஸ் வரை படிச்ச போது இந்த அறையிலேயேதான் அடைந்து கிடப்பான். அவன் அத்தையிடம்தான் அவனுக்கு ஒட்டுதல் அதிகம். இப்போது அவனுக்கு வேலேயும் வெளிநாட்டுப் பயணமும் கூட அவர்கள் பார்த்துச் செய்கிற ஏற்பாடுகள்தான். பாவம், உன்னேப் பார்த்தால் தான் பாவமாக இருக்கிறது...கொஞ்ச காலம் பொறுத்துக் கொள். அப்புறம் நீ அவனேடு டில்லியில் குடித்தனம் பண்ணலாம்.''

''அவருக்குக் கல்யாணம் பண்ணி வைக்க நீங்களும் மாமாவும் அவசரப்பட்டீங்களா, அம்மா?'' என்று கேட்டாள் பரிமளம். கண்ணீரை அடக்கியபடியே.

''இதிலேகூட அவன் அத்தையின் ஏற்பாடுதான். நாங்களும் எங்கள் பங்குக்குச் சொன்னேம் -- காலா காலத்தில் அதது நடக்க வேண்டுமே என்று.....''

இரண்டு வருடங்களில் எவ்வளவோ மாறுதல்கள் நடந்து விட்டன. சாமியாடி ராமானுஜுலு தெய்வமாகி விட்டார். பரம்பரையாக அந்தக் குடும்பத்துக்கு அந்தப் பட்டம் இருந்து வந்தது. சுவாமி அந்தந்தக் குடும்பத் தலேவரின் மீதும் ஸ்வரூபமாகிப் பேசுகிற ஐதிகம் இருந்து வந்தது. ராமானுஜுலு தம் கெடுவைத் தாமே சாமி வந்த நிலேயில் குறித்துச் சொன்னுர்; அதற்குச் சிறிது காலம் முன்போ பின்போ அவர் காலம் முடிந்தது.


வீட்டில் இரண்டு துருவங்கள் தனித்து இயங்கின; பரிமளம் வாசல் புறத்து அறையில் உலகம் கொண்டிருந்தாள். அவள் மாமியார் சமையற்கட்டு இடைகழியில் ஒரு பெஞ்சைப் போட்டுக் கொண்டு அங்கேயே காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

அந்தப் பரம்பரையில் சாமியாடும் வழி முறை வாசுவுக்கு இல்லாமல் அற்றுவிட்டது. ஆயினும் பரிமளம் அவனுடைய படத்தை வைத்துக் கொண்டு, கற்பனேக் காட்சிகளில் அவனிடம் வேறு சில சக்திகள் தோன்றச் செய்ய முற்பட்டாள். கற்பனே உரையாடல்களில் அவன் மன ஆழத்தை அளக்கப் பாடுபட்டாள். கற்பனேயிலும் அவன்' 'கல்லுளி மங்க'னுகவே இருந்தான். படத்தில் அவன் விழிகள்கூட உயிருள்ளவரது விழிகள்போல் இல்லே. நாளடைவில் அந்தப் படத்தைப் பார்ப்பதும் அந்த விழிகளேச் சந்திப்பதும்கூட அவளுள் ஓர் அச்சத்தை ஏற்படுத்தின.

ஒரு நாள் பரிமளம் வீட்டில் எதை எதையோ குடைந்து ஏதோ தேடுவதில் ஈடுபட்டிருந்தாள். பழைய கிஸ்தி ரசீது ஒன்றைக் கேட்டு மணியக்காரர் ஆளனுப்பியிருந்தார். ஓர் ஓலேப் பெட்டியைக் கடைசியாக அவள் திறந்த போது எட்டு மடிப்புகளாய் மடித்த ஒரு கடிதம் பல்லி வீழ்வது போல் 'சொத்'தென்று தரையில் வீழுந்தது.

வாசுவின் கடிதம் என்பது தெரிந்து அவள் அதை எடுத்துப் பிரித்துப் படிக்கத் தொடங்கினுள்: '...... என்னே வேண்டி நீங்கள் கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைத்தீர்களல்லவா ? எனக்கு விருப்பமில்லாததை உங்கள் திருப்திக்காக நீங்கள் சாதித்துக் கொள்ள முடிந்தது. ஆனுல் என் விருப்பப்படி நான் இருக்க முடியும் என்பதை உங்களில் யாரும் உணர்ந்து கொண்டிருக்க முடியாது. இந்த வெளிநாட்டுப் பயணமே என் விருப்பம் நிறைவுறும் முதல் படியாக உதவுகிறது......'

பரிமளம் கையில் கடிதத்துடன் மெல்லக் கிழே சரிந்தாள். அதற்கு முன்பே அவள் உள்ளம் சுருண்டு விட்டது.



பூனை: ஏனய்யா? உன்மேலுள்ள வண்ணப் பட்டை யெல்லாம் போன யுத்தத்தின்போது அடிச்சதா, இல்லே, இந்த யுத்த 'பிளாக் அவுட்'டை உத்தேசித்துப் புதுசா இப்ப அடிச்சாங்களா?

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

தன் அறையில் அபூர்வமாக மாமியாரைக் கண்டதும் பரிமளம் எழுந்து நின்றாள்.

''என்னமோ கேட்க வந்தேன்; மறந்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டு அறையை ஒரு சுற்றுப் பார்த்தாள் மாமியார்.

திடீரென அவள் குரல் வேறு விதமாய் மாறி உரக்கவும் ஒலித்தது: ''என்னடி காரியம் செய்திருக்கிறாய்?''

பரிமளம் பதறி, ''என்னம்மா?'' என்றாள்.

''அவன் ஏன் இருக்கிறான் என்ற எண்ணமா உனக்கு? உயிரோடு இருக்கிற வர்கள் படத்துக்குப் பூ வைத்துப் பொட்டு இட்டு எல்லாம் செய்வார்களா யாராவது?''

பரிமளம் பார்வையை உயர்த்தி வாசுவின் படத்தைப் பார்த்தாள். அந்தச் செம் பருத்திப் பூ அவள் மாமியாரின் கண்களைப் போல் ஜிவ்வென்ற சிவப்புடன் தோன்றியது. இரண்டடி முன்னால் நகர்ந்து அந்தப் பூவை எடுத்துக் கீழே எறிந்தாள் பரிமளம். அவள் மாமியார் தோளில் இடித்துக் கொண்டு பேசிக் கொண்டே வெளியேறினாள்: ''அது தான் அதிருஷ்டம் தீர்த்துக் கட்டினாற்போல் தெரிந்திருக்கிறதே. புத்தி போகிற போக்குக் குத் தகுந்தாற்போல் எல்லாமே நடக்கும்!''

மறு நாள் குடத்துடன் குளிக்கச் சென்ற போது, ஆற்றில் இறங்குமுன்னே அவள் பார்வையில் இன்னொரு காட்சி தென்பட்டது. நேற்றைவிட இன்று ஆற்றில் வெள்ளம் அதிகம். நட்ட நடுவில் ஒரு பூமாலை மிதந்து வந்தது. நீர்ச் சுழிப்பு அதை அலைக்கழித்து இழுத்துச் சென்ற விதம் பரிமளத்தின் உள்ளத்தில் பீதியை உண்டு பண்ணியது.

சில நிமிஷங்களில் இன்னொரு தோற்றம் அவளை நிலைகுத்திக் காணச் செய்தது. துறைக்கு நேராக ஒரு முதலை முழுகி எழுந்து வெள்ளத்தைத் துழாவி எதிர்நீச்சுப் போட்டுக் கொண்டிருந்தது. பயத்தினால் அவள் உடம்பே மெதுவாகி விட்டது. ஆற்றில் இறங்க வேண்டாம் என்று தீர்மானித்துக் கொண்டு திரும்பி நடந்தாள் பரிமளம். இந்த அடையாளங்கள் அவள் மனத்தில் கலவரத்தை உண்டுபண்ணின. 'மாமி பேசியது போல நான் அவர் படத்தில் வைத்தது தவறுதானோ? ஏதாவது விபரீதம் நடந்திருக்குமோ?'

ஒரு வாரம் கழித்து ஒரு நாள்; பரிமளத்தின் மாமியார் கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். ''மாமி, மாமி!'' என்று, நாலு வீடுகள் தள்ளி ஒரு வீட்டிலிருந்தவன் கூப்பிட்டுக் கொண்டு வந்தான்.

''யாரு சேவுவா? என்னடா வச்சிருக்கே எனக்கு?'' என்று கேட்டு நின்றாள் மாமி.

''உங்களுக்கு ஒரு ரொம்ப முக்கியமான சேதி, மாமி. உங்க வாசு வந்திருக்கிறான்!''

''நிசம்மாவா? அட சேவு, நீ சொல்றது நிசந்தானா? தாயி, மீனாட்சி! என் வயித்துலே பாலை வார்த்தியா?.... ஏ, பரிமளம்.....'' என்று குழந்தை மாதிரி கூவிக் கொண்டும் தாவிக் கொண்டும் உள்ளே ஓடினாள் மாமி.

பரிமளம் இதைக் கேட்டுக் கொண்டு ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி நின்றாள். அவள் காதுகளில் தேனோ பனியோ பெய்து இதயம் குளிர உறைவதுபோல் இருந்தது.

மீண்டும் அதே குழந்தைத்தனமாய் வெளியில் வந்த மாமி, ''சேவு, இப்பொ அவன் எங்கே? நீ உன் கண்ணாலே பார்த்தியா? அவனேதானா?'' என்று கேட்டாள்.

''அவனேதான், மாமி. அவனுக்கு என்னை மறந்தாலும் நான் அவனை மறப்பேனா மாமி? சாட்சாத் உங்க வாசுதான். வெள்ளைக்காரன் மாதிரி இருக்கிறான் ஆள். எல்லாம் அதே தோரணைதான். அணைக்கரை பங்களாவிலே தங்கி யிருக்கிறான். அவனோட கூட ஆளு, படை, மோட்டார், சமையல்காரன்னு ஒரு முகாமே வந்திருக்கு.''

''கூப்பிடு தொலைவிலே வீடு இருக்கிறப்போ அங்கே போயி பங்களாவிலே ஏன் தங்கறான்?''

''அவனுக்கு இந்தப் பட்டிக்காடு பிடிக்குமா மாமி?.....''

''நான் இப்போ இதே நடையா ஓடிப் போய் அவனைப் பார்த்திடுவேண்டா, சேவு! ஆனால் நான் அந்த நிலையிலேயா இருக்கேன்? அவன் ஐயா போயிட்ட சேதி கூடத் தெரியாமயா இருப்பான்?....நீ போயி ராமலிங்கத்தை வரச் சொல்லு. அவருக்கு மசிஞ்சு வீட்டுக்கு வரானா பார்ப்போம்.''

இரவோடு இரவாக ராமலிங்கம் பங்களாவுக்குப் போய் வந்தார். ''கார் அனுப்புகிறேன்; அம்மாவை உடனே வரச் சொல்லுங்கள்'' என்று வாசு கூறிய செய்தியுடன் தான் வந்தார்.

இருபத்தி நாலு மணி நேரம்கூடப் பொறுக்க முடியவில்லை அவன் தாயாருக்கு. காரை எதிர்பாராமல், நியதி – நியாயம் என்று பாராட்டாமல் வண்டி கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.

மாமி போனதும் சேவுவும் ராமலிங்கம் என்பவரின் மகனும் ராமானுஜுலுவின் வீட்டுத் திண்ணைக்குப் பக்கத்தில் வந்து கூடிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''அணைக்கரை பங்களாவுக்குப் போகலியா நீ? உங்கப்பா போய் வந்தாரே?'' என்று ஆரம்பித்தான் சேவு.

''ஊருக்குள்ளே வந்தால் கௌரவக் குறைவுன்னு இருக்கிறவன்கிட்டே நமக்கு என்னப்பா வேலே? ஆளே ஏக ஸ்டைலா இருக்கானும். வாயிலே புகைக் குழாய் ஆட ஆடத்தான் அப்பாகிட்டே பேசினுனும்.''

''பழைய வாசுவாப்பா அவன்? ஆர். வி. டெவான் அப்படின்னு பேரையே மாத்திக் கிட்டிருக்கானே.....'' என்று 'சடக்'கென்று ஞாபகம் வந்தவளைப் பின்னல் திரும்பிப் பார்த்தான் சேவு. பரிமளம் வெறித்தபடி நின்றிருந்தாள்.

மாமி திரும்பி வந்த பிறகு அவளும் பரிமளத்திடம் வந்து எதுவும் சொல்ல வில்லே. பரிமளமும் அவளிடம் போய் எதுவும் கேட்கவில்லே. இப்போது சில நாட்களாக எதிர்பாராத பலகாரங்கள் தயாராகி, மிகுந் தவை வைத்து மூடப்பெற்றிருந்தன. இட்டிலி ஒரு நாள்; ஒரு நாள் சேவை வகைகள்; இன் னெரு நாள் கோதுமை அல்வாவும் தயிர் வடையும். பெற்ற பாசம் தூண்ட இப்படிப் பாடுபடுகிருள் மாமி என்பது புரிந்தது பரிமளத்துக்கு.

அன்று வாசலில் வண்டி பூட்டி நிறுத்தி யிருந்தது. மாமி கையில் டிபன் காரியருடன் பரிமளம் இருந்த இடத்துக்கு வந்தாள்.

''வேறே புடவை கட்டிக் கொண்டு தலே யைக் கோதிக்கொண்டு புறப்படு'' என்ருள்.

''எங்கே?'' என்று சுருக்கமாக, ஆனல் தீர்க்கமாகக் கேட்டாள் பரிமளம்.

''என்ன எங்கேன்னு கேட்கிறே, தெரி யாதவளாட்டம்! அவனேப் பார்க்கணும்னு புறப்படு. இன்னும் இரண்டு நாட்களிலே அவன் காம்ப் முடிந்து போகிருனும்......''

''போகட்டும்! நான் எங்கேயும் வரப்போவ தில்லே. யாரையும் பார்க்க வேண்டாம்!''

''அத்தனேயா உனக்கு?'' என்றபடி விடு விடுவென்று போய் விட்டாள் மாமி.

அன்று மாலே பரிமளம் வாசலில் விளக்கு வைத்து விட்டு, தெருக் கதவை இழுத்து வெளித் தாழ் இட்டுவிட்டுத் தெருவில்இறங்கி நடந்தாள். அவள் நினைவில் ஆற்றில் மிதந்த பூமாலேயும் முழுகி எழுந்த முதலேயும் இன்று இதுவரை நூறு முறைகள் தோன்றி மறைந் தன. காலேயில் போன மாமி இன்னமும் திரும் பாதது அவளுக்கு நல்லதாகத் தோன்றியது.

மேடு ஏறி ஆற்றங்கரையை அடைந்த போது அவள் எதிரே யாரோ வருவது தெரிந்தது. மாலே உலாவின் நடையில் எதிரே வந்த வாசு அவள் அருகே தயங்கிய படி மெல்ல நடந்தான். பரிமளம் நின்று அவனே ஏற இறங்கப் பார்த்தாள். அவன் வாயிலிருந்து அந்தப் பைப்பை எடுத்துக் கையில் இடுக்கிக் கொண்டு, ''ஓ! இட் இஸ்யூ!'' என்ருன்.

''நானேதான். இன்னும் இருக்கிறேன்..''

''ஓ! அது உன் இஷ்டம்! இருப்பது இல் லாதது யார் கையில் இருக்கிறது?''

''உங்கள் கையிலும் இருக்கிறது. ஏன், என் கையிலும் இருக்கிறது. ஏன், நான் இருப் பதோ இல்லாததோ உங்களேப் பாதிக்கிற விஷயம் இல்லேயா?''

''என்னே ஏன் பாதிக்கிறது? அந்த வகை யில் எல்லாம் நான் பொறுப்பில்லாதவன் என்று அன்று முதல் விலகி நிரூபித்திருக்கி றேனே!'' என்ருன் வாசு அலட்சியமாக.

''என் வாழ்க்கையை அழித்த பிறகு நீங்கள் எதை நிரூபித்தால் என்ன, நிரூபிக்கா விட்டால் என்ன? இந்தப் பெரிய தவறுக்கு ஈடு செய்ய முடியுமா உங்களால்?''

''முடியுமே! ஈடு செய்யத்தான் போகி றேன். அந்தத் தவறு மட்டுமில்லே; இங்கே 'காம்ப்' வந்த பிறகு இன்னெரு தவறுகூடச் செய்து விட்டேன். அம்மா வந்த பிறகு மறு நாளாவது நீ வருவாய் என்று எதிர்பார்த்த தவறுதான், நான் இரண்டாவதாகவும் கடைசியாகவும் செய்தது!''

''நான் வருவேன் என்ரு? நான் ஏன் வருவேன்? இன்னெரு ஜன்மத்தில் நீங்கள் இப் படிச் செய்தால்கூட நான் வரமாட்டேன்! என்னேப் பார்க்க வரவேண்டியது உங்கள் கடமை இல்லேயா? இன்னெருத்தி உங்களுக்கு வருவாள் என்று வைத்துக் கொண்டால்கூட, அவளும் அந்தத் தவறைச் செய்ய மாட்டாள்!''

வாசு விஷமமாகச் சிரித்தான். அந்தச் சிரிப்பைக் கண்டபோது அவளுக்கு அன்று நடு ஆற்றில் முழுகி எழுந்த முதலேயின் தோற்றம் நினைவில் வந்தது.

''நீ புறப்படுகிற வரையில் அம்மா திரும்பி வரவில்லேயா ?''

''யார் வந்தால் எனக்கென்ன! எனக்கு யாரையும் பார்க்க வேண்டியதில்லே.''

''அதற்குச் சொல்ல வில்லே; அம்மா வைப் பார்த்திருந்தாயானல் சற்று முன் சொன்னதைத் திருந்தவே சொல்லி யிருப்பாய் !''

''எதை ?''

''யாரோ வருவதாக வைத்துக் கொண் டால்கூட என்ருயே; அதைப் பற்றிய உறுதியை அம்மா அறிவாள். அதைக் கேட் டுத்தான் ஆற்றங்கரையை நோக்கி ஓடி வந்து விட்டாய் என்று நினைத்தேன்.....''

''இன்னெரு தடவை அப்படிச் சொல்லா தீர்கள். நான்கூடக் கோழை இல்லே. நான் இன்னும்நூறு வருஷங்கள் இருப்பேன். அந்தப் பூஜை அறை இருக்கிற வரை — துன்பம் தராத அந்தத் தெய்வத்தையும் வழிபட்டுக் கொண்டு, நீங்கள் விரும்புவதையோ, விரும்பாததையோ பொருட்படுத்தாமல், உங்கள் படத்தையும் வணங்கிக் கொண்டு வெகு நாட்கள் இருப்பேன்......''

''அப்படியானல் பெருமைப்படுகிறேன்.''

''நீங்கள் எதற்கும் பெருமைப்பட்டுப் பய னில்லே. என் பெருமையைச் சொல்லட்டுமா? நான் உங்களே மணந்தேன்; உங்கள் ஒரு வரையேதான் நினைந்து வாழ்வேன். இதை விடப் பெருமைப்பட உங்களிடம் என்ன இருக்கிறது?'' என்று கேட்டு விட்டுப் பரிமளம் ஒரு முறை அவனே நிமிர்ந்து பார்த்துவிட்டு மடமடவென ஆற்றங்கரைச் சரிவில் இறங்கி விட்டாள். இதுவரை வாய் வீச்சாகப் பேசிக் கொண்டிருந்த வாசு இதற்கு மறுப்புக் கூருமல் மௌனமாகி, அவள் வேகமாக ஊர் நோக்கி நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

வாசல் திண்ணையில் உட்கார்ந்து ''ரங்கண்ணு'' முழங்காலில் வைத்தியர் கொடுத்த மருந்து எண்ணெயைத் தேய்த்து விட்டுக் கொண்டிருந்தார். காலை இளம் வெய்யில் பட்டு அவர் வழுக்கைத் தலை பளபளத்தது. சற்றுக் கூன் விழுந்த முதுகும், குழிந்த கண்களும், இளைத்துக் கறுத்த உடலும், பல் உதிர்ந்து ஒட்டிய கன்னமுமாக அவர் வயதை வெளிப்படுத்திக் கொண்டிருந்தது அவர் தோற்றம். இருபது வருஷங்களுக்குமுன், தமிழ் நாட்டு நாடகமேடைகளில் எல்லாம் வெற்றிக் கொடி பறக்கவிட்டு, புகழும் பணமும் சம்பாதித்துக் கொண்டிருந்த அதே 'ராஜபார்ட்' ரங்கண்ணுதான் இவர் என்று சொன்னால் யாருமே நம்ப மாட்டார்கள். அத்தனை தூரம் வறுமையும் உடல் நோயும் அவர் உருவத்தை மாற்றிவிட்டிருந்தன. நாடகம் என்றால் அந்தக் கால ரசிகர்கள் நினைவுக்கு வருவது ரங்கண்ணுதான். அவர் குரல் எழுப்பிப் பாடும்போது, வண்டு ரீங்காரம் செய்வது போல் இருக்கும். அவர் பாட்டிலே சொக்கி ரசிகர்கள் கர கோஷம் செய்யக்கூட மறந்து உட்கார்ந்து விடுவார்கள். வசனம் பேசுவதிலும், அவருக்கு இணை அவரேதான். அவர் பேச ஆரம்பித்துவிட்டால் கற்பனை ஊற்றெடுத்து விடும். அந்தக் கற்பனை வெள்ளத்துக்கு எதிரே எவராலும் நிற்க முடியாது. ஸ்திரீ பார்ட்டு வேலாம்பாள்கூட எத்தனையோ முறை அவர் சாதுர்யமாகப் பேசும் பேச்சுக்குப் பதில் பேசத் தெரியாமல் திருதிரு வென்று விழித்திருக்கிறாள். காட்சி முடிந்ததும் ''என்னுங்க, இப்படிப் பேசி என்னைத் திணற அடிக்கிறீங்களே. கொஞ்சம் பார்த்துப் பேசுங்க'' என்பாள் வெட்கம் கலந்த சிரிப்புடன். அந்தச் சிரிப்பிலே ரங்கண்ணு தம்மை மறந்து போய் நின்றதுண்டு.

இப்பொழுது வேலாம்பாளின் மகள் 'சுந்தா தேவி' பெரிய சினிமா நட்சத்திரமாகி வெள்ளித் திரையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாள் என்பது ரங்கண்ணுவின் காதுகளுக்கும் எட்டியிருந்தது. வேலாம்பாளும் சென்னையில் கார், பங்களா என்று வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் மட்டும் சம்பாதிக்கவில்லையா? நாடகம், நாடகம் என்று ஊர் ஊராகச் சென்று பணமாகவும், புகழாகவும், பரிசுப் பொருள்களாகவும், ஏராளமாகச் சம்பாதித்தார். ஆனால் அந்தப் பொருள்களெல்லாம் எப்படிப் போயிற்று, எங்கே போயிற்று என்பதுதான் அவருக்குப் புரியாத புதிராக இருந்தது. தங்கப் பதக்கங்களாகவும், வெள்ளிப் பதக்கங்களாகவும் அவருக்குக் கிடைத்தவை எல்லாம் இப்போது எங்கே என்றே தெரியவில்லை. இப்பொழுது அவரிடம் மிஞ்சி யிருப்பதெல்லாம் நோயும் வறுமையும்தான்.

எப்படியோ பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்து விட்டார். அவர் ஒரே பிள்ளையான கோபியும் ஏதோ ஒரு கம்பெனியில் வேலையாக இருக்கிறான். அவனுக்கு நாலு குழந்தைகள். ஆக, பிள்ளையின் சம்பாத்தியத்தில் ரங்கண்ணு, அவர் மனைவி, பிள்ளை, அவன் மனைவி குழந்தைகள் இப்படி எட்டுப் பேர்கள் சாப்பிட வேண்டும். சாப்பாட்டுக்கே கஷ்டப் படும்போது உடல் நோய்க்கு மருந்து வகை



ஒரே ரஸிகன்

ஜி.கே.பொன்னம்மாள்

களுக்கு எங்கே போவது? ஏதோ நாட்டு வைத்தியரிடம் எண்ணெய், மூலிகை என்று வைத்தியம் செய்து கொண்டிருந்தார்.

ரங்கண்ணுவுக்கு அன்று காலையில் எழுந்ததுமே மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது; அதாவது அன்று மாலை அவ்வூர் நாடகக் கொட்டகையில் பிரபல சினிமா நடிகை சுநீதா தேவி நடிக்கும் நாடகம் நடக்கிறது. சுநீதா தேவியுடன் வேலாம்பாளும் வந்திருப்பாள். எப்படியாவது ஒரு டிக்கெட்டு வாங்கிக் கொண்டு போய் நாடகத்தைப் பார்க்கவேண்டும். முடிந்தால் வேலாம்பாளையும் பார்த்து விட வேண்டும். அந்தக் காலத்தில் வெறும் உபநடிகையாக இருந்த வேலாம்பாளுக்கு, நடிப்புக் கற்றுக் கொடுத்து, கதாநாயகி வேடத்துக்கு உயர்த்தித் தம்முடனே நடிக்கவும் வைத்துக் கொண்டிருந்ததை யெல்லாம் வேலாம்பாள் மறந்திருக்க மாட்டாள். அவள் நமது கஷ்ட நிலைமையைத் தெரிந்து கொண்டால் கண்டிப்பாக உதவி செய்வாள். பிறகு நல்ல டாக்டரிடம் உடம்பைக் காட்டி சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதை வெளியே சொன்னல் மனைவியும் மகனும் அவரைப் பிலுபிலுவென்று பிய்த்து எடுத்து விடுவார்கள்.

அவர் மனைவி வந்து "வெந்நீர் ஆறிப் போகிறது. சீக்கிரம் காலைக் கழுவிக்கொண்டு சாப்பிட வாருங்கள். உங்களுக்கென்று தனியாக ஒரு பந்தி போடணுமா?" என்ருள் குரோதமாக. ரங்கண்ணு மறு பேச்சுப் பேசாமல் ஆவி பறக்கும் வெந்நீரைக் காலில் ஊற்றிக்கொண்டார். அது கால் வலிக்குச் சற்று இதமாக இருந்தது. எழுந்து சமையற்கட்டு வரைக்கும் போவதற்குள் அவர் கால்கள் துவண்டு விட்டன. எப்படியோ சுவரைப் பிடித்துக் கொண்டு நடந்து இலையின் முன் உட்கார்ந்தார். பிள்ளை குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவனது ஒட்டுப் போட்ட சட்டையையும், வயதுக்குமீறின வயோதிகத் தோற்றத்தையும் பார்க்கவே அவருக்குக் கஷ்டமாக இருந்தது.

மருமகள் கீரைக் கறியையும், சாதத்தையும் இலையில் போட்டாள். அவருக்கு என்னவோ சாப்பாடே ருசிக்கவில்லை. அந்த நாளில், கெட்டித் தயிர் இல்லாமல் அவர் சாப்பிட்டதே கிடையாது. அதை யெல்லாம் இப்பொழுது நினைத்து என்ன பயன்? குழந்தைகள் சாப்பிட்டுவிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போய்விட்டார்கள். ரங்கண்ணுவும் சாப்பிட்டோம் என்று பெயர் பண்ணிக் கொண்டு, வாசல் திண்ணையில் இருந்த கயிற்றுக் கட்டிலில் போய்ப் படுத்துக் கொண்டார்.

ரங்கண்ணு கண்களை இலேசாக மூடியபடி சிந்தனையில் ஆழ்ந்தார். அவர் முதன் முதலாகக் கதாநாயகன் வேடம் போட்டது இதே ஊரில், இதே கொட்டகையில்தான். அன்று எத்தனை கரகோஷம்! இதே கொட்டகையில்தான் வேலாம்பாளையும் சந்தித்தார். அன்று சகுந்தலை நாடகம். வேலாம்பாளுக்குச் சகுந்தலை வேடம்; மிகப் பொருத்தமாக இருந்தது. அப்படி ஓர் அழகு. மேடையில் நடிக்கிறோம் என்பதையே மறந்துவிட்டு உண்மையிலேயே வேலாம்பாள் மீது காதல் கொண்டு விட்டார் ரங்கண்ணு. அவளுக்கும் அவரிடம் ஒரு தனி மதிப்பு. நாடகம் முடிந்து ஒப்பனையைக் கலைத்துக் கொண்டிருக்கும் போது, 'ஆமாம், வேலாம்பா! எனக்கு ஒண்ணு தோணுது. இந்தத் துஷ்யந்தனல் எப்படி இந்தச் சகுந்தலையைப் பிரிந்து இருக்க முடிந்தது?' என்று கேட்டார் குறும்புப் பார்வையுடன்.

வேலாம்பாள் கலகல வென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவர் உள்ளத்தைக் கொக்கி போட்டு இழுத்தது. முகத்துச் சாயத்தைத் துண்டால் துடைத்துக் கொண்டே, 'அந்தச் சகுந்தலை கதையிலே எங்க மாமாவைப்போல் ஒரு துர்வாசர் வராரு இல்லே? அதனலே துஷ்யந்தன் சகுந்தலையை மறக்கும்படியாக ஆச்சு' என்ருள் உள் அர்த்தத்துடன். அவள் பேசி முடித்ததும் அறைக் கதவைத் திறந்து கொண்டு வேலாம்பாளின் மாமா முத்துரங்கம், "என்ன, அம்மாளு? இன்னுமா ஒப்பனையைக் கலைக்கல்லே? வெளியே கொட்டகை முதலாளி வண்டியோடெ காத்துக்கிட்டிருக்காரு. கிளம்பு, சீக்கிரம். இரவு அவர் வீட்டிலேதான் நமக்குச் சாப்பாடு. அப்பொ தம்பீ, நாங்க கிளம்பறோம்" என்று பலவந்தமாக வேலாம்பாளை அழைத்துக் கொண்டு போய் விட்டார். இப்படி வேலாம்பாளின் மாமன், வேலாம்பாளுக்கும், ரங்கண்ணுவுக்கும் இடையே வில்லனகவே இருந்தார். ஒருநாள் வசனம் ஒத்திகை பார்த்துக் கொண்டிருக்கும் போது சோடா சாப்பிடுவதற்காக முத்துரங்கம் வெளியே போய் விட்டார். அப்பொழுது ரங்கண்ணு, "வேலாம்பா, உனக்கேன் உன் மாமாவிடம் இத்தனை பயம்? நீ மட்டும் சம்மதம் என்று ஒரு வார்த்தை சொல்லு. நான் உன் மாமாவிடம் பேசி நம் கல்யாணத்தை முடித்துக் கொள்கிறேன்" என்ருர். வேலாம்பாள் நாற்புறமும் பார்த்துவிட்டு, "அதெல்லாம் எனக்குத் துணிச்சல் கிடையாதுங்க. மாமாவை நினைச்சாலே எனக்குப் பயம். அவர் பேச்சுக்கு எதிராகப் பேச எனக்குத் துணிச்சல் கிடையாது" என்ருள்.

ஒரு நாள் முத்துரங்கத்துக்குத் தீபாவளி என்ற சாக்கை வைத்துக் கொண்டு மயில் கண் வேஷ்டி, ஜரிகை அங்கவஸ்திரம், சில்க்கு சட்டை எல்லாம் வாங்கிப் பரிசளித்து விருந்தும் வைத்த பிறகு ரங்கண்ணு பேச்சை ஆரம்பித்தார்: "இதோ பாருங்க, முத்துரங்கம், நான் நேரடியாகவே கேட்கிறேன். நாடகத்திலே நானும் வேலாம்பாளும் சேர்ந்து நடிக்கிறதை ஜனங்கள் ரொம்ப விரும்பறாங்க. நாங்க வாழ்க்கையிலும் ஜோடியாகணும் என்று ஆசைப்படறோம். நீங்க என்ன சொல்லுறீங்க?"

முத்துரங்கம் வாசனைப் புகையிலையையும், பாக்கையும் சுவைத்துக் கொண்டே சிரித்தவாறு, "தம்பீ, நான் சொல்லறேன் என்று வருத்தப்படாதீங்க. நீங்க நாடக மேடை

சிறப்புச் சிறுகதை

நடிகர்களின் வாழ்க்கை மின்னல் ஒளி போலத்தான். மின்னலுக்கு முன்னும் பிரகாசம் இல்லை, பின்னும் பிரகாசம் இல்லை. நடிக வாழ்வைப் பின்னணியாகக் கொண்டு புனையப் பட்ட இந்தக் கதையிலே இவ்வுண்மை மின்னல் கீற்றெனப் பளிச்சிடுகிறது. இந்தச் சிறப்புக் கதையின் இன்னுமொரு சிறப்பான அம்சம், இது அட்டைப்படக் கதையாகவும் துலங்குகிறது.

யிலே ஜோடியா நடிக்கிறதைத்தான் ஜனங்க விரும்புறாங்க. வாழ்க்கையிலே ஜோடியாகிறதை விரும்பவே மாட்டாங்க. ஏன்? நான் கூட விரும்பவே மாட்டேன். நாடக வாழ்க்கையே ஒரு போலி வாழ்க்கை தம்பி! பளபளக்கும் உடையிலோ, அரிதாரத்திலோ ஜனங்களை மயக்குறோம். மயங்கி விடுகிறாங்க. வேஷத்தைக் கலைச்சுட்டா என்ன மதிப்பு இருக்கு சொல்லுங்க? உதாரணமாக பாரி வள்ளலாக வேஷம் போடுகிறவன் சீன் முடிந்ததும் இரண்டு ரூபாய்க்குச் சண்டை போடறான். ஹரிச்சந்திர வேஷதாரி மேடையை விட்டு இறங்கினதுமே பொய்தான் பேசறான். ஆகையினாலே நடிப்பும், வாழ்க்கையும் ஒத்து வராது. நீங்க உங்க ஜாதியிலே ஒரு பெண்ணைப் பார்த்துக் கட்டிக்குங்க'' என்று புத்திமதி சொல்லிப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்! அதன் பிறகுதான் வீட்டாரின் பேச்சுக்கு இணங்கி மாமன் மகளான மங்களத்தைக் கலியாணம் செய்து கொண்டார் ரங்கண்ணா.

ஒரே பக்கமாகப் படுத்திருந்தபடியால் முதுகு வலி எடுக்கவே, ரங்கண்ணா மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டார். கயிற்றுக் கட்டில் கிர்...ர்...ர் என்று ஒலி எழுப்பியது. ''தூங்கிவிட்டீர்களா? ஏதோ சட்டை கிழிந்திருக்கிறது, தைக்க வேண்டும் என்றீர்களே. கொடுங்கள். தைத்துவிடுகிறேன்'' என்றாள் மங்களம். உடம்பில் மாங்கல்யத்தைத் தவிர வேறு எந்த நகையும் இல்லாமல், நிறம் போன நூல் புடவையும், கிழிந்த ரவிக்கையுமாக, தம் எதிரே நிற்கும் தம் மனைவியை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தார் ரங்கண்ணா. வறுமையினால் அவள் உடல் மிக இளைத்திருந்தது. முன் நெற்றி மயிர்கள் நரைத்து நெற்றியில் குங்குமப் பொட்டைத் தழுவி விளையாடிக் கொண்டிருந்தன. ரங்கண்ணா ஒரு பெருமூச்சு விட்டார். வேலாம்பாள் தன்னைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் ஒரு வேளை இன்று மங்களம் நிற்கும் நிலையில்தான் அவளும் நிற்க வேண்டியிருக்கும். நல்ல வேளை! அவள் பிழைத்துக் கொண்டு விட்டாள் என்று தோன்றியது. மங்களத்தை ஒரு நாள்கூட அந்த நாளில் அவர் அன்பாக நடத்தியது கிடையாது. ஏதோ கட்டிய மனைவி என்ற கடமைஉணர்ச்சியைத் தவிர, காதல் பாசம் எல்லாம் அவளிடம் அவருக்குக் கிடையவே கிடையாது. அவளுக்கும் இழைந்து இழைந்து பேசவோ பழகவோ தெரியாது. சங்கீதம், சீட்டாட்டம், சாதுர்யமான பேச்சு இப்படிக் கணவனை வசீகரிக்கும் எந்த விதமான முறையும் மங்களத்துக்குத் தெரியாது. சொல்லப் போனால் கணவனின் பழக்கவழக்கங்கள் எதுவுமே அவளுக்குப் பிடிக்காது. அவர் அத்தர் செண்டு என்று போட்டுக் கொண்டால் வேலாம்பாள், அவர் சில்க் சட்டையை வருடிக் கொண்டே, ''ஆஹா, என்ன வாசனை! இந்த அத்தருக்குக்கூடப் பேதம் தெரிகிறது. நீங்கள் போட்டுக் கொண்டால் அதிகமாக மணக்கிறது. அதையே நான் போட்டுக் கொண்டால் சப்பென்றிருக்கிறது'' என்பாள் உல்லாசமாக. மங்களமாக இருந்தால், ''முதலில் இந்தச் சட்டையைக் கழற்றி எறியுங்கள். எதுக்கு இத்தனை அத்தரைக் கொட்டிக்கொண்டிருக்கிறீர்கள்? எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லை. தலையை வலிக்கிறது'' என்பாள்.

அவருக்கு வரும் கோபத்தில், ''நீ கழுதை ஜன்மம். உனக்கு ஏது ரசனை?'' என்பார்.

வெய்யில் முற்றத்திலிருந்து திண்ணைக்கு வந்து அவர் காலில் சுளீர் என்று உறைக்கவே எழுந்து அறைக்குள் வந்தார் ரங்கண்ணா. மங்களம் அவர் கிழிந்த சட்டையைத் தைத்து முடித்திருந்தாள். சமையற்கட்டில் மருமகள் டிபனுக்காகக் கோதுமை மாவைப் பிசைந்து கொண்டிருந்தாள். தமது பழைய டிரங்குப் பெட்டியைத் திறந்தார் ரங்கண்ணா. கிழிந்த சட்டை; அங்கவஸ்திரம் என்று ஏதேதோ இருந்தன. பெட்டி மூலையில் பிள்ளை மூக்குப் பொடி வாங்கக் கொடுக்கும் சில்லறையிலிருந்து மிச்சப்படுத்திய ஒரு நாலணா நாணயம் கிடந்தது. இன்னும் தகரச் சிமிழியில் எப்பொழுதோ வாங்கி வேண்டாம் என்று போட்டிருந்த ஜவ்வாது இருந்தது. சிமிழைத் திறந்த ரங்கண்ணாவுக்கு ஜவ்வாது மணத்தை அநுபவித்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன என்று எண்ணம் ஓடியது. அவர் ஒரு முடிவுக்கு வந்தார்: பிள்ளை மருந்துக்காக ஒரு ரூபாய் கொடுத்திருந்தான். ரிக்ஷாவுக்கு இந்த நாலு அணா ஆச்சு. பேசாமல் நாடகத்துக்குப் போகவேண்டியதுதான்.

முகத்தைக் கழுவிக் கொண்டு சட்டையைப் போட்டுக் கொண்டார். கண்ணாடியில் தம் முகத்தைப் பார்த்ததும் அவருக்கே வெறுப்பாக இருந்தது. 'ஜவ்வாதுப் பொட்டு மட்டும் வைத்துக் கொண்டால் போதுமா? அந்தப் பழைய பளபளப்பும், தெம்பும் போன இடம் தெரியவில்லையே?' என்று நினைத்தார். கண்ணாடியை ஆணியில் மாட்டுவதற்குள் இருமல் பிடித்துக் கொண்டு விட்டது. லொக் லொக்கென்று இரண்டு நிமிஷங்கள் விடாமல் இருமியதன் பயனாக முகம் வியர்வையால்

நனைந்து கண்கள் சோர்ந்து விட்டன. அவர் மிகவும் களைத்து விட்டார்.

''இந்த வெய்யிலில் எங்கே கிளம்புகிறீர்கள்? உங்களுக்கு இன்று உடம்பே நன்றாக இல்லை'' என்றவாறே மங்களம் கையில் வெந்நீர் கிளாசுடன் வந்தாள். மடமட வென்று வெந்நீரைக் குடித்துத் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார் ரங்கண்ணா.

''நான் வைத்தியர் வீடு வரையில் போய் வருகிறேன். திரும்பி வரச் சற்று நேரமானாலும் பயந்துவிடாதே. எனக்கு வீட்டுக்குள்ளே அடைந்து கிடந்து அலுத்து விட்டது. வைத்தியருடன் பேசிக் கொண்டிருந்து விட்டு வந்து விடுகிறேன்'' என்று கைத் தடியை எடுத்துக் கொண்டு கிளம்பினார். ''உங்களால் நடக்கவே முடியாதே. ரிக்ஷாவைக் கூப்பிடட்டுமா?'' என்ற மனைவியிடம், ''வேண்டாம், இந்தத் தெரு முனையிலிருந்து நானே கூப்பிட்டுக் கொள்கிறேன்'' என்று தெருவில் இறங்கி விட்டார்.

ஒரு வீம்பில் மனைவியிடம் அப்படிச்சொல்லி விட்டாலும் இரண்டடி நடப்பதற்குள் அவர் கால்கள் வலி எடுத்தன. சரியாக ஐந்து மணிக்கு ரிக்ஷாவில் நாடகக் கொட்டகை அருகே சென்று இறங்கின ரங்கண்ணாவை யாரும் கவனிக்கவில்லை. தம்மை யாராவது தெரிந்து கொள்கிறார்களோ என்று நாலா பக்கமும் பார்வையைச் சுழற்றினார். யாரும் கண்டு கொள்ளவில்லை. ஒரு குறும்பன், ''சுநீதா தேவி நடிக்கும் நாடகம் என்றதும் தாத்தாகூட ஐந்து மணிக்கே டிக்கெட் வாங்க வந்துட்டாரு, பார்த்தாயா? உனக்கேன் தாத்தா, இந்த ஆசை?'' என்று கேலி பண்ணினான். கையில் பிரம்பை வைத்துக் கொண்டு காவற்காரன் ஒருவன், ''அட, என்னப்பா, இப்படிக் கூட்டம் போடறீங்க? நாடகம் தான் பார்க்கப் போறீங்களே! என்ன பெரியவரே! நீகூடவா இங்கே வந்து நிற்கிறே? ஏதோ சின்னப் பசங்கள் நடிகையைப் பார்க்க ஆசைப்படுதுங்க. நீ போய் டிக்கெட்டு வாங்க 'க்யூ'விலே நில்லு நாயினா'' என்று ரங்கண்ணாவைப் பின்னுக்குத் தள்ளினான்.

ரங்கண்ணாவுக்கு அந்தக் கிழக் காவற்காரனை நன்றாக அடையாளம் தெரிந்து விட்டது.

அன்று இருந்ததை விட உடல் பருத்து மீசை நரைத்திருக்கிறது. அவ்வளவுதான்; மற்றபடி பழைய காவற்கார ஷண்முகம் தான். அந்த நாளில் நாடகம் முடிந்து, கொட்டகையை விட்டுக் கிளம்பும்போது ஷண்முகத்துக்கு ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று எத்தனையோ முறை இனாம் கொடுத்திருக்கிறார் ரங்கண்ணா. இப்பொழுது அவனே அவரை விரட்டுகிறான். காலத்தின் கோலம். ஒரு நீண்ட பெருமூச்சு ரங்கண்ணாவின் இதயத்திலிருந்து எழுந்தது. அங்கு நின்றிருந்த இளவட்டங்கள் சுநீதா தேவியின் நடிப்புத் திறமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். மாலை வெய்யில் சுளீர் என்று அடித்தது. கால் கடுக்க அவர் நின்றுகொண்டிருந்தார். சரியாக ஐந்தரை மணிக்கு ஹாரனை முழக்கிக் கொண்டே ஒரு பெரிய கார் வந்து நின்றது. இதற்குள் கூட்டத்தை விலக்கப் போலீசாரும் வந்துவிட்டார்கள். காரிலிருந்து முதலில் இறங்கிய வேலாம்பாளைப் பார்த்து மலைத்துவிட்டார் ரங்கண்ணா. அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் இருந்தாள். உடல் மட்டும் சற்றுச் சதை போட்டிருந்தது. தங்கமும் வைரமுமாகப் பளபளத்துக் கொண்டிருந்தாள் அவள். பின்னால் இறங்கிய சுநீதா தேவி, ரசிகர்களின் ஆரவாரத்துக்கிடையே கொட்டகைக்குள் போய்விட்டாள். காவல்கார ஷண்முகம் கதவைத் தாழிட்டு விட்டான். 'ஓ' என்ற இரைச்சலுடன் கூட்டம் டிக்கட்டு வாங்கும் க்யூவை நெருங்கியது. ரங்கண்ணாவும் பின்னால் நின்று கொண்டார். ஆறு மணிக்கெல்லாம் ''இனிமேல் ஒரு ரூபாய் டிக்கட்டுக் கிடையாது'' என்ற போர்டை மாட்டிவிட்டார்கள். வெகு வருத்தத்துடன் ரங்கண்ணா கொட்டகையின் பின் பக்கத்துக் கதவருகே வந்தார். கொட்டகைக்குள் ஒரே கூச்சலும் கும்மாளமுமாக இருந்தது. அதையெல்லாம் கேட்டபடி இருட்டில் பின் பக்கத்துக் கேட்டருகே உட்கார்ந்திருந்தார் ரங்கண்ணா. அவர்கள் திரும்ப வண்டியில் ஏறும்போதாவது பார்த்துப் பேசலாம் என்ற நைப்பாசை. வேலாம்பாள் வண்டியிலிருந்து இறங்கினவுடன் ரங்கண்ணா ''வேலாம்பா'' என்று குரல் கொடுக்க முயன்றார். பாழாய்ப் போன இருமல் வந்து 'வே...வே...' என்ற உளறலுடன் நின்று விட்டது. இனிமேலாவது அழுத்தமாகக் கூப்பிட வேண்டும். நடுவே இருமல் கூடாது என்று மடியிலிருந்த ஒரு மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். பொழுதுபோன குளிர்ந்த காற்றினால் அவர் உடல் இலேசாக நடுங்கிக் கொண்டிருந்தது. அவர் பிரபலமாக இருந்தபொழுது இப்படிக் கொட்டகைக்கு வெளியே டிக்கட்டு வாங்க முடியாமல் தவிப்பவர்களைப் பற்றி அவர் எண்ணிக் கூடப் பார்த்ததில்லை.

ஏதோ காரணமாகக் கதவைத் திறந்து கொண்டு வந்த காவற்காரனிடம், ''அப்பா, எனக்கு ஒரு உதவி செய்கிறாயா?'' என்றார். ஷண்முகம் அவரை முறைத்துப் பார்த்து விட்டு, ''உனக்கு டிக்கட்டு கிடைக்கலியா பெரியவரே? இன்னிக்கு ஒரே கூட்டம்... கொட்டகைக்குள்ளே என்னை விடு என்று மட்டும் கேட்காதே. மொதலாளிக்குத் தெரிஞ்சாக் கொன்னுடுவாரு'' என்றான்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லேப்பா. நடிகையின் தாயார் வேலாம்பாளை நான் பார்க்கணும். அவுங்க நாடகம் முடிஞ்சு ஒப்பனையைக் கலைக்கும்போது என்னை அவுங்க கிட்டே கூட்டிப் போனாப் போதும்'' என்றார்.


''என்ன பெரியவரே! உனக்குக் கூடவா அவுங்களைப் பார்க்கணும்னு ஆசை?''

''இல்லை, அப்பா! ஒரு முக்கிய விஷயம்.''

''நீ இங்கேயே குந்திக்கினு இரு. நாடகம் முடிஞ்சதும் உன்னை அவுங்ககிட்டே கூட்டிப் போறேன். எனக்கும் பேச்சுத் துணைக்கு ஆளாச்சு'' என்றான் ஷண்முகம். இந்தச் சமயம் கொட்டகைக்குள்ளிருந்து தடதட வென்று கரகோஷம் எழுந்தது.

''ஏதோ நல்ல சந்தர்ப்பம் போல் இருக்கிறது. அதுதான் ஜனங்கள் இப்படிக் கரகோஷம் பண்ணறாங்க'' என்றார் ரங் கண்ணா.

காவற்கார ஷண்முகம் ஒரு முறை சிரித்து விட்டு, ''இதெல் லாம் என்ன கரகோஷம் பெரிய வரே! அந்தக் காலத்திலே ஒவ் வொரு நடிகரும் எப்படி நடிச் சாங்க! ரங்கண்ணா என்று ஒருத் தர் இருந்தாரு. அவர் இப்பொ எங்கே இருக்காரோ, தெரி யாது. அவர் பாடினா இன்னிக் கெல்லாம் கேட்டுக்கிட்டே இருக்கலாம். பார்வைக்கும் ஜோராக இருப்பாரு. அவரு பாட்டு இன்னும் என் காதிலே ஒலிச்சிக்கிட்டிருக்கு. அதெல் லாம் அந்தக் காலம்'' என்று பெருமூச்சு விட்டான்.



ரங்கண்ணாவுக்குத் தம் காதுகளையே நம்ப முடியவில்லை. இப்படி ஒரு பாராட்டைக் காதால் கேட்டு எத்தனை நாட்களாகி விட் டன! அவர் உள்ளம் குளிர்ந்தது. 'நீ புகழும் அந்த நடிகர் நானேதான்' என்று சொல்லத் துடித்தது அவர் நாவு. வெகு சிரமப்பட்டு அந்த எண்ணத்தை அடக்கிக் கொண்டார். அந்தப் புகழ் மொழியைக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.போலிருந்தது. கண்ணை இலேசாக மூடிக் கொண்டு அந்த இன்ப மயக்கத்திலே அமிழ்ந்து, அமிழ்ந்து அதை அநுபவித்துக் கொண்டே இருந் தார். நாடகம் முடிந்து ஜனங்கள் கலைய ஆரம்பித்ததும், ''பெரியவரே! உன் பெயர் என்ன சொல்லு. வேலாம்பாள் அம்மாகிட்டே சொல்றேன். இரண்டு நிமி ஷத்திலே பேச வேண்டியதைப் பேசிவிடு. தொண தொண என்று பேசாதே'' என்றான் ஷண்முகம். ரங்கண்ணா எச்சிலை விழுங்கி விட்டு ''பழைய நடிகர் ரங்கண்ணா வந் திருக்கிறார் என்று சொல்லு'' என்றார். இதைச் சொல்லும்போது அவருக்குச் சற்று கர்வமாகக்கூட இருந்தது.

ஷண்முகம் இரண்டு நிமிஷங்கள் பேசவே யில்லை. திறந்த வாய் மூடாமல் நின்றுவிட்டு ''சாமி, அந்த ராஜப்பார்ட்டு ரங்கண்ணாவா நீங்க? இப்படி வெளிச்சத்திலே வாங்க சாமி. அடாடா உங்களை கேட்டுக்கு வெளியிலே உட்கார்த்தி வைச்சிட்டேனே. ஒரு வார்த்தை நான்தான் ரங்கண்ணா என்று சொல்லி யிருக்கக் கூடாதா?'' என்று பதைபதைத் தான். ''பரவாயில்லை அப்பா. நான் அப் படிச் சொல்லி யிருந்தால் கூட உன்னால் நம்பி யிருக்க முடியாது. நான் உருவத்தில் அப்படி மாறிவிட்டேன். போகிறது. நீ வேலாம் பாளிடம் நான் வந்திருப்பதாகச் சொல்லு''

''சாமி, இதோ போறேனுங்க, இப்படி ஸ்டூல்லே உட்காருங்க. கூல்டிரிங்கு ஏதா வது சாப்பிடறீங்களா?'' என்று உபசரித்த ஷண்முகத்தைப் பார்த்து ரங்கண்ணா சிரித்துக் கொண்டார்.

ஒப்பனை அறையில் ஷண்முகம் வேலாம்பா ளிடம், ''அம்மா உங்களைப் பார்க்க நடிகர் ரங் கண்ணா வந்திருக்கிறார். வரச் சொல்லவா?'' என்றான். தன் மகள் தலையில் மல்லிகைப் பூவை வைத்துக் கொண்டிருந்த வேலாம் பாள், ''இதென்னப்பா தொந்தரவு? நான் யாரையும் பார்க்கத் தயாராக இல்லை. காலையில் குழந்தைக்கு ஷூட்டிங் இருக்கு. சென்னை போய்ச் சேர வேண்டிய கவலை எனக்கு. இப்படித்தான் மதுரையிலே பபூன் சிங்காரம் வந்து கழுத்தை அறுத்தான், பணத்தைக் கொடு, காசைக் கொடு என்று! இந்த ஊரிலே ரங்கண்ணா வந்திருக்கிறார். வேறு வேலை இல்லை இவுங்களுக்கு. போகச் சொல்லப்பா, வாச்சுமேன்'' என்றபடி காரில் ஏறிவிட்டாள். 'இந்த அலட்சியத்தை எப்படி ரங்கண்ணாவிடம் தெரிவிப்பது? ஒரு காலத்தில் அவரைப் பார்க்க எத்தனை பேர் தவிச்சிருக்காங்க! எல்லாம் காலம்!' என்று வருந்தினான் ஷண்முகம்.

வேலாம்பாள் பேசியதெல்லாம் ரங்கண் ணாவின் காதிலும் விழத்தான் செய்தது. அவர் ஆடாமல் அசையாமல் அப்படியே உட்கார்ந்து விட்டார். தமக்குப் புகழ் தந்த நாடகக் கொட்டகையை ஒரு முறை ஆசை தீரப் பார்த்தார். தமக்கு அவமானம் நேர்ந்ததும் அதே கொட்டகையில்தான் என்று நினைத்ததும் அவர் கண்களில் நீர் நிறைந்தது. நடிகர்களின் வாழ்க்கை மின்னல் ஒளி போலத் தான். மின்னலுக்கு முன்னும் பிரகாசமில்லை, பின்னும் பிரகாசமில்லை என்ற உண்மை அவருக்கு உறைத்தது. நெஞ்சை வலிப்பது போல் இருக்கவே சுவரில் சாய்ந்தார். நடிகர் ரங்கண்ணாவுக்காக ஒரு கலர் புட்டியுடன் வந்த ஷண்முகம் அவர் ஸ்டூலில் தலை தொங்கத் திறந்த வாயுடன் உட்கார்ந் திருப்பதைப் பார்த்து 'ஓ' என்று அலறி விட்டான். கடைசியாக ஒரு ரசிகனின் புகழ்ச்சி மொழியினால் திருப்தி அடைந்த அவர் ஆத்மா உடலை விட்டுப் பிரிந்து விட்டது.



தவம் எங்கே?

டாக்டர் லக்ஷ்மிக்கும் டாக்டர் கோபாலனுக்கும் கல்யாணம் அமோகமாக நடந்து கொண்டிருந்தது.

லக்ஷ்மி தன் கணவனைப் பார்த்தாள். அவன் அழகன் என்று கூற முடியாது. சற்று முரட்டுத் தனமாகவே இருப்பான். விவாகம் இல்லாமலே இருந்துவிட வேண்டும் என்பது லக்ஷ்மியின் லட்சியம். மணவாழ்க்கை மனசுக் கிசைந்த வாழ்வுக்கு இடையூறாக இருக்கும் என்பது அவள் அபிப்பிராயம். குழந்தைகளின் வியாதிகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து வந்தாள் அவள். அந்தத் துறையிலேயே எவ்வளவோ செய்ய வேண்டும் என்று அவள் கனவு கண்டாள். ஆனால் கடைசியில் பெற்றோரின் உருக்கமான வேண்டுகோளை நிராகரிக்க முடியாமல் கல்யாணத்துக்கு இசைந்தாள். இசைந்தது பெரிதல்ல. டாக்டர் கோபாலன் கிடைத்தது அதிர்ஷ்டம் என்று நினைத்தாள் அவள்.

கோபாலன் பத்து வருடத் தொழில் அனுபவம் உடையவன். அறுவைச் சிகிச்சையில் நிபுணன் என்று பெயர் பெற்றிருந்தான். மிகவும் கண்டிப்பான பேர்வழியாயினும் இளகிய மனமுடையவன் என்று லக்ஷ்மி ஆஸ்பத்திரியில் கேள்விப்பட்டிருந்தாள். லக்ஷ்மியின் பெற்றோர் விசாரித்ததில் கோபாலனின் குடும்பத்தைப் பற்றி மிகவும் திருப்தி கொண்டிருந்தனர். லக்ஷ்மி நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். மெதுவாக வாயில் பக்கம் திரும்பியபோதுதான் ரவியை அவள் பார்க்க நேர்ந்தது.

கோபாலன் லக்ஷ்மி திரும்புவதையும் பார்ப்பதையும் பேசுவதையும் ரசித்துக் கொண்டிருந்தான். மண வாழ்க்கை என்பது ஒரு மனிதனுக்கு அவசியம் என்று நம்பாதவன் அவன். அப்படியிருக்கையில் தன் தாயாரின் ஆசைக்காக இதில் அவன் புகுந்துவிட்டான். கல்யாணமாகாத தன் இரு தங்கைகளுக்கு ஆதரவு தரவும், தாயாரைக் காப்பாற்றவும் ஏற்ற பெண் எங்கே கிடைக்கப் போகிறாள் என்று அவன் ஐயுற்றான். சாமானியக் குடும்பத்தில் பிறந்து, வெகு நாட்கள் கல்யாணமில்லாமல் மனம் சோர்ந்த பெண் ஒருத்திதான் கிடைப்பாள் என்று அவனுக்குத் தெரியும். அத்தகைய ஒரு பெண் விவாகமானவுடன் கணவனிடமிருந்து எத்தனையோ பரிவையும் கவனிப்பையும் எதிர் பார்ப்பாள். அதற்கு அவனால் ஈடு கொடுக்க முடியும் என்று தோன்றவில்லை.

இப்படியிருக்கையில்தான் ஒரு நாள் ஆஸ்பத்திரியின் தீபாவளி விருந்தில் லக்ஷ்மியிடம்

அவன் நெருங்கிப் பேச நேர்ந்-

இருந்தாள் லக்ஷ்மி. திட சித்தமானவள், எடுத்த காரியத்தை நிறைவேற்றும்வரை விடமாட்டாள் என்று அவன் நண்பர்கள் அவளைப் பற்றிப் பாராட்டினர்கள்.

தன் தாயை அவள்தான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அவன் கூறினபோது, ''லட்சியத்தோடு கூடிய வாழ்வைத்தான் நான் விரும்புகிறேன். உங்கள் தாயாரைப் பார்த்துக் கொள்வது என் வாழ்வின் குறிக்கோளாக அமையும்'' என்று பளிச்சென்று பதிலளித்தாள் அவள். அவளுடைய ஆராய்ச்சிக்கும் தான் துணையாக இருக்க வேண்டும் என்று கோபாலன் உறுதி பூண்டான்.

''நான் செய்த தவப் பயன் நீ'' என்று கேலியாக அவள் வாயைக் கிண்டினன் அவன்.



அநுத்தமா

...காக
...ன.

...ந்தது.

''நீங்களும்தான் எனக்கு அப்படி! ...ல் கயிறு
லக்ஷ்மி தன் வலக்கையை ஒரு... அவர்
பார்த்துக் கொண்டாள். ''...டிவிட்...
பொம்மை செய்து காட்டில் தவம் ...ம் மன்...
தான் தவமா? செய்கையில்தான்
மனசில்தான் தவப் பயனும் ...ம்பியது.
அல்லவா? நீங்கள்தான் ...சொர... பெண்.
இதோ இந்தக் கை குழந்தைக... கொள்வதைப்
போடத்தான் பிறந்தது என்று !... சந்தோஷம்

பாலிகை கரைக்கப்பட்டது. இருவரும் மௌனமாகக் கரையில் அமர்ந்திருந்தனர்.

''என்ன ஆழ்ந்த யோசனை?'' என்ற குரலைக் கேட்டு இருவரும் திரும்பினார்கள்.

''நாளை செய்ய வேண்டிய ஆபரேஷனைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்'' என்றாள் லக்ஷ்மி.

''சின்ன டி. என். ஸிக்கு என்ன, யார் வேண்டுமானாலும் செய்ய மாட்டார்களா?''

''எல்லோருக்குமே டாக்டர் மது கிடைப்பார்களா?'' என்றாள் லக்ஷ்மி.

''அதற்காக உங்கள் ஆஸ்பத்திரி நினைவையும், மருந்து வாசனையையும் கூட மகாபலிபுரத்துக்கு எடுத்துக் கொண்டு போவீர்களா? பேஷ்!'' என்று சிரித்தான் டாக்டர் மது.

''மது! நாங்கள் எங்கும் போகவில்லை.''

''ஏன், கோபால்? என்னிடம் நம்பிக்கை இல்லையா?''

''அதற்காக அல்ல. வேறு காரணம்...!''

''என்ன டாக்டர் லக்ஷ்மி?''

''மணமானவர்கள் மனம் பலவிதமாக மாறும். உங்களுக்கு என்ன புரியப் போகிறது? அடுத்த மாதம் உங்கள் கீதா வரட்டும். அப்புறம் சொல்கிறேன்'' என்று அவனிடம் வேடிக்கையாகப் பேசினாள் லக்ஷ்மி.

''ரைட்டோ'' என்று சிரித்துப் பேசிவிட்டு மதுசூதன் போய்விட்டான்.

''லக்ஷ்மி, பெரிய தவறு செய்துவிட்டோம். இனித் தொடர்ந்து நடத்துவதில் பயனில்லை'' என்றான் கோபாலன்.

''சரிதான். எதுவானாலும் இந்த நிமிஷமே முடிவு செய்ய முடியுமா? ஊருக்காக, உற்றாருக்காகக் கொஞ்சம் நாடகம் போட வேண்டாமா?''

''வாருங்கள், கோவிலுக்குள் போய் அர்ச்சனை செய்து வருவோம்'' என்று ஓர் அம்மாள் அழைத்தாள். கோபாலன் லக்ஷ்மியைப் பார்த்தான். லக்ஷ்மியும் திரும்பிப் பார்த்தாள். மற்றவர்களுக்கு இவர்கள் சங்கடம் தெரியாதபடியால் அவர்கள் துரிதப் படுத்தினார்கள். இருவரும் வேறு வழியின்றி உள்ளே சென்றார்கள். இருவர் பெயரையும் நட்சத்திரங்களையும் கேட்டுக் குருக்கள் அர்ச்சனை செய்தார்.

''இதுதான் முதலும், கடைசியுமா?'' என்று கேட்டான் கோபாலன்.

''இருக்கலாம்'' என்றாள் லக்ஷ்மி.

''நான் எந்தப் பெண்ணின் கையையும் தொடக்கூடாது என்று நிபந்தனை உண்டா?'' என்று கேட்டான் கோபாலன், ஆத்திரத்தை அடக்க மாட்டாமல்.

''என் கொள்கையைத் தெளிவாகச் சொல்லி விட்டேன். ஒரு மனிதனுடைய ஸ்பரிசத்துக்குப் பொருள் இருக்கத்தான் வேண்டும். அர்த்தமின்றித் தொட்டுக் கொள்வது மிருகப் பிராயமல்லவா? அதைப் பற்றி இப்பொழுது என்ன? முதலும் கடைசியும் இதுவே என்று கூறி விட்டீர்களே?''

''நீயும்தான் 'இருக்கலாம்' என்கிறாயே?''

லக்ஷ்மி செவிசாய்க்கவே இல்லை. உள்ளே உள்ள மூல விக்கிரகத்தைப் பார்த்தாள். அவள் முகத்திலும் பிடிவாதம் உறைந்திருந்தது. கோபாலனின் முகத்திலும் கடுமை மிகுந்தது.



''அண்ணே! நான், தீபாவளி ரிலீஸ். நீ?''
''பொங்கல் ரிலீஸ்தான்!''

''ஏன் இரண்டு பேரும் முகத்தைக் கடுகடு வென்று வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கோபாலனின் சித்தி கேட்டாள்.

''வெய்யில்'' என்றாள் லக்ஷ்மி.

''வெய்யிலா, வெப்பமா?'' என்று கேட்டான் கோபாலன்.

''கொதிப்பு.''

''எப்பொழுது மகாபலிபுரம் கிளம்பப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் சித்தி.

''போகப் போகிறதில்லை. இங்கே முக்கியமான வேலை இருக்கிறது. லீவு கிடைக்காது.''

''அழகுதான்!'' என்றாள் சித்தி.

லக்ஷ்மி முன்னேறுவதிலேயே கண்ணாயிருந்தாள்.

அன்று ஒரு மகாராஜாவின் வருகைக்காக ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. லக்ஷ்மி வேகமாகச் சென்ற போது கீழே விழுந்திருந்த தாம்புக் கயிற்றைப் பார்க்கவில்லை. சட்டென்று தடுக்கி விழவிருந்தாள். கோபாலன் அவளைப் பிடித்து நிறுத்தினான்.

''தாங்க்ஸ்'' என்றாள் லக்ஷ்மி.

''வேண்டாதவர்கள் கைதொடப் பிடிக்காது என்பது மறந்து விட்டது'' என்றான் ஏளனமாக.

''முதலும் கடைசியுமாக இருக்கும்போது ஞாபகத்துக்கு வேலையில்லை'' என்றாள் லக்ஷ்மி சுடச் சுட.

''கை என்பது பிணைக்க உதவும் என்று நினைத்தேன் நான்.'' எளக்காரம் தொனித்தது கோபாலனின் ஒவ்வொரு பேச்சிலும்.

''பிளப்பதற்கும் அதுவே பயன்படுகிறது. அவரவர்கள் மனசைப் பொறுத்தது.''

மேலே நடந்து செல்ல முடியாமல் கயிறு குறுக்கேயும் நெடுக்கேயும் ஓடியது. அவர்களுடன் வந்த மூதாட்டிகள் தாண்டிவிட்டிருந்தனர். இவர்கள் இருவர் மட்டும் மண்டபத்தில் நின்றுவிட நேர்ந்தது.

லக்ஷ்மியின் மனத்தில் வேதனை நிரம்பியது. அவள் தன் பெற்றோருக்கு ஒரே பெண். அவள் திருமணம் செய்துகொள்வதைப் பற்றி அவர்கள் மன்னு ... சந்தோஷம் அடைந்திருப்ப... டோம் தெரியு...



...ர்: இவ்வளவு நேரம் பொறுத்துக் கொண ...ா. இனிமேல் பேசினல் உன்னை...உன்னை...!
...: ...கொன்று விடுவேன் என்கிறீரா? அது ...க்காது. நான் உங்க 'பேஷண்ட்' இல்லை.

...ந்து. மேள ஓசை அடங்குவதற்குள் ...கவே அங்கு முரண்பாடு தோன்றிவிட்டது. ...பாலனின் முன்கோபமும் ...டிவாதமும் ...ரிந்தவைதான் அனுலும் ...ன் பிடித்த ...கு எதிரே ஒன்றுமே சொல்லக் கூடாது ...ன்று அவன் எதிர்பார்ப்பது மிகவும் அநீதி ...ாக அவளுக்குத் தோன்றியது. அவனைப் போலவே படித்த ஒரு பெண், உலகம் அறிந்தவள், சில கொள்கைகளை வைத்திருப்பாள், அவைகளுக்கும் மதிப்புத் தரவேண்டுமல்லவா? பரஸ்பரம் அன்பும் மரியாதையும் இல்லாமல் எப்படி வாழ முடியும்? அதுவும் வைத்தியத் தொழிலிலேயே ஈடுபட்டிருக்கும் இருவர், நோயாளிகளின் மனசை அறிந்து சிகிச்சை செய்ய வேண்டிய இருவர், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவே மறுத்தால்...? நல்ல காலம், இன்றே வந்ததே மனஸ்தாபம். ஆனுலும்தான் என்ன? பெற்றோர்கள் எவ்வாறு இடிந்து போய் விடுவார்கள்! ரவியின் குறுக்கீட்டினுல் வாழ்க்கையைக் கெட விடுவது சரியா?

கோபாலன் தன் புது மனைவியைப் பார்த்தான். அழகாக இருக்கிறுள். புத்திசாலி என்று பெயர் வாங்கியவள்தான். சிலர் சொல்லியிருக்கிறுர்கள் – அவள் சில கொள்கைகளை உடையவள், அதற்காக யாரையும் லட்சியம் செய்யாமல் ஒரே பிடியில் நிற்பாள் என்று. என்ன இருந்தாலும் மணவாழ்க்கை என்று ஏற்றுக் கொண்ட பிறகு கணவனை சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற எண்ணமே இல்லாத பெண் என்ன பெண்! பண்பைப் பற்றி இவளுக்குத்தான் தெரியுமா? சரி, வாக்குவாதம்தான் ஆகிவிட்டது. என்றுலும் பிறகாவது கொஞ்சம் வளையக் கூடாது? அலட்சியமாக இருக்கிறுளே? லட்சியமில்லாத பெண்ணுடன் என்ன வாழ்வு வாழ முடியும்? கடைசியும் முதலும் என்று ஓர் ஆடவன் குறிப்பிட்டால் அவளும் அதை ஆமோதிக்கிறுளே யன்றிக் கவலைப்படவில்லையே! நல்ல காலம்! இன்றே தெரிந்து விட்டதே! வாழ்க்கை ஆரம்பித்த பிறகு தவிக்காமல் தவிர்த்ததே! ஆனுலும் அவ்வளவு எளிதில் முடிகிறதா? வயதான தாய் இந்த நன்னுளை ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருந்தாள் ... ாத தாய்க்கும், ... லக்ஷ்மி ஆதரவாக இருப்பாள் என்று கேட்டுப் பேசித் தெளிந்து மண வாழ்க்கையில் இறங்கியதில் என்ன பயன்? அவள் கொள்கை பழைமையானதுதான். நாட்டுப் பண்பைப் போற்றுவது குற்றமாகுமா? ரவியின் பேச்சும் சிறிது அநாகரிகமாகத்தான் இருந்தது.

இருவரும் தத்தம் சிந்தனையில் சிக்கி, பின்னி விடுவிக்க வழி தெரியாமல் தவித்தனர்.

இரண்டு பெரிய உருளைகளிலிருந்து ஆட்கள் கயிற்றை விடுவித்துக் கொண்டிருந்தனர். வேறு பலர் அக்கயிற்றைக் கொண்டு ஆங்காங்கு பிரிவினைகள் உண்டாக்க முயன்று கொண்டிருந்தனர். லக்ஷ்மியும் அதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் வேலை எளிதில் ஆவதாக இல்லை. தாங்கள் நின்ற மண்டபத்தில் கயிறு கட்டி முடிந்ததும் கிளம்ப நினைத்தான் கோபாலன். லக்ஷ்மியும் பொறுமையின்றித் தவித்தாள்.

கயிறு கட்டுபவர்களிடையே பலத்த வாக்குவாதம் வந்துவிட்டது.

''அடே எந்த முட்டாளடா அது? ஒரே சக்கரத்திலிருந்து விடுகிறுன்? இரண்டு பக்கத்திலிருந்தும் விட்டால் கூட்டம் அமுத்தினுலும் தாக்குப் பிடிக்கும். இப்படிக் கட்டினுல் ஓரிடத்திலே அவிழ்ந்தால் மொத்தப் பேரும் விழ வேண்டியதுதான்'' என்று மேஸ்திரியின் கூச்சல் கேட்டது.

லக்ஷ்மி கோபாலனின் முகத்தை உன்னிப்பாக நோக்கினுள். அவனும் அந்தச் சமயம் அவளைப் பார்த்தான்.

''யாரு, டாக்டர் ஐயாவும் அம்மாளுங்களா? நேற்று கல்யாணத்துக்கு வர முடியலிங்க. இங்கே வேலை சரியா யிருக்கிறது பாருங்க. இவுனுகளுக்குக் கயிறு கட்டக் கூடத் தெரியவில்லை. ஒருத்தன் கயிற்றையே இழுத்துப் போதும் போதாமல் முடி போடுகிருங்க. மற்றக் கோடியிலிருந்து கொஞ்சம் இழுத்துத் தாராளமா முடி போட்டால் என்ன? இரண்டு பேரும் பாதி வழி பிடிகொடுத்தால் தானே? அதுகூட இந்த முட்டாப் பசங்களுக்குச் சொல்லணுமுங்க'' என்றுன் மேஸ்திரி.

கொஞ்சம் இடைவெளி தோன்றவும் லக்ஷ்மி கீழே இறங்கிக் கிளம்பினுள். மறு படியும் விழுந்துவிடப் போகிறுமே என்று கயிற்றுச் சுருள்களுக்கிடையே மெதுவாகக் காலை எடுத்து வைத்து முன்னேறினுள். கோபாலனும் கூடவே வந்தான். லக்ஷ்மி கையை நீட்டித் தூணைப் பிடிக்கப் போனுள். அதே சமயம் அவள் கையைக் கோபாலன் பிடித்தான். லக்ஷ்மி அமைதியாகக் கணவனைப் பார்த்தாள். கோபாலனும் நிதானித்துப் பார்வையைத் திருப்பினுன்.

''நான் பாதி வழி வந்துவிட்டேன் லக்ஷ்மி!'' என்றுன் கோபாலன்.

''நான்தான் முதலில் கையை நீட்டினேன்'' என்றுள் லக்ஷ்மி.

''நீ தூணைப் பிடிக்கப் பார்த்தாய்.''

''இந்தத் தூணைத்தான்'' என்று தன் கணவனின் கையை அமுத்தினுள் அவள்.

''நானும் இந்தக் கொடியைப் பிடிக்கப் பிடியைத் தளர்த்தினேன்'' என்றுன் அவன்.

உச்சிக்கால மணி அவர்கள் தெளிவைத் தெளிவாக ஆமோதித்தது.

படித்த டாக்டர்கள் இருவரும்.

ஆனால் மணமானதும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டது இதுதான்:

"படித்த பெண்ணா நீ? உடை நாகரிகம் உள்ளம் படு கர்நாடகம்!"

"படிப்பது பண்பை மறக்கவா?"

அவர்கள் மனக்கசப்புக்குக் காரணம் என்ன?

சிறப்புச் சிறுகதை

"இப்பொழுது...."

லக்ஷ்மி ஜில்லென்று முகம் சிவந்தாள். அதை ரசித்தான் அவள் கணவன்.

கோபாலன் அவள் மோதிரத்தைப் பார்ப்பது போல அவள் கையைத் தொட்டான்.

அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். அதற்குள் ரவியைப் பார்த்தாள். ரவி அவளை மணப்பதாக வந்தான். தன் மனசுக்குப் பிடிக்கவில்லை என்று அவள் மறுத்துவிட்டாள். அவன் அவளை ஒரு தினுசாகப் பேசிவிட்டு, "நீ எந்த மனிதன் கூடத்தான் வாழப் போகிறாய்!" என்று கூறிவிட்டுப் போனான்.

அப்பொழுது அது பிரமாதமாகத் தோன்றவில்லை. அவன் தன் கல்யாணத்துக்கு வர மாட்டான் என்றே நினைத்தாள் அவள். ஆனால் அவன் வந்து விட்டானே!

ரவி பந்தலில் நுழைந்தவுடனேயே லக்ஷ்மிக்குத் தூக்கிவாரிப் போட்டது. வேண்டுமென்று பழி வாங்கவே வந்தானோ என்கிற மாதிரி இருந்தது அவன் வருகை. வந்தால் தான் என்ன, பார்வையில் என்ன குறும்புத் தனம் வேண்டியிருக்கிறது! அவள் தன் பதற்றத்தை வெளியே காட்ட இஷ்டப் படாமல் கச்சேரியைக் கவனிப்பதுபோல் பாவித்தாள். ஆனால் எத்தனை நேரம்தான் அப்படி இருக்க முடியும்?

"லக்ஷ்மி, இவர்தான் என் நண்பர் ரகுநாதன். அமெரிக்காவில் என்னுடன் இருந்தார்" என்று அவள் கணவன் ஒருவரை அறிமுகப்படுத்தினான்.

லக்ஷ்மிக்கு ஒன்றும் செவியில் விழவில்லை. அவள் வந்தவருக்குக் கையைக் கூப்பினாள்; இயந்திரச் சிரிப்பு ஒன்றைச் சிரித்தாள். அவள் வாய் ஏதோ முணுமுணுத்தது. அவர்கள் தந்த பரிசைப் பின்னாலிருந்தவர்களிடம் ஒப்படைத்துவிட்டு மீண்டும் அமர்ந்தாள்.

"உன் பெற்றோருக்கு என்னவோ பைத்தியம். இப்படியெல்லாம் கல்யாணம் செய்து கொண்டால்தான் கல்யாணமா? என்ன சின்னக் குழந்தைகள் மாதிரி தோப்புக் கரணம் போட்டுக் கொண்டு..." என்று முணுமுணுத்தான் கோபாலன்.

"தினம் தினமும்தான் சாவும் வாழ்வும் பார்த்துப் பார்த்து வைரம் பாய்கிறது நம் வாழ்க்கையில். ஒரு நாள்தான் குழந்தைகளாக இருப்போமே?" லக்ஷ்மி அதைச் சொல்லிவிட்டுக் கலகலவென்று சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவள் மனத்தை ஓரளவு இலேசாக்கியது. ரவி ஒன்றும் செய்துவிட முடியாது. ஆனாலும் அவனைக் கண்டதுமே அவள் உடல் எல்லாம் பற்றி எரிந்தது.

அவள் ஓரக் கண்ணால் பார்த்தாள். ரவி சந்தனம், பூச்செண்டு, பன்னீர் எல்லாம் தாண்டிவிட்டான். யாரோ அவனைப் பிடித்துக்கொண்டு விட்டார்கள் பேச. அவர்களை மனமார வாழ்த்தினாள் லக்ஷ்மி.

"லக்ஷ்மி, மகாபலிபுரத்துக்குப் போவது பற்றி உனக்கு ஆட்சேபணை இல்லையே? உன்னைக் கேட்காமலே ஏற்பாடு செய்து விட்டேன்."

"எனக்கு என்ன ஆட்சேபணை? எங்காவது இரண்டு நாட்கள் மறைவாகப் போக வேண்டியதுதான். இங்கிருந்தால் நாளைக் காலை செய்ய வேண்டிய ஆபரேஷனும், மறுநாள் பிறக்க இருக்கும் குழந்தையும்தான் நினைவுக்கு வரும்...!"

"எனக்கும்தான். நான் நாளை ஒரு அபென்டெக்டாமி செய்ய வேண்டும். மது செய்கிறான், எனக்குப் பதிலாக."

லக்ஷ்மி புன்முறுவலுடன் ஏதோ பதில் சொல்லத் திரும்பினாள். அவள் முகம் கறுத்தது. ரவி வந்துவிட்டான் அருகில். கோபாலன் துள்ளி எழுந்தான். இரு கைகளாலும் ரவியின் கரங்களைப் பற்றினான். உற்சாகத்துடன் திரும்பி, "லக்ஷ்மி, இதுதான் மிஸ்டர் ரவி. எனக்கு மிகவும் நெருங்கிய நண்பன்" என்று அறிமுகப்படுத்தினான்.

"என் பாராட்டுக்கள் மிஸஸ் கோபால்!" என்று கையை நீட்டினான் ரவி.

லக்ஷ்மி கையைக் கூப்பினாள்.

ரவி நீட்டிய கரத்தை மடக்கவில்லை. "என்ன, லக்ஷ்மி, கைகொடுக்க மாட்டாயா?" என்று குறும்புச் சிரிப்புடன் கேட்டான்.

"லக்ஷ்மி, ரவியை முன்பே தெரியுமா?" என்று கேட்டான் கோபாலன்.

"என் அத்தை மகன் அவன்" என்றாள் அவள், சுருக்கமாக.

"கை கொடு, லக்ஷ்மி" என்றான் ரவி,

"மன்னிக்க வேண்டும்" என்று கூறிக் கையை மீண்டும் கூப்பினாள் லக்ஷ்மி.

கோபாலன் சிறிதே அதிருப்தி நிழலாட, லக்ஷ்மியைப் பார்த்தான்.

"அவள் ஏன் கை கொடுக்க மாட்டேன் என்கிறாள் தெரியுமா கோபு? நான்தானே கைப்பிடித்திருக்க வேண்டிய அத்தான்? நான் காத்திருந்தவன், நீ நேற்று வந்தவன்" என்று கூறிவிட்டுச் சிரித்தான் ரவி.

லக்ஷ்மிக்கு அவன் சிரிப்பு அருவருப்பாக இருந்தது. நான்கு நாட்களுக்கு முன் வீட்டுக்கு வந்திருந்தானே, தன்னை மணக்கவில்லை என்று ரசக் குறைவாகப் பேசினான். அதெல்லாம் அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. கல்யாணத்துக்கு வர மாட்டான் என்றே அவள் நினைத்தாள். கணவனின் நண்பனாக வந்து நிற்பான் என்று தெரியாது அவளுக்கு.

ரவி கோபாலனுடன் பேசினான். அடிக்கடி லக்ஷ்மி பக்கம் திரும்பிப் பேசினான். லக்ஷ்மி சலனமின்றி அமர்ந்திருந்தாள். மேலே மேலே விருந்தினர்கள் வரவும் இருவருக்கும் சரியாக இருந்தது. அவர்களது ஆஸ்பத்திரியில் இருவருமே நல்ல செல்வாக்குடையவர்கள். சிகிச்சை செய்து கொண்டவர்களும்

டாக்டர்களும் அவர்களிடம் படித்த மாணவர்களும், நர்ஸ்களுமாகக் கல்யாணப் பந்தல் 'ஜே ஜே' என்று இருந்தது. வரவேற்பு முடிந்தது. சாப்பாடு முடிந்து லக்ஷ்மி உடை மாற்ற மாடிக்குச் சென்றபோது கோபாலன் தாழ்வாரத்தில் கைப்பிடிச் சுவரின் மீது சாய்ந்த வண்ணம் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் காலரவம் கேட்டு, ''லக்ஷ்மி!'' என்று அழைத்தான்.

''என்ன?''

''இன்று நீ என்னை அவமானப்படுத்தி விட்டாய்.''

''நானு?'' வியப்புடன் கேட்டாள் லக்ஷ்மி.

''ஆமாம். ஒரு சமயம் எனக்கு வயிற்று வலி வந்து படுத்திருந்தேன். ரவிதான் இராப் பகலாக எனக்குப் பணிவிடை செய்து என்னைக் காப்பாற்றினுன். அவன் முகத்தில் அறைந்தாற்போல் நீ கை கொடுக்க மாட்டேன் என்றுயே?''

கோபாலன் முன்கோபக்காரன் என்பது பிரசித்தம். கல்யாணத்தன்றே அத்துடன் போராட வேண்டி வரும் என்று அவள் எதிர் பார்க்காததால் சிறிது தயங்கினுள்.

''என்ன லக்ஷ்மி? திருமணத்தன்றே நம்மிடையே அபிப்பிராய பேதம் வந்துவிட்டதே என்று நினைக்கிருயா?''

''அப்படிஒன்றும் இல்லை'' என்ருள் லக்ஷ்மி.

''நான் அப்படித்தான் நினைக்கிறேன், லக்ஷ்மி. என்னுடைய நெருங்கிய நண்பன் என்று சொன்ன பிறகும் கூட நீ மறுத்திருக்க வேண்டாம். என்னைப் பற்றி என்ன நினைத்திருக்க மாட்டான் அவன்?''

''மதிப்புக் குறைவாக நினைத்திருப்பான் என்கிறீர்களாக்கும்?''

''இல்லையா? மனைவியிடம் இந்த அளவு கூட மதிப்புப் பெருதவன் என்று தொனிக்கும்படி பேசிவிட்டுத்தான் போனுன்.''

''அவன் அபிப்பிராயம் என்ன, பெரிய உலக மேதையின் மதிப்பீடா? அவனை எனக்கு நன்ருகத் தெரியும்? கிடக்கிருன்-அவன்'' என்று அலட்சியமாகப் பதில் தந்து விட்டு லக்ஷ்மி அப்பால் நகர்ந்து விட்டாள். கோபாலனைத் திரும்பிப் பார்த்தால் அவள் கலவரமடைந்திருப்பாள். பாராததனுல் நிம்மதியாக ஒரு பாட்டை முனகியவாறு அவள் உடை மாற்றிக் கொண்டு கீழே போய் விட்டாள்.

கோபாலன் கொஞ்ச நேரம் அங்கு நின்று விட்டுத் தன் வீட்டினர் இருக்கும் விடுதிக்குப் போய் விட்டான்.

மறுநாள் விடியற்காலையிலேயே கல்யாணத்தின் மீது விவகாரங்கள் ஆரம்பித்தன. லக்ஷ்மி அவனைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். ஓர் இரவுக்குள் அவன் உருவமே மாறி விட்டது போன்ற பிரமை தட்டியது. அப்படி என்ன விபரீதம் நடந்து விட்டது என்று அவளுக்குப் புரியவில்லை.

மணையில் வேலை முடிந்ததும் மூதாட்டிகள் சிலர் பாலிகையை எடுத்துக்கொண்டு கிளம்பினுர்கள். அதுவரை லக்ஷ்மியும் கோபாலனும் சோபாவில் அமர்ந்திருந்தார்கள்.

''மகாபலிபுரம் போவதை நிறுத்தி விட்டேன்'' என்ருன் கோபாலன்.

''ஏன்?'' என்று கேட்டாள் லக்ஷ்மி.

''மனசில் ஒற்றுமை இல்லாதவர்கள், பரஸ்பரம் மதிப்பில்லாதவர்கள் போக வேண்டிய இடமும் இல்லை; சந்தர்ப்பமும் இல்லை.''

லக்ஷ்மி இலேசாகச் சிரித்தாள். ''நீங்கள் அவ்வளவு கோபம் கொள்ளும்படி அப்படி என்ன நடந்து விட்டது?''

''ஒரு பானைச் சோற்றுக்கு ஒவ்வொரு சோற்றையும் பதம் பார்க்க வேண்டுமா?''

''ரவியின் விஷயத்துக்காக நீங்கள் இவ்வளவு கோபம் கொள்ளக் கூடாது. இந்தக் கை உங்களுடையது. அந்தப் புனிதமான கையை வேறு யாருக்கும் கொடுக்க நான் மனம் ஒப்பவில்லை. அதிலும் ரவிக்கு; அதிலும் நீங்கள் கட்டிய கங்கணக் கயிறு இருக்கும் போதே...!''

''அவன் என்ன அவ்வளவு தவறு செய்து விட்டானும்?''

''பிறனுடைய மனைவியான பிறகும் மட்டமாகப் பேசியதுதான்.''

''ஆகா! பெரிய ராஜபுத்திர பதிவிரதா சிரோமணி நீ!''

''என் கற்பைப் பழிக்காதீர்கள்! ரவிக்காக அந்தமட்டும் கீழே இறங்க வேண்டாம்.''

''நீ ஆடவன் கையையே தொடாத கற்பரசியா? ஆஸ்பத்திரியில் ஆடவர்களையே ஸ்பரிசிக்காத புனித மாதாவா?''

''அது வேறு விஷயம்.''

''அன்று ஒரு நாள் டீபார்ட்டியில் டாக்டர் ஆர்வல் உன் கன்னத்தை நிமிண்டினுர்.. அன்று நீ ரசித்து இளித்ததை நான் பார்க்கவில்லையாக்கும்!''

''இதோ பாருங்கள். கைக்குக் கை வித்தியாசம் இருக்கிறது. நான் நோயாளிகளைத் தொடும்போது ஒரு தாய் குழந்தையைத் தொடுவது போல் தொடுகிறேன்; ஒரு கலைஞன் கலைப்பொருளைத் தொடுவது போலத் தொடுகிறேன்; ஓர் இயந்திரம் மற்ருேர் இயந்திரத்தை இயக்குவது போல் அது. இதையெல்லாம் உங்களுக்கு நான் சொல்ல வேண்டுமா? ஆர்வல் என் கன்னத்தைத் தொட்டது உண்மை. நான் அதை எதிர் பார்க்கவில்லை. அவர் ஒரு கிழவர். தகப்பன் என்ற முறையில் கிள்ளினுர். மேலும் அவர் ஓர் ஐரோப்பியர். பிற பெண்களைத் தொடுவது அவர்கள் பண்புக்கு முரணல்ல. ஆயின், அதை நான் ரசித்தேன் என்கிறீர்களே, அது சரியில்லை. எனக்குப் பிடிப்பதில்லை. அனுவசியமாக எந்த அன்னிய ஆடவன் கையையும் தொடுவதற்கு நான் விரும்புவதில்லை.''

''படித்த பெண்ணு நீ! உடை நாகரிகம், உள்ளம் படு கர்நாடகம்!''

''படிப்பது பண்பை மறக்கவா?''

பேச்சு இதே ரீதியில் தடித்துக்கொண்டே போயிற்று. இருவருமே தங்கள் முக பாவத்தைச் சமாளித்தபடியே பேசியதால் மற்றவர்கள் அதை அறிய முடியவில்லை.

நடு நடுவில் அவர்களை உறவினர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்களுடன் பேசவேண்டிய நிர்ப்பந்தங்களினுல் அவர்கள் சண்டை சிறிது தடையுண்டது.

பாலிகையுடன் இரண்டு மாமிகள் கிளம்பினுர்கள். இவர்களையும் கூட அழைத்தனர். லக்ஷ்மியும் கோபாலனும் கனத்த இதயத்துடன் கிளம்பினுர்கள். கோவில் குளத்தில்

தேன். 'சி.வி.ராமனைத் தேடி வந்த புகழ் வருங் காலத்தில் இவனுக்கு வந்து சேரும்' என்ற ஆசிரியரின் நற்சான்றிதழையும் படித்துப் பார்த்தேன்.

''ஏன், வீட்டுக்கு வரவில்லை, ஸ்ரீராம் ?''

''அப்பாதான் சொன்னார், 'நேரே ஆபீசுக்குப் போய்ப் பார், அடையாளம் கண்டு கொள்வார்னு.''

நான் அவ்வளவு பெரிய மனிதனா? சுந் தரத்துக்கு நான் எப்போதும் ராமுதான் !

அமெரிக்காவில் ரசாயனத் துறையில் ஸ்ரீராம் ஆராய்ச்சி நடத்துவதற்குத் தொழிற் சாலை ஒன்று பொறுப்பு ஏற்றிருந்தது. டாலர் செலவுக்கு அரசாங்க அனுமதி வேண்டும்.

இதுதானா முடியாது?

ஸ்ரீராம் வியப்பு எதுவும் தெரிவிக்காமல், நிதானமாக நன்றி சொன்ன விதம்—அப்பனைப் போல் பிள்ளை !

அறைக் கதவு மூடியதும்....

சிந்தனைக் கதவு திறந்து கொண்டது.

சுந்தரத்தின் குடும்பம்....

வரப் போகிற ஐ. ஏ. எஸ். மாப்பிள்ளை. அமெரிக்காவுக்குப் பறக்கும் பிள்ளை. பெற் றோர்களுக்கு அடங்கிய பெண். இல்லறத்தைச் செவ்வனே பேணும் பெண்ணரசி.

அடுத்து என் குடும்பம்....

திறந்த புத்தகம்.

மீண்டும் பழைய நினைவுச் சுவட்டில் மனம் சென்றது.

வாழ்க்கை ஏணி.

உச்சாணிப் படியில் நான்.

முதல் படியில் சுந்தரம்.

அவன் என்னை அண்ணாந்து பார்க்கவில்லை. நான் அவனைப் பார்க்கிறேன் — எப்படி ?

தலை குனிந்து!

என் கொடுப்பினை அது !

பெரிய இடத்துப் பெண்!

''அடேடே! மணி ஆறு பத்து. இன்னும் நீங்க ஸ்டேஷனுக்குக் கிளம்பலியே?''

''இதோ, புறப்பட்டாச்சு! நல்ல ஷர்ட் டாகத் தேடி எடுக்கக் கொஞ்சம் டயமா யிடுத்து !''

''டீசெண்டாக ரயிலடிக்குப் போக வேண்டாமா? இல்லாதபோனால் வேண்டா வெறுப்பாக வரவேற்பு நடக்கிறது என்று நினைக்க இடம் ஏற்படும்!''

''ஆமா, ஆமா! முன்கோபக்காரர்னு தான் நமக்குத் தெரியுமே!''

''நீ டிபனை யெல்லாம் சிரத்தையாகத் தயாரித்து விடுவாயல்லவா? அதிகபட்சம் இன்னும் ஒரு மணி அவகாசம்தான் இருக்கு.''

''அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம் ! கல்யாணத்தின்போதேதான் நீங்கள் கவனித் திருப்பீர்களே! ஸ்பெஷல் ரசத்திலே ஒரு உப்பு ஜாஸ்தியாப் போச்சுன்னு சமையற்கா ரரை வெளியேற்றணும்னு குதிச்சவராச்சே.''

''அதனாலேதான் இப்போ நான் அதிகம் பயப்படுகிறேன். நீ கொடுக்கும் டிபன் மோசம் என்று சீறி உடனடியாக ஊருக்குத் திரும்பிப் போக நினைக்கக் கூடாதே! தீபா வளி நல்லபடியாக நடக்கணுமே?''

''எல்லாம் சரியாக நடக்கும். நீங்கதான் பார்த்துப் பார்த்துத் துணிமணிகள் சேகரித்து வைத்திருக்கிறீர்களே ?''

''அந்த டெர்ரிலீன் ஷர்ட் பிடிக்குமோ?''

''அப்படியே பிடிக்கலேன்னாக்கூட அசடு மாதிரி அதைப் போய் மாற்றிக் கொண்டு வருகிறேன் என்று சொல்லா தீர்கள். இதுவும் இருக்கட்டும். பிடித்த மாதிரி இன்னொன்றும் வாங்கித் தருகிறேன் என்று சொல்லுங்கள்.''

''எனக்குப் பாடம் சொல் லித் தருகிறாயாக்கும் ! வர ஆசாமியின் திருப்திதான் நமக்குப் பெரிசு.''

''ரயில் பிரயாணம் சௌகரியமாக இருந்ததா?''

''மோசமில்லை! அப்பர் பெர்த்துதான் கிடைச்சது.''

''கூட யாரையாவது அழைத்து வரக் கூடாதோ?''

''நான்சென்ஸ்!.... உபத்திரவம்... ஹாயி யாக நாம் வரணும், போகணும்.''

''டிபன் ரெடி...நீங்க..''

''நோ.... நான் செங்கல்பட்டிலேயே சாப்பிட்டுட்டேன்......!''

''கொஞ்சமாவது......''

''சொன்னால் சொன்னதுதான்! என்னைப் பிரமாதமாய்த் தீபாவளிக்கு அழைத்தீர் களே ! கௌரவமாகத் தீபாவளியைக் கொண்டாட என்ன ஏற்பாடு செய்தீர்கள்?''

''இதோ..... நீங்களே பாருங்களேன்..!''

''உங்களுக்கு டெர்ரிலீன் ஷர்ட்.....''

''ராட்டன்!.... நான் நிட்டட்வெரையிடி தான் உபயோகப்படுத்துவேன்.''

''அதையும் இப்பவே வாங்கி வருகிறேன்.''

''நோ!.... பரவாயில்லை! உங்க தீபாவளி பட்ஜெட் என்ன ஆயிற்று?''


''அறுநூறு ரூபாய் ஆயிற்று....''

''சில்லி!... ஆயிரம் ரூபாய்க்குக் குறைந்து ஒரு தீபாவளி நடத்தலாமா?''

''சாரி!.... நீங்க எது வேணுமோ சொல் லுங்கோ!....மீதிக்கும் வாங்கி வருகிறேன்.''

''நாட் நெஸஸரி! வேண்டாம்....! நான் ஆயிரம் ரூபாய்க்கே ஒரு செக் எழுதிண்டு வந்துட்டேன்! மாப்பிள்ளை! இதைப் பிடியும்! மீதிக்குக் கார்த்திகையின் போது பார்த்துக் கொள்ளுங்கள்! இந் தாம்மா!... கொஞ்சம் காப்பி கொண்டா! என்ன மாப் பிள்ளை! சுசீலா! அப்படியே நின்னுட்டீங்க!''

''இல்லேப்பா! நீங்க சந்தோ ஷமா வந்துட்டுப் போகணு மேன்னு எவ்வளவு கவலைப்பட் டோம் தெரியுமா?'' —'மேனா'





எங்கள் ஊரில் பெரிய கடை வீதியின் மேற்கு முனையில் தெற்கே பார்த்தவாறு பல்லை இளித்துக் கொண்டு நிற்கிறதே, அந்தக் கட்டடத்தில் பதினைந்து ஆண்டுகளாகத் துடி நடை போட்டு வளர்ந்து வந்த ''கலை வளர்ச்சிக் கழக''த்தை இனிமேல் யாரும் அங்கே போய் அநாவசியமாகத் தேட வேண்டாம். கழகம் அங்கே இல்லை... கழகம் அங்கே இல்லை என்றால் அதன் புதிய முகவரி வேண்டுமோ? கண்ணாருவிதான். கழகமே இப்போது இல்லை ஐயா!

இந்தச் சுதந்திர தினத்தின் போது நீங்கள் கழகத்தின் கொண்டாட்டத்துக்கு வரவில்லை போல் இருக்கிறது. பாவம், நீங்கள் கொடுத்து வைக்காதவர். நீங்கள் மட்டும்தானா? அன்று கழகம் கடைசியாகக் காட்டிய அற்புதமான விளையாட்டுக்களைக் காணாதவர்கள் எல்லாருமே கொடுத்து வைக்காத்வர்கள்தாம். எங்கள் ஊரின் வரலாற்றிலேயே — அந்தக் கழகத்தின் வரலாற்றிலேயே — ஒரே நாளில், ஒரே நிகழ்ச்சியில் இத்தனை வேடிக்கைகள் நடந்தேறியதில்லை. லாரல்—ஹார்டி படம் ஒன்றைப் பார்ப்பது போல் அவ்வளவு பிரமாதமாயிருந்தது சுதந்திர தின விழா.



அன்று நடந்த நாடகத்தில் கழகத்தின் கூட்டுக் காரியதரிசிகளான ராமதுரையும் வைத்தியும்தான் வில்லன்கள். சிறு வயதிலேயே அரசியலில் புகுந்து, சடசடவென்று மேலே சென்று, பெரிய பெரிய பதவிகளெல்லாம் வகித்து விட்டு, இன்று ஒரு பெரிய ராஜ்யத்தின் அரசியல் வாழ்வுக்கே நடுநாயகமாக விளங்கும் தனிப் பெருந்தலைவரான ''தியாகி'' சுடலைமுத்துதான் அன்றைய ''ஹீரோ''.

இந்த ராமதுரையும் வைத்தியும் அன்று காட்டிய பித்துக்குளித்தனத்துக்கு இருவரையும் அப்பீலுக்கு இடமில்லாமல் நாடு கடத்திவிடலாம். அவர்கள் செல்லும் வெளிநாட்டுக்கு எவ்வளவு ஆபத்து வேண்டுமானாலும் வரட்டும்; இங்கே அவர்கள் இருப்பது நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு நல்லதில்லை!

சுதந்திர தின விழாவுக்குத் தியாகி சுடலைமுத்துவை அழைத்ததே தவறு என்று நான் சொல்லுவேன். தியாகிக்கு முன்கோபம் ஜாஸ்தி என்பதோடு கலை வளர்ச்சிக் கழகம் போன்ற சிறு சங்கம் ஒன்றில் கொடியேற்று விழா நடத்தித் தமது மதிப்பைக் குறைத்துக் கொள்வதையும் அவர் விரும்பாதவர். அப்படியிருந்தும் எங்கள் ஊருக்குத் தனியார் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கி வைப்பதற்காக வந்திருந்த அவர் இந்தக் கொடியேற்று விழாவுக்குச் சம்மதிப்பதற்கு, கூட்டுக் காரியதரிசிகள் இருவரும் எப்படியோ மூன்றும் மனிதர் ஒருவர் மூலம் ஏற்பாடு செய்து விட்டார்கள். தியாகி வந்து கலந்து கொள்வது எங்கள் ஊருக்கே பெருமை; கழகத்துக்கோ கேட்கவே வேண்டாம். பரபரப்புக்கும், பதற்றத்துக்கும் பெயர் போன கூட்டுக் காரியதரிசிகள் பத்து நாட்களுக்கு முன்பிருந்தே அர்த்தமில்லாமல் அங்குமிங்கும் ஓடியவண்ணம் இருந்தார்கள்.

காலை ஒன்பது மணிக்குக் கொடியேற்று விழா. ராமதுரையும் வைத்தியும் நாலு மணிக்கே எழுந்திருந்து ஒரு வரம்பில்லாமல் பரபரப்பைக் கிளப்பி விட்டுக் கொண்டபின், நேராகக் கழகத்துக்கு ஓடி வந்து, ''டங்'' என்று மோதிக் கொண்டார்கள். குழி தோண்டி, கொடிக் கம்பத்தை நட்டு, சுருட்டிய கொடியுடன் அதைத் தயாராக



கொடி பறந்தது!

பூர்ணம் விசுவநாதன்

வைப்பதெல்லாம் இவர்கள்தானே செய்ய வேண்டியிருக்கிறது !

கழகக் கட்டடத்துக்கு எதிரே குழி தோண்டிக் கம்பத்தை நட்டு முடித்துத் 'திமுஸ்' போட்டுக் கெட்டித்த பிறகுதான் கம்பத்தின் உச்சியிலிருந்த கொக்கியில், சுருட்டிய மூவர்ணக் கொடியைத் தொற்ற வைத்தாற்போல் கயிற்ருல் இணைக்க வில்லை என்பது தெரிந்தது. கம்பத்தைக் குழியிலிருந்து கல்லியெடுக்க மனமில்லாத ராமதுரை, பக்கத்து மரமொன்றில் ஏறி அங்கிருந்து கொடிக் கயிற்றைக் கம்பத்தின் உச்சிக்கு வீசிப் பார்த்தான், மீன் பிடிப்பது போல். அது பலிக்காமல் போகவே கம்பத்தைக் குழியிலிருந்து எடுத்து, கொடிக் கயிற்றைக் கொக்கியில் மாட்டிவிட்டு, மறுபடியும் கம்பத்தை உறுதியாய் நிறுத்திஞர்கள். பிறகு ஜமக்காளங்கள் விரிப்பது முதல், வருகிறவர்கள் குடிப்பதற்கு ஒரு பெரிய பானையில் தண்ணீர் பிடித்து வைப்பது வரையில் எல்லாமே அவர்களே செய்தார்கள். நேரமும் சரியாயிருந்தது.

தியாகி சுடலைமுத்து காரில் வந்து இறங்கிய போது உண்மையாகவே மலைத்துப் போய் விட்டார்; அவ்வளவு பெரிய கூட்டம் கூடியிருந்தது கொடியேற்று விழாவுக்கு. தூய வெள்ளை உடையில், வடஇந்திய பாணியில் கோட்டும் சூரீதார் பைஜாமாவும் அணிந்து அவர் வந்திறங்கிய போது, ராமதுரையும் வைத்தியும் எங்கேயோ தள்ளி நின்று கொண்டு, அன்றைய நிகழ்ச்சியை வெற்றிச் சிறப்போடு நடத்தி முடிக்க வேண்டிய பொறுப்பை முகத்தில் தாங்கி, ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள் பரபரப்புடன். கார் வந்து நின்ற சத்தம் கேட்டுத் திரும்பிய இருவரும், தியாகியைப் பார்த்துவிட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தோடி வந்தார்கள். இருவரும் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தியாகிமேல் மோதி விழப் பார்த்தார்கள்; நல்ல வேளை, அவர்கள் வருவதைச் சரியான சமயத்தில் கவனித்து விட்ட தியாகி ஆயத்தமாக நின்று இருவரையும் அணைத்துப் பிடித்துச் சமாளித்துக் கொண்டார்.

அசட்டுச் சிரிப்புச் சிரித்த ராமதுரையும் வைத்தியும் சட்டென்று 'பிரேக்' போட்டுச் சிரிப்பை நிறுத்தி விட்டு, கூட்டத்துக்கு வெளியே ஒரு மூலையை நோக்கிக் கைக் குட்டையை ஆட்டிஞர்கள். வைத்தி, காலிப் பயல் மாதிரி ஒரு பெரிய விஸில் வேறு அடித்தான். அவ்வளவுதான்; ஊரே கிடுகிடுத்துப் போகும் அளவுக்கு ''டுமீல்'' என்று வேட்டு ஒலித்தது. கூட்டுக் காரியதரிசிகள் இருவரையும் தவிர பாக்கி எல்லாரும் கிட்டத்தட்ட மூன்றடி உயரத்துக்கு எகிரிக் குதித்தார்கள். தியாகி கீழே விழாத குறைதான்; சமாளித்



சிறப்புச் சிறுகதை

கலை வளர்ச்சிக் கழகத்தின் கூட்டுக் காரியதரிசிகள் ராமதுரையும் வைத்தியும் சுதந்திர தின வைபவத்தைக் கொண்டாடிய விதமே அலாதி. அவர்களது விபரீதச் செய்கைகளை நுணுக்கமாக உன்னிப் பார்த்துப் பூர்ணம் விசுவநாதன் தமக்கே உரிய ஹாஸ்ய நடையில் தருகிறார். மனம் விட்டுச் சிரிக்க வைக்கும் சிறப்புச் சிறுகதை இது.

துக் கொண்டார் எப்படியோ! எத்தனை தடவைகள்தான் சமாளிப்பாரோ, பாவம்!

கோயிலில் ஸ்வாமி புறப்பாட்டுக்கு உபயோகப்படும் வேட்டு இந்த நிகழ்ச்சியில் முழங்கினால் புது மாதிரியாக இருக்கும் என்று 'ஐடியா' சொன்னவன் வைத்திதான். ராமதுரை இதை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டதுடன், இதற்கு ஏற்பாடு செய்வதைக் கடைசி வரை ரகசியமாகவே வைத்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தினான். கமிட்டி உறுப்பினர்களும் சேர்ந்து துள்ளிக் குதித்ததற்கு இதுவேதான் காரணம்.

தியாகிக்கு முகத்தில் அசடு வழிந்தது. ''இதெல்லாம் என்ன ஆர்ப்பாட்டம்?'' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார். உடனே கூட்டுக் காரியதரிசிகள் இருவரும் அசட்டுச் சிரிப்புடன், ''ஹி.... ஒரு புது மாதிரி ஐடியா!.... அதுவும் நீங்கள் முதல் தடவையாக எங்கள் கழகத்துக்கு வருவதால்......'' என்று இழுத்தார்கள். தியாகி வெடுக்கென்று ''சேச்சே, ரொம்ப மோசம்'' என்று கருத்து வெளியிட்டுவிட்டு, கொடிக் கம்பத்தை நோக்கி நடந்தார். கமிட்டி உறுப்பினர்களின் முகத்தில் சினக் குறி பரவியிருந்தது. பொருளாளர் சபாபதி, கூட்டுச் செயலாளர்கள் இருவரையும் எரித்து விடுவது போல் பார்த்தான். ''பாவிப் பயல்களா, இதற்கெல்லாம் கழகம் பணம் தரும் என்று கனவு காண வேண்டாம்'' என்ற எச்சரிக்கை அந்தப் பார்வையில் செம்மியிருந்தது. ராமதுரையும் வைத்தியும் அவன் பார்வையின் வழியிலிருந்து விலகி விலகிச் சென்றார்கள்.

பலபேருடைய பாதங்களை மிதித்து நகட்டிக்கொண்டும், வேறு பலரை இடித்துத் தள்ளிக்கொண்டும் கூட்டுக் காரியதரிசிகள் வழி காட்ட, தியாகி கொடிக் கம்பத்தை அடைந்தார். கூட்டத்தில் நின்று கொண்டிருந்த ஒருவர் அருகிலிருந்த நண்பரிடம், ''இப்படி வேட்டுப் போட்டு வரவேற்பது ரொம்ப ரொம்ப 'ஒரிஜினலான' ஏற்பாடு'' என்று பாராட்டினார். அதை மிக ஜாக்கிரதையாகக் காதில் வாங்கிக்கொண்ட ராமதுரையும் வைத்தியும் ஒருவரையொருவர் பார்த்துத் தலையசைத்து வெற்றிப் பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டார்கள். தன்னடக்கம் காரணமாக, இருவருக்கும் வியர்த்துக் கொட்டியது.

இது ஒன்றுதானா ஒரிஜினல்? கோமாளிப் பயல்கள் இன்னும் எத்தனையோ காரியங்கள் மிகவும் ஒரிஜினலாகத்தான் செய்தார்கள்.

ஒன்பது மணி அடிக்க இன்னும் பத்து நிமிஷங்கள் இருந்தன. தியாகிக்கு இது வேண்டாத வம்புதானே? பத்து நிமிஷங்கள் அவர் முன் கூட்டி வந்ததற்காக நிறைய அனுபவித்தார் பாவம்!

கொடிக் கம்பத்தின் கீழே அவர் போய் நின்றவுடன், சற்றுத் தொலைவில் காத்திருந்த நாலைந்து அப்பாவிப் பெண்கள், ஸிக்னலை எதிர்பாராமல் இறைவணக்கம் பாட ஆரம்பித்தார்கள். எல்லோரும் 'அட்டென்ஷ'னில் நிற்பதற்குள் ராமதுரை பாய்ந்து சென்று பாட்டை நிறுத்தி விட்டான். வியப்புடன் திரும்பிப் பார்த்த தியாகிக்கு வைத்தி விஷயத்தை விளக்கினான். அரசியல்வாதியான தியாகிக்கு அந்த விளக்கம் ஒரு கொள்கையறிக்கை மாதிரி தொனித்தது. ''இதுவரை கழகத்தில் எல்லாமே குறித்த நேரத்துக்கு முன்போ பின்போதான் நிகழ்ந்திருக்கிறது. புதிய நிர்வாகத்தில் இந்த நிலைமையை மாற்றியமைப்பதென்று உறுதியாயிருக்கிறோம். இன்றைய நிகழ்ச்சி டாண் என்று சரியாக ஒன்பது மணிக்குத்தான் ஆரம்பமாக வேண்டும். அதனால்தான்....ஹிஹி... ராமதுரை...'' என்று இளித்தான் வைத்தி.

ராமதுரை கமிட்டி உறுப்பினர்களின் அக்கினிப் பார்வையில் சிக்காமல் நெளிந்து நெளிந்தே தியாகியின் பக்கம் திரும்பி வந்து விட்டான். ''கரெக்டாக ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கலாம். அதுவரை உட்காரலாமே!'' என்று தியாகிக்குத் தரைக் கம்பளத்தைக் காட்டினான். தியாகியுடன் இந்தக் கொஞ்ச நேரத்தில் பத்து வார்த்தைகள் சாதுரியமாகப் பேசி அவருடைய நம்பிக்கையைச் சம்பாதித்துவிட வேண்டுமென்று ராமதுரை திட்டமிட்டான். தியாகி, தமது மனத்தில் பயங்கரமாக உருவாகிக் கொண்டிருந்த கலவரத்தைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டே ''அதற்கென்ன'' என்று சிரித்தவாறே உட்கார்ந்தார். அந்தச் சிரிப்பு சப்பென்றிருந்தது. கூடிநின்றவர்களும் அங்கங்கே உட்கார்ந்து கொண்டார்கள்.

ஜமுக்காளங்களுக்கு நடுவே கொடிக் கம்பத்தை ஒட்டினாற்போல் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளம் தியாகிக்காக ராமதுரை கொண்டு வந்து போட்டது. பலபேர்கள் நடந்து நடந்து அதில் மண்ணாகியிருந்தது. தியாகி மண்ணைப் பொருட்படுத்தாமல் உட்கார்ந்தார். தலைவரல்லவா? அதுவும் தியாகியாயிற்றே! அது வைத்தியின் கண்ணில் படாமல் இருக்குமா? சட்டென்று பாய்ந்தவன், தியாகி உட்கார்ந்து விட்டதைப் பார்த்தாவது சும்மா இருக்கக் கூடாதா? ஆனால் அவனுடைய பதற்றம் அவனைச் சும்மா விடுவதாயில்லை. கண் மூடிக் கண் திறப்பதற்குள் கம்பளத்தின் முன் பகுதியைத் தூக்கிப் படபடவென்று உதறிவிட்டான். வைத்திக்கு என்னத்தையெல்லாமோ கொடுக்க மறந்துவிட்ட கடவுள், நல்ல உடல் வலிமையை மட்டும் அள்ளிக் கொடுத்திருந்தார். ஜோடியில் ஹார்டி அவன்தான். அவன் உதறின

உதறலில் தியாகி பின்பக்கம் மடங்கி விழ ஆரம்பித்துவிட்டார். நல்லவேளை, ராமதுரை சரியான சமயத்தில் கையை 'அண்டைக் கொடுத்து'த் தியாகியின் மண்டை தரையுடன் உறவாடாமல் தடுத்து விட்டான். ஆனால் ராமதுரை தியாகியை நிமிர்த்துவதற்கும், வைத்தி உதறினதால் கம்பளத்திலிருந்து கிளம்பிய புழுதி தியாகியின் முகத்திலும், உடையிலும் வீசியடிப்பதற்கும் சரியாக இருந்தது. இரண்டு விநாடிகளில் எல்லாம் நடந்து முடிந்து தூசியும் அடங்கிவிட்டது. தூரத்திலிருந்து பார்த்தவர்களுக்குப் புழுதியை ஏந்திக் கொள்வதற்காகவே ராமதுரை தியாகியை நிமிர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தது போலத் தோன்றியது. அவரும் சரியான சமயத்தில் கண்களை மூடிக்கொண்டு விட்டார்.

உண்மையில் தியாகிக்கு அப்போதுதான் கண் திறந்தது என்று சொல்ல வேண்டும். தவறான இடத்துக்கு வந்து எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டோம் என்று அப்போதுதான் அவருக்குத் தெரிந்தது. தத்துப்பித்தென்று நடந்துகொள்ளும் இரு அசடுகளின் நிர்வாகத்தில் உள்ள ஒரு கழகத்துக்கு 'வருகை புரிய' ஒப்புக்கொண்டதற்காகத் தம்மைத் தாமே சபித்துக்கொண்டார். வந்த ஆத்திரத்தில் அவர் வாயெல்லாம் உலர்ந்து போயிற்று. ஆனால் அவர் வாயை மூடிக் கொண்டிருக்கக் கூடாதா? ''கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்'' என்று கேட்டுவிட்டார். தொண்டையை நனைத்துக் கொண்டுவிட்டு அந்த இரண்டு கோமாளிகளையும் பார்த்து ஒரு கத்தல் போட விரும்பினார் அவர்.

அவ்வளவுதான்; ஹார்டி வைத்தி, கூட்டத்தைத் தாறுமாறாகப் பிளந்து கொண்டு பல பேர்களுடைய நாடிகளில் குதிகாலால் உதைத்துக் கொண்டு, ஊன்றியிருந்த பல உள்ளங் கைகளைப் படக் படக்கென்று சுடக் கெடுக்கும் அளவுக்கு அழுத்தமாக மிதித்துக் கொண்டு தண்ணீர்ப் பானையை நோக்கிப் பாய்ந்தான். தண்ணீர்ப் பானைதான் குறிக்கோள் என்று முன்னேறுகிறவனுக்குக் கூட்டம் ஒரு பொருட்டாகத் தோன்றுமா?

பானைக்கருகே ஒரு கட்டை மேல் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த இரு டம்ளர்களிலும் தண்ணீரை மொண்டு கொண்டான் வைத்தி. ''வழி! வழி!'' என்று கத்தியவாறு மறுபடியும் கூட்டத்தைப் பல கூறுகளாகப் பிளந்து கொண்டு தியாகியை நோக்கித் தாவினான். அப்படித் தாவும்போது வழியில் பலரது உச்சி மண்டையிலும் மூக்கு நுனியிலும் சட்டையின் முதுகுப்பக்கத்திலும் தண்ணீர் வழிந்தது. அதை ஏந்திக் கொள்கிறவர்களின் முகங்களில் அசடும் வழிந்தது.

இவ்வாறாக, வைத்தி தியாகியை மறுபடியும் நெருங்கியபோது டம்ளர்களில் பாதியளவுதான் தண்ணீர் இருந்தது. இரண்டையும் கூட்டினால்தான் முழு டம்ளராகும். இந்தக் கணக்கு வைத்திக்குத் தெரியாமல் போகுமா? ராமதுரை ஒரு பக்கம் பதற்றத்துடன் நின்று கொண்டிருக்க, தியாகி மனத்துக்குள் தமக்குத் தாமே ஏதோ ஆறுதல் கூறியவாறு தரையைப் பார்த்துக் கொண்டிருந்தார். வைத்தி அருகில் வந்தது தெரிந்தவுடன், நிமிராமலே தண்ணீருக்காகக் கையை நீட்டினார். அதற்குள் வைத்தி ஒரு டம்ளரிலிருந்து மற்ற டம்ளருக்கு 'டொர்ர்' என்று தண்ணீரை மாற்ற ஆரம்பித்தான். தியாகியின் கை உயருவதைப் பார்த்துவிட்டு விரைவாகத்தான் ஊற்றினான். ஆனால் ஊற்றும் சத்தத்தைக் கேட்ட தியாகி, மூட்டு விட்டுப் போனமாதிரி படக்கென்று கையைக் கீழே போட்டுவிட்டார். (ஐயோ, அடுத்த கணம் என்ன நடக்கும் என்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லையே, இது என்ன உலகம்!) தியாகியின் கை கீழே சென்றதை வைத்தி கவனிக்கவொட்டாமல், அந்தச் சமயம் பார்த்து அவனை ராமதுரை அடித் தொண்டையில் அழைக்கவே, வைத்தி ராமதுரையின் பக்கம் திரும்பிக் கொண்டே தண்ணீர் நிறைந்த டம்ளரைத் தியாகியின் உயர்த்திய கை இருந்த இலக்கு வரையில் கொண்டு வந்து, தியாகி அதைப் பிடித்துக்கொண்டுவிட்டதாக நினைத்துத் தன் பிடியை விட்டுவிட்டான்! தண்ணீருடன் டம்ளர் கம்பளத்தில் பொத்தென்று விழுந்து கவிழ்ந்தது. இப்போதும் தியாகி அசாதாரணத் துடிப்புடன் துள்ளியெழுந்து வெள்ளப் பெருக்கிலிருந்து தப்பினார். ஆயினும் தண்ணீர் விழுந்த வேகத்தில் தலைவர் முகத்திலும் உடையிலும் தண்ணீர் சற்றுத் தாராளமாகவே தெறித்துவிட்டது. கூட்டத்தினர் சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள். டம்ளர் உடையாமற் போனது ஆச்சரியம்தான்.

ஓரத்தில் நின்றிருந்த ராமதுரைக்குக் கோதாவில் இறங்கித் தனக்கு நற்பெயர் சம்பாதித்துக் கொள்வதற்கு இப்போது சந்தர்ப்பம் வந்து விட்டது. வைத்தியை எரித்து விடுவது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு விரைந்து வந்து தன் கைக்குட்டையால் தியாகியின் முகத்தையும், உடையையும் துடைத்தான் ''ரொம்ப ரொம்ப மன்னிக்க வேணும்'' என்று சொல்லிவிட்டு, அவன், கம்பளத்தில் புரண்டுகொண்டிருந்த தம்ளரை எடுத்துக் கொண்டு, யாரும் தடுக்கு முன், பானையை நோக்கிப் படையெடுத்தான். ''தியாகியின் தாகத்தைத் தணித்துவிட்டுத்தான் மறு ஜோலி!'' என்று வழியில் உட்கார்ந்திருந்தவர்களையெல்லாம் துவம்சம் செய்துகொண்டு ராமதுரை தண்ணீர்ப் பானையை நெருங்கி விட்டான். ஆனால் ஏதோ கணக்குப் பிசகாகக் காலடி எடுத்து வைத்ததில் அவனது வலது கால் இடது காலில் தடுக்கிவிடவே, மணிக்கு நூறு மைல் வேகத்தில் மண் பானை மேலேயே போய் விழுந்தான். தான் விழுந்த வேகத்திலேயே புரண்டுவிட்டதால் ராமதுரை அதிகமாக நனையவில்லை. ஆனால் பானை நாலு பாளமாக உடைந்து விழுந்து தண்ணீர்ப் பெருக்கெடுத்தது. கூட்டம் எழுந்து நின்றது. தண்ணீர் ஜமுக்காளங்களை நனைத்துக் கொண்டு மண்ணுக்குள் பாய்ந்ததே ஒழிய முன்னைவிட அதிகமாய்க் காய்ந்து சுவறிப்போன தியாகியின் வாய்க்கு ஒரு சொட்டுக் கூடக் கிடைக்கவில்லை.

புரண்ட ராமதுரை ஒரே துள்ளலாகத் துள்ளி எழுந்து அசட்டுச் சிரிப்புடன் மண்ணைத் தட்டிக் கொண்டே தியாகியைப்

சந்திரசேகரன் கடந்த ஏழெட்டு மாதங்களாக மாதம் தவறாமல் ஒரு மாத லீவ் கேட்டு மனு எழுதிக் கொடுத்துக் கொண்டு வந்தார். ஒவ்வொரு தடவையும் ஏமாற்றம் தான் கண்ட பலனாக இருந்தது. 'இப்பொழுது லீவ் கொடுக்கச் சாத்தியப்படாது; அடுத்த மாதம் பார்க்கலாம்' என்ற ஒரே பதிலையே அதிகாரி கூறிக் கொண்டிருந்தார். சந்திரசேகரன் பொறுமையை இழந்து விட்டார். சம்பளத்தோடு மூன்று மாத லீவ் அவருக்குச் சேர்ந்திருந்தது. இனி லீவ் எடுக்காமல் விட்டால், சேர்த்து வைத்த லீவை இழக்க வேண்டி வருமே என்ற கவலையும் அதனால் ஆத்திரமும் அதிகமாகி விட்டன. எத்தனை வருஷங்கள் லீவ் எடுக்காமல் வேலை செய்தாலும், சம்பளத்தோடு கூடிய லீவ் மூன்று மாதங்களுக்கு மேல் சேராது. எடுக்காமல் போன லீவ் போனதுதான்.

மாதம் தவறாமல் அவர் வேலை செய்யும் ஆபீசில் யாராவது ஒருவர் நீண்ட லீவ் எடுத்துக் கொண்டிருப்பது ஞாபகத்துக்கு வந்தது. 'நாம்தான் உழைக்கப் பிறந்தோமா? இல்லை, நாம் மட்டும்தான் சம்பளம் வாங்குகிறோம், மற்றவன் கௌரவ சேவை செய்கிறானா? நமக்கு மட்டும் ஏன் இந்த அதிகாரி 'இல்லை' பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறான்? நம் இளிச்சவாய்த்தனத்தைக் கண்டுதான் என்று தம் மனைவி அன்று காலையில் சொன்னது உண்மையாகவே இருக்குமோ?' சந்திரசேகரனுக்கு அவமானமாக இருந்தது. 'இன்று எப்படியும் லீவுக்கு மனுப் போட்டு வெற்றியும் தேடியாக வேண்டும்' என்று விரதம் வைத்துக் கொண்டு ஆபீசுக்கு வந்தார். பிற்பகலில் லீவ் மனுவோடு அதிகாரியிடம் போனார். முகத்தைக் கெஞ்சுகிற பாவனையில் பாதியும், அசைக்க முடியாத பிடிவாத பாவனையில் பாதியுமாக வைத்துக் கொண்டு மனுவை நீட்டினார். வாங்கிப் பார்த்தார் அதிகாரி. சந்திரசேகரனின் முகத்தைப் பார்க்காமலே, ''சாத்தியமில்லை'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் கொடுத்தார்.

சந்திரசேகரனுக்கு முதலில் அதிர்ச்சி ஏற்பட்டது. ஒரு நிமிஷம் மௌனமாக நின்றார். உள்ளம் பற்றி எரிந்தது.

''மிஸ்டர் சந்திரசேகரன்! அடுத்த மாதம் பார்க்கலாம். இப்போது லீவ் கொடுக்க முடியாது'' என்று எரிகிற நெருப்பில் எண்ணெயைக் கொட்டினார் அதிகாரி.

சந்திரசேகரன் கோபத்தை அடக்கிக் கொண்டு, ''ஸார்! எனக்கு மூன்று மாத லீவ் இருக்கிறது ஸார். ஒவ்வொரு மாதமும் இப்படியே சொல்கிறீர்கள்'' என்றார்.

கு. அழகிரிசாமி



''நான் என்ன செய்வது? மூன்று மாத லீவ் இருக்கிறது என்று எனக்கும் தெரியும். அதற்காகக் கேட்ட நேரத்தில் லீவ் கொடுத்து விட முடியுமா ?''

''மற்றவர்களுக்கு மட்டும் கேட்ட நேரத்தில் லீவ் கொடுக்கிறீர்களே, ஸார்!'' என்று ஆத்திரத்தின் ஒரு பகுதியை வெளியிட்டு விட்டார் சந்திரசேகரன்.


அதிகாரி அந்த வார்த்தைகளின் சூட்டையும் வேகத்தையும் புரிந்து கொண்டார்.

''மிஸ்டர் சந்திரசேகரன்! நீங்கள் எப்போது பார்த்தாலும் கடைசி ஆளாக வந்து லீவ் மனு கொடுக்கிறீர்கள். உங்கள் தவற்றுக்கு என் மேல் வருத்தப்பட்டுப் பிரயோசனமில்லே. முன்கூட்டியே மனு எழுதிக் கொடுப்பதற்கென்ன?''

சந்திரசேகரனுக்கு ஒன்றும் புரியவில்லே. முன்கூட்டி என்ருல் எப்பொழுது?

''சந்திரசேகரன்! ஒரே சமயத்தில் ஒரே செக்ஷனில் இரண்டு பேருக்கு லீவ் கொடுக்க முடியாது. செப்டம்பர் 2ம் தேதியிலிருந்து அக்டோபர் முதல் தேதி வரையில் சம்பந்தமூர்த்தி லீவ் எடுத்திருக்கிருர். மூன்று நாட்களுக்கு முன்பே மனு எழுதிக் கொடுத்து அனுமதி வாங்கிக் கொண்டு விட்டார்....''

சந்திர சேகரனுக்கு இடி விழுந்ததுபோல் இருந்தது. 'சம்பந்தமூர்த்தியா? தடி ராஸ்கல்!' என்று மனத்துக்குள் சபித்தார். சம்பந்தமூர்த்தி வருஷம் தவருமல் லீவ் எடுப்பவன். இப்போதும் தமக்குப் போட்டியாக முந்திக்கொண்டு விட்டானே என்று ஆத்திரம்.



''ஸார்! அவர் வருஷா வருஷம் லீவ் எடுக்கிருர். நான் மூன்று மாத லீவை வைத்துக் கொண்டு வந்து கேட்கிறேன்.''

அதிகாரிக்குக் கோபம் வந்து விட்டது.

''சந்திரசேகரன்! மூன்று மாதம் மூன்று மாதம் என்று அதையே சொல்லிக் கொண்டு நிற்கிறீர்களே! நானு வேண்டாம் என்று சொன்னேன் ? கொஞ்சம் முன்னதாக லீவ் கேட்பதற்கென்ன? பேசாமல் தூங்கிக் கொண்டிருந்து விட்டு, இப்பொழுது வந்து உயிரை வாங்கிஞல் நான் என்ன செய்வது?..... இப்போது நீங்கள் என்ன சொன்னுலும் முடியாது. போங்கள்.....''

சந்திரசேகரன் அப்படியே அந்த அதிகாரியை ஓங்கி அறையலாமா, இல்லே, காகிதத்தில் ராஜிநாமா எழுதி நீட்டி விடலாமா என்ற அளவுக்குப் பொறுமையை இழந்து விட்டார். ஒரு நிமிஷம் நின்ருர். ஆத்திரத்தோடு அழுகையும் வரும்போல் இருந்தது. 'சீ! நம் பிழைப்பும் ஒரு பிழைப்பா?' என்று தம்மைத் தாமே வெறுத்தவராக அதிகாரியின் அறையை விட்டு வெளியே வந்தார்.

சந்திரசேகரன் தமது இருப்பிடத்தில் வந்து உட்கார்ந்தார். மூலேயில் குனிந்த தலே நிமிராமல் வேலேயில் ஈடுபட்டிருக்கும் சம்பந்தமூர்த்தியைப் பார்த்தார். 'திருட்டுப் பயல்! இந்தப் பூனேயும் இந்தப் பாலேக் குடிக்குமா என்று ஒன்றுமே தெரியாதவன் போல் உட்கார்ந்திருக்கிருன். இவனுக்கு என்ன கேடு? பெண்டாட்டியா, பிள்ளேயா ? தடிப் பயலுக்கு வருஷம் தவருமல் ஒரு மாத லீவ் என்ன வேண்டிக் கிடக்கிறது ?' என்று கடுகடுத்துக் கொண்டே வேலேயைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் மற்ருெரு செய்தியையும் அவர் கேள்விப்படவே, அவருக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல் இருந்தது. அட்டெண்டர் பையன் சுந்தரமும் ஒரு மாத லீவ் கேட்டு வாங்கியிருப்பதைக் கேள்விப்பட்டார் சந்திரசேகரன். 'கடவுளே! இதெல்லாம் என்ன திருவிளேயாடல்!' என்று பிரலாபித்தார்.

அட்டெண்டர் பையன் லீவு எடுப்பதற்கென்றே அந்த ஆபீசில் வேலேக்குச் சேர்ந்தவர்களில் ஒருவன் என்பது சந்திரசேகரன் கண்ட உண்மை. 'இவனுக்கெல்லாம் இங்கே சலுகை இருக்கிறது. நாம்தான் ஏமாளிப் பட்டத்தைக் கட்டிக் கொண்டு, பெண்டாட்டி பார்த்துச் சிரிக்கும்படி மானம் வெட்கம் இல்லாமல் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிருேம்' என்று நொந்து கொண்டார்.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு அவருக்கு இரண்டு யோசனேகள் ஒன்றன்பின் ஒன்ருக உதயமாயின. 'சட்டப்படி லீவ் இருக்கிறது. சட்டத்தின் மூலம் அதைக் கேட்டு வாங்

ஒரு மாத லீவு வாங்க வேண்டுமென்று துடியாய்த் துடித்தார் சந்திர சேகரன். ஆனால் லீவு வாங்கிய பிறகு, அவர் லீவைக் கண்டு வெறுத்துத் தள்ளினார்; வருந்தினார். இந்த விசித்திரப் பிரகிருதியின் வாழ்க்கையை உணர்ச்சியோடு அழகாகச் சித்திரித்துக் காட்டியுள்ளார் அழகிரிசாமி, இந்தச் சிறப்புச் சிறுகதையிலே.

சிறப்புச் சிறுகதை

கினால் என்ன?' என்று ஒரு துணிச்சல் பிறந்தது. அப்புறம் யோசிக்கும்போது, அது நினைத்துப் பார்க்கவும் முடியாத பயங்கரமாகத் தோன்றியது. 'இன்று சட்டத்தைத் துணை கொள்ளலாம், நாளை அடி சறுக்கும்போது அதிகாரி குழியில் தள்ளிப் புதைத்துவிடுவானே, அப்பொழுது சட்டமா வந்து நம்மைக் காப்பாற்றப் போகிறது? சீச்சீ! முட்டாள்தனம். நமக்கு நாமே குழி வெட்டிக் கொள்வதா?' என்று அந்தத் துணிச்சலைக் கைவிட்டார். அடுத்தபடியாகத் தோன்றிய யோசனை விவேகமானதாகப்பட்டது. அதையே நிறைவேற்ற முடிவு செய்தார். அக்டோபர் மாதம் இரண்டாம் தேதியிலிருந்து நவம்பர் முதல் தேதி வரை ஒரு லீவ் மனு எழுதி, அப்பொழுதே கொண்டு போய் அதிகாரியிடம் கொடுத்தார். அதிகாரியும் 'பார்க்கிறேன்' என்று சொல்லி வாங்கி வைத்துக் கொண்டார். 'இன்னும் பார்க்கிறேன்தானா?' என்று குறைப்பட்டுக் கொண்டாலும் சந்திரசேகரனுக்கு ஓர் ஆறுதல் பிறந்தது.

சாயங்காலம் வீடு திரும்பியதும், ''என்ன லீவ் கிடைத்ததா? காலையில் விரதம் வைத்துக் கொண்டு போனீர்களே?'' என்று கேட்டாள் மனைவி.

''அடுத்த மாதம் நிச்சயம்'' என்று குரலை உயர்த்திச் சொன்னார் சந்திரசேகரன்.

''அடுத்த மாதமா!'' — மனைவி ஏளனமாகச் சிரித்தவாறே அடுப்படிக்குப் போனாள்.

2

சந்திரசேகரன் எதிர்பார்த்ததற்கு மாறாக அடுத்த மாதம் அதிகாரி லீவ் கொடுத்துவிட்டார்.

'தர்மம் வென்றது' என்று அவருக்கு ஒரு மகத்தான கம்பீரமே பிறந்தது. 'இப்போது மட்டும் இவன் இல்லை என்று சொல்லியிருந்தால், பயலைக் கண்ணில் விரலை விட்டு ஆட்டியிருப்பேன். தப்பித்துவிட்டான்' என்று அதிகாரிக்குக் கற்பனையிலேயே கருணை காட்டினார்.

அக்டோபர் முதல் தேதியன்று சம்பளம் ரூபாய் நூற்று எழுபதும் சில்லறையும் வாங்கிக் கொண்டு வெற்றி நடையோடு வீடு திரும்பினார் சந்திரசேகரன். கோட்டையைப் பிடித்துவிட்டு வாகை சூடி வரும் வீரனின் மிடுக்கு. வெற்றி விழாவைக்கொண்டாட, தாராளமாக ஓர் ஐந்து ரூபாயைச் செலவழித்துக் குழந்தைகளுக்கு இனிப்புப் பண்டங்கள் வாங்கிக் கொண்டு வந்தார். இந்த மகிழ்ச்சியில் அன்று இரவு அவர் வெகு நேரம் வரையில் தூங்கவில்லை.

அக்டோபர் இரண்டாம் தேதியன்று காலை வழக்கம் போல் ஆறரை மணிக்குத் தூங்கி முடித்துக் கண் விழித்தாலும், 'இன்றைக்கு என்ன அவசரம்?' என்று ஓர் அரை மணி நேரம் வேண்டுமென்றே பிடிவாதமாகப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தார். ஆனாலும் பதினைந்து நிமிஷங்களுக்கு மேல் அவரால் படுத்திருக்க முடியவில்லை. எழுந்து தம் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் ஐந்து குழந்தைகளையும் பெயர் சொல்லித் தட்டி எழுப்பினார். முன்பெல்லாம் இப்படிப் பெயர் சொல்லி எழுப்புவது என்ற பேச்சே கிடையாது. 'கழுதையே', 'நாயே', 'குரங்கே' என்று ஏதாவது ஒரு மிருகத்தின் பெயரைச் சொல்லியே ஓங்கி அறைந்து எழுப்புவார். இன்று தம்மை முற்றிலும் மாற்றிக் கொண்டு, 'கண்ணே' 'ராஜா' என்று செல்லமாகக் கூப்பிட்டு எழுப்பினார்.

பத்து வயதிலிருந்து இரண்டு வயதுவரை இருந்த ஐந்து குழந்தைகளும் அவரைப் பார்க்கும்போது, அவர் அசாதாரணமாகப் புன்னகை செய்து கொண்டிருந்தார். 'அப்பாவுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா?' என்று குழந்தைகள் நினைத்திருந்தாலும் தவறில்லை. ஆனால் அப்படி நினைக்கவில்லை. அவருடைய திடீர் மாறுதலைக் கண்டு ஆச்சரியத்தோடு திகைத்துப் போய் நின்றார்கள். இரண்டு வயதுக் குழந்தை ராஜியை எடுத்து அணைத்துக் கொண்டார் சந்திரசேகரன்.

''என்ன? இன்றைக்குச் சினிமாவுக்குப் போகலாமா?'' என்று ஏக முழக்கத்துடன் ஆரம்பித்தார் சந்திரசேகரன்.



குழந்தைகள் ஒரு பதிலும் சொல்லவில்லை. அவர் இப்படிக் கொஞ்சிப் பேசுவது போல் பாவனை செய்துவிட்டு இறுதியில், 'சினிமா வேறு கேடா; எட்டு மணி வரை எருமை மாதிரி தூங்கிக் கிடந்துவிட்டு ?' என்று ஓர் அறை கொடுத்து விரட்டுவார் என்றே எதிர்பார்த்தான், அவருடைய குணத்தை நன்கு அறிந்திருந்த பத்து வயதுப் பையன் குமார். மூன்றாவது குழந்தை — ஏழு வயது சாவித்திரி — மட்டும் வாய் திறந்தாள்.

''சினிமா வேண்டாம்; சர்க்கஸ்தான்'' என்றாள்.

''சர்க்கஸா? நீ என்ன சொல்லறே கமலா ?'' என்று அவளுடைய அக்காளைக் கேட்டார்.

''சினிமா !''

''நீ ?'' என்று ஆறு வயதுப் பையன் ரவியைக் கேட்டார்.

''சினிமா.''

''சினிமாதானா? சரி, அப்படி என்றால் மெஜாரிட்டி வோட்டு சினிமாவுக்குத்தான். அதனால் இன்று சினிமாவுக்கே போவோம். நாளை சர்க்கஸ். சரிதானே சாவித்திரி ?''

பிற்பகல் இரண்டு மணிக்கு சினிமாவுக்குப் போனார்கள். படம் பார்த்தார்கள். ஒரு மாத லீவின் ஆரம்ப விழாக் கொண்டாட்டத்தை ஒரு சினிமாவுடன் நிறுத்திவிடச் சந்திரசேகரனுக்கு மனமில்லை. 'கடற்கரைக்குப் போவோம்' என்று அறிவிப்புக் கொடுத்து விட்டு எல்லோரையும் முதலில் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். சிற்றுண்டி சாப்பிட்டு முடிந்ததும் கடற்கரை. அங்கே குழந்தைகளுக்குப் பலூன்களும், பிளாஸ்டிக் விளையாட்டுச் சாமான்களும் வாங்கிக் கொடுத்தார். திரும்பி வரும்போது, இரண்டு வயதுக் குழந்தை ராஜிக்கு ரூபாய் நான்கு கொடுத்து ஒரு கவுன் வாங்கினார். அப்புறம் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. ''வாருங்கள் ஹோட்டலிலேயே சாப்பிடலாம்'' என்றார். மனைவிக்குத் தூக்கிவாரிப் போட்டது. இப்படி ஒரே நாளில் பணத்தைக் கரைத்து விட்டால் என்ன செய்வது என்ற பயத்தினால், ''என்ன இது? இப்படிப் பணத்தை இறைத்தால் என்ன ஆவது? இன்னும் ஒரு மாதம் தள்ள வேண்டும் என்பதை மறந்து விட்டீர்களா? நீங்கள் லீவுதான் எடுத்திருக்கிறீர்களே தவிர, புதையல் எடுக்கவில்லை'' என்று எச்சரித்தாள் மனைவி.

''போடி போ! உனக்கு எப்போதுமே இந்தப் பஞ்சப் பாட்டுத்தான்'' என்று எகத்தாளமாகச் சொன்னார் சந்திரசேகரன். குழந்தைகள் ஏகமனதாக அப்பா கட்சியையே ஆதரித்தன. அவர் முகத்தில் அபாரமான மந்தகாசம். இன்னும் கொஞ்சம் நெஞ்சை நிமிர்த்திக் கைகளை வீசிக்கொண்டு ராஜ நடையோடு எல்லோரையும் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார்.

மனைவியின் எச்சரிக்கையைத் தூக்கி எறிந்து பேசினாலும், சிறிது நேரத்தில் அவர் மனக் கணக்குப் போட ஆரம்பித்தார். கூட்டல் கழித்தல்கள் அதிகமாகவே யிருந்தன. சாப்பிட்டு முடியும் வரையில்கூடக் கணக்குகளைப் போட்டு முடிக்க முடியவில்லை.

சாப்பிட்டு முடிந்தது. அவர் முகத்தில் புன்னகை குறையத் தொடங்கி விட்டது. வீடு வந்து, கணக்குப் பார்க்கும்போது பதினைந்து ரூபாய்க்கு மேல் செலவாகி யிருந்தது. மனைவி கணக்கு கேட்டபோது ''பத்துத்தான் செலவு'' என்றார் சந்திரசேகரன். ''பத்தா?'' என்று அவள் வாயில் அடித்துக் கொண்டாள். முகத்தில் பேய் அறைந்துவிட்டது போல் ஒரு பீதி. ''சரி சரி போ. என்றாவது ஒரு நாள். தினமுமா செலவழிக்கப் போகிறோம்?'' என்று அவளைச் சமாதானப்படுத்தும் வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே தெரு வாசலுக்கு வந்து விட்டார். மேற்கொண்டு அங்கே நின்றால் பெரிய சண்டை மூண்டு விடும் என்று அவருக்கே தெரியும். இரவு வேளையில் எல்லோரும் அவரவர் பகுதிகளில் இருக்கும்போது, சண்டை போட்டுக்கொண்டு நிற்க விரும்பாமல் நழுவிய சந்திரசேகரன், 'பதினைந்து ரூபாய் அதிகம்தான். ஹோட்டலில் சாப்பிட்டிருக்க வேண்டாம். ஐந்து ரூபாய் மிஞ்சியிருக்கும்' என்று பரிதாபத்தோடு தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார். அன்று பகல் முழுவதும் அவர் முகத்திலும் அகத்திலும் நின்று நிலவிய புன்னகை அப்போது அடியோடு மறைந்து விட்டது.

'மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள்' என்று சொல்வார்கள். இரண்டுமே அவ்வளவு சீக்கிரத்தில் சலித்துப் போய்விடுமாம். சந்திரசேகரனுக்கோ பத்தே நாட்களில் லீவ் சலித்துப் போய்விட்டது. கையில் பத்து ரூபாய், ஐந்து ரூபாய் நோட்டுகள் கரைந்து விட்டன. ஒரு ரூபாய் நோட்டுகளும் ஒவ்வொன்றாகச் சிறகு முளைத்துப் பறந்து கொண்டிருந்தன. இன்னும் ஒரு வாரமோ பத்து நாட்களோ கழித்தால் அப்புறம் ரூபாய் நோட்டைப் பார்க்க மேற்கொண்டு பத்து நாட்கள் ஆகும். மளிகைக் கடைக்காரன் நூற்றறுபது ரூபாய் பாக்கியோடு காத்திருக்கும்போது, விசுக்கென்று ஐம்பத்தைந்து ரூபாயைக் கொண்டு போய்க் கொடுத்தார் சந்திரசேகரன். கடைக்காரன் கடுகடுப்போடு 'இந்த மாதம் பாக்கியையெல்லாம் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு இந்தச் சுண்டைக்காய்க் காசைக் கொண்டு வந்து நீட்டுகிறீர்களே, உங்களுக்கு நன்றாக இருக்கிறதா?' என்று சொல்லிவிட்டு அந்த ஐம்பத்தைந்தையும் வாங்கி வரவு வைத்தான். ''இனி மீதிப் பாக்கியைக் கொடுத்துவிட்டுச் சரக்கு வாங்குங்கள்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். சந்திரசேகரனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கொஞ்ச நேரம் நின்று பார்த்தார். ''நின்று பிரயோசனமில்லை. அவ்வளவுதான்'' என்று கடைக்காரன் விரட்டினான். சரக்குகள் வாங்கிப் போட்டுக் கொண்டு வர அமர்த்திய ரிக்ஷாவைக் காசு கொடுத்து அனுப்பிவிட்டு, கொண்டுபோன காலிப் பைகளோடு வீடு திரும்பினார். அது நடந்து ஒரு வாரமாகி விட்டது. நடுவில் இரண்டு முறைகள் போய்க் கடைக்காரனைக் கெஞ்சிப் பார்த்தார். அவன் அடித்து விரட்

டாமல் இருந்ததே பெரிய புண்ணியமாக இருந்தது. அப்புறம் வேறு கடைகளில் ரொக்கத்துக்கு அன்றாடம் மளிகைச் சாமான் களை வாங்கி நாட்களை ஓட்டினர்.

கைமாற்றுக் கடன்காரர்கள் தினம் தவரு மல் படையெடுக்க ஆரம்பித்து விட்டார்கள். மனைவி அக்கம் பக்கத்துப் பெண்களிடம் கடன் வாங்கிய வகையில் கொஞ்சம் பாக்கி யிருந்தது. அவர்கள் கூட்டமும் சேர்ந்து கொண்டது. 'சம்பளம் வாங்கியதும் இந்த இரண்டு ரூபாய்க் காசைக் கொடுக்காவிட் டால் இனி எப்போது கொடுக்கப் போகி றீர்கள்? நோட்டா, பத்திரமா, ஏப்பம் விட்டுவிடலாம் என்ற துணிச்சல்தானே?' என்று ஓர் அம்மாள் வறுத்துக் கொட்டினாள். அதை அறைக்குள் குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார் சந்திரசேகரன்.

குடும்பத் தேர் இப்படியே ஒரு பத்து நாட்கள் ஓடியது. அப்புறம் அச்சு இல்லாமல் தேர் ஓட்டவேண்டிய கட்டம் வந்துவிட்டது. இந்தக் கட்டத்தில், கையில் சில்லறைக் காசு களைத் தவிர நோட்டு என்ற பேச்சே கிடை யாது. சரக்குக் கொடுக்க மறுத்த மளிகைக் கடைக்காரன் சந்திரசேகரன் வேறு கடை களில் ரொக்கம் கொடுத்து வாங்குவதைக் கண்டுபிடித்து, ஒரே தேதியில் பாக்கிப் பணத்தை கொடுத்துவிட வேண்டும் என்று கிட்டி போட்டான். கொடுக்கத் தவறினல் ஆபீசுக்குத் தெரிவித்துச் சம்பளத்திலிருந்து வசூல் பண்ணப் போவதாக எச்சரித்தான்.

காய்கறி வண்டிக்காரன் அவர் தினமும் வீட்டிலேயே காலையிலும் மாலையிலும் உட் கார்ந்திருப்பதைப் பார்த்து அவருக்கு வேலை போய்விட்டது என்றே நினைத்து விட்டான். லீவ் என்று சொல்லியும் அவன் நம்பவில்லை. பணம் கொடுத்து விட்டுச் சொல்லியிருந்தால் நம்பியிருப்பான். இப்பொழுது அவனல் எப்படி நம்ப முடியும்? தனக்கு இனி பணம் வருமா? தனக்குத் தெரியாமலே வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு எங்காவது போய்விடுவார் களா என்று பலவிதமாக யோசித்துப் பார்த் தான். இந்தப் பயத்தினல் அவன் பெருங் கூப்பாடு போட்டுப் பாக்கியைக் கேட்டதும், வாசலில் ஊர்க் கூட்டம் கூடியதும், சிந்தா திரிப்பேட்டையின் வரலாற்றிலேயே என்றும் காணாத ஒரு காட்சியாக இருந்தது.

அவமானத்தால் குன்றிப் போய் முழங் காலைக் கட்டிக் கொண்டு சந்திரசேகரன் மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது மனைவி கற்பகம் வந்து, "இன்று பக்கத்து வீட்டுப் பெண்கள் ஒரு புதுப் படம் பார்க்கப் போகிறார்கள். நானும் போகட்டுமா?" என்று கேட்டாளோ இல்லையோ, சந்திர சேகரனுக்கு ருத்திராவேசம் வந்து விட்டது. துள்ளி எழுந்தார்.

"உனக்கு மானம், வெட்கம் இருக்கிறதா? கடன்காரர்கள் பேசாத பேச்செல்லாம் பேசிவிட்டுப் போகிறார்கள். நீ சினிமாவுக்கு வேறே போகணுமா? மானம் கெட்டவளே!" என்று பாய்ந்தார்.

"மானம் இன்றைக்கா கெட்டிருக்கிறது அது கெட்டு எவ்வளவோ காலமாயுடுச்சு' என்று சொல்லிவிட்டுக் கற்பகம் சிரித்தாள்.

"இதில் இளிப்பு வேறு? சீ! நீ ஒரு பெண்ணு?"

"என்ன ஒரேயடியாய் மேலே மேலே போகி றீர்கள்?" என்று சொல்லிக் கொண்டு களத் தில் குதித்தாள் கற்பகம்.

"ஏண்டி, அதட்டிப் பார்க்கிறயா?"

"அப்புறம் என்ன? கடன்காரன், கடன் காரன் என்று புலம்பியவண்ணமாக இருக் கிறீர்களே, கடன்காரன் இப்போதுதான் நம் வீட்டுக்குப் புதிதாக வருகிருன? வரு ஷம் முந்நூற்றறுபத்தைந்து நாட்களும் வந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் துரை மாதிரி சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் போய்விடு கிறீர்கள். நான்தான் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு பதிலைச் சொல்லி அனுப்ப வேண்டி யிருக்கிறது. என்னவோ, இப்பொழுதுதான் கடன்காரர்கள் வருகிற மாதிரி முழங்கு கிறீர்களே?"

சந்திரசேகரனுக்கு அப்பொழுதுதான் நெஞ்சில் உண்மை தைத்தது. கடன்காரர் களைப் பார்த்து அவள் அவமானம் அடையா மல் இருக்கும் காரணமும் அப்போழுதுதான் புலப்பட்டது. வருஷம் முழுவதும் கடன் காரர்களுக்குப் பதில் சொல்லிப் பதில் சொல்லி அவளுக்கு உள்ளம் மரத்துவிட்டது. அவருக்கோ அது புது அனுபவம். அவ மானம் பொறுக்க முடியவில்லை.

'இது நரக வேதனை' என்று நினைத்துக் கொண்டார். இருந்தாலும் மனைவியின் பேச்சுக்குத் தாழ்ந்து போக மனமில்லை. ஒன்றும் சொல்லாமல் நின்றார்.

"என்ன, போகட்டுமா?" என்று பழைய பல்லவியைக் கற்பகம் ஆரம்பித்தாள்.

"தொலை. எவன் எக்கேடு கெட்டால் உனக்கு என்ன?" என்று சீறி விழுந்து தம் மைத் தாமே சமாதானப்படுத்திக் கொள்ள முனைந்தார்.

'அனுமதி கிடைத்து விட்டது' என்ற மகிழ்ச்சியில் பக்கத்து வீட்டு அம்மாளிடம் சில்லறைக் கடன்பட்டுப் பகல் காட்சி சினிமா வுக்குப் புறப்பட்டாள், கற்பகம்—இரண்டு வயது ராஜியை இடுக்கிக்கொண்டு.

மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து பிள்ளை களும் வீடு திரும்பினர்கள். நான்கு பிள்ளை களில் ஒன்றுகூட அப்பாவிடம் நெருங்க வில்லை. லீவு தொடங்கிய ஒரு வாரத்தில் அப்பாவோடு குலாவியதுதான். அப்புறம் அவர் எடுத்ததற்கெல்லாம் சீறி விழுவதும், கைக்கு எட்டிய பிள்ளையை அடிப்பதுமாக இருக்கவே, பிள்ளைகள் ஒதுங்கி விட்டன. அவருக்கும் அது பிடித்திருந்தது.

பிள்ளைகள் அம்மாவைத் தேடினர்கள். காணவில்லை. ஒன்றும் சொல்லாமல் வெளியே விளையாடப் போய்விட்டார்கள். விளையாட்டு முடிந்தும்கூட வீடு திரும்ப அவர்களுக்கு விருப்பமில்லை. அப்பா இருக்கும் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கவே மனமில்லாமல், வாசற்படியிலேயே வரிசையாக உட்கார்ந்து அம்மாவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அப்பா எப்போ ஆபீசுக்குப் போவார்?'' என்று கேட்டாள் சாவித்திரி.

''இன்னும் பத்து நாட்கள் இருக்கின்றன'' என்றான் மூத்த பையன்.

''பத்து நாட்களா?'' என்று மற்ற மூன்று பிள்ளைகளும் பயப் பிராந்தியோடு சொன்னார்கள். 'கடவுளே! இனி பத்து நாட்களை எப்படிக் கழிப்பது?' என்று சந்திரசேகரன் கவலைப்பட்டதைவிடப் பத்து மடங்கு அதிகமாக அவர்கள் கவலைப்பட்டார்கள். மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து சாப்பிட வரும்போதும், மாலையில் வீடு திரும்பும் போதும் எப்போதுமே அப்பா வீட்டுக்குள் உட்கார்ந்திருப்பது அவர்களுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. வீட்டை விட்டு எப்போது தொலைவார் என்று கடவுளைக் கும்பிடத் தொடங்கி விட்டார்கள்.

மறுநாள், ''இன்னும் ஒன்பது நாட்கள் தான். அப்புறம் ஆபீசுக்குப் போய்விடுவார்'' என்று சாவித்திரி கும்மாளமாகத் தன் தங்கையிடம் சொல்லிக் கொண்டிருந்தது சந்திரசேகரன் காதில் விழுந்தது.

''ஆபீசுக்குப் போகாமல் ஏன் வீட்டிலேயே இருக்கிறார்? சீ!'' என்று வெறுப்போடு மூத்த மகன் சொன்னதும் அவருக்கு உள்ளே கேட்டது.

'இனியும் நான் ஏன் உயிர் வாழ வேண்டும்? பெற்ற பிள்ளைகளே நான் லீவ் எடுத்துக் கொண்டு வீட்டில் இருப்பதை விரும்பவில்லை. இதற்காகவா லீவ் எடுத்தேன்?' என்று நொந்து, விரக்தி கொண்டு, நடைப் பிணமாகிவிட்டார் சந்திரசேகரன்.

'நான் வீட்டில் இருப்பது எனக்கும் பிடிக்கவில்லை, என் மனைவிக்கும் பிடிக்கவில்லை; பிள்ளைகளுக்கும் பிடிக்கவில்லை.'

என்ன செய்வது? மனைவி மக்களை விட்டுத் தனியே இருக்க அந்த வீட்டில் வேறு இடம் கிடையாது. தெருவிலே எவ்வளவு நேரம் சுற்ற முடியும்? கடற்கரைக்கோ வேறு எங்குமோ போக பஸ் செலவுக்குக் காசு வேண்டும். ஒரு மணி நேரமாவது ஓரிடத்தில் உட்கார்ந்திருக்க அவர் தவியாகத் தவித்தார். கடைசியில் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. 'லீவை இதோடு முடித்துக் கொண்டு ஆபீசுக்குப் போனால் என்ன? வேண்டாம் என்றா சொல்வார்கள்? அதிகாரிக்குச் சந்தோஷமாகத்தான் இருக்கும். நாளையே போய் விடுகிறேன். ஏழெட்டு மணி நேரமாவது நிம்மதியாக இருக்கலாம். இதுதான் சரியான யோசனை' என்று முடிவு செய்தார். அடுத்த நாள் விடிந்ததும், ''இன்று ஆபீசுக்குப் போக வேண்டும். மீதி நாள் லீவை ரத்துச் செய்து ஆர்டர் வந்திருக்கிறது'' என்று மனைவியிடம் ஒரு பொய்யைச் சொன்னார். அதைக் கேட்ட சாவித்திரி ஓடோடி வந்து, குழாயடியில் நின்ற அண்ணனையும், தங்கையையும் பார்த்து, ''அப்பா இன்று ஆபீசுக்குப் போகிறார். இப்போது அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தார்'' என்று ஆனந்தக் கூத்தாடினாள். மற்றக் குழந்தைகளுக்கும் அளவிட முடியாத மகிழ்ச்சி. ஜன்மச் சனி நீங்கியது போன்ற ஆசுவாசம். எல்லோரும் சாவித்திரி சொல்வது நிஜம்தானா என்று அறிய அப்பாவிடம் ஓடி வந்தார்கள்.

''ஆபீசுக்கா போறே?'' என்று ஆவலோடு கேட்டான் மகன்.

''சுடுகாட்டுக்குப் போக முடியவில்லை. அதனாலே ஆபீசுக்குப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் குளிக்கச் சென்றார் சந்திரசேகரன்.

குழந்தைகள் மார்கழி மாதத்தில் என்ன செய்ய வேண்டும்?

★



★

அருமைக் குழந்தைகளே!

1. மார்கழி மாதம் பிறக்குமுன் திருப்பாவை, திருவெம்பாவை பாசுரங்களை மனப்பாடம் செய்யுங்கள். மார்கழி முப்பது நாட்களும் காலையில் நீராடி ஆண்டவனை நினைத்துப் பாடல்களைச் சொல்லிக் கொண்டு ஊர்வலம் வாருங்கள்.

2. திருவெம்பாவை இருபது பாடல்களையோ திருப்பாவை முப்பது பாடல்களையோ தெளிவாகவும் அழகாகவும் பாடப் பழகிக் கொள்ளுங்கள்.

3. குழந்தைகளே! இப்பொழுதே மனப்பாடம் செய்ய ஆரம்பித்தால் தான் மார்கழி மாதம் ஆரம்பத்துக்குள் 'நெட்டுரு' ஆகும்.

4. மார்கழிக்குள் மனப்பாடம் செய்யுங்கள்; மார்கழி நீராடுங்கள்; ஊர்வலம் வாருங்கள்; தூங்கும் குழந்தைகளையும், பெரியவர்களையும் பாட்டுப் பாடி எழுப்புங்கள்; ஆயுள் பூர்ணமாக ஆனந்தமாக வாழுங்கள்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

குழந்தைகள் அம்மாவிடம் கேட்டு, சாவித்திரியின் கூற்றை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள். ''நல்ல வேளை'' என்றான் மகன்.

''உங்களுக்கும் உங்கள் அப்பாவுக்கும் நல்ல வேளைதான். எனக்கு நல்ல வேளை எப் போது வருமோ? மண்டையைப் போட்டால் தான் எனக்கு நல்ல வேளை'' என்று கற்பகம் முணுமுணுத்தாள்.

சந்திரசேகரன் குளித்துவிட்டு வந்து சாப் பிட்டார். 'முட்டாள்தனம். எனக்கு எதற்கு லீவ்? குற்றாலம், கொடைக்கானல் என்று போகிறவனுக்கு லீவ் வேண்டும். கடன் காரர்களுக்குப் பதில் சொல்லவும், பெண் டாட்டியோடு சண்டை போடவும், பிள்ளை களை அடித்து உதைக்கவுமா ஒருவன் லீவ் எடுக்க வேண்டும்? அந்த முட்டாள்தனத் தைத்தானே நான் செய்திருக்கிறேன். ஆபீ சில் மின்சார விசிறியின் காற்று; கட்ட டத்தைச் சுற்றியும் பச்சை மரங்கள்; கூட வேலை செய்பவர்களுடன் தமாஷ் பேச்சு.... அது சுவர்க்கம். அதை விட்டு விட்டு இந்தக் குகைக்குள் வந்து புழுங்கிக் கொண்டும் கடன் காரர்களுக்கு முன்னால் முக்காடு போட்டுக் கொண்டும் இருக்கிறேனே, என் முட்டாள் தனத்தை யாரிடம் போய்ச் சொல்வது?'

சாப்பிட்டுவிட்டு, தயிர் சாத டப்பாவை யும் தூக்கிப் பையில் போட்டுக் கொண்டு ஆபீசுக்குக் கிளம்பினார் சந்திரசேகரன். சிறையிலிருந்து விடுதலை பெற்று வெளிவரும் ஜன்மக் கைதி மாதிரி ஆபீசைப் பார்த்து நடக்கலானார். பெரிய பாரத்தை இறக்கி வைத்த மாதிரி இருந்தது. பஸ் ஏறி, ஆபீஸ் அருகே போய் இறங்கினார். ஆபீஸ் கட்ட டத்தை ஏறிட்டுப் பார்த்தார். கொஞ்சம் திகைத்து நின்றார். 'உள்ளே போய் என்ன செய்வது? லீவ் இதோடு போதும் என்று சொன்னால் மற்றவர்கள் என்ன நினைப் பார்கள்?' என்று யோசிக்கத் தொடங்கியதும் கால்கள் நகரவில்லை. யோசனை நீண்டு கொண்டே போனது.

லீவ் வேண்டும் என்று ஏழு மாத காலம் தவம் கிடந்து விட்டு, இப்போது லீவ் வேண்டாம் என்று வலியச் சொல்லப் போவதை நினைக்கும்போது தமக்குப் பைத் தியம் பிடித்துவிட்டதோ என்றுகூட அவ ருக்கு ஒரு கணம் சந்தேகமாக இருந்தது. இனி திரும்பவும் லீவ் எடுக்க எத்தனை மாதங்கள் அல்லது வருஷங்கள் காத்திருக்க வேண்டுமோ? என்று யோசித்தார். சென்ற வருஷம் வைகுண்ட ஏகாதசிக்கு லீவ் கிடை யாது என்று தெரிந்ததும், ஆபீசிலுள்ள அத் தனை பேரையும் திரட்டிக் கொண்டு லீவ் விட்டே ஆக வேண்டும் என்று தாம் போராடியதை நினைத்துப் பார்த்தார். 'ஒரு நாள் லீவுக்குக் கடைசி எல்லைவரையில் போய்ப் போராடிய அதே சந்திரசேகரனா இப்போது லீவ் வேண்டாம் என்று சொல் லப் போவது? மானக் கேடு! லீவு எடுக்காமல் இந்த ஆபீசுக்கு உழைத்தால் நாளைக்கு நமக்கு என்ன வைரத் தோடாவா பண்ணிப் போடப் போகிறான்? உழைத்து ஓடானது தான் மிச்சம். என் இளிச்சவாய்த் தனத்தைப் பார்த்து இரட்டிப்பு வேலையை என் தலையில் கட்டத்தான் பார்ப்பார்கள்... ஆம், உயிரே போனாலும் சரி, லீவை மட்டும் இழக்கக் கூடாது. இது நிச்சயம்' என்று மனைசத் திடப்படுத்திக் கொண்டு அங்கிருந்து திரும்பி விட்டார்.

சிந்தாதிரிப்பேட்டை வழியாகப் போகும் பஸ் வந்து நின்றது. ஏறலாமா கூடாதா என்று முடிவு செய்வதற்கு முன், பஸ் போய் விட்டது. 'போகட்டும், என்ன அவசரம்?' என்று அங்கேயே நின்று கொண்டிருந்தார். அந்த ஆபீசில் வேலைக்கு வருகிறவர்கள் சற்றுத் தூரத்தில் பஸ்ஸில் இறங்கி நடப்பதைப் பார்த்தார். 'நான் வேலைக்குப் போனால், இந்தப் பயல்களுக்கெல்லாம் கொண்டாட்ட மாகத்தான் இருக்கும். நாளையே ஒரு பயல் ஒரு மாத லீவுக்கு எழுதிப் போடுவான். அவ னுடைய வேலையையும் நான் தான் சேர்த்துச் செய்ய வேண்டும். நான் என்ன பொதி சுமக்கும் கழுதையா?'

எங்கெங்கோ போகும் பஸ்கள் வந்து நின் றன. புறப்பட்டன; சிந்தாதிரிப்பேட்டைக் குப் போகும் மற்றொரு பஸ் வந்து நின்றது. அதில் ஏற நினைத்தவர், கடைசியில் ஏறாமலே இருந்து விட்டார். அதுவும் போய்விட்டது.

அப்புறம் திருவல்லிக்கேணி பஸ் வந்தது. 'எங்காவது போவோம். உடனே வீடு திரும்பு வது நாகரிகமாக இராது' என்று நினைத்துக் கொண்டு அந்த பஸ்ஸில் ஏறினார். நேரே திருவல்லிக்கேணிக் கடற்கரையோரம் போய் இறங்கினார். அப்புறம்?

பகல் பதினொன்றே கால் மணி. அந்த நேரத்தில் கடற்கரையை நோக்கி நடையைக் கட்டினார் சந்திரசேகரன். அப்பொழுது அவர் மனம் படாத பாடு பட்டது. 'ஆபீசுக்கும் போக மனமில்லை; வீடு திரும்பவும் மன மில்லை. ஒரு குடும்பஸ்தனுக்கு இப்படி ஒரு நிலையா?....'

சந்திரசேகரன் கடற்கரையில் கிடந்த ஒரு பெஞ்சில் ஒரு வேப்ப மரத்தின் நிழல் விழும் பகுதியில் போய் உட்கார்ந்தார். பக் கத்தில் யாருமே இல்லை. கடற்கரைச் சாலை யில் அதிவேகமாக ஓடும் பஸ்களையும் கார் களையும் பார்த்துக் கொண்டேயிருந்தார். மறுபக்கம் திரும்பிக் கடலைப் பார்த்தார். தூரத்தில் ஒரு கப்பல் தெரிந்தது. சுற்று முற்றும் பார்க்க மேற்கொண்டு எதுவும் இல்லை. அதனால் புற உலகைப் பார்ப்பதை நிறுத்தித் தம்மைத் தாமே பார்க்கத் தொடங்கினார்.

ஒரு நிமிஷம்... இரண்டு நிமிஷம்...மூன்று நிமிஷம்.

சந்திரசேகரன் திடீரென்று நிமிர்ந்து சுற்றி லும் பார்த்தார். யாரும் பக்கத்தில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டார். தலை யைக் குனிந்தார். இரண்டு கைகளாலும் கண்களை மூடிக் கொண்டு ஒரு பெருமூச்சு விட்டார்.

'எனக்கு எதற்கு லீவ்? எனக்கு ஏன் அந்த ஆசை?' — கண்ணீரைத் தாரை தாரையாக வடித்துக் கொண்டு விக்கி விக்கி அழ ஆரம் பித்து விட்டார் சந்திரசேகரன்.

விடிந்தால் தீபாவளி. இன்னும் அந்தி சாயவில்லை. தெருவில் படபடவென்ப் பட்டாசு வெடிச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அவுட் வாணங்கள் ஆகாயத்தின் மீது மங்கிய ஒளிக் கோடுகளாகத் தோன்றி மறைந்தன. வாடைக் காற்று சில்லென்று அடித்துக் கொண்டிருந்தது. குழந்தைகளின் கலகலப்பான சிரிப்பும், அக்கம் பக்கத்து வீடுகளில் காலை கங்கா ஸ்நானத்துக்காகக் கங்காளங்களைப் புரட்டித் தேய்க்கும் ஓசையும் கலந்து கேட்டவாறிருந்தன.

நாளெல்லாம் அலைந்து வந்த அலுப்பைக் கூடத் தீர்த்துக் கொள்ளாமல் ருக்மிணி மெதுவாக மதுசூதனின் படுக்கையின் அருகில் வந்து குனிந்து பார்த்தாள். படுத்திருந்த மதுசூதனின் முகம் சுவர்ப் பக்கமாகத் திரும்பி யிருந்தது.



''பசிக்கிறதா? கஞ்சி காய்ச்சித் தரட்டுமா? முதலில் டானிக்சாப்பிடுகிறீர்களா?'' என்று மெதுவாகக் கேட்டாள் ருக்மிணி.

''அடாடா, உன்னுடைய புறாக்களை விட்டு விட்டு என்னிடம் வந்து விட்டாயே? அவைகள் என்ன நினைக்கும்?'' என்றான் மது குத்தலாகத் திரும்பாமலே.

''ஜோடிப் புறாவில் ஒன்றுதான் இறந்து விட்டதே. மிகுந்திருக்கும் ஒன்றும் எதையுமே சாப்பிடுவதில்லை'' என்றாள் ருக்மிணி தாபத்தோடு.

''பீடை போயிற்று.''

''என்னங்க இது? கனிவுள்ள நெஞ்சம் படைத்த நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்?'' என்று தீனமாகக் கேட்டாள் ருக்மிணி. சற்று நேரம் அங்கேயே நின்றாள். மது பேச்சுக் கொடுக்கவில்லை. எவ்வளவு நேரம்தான் நிற்பாள்? கெஞ்சும் கால்களை எப்படியோ எடுத்து வைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். பிறகு மாற்றுச் சேலை உடுத்திக் கொண்டு சமையலறை ஜன்னலின் மீது உட்கார்ந்து விட்டாள். வயிற்றில் பசி தீயாகத் தகித்துக் கொண்டிருந்தபோதிலும், எதையும் சாப்பிட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. மதுவின் கோபம் தணியும்வரை அப்படியே உட்கார்ந்திருக்க நினைத்தாள் ருக்மிணி. அவளுக்கும் உள்ளூறக் கோபம்தான்.

அந்தப் பெண் எதற்காகவோ மறுபடியும் ருக்மிணியின் நினைவிலே தோன்றினாள். எவ்வளவு அழகான சாட்டின் பாவாடை அணிந்திருந்தாள் அவள்! டெரிலின் புடவை வழியாக ரோஜா இதழ்களைப் போன்று மிருதுவாகவும், சிவப்பாகவும் தெரிந்தது, அவள் அணிந்திருந்த உள் பாவாடை.

அன்று காலை அவள் விற்பனைக்காகப் புறப்பட்டவள் கேவல்ராம் மாளிகைக்குள்ளிருந்த கதவைத் தட்டினாள். அப்பொழுது உள்ளிருந்து இலேசான சிரிப்பொலி கதவுக்கு இப்பாலும் கேட்டது.

சிரிப்பை அடக்கிக் கொள்பவள் போல் உள்ளிருந்து ''யாரது? வாருங்கள்'' என்றாள் ஒரு மங்கை. உள்ளே யாரோ ஆண்பிள்ளை மெதுவாகச் சீட்டியடித்துப் பாடும் சத்தம் கேட்டது. கலைந்த தலை மயிரோடிருந்தாலும் எவ்வளவு அழகாக இருந்தாள் அந்தப் பெண்! எவ்வளவு ஆதரவோடு, அன்போடு, அவளுக்குத் தலையணையைச் சரிசெய்து வைத்தான் அந்த ஆண்மகன்!

ஏன் இந்த எண்ணங்கள்? ஒரு வருடத்துக்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி! எதற்கு அதெல்லாம் இப்போது? வேண்டாமென்றாலும் அந்த ஞாபகங்கள் வரத்தானே செய்கின்றன? அதுவும் தீபாவளியன்றுதானே நடந்தது.

அப்போது தாத்தா இறந்து நான்கு மாதங்களே ஆகியிருந்தன. பாட்டனாரோடு வீடு வாசல் எல்லாமே போய் விட்டன. காமாட்சி அத்தை ஒருத்திதான் அவளுக்குக் கதி. அந்த அத்தைக்கு வாய்த்த கணவரோ மகா முசுடு. ஒரே வாரத்தில் அவரும் அத்தையும் அமெரிக்கா போய்விடப் போகிறார்கள். அதனால் தனக்குத் தெரிந்தவர்கள் வீட்டில் அவளை விட்டு வைப்பதாகவும் பிறகு உத்தியோகம் பார்த்துக் கொள்ள வேண்டும்

என்றும் யோசனை கூறினுள் அத்தை. ஏற் கெனவே ருக்மிணிக்கு அந்த வீட்டில் இருப் பது நரக வேதனையாகத்தான் இருந்தது.

ஒரு நாள் எப்படியோ துணிவை வர வழைத்துக் கொண்டு அமைதியை நாடி வீட்டை விட்டுப் புறப்பட்டாள். தாத்தா வோடு கடற்கரைக்குச் செல்லும் பழக் கத்தில் அவள் கால்கள் அவளை அறியாம லேயே கடற்கரையை நோக்கி நடந்தன.

அப்பொழுது கடற் கரையிலே இருள் பரவத் தொடங்கியது. காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது. பொங்கும் கட லுக்கு ஒரே சீற்றம். காற்றைத் தடுப்பதற் காகத் தூண் தூணுக நீல நிற அலைகளை எழுப்பியது. ஆனல் பேய்க் காற்றுக்கோ நம் வழியில் குறுக்கிட இவன் யார் என்ற ஆத் திரம்! நீலக் கடல் எழுப்பும் அலைகளைச் சாடி வீழ்த்தி, கெக்கலி கொட்டி நகைத்தது.

யோசனையில் ஆழ்ந்துவிட்ட ருக்மிணிக்கு நேரம் போனதே தெரியவில்லை. 'நான் ஒரு வேலை தேடிக் கொள்ள வேண்டும். கல்லூரிப் படிப்போ முடிந்தபாடில்லை. இன்னும் ஒரு வாரத்தில் அத்தை வீட்டு நிழலும் நமக்கு இராது. மதுவைச் சந்தித்து எத்தனை நாட்க ளாகின்றன? தாத்தா இறந்த புதிதில்தான் அவரைப் பார்க்க முடிந்தது. பிறகு மது வோடு நாம் பேசினுலேயே காமாட்சி அத் தைக்குப் பிடிப்பதில்லை. அதுமட்டுமா? அவர் வீட்டுக்கு வரும்போதெல்லாம் ஏதாவது ஒரு விதத்தில் அவரை அலட்சியப்படுத்தவும் தொடங்கி விட்டாள்.

அதென்னவோ இவ்வளவு கஷ்டங்களிலும் மதுவின் முகமே அழியாத உயிரோவியமாக அவள் மனத்தில் பதிந்து விட்டது. மதுவின் ஒவ்வொரு பேச்சும், ஒவ்வொரு செய்கையும், ஒவ்வொரு பார்வையும் அவளது உள்ளக் கிடக்கையிலே பதிந்து, இனம் தெரியாத இன்பப் பூரிப்பிலே அவளை மிதக்கச் செய்து கொண்டிருந்தன. ஏதோ ஓர் இனிமை அவள் இதயத்தைக் கவர்ந்தது. மிகுந்த சிரமப் பட்டுத்தான் இன்ப மயக்கத்தை அளிக்கும் அந்தக் கனவு உலகத்திலிருந்து விடுபட்டு, விழிப்புற முயல்வாள். தன்னைச் சுற்றிய சூழ்நிலை அவள் முகத்தில் தண்ணீரால் அடித்ததுபோல் அவளை விழிப்புறச் செய்யும்.

ஆ! எத்தனை நாட்களாகி விட்டன, மதுவை நேருக்கு நேராகப் பார்த்து! மது அவளது விழித் திரையிலே நடமாடி! இனி இந்தச் சிந்தனை யெல்லாம் எதற்கு? அவளோ அநாதை. பரம ஏழை. மதுவோ தாய் தந்தையரின் நிழலில் வாழ்பவர், பெரும் பணக்காரர். எல்லாவற்றுக்கும் மேலாக அவருக்கு வீட்டிலேயே அத்தை மகள் முறைப் பெண்ணுக வளர்கிருள். ஆஸ்தி பாஸ்தி உள்ளவர். செல்வத்தில் மிதப்பவர். குடும்பத்தினர் அவளையும் அவரையும்தான் இணைத்துப் பேசுவார்கள். இனிமேல் மதுவை மறந்துவிட வேண்டும். அது எப்படி முடியும்?

சட்டென்று யாரோ முகத்தின் மீது எதாலோ அடித்தாற் போன்றிருந்தது. அவள் முகத்தின் மீது வந்து விழுந்தது மணல். முறங்களால் எடுத்து முகத்தில் அடிப்பது போல் நாற்புறத்திலும் வந்து விழுந்தது. ராக்ஷஸ பலத்தோடு காற்றடித்துக் கொண் டிருந்தது. பெரிய மலைகளைப் போன்ற அலைகளோடு நுரை கக்கியபடி கடல் குமுறிக் கொண்டிருந்தது. வானம் கார் முகில் களின் சுமை தாங்க மாட்டாமல் வளைந்து கொடுத்தது போலிருந்தது. அதுவரையில் முத்து முத்தாகத் தெறித்துக் கொண்டிருந்த தூற்றல் பெரு மழையாக மாறிப் பேய் மழையாகவும் பரிணமித்தது.

அந்தி இருள் கருமேகங்களின் நிறத்தை மேற்கொண்டு தன்னை மழைத் திரைகளால் மூடிக் கொண்டது. சுற்றிலும் வெள்ளக்காடு. கண்ணுக்கு எட்டியவரையில் ஆளரவம் காணும். ருக்மிணி மழையில் நனையலானுள்.

''ருக்கு! ருக்கு!'' யார் கூப்பிடுகிறுர்கள்? கடலின் இரைச்சலில், காற்றின் கர்ஜனையில், மழையின் அழுகையில் பயங்கரமாக வெறிக் கூத்தாடும் இயற்கையின் அட்டகாசத்தில் கண்ணுக்குப் புலப்படாத ஏதோ ஒரு தெய் வம் வீணை மீட்டியது.

நன்கு தெரிந்த குரல்தான். யார் குரல்? எங்கிருந்து வருகிறது? மனத்தில் உருவாகும் தீவிரமான ஆசைகள் இப்பூவுலகில் உருவம் புனைந்து நடமாடுவது உண்டு என்று கூறு வார்கள். அப்படி ஏதாவது இருக்குமோ? சே! பிரமை! பைத்தியக்காரத்தனமான பிரமை!

அது சரி, இப்போது எப்படித் திரும்பிப் போவது? இங்கிருந்து எந்தப் பக்கம் போவது? எங்கு போவது?

''ருக்கூ! ருக்கூ!! எங்கே இருக்கிருய்? இருக்கும் இடத்திலேயே நில். நான் வந்து கொண்டிருக்கிறேன்.'' தற்செயலாக மதுவேதான், அவளைத் தேடி வந்து கொண்டிருந்தான்.

''மது, இதோ இங்கேதான் இருக்கிறேன்'' என்ருள் ருக்மிணி உரத்த குரலில். இந்த இருட்டிலே, இந்தப் புயலிலே மது அவளுக் காகவா வந்தார்? அப்பா! அவளுக்குத் தாங்க முடியாத சந்தோஷம் பொங்கி வந்தது. அவள் இங்கு இருப்பது மதுவுக்கு எப்படித் தெரிந்தது?

''உன் அத்தை வீட்டுக்குப் போயிருந் தேன். உனக்கு இருக்கும் மனநிலையில் நீ இங்குதான் எங்கேயாவது இருக்க வேண்டும் என்று எண்ணினேன். அதற்கு ஏற்றுற்போல் உன்னை இந்தக் கடற்கரையிலே பார்த்த தாக உன் அத்தை வீட்டு டிரைவரும் சொன்னுர். எனவே, காரை இப்படித் திருப்பி ஓட்டி வந்தேன். வழியிலேயே காற்று மழை பிடித்துக் கொண்டு விட்டது. டாப் கியரில் வண்டியை ஓட்டி வந்தேன். வா, போவோம்'' என்று ஒரே மூச்சில் சொல்லி அவள் கையைப் பிடித்து ஈர மண்ணி லிருந்து தரதரவென்று கார் பக்கமாக இழுத் துச் சென்ருன் மது.

இதயத்தினுள் எழுந்த பற்பல உணர்வுகள் பந்தாக உருண்டு திரண்டு ருக்மிணியின் தொண்டையை வந்து அடைத்தன. மந்திரத் தால் கட்டுண்டவள்போல் மதுவின் பின்னு லேயே நடந்தாள்.

கார் புறப்பட்ட பின், ''அப்பா! இவ் வளவு நனைந்து போய்விட்டாயே! உடம்புக்கு

சுவை மிக மிக அதிகமானால் அது கசக்கும். சுவைமாதிரிதான் அன்பும் காதலும். இவை அதிகமாகும்போது? ருக்குவிடம் மதுவிற்கு ஏற்பட்ட மன மாற்றத்தின் அடிப்படைத் தத்துவமே இதுதான். கலியாணசுந்தரி ஜகந்நாத் 'புயலில் பயணத்தை' தம் தென்றலைப் போன்ற நடையிலே அளித்திருக்கும் அழகுக்கு இதைச் சிறப்புச் சிறு கதையாகவும் அட்டைப்படக் கதையாகவும் வெளியிடுவது பொருத்தம்தானே ?

ஆகுமா? முதலில் துடைத்துக் கொள்'' என்றான் மது, ஒரு கையை ஸ்டியரிங் சக்கரத்தில் வைத்து இரண்டாவது கையால் தனது கைக் குட்டையை எடுத்துக் கொடுத்துக்கொண்டே. ருக்மிணிக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

இந்த நிலையில் தன் அத்தை கண்ணில் பட்டு விட்டால்?—வேறு வினையே வேண்டாம். அவள் எதிரில் மதுவின் காரிலிருந்து அவள் இறங்கினால் உடனே வெளியே நடக்கச் சொல்லி விடுவாள். அதன் பிறகு போக்கு ஏது?

''ருக்கு! என்ன பேச மாட்டேன் என்கிறாய்? உன் அத்தை கொன்று விடுவாள் என்றா? எங்கள் வீட்டிலும் அப்படித்தான்.''

ருக்மிணிக்குத் தன் மானம் தாக்கப் பட்டாற் போலிருந்தது.

''அப்படியென்றால் எதற்கு வந்தீர்கள்? எனக்காக உங்கள் வீட்டிலே சண்டை வராதா?'' என்று கேட்டாள்.

''எதற்கு வந்தேனா? என்ன பைத்தியக் காரக் கேள்வி இது? முதலில் உன்னை என் நண்பன் வீட்டுக்கு அழைத்துப் போகிறேன். அவன் ஓர் உத்தியோகத்தில் இருப்பவன். குடியும் குடித்தனமுமாக இருப்பவன்.''

''ஏன்! உங்கள் வீட்டுக்கு அழைத்துச் செல்லப் பயமா?'' என்று கேட்டாள் ருக்மிணி சற்றுக் கடுப்புடன்.

''ஆம்'' என்றான் மது.

ருக்மிணியின் முகம் சிவந்தது.

''உன்னை நான் கல்யாணம் செய்துகொள்வது எங்கள் வீட்டில் யாருக்கும் பிடிக்கவில்லை.''

''கல்யாணமா?''

பேய்க்காற்றையும், மழையையும் கிழித்துக்கொண்டு, இடியையும், மின்னலையும் கிண்டல் செய்வதுபோல் உறுமிக்கொண்டு அம்பு வேகத்தில் கார் போய்க் கொண்டிருந்தது.

ருக்மிணி ஓராண்டாகவே கோரிய இந்தச் சௌபாக்கியம் முடவனுக்குக் கொம்புத் தேன் கிடைத்தது போலிருந்தது.

சிறிது நேரம் இருவரும் மௌனமே உருவாயிருந்தனர்.

''ஏன், சம்மதமில்லையா?'' என்று கேட்டான் மது, மின்னலொளியில் ருக்மிணியின் முகத்தைப் பார்த்து.

தான் இப்படி அநாதையானதால்தான் மது இப்படித் தயை காட்டுகிறானோ என்று நினைத்தாள் ருக்மிணி. அவள் மனத்தில் ஓர் ஏக்கம் கண்ணாமூச்சி ஆடியது.

''என் உத்தியோகம் ஒன்றே போதும். குடும்ப ஆஸ்தி எதுவுமே எனக்கு வேண்டாம். நீதான் எனது ஆஸ்தி'' என்றான் மது மென்மையான குரலில். ருக்மிணியின் உடலில் ஒவ்வோர் அணுவும் விவரிக்க வொண்ணாத ஆனந்தத்தால் கிறங்கியது. கார் சாலை விளக்கின் கீழ் வந்தது. சட்டென்று காரை நிறுத்தினான் மது.

''ருக்கு! எத்தனைதான் இடையூறுகள் வந்தாலும், எத்தனைதான் கஷ்டங்கள் நேர்ந்தாலும் என்னை நீ கைவிட மாட்டாயல்லவா? என்றென்றும் நான் உன்னைக் காதலித்துக் கொண்டே யிருப்பேன்'' என்றான் மது. இதயத்தைக் கிழித்துக் கொண்டு வந்தது அவன் குரல். கண்களில் படர்ந்த ஈரம் விளக்கொளியில் மின்னியது.

அவர்களது எதிர்கால இல்லற வாழ்க்கைக் கோயிலில் விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்தது.

அந்த நாட்களில் அவள் கண்ட மது எங்கே? இப்போது அவள் காணும் மது எங்கே? இந்த மது உண்மையில் அவள் கணவன்தானா?

இந்த நினைவுகளுக்கிடையில் உள் அறையில் இருந்து மது முனகுவது கேட்டது. ருக்மிணிக்கு வயிற்றை ஏதோ கலக்கியது. அவர் எவ்வளவு உபாதைப் படுகிறார்? எந்தக் கெட்ட வேளையில் கார் சவாரி போனார்களோ, இந்த விபத்து ஏற்பட்டு விட்டது. அப்பா! கல்யாணமான புதிதில், இல்லறம் நடத்திய அந்த ஆறு மாதங்களில், இருந்ததைக் கொண்டு திருப்தி அடைந்து எவ்வளவு இன்பமாக வாழ்ந்தார்கள்! இப்படிக் கால் முறிந்து, படுக்கையில் விழுந்ததும் அவருக்கு உத்தியோகம் போய் விட்டது. ஆறு மாதங்கள் கழித்துத் திரும்பவும் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றார்கள் டாக்டர்கள்.

தவிர்க்க முடியாமல் ருக்மிணி ஓர் உத்தியோகத்தைத் தேடிக் கொள்ள வேண்டி வந்தது. விற்பனையாளர் வேலையில் அமர்ந்தாள். அதனால்தான் மதுவுக்கு டானிக் முதலியன வாங்கிக் கொடுக்க முடிந்தது. இருந்தாலும் ருக்மிணிக்கு வாழ்க்கையில் நிம்மதி இல்லாமல் போயிற்று.

அன்று ஒரு நாள் சம்பளம் வாங்கியதும் அவருக்காக மருந்துகள், டானிக்குகள், பழங்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு மனத்தில் மகிழ்ச்சி ததும்ப வீட்டுக்கு வந்தாள். அவற்றைப் பார்த்த மாத்திரத்தில் ''இதெல்லாம் எனக்கு வேண்டாம்'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டு, சுவரின் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கண்களை இறுக மூடிக்கொண்டு படுத்துவிட்டான் மது.

மற்றொரு நாளும் இதே போலத்தான். **அலைந்து அலுத்துக் கால் கடுத்துப் போய் வீடு திரும்பினாள் ருக்மிணி.**

''ஊர் சுற்றி முடிந்ததா? வீட்டு நினைவு வந்ததா? உனக்கு என்ன? கால் போன வழி, கை காட்டிய வழி சுற்றுகிறாய்!'' என்றான்.

வீட்டுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே ஒருவர் இப்படிக் கேட்டால்? — ருக்மிணிக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

''வெய்யிலில் அலைந்துவிட்டு வருகிறேன். எதற்காக நீங்கள் வேறு இப்படிச் சொற்களால் சுடுகிறீர்கள்?'' என்றாள் தன்னைச் சமாளித்துக் கொண்டு.

''ஏன்? சம்பாதிக்கிறோம் என்ற கர்வமா? என்ன, வாய்த்துடுக்கு அதிகமாகி விட்டது? என் தலையெழுத்து பெண்சாதி சம்பாதித்துச் சாப்பிட வேண்டும் என்று ஏற்பட்டுவிட்டது. தலைவிதி! தலைவிதி!!'' என்று ஒரு பெரு மூச்சு விட்டான் மது.

ருக்மிணிக்கு மூச்சுத் திணறியது. அப்படியே நிலைக் குத்தலிட்டவள்போல் நின்று விட்டாள்.

''ஏன் நின்று விட்டாய்? சம்பாதிக்க அலைந்து திரிந்து வந்தாயே! நான் வேண்டுமானால் கால் கழுவத் தண்ணீர் கொண்டு வந்து தரட்டுமா? இப்படியெல்லாம் உனக்குப் பணி புரிந்து பெருமையுறலாம் என்றால் எழுந்து நடக்கும் வாய்ப்பைத் தரவில்லையே இந்தப் பாழும் கடவுள். இந்தக் கையாலாகாத பிழைப்பு இன்னும் எத்தனை நாட்களோ, கடவுளே! ஆபரேஷன் எப்போது செய்து என்னை நடமாடச் செய்யப் போகிறார்களோ!'' என்று கூறியவண்ணம் முகத்தைத் திருப்பிக்கொண்டான் மது.

இப்படிக் கடந்தன நாட்களெல்லாம்.

இரண்டு நிமிடங்களில் மீண்டும் மதுவின் கோபமான சொற்கள் காதில் விழுந்தன.

''ஏய்! உன்னைத்தான். ஏய்! புருஷன் இன்னும் பிழைத்திருக்கிறான் என்பதை மறந்து விட்டாயா? எவ்வளவுதான் படுக்கையே கதியாக இருந்தாலும் புருஷன் என்பதை மறக்காதே! அவனுக்கு என்ன வேண்டும், ஏது வேண்டும் என்று கவனிப்பதில்லை. எப்படி யிருக்கிறான் என்றும் பார்ப்பதில்லை. கைப்பிடித்த மனைவி ஒருத்தி இப்படி அலட்சியப்படுத்தினால் கட்டிய புருஷனுக்கு எப்படி இருக்கும்?''

''இதோ மருந்து எடுத்துக் கொண்டு வருகிறேன்'' என்று கூறிய ருக்மிணி எழுந்து மருந்துடன் அவன் அருகில் சென்றாள்.

''எனக்கு எதற்கு இந்த மருந்தும், மாயமும்? நீ சுகமாக ஊர் சுற்றித் திரிந்தால் போதாதா? படுத்த படுக்கையாயிருக்கும் கணவன் எப்படிப் போனால் என்ன?'' இப்படிக் கேட்ட வண்ணம் கையில் கொடுக்க இருந்த மருந்துப் புட்டியை ஒரு தட்டுத் தட்டிக் கீழே வீழ்த்தினான் மது.

கீழே விழுந்து சிதறிய கண்ணாடித் துகள்களை எடுத்து வெளியே போட்டாள் ருக்மிணி. பதில் ஒன்றும் சொல்லாமல் நிதானமாக நடந்து சென்று வெளியே தட்டி போட்ட கேட்டைப் பிடித்துக் கொண்டு நின்றாள். இன்னும் அக்கம் பக்கத்தில் குழந்தைகளின் ஆரவாரம் கேட்டபடி யிருந்தது. 'டப்ப்' என்று பட்டாசுகள் வெடித்துக் கொண்டிருந்தன. அவளுக்குப் பசி என்பதே குன்றிப் போயிற்று. தலை வெடித்துவிடும் போல் இருந்தது. ஆய்ந்த பஞ்சு போன்ற சிறு சிறு மேகங்கள் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்தன. வெளியே சிறிது குளிராக இருந்தது. அது அவளது தலைவலியைச் சற்றுத் தணிப்பது போல் தோன்றியது.

கடந்த ஆறு மாத காலமாகவே மதுவின் முகத்தைப் பீடித்திருந்தன, கடுகடுப்பும், சிடுசிடுப்பும். அவை மறையுமா? இனி இந்த ஜன்மத்தில் புன்சிரிப்பும், சாந்தமும் முன்போல் அவர் மனத்தில் நிலவுமா? எப்போதாவது பழைய அன்போடு ''ருக்கூ'' என்று அழைப்பாரா? தீபாவளித் திருநாளன்றுதான் நரகாசுரன் என்ற தீயவன் ஒழிந்தான். தீமைகள் ஒழிந்து நன்மைகள் நாடி வரும் நன்னாள், இந்தத் தீபாவளித் திருநாள்தான் என்று அடிக்கடி கூறுவார் அவள் பாட்டனார்.

எதிரே தூரத்திலிருந்த உயர்ந்த மாடியில் ஜகஜ்ஜோதியாய் விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன. மாடியிலிருந்து மெல்லிசை ஒலித்தது. அலுத்து வந்த ருக்மிணிக்குத் தூக்கம் வரும்போல் இருந்தது.

மறுபடியும் அந்தப் பெண்ணின் நினைவு வந்தது. அவளை மறந்துவிட வேண்டும் என்றுதான் எண்ணினாள். தினம் காலையில் எழுந்து வேலைக்கு என்று புறப்பட்டுவிட்டால் எத்தனையோ பெண்களைப் பார்க்கிறாள் அவள். ஆயினும் அந்த ஒரு பெண் மட்டும் அடிக்கடி அவள் நினைவில் தோன்றுவானேன்?

இசை இனிமையாகக் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. எதிர் மாடியில் யார் பாடுவது? யாருடையது அந்த மாடி? நினைவுக்கு வந்தது. அது டாக்டர் சுந்தரத்தினுடையது. ஆமாம். அவர் இன்று விருந்து வைக்கிறார், தமது நண்பருக்கு — எலும்புச் சிகிச்சை நிபுணருக்கு.

மாலை தமது காரில் அவளை அழைத்து வந்து அவள் வீட்டில் விட்டபொழுது அவர் விருந்து பற்றி அவளிடம் சொன்னார். அவரோடு இப்படிக் காரில் வருவதைச் சுட்டிக் காட்டித்தானே அடிக்கடி அவள் அவருடைய காரிலேயே ஊர் சுற்றுவதாகக் கோபித்துக் கொண்டார் மது. அதற்காகவே எத்தனையோ நாட்கள் வேலை முடிந்ததும் சுந்தரத்தின் கண்ணில் படாமல் வீடு திரும்பி வந்திருக்கிறாள் அவள். ஆனால் இன்று அவளால் தவிர்க்க முடியவில்லை. ஆம், எதற்காகத் தவிர்க்க வேண்டும்? அவள் என்ன தவறான காரியம் செய்தாள், சுந்தரத்திடமிருந்து ஒதுங்கி ஓடுவதற்கு? இவ்வளவுக்கும் மதுவின் பால்ய நண்பர் சுந்தரம். அவளுடைய பாட்டனாருக்கும் நன்றாய்த் தெரிந்தவர். அவளுக்கும் அவரைத் தெரியும். ஆனால் இப்பொழுதெல்லாம் மதுவுக்குச் சுந்தரத்தின் பெயரை எடுத்தாலே பிடிக்கவில்லை. அப்படிப் பிடிக்காததற்குக் காரணமும் அவளுக்கு விளங்கவில்லை. இவ்வளவுக்கும் சுந்தரத்தைச் சில தினங்களுக்கு முன்புதான் சந்தித்தாள் அவள்.

ஒருநாள் அவள் கால் நடையாகப் படைபதைக்கிற வெய்யிலில் வீடு திரும்பும்போது பின்புறத்திலிருந்து மெதுவாக ஒரு பெரிய கார் வந்து பக்கத்தில் நின்றது. அதிலிருந்து

''ருக்கு, ருக்கு'' என்று மகிழ்ச்சி கொப் புளிக்கக் கூறிக் கொண்டே இறங்கினார் டாக்டர் சுந்தரம்.

''ருக்கு! ஏன் இப்படித் தனியாகப் போகிறாய்? மது எங்கே? இவ்வளவு வெய்யிலில் எங்கிருந்து வருகிறாய்? ஏன் இப்படி இளைத்து விட்டாய்?'' என்று மூச்சு விடாமல் கேள்வி கேட்டார் அவர்.

அவளை அவ்வளவு சுதந்திரமாகக் கூப்பிடுவது ஆண்களிலே அவளது பாட்டனாரைத் தவிர, மதுவும் சுந்தரமும்தான்.

ருக்மிணிக்கு எல்லை மீறிய சந்தோஷம் ஏற்பட்டது. ''நீ எப்போது வந்தாய்?'' என்று திரும்பக் கேட்டாள்.

''என்னை இந்த ஊரில் 'போஸ்ட்' பண்ணியிருக்கிறார்கள். உங்களைத் தேடினேன், விலாசம் கிடைக்கவில்லை.''

''நான் உத்தியோகம் செய்கிறேன், அவருக்கு உடல் சரியாக இல்லை, சுந்தர்'' என்றாள் அவள்.

''ஏன்? என்ன உத்தியோகம்? நீ காரில் உட்கார் முதலில். வா, அவனை நான் பார்க்க வேண்டும்'' என்றபடி காரின் கதவைத் திறந்து ஒதுங்கி நின்று, ''ஊம்.. ஏறு, என்ன பார்க்கிறாய்? அவனுக்கு என்ன உடம்புக்கு?'' என்று மறுபடியும் கேட்டான் சுந்தரம்.

சங்கோசப்பட்டுக் கொண்டே காரில் ஏறினாள் ருக்மிணி.

காரில், கீழே ஒருபுறமாக இரும்புக் கம்பிகளால் பின்னிய மரக் கூண்டிலே வெண்ணெய்க் கட்டியைப் போல் 'வெண் புறா ஜோடி ஒன்று அங்கும் இங்கும் திரிந்தபடி இருந்தது.

''எவ்வளவு அழகாக இருக்கின்றன இந்தப் புறாக்கள்!'' என்றாள் ருக்மிணி, அவற்றைப் பார்த்து.

''இவை ஒருவித ஜாதிப் புறாக்கள். இவற்றால் பறக்க முடியாது. எனக்கு மிகவும் பிடித்தவை. ஒரு மாணவன் எனக்குப் பரிசாக அளித்தான். நான் உனக்குப் பரிசாகத் தருகிறேன். பெற்றுக் கொள்.''

''ஊஹூம். எனக்கு எதற்கு சுந்தர்? நீயே வைத்துக் கொள்.''

''நான் ஒரு பிரம்மசாரி. இவற்றை வளர்ப்பது கஷ்டம். குடும்பஸ்தர்கள் நீங்கள்தான் வளர்க்க வேண்டும். ஆமாம், உங்கள் விலாசம் என்ன?''

''ஆபரேஷன் ஆன பிறகு ஏதாவது வேலை தேடிக் கொள்வேன். அப்புறம் பெரிய வீடாகப் பார்த்துக் கொள்ளலாம் என்கிறார். அதனால் இந்தச் சின்ன வீட்டிலேதான் இப்போதைக்கு நாங்கள் இருக்கிறோம்'' என்று கூறியவாறே ருக்மிணி காரை விட்டு இறங்கினாள்.

''அடே, சுந்தர்! இதென்ன? எப்போது வந்தாயடா?'' என்றான் மது மிகுந்த ஆச்சரியத்தோடு.

''மிகவும் துரதிர்ஷ்டசாலி. எல்லாவற்றையும் ருக்கு எனக்குக் காரிலேயே சொன்னாள். ஒன்றும் பயமில்லையடா'' என்று கூறிய வண்ணம் கைகளில் அணைத்திருந்த புறாக் கூண்டைக் கீழே வைத்தான் சுந்தரம்.

''நான் நடந்து வந்து கொண்டிருந்த போது என்னை வழியில் பார்த்து, அழைத்து வந்தான். உங்களைப் பார்த்தே தீரவேண்டும் என்று வீடு வரைக்கும் வந்து விட்டான். நாற்காலியில் உட்கார், சுந்தர்! சூட் நலுங்கி விடும்'' என்றாள் ருக்மிணி, மதுவின் பக்கத்தில் கட்டிலின் மேல் போய் உட்காரவிருந்த சுந்தரத்தைப் பார்த்து.

சுந்தரம் நாற்காலியில் கால் மீது கால் போட்டு அமர்ந்து மதுவைப் பார்த்து, ''ஆளே மாறிவிட்டாயேடா'' என்றான்.

குழந்தைகள் மார்கழி மாதத்தில் என்ன செய்ய வேண்டும்?

அருமைக் குழந்தைகளே!

1. மார்கழி மாதம் பிறக்குமுன் திருப்பாவை, திருவெம்பாவை பாசுரங்களை மனப்பாடம் செய்யுங்கள். மார்கழி முப்பது நாட்களும் காலையில் நீராடி ஆண்டவனை நினைத்துப் பாடல்களைச் சொல்லிக் கொண்டு ஊர்வலம் வாருங்கள்.

2. திருவெம்பாவை இருபது பாடல்களையோ திருப்பாவை முப்பது பாடல்களையோ தெளிவாகவும் அழகாகவும் பாடப் பழகிக் கொள்ளுங்கள்.

3. குழந்தைகளே! இப்பொழுதே மனப்பாடம் செய்ய ஆரம்பித்தால்தான் மார்கழி மாதம் ஆரம்பத்துக்குள் 'நெட்டுரு' ஆகும்.

4. மார்கழிக்குள் மனப்பாடம் செய்யுங்கள்; மார்கழி நீராடுங்கள்; ஊர்வலம் வாருங்கள்; தூங்கும் குழந்தைகளையும், பெரியவர்களையும் பாட்டுப் பாடி எழுப்புங்கள்; ஆயுள் பூர்ணமாக ஆனந்தமாக வாழுங்கள்.

— ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

★



★

''ஆமாண்டா, உன்னைப் போலவே நானும் இங்கிலாந்துக்கு மேல் படிப்புக்குச் சென்று வந்திருந்தால் உன்னைக் காட்டிலும் சுத்த மாகவும், மிடுக்காகவும் உடை உடுத்துவேன். ஆனாலும் உன்னைப் போன்ற அழகும் உட லமைப்பும் எனக்கு எங்கிருந்து வரும்?'' என்றான் மது, தனக்கு வந்த எரிச்சலைக் காட்டிக் கொள்ளாமல்.

''அதென்னடா! படுக்கையில் விழுந்து தாடி வளர்ந்து இளைத்துப் போயிருப்பதால் இப்படி இருக்கிறாய். நான் டென்னிஸ் அது இது என்று பல விளையாட்டுகள் ஆடுவதால் உடற்கட்டு குன்றாமல் இருக்கிறேன்'' என்ற சுந்தரம், ''ருக்கு, மது ஒரு சமயம் எவ்வளவு அழகாக இருப்பான், தெரியுமா?'' என்று புன்சிரிப்புடன் கபடம் ஏதும் இல்லாமல் கேட்டான்.

''படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் அல்லவா, சுந்தர்? அதனால் ஆளே மாறிய மாதிரி இருக்கிறார்'' என்றாள் ருக்மிணி. அப்போதுதான் புருக்களை உள் வராந்தாவில் வைத்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தாள் அவள்.

''நான் திரும்பி எழுந்தால் பார்த்துக் கொள்ளலாம்'' என்றான் மது ஒரு பெரு மூச்சு விட்டு.

''அதென்னடா பேச்சு! நீ ஆபரேஷன் செய்துகொள்ள வேண்டும். அப்போது நான் பக்கத்தில் இருப்பேன். இது பற்றி ருக்குவும் நானும் காரிலேயே யோசித்துக்கொண்டு வந்தோம். எலும்பு நிபுணர் சொற்பொழிவுக்காக வெளியூர் சென்றிருக்கிறார். இந்தத் தீபாவளிப் பண்டிகைக்கு வீடு திரும்புவார். இரண்டு மூன்று தினங்களே இருப்பார். மறுபடியும் அவருக்குச் சுற்றுப் பயணம் இருக்கிறது. நான் அவரை அழைத்து வந்து காட்டுகிறேன். சுகமாக எப்போதும்போல் ஜம்மென்று ஆகிவிடுவாயடா'' என்றான் சுந்தரம்.

மது பேசவில்லை. ''நான் இதோ போய்க் காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன் ஒரு நொடியில். அதுவரை பேசிக்கொண் டிரு, சுந்தர்'' என்றாள் ருக்மிணி.

''எனக்குச் சமையற்காரன் இருக்கிறான். உனக்கு ஏன் வீண் சிரமம் ருக்கு? நான் வாங்கியுள்ள வீடு இங்கிருந்தே தெரியுமே. அதோ பார்'' என்று தன் மாடி வீட்டைச் சுட்டிக் காட்டினான் சுந்தரம்.

''ரொம்பப் பக்கத்தில்தான் இருக்கிறது. சமையற்காரர் இருந்தாலும் நான் போட்டுத் தந்து நீ சாப்பிடக் கூடாதா? நீ காப்பி சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும் – உங்களுக்கும் கஞ்சி காய்ச்சித் தரட்டுமா?'' என்று கேட்ட வண்ணம் சமையலறைக்குச் சென்றாள் ருக்மிணி.

''ருக்கு, எதற்கு இந்த உபசாரங்கள்? நீ முதலில் அவனுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுப்பதைப் பார். நானே டிகாக்ஷனைக் கலந்து கொள்கிறேன்'' என்றபடி சுந்தரம் ருக்மிணியின் பின்னால் சென்றான்.

கஞ்சியை ஒரு கையிலும், காப்பியை மற்றொரு கையிலுமாக எடுத்துக்கொண்டு சுந்தரம் வெளியே வந்தபோது மது தலைக்கு உயரமாகக் கைகளை வைத்து மல்லாந்து படுத்திருந்தவன் கீழ் உதட்டை ஒரு பக்கத் துப் பற்களால் கடித்தபடி கூரையைப் பார்த்த வண்ணம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

''இந்தாடா கஞ்சி! இந்தத் தரம் நான் என் கையால் கஞ்சி தருகிறேனடா'' என்று கூறிச் சுந்தரம் கஞ்சியை நாற்காலியின்மீது வைத்தான்.

''ரொம்ப சந்தோஷம். காலில்லாதவனுக்குக் கஞ்சியாவது கொண்டு வந்தாயே!'' என்றான் மது கபட்டுச் சிரிப்புடன்.

''நேரமாகிறது. நான் போய் வருகிறேன். ஆஸ்பத்திரிக்கு வேறு போக வேண்டும்'' என்று கூறி எழுந்தான் சுந்தரம்.

''உத்தியோகஸ்தர்கள்! அலைந்து கஷ்டப் பட்டுச் சம்பாதிக்க வேண்டுமல்லவா? வீட்டிலேயே இருக்க முடியுமா?'' என்றான் மது நமட்டுச் சிரிப்புடன்.

''சரிடா. அந்த ஸ்பெஷலிஸ்டைக் கூட அழைத்து வருகிறேன். ருக்கு பை...பை... ஆபரேஷனுக்கு ஏற்பாடு செய்கிறேன்.''

கார் சப்தம் சற்றுத் தொலைவில் மங்கியதும், ''இப்போது பசிக்கிறதா? கஞ்சி சாப்பிடுகிறீர்களா?'' என்று கட்டிலின் மீது மதுவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டே கேட்டாள், ருக்மிணி.

''சட்! போ; அந்தப் பக்கம்'' என்று கத்தினான் மது.

அன்றிலிருந்து காரணமில்லாமல் ஏதாவது ஒரு சாக்கில் சுந்தரத்தைத் திட்டிக்கொண்டே இருந்தான் மது.

அதற்கு மறுநாள் சுந்தரம் வரும்போது மது தூங்கிக் கொண்டிருப்பது போல் பாசாங்கு செய்தான். மற்றொரு நாள் கார் சப்தம் கேட்டதும் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டான்.


இவ்வளவு நாட்களுக்கப்புறம் அன்றுதான் சுந்தரத்தின் காரில் மறுபடியும் அவள் வந்தாள்.

மறுநாள் நிபுணரை அழைத்து வருவதாகச் சொன்னான் சுந்தரம். ஆபரேஷன் ஆனால் அவர் குணமடைவார்.

எதிரே மாடியில் சுந்தரம் சித்தார் வாசிப்பது கேட்டது.

ருக்மிணி எழுந்து சமையலறைக்குச் சென்று கஞ்சியைச் சூடு பண்ணிக் கொண்டு வந்தாள். கட்டில் பக்கத்திலிருந்த நாற்காலி மீது வைத்து ஆற்றியபடி, ''என்னங்க, நாளைக்கு அந்த நிபுணரை அழைத்து வருவதாகச் சொன்னான் சுந்தர்'' என்று மெதுவாக ஆரம்பித்தாள்.

சட்டென்று முழங்கை மீது தலையை ஊன்றியபடி சீறிவிழுந்தான் மது. ''மூடு வாயை. உன் பாட்டன் வர வேண்டும் எனக்கு ஆபரேஷன் செய்து வைக்க. அவனும் நீயும் சேர்ந்து ஜாலியாகக் காரில் சுற்றிக்கொண்டு எனக்கு ஆபரேஷன் செய்யத் தீர்மானித் தீர்களோ? என் உயிர் உள்ளவரை இந்த ஆபரேஷனுக்கு நான் சம்மதிக்க மாட்டேன். இப்படியே கட்டிலிலேயே கிடந்து செத்தாலும் சாவேன். 'ருக்கு, பை...பை...



''என்னண்ணே! மணி நாலு ஆயிட்டுது. 'வாக்' போக வரல்லியா?''
''உடம்பு என்னமோ மாதிரி இருக்குது. வெளியே வரவே புடிக்கல்லே!''

ருக்கு, உனக்குச்சிரமம் எதற்கு? ருக்கு! ருக்கு!' அவனுக்கு என்ன அவ்வளவு சுதந்திரம்? இனி அவனே உன்னை ருக்கு என்று கூப்பிடட்டும். அவன் ஆசையோடு அப்படிக் கூப்பிட ஆரம்பித்ததிலிருந்து நான் உன்னை அந்தப் பெயரிட்டு அழைப்பதில்லை, தெரியுமா? செத்தாலும் நான் ஆபரேஷன் மட்டும் செய்து கொள்ள மாட்டேன். அப்படிச் சாகவில்லையென்றால் அவனையே கேட்டுக் கொஞ்சம் விஷத்தை வாங்கிக் கொடு. அப்புறம் என் தொல்லை உங்களுக்கு இருக்காது. நீயும் அவனும் சந்தோஷமாகக் காரில் சுற்றலாம்.... கடவுளே, ஏன்தான் இந்தக் கல்யாணத்தை செய்துகொண்டேனோ?''

மது தனக்கு வந்த ஆத்திரத்தில் ருக்மிணி கையிலே கொடுத்த வெது வெதுப்பான கஞ்சியோடு டம்ளரை அவள் முகத்திலேயே விட்டு எறிந்தான்.

ருக்மிணியின் கண்களில் இருள் படர்ந்தது. தன்மானம் குன்றி முகம் சிவந்தது. பீறிக் கொண்டு வரும் கண்ணீரைத் தடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டாள். பிறகு கீழே சிந்திய கஞ்சியையும் துடைத்துச் சுத்தம் செய்துவிட்டு உள்ளே சென்றாள். மதி இழந்தவள் போல் சமையலறைக்குச் சென்று கீழே விழுந்தாள். சுற்றுப்புறத்தில் நிலவிய ஆரவாரம் எதையும் அவள் உணரவில்லை.

தனது கோபத்தை அவள்மீது கக்கிய பிறகு சக்தியற்றவனாய்ச் சோர்வடைந்தான் மது. தலையணையின் மீது தலையைப்போட்டுப் படுத்தான். கோபம் இன்னும் முழுதும் தணியவில்லை.

''சே, சே, எதற்கு இந்தப் பிழைப்பு நமக்கு?'' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான், எதிரில் ருக்மிணி இல்லாத போதும்கூட. ''என்னைப்போன்றவன் பிழைத்தாலும் ஒன்றுதான், போனாலும் ஒன்றுதான். நான் சாவதே மேல். அன்று கால் முறிந்த போதே இறந்து போயிருந்தால் எனக்கு இந்த மன வேதனையே இருக்காதல்லவா? அப்போதே இறந்துவிட வேண்டுமென்றுதான் தோன்றியது. அதை எப்படியோ தவிர்த்து இந்த மகராசி புண்ணியத்தைக் கட்டிக் கொண்டாள். எதற்காக? இந்தக் காட்சிகளை நான் கண்டு வெதும்ப வேண்டுமென்றா? பெரிய உத்தியோகம் பார்த்துக் கிழிக்கிறாள் அல்லவா? என்னையே எதிர்த்துப் பேசவும் ஆரம்பித்து விட்டாள்! எப்படித் தெரிந்து கொண்டாளோ, என் கையிலிருந்து தூக்க மாத்திரைப் புட்டியை எனக்குத் தெரியாமல் ஒளித்து விட்டாள். அதுமட்டுமா? பக்கத்திலே என் கட்டிலின் மீதே உட்கார்ந்து கொண்டு சிரிப்பும், கேலியுமாகப் பேசவும் தொடங்கி விட்டாள். 'காரை ரிப்பேர் செய்துகொள்வோம். அடுத்த வருடம் வீடு கட்டிக்கொள்வோம்' என்ற இவளது அர்த்தமற்ற பேச்சையும் பிதற்றலையும் இப்போது நினைத்தால்கூட ஆத்திரம் பற்றிக்கொண்டு வருகிறது. ஏதடா, கணவனுக்குக் கால் முறிந்து விட்டதே என்று துளியாவது வருந்தினாளா? அன்று இரவு முழுவதும் செங்குத்தாகப் பொம்மை போல் அல்லவா உட்கார்ந்து என்னைக் காவல் புரியத் தொடங்கிவிட்டாள்! அப்புறம் நான் எங்கே போய்ச் சாவது?''

மதுவுக்கு உடலெல்லாம் தாங்க முடியாத வலி. 'அப்பா!' என்று முனகிக்கொண்டே ஒருக்களித்துப் படுத்தான். அசையாமல் படுத்திருப்பது என்றால் எவ்வளவு கஷ்டம்! ஒரே நிலையில் அசைவற்றுக் கிடப்பதென்றால் பெரிய சாண்டோவுக்குமே கஷ்டம்தான்!! ஒவ்வொரு நாளும் அவள் சாப்பிட்டாளோ சாப்பிடவில்லையோ, கடவுளுக்குத்தான் தெரியும். தலை குனிந்து பேசாமல் அவனருகில் வந்து அமர்ந்து முதுகை வருடித் தூங்கப் பண்ணுவாள் ருக்மிணி. அவனுக்குள்ள உடம்பு வலி அவளுக்குத் தெரியும்போலும்! ஏன் தெரியாது? விபத்து ஏற்பட்ட அன்று இரவு துளியும் நகராமல் அவன் அருகிலேயே உட்கார்ந்து கிடந்தாளே, அப்பொழுது அவளுக்கும் உடம்பு வலி எடுத்துத்தானே இருக்கும்? ''அப்பாடா! முதுகெல்லாம் எப்படிக் குடைகிறது? ஏன் அவள் இன்னும் வரவில்லை தூங்கப் பண்ண? செத்தாலும் அவளைக் கூப்பிடுவதா? அவளாகவே வரட்டும்.'' இந்த ஆலோசனைகளில் சோர்வடைந்து கொட்டாவி விட்டான் மது.

அப்படியே எத்தனை நேரம் இருந்தாளோ, ருக்மிணிக்கே தெரியாது. தான் இனி உயிர் வாழ்வதில் அர்த்தமில்லை. தன்னால் அவருக்கு ஏன் அவ்வளவு கஷ்டம்?

எழுந்து மதுவின் தாய் தந்தையருக்கு மதுவை அவர்களிடம் ஒப்படைப்பதாக ஒரு கடிதம் எழுதினாள். ஏதோ தூக்கத்தில் நடப்பவள் போல் நடந்து வெளியே வந்தாள்.

திரும்பவும் கேட்டின் பக்கம் நின்றாள். காற்று இன்னும் அதிகமாகக் குளிர்ந்து வீசியது. அவள் முகத்திலே. பக்கத்து வீடு

களில் கங்கா ஸ்நானத்தை ஆரம்பித்து விட்டார்கள். தானும் நிச்சயித்துக் கொண்டாள். கங்கா ஸ்நானம்தான்! அதுவே கடைசி ஸ்நானம்! மறுபடியும் அதே சமுத்திரத்துக்கே போக வேண்டும்.

'தொப்' என்று பின் கட்டில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது. உள்ளே சென்று என்னவென்று பார்த்தாள். சுந்தரம் கொடுத்த இரண்டாவது புறாவும் இறந்து கீழே விழுந்து கிடந்தது.

முன்பு அதற்கு ஆகாரம் வைக்கக் கூண்டின் கதவைத் திறந்தவள் கூண்டை மூட மறந்துவிட்டது நினைவுக்கு வந்தது. முதல் புறா இறந்து விட்டதிலிருந்து இரண்டாவது புறா தீனி, தண்ணீர் எதையுமே சாப்பிட மறுத்தது. ஜோடிப் புறாவில் ஒன்று போனால் மற்றது பிழைக்காது என்பார்கள். ஒருவேளை உண்மைதானோ, என்னவோ! வாயில்லாப் பிராணிகளுக்குத்தான் எவ்வளவு பிரேமை! எவ்வளவு ஒற்றுமை!

அறைக்குள் ருக்மிணி வந்து குனிந்து மதுவைப் பார்த்தாள். அவன் உறங்கிக்கொண்டிருந்தான். அவன் முகத்தில் விவரிக்க இயலாத ஒரு சாந்தி நிலவியது. கடந்த ஆறு மாதங்கள் புயல் வாழ்க்கையில் இது போன்ற மந்தகாசத்தை அவள் காணவே இல்லை. தூக்கத்தில் மது ஏதேதோ பிதற்றிக்கொண்டிருந்தான். இத்தனை நாட்களில் இன்றுதான் இதுபோன்ற தீனமான குரலைக் கேட்டாள்: ''ருக்கு! ருக்கு!'' — அப்பா! எவ்வளவு அன்போடு அழைக்கிறார் அவர்!

''ருக்கு! எத்தனைதான் இடையூறுகள் வந்தாலும், எத்தனைதான் கஷ்டங்கள் நேர்ந்தாலும் நீ என்னைக் கைவிட மாட்டாயல்லவா? என்றென்றும் நான் உன்னைக் காதலித்துக்கொண்டே யிருப்பேன்.''


ருக்மிணியின் மனம் பொங்கி எழுந்தது. கோபமும் துக்கமும் கரைந்து போயின. கையிலே இருந்த கடிதத்தைக் கீழே போட்டுவிட்டு மதுவின் நெற்றிமேல் கை வைத்து, வருடி, ''மது! மது! நான் போக மாட்டேன்.! நான் சாக மாட்டேன்! நான் தற்கொலை செய்து கொள்ள மாட்டேன்! உங்களுக்குச் சிகிச்சை செய்விப்பேன்!'' என்றாள், பெற்ற தாய் குழந்தையைச் சமாதானம் செய்வது போன்ற பாசத்தோடு. அவளுக்குத் தெரியாமலே அவளது காதல் அவளது குரலில் ஒலித்தது.

மது ஆனந்தத்தோடு கண் விழித்தான். தனது மனைவியின் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

''ஆபரேஷன் செய்துகொள்ளுகிறேன், ருக்கு! நீ எத்தனை நாட்கள் இப்படிக் கஷ்டப் படுவாய்! என்னையும் மீறிச் சில சமயம் உணர்ச்சி வசப்பட்டு உன்னைக் கொடுமைப் படுத்தினேன். என்னை மன்னித்துவிடு, ருக்கு'' என்றான் மது மிகுந்த அன்போடு பழைய மாதிரி.

வெளியே விடிவானம் வெளுத்து வந்தது. சிறு சிறு மழைத் துளிகள் தீபாவளியின் அறிகுறியாக ஜன்னலிலிருந்து அவர்கள் மீது தெளித்தன. தெருவெங்கும் பட்டாசுகள் வெடிக்கும் சப்தம் அதிகரித்தது.

பொழுது விடிந்து கொண்டிருந்தது. ''இன்று பண்டிகை. சுந்தரத்தை இங்கேயே சாப்பிடச் சொல்லுவோமே'' என்றான் மது.





சிறுகதை

பார்த்தனுக்காக மட்டும் அன்று!

ரூ. சா. ராஜு

அந்தப் பரந்த பொட்டல் வெளியில் பெரிய வெள்ளைத் துணி விரித்திருந்தது. அதன் நடுவே பளிச்சிட்டது செஞ்சிலுவை உருவம். வானத்தில் ஐந்நூறு அடி உயரத்திலிருந்து பார்த்தாலும் அந்தச் சிலுவை அடையாளம் தெளிவாகப் புலப்படும். அதற்குப் பக்கத்தில் ஒரு நீண்ட துணிக் கூடாரம். கூடாரத்துக்குள் போர்க்களத்தில் காயமுற்ற போர் வீரர்கள் தரையில்படுத்திருந்தார்கள். வெள்ளை உடை அணிந்த நர்ஸிங் சிப்பாய்கள் பரபரப்புடன் இங்கு மங்கும் ஓடினர். ஒரு மூலையில் மண் எண்ணெய் ஸ்டவ் 'புஸ்' என்று எரிந்துகொண்டிருந்தது. ஒரு பீங்கான் பாத்திரத்தினுள் கொதிநீரில் ஊசிகளும், விண்டும், குழல்களும் வெந்தன. ஒரு தள்ளு வண்டியில் முதலுதவிச் சாதனங்கள் இருந்தன. சில நோயாளிகளுக்கு இலேசான புண்கள். ஆனல் அவர்கள் அதிர்ச்சியினுல் மயக்கமுற்றிருந்தனர். மற்றும் சிலருக்குப் பலமான காயம். சில பேருக்கு எலும்பு முறிவு. சிலுவை அடையாளமிட்ட ஜப்பானிய வண்டிகளில் 'காஷுவல்டி'கள் வந்தவண்ண மிருந்தன. அவர்களைப் பரிசோதித்து, கேஸ் ஷீட்டுகள் தயாரித்து, அதே வேகத்தில் சிகிச்சைக்கு அனுப்பிக் கொண்டிருந்தார் மேஜர் ஜான்ஸன். ஓய்வு இல்லாமல் எழுதி எழுதி அவருடைய கை விரல்கள் நடுங்கத் தொடங்கி விட்டன. காப்டன் வேணுகோபால் இறக்கை முளைத்த தேவதையைப் போலப் பறந்தார். ஒருவனுக்கு நெற்றியில் தையல், இன்னெருவனுக்கு முழங்கால் எலும்பு முறிவில் சிம்பு வைத்துக் கட்டுதல், காய்ச்சலினுல் முனகும் நோயாளி ஒருவனுக்கு ஏ. பீ. ஸி.யை ஒரு கை எடுத்துக் கொடுத்தது. இடையிடையே இன்செக்ஷன் வேறு. பத்து டாக்டர்களும் இருபது நர்ஸுகளும் சமாளிக்க வேண்டிய அத்தனை நோயாளிகளை இந்த இருவருமே கவனித்துக் கொண்டார்கள். என்றாலும் முகத்தில் துளி அலுப்புக் குறி இல்லை; சினம் இல்லை. சில நிமிஷங்களுக்கொரு தரம் நர்ஸிங் சிப்பாய் ராஜமாணிக்கம் வேணுகோபாலனுடைய நெற்றிப் பொட்டையும், கழுத்துப் பிடியையும் வெள்ளைத் துண்டினுல் துடைத்து விட்டான். சூடான தேநீரைக் கலந்து அவருடைய வாயருகில் கொண்டு போனுன். அவருடைய இரண்டு கைகளுக்கும் அவ்வளவு ஒழிவில்லாத வேலை இருந்தது.

இரண்டு கால்களிலும் இடது கையிலும் பலத்த கட்டணிந்திருந்த ஹவல்தார் சொக்கலிங்கத்தின் கேஸ் காகிதத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு எழுந்தார் மேஜர் ஜான்ஸன். பரிவுடன் சொக்கலிங்கத்தை நோக்கினுர். அவருடைய நெற்றிப் பொட்டைத் தடவிக் கொடுத்தார். 'ஆம்புலன்ஸ் வண்டி வருவதற்கு இன்னும் கொஞ்ச நேரம் பிடிக்கும். இங்கேயும் ஹெலிகாப்டர் ஸர்வீஸ் தொடங்குமானுல் எவ்வளவு நன்ருக இருக்கும்' என்று கூறியவாறே கர்னல் ஜஞர்த்தனம் தமது ஜீப்பை விட்டுக் கீழே இறங்கினுர். 'குட்மார்னிங் டாக்' வலது கையிலிருந்த தமது பிரம்பை உயர்த்தினுர்.

'மார்னிங், மார்னிங் ஸார்' தமது இரு கரங்களையும் பேஸினில் கழுவியவாறே பதிலிறுத்தார் ஜான்ஸன். கர்னல் நேராக ஹவல்தார் சொக்கலிங்கத்தை அணுகினுர். அவருக்குப் பக்கத்தில் மண்டி போட்டு உட்கார்ந்தார். 'வளர வேதனிக்குன்னே சொக்கலிங்கம்?' கண்கள் பனிக்கக் கேட்டார். சொக்கலிங்கம் தலையை நிமிர்ந்து பார்த்தார். நாக்குப் புரளவில்லை. உடலையும் அசைக்க முடியவில்லை. கண்கள் பேசின. ஆயிரம் சொற்கள் மௌனப் பூவாய்ச் சொரிந்தன.

'விசனிக்கண்டா சொக்கலிங்கம். நிங்கள் அறியாத்தது ஏதுமில்லை. இதெல்லாம் யுத்தத்திலே சகஜமாணு. நிங்களோட தைர்யம் ஸாஹஸம் இதொக்க எங்களுக்கு ஆதர்சம்.

தூணிக்கை: கதையின் தலைப்பை எனக்குத் தந்து உதவிய திரு பி. எஸ். ராமையா அவர்களுக்கு.

தெய்வமுண்டு ஹவல்தார்ஜீ. 'விசுவாஸம் பலதாயகம்'.

பட்டாலியன் கமாண்டரின் பரிவு மிக்க சொற்கள் சொக்கலிங்கத்தை நெகிழ வைத்தன. 'காம்ரேடியர்' என்று இதைத்தான் ஆங்கிலத்தில் சொல்லுகிறுர்கள். போர்க்களத்தில் எதிரியின் படைக்கலத்தின் முன்பு ஏற்படும் சமத்துவ உணர்ச்சியும் அந்தத் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் துணிச்சலும் அங்கே மட்டும் கிடைக்கக் கூடிய அற்புதமான அனுபவமாகும்.



டார்ட்ஜ் ட்ரக் ஒன்று வெளியே வந்து நின்றது. அதனுடைய முன் ஆசனத்திலிருந்து சுபேதார் மேஜர் பரசுநாத் டோக்ரா கீழே இறங்கினுர். மருதோன்றி தடவிய நரைத்த தலைமயிரிலிருந்துதான் அவர் வயதானவர் என்பது தெரிந்ததே தவிர, மற்றப்படி அவருடைய முகத்தில் சுருக்கமில்லை. உடலில் தொய்வு இல்லை. அவருடன் கூட அழகிய நாய் ஒன்றும் கீழே குதித்தது. பரசுநாத்துக்கு முன்பு அது சொக்கலிங்கம் படுத்திருந்த ஸ்ட்ரெச்சரை நோக்கித் தாவி வந்தது. மெல்லிய குரலில் கரைந்தது. சொக்கலிங்கத்தின் உடலையும் காலையும் நக்கிற்று. ஸ்ட்ரெச்சரைச் சுற்றிச் சுற்றி வந்து கூத்தாடத் தொடங்கிற்று. நாவு இருந்தால் அந்த நாய் பேசி அரற்றியிருக்கும்.

பரசுநாத் கமாண்டரை நோக்கி ஸலாம் வைத்தார். ஸ்ட்ரெச்சரின் முன்பு மண்டி போட்டு உட்கார்ந்தார். ஹவல்தார் சொக்கலிங்கத்தின் முகத்தைப் பார்த்துத் தேம்பித் தேம்பிச் சிறு குழந்தையைப்போல் அழுதார். அவருடைய முகத்தைக் கண்ணீரால் கழுவினுர். அவருடைய பாதங்களைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார். ''சொக்கலிங்கம், நீ என் குரு, என் ஸ்வாமி. நான் உன்னை மறுபடியும் காணப் போகிறேனு?'' என்று அவர் விம்மினுர்.

சொக்கலிங்கத்தின் உதடுகள் துடித்தன. கண் இமைகள் படபடத்தன. உடல் அசைந்தது. அவரால் பேச முடியவில்லை. மகிழ்ச்சியும் துயரமும் தொத்து வியாதியைப் போன்றவை. பரசுநாத் அனுபவித்த மனத் துயரம் அங்கே நிழலைப் போலப் பரவத் தொடங்கியதும், கர்னல் ஜனர்த்தனம் சுபேதார் மேஜரைத் தனிமையில் அழைத்துக்கொண்டு போய்த் தேற்றினுர். ''பரசுநாத் சாகிப்! நீங்கள் என்ன இப்போதுதான் போர்க்களத்தைப் பார்க்கிறீர்களா? டோப்ருக்கும் மலேயாவும் மறந்து போயிற்று? ஜங்கட் போர் உங்களுக்கு நினைவில்லையா? உங்களுக்கு முன்னுல் நாங்கள் அனைவரும் சிறுவர்கள். நீங்கள் இப்படி அழலாமா?'' அவருடைய குரல் தழுதழுத்தது. கண் இமை ஓரங்கள் பனித்தன.

''மன்னிக்க வேண்டும் கர்னல் ஸாஹிப்!'' பரசுநாத் தலையைக் குனிந்து கொண்டார். பிறகு தணிந்த குரலில் பேசத் தொடங்கினுர். ''என்னுள் நிறைந்திருந்த மயக்கத்தை நீக்கி, சக்தியைத் தூண்டி, படையினரின் ஒரு புதிய சாதனையை என் மூலம் செய்தார் சொக்கலிங்கம். இந்த ஹில் போஸ்டை அவருடைய தூண்டுதல் இல்லாமல் என்னுல் பிடித்திருக்க இயலாது. ஆனுல் அந்த வெற்றியின் பயனை அனுபவிக்க முடியாமல் சொக்கலிங்கம் தமது இரு கால்களையும் இடது கையையும் இழந்து விட்டாரே! இதை என்னுல் தாங்க முடியவில்லையே!''

விர்ரென்று தாழப் பறந்து வந்தது ஒரு விமானம். அதன் வால் புறத்திலிருந்த மூவண்ண வட்டம் வெய்யிலில் பளபளத்தது. எல்லோருடைய பார்வையும் வானத்துக்கு உயர்ந்தது. அது ஓர் இண்டர்ஸெப்டர் நாட். இந்தியாவில் செய்தது. எல்லைக்கோட்டை ஒட்டியிருந்த இந்தியச் சாவடி வரை சென்று கிழக்கு நோக்கித் திரும்பிற்று. நாட் விமானம் பறப்பதைக் காணும்போதெல்லாம் படை வீரரின் உதிர நாளங்கள் விம்மிப் புடைத்தன.

வெளிப்புறத்தில் நிஸ்ஸான் ஜீப் வந்து நின்றது. சொக்கலிங்கம் படுத்திருந்த ஸ்ட்ரெச்சரை நலுங்காமல் ஜீப்பினுள் வைத்தார்கள் நால்வர். இன்னும் இரு நோயாளிகள் அதில் ஏறி உட்கார்ந்தனர். இருவரும் முதல் நாள் போரில் காயமடைந்த வீரர்கள்.

''இந்த ஜீப் 'தவ்வி' ஆற்றைக் கடந்து எப்படிப் போகும்?'' என்று கர்னல் ஜனர்த்தனம் வினவினுர்.

''நெஸ்ஸஸிடி—மதர் ஆஃப் இன்வென்ஷன் ஸார். நமது தொழிற்சாலையில் பெரிய பெரிய எஞ்சினீயர்கள் இருக்கிறுர்கள். நீரிலே நிற்கும் 'டக்' வண்டிக்கும் கரையோரத்துக்கும் ஓர் இணைப்பைத் தயாரித்து விட்டார்கள். இரவுக்கிரவே, ஜீப்பை 'டக்'கினுள் ஏற்றி விடுகிறுர்கள். டக் ஜீப்புடன் எதிர்க் கரைக்குச் செல்லுகிறது. அந்தக் கரையிலும் ஒரு பாலம் இருக்கிறது. அதன் வழியாக ஜீப் இறங்கி விடுகிறது. இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்த ஆம்புலன்ஸ் ஜீப் பெரிய ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர்ந்து விடும்.'' மேஜர் ஜான்ஸன் பதிலிறுத்தார்.

''உண்மையில் ஜான்ஸன், நம்முடைய பையன்கள் இந்த நெருக்கடிக் காலத்தில் காட்டியிருக்கும் முன்யோசனை, செயல் திறமை இவற்றுக்கு ஈடு இணையே இல்லை.

ஒருவரையாவது இதைச் செய், அதைச் செய் என்று நாம் உத்தரவு தரவில்லை. இரவும் பகலும் தாங்களாகவே உழைத்து அவர்கள் வேலையை முடித்து விட்டார்கள். 'வி ஆர் மேக்கிங் ஹிஸ்டரி ஜானி, நாட் ரைட்டிங் இட்.' (We are making history Johnny, not writing it) என்றுவது நமது நாட்டினர்கள் இதை உணரும் காலம் வரும்.'' உற்சாகத்துடன் கூறினார் கர்னல் ஜனார்த்தனன்.

'ஸ்டெரிலைஸ்' செய்த கொதி நீரில் டீத் தூளும் சர்க்கரையும் போட்டு டப்பாப் பாலைக் கலந்து பீங்கான் மக்கில் கொண்டு வந்தான் நாயக் கோவிந்தன். அந்தத் தேநீரின் சில துளிகளைச் சொக்கலிங்கத்தின் வாயில் செலுத்தினார் பரசுநாத். சொக்க லிங்கத்தின் கண்கள் பெருக்கெடுத்தன. இருவரையும் தனியே விட்டு மற்றவர்கள் விலகினர்.

சரளைக் கல் பாதையில் அலுங்காமல் நகர்ந்தது அந்த ஆம்புலன்ஸ் வண்டி! ''போலோ ஹவல்தார் சொக்கலிங்கம் கீ!'' பரசுநாத் டோக்ரா கையை உயர்த்தினார்.

'ஜே'—கூடாரத்தினுள் படுக்கையில் இருந்த நோயாளிகள் உட்படப் பலர் பலத்த கோஷமிட்டனர்.

கியரை மாற்றி வேகத்தை அதிகப்படுத்தினான் ஆம்புலன்ஸ் டிரைவர். சுபேதார் மேஜரின் கையில் பிடித்திருந்த சங்கிலியைத் தறித்துக் கொண்டு ஒரேயடியாக அம்பைப் போல் பாய்ந்தது சொக்கலிங்கத்தின் நாய் நிம்மி. பந்து போல் உருண்டு அந்த ஜீப்பைப் பின்தொடர்ந்தது. ஒரு கணம் வேகத்தைத் தணித்தது ஜீப். பிறகு விரைவாகச் செல்லத் தொடங்கிற்று.

தொலைவில் இரண்டு புள்ளிகள் தெளிவாகத் தெரிந்தன. ஒன்று அந்த ஆம்புலன்ஸ் மற்றது—நிம்மி—சொக்கலிங்கத்தின் பைரவம்!

இராணுவ இரகசியத்தை முன்னிட்டு நாமும் அந்த இடத்தின் பெயரைக் குறிப்பிடப் போவதில்லை. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் போர்நிறுத்த எல்லைக் கோட்டுக்கு மேற்கே என்று மட்டும் குறிப்பிடுவோம். படைத் தலைமைக் காரியாலயத்தினரே தாங்கள் முதலில் போர்நிறுத்தக் கோட்டைத் தாண்டிய பிரதேசத்தை 'பாயிண்ட் ஏ' என்றும் இரண்டாவதை 'ஸெக்டர் பீ' என்றும் கூறுகிறார்கள். 'அந்த ஸெக்டர் பீ'தான் நமது களம். உதிரத்தால் மெழுகிக் கைப்பற்றிய அந்தத் தளத்தை வியர்வையைக் கொட்டி வசிப்பதற்கு வசதியான இடமாகச் செய்திருந்தார்கள் படைவீரர்கள், ஹெலிகாப்டரில் அமர்ந்து தொலைநோக்கு ஆடியின் மூலம் அந்த ஸெக்டரைப் பார்வையிட்ட பாதுகாப்பு மந்திரி நமது வீரர்களின் தோளிலும் விரலிலும் இத்தனை வலிவும், கற்பனைத் திறனும் இருக்கின்றனவா என்று வியந்தார்.

மேற்பார்வைக்கு அது மரங்களும் புதர்களும் அடர்ந்த மலையடிவாரம் போலவே தோன்றியது என்றாலும் அந்த ஸெக்டரில் கம்பெனி முழுவதும் தங்கக் கூடிய வாசஸ்தலம் இருந்தது. மண்ணுக்கடியில் பண்டகசாலை, உணவுச்சாலை, அலுவலகங்கள், கார் பார்க், அதிகாரிகளுக்கும், ஜூனியர் அதிகாரிகளுக்கும் மெஸ், குளியலறை, கக்கூஸ் கேளிக்கை அறை இவ்வளவும் இருந்தன. அங்குலம் அங்குலமாக முன்னேறி, ஆள்காவு கொடுத்து அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்றித் தங்கள் இருப்பிடத்தை வசதியாக அமைத்துப் பீரங்கித்தளத்தை நிறுவியபிறகுதான் கர்னல் ஜனார்த்தனம் தாங்கள் அந்தப் பாகிஸ்தான் போஸ்டைக் கைப்பற்றிய விவரத்தை மேலிடத்துக்குத் தெரியப்படுத்தினார். அரைகுறை வேலை செய்து விட்டுத் திரும்பி வர அவர் தயாராக இல்லை. படைவீரர்கள் வியர்வையைச் சிந்தி மண்ணை இளக்கி 'ஸெக்டர் பீ'யின் காவல்சாவடியைப் பூமிக்கடியில் செதுக்கினார்கள். இந்தியப் படைகள் அந்த ஸெக்டரைக் கைப்பற்றியதை ஒரு வீர காவியமாக வரைய வேண்டும்.



என்று சொன்னால் அவர்கள் அமைத்த அழகுப் பாசறையை ஓவியமாகத்தான் எழுதிக் காட்ட வேண்டும்.

மணி இரவு ஏழரை. ஜூனியர் அதிகாரிகள் மெஸ். ஏழு பேர்கள் அங்கு அமர்ந்திருந்தனர். அனைவரும் பூட்ஸிலிருந்து ஹெல்மட் வரையில் முழு இராணுவ உடை அணிந்திருந்தனர். இடது தோளிலிருந்து 'ஸ்டென் கன்' தொங்கிற்று. தலையில் வலை மூடிய இரும்புத் தொப்பி. முதுகுக்குப் பின்னால் கன சதுரக் கான்வாஸ் பை. எந்த நிமிஷமும் அவர்கள் புறப்பட்டு எதிரியைத் தாக்கத் தயார். குழியில் பதுங்கித் தங்கள் செக்டரைப் பாதுகாக்கவும் தயார். ஒவ்வொருவர் முன்னாலும் ஒரு சிறிய மண் மேடை. அதில் ஒரு கிளாஸில் சிவப்புத் திரவம் இருந்தது. மெஸ் ஆர்டர்லி ஒரு பீங்கான் தட்டில் ஈரல் துண்டுகள், பாதி வெந்த முட்டை, கிழங்கு வறுவல், முந்திரிப் பருப்பு அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஒவ்வொருவர் முன்பும் நின்றான். தங்களிடமிருந்த மெஸ் டின்னில் அவர்கள் சிறிதளவு எடுத்து இட்டுக் கொண்டார்கள்.

''ஈஷ்வர்சந்த்! என்னுடைய அறையில் கட்டிலின் மேல் ஒரு காகிதப் பொட்டலம் வைத்திருக்கிறேன். அதில் உள்ளதைப் பிரித்து எல்லோருக்கும் கொடு.'' ஜமேதார் சுச்சானந்த் கூறினார். மற்ற ஆறு பேர்களும் அவருடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தனர்.

''இன்று நகரத்தில் ஒரே குதூகலம். இந்த 'ஸெக்டர் பீ'யை நாம் கைப்பற்றிய விவரத்தை இன்றுதான் ரேடியோவில் சொல்லியிருக்கிறார்கள். மூலைக்கு மூலை ரேடியோவின் அருகில் மக்கள் நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறார்கள். எங்களுடைய ட்ரக் நெடுஞ்சாலை வழியாகச் சென்றபோது பொதுமக்கள் எங்களை ஷர்பத்தால் முழுகடித்தார்கள். எங்கள் நெற்றியில் திலகமிட்டு மாலை போட்டு வாழ்த்தினார்கள். எல்லோருக்கும் மிட்டாய்ப் பொட்டலம். எங்கு பார்த்தாலும் 'ஜிந்தாபாத், பாரத் சைனிக் ஜிந்தாபாத்' 'யுத்விராம் ரேகா பார்கரோ!' ஒரே கோஷம்.''

''நம்முடைய கௌரவம் தப்பிற்று சுச்சானந்த்.'' சுபேதார் லக்கிராம் கூறினார். ''1962 ஆண்டின் இறுதியில் நாங்கள் தேஜ்பூரிலிருந்து திரும்பி வந்த போது பொதுமக்களின் முகத்தைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருந்தது. ஹோட்டல்களிலும் பொது ஸ்தலங்களிலும், சினிமாக்களிலும் நம்மை ஜனங்கள் உற்றுப் பார்த்தாலே எனக்குத் தலையிறக்கமாக இருக்கும். இத்தனைக்கும் அவர்கள் வாய் திறந்து ஒன்றுமே கூறவில்லை!''

ஈஷ்வர்சந்த் பொட்டலத்தைப் பிரித்து எல்லோருக்கும் மிட்டாய் வழங்கினான். ''உனக்கும் கொஞ்சம் வைத்துக் கொள் ஈஷ்வர்!'' ஜமேதார் சுச்சானந்த் கூறினார். ''இந்த மாதிரி சுத்தமான நெய்யில் செய்யப்பட்ட பத்தீஸா இந்தியாவில் எங்குமே கிடைக்காது. தாவர நெய் இந்த மானிலத்துக்குள்ளேயே வரக் கூடாது என்பது தெரியுமல்லவா?''

''நம்முடைய பாகிஸ்தானி நண்பர்கள் விட்டுச் சென்றிருக்கும் ரேஷன்தான் இன்னும் இரண்டு மாதங்களுக்குக் காணும் போலிருக்கிறதே! எத்தனை வருஷங்களுக்குப் பிறகு நான் இந்த பாஸ்மதி அரிசி சாப்பிடுகிறேன் தெரியுமா? சியால்கோட், மாண்ட்கோமரி ஆகிய பிரதேசங்களில் மட்டுமே விளையும் விசேஷ அரிசி இது.'' சுபேதார் வஜீர்சந்த் கூறினார். அவருடைய விழிகள் பளபளத்தன.

''பத்து டப்பா நிறையப் பாடம் செய்த புழுக்கள் இருந்ததாக ஹவல்தார் நிக்காசிங் சொன்னாரே, அது வாஸ்தவம்தானா?'' ஜமேதார் பக்ஷி க்வார்ட்டர் மாஸ்டரை வினவினார். அவர்தான் பண்டகசாலைப் பொறுப்பாளி.

''ஆமாம், ஆமாம். அனைத்தும் நீளமான மண்புழுக்கள். எல்லாம் சைனீஸ் ரேஷன். அவர்கள் தவளைக்கால், மண் புழு, பாம்பு எல்லாம் சாப்பிடுவார்கள் அல்லவா?'' என்று பதிலிறுத்தார் அவர்.

''அப்படியானால் இந்தப் போஸ்டுகளில் சீனர்களும் இருந்தார்களா?'' பக்ஷி ஆச்சரியத்துடன் வினவினார்.

''அதில் என்ன சந்தேகம் பக்ஷி சாஹப். அவர்களுடைய ரேஷனை சிகரெட், தீப்பெட்டி, உணவுப் பொட்டலம் அனைத்தையும் நாம் கைப்பற்றவில்லையா? அவர்களுடைய துணை இல்லாமலா பாகிஸ்தான் நம்மிடம் வாலாட்டுகிறது?''

சாராயம் இரண்டாவது ரௌண்ட் வழங்கப்பட்டது. ''இந்த லால்பானி (செந்திரவம்)

வெற்றியின் ரகசியம்

யுத்தத்தில் வெற்றி தேடித் தருபவை, டாங்கிகளோ, துப்பாக்கிகளோ, மற்ற ஆயுதங்களோ அல்ல. நமக்கு நல்ல டாங்கிகளும், நல்ல துப்பாக்கிகளும் தேவை என்பதில் சந்தேகமில்லை. உண்மையில் முக்கியமானது என்னவெனில் டாங்கைச் செலுத்தும் மனிதர்களும் துப்பாக்கிகளுக்குப் பின்னால் நின்று இயக்கும் மனிதர்களும்தாம். உலகில் கிடைத்தற்கரிய டாங்கி கிடைத்து, அதை இயக்க, நல்ல பயிற்சியும் நெஞ்சு உறுதியும் பெற்ற வீரர்கள் இல்லையெனில் பயனில்லை. ஆகவே, போரில் வெற்றிக்கு முக்கியமான அம்சம் மனிதன்தான்!

— பீல்டுமார்ஷல் மாண்ட் கோமரி

லட்சியப் போர் நடத்துவதாகக் கூறி வீர முழக்கம் செய்வதெல்லாம் சரிதான். ஆனால் உண்மையிலேயே மனிதர்கள் ஒருவரையொருவர் கொன்று குவிப்பது அவசியம்தானா? தி. சா. ராஜு அவர்கள் ராணுவத்திலேயே பணி புரிபவர். யுத்தகளத்தின் மத்தியில் எங்கோ ஒரு பாசறைக் கூடாரத்துக்குள்ளிருந்து மண்ணெண்ணெய் விளக்கின் மஞ்சள் ஒளியில் இந்தக் கதையை எழுதிக் கல்கி வாசகர்களுக்காக அனுப்பி வைத்திருக்கிறார். கல்கி ராணுவ மலரில் இதனை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

சிறப்புச் சிறுகதை

கூட அவர்கள் விட்டுச் சென்றதுதானா?'' சுபேதார் தர்மராஜன் வினவினார்.

''இல்லை. இல்லை. இது அசல் ஜெய்ப்பூர் சரக்கு. ஆனால் பாதுகாப்பு மந்திரி தயவு செய்தாரானால் நாம் மர்ரிக்குக்கூடச் சென்று வரலாம். அங்கே எத்தனை சாராயக் கிடங்குகள் தெரியுமா?'' நாவினால் உதட்டைத் தடவி விட்டுக் கொண்டார் வஜீர் சந்த். ''மர்ரியில் பீர் ரொம்ப விசேஷம்.'' அவர் தொடர்ந்து கூறினார்.

''மேலே என்ன செய்ய வேண்டும் என்பது இராணுவ கமாண்டர்களின் பொறுப்பு என்று லோகசபையில் பிரதம மந்திரி சொல்லியிருக்கிறாரே. ஒரு வேளை நாம் மர்ரி வரையில் சென்றாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.'' சுச்சானந்த் உரைத்தார்.

''இது என்றோ நடந்திருக்க வேண்டிய செயல். நாம் காலம் கடந்து விழித்துக் கொண்டிருக்கிறோம்.'' தர்மராஜன் சுத்தமான ஹிந்தியில் தெளிவாகப் பேசினார். மற்றவர்கள் அவர் கூறுவதைச் சிரத்தையுடன் கேட்டார்கள். அவர் அந்த ரெஜிமெண்டில் கல்வி போதகர் பொறுப்பை வகிப்பவர். நிறையப் படித்தவர். அதுவும் ஒன்றிரண்டு அவுன்ஸ் செந்திரவம் உள்ளே போனதும் அவருடைய பேச்சில் சூடு பிறக்கும். ஒளிவு மறைவு இல்லாமல் அப்பட்டமாகப் பேசித் தள்ளி விடுவார்.

''ஹம்ப்ரி இவான்ஸ் எழுதிய 'இந்தியாவின் திம்மையா' என்ற புஸ்தகத்தை உங்களில் யாராவது படித்ததுண்டா? ஜஜீலாக் கணவாயைக் கைப்பற்ற அவர் பிரயோகித்த போர்த் தந்திரங்கள் குறித்து அவர் அற்புதமாக எழுதியிருக்கிறார். அத்தகைய போர் முறைகளைக் கைக் கொண்டு நமது தளபதிகள் சாஹஸம் புரிந்திருக்கிறார்கள். 1948ல் அந்தப் படைத் தலைவர்களுக்கு இன்னும் ஒரு வாரம் அவகாசம் கொடுத்திருந்தால் சர்வதேச எல்லை வரை நமது படைகள் சென்றிருக்கும். ஆஜாத் காஷ்மீர் என்ற செயற்கைப் பிரதேசமே ஏற்பட்டிராது. பந்தோபஸ்து சபை குறிப்பிட்ட தேதிக்கு ஒரு நாள் முன்னதாகவே நாம் போர் நிறுத்தப் பிரகடனம் செய்தோம். நம்முடைய நல்ல தன்மையை உலகத்துக்கு வெளிக் காட்டிக் கொண்டோம். சமுதாயத்தில் நல்ல தன்மைக்குப் பலவீனம் என்பது மாறு பெயர், அது தெரியுமா?'' — தர்மராஜனின் கண்கள் சிவந்தன. அவர் தமது கிளாஸை ஒரேயடியாகக் காலி செய்துவிட்டு வறுவலை அள்ளி வாயில் போட்டுக் கொண்டார். ''இந்தீ 'பீ செக்டரை' நாம் கைப் பற்றித் தளம் அமைத்துக் கொண்டதும் உள்ளூர்க் கிராமவாசிகள் நம்மிடம் வந்தார்கள். நமது வெற்றியில் பெருமகிழ்ச்சி தெரிவித்தார்கள். பல சிறுவர்கள் கையில் மூவண்ணக் கொடியும் இருந்தது. இந்தப் பிரதேச மக்களுக்கு நாம் மண்ணெண்ணெயும் சர்க்கரையும் விநியோகித்ததை உடனடியாகப் படம் பிடிக்கும்படி கூறினேன். இவர்கள் சர்க்கரையைக் கண்டு எவ்வளவு நாட்கள் ஆயிற்று தெரியுமா? இங்கே எடுத்த படங்களை உடனடியாக அமெரிக்க சஞ்சிகைக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டேன். இந்த மாதிரி வேலையைத்தானே பாகிஸ்தான் இவ்வளவு நாட்கள் செய்து உலக அபிப்பிராயத்தை நம் நாட்டுக்கு எதிராக மாற்றியது? ஜபருல்லாகான் கொஞ்சப் பிரசாரமா செய்தார்?''

தம்முடைய கிளாஸில் இன்னும் ரம்மை வார்க்க வந்த ஈஷ்வர்சந்தை அவர் தடை செய்தார். ''போதும், தம்பி! இனி சாப்பிட மாட்டேன்'' என்று கூறிவிட்டு நண்பர்களை நோக்கி மறுபடியும் பேசினார். ''எப்போதுமே சுத்தத் தங்கம் எந்த வேலைக்கும் பயன்படாது. அதிலே செம்புப் பொடி வைக்க வேண்டும் என்பார்கள் பொன்னாசாரிகள். நமக்கு அசோகன் வேண்டியதுதான். ஆனால் கூடவே கௌடில்யரையும் மறக்கக் கூடாது.''

ஊதலின் ஓசை விட்டு விட்டு ஒலித்தது. அனைவரும் எழுந்திருந்து துப்பாக்கியை உயர்த்திப் பிடித்தபடி தங்களுடைய காவல் நிலையங்களுக்கு விரைந்தார்கள். கண்ணாடித் தம்ளர்கள் சிதறின.

மறுபடியும் அவர்கள் தங்களுடைய மெஸ்ஸில் வந்து அமர்ந்தபோது சுச்சானந்த், ''சுபேதார் மேஜர் ஸாஹிப் வரவில்லையே! அவர்தானே இன்றையப் பார்ட்டியின் ஹீரோ!'' என்றார்.

''டோக்ரா ஸாஹிப் சாப்பாட்டுக்கு வர மாட்டாராம். உங்களை யெல்லாம் உணவருந்தச் சொன்னார்'' என்றான் மெஸ் ஆர்டர்லி.

நடுவில் வைத்திருந்த உணவுக் கிண்ணங்களிலிருந்து தங்களுக்குத் தேவையானவற்றை எடுத்து அவர்கள் பரிமாறிக் கொண்டார்கள். ஈஷ்வர்சந்த் சூடான சப்பாத்திகளைக் கொண்டுவந்து வைத்தான். தாலமும் கரண்டியும் உரசி ஒலித்தன.

''ஹவல்தார் சொக்கலிங்கத்தை 'எவாக்குவேட்' செய்து விட்டார்களாம். ஏ. டி. எஸ். ஸி. லிருந்து வந்த நாயக் கோவிந்தன் எனக்குச் சொன்னான்.'' லக்கிராம் பேச்சைத் தொடங்கினார்.

''தெரியுமே! நமது கர்னல் ஸாஹிப், சுபேதார் மேஜர் இருவருமே அங்கு சென்

திருந்தார்கள். டோக்ரா சாஹிப் கதறிக் கதறிக் கண்ணீர் விட்டாராமே!'' சுச்சானந்த் மெதுவாகக் கூறினார். ''பாவம், சொக்கலிங்கம் ஒரு மாவீரன். அவ்வளவு புத்திசாதுர்யமும் உடல் வலிமையும் அவரிடம் இருக்கும் என்று யாருமே எண்ணியதில்லை.''

''புத்தி சாதுரியத்துக்கும், உடல் வலிமைக்கும் என்றுமே நம்மிடம் குறைவு இருந்ததில்லை, தோழர்களே!'' சுபேதார் தர்மராஜன் பிரசங்கம் செய்வது போல் பேசத் தொடங்கினார். மற்றவர்கள் கவனமாகக் கேட்டனர். சுச்சானந்த் மட்டும் லக்கிராமின் காலை மிதித்துச் சைகை செய்தார். ''ஒரு பெக் அதிகமாக ஊற்றி விட்டீர்களோ?'' என்று குறும்புத்தனம் கொப்புளிக்க வினவினார்.

''பொறு, பொறு, அவர் சூடேறியிருக்கும் போது வெகு நன்றாகப் பேசுகிறார். அவர் படித்த நூல்களிலிருந்தெல்லாம் மேற்கோள்கள் வருகின்றன. நமக்கும் உபயோகமான பொழுதுபோக்கு.'' ரகசியமாகப் பதிலிறுத்தார் லக்கிராம்.

உணவுத் தாலங்கள் நீக்கப்பட்டுச் சிறுசிறு பீங்கான் தட்டுக்கள் வைக்கப்பட்டன. அதில் குளிர்ந்த கஸ்டர்ட் பரிமாறப்பட்டது. கஸ்டர்டில் மணி மணியாகச் சிறு பழங்கள் மிதந்தன. ''இது என்ன பழம் என்று தெரியவில்லையே..'' லக்கிராம் வினவினார். அதை அனுபவித்துச் சுவைத்தார்.



'' 'க்ளாஸ்' என்று சொல்கிறார்கள் இங்கெல்லாம். இப்போதுதான் இந்தப் பக்கத்தில் பழ ஸீஸன் ஆரம்பம். இன்னும் ஒரு மாதம் சென்றால் ஆப்பிள் கிலோ ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும். வாதுமையும், அக்ரோட்டும், பிஸ்தாவும் வேண்டிய அளவு சாப்பிடலாம்.'' வஜீர்சந்த் மொழிந்தார்.

'ஈசுவர்' மெஸ் ஆர்டர்லியை விளித்தார் தர்மராஜன். ''சுபேதார் மேஜர் ஸாஹிப்புக்குச் சாப்பாடு கொண்டு போய்க் கொடுத்தாயா?'' கனிவுடன் வினவினார்.

''அவர் எதுவும் வேண்டாம் என்று மறுத்து விட்டார் சாஹிப்.'' ஈஸ்வர்சந்த் பதிலிறுத்தான்.

விருந்துச் சாப்பாட்டைச் சம்பிரமமாகச் சாப்பிட்ட பிறகு தர்மராஜனுக்குச் சுபேதார் மேஜர் பரசுநாத் டோக்ராவைச் சந்திக்க ஆவல் உண்டாயிற்று. அவர்களுடைய மெஸ்ஸுக்குத் தலைவர் அவர்தான். அது மட்டுமல்ல. அன்றைய சிறு விருந்துக்குக் காரணமாயிருந்தவரும் அவரே. கடைசியில் சுபேதார் மேஜரே அதில் கலந்துகொள்ள முடியாமல் போனது குறித்து மெஸ்ஸின் எல்லா உறுப்பினர்களுமே வருத்தம் அடைந்தார்கள்.

ஜூனியர் கமிஷன்ட் அதிகாரிகள் மெஸ்ஸில் ஒரு வாரண்ட் ஆபீஸர் — அவர்தான் பாசறை போஸ்ட்மாஸ்டர் உள்படப் பதினெட்டுப் பேர் அங்கத்தினர்கள். அவர்களில் பெரும்பாலோர் ஹரியானாப் பிரதேசத்தைச் சேர்ந்த ஜாட், அஹீர் ஆகியோர். அவர்களுடைய பீரங்கிப் படையிலும் அவ்வண்ணமேதான். ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், சென்னை ஆகிய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஓரிருவர் இருந்தனர். அவர்களுடைய மன இயல்பும் ஆசாரமும் வெவ்வேறானவை. என்றாலும் மணியிடை நூலிழை போல் அவர்களுக்குள் ஓர் ஒற்றுமை உணர்வு இருந்தது. ஒரே கையின் ஐந்து விரல்களைப் போல் அவர்கள் விளங்கினார்கள்.

இந்தியர்களை மாநில — இனம் வாரியாகப் பிரித்துத் தனித் தனிப் படைப் பகுதியாகச் செய்தது ஆங்கிலேயர்கள்தான். தி மெட்ராஸ், தி பஞ்சாப், தி ராஜ்புத், தி பலூச், தி குமாவன் என்று நாட்டின் பல்வேறு பகுதியைப் பல பிரதேச இனங்களாகப் பிரித்து அவர்கள் இந்திய ராணுவத்தை அமைத்தார்கள். விடுதலை அடைவதற்கு முன்புவரை, படையினரை இவ்வாறு பிரிப்பது தவறு, இது பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம் என்றுதான் தேசிய நோக்குடையவர்கள் கருதினார்கள். செயல்களின் உள் நோக்கை ஆழ்ந்து கண்காணிக்கக் கூடிய சர்தார் பட்டேலே இவ்வாறு உரை செய்தார். ஆனால் சிறிதுகால அனுபவத்துக்குப் பிறகு அவரே தமது எண்ணத்தை மாற்றிக்கொள்ளும்படி ஆயிற்று. ஒரே மொழி பேசும் ஒரேவித ஆசாரமும் மன இயல்புமுள்ள இளைஞர்களைக் குறிப்பிட்ட பணிக்குச் சிறப்பாகத் தயார் செய்வது தேசிய நலனுக்கு நன்மை பயப்பதாகும் என்று அவர்கள் முடிவுக்கு வந்தனர். அத்தகைய படைப்பகுதியில் கட்டுப்பாட்டை அனுஷ்டிக்க வைப்பது எளிதான செயலாக இருந்தது. சீக்கியர்கள் நல்ல முன்னணிப் போர்வீரர்களாக விளங்கினார்கள். தட்சிணப் பிரதேசவாசிகள் பீரங்கிப் படையில் சிறந்தவர்களாக இருந்தனர். கடுவாலிகள் மலைப் பிராந்தியப் போரில் சகிப்புத்தன்மையைக் காட்டினார்கள். ஆகவே இராணுவத்தின் போரிடும் பகுதியில் ரெஜிமெண்டுகள் இனவாரியாகவே இருந்தன. அவர்களுக்கு உதவி செய்யும் சிக்னல், இன்ஜினீயரிங் — இவற்றை ஸர்வீஸஸ் என்று குறிப்பிடுவார்கள். எல்லைப் பகுதியில் பாரத நாட்டின் பல்வேறு பிராந்தியத்தினரும் இருந்தனர். படைப் பிரிவான ரெஜிமெண்டல் பகுதியிலும்கூட இந்தப் பிரதேசப் பிரிவுக் கொள்கையை நூறு சத விகிதம் பின்பற்ற முடியவில்லை. ஆகவே கல்வி போதனையாளர், கணக்கர்கள், செய்தி அனுப்புவோர், தபால் பிரிவினர் ஆகியோர் மற்றப் பிராந்தியத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். ஆனால் இந்தியப் படையினர் உலகத்தின் எந்தப் பகுதியில் எத்தகைய பணி புரிந்து கொண்டிருந்தாலும் அவர்கள் ஒரே சாதி

யைச் சேர்ந்தவர்களாகத்தான் விளங்கினார்கள். அதுதான் ஏற்றமிகும் பாரத சாதி.

''எஸ். எம். ஸாஹிப்'' என்று பணிவுடனும் கனிவுடனும் அழைத்துக் கொண்டே பரசுநாத் டோக்ராவின் பங்கருக்குள் நுழைந்தார் தர்மராஜன். பரசுநாத் ஒரே ஒரு பைஜாமாவும் குருத்தாவும் அணிந்து மண்மேடைக் கட்டிலில் உட்கார்ந்திருந்தார். எதிரே ஓர் ஆணியில் இராணுவ உடைகளும் இன்னோர் ஆணியில் உடைக்கு மேல் அணிந்து கொள்ள வேண்டிய கச்சை, குறுக்குவார், முதுகுப் பை, தண்ணீர் பாட்டில் ஆகியனவும் இருந்தன. அதற்குக் கீழே பளபளக்கும் கணுக்கால் பூட்ஸ், அதன்மேல் மேஜோடு மடித்து வைக்கப்பட்டிருந்தது.

அவருடைய பங்கருக்குள் நறுமணம் கமழ்ந்து கொண்டிருந்தது. ஒரு மடக்கு ஸ்டூலின் மேல் ஒரு சிறிய படம், அதற்குப் பக்கத்தில் பழுப்பு அட்டை போட்ட சிறிய கீதைப் புத்தகம். அதன் அருகில் ஒரு சாம்பிராணி மெழுகு புகைந்து கொண்டிருந்தது.

பரசுநாத் இன்னொரு மடக்கு ஸ்டூலை எடுத்துப் போட்டு அதில் தர்மராஜனை உட்காரும்படி வேண்டினார். அவருடைய முகம் வாடியிருந்தது. தர்மராஜன் அமைதியாக உட்கார்ந்து கொண்டார். ''உங்களுடைய தனிமைக்குப் பங்கம் விளைவித்து விட்டேன்.'' மன்னிப்பை வேண்டும் குரலில் பேசினார் தர்மராஜன். ''அப்படி ஒன்றும் இல்லை சுபேதார் சாகிப். விருந்து நல்ல முறையில் நடந்ததா?'' தணிந்த குரலில் வினவினார் பரசுநாத் டோக்ரா.

''நடந்தது எஸ். எம். ஸாஹிப். இன்று ஜவான்களுடைய மெஸ்ஸிலும் பெருவிருந்து. நாம் எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய டப்பா ரேஷன் அனைத்தையும் தீர்த்து விடும்படி க்வார்ட்டர் மாஸ்டர் உத்தரவிட்டார். கர்னல் ஸாஹிப் சாராயப் பீப்பாயைத் திறந்து விட்டுப் போனார். பிறகு உற்சாகத்துக்குக் கேட்பானேன்? பார்க்கப் போனால் இந்த பீ ஸெக்டரைக் கைப்பற்றியதில் நாடே புதிய உற்சாகம் பெற்றிருக்கிறது. பாதுகாப்பு மந்திரி இந்த நிகழ்ச்சியை அறிவித்தபோது லோக சபையே அதிர்ந்துவிடும்போல் கரகோஷம் கேட்டதாம். இந்த அறிவிப்பை அவர் இரண்டு முறைகள் படிக்கும்படி நேரிட்டதாம்!''

''ஆனால்... ஆனால்...'' — பரசுநாத் தயங்கினார். ''இதற்குக் காரணமாயிருந்த ஹவல்தார் சொக்கலிங்கம் படுகாயமடைந்துவிட்டார். இங்குள்ள டாக்டர்கள் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். அவர்கள் மேலும் தவறில்லை. அவர்களிடம் தேவையான உபகரணம் இல்லை, ஆளுதவியும் கிடையாது. பெரிய ஆஸ்பத்திரியில் அவர் குணமடைந்து விடுவார் என்று மேஜர் ஜான்ஸன் கூறினார். ஆனால் அவருடைய இரண்டு கால்களும் ஒரு கையும் போனவைதானே!''

டோக்ராவின் உரையாடலை யெல்லாம் அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார் தர்மராஜன்.

''சுபேதார் சாஹிப், நண்பர் சொக்கலிங்கம் உங்களுடைய ஊருக்குப் பக்கத்தில் வசிக்கிறவரா? அவர்களுடைய குடும்பத்தைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

தர்மராஜன் உதட்டைப் பிதுக்கினார். ''நான் வட சென்னையைச் சேர்ந்தவன். நாங்கள் எல்லாம் கடற் கரை ஜில்லாக்களிலிருந்து பிழைப்பை நாடிப் பட்டணத்துக்கு வந்தவர்கள். அவர் தெற்குச் சீமையைச் சேர்ந்தவர். எங்களுடைய மொழியிலும் சமயத்திலும் ஆழ்ந்த பற்றும் பக்தியுமுள்ளவர்கள். உண்மையான மனிதர்கள். சொக்கலிங்கத்தின் மனைவி இறந்து வெகு காலமாகிறது. அவருக்குக் குழந்தைகள் ஏதும் கிடையாது. வயதான தாயார் மட்டும் தான் இருப்பதாக நினைவு. பரம்பரை பரம்பரையாகக் கோயிலுக்குப் பணி செய்யும் குடும்பம் அவர்களுடையது. ஓதுவார்கள் என்று அவர்களை அழைப்பார்கள். சாதாரணமாக அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் மிலிட்டரி போன்ற வேலைகளுக்கு வர மாட்டார்கள். புலால் உணவைப் பார்க்கவும் கூசுவார்கள்.''

''இங்கேயும் அவர் இறைச்சியைத் தொட்டதே இல்லையே!'' சுபேதார் மேஜர் உரைத்தார். ''லங்கரில் இறைச்சி உணவு ஆக்கும் நாளன்று அவர் சாப்பிடவே மாட்டாரே! நான் பல முறை பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம் வெறும் பால் மட்டும் அருந்துவார். அதுவும் சர்க்கரை இல்லாத பால். தினம் அவர் உண்ணுகிற உணவும் மிகக் குறைவு. இவ்வளவு கொஞ்சமான ஆகாரத்தை உண்டு நீங்கள் எப்படி உயிர் வாழ்கிறீர்கள் என்று நான்கூடப் பலமுறை அவரைக் கேட்டதுண்டு. 'எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பது கணக்கில்லை சாஹிப், எப்படிச் சாப்பிடுகிறோம் என்பதுதான் முக்கியம்' என்று அவர் பதிலிறுப்பார். நிறுத்தி, நிதானமாக ஒவ்வொரு பருக்கையாக வாயிலிட்டு உணவை மென்று குழம்பாக்கி உண்பார். ரொட்டியின் ஒரு சிறு துணுக்கைக் கூட வீணாக்க மாட்டார். உணவை வீணாக்குவது பாவமான செயல் என்று கூறுவார். நமது லங்கரில் வீணாகும் உணவைக் கண்டு அவர் கண்களில் நீர் பெருகும்.''

கன்னத்தில் கைவைத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தார் தர்மராஜன். ''எஸ். எம். ஸாஹிப்! நீங்கள் அவருடைய செய்கைகளைக் கூர்ந்து கவனித்திருக்கிறீர்கள். அவர் என் தாய்மொழியைப் பேசுபவராக இருந்தும் அவரை நான் சரியானபடி புரிந்து கொள்ளவில்லை. நீங்கள் சொக்கலிங்கத்தைப் பற்றிக் கூறிய பிறகுதான் எனக்கு நினைவு வருகிறது. அவர் அதிகம் பேசமாட்டார். பேசுகிற சிற்சில சொற்களிலும் தத்துவக் கருத்து ஒளிரும். நிறுத்தி, நிதானமாகப் பேசுவார். தொலைவிலிருந்து பார்ப்பவர்களுக்கு அவர் ஏதோ வியாக்கியானம் செய்வது போலிருக்கும். பொதுவாகப் பலரும் அவரிடமிருந்து விலகியே நிற்பார்கள். ஆனால் எல்லோருடைய மதிப்பையும் பெற்றவர் என்பதில் ஐயமில்லை.

''ஒரு நாள் இரவு எனக்கு ஆர்டர்லி அதிகாரி ட்யூட்டி. உணவு விநியோகத்தைப் பார்வையிடும் பொருட்டு ஜவான்கள் சாப்பிடும் இடத்துக்குச் சென்றிருந்தேன். சிப்பாய் டிரைவர் இந்தர்லால் சப்பாத்தியின் மிருதுவான நடுப்பகுதியை மட்டும் உண்டுவிட்டு

மிகுதியை வீணாக்கிக் கொண்டிருந்தான். அதைக் கவனித்த ஹவல்தார் சொக்க லிங்கம் என்ன சொன்னார் தெரியுமா?''

டோக்ரா கவனமாகக் கேட்டார்.

'' 'சந்திரகுப்தனது ஆட்சியில் அவனுடைய மந்திரியான சாணக்கியர் மாறு வேஷத்தில் நகர் வலம் வந்து கொண்டிருந்தாராம். ஒரு வீட்டில் வயதான கிழவி ஒருத்தி தன் மகனைக் கடிந்து கொண்டிருந்தாள். அந்தப் பையனும் ரொட்டியின் நடுப் பகுதியை மட்டும் உண்டுவிட்டு, மிகுதியை வீணாக்கியிருக்கிறான். 'நீயும் நமது அரசன் சந்திரகுப்தனைப் போல்தான் இருக்கிறாய். எல்லைப் புறப் பகுதிகளை அலட்சியம் செய்கிறாய்' என்று கிழவி கூறினாள். சாணக்கியருக்குத் திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவர் தமது நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளை வலுப்படுத்தத் தொடங்கினாராம். இந்த நிகழ்ச்சியைச் சுவையோடு விவரித்தார் சொக்கலிங்கம்.''

தமது வலது கையைத் தர்மராஜனின் முன்பு நீட்டினார் டோக்ரா. புறங்கை ரோமங்கள் குத்திட்டு நின்றன.

ஸாஹிப், அவருடைய கூற்று எக்காலத்துக்கும் பொருந்தும் உண்மையாகி விட்டதே!'' என்று துயரம் நிறைந்த குரலில் கூறினார்.

விளக்கை அணைக்க நேரமாகிவிட்டதை ஹவல்தார்-மேஜரின் ஊதல் நினைவுபடுத்திற்று. தர்மராஜன் விடைபெற்றுக் கொண்டு நடந்தார்.

சுபேதார் தர்மராஜன் எழுந்து சென்ற பிறகு டோக்ராவும் தம்முடைய அரிக்கன் விளக்கின் ஒளியைக் குறைத்தார். மறுபடியும் படுக்கையில் உட்கார்ந்தபோது அவருடைய மனம் கனத்தது. இருளில் எல்லா



உணர்ச்சிகளுமே பூதாகாரமாக உருவெடுக்கின்றன. வலி, துயரம், மகிழ்ச்சி, பாலுந்தல் அனைத்தும் இருட்டு வந்ததும் தனி வண்ணம் பெற்று விடுகின்றன. டோக்ராவுக்கு வயிறு பசித்தது. தாம் காலையிலிருந்து எதுவுமே சாப்பிடவில்லை என்ற விஷயம் அப்போது தான் அவருக்கு நினைவு வந்தது. கடந்த இரண்டு வாரங்களாகவே அவருக்குச் சரியான உணவு கிடையாது. கிடைத்த உணவை ஒரு கவளம் உண்டு, எடுத்த பணியைச் செய்து முடிப்பதற்கே நேரம் சரியாக இருந்தது. இடையிடையே ஒரு கோப்பைத் தேநீர் அருந்துவார். ஆனல் இன்றோ காலையிலிருந்தே பட்டினி. அதன் காரணமாகப் புலன்கள் தீவிரமாகி விழித்துக்கொண்டன.

அண்மையிலிருந்த சிறிய புத்தகத்தைப் பிரித்தார் டோக்ரா. அது கோரக்பூரில் அச்சானது. கெட்டியான அட்டை. எதிர்ப் புறத்தில் ஹவல்தார் சொக்கலிங்கம் தம் பாஷையில் ஏதோ எழுதியிருந்தார். அந்த நூலைப் பக்தியுடன் கண்ணில் ஒத்திக் கொண்டு அதனிடத்தில் வைத்தார். அந்தப் புத்தகம் சொக்கலிங்கத்தினுடையது. அதை அவருக்கு ரிஷிகேசத்தில் ஒரு சாமியார் கொடுத்தாராம். அதற்கு முன்பு சொக்கலிங்கத்துக்கு வடமொழி தெரியாது. அந்தப் புத்தகம் கிடைத்த பிறகு அதைப் படிக்கும் பொருட்டு அவர் ஸம்ஸ்கிருதம் கற்ருர்—மந்திர் பூசாரியின் உதவியைக் கொண்டு.

அவர்களுடைய மீடியம் கன் ரெஜிமென்ட் டேராடூனில் முகாமிருந்தது. அப்போதெல்லாம் சொக்கலிங்கம் அடிக்கடி விடுமுறை எடுத்துக் கொண்டு வெளியூர் செல்வார். பின்னல்தான் தெரிந்தது அவர் ரிஷிகேசத்துக்கு ஓடுகிருர் என்று. டேராடூனிலிருந்து ஹரித்துவார் வெகு சமீபம். அங்கிருந்து ரிஷிகேசத்துக்குச் சொக்கலிங்கம் கால்நடையாகவே சென்றுவிடுவாராம். ஒரு தரம் இரண்டு மாதங்கள் விடுமுறை கிடைத்த போது பத்ரிநாத்துக்கு நடந்தே சென்று வந்ததாக அவர் கூறியிருக்கிருர்.

''சொக்கலிங்கம், என் குரு சொக்கலிங்கம்! உங்களை நான் மறக்கவே மாட்டேன் ஐயா!'' டோக்ரா வாய் விட்டுக் கூறிப் படுக்கையில் சாய்ந்து கொண்டார்.

டோக்ரா பணி புரிந்து கொண்டிருந்த மீடியம் கன் ரெஜிமென்ட் சமீபத்தில்தான் வடகிழக்கு எல்லையிலிருந்து திரும்பியிருந்தது. காஷ்மீரில் நிலைமை மோசமாகவே இரண்டே நாட்களில் அவர்கள் இந்த எல்லைக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போதுதான் அவர் எதிரிப் படையைச் சேர்ந்த காப்டன் ரஷீத் அலியைச் சந்தித்தார். ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று பெரிய ஆஸ்பத்திரியில் காயமடைந்து கிடந்த தம்முடைய பாசறை வீரர்களைச் சந்தித்து இனிப்பு வழங்கும் பொருட்டு அவர் பட்டாலியன் கமாண்டரான கர்னல் ஜனர்த்தனனுடன் சென்றிருந்தார். தம்முடைய படைவீரர்களுக்கு மட்டும் அன்றி எதிரிப்படையைச் சேர்ந்த காயமடைந்த கைதி வீரர்களுக்கும் அவர் பத்திஸாவும் அம்ருதியும் வழங்கினர். காப்டன் ரஷீத் அலி தம்மிடமிருந்து மிட்டாய் பொட்டலத்தை வாங்கக் கைநீட்டியபோது அவர் திடுக்கிட்டார். அதில் உருது எழுத்துக்களில் 'சசி' என்று எழுதியிருந்தது. அவர் ரஷீதின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். அதே பாவனையுடன் ரஷீதும் டோக்ராவின் கண்களை நோக்கினர். தம்மை அறியாமல் அந்தக் கட்டிலின் வெள்ளை விரிப்பில் உட்கார்ந்தார் டோக்ரா.

''காப்டன் சாஹிப்!'' எதிரிப் படையைச் சேர்ந்த ரஷீத் அலியை மரியாதையுடன் விளித்தார் அவர். ''உங்களுடைய சொந்த ஊர் எது?''

ரஷீத் அலி பதிலிறுத்ததும் தீயைத் தீண்டியவரைப் போலத் திடுக்கிட்டார் அவர். ''நீங்கள் அந்த ஊரில் எத்தனை வருஷங்களாக வசிக்கிறீர்கள்?''

''ஏன், எங்கள் பாட்டனர் காலத்திலிருந்தே!''

''அந்த ஊரில் கேசவசந்த் டோக்ரா என்பவர் பெரிய துணிக் கடை வைத்திருந்தாரே, அவரைத் தெரியுமா?''

ரஷீத் அலி சிந்தனையில் ஆழ்ந்தார். சுபேதார் மேஜரை ஏறிட்டுப் பார்த்தார். ''தெரியும் என்று மட்டும் சொன்னல் போதாது, அவருடைய தம்பியின் மகள் சசிதான் என் மனைவி. அவளுக்கு இப்போது ரோஷனை என்று பெயர்.''

டோக்ராவின் கண் முன்பு உலகமே சுழன்றது. இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு கேவிக் கேவி அழுதார். ''காப்டன் சாஹிப், சசி என் மகள், என் மகள் கேப்டன் சாஹிப்!'' கூடியிருந்த அனைவரும் திக்பிரமை பிடித்தவர்கள்போல் நின்றிருந்தனர். காப்டன் ரஷீத் அலி தாழப் பணிந்து பரசுநாத்தின் பாதங்களைத் தொட்டு வணங்கினர். ''எனக்குத் 'துவா' கொடுங்கள், மாமு!'' அவர் பணிவுடன் வேண்டினர். ''உங்கள் மகள் சௌக்கியமாக இருக்கிருள். எனக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிருர்கள். என் மனைவி தங்களையும், தங்கள் சகோதரரையும் மறக்கவே யில்லை.''

முகாமுக்குத் திரும்பும்போது முழு விவரத்தையும் கர்னலுக்கு விளக்கினர் டோக்ரா: ''கர்னல் ஸாஹிப், நான் ஓர் அகதி. என்னுடைய சொந்த ஊர் பீர்பாஞ்சால் மலைத் தொடரைத் தாண்டி ஓடும் நதியை அடுத்திருக்கிறது. அங்கே எங்களுக்குச் சொந்தமான மிகப் பெரிய ஜவுளிக் கடை இருந்தது. எனது தமையனும் நானும் ஒரே குடும்பமாக வாழ்ந்தோம். அவருக்கு நாலு பிள்ளைகள் இருந்தார்கள். எனக்கு மூன்று மகன். ஒரே ஒரு பெண். அவள் பெயர்தான் சசி. எங்கள் குடும்பத்தின் ஒரே பெண் குழந்தை அவள். பதினேழு வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் வைகறைப்பொழுதில் அந்த நகரத்திலிருந்து விரட்டப்பட்டோம். அந்தக் கலவரத்தில் தூளியில் உறங்கிக் கொண்டிருந்த குழந்தை சசியை மறந்துவிட்டு வந்தோம். அவளுக்கு அப்போது மூன்றே வயது. அதற்குப் பிறகு நான் இன்றுதான் அவளைக் குறித்துக் கேள்விப்படுகிறேன். அதுவும் எந்த நிலையில்?..

''எங்கள் குடும்பத்தில் பெண் குழந்தைகளே இல்லை, கர்னல் ஸாஹிப். என் தமைய

ளுக்குப் பெண் குழந்தை கிடையாது. அந்தக் கலவரத்துக்குப் பிறகு என் மனைவிக்குக் குழந்தைகளே பிறக்கவில்லை. ரட்சா பந்தனத் திருநாள் வரும்போதெல்லாம் என் பிள்ளைகள் எல்லோரும் கண்ணீர் விடுவார்கள். அவர்கள் கையில் ரட்சையை அணிவிக்க ஒரு தங்கை இல்லையே என்று துயருறுவார்கள். எங்கேயாவது பெண் குழந்தையைக் கண்டுவிட்டால் மலைத்துப் போய் நின்றுவிடுவாள் என் மனைவி. அரசாங்கத்தின் மூலமாகவும் தனிப்பட்ட ஸ்தாபனங்களின் உதவியைக் கொண்டும் என் குழந்தையைப் பற்றித் தகவல் தெரிந்து கொள்ள எத்தனை முயற்சிகளைச் செய்திருக்கிறேன் தெரியுமா நான்? ஒரு தரம் பக்ஷி குலாம் முகமதைக் கூடப் போய்ப் பேட்டி கண்டேன். அவரும் தம்மால் ஆன உதவியைச் செய்வதாக வாக்களித்தார். ஒன்றும் பலன் கிட்டவில்லை. கடைசியில் உண்மை இவ்வளவு பயங்கரமாக உருவெடுத்து நிற்கிறதே! நான் மறுபடியும் என் குழந்தையை உயிரோடு பார்ப்பேனு, கர்னல் ஸாஹிப்!'' அவர் கதறினுர்.

''டோக்ரா ஸாஹிப்! அரசியலிலும் போரிலும் இதெல்லாம் தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகள். பெரிய புயல் வீசும்போது எவ்வளவு பயிர்கள் நாசமடைகின்றன? இதுவும் வெள்ளத்தையும் புயலையும் போலத்தான் சாஹிப். உங்களுடைய மகள் உயிருடன் சுகமாக வாழ்கிருள் என்று அறிந்து கொண்டதே நல்ல சூசகம் அல்லவா? இந்தப் பைத்தியக்கார யுத்தம் ஒரு நாள் நின்றுதான் போகும். அப்போது நீங்கள் அவளைக் காணலாம்.''

அவர்களுடைய ஜீப் முகாமை அடைந்ததுமே கர்னல் ஜனுர்த்தனத்துக்குப் புதிய உத்தரவு ஒன்று காத்திருந்தது. ரெஜிமெண்ட் முன்னேக்கிப் போக வேண்டும். ஒரு முக்கியமான எதிரித் தளத்தைக் கைப்பற்ற வேண்டும். லெஃப்டினன்ட் கர்னல் ஜனுர்த்தனம் ஆலோசனையின் பொருட்டுத் தமது துணை அதிகாரிகளை அழைத்தார். இரவு வெகு நேரம் வரையில் அவர்கள் போர் நிலை குறித்து விவாதித்தார்கள்.

பெரிய பெரிய ஸுகோ வண்டிகள் உறுமியவாறு பீரங்கிகளை அனுயாசமாக இழுத்துச் சென்றன. படைப் பயிற்சிப் பள்ளியில் கற்றுக் கொடுத்த லாஜிஸ்டிக்ஸ், ஸ்ட்ராடஜி,மேப் ரீடிங் ஒன்றும் அங்கே பயன்படவில்லை. குறைந்த அளவு சேதத்துடன் துணைப் படைத் தலைவர்கள் எதிரியின் தளங்களைக் கைப்பற்ற வேண்டும். எப்படியும் கைப்பற்றியே தீரவேண்டும். திரும்பக் கூடாது. தாய் நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமானுல் அந்த இலட்சியத்தைத் தொடவேண்டியது மிக மிக முக்கியம்.

ரெஜிமெண்ட் பாட்டரியாகப் பிரிந்தது. பாட்டரி ட்ரூப்பாகக் கலந்தது. ஒவ்வொரு ட்ரூப்பும் தமது பீரங்கிகளைக் குறிப்பிட்ட இலக்குகளில் நிறுத்தி அதை காமஃப்ளாஜ் செய்து சுற்றிலும் அரண் அமைத்துத் தங்குவதற்கு வசதியும் புரிந்துகொள்ள வேண்டும். டெலிபோன் இணைப்பை மறந்துவிடக் கூடாது.

இருட் கவசத்தைத் துணையாகக் கொண்டு ஏழு பேர்கள் முன்னுல் நடந்தார்கள். இரண்டு பேர்கள் ஜங்கிள் பூட்ஸை அணிந்துகொண்டு மரமேறத் தயாராக இருந்தார்கள். அவர்களுக்கு ஓ. பி.க்கள் என்று பெயர். உயரமான இடத்தில் ஏறி நின்றுகொண்டு எதிரி இருக்கும் இடத்தைக் கண்காணித்து வயர்லெஸ் மூலம் தங்கள் படையினருக்குச் செய்தி அளிக்க வேண்டும். அவர்கள் தரும்



விவரத்தின் துணை கொண்டு பீரங்கித் தளபதிகள் குண்டு பாய வேண்டிய தூரம், கோணம் இவைகளைக் கணக்கிடுவார்கள். எதிரியின் இலக்கு நாசமானதும் காலாட் படையினர் முன்னேறி எதிரியின் காவல் நிலையங்களைக் கைப்பற்றுவார்கள். அது ஒரு விறுவிறுப்பான வீர விளையாட்டு.

அந்த மலைப் பிரதேசத்தின் வழியாக டிரக்கில் செல்லும்போது சுபேதார் மேஜருடைய உடல் படபடத்தது. அதை ஒட்டிய ஒற்றையடிப் பாதை வழியாகத்தான் பரசுநாத் டோக்ரா குதிரைகள்மேல் ஏறிச் சென்று தம்முடைய கடைக்குச் சரக்கு வாங்கி வருவார். ராஜ்மாஷ் என்ற மொச்சைக் கொட்டையைச் சமவெளியில் கூடும் சந்தையில் கொடுத்துவிட்டு உப்பை வாங்கிக்கொண்டு வருவார். அவருடைய சொந்த ஊரான மலைப் பிராந்தியத்தில் உப்பு ஓர் அருமையான பண்டம்.

நான்கு கோவேறு கழுதைகள் அவருடைய குதிரையைப் பின் தொடர்ந்து வரும். அவற்றின் மேல் புதிய துணி மூட்டைகள் இருக்கும். தம் தமையனுடைய குழந்தைகளுக்காக வாதுமையும், பிஸ்தாவும், அக்ரோட்டும், நிறைய வாங்கிவருவார் பரசுநாத்.

எதிர்ப்புறத்திலிருந்து வந்த ஒரு துப்பாக்கி ரவை அவரைத் தாண்டிச் சென்றது. 'உய்ய்' என்று அது விளைவித்த ஒலி மரங்களில் எதிரொலித்தது. டிரக்கிலிருந்து கீழே இறங்கிப் பதுங்கிக் கொண்டார் டோக்ரா.

இந்தியப் படையினரின் உற்சாகம் உச்ச நிலையில் இருந்தது. உலகத்தில் எந்தப் படையினருக்கும் அவர்கள் தரத்தில் குறைந்தவர்கள் அல்ல. போர்வீரனுக்கு முக்கியமாக வேண்டிய நெஞ்சுரம், சகிப்புத்தன்மை இவை இரண்டும் இந்திய ஜவானிடம் நிறைய இருந்தன. உதிரத்தின் காட்சி இரக்கமுடைய அவனையும் போர் வெறியில் ஊக்கிற்று. செருக்களத்தில் அவன் பின்வாங்கியது என்பதே பழைய வரலாற்றில் இல்லை. உலகத்தில் மிகச் சிறந்த படை வீரர்கள் இந்தியர் என்று ஆங்கிலேயர்களே கூறிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

ஆனால் செயற்கையான காஷ்மீரின் எல்லையில் அவன் ஒரு விசித்திரமான நிலையில் இருந்தான். பாகிஸ்தானிப் படையினர் எல்லைக் கோட்டின் மறுபுறத்திலிருந்து மாறு வேடத்தில் உள்ளே புகுந்திருந்தார்கள். அங்கிருந்து நவீன போர்ச் சாதனங்களுடன் பாகிஸ்தானிகள் நமது தளங்களில் குண்டு மாரி பெய்தனர். ஆனால் இவன் தக்க போர்த் தந்திரங்களை மேற்கொண்டு எதிரியை அடித்து விரட்டுவதற்கு டெல்லியின் அனுமதியை எதிர்பார்க்க வேண்டியிருந்தது.

பாதுகாப்பு மந்திரியை ஹெலிகாப்டரில் அழைத்து வந்து போர்க்கள நிலையை அவருக்குத் தெளிவாகக் காட்டிய பிறகுதான் நமது பலவீனத்தை உணர்ந்தார் அவர். ஐக்கிய நாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஒன்றுமே செய்ய இயலாமல் இருந்தார்கள். 'எனக்கு விசேஷ அதிகாரம் ஏதும் இல்லை. நான் இரு தரப்பினரிடமும் நியாய உணர்ச்சியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முறையிடலாம். வேறு என்ன செய்வேன்?' என்று வெளிப்படையாகவே கூறினார் ஜெனரல் நிம்மோ. கையையும் காலையும் கட்டிப் போட்ட நிலையில் எங்கள் வீரர்கள் போரிட முடியாது என்று தெளிவாகக் கூறி விட்டனர் இந்தியப் படைத் தலைவர்கள். அப்போது தான் கையெழுத்திட்ட 'ப்ளாங் செக்'கை இந்தியப் படை வீரருக்கு அளித்தார் பாரதப் பிரதமர். ஆக்கிரமிப்பாளரைக் காஷ்மீருக்குள் நுழையாமல் தடை செய்யத் தேவையான போர் முறைகளைப் படைத் தலைவர்கள் மேற்கொள்ளலாம் என்று அவர் அறிவித்தார். இந்திய ஆட்சி வரலாற்றிலேயே பதினெட்டு ஆண்டுகள் சுதந்திர வாழ்வுக்குப் பிறகு இது முக்கியமான வரவேற்கத் தக்க திருப்பம். படையினரின் உற்சாகம் கரை கடந்து பெருகிற்று. 'பொறுத்தது போதும், பொங்கி எழு!' என்று அவர்கள் புறப்பட்டார்கள்.

கூடியவரையில் கன்வென்ஷனல் முறையையே பின்பற்றிப் போரிட வேண்டும் என்று அவர்கள் தொடங்கினார்கள். முதலில் எல்லைச் சாரணர்கள், அதற்குப் பின்னால் அம்பு வடிவ வியூகத்தில் காலாட் படைகள், அவர்களுக்குக் கவசமாகப் பீரங்கிப் படையினர் என்றுதான் அவர்கள் அணிவகுத்து முறையோடு சென்றனர். ஆனால் அந்தக் காஷ்மீரப் பிரதேசத்தின் செங்குத்தான குன்றுகளும் வழுக்குப் பாறைகளும் கடுவேகம் நிறைந்த காட்டாறுகளும், வனப் பிரதேசங்களும் பாடப் புத்தகப் போர் முறைக்கு இடம் தரவில்லை. ஆகவே புத்திசாலிகளான படைத் தலைவர்கள் தங்கள் போர்த் தந்திரங்களைப் பிரதேசத்துக்குத் தக்கவாறு மாற்றிக் கொண்டார்கள். துணைப் படைத் தலைவர்களுக்கு இலக்குகள் தரப்பட்டன. நேரம் குறிக்கப்பட்டது. 'அந்தப் பிரதேசத்தைக் கைப்பற்ற வேண்டியது உங்கள் பணி. முறையைப் பற்றி நான் கவலைப்படவில்லை' என்று கூறிவிட்டார் ஸெக்டர் கமாண்டர்.

அந்த வகையில் சுபேதார் மேஜர் டோக்ராவுடன் ஹவல்தார் சொக்கலிங்கம், நாயக் ரத்திராம், நாயக் பிரேம்சந்த், இன்னும் பொறுக்கி எடுத்த பன்னிருவர் சேர்ந்து கொண்டனர். வரைபடத்தில் அவர்கள் தாக்கிக் கைப்பற்றவேண்டிய இடம் தரப்பட்டது.

''எனக்கு இந்தப் பிரதேசம் முழுவதும் நன்றாகத் தெரியும், கண்ணைக் கட்டி விட்டால்கூட நான் அங்கு சென்று விடுவேன், நீங்கள் கவலைப்படாதீர்கள்'' என்று உடன் வந்தவர்களை உற்சாகப்படுத்தினார் டோக்ரா. அவர்களுடைய மீடியம் பீரங்கிகள் பன்னிரண்டும் காட்டினிடையே தக்க பாதுகாப்புடன் வைக்கப்பட்டன. அவற்றைப் பல இடங்களில் மேற்குத் திசையை நோக்கித் திருப்பி வைத்து, பச்சை வலை போட்டு மூடினார். இயந்திரப் பீரங்கிப் படை காலாட் படையாக மாறியது. இச்சாபூர் தொழிற்சாலையில் புதிதாகத் தயாரிக்கப்பட்ட நவீன துப்பாக்கிகள், மெஷின் கன், கைக் குண்டுகள், சுரங்க வெடி ஆகியவற்றுடன்

அவர்கள் புறப்பட்டார்கள். அவர்களிடையே இருந்த உற்சாகத்தைப் பார்த்தால் ஏதோ உல்லாசப் பயணம் புறப்படுகிறவர்களைப் போல் இருந்தது.

பரசுநாத் டோக்ரா முழு இராணுவ உடையுடன் தோளில் துப்பாக்கியுடன் முன்னால் நடந்தார். அவருடன் சொக்கலிங்கம் இருந்தார். சற்றுப் பின்னால் அவருடைய போர்க் குழு சென்றது.

அன்றைய இரவுப் பொழுதை அவர்கள் குன்றின் சாரலிலேயே கழித்தார்கள். அதிகாலையில் இருள் பிரிவதற்குள் ஆற்றைக் கடக்க ஆயத்தமானார்கள். நதியின் ஆழம் இடுப்பளவுதான் இருந்தது. ஆனால் நீரின் விசை ஆளை உருட்டிக் கொண்டு போயிற்று. படைவீரர்கள் ஆயுதங்களையும், மற்ற உபகரணங்களையும் உணவுப் பொருள்களையும் தோளுயரம் உயர்த்திக் கச்சையினால் இறுக்கிக் கொண்டனர். ''இந்த ஆற்றைத் தனியாகக் கடக்க முடியாது தோழர்களே, எல்லோரும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொள்ளுங்கள். என்ன நேர்ந்தாலும் கைப் பிடியைத் தளரவிடாதீர்கள்'' பரசுநாத் கூறினார். சரளைக் கல்லை மேல் தளமாக உடைய புதை மணலில் அடிமேல் அடி எடுத்து வைத்து நடந்தனர் அந்தப் பதினைந்து பேர்களும்.

''சுபேதார் மேஜர் சாஹிப்!'' ஹவல்தார் சொக்கலிங்கம் பரசுநாத்தை விளித்தார். ''ஒருவரது கையை மற்றவர் பிடித்து இணைத்துக்கொண்டு ஒரே இலட்சியத்தை நோக்கி ஏழு தப்படிகள் நடந்து விட்டால் அவர்கள் ஆயுள் நண்பர்களாகி விடுவார்கள் என்று ஒரு வழக்கு உண்டு. அவ்வாறு சுக்கிரீவனின் கையைப் பிடித்துக் கொண்டு இராமபிரான் நடந்ததாக மத்தியப் பிரதேசத்து ராம கதையில் வழங்குகிறது. அந்த முறைப்படி நாமெல்லாம் ஆயுள் நண்பர்களல்லவா?''

பரசுநாத் நகைத்தார். ''இராணுவத்தில் கிடைக்கிற ஆழ்ந்த நட்பு எங்கும் கிட்டுவதில்லை ஹவல்தார்ஜீ. நீங்கள் சொல்வது நூறுசதம் உண்மை. மரணம் எதிர்நோக்கும் போது கிட்டுகிற வழித் துணை இருக்கிறதே, அதுதான் மற்றெல்லா நட்பையும் விட உறுதி மிக்கது!''

பலவண்ண நீர்ப் பறவைகள் பறக்கத் தொடங்கின. நீரின் வேகம் அவர்களை மேல் திசையை நோக்கி இழுக்கத் தொடங்கியது. பரசுநாத் தமது கைப்பிடியை இறுக்கினார்.

அரை மணி நேரம் நடந்த பிறகு மரங்கள் அடர்ந்த எதிர்க் கரையை அடைந்தனர் வீரர்கள். ஊரைச் சுற்றி ஒரு பழைய உறுதியான மதில் சுவர் இருந்தது. இரு சுவர்கள் இணைந்த பகுதியின் அருகில் இருந்த மண் மேட்டைக் கோடரியால் வெட்டினார் சொக்கலிங்கம். அது இரும்பு முனையை எதிர்த்தது. 'ஏ, அப்பா! மண் எவ்வளவு கெட்டி!' லான்ஸ் நாயக் விஷ்ணுமோஹன் வியந்தான்.

''எங்களுக்கே பிறந்த மண்ணின் மீது பிடிப்பு அதிகம். அந்தத் தன்மையைத்தான் இந்தப் பூமியும் பிரதிபலிக்கிறது. நாங்கள் ரகசியங்களை எளிதில் வெளியிடவும் மாட்டோம், நம்பியவர்களைக் கைவிடுவதுமில்லை.'' என்று பரசுநாத் டோக்ரா சிரித்துக் கொண்டே கூறினார்.

நண்பர்கள் முறை வைத்துக் குழி வெட்டினார்கள். 'எல்' வடிவப் பாதுகாப்புக் குழிகள் தயாராயின. குழியின் முன்பு புதர்களையும் மரக் கிளைகளையும் குவித்து எதிரியின் பார்வையிலிருந்து தப்பும் வழி செய்து கொண்டார்கள். தங்களுடைய உணவுப் பண்டத்தையும் மற்றப் பொருள்களையும் வைப்பதற்குத் தனியான 'ட்ரெஞ்ச்'ஒன்றைத் தயாரித்தார்கள். சுபேதார் மேஜர் அந்தப் பிரதேசத்தின் இயல்பைப் பற்றிச் சுவையுடன் விவரித்துக் கொண்டு வந்தார். இது பொன் விளையும் பூமி. ஆனால் பீர்பாஞ்சால மலைப் பகுதிக்கு மேற்புறத்தில் பாகிஸ்தானின் இரும்புப் பிடியில் சிக்கியிருக்கும் இந்த இடத்தைப் பாருங்கள். ஒரு நல்ல பாதை உண்டா? பாலம் இருக்கிறதா?



பள்ளிக்கூடங்களையே காணோம். தபாலாபீஸ் கூடத் தென்படவில்லை. இதுதான் குடியாட்சிக்கும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கும் உள்ள வேறுபாடு. மகாராஜாவின் ஆட்சியில்கூட இதைவிட அதிகமாக மக்கள் நலன் கவனிக்கப்பட்டது. மகாராஜா ஹரி சிங் ஸ்ரீநகரில் வாழ்ந்தாலும் ஆண்டுக்கொரு முறை இந்தப் பிரதேசத்துக்கு வருவார். மக்களுடைய குறைகளை நேரிடையாகக் கேட்பார். தம்மால் இயன்ற உதவிகளை உடனடியாகச் செய்வார். அப்படி ஒருமுறை இங்கு வந்தபோதுதான் நானும் அவருடைய ஸ்டேட் ராணுவத்தில் சேர்ந்தேன். மகாராஜா என்னுடைய தமையனுடன் உரையாடினார். 'உங்கள் குடும்பத்தில் யாருமே படையில் சேரவில்லையே! உங்கள் தம்பியாவது ராணுவத்தில் பணி புரியட்டும்' என்றார். என் அண்ணனும் ஒத்துக்கொண்

டார். டோக்ரா குடும்பத்தில் வீட்டுக்கு ஒருவராவது இராணுவத்தில் பணி புரிய வேண்டும் என்ற எழுதாத நியதி இருந்தது. காஷ்மீர முஸ்லீம்கள் பெரும்பாலும் தொழில் விணைஞர்கள். நல்ல கிருஷிகர்கள். நுண்கலை புரிபவர்கள். சிறந்த வியாபாரிகள். ஆனால் படையில் பெரும்பாலும் டோக்ராக்கள்தான் இருந்தார்கள்..''

செவிகளில் இயர்போனை மாட்டிக்கொண்டிருந்த லட்சமண்சிங் குதித்தான். சுபேதார் மேஜர் பேசுவதை நிறுத்தினார். சிக்னல் புத்தகத்தில் அவன் செய்தியை ரெக்கார்டு செய்தான். ''நமது ரெஜிமெண்டின் மத்திய கேந்திராலயம் அமைக்கப்பட்டு விட்டது. இந்த இடத்துக்கு இனிமேல் 'பீ செக்டர்' என்று பெயர். செக்ஷன் கமாண்டர்கள் தாங்கள் இலக்கு நோக்கி வந்த விவரத்துக்குத் தகவல் கொடுக்க வேண்டும். உணவு வசதி, ஜவான்களின் உடல் நலம், உற்சாக நிலை இவை குறித்த விவரம் தேவை. நாளை முன்னேறுகிறோம். எதிர்ப்பு கடுமையாக இருக்கும். நள்ளிரவுக்கு மேல் எந்தெந்த செக்ஷன் எந்த இடத்தை இலக்காகக் கொண்டு முன்னேறவேண்டும் என்று உத்தரவு கிடைக்கும். ரிப்போர்ட் கம்ப்ளீஷன்-ஓவர்.''

படைப் பகுதியை ஜுர வேகம் பற்றியது. போரைப்பற்றிப் பேசுவது வேறு, அதில் நேரிடையாகப் பங்கு பெறுவது வேறு. உயிர் ஆசை எல்லோரையும் குலையைப் பிடித்து உலுக்கிற்று. நண்பர்களின் முக பாவத்திலிருந்து விவரம் தெரிந்துகொண்ட பரசுநாத் தமது ரிஸர்வ் ரேஷனைத் திறந்தார். செந்திரவம் தொண்டை வழியே வயிற்றுக்குள் இறங்கியதும் அச்சமும் கவலையும் பறந்தோடின. வீரர்கள் தங்கள் ஆயுதங்களைச் சரி பார்த்தார்கள்...

நள்ளிரவில் பாட்டரி வெளிச்சத்தின் உதவியைக் கொண்டு செய்தியை ரெக்கார்டு செய்தார் பரசுநாத். அவருக்குத் தரப்பட்டிருந்த வரைபடக் குறிப்புகளையும், படத்தையும் தரையில் வைத்துச் சரிபார்த்தார். மதில் சுவரை யடுத்து ஓர் ஒற்றையடிப் பாதை, அதைத் தாண்டி ஒரு பெரிய குடிதண்ணீர்க் கிணறு, அதை ஒட்டி ஒரு வண்டிப் பாதை. அதன் வழியாகப் பதுங்கிப் பதுங்கி முன்னேற வேண்டும். அரை மைல் சென்றதும் ஒரு மாடு அடைக்கும் பட்டி, மரச் செக்கு, அதற்குப் பின்னால் ஒரு ஈத்கா. சுபேதார் மேஜரின் மூச்சுத் திணறியது. தலை சுழன்றது. பாட்டரி விளக்கு கையிலிருந்து நழுவிற்று. எதிரே ஒரே இருள். கும்மிருட்டு. அதனிடையில் பல பயங்கர உருவங்கள் கையில் ஆயுதங்களுடன் நிற்பதைப் போல் தோன்றியது. அவர் அப்படியே குப்புறச் சாய்ந்தார்.

....பெட்டி நிறைய உலர்ந்த திராட்சையையும் வாதுமையையும் வாங்கிக் கொண்டு ஒட்டகத்தின் மேலேறி வீடு திரும்புகிறார் பரசுநாத். அவர் அப்போது விடுமுறையில் வந்து கொண்டிருந்தார். சிவப்பு நிறப் பட்டுச் சட்டை — நிறைய ஜரிகைப் பூ வேலை செய்தது — அதை அணிந்து கொண்டிருந்த பெண் குழந்தை ஒன்று அந்தப் பெரியவர் வீட்டு வாசலில் நிற்கிறது. அவரைத் தொலைவிலேயே கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து ஆனந்தத்தினால் கும்மாளம் போடுகிறது. ஒட்டகத்தின் ஹௌதாவிலிருந்து கீழே குதித்துக் குழந்தையை வாரி எடுக்கிறார் பரசுநாத். அதனுடைய பூப்போன்ற கன்னங்கள் நனைந்திருக்கின்றன. 'ஏன் அழுகிறாய் சசி!' அவர் அன்புடன் வினவுகிறார். மழலை மொழியில் விடையிறுக்கிறது குழந்தை: ''மேரி பப்பு, மேரே பியாரே பப்பு!'' குழந்தையைக் கொஞ்சுகிறார் பரசுநாத்.

உள்ளே நுழைந்து தமையனின் காலடிகளைத் தொட்டு வணங்குகிறார். அண்ணி ரூபவதி ஒரு பெரிய முராதாபாத் கிளாஸ் நிறைய வெண்ணெய் மிதக்கும் குளிர்ந்த லஸ்ஸியைக் கொண்டு வருகிறாள். அது அவருடைய உள்ளத்தையே குளிர வைக்கிறது.

கன்னத்தில் ஜில்லென்று ஏதோ உறைக்கவே பதறி எழுந்தார் பரசுநாத். அவருடைய ஸ்டென் துப்பாக்கியின் முனைதான் கன்னத்தில் பட்டிருக்கிறது. 'ஏ, அப்பா! இப்போதே இவ்வளவு குளிர் வந்துவிட்டதே! தோழர்கள் எழுந்து தங்களைத் தயார் செய்துகொண்டுவிட்டார்கள். வரைபடத்தைக் காட்டி அவர்கள் சென்று கைப்பற்ற வேண்டிய இலக்கை விவரிக்கிறார் பரசுநாத்.

சுபேதார் மேஜரும், அவரது தோழர்களும் பதுங்கிப் பதுங்கி, குனிந்தும், தவழ்ந்தும், மார்பினால் ஊர்ந்தும் செல்லுகிறார்கள். தொழுகை நாளில் அமைதியுடன் மக்கள் கூடும் ஈத்காவின் உயரமான சுவர் தென்படுகிறது. அதுதான் தற்போது அவர்களுக்கு அரண். அதுவும் கிலமாகி நடுவில் விரிந்திருக்கிறது.

இதென்ன? சுபேதார் மேஜரின் கண்களில் நீர் பெருகுகிறது! மூச்சுத் திணறி உடல் நடுங்கத் தொடங்குகிறது. சொக்கலிங்கம் அவருடைய கையைப் பிடித்துப் பார்க்கிறார். ''உடம்பு சரியில்லையாசுபேதார் மேஜர்சாப்?''

பரிதாபமான தோற்றத்தோடு விளங்குகிறார் டோக்ரா. அந்தப் பெரிய சுவரிலிருந்த பிளவின் வழியாகத் தொலைவில் தெரியும் பெரிய மாடி வீட்டைச் சுட்டிக் காட்டுகிறார். செங்காவி பூசிய அந்தக் கட்டிடம் கம்பீரமாகத் தோற்றம் அளிக்கிறது. அவருடைய உதடுகள் துடிக்கின்றன. ''அந்தப் பெரிய வீட்டில் — அங்கேதான் எதிரிகளின் படைக் குழு ஒன்றிருக்கிறது. அதைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் எனக்குக் கிடைத்திருக்கும் உத்தரவு'' அவர் நடுங்கிய குரலில் கூறுகிறார்.

''அதற்கென்ன சுபேதார் மேஜர் சாஹிப், பிடித்துவிட்டால் போகிறது!'' 'மெஷீன் கன்-பொஸிஷன்' — ஹவல்தார் சொக்கலிங்கம் உத்தரவு கொடுக்கிறார். 'ஸைட் சார் ஸௌ, பதினோரு மணி அளவில் நிற்கும் பெரிய புளிய மரத்துக்கும் கிணற்றுக்கும் இடையில் உள்ள பெரிய பங்களா' — சொக்கலிங்கத்தின் வாயை மூடுகிறார் பரசுநாத். ''ஹவல்தார்ஜி! அது என் வீடு. அங்கே என் தகப்பனார் வசித்தார். அதன் பின் பக்கத்தில் எங்களுடைய பெரிய ஜவுளிக்

கடை இருந்தது. தற்போது அங்கேதான், காப்டன் ரஷீத்தின் மனைவி—என் மகள்...'' —பரசுநாத் டோக்ராவின் நாவு உலர்ந்து போகிறது. உடலிலுள்ள உதிரம் முழுவதும் சிந்திப்போனது போல் ஓய்ச்சல் ஏற்படுகிறது அவருக்கு.

பரசுநாத் டோக்ராவின் நெற்றியில் துளித்த வியர்வையைத் துடைக்கிறார் சொக்கலிங்கம். ''எனக்குப் புரிகிறது சுபேதார் மேஜர் சாகிப். இது ஒரு பைத்தியக்காரத்தனமான சண்டை. அண்ணன் தம்பியையும், தகப்பன் . மகனையும், சீடன் குருவையும் கொல்ல வேண்டிய போர். ஆனால்...ஆனால்.. சுபேதார் மேஜர் சாஹிப், அதைச் செய்ய நாம் சம்பளம் வாங்குகிறோம். அவ்வாறு செய்வதாக இந்தக் கீதையைத் தொட்டு நாம் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்.'' சொக்கலிங்கம், தம் சட்டைப் பையிலிருந்து அந்தச் சிறிய புத்தகத்தை வெளியே எடுத்தார். அதன் இரண்டாவது பக்கத்தில் உள்ள படத்தை சுபேதார் மேஜரின் கண் முன் பிடித்துக் காட்டினார்.

வில்லையும் அம்பையும் விசிறி எறிந்து விட்ட அர்ஜுனன் தன் தேரிலிருந்து கீழே இறங்கிக் கன்னத்தில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறான். எதிரே தாமரை முகக் கோவிந்தன் நிற்கிறான். அவரைச் சுற்றிக் கோடி சூரிய ஒளி வீசுகிறது.

சுபேதார் மேஜர் பரசுநாத் அந்தப் புத்தகத்தைக் கையில் வாங்கிப் பார்த்தார். உடலில் புதிய உதிரம் சூடேறி ஓடத் தொடங்கியது.

உரத்த குரலில் சந்தத்துடன் கோஷிக்கத் தொடங்கினார் ஹவல்தார் சொக்கலிங்கம்.

தமுவாச ஹ்ருஷீகேச:
ப்ரஹஸன்னிவ பாரத ।
ஸேனயோருபயோர் மத்யே
விஷீதந்த மிதம் வச ||
ஸ்ரீ பகவானுவாச
அஷோச் யானம் வஷோத்வம்
ப்ரக்ஞா வாதாம்ஸ் பாஷஸே
கதாஸூன அகதாஸூம்ஸ
நானுஷோ சந்தி பண்டிதஹ||

ஸஞ்சயன் சொல்லுகிறான்: 'ஹே திருதராஷ்டிரா, இரண்டு சேனைகளுக்குமிடையே இன்னற்படுகின்ற அர்ஜுனனுக்கு இளமுறுவல் பூத்தவராய் ஹ்ருஷீகேசர் – ஸ்ரீ கிருஷ்ணன் இம்மொழிகளை இயம்பினார்.

இறைவன் கூறினார்:

'துயரத்துக்குரியவரல்லார் பொருட்டுத் துயருறுகிறாய்; கூடவே ஞானியைப் போன்றும் பேசுகிறாய். இறந்தவர்களுக்கோ இருப்பவர்களுக்கோ பண்டிதர்கள் வருந்திப் புலம்பமாட்டார்கள். (கீதை: 2-10,11)

சுபேதார் மேஜர் பரசுநாத் இடிபோன்ற குரலில் உத்தரவு கொடுத்தார். ''பஹாதூர் ஸாதியோ! நிஷான் லகாகர் கோலி சலாவ், கோலி சலாவ், ஆகே படோ, ஆகே படோ!'' அவர் தரையைக் காலால் உதைத்தார். (வீர நண்பர்களே! குறிவைத்துச்

பாக்கி நிற்கும் கடன்; பூரணமாக அணையாத நெருப்பு; முழுதும் தோற்கடிக்கப்படாத பகை— இவை மீண்டும் மீண்டும் கிளம்பித் தொல்லை கொடுக்கத்தான் செய்யும். ஆகவே, இவ்விஷயங்களில் அரைகுறை விவகாரமே கூடாது.

—வடமொழிக் கவி

சுடுங்கள், மறுபடியும் சுடுங்கள், முன்னேறுங்கள், முன்னேறுங்கள்.)

'தடதடதடதடதட், தடதடதடதட்'

தீயைக் கக்கிற்று இயந்திரப் பீரங்கி. ''ஆகே படோ, ஆகே படோ!'' சுபேதார் மேஜர் கூவிக்கொண்டே முன்னால் ஓடினார்.

''நைனம் சித்தந்தி சஸ்த்ராணும், நைனம் தஹதி பாவக!' – பின்னால் மெஷின்கன்னின் குண்டொலியுடன் ஹவல்தார் சொக்கலிங்கத்தின் ஸ்வர சுத்தமான சுலோகமும் கேட்டது. கைக் குண்டு பறந்தது. ஓடியும் உருண்டும், ஊர்ந்தும் பாரத வீரர் இலக்கைத் தொட்டனர். எதிரிலிருந்து புறப்பட்ட தீயையும், புகையையும், ரவைகளையும் அவர்கள் இலட்சியமே செய்யவில்லை. ஒரே உதிரக் குளியல்.

'போலோ பாரத் மாதாகீ! – ஜேய்'.

பரசுநாத்தின் செக்ஷன் அவருடைய பெரிய வீட்டை நெருங்கியபோது அங்கு மயானத்தின் அமைதி நிலவிற்று, அந்தப் பங்களாவைப் பாசறையாகக் கொண்டு முப்பது பாகிஸ்தானியர் போரிட்டனர். சிதறிக் கிடந்த நிணமும், உதிரமும், எலும்புகளும் வெறியை ஊட்டின. அங்கே பதினான்கு பேர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தனர். ஐவர் படுகாயம் அடைந்து குற்றுயிராய்க் கிடந்தனர். அவர்களுடைய தீனக் கதறல் நெஞ்சை உருக்கிற்று. மிகுந்தவர்கள் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்.

பரசுநாத் வியப்பில் மூழ்கினார். மனிதனை மிகச் சிறந்ததாகக் கருதும் உயிரைப் பணயம் வைத்தானானால் அவனால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை.

'ஆஸ்சர்ய வத் பஸ்யதி கஸ்சிதேனம்'

உரத்த குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தார் சுபேதார் மேஜர். உடலெல்லாம் உதிரம் வழியத் தள்ளாடிக்கொண்டு வந்தார் ஹவல்தார் சொக்கலிங்கம். அவருடைய கண்களில் அத்தகைய ஒளி எப்படித் தோன்றியது!....

துப்பாக்கி ரவைகளால் துளைக்கப்பெற்ற வெளிச் சுவர்களைத் தாண்டிக்கொண்டு, மெள்ள வீட்டினுள் நுழைந்தார் பரசுநாத். முன்னறையில் எத்தனை சுரங்க வெடிகள், துப்பாக்கி ரவைகள்! அடுத்த கூடம் முழுவதும் உணவுப் பண்டம், கம்பளி ஆடைகள். கலங்கிய மனத்துடன் தமது தந்தையின் தனியறையில் நுழைந்தார் பரசுநாத். அதன் நடு அலமாரியில் ஒரு புகைப்படம் வைக்கப்பட்டிருந்தது. அதில் காப்டன் ரஷீத் அலி

இராணுவ உடையில் இருந்தார். அவருக்குப் பக்கத்தில் தன் உதிரத்தில் விளைந்த மகள் சசி, தனது இரண்டு குழந்தைகளுடன் நின்று கொண்டிருந்தாள். புகைப்படத்துக்கு அருகில் கிடந்த பொருளை ஜாக்கிரதையாக எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டார் சுபேதார் மேஜர். அது ஒரு உடைந்த வளையலின் சிறு பகுதி. அந்தக் கண்ணாடித் துண்டில் தந்தை தம் மகளைக் கண்டார். அன்றையப் போர் நடவடிக்கை அத்துடன் முடிந்தது....

எங்கேயோ தொலைவில் ஒரு கார் செல்லும் சத்தம் கேட்டது. சுபேதார் மேஜர் கட்டிலை விட்டு எழுந்திருந்து வெளியே வந்தார். காவலன் யாரையோ நிறுத்தினான். அவன் 'பாஸ் வேர்ட்' சரியாகச் சொல்லாததினால் அவனைக் கடிந்துகொண்டான் ஸெந்த்ரி.

''கார்டுஹோஷ்யார்! கார்டுஹோஷ்யார்!'' காவலன் உரக்கக் கூவினான். காவலர் தலைவன் வெளியே ஓடிவந்தான். மற்ற செந்த்ரிகள் தங்களுடைய பதுங்குக் குழிகளுக்குச் சென்றார்கள். துப்பாக்கியை 'காக்' செய்யும் ஒலி கேட்டது. காவலர் தலைவன் வந்தவனை அடையாளம் புரிந்து கொண்டு பாசறைக்குள் அனுமதித்தான். ரோந்துப் பணிக்குச் சென்றிருந்த காவலர்களில் ஒருவன் அவன்.

பரசுநாத் வானத்தை உற்றுப் பார்த்தார். கரும் பட்டு வானத்தில் ஒளிப் புள்ளிகள் மின்னின. கிருஷ்ண பட்சத்துச் சந்திரன் இன்னும் உதயமாகவில்லை. எங்கேயோ சுவர்க் கோழி ஒன்று கிறீச்சிட்டது. பயந்த பறவை ஒன்று ஓலமிட்டுவிட்டு அடங்கிற்று. நிழல் சித்திரங்களைப் போலத் தொலைவில் வீடுகளும் மதில் சுவரும் தெரிந்தன. இந்தக் கிராமம் இனி இந்திய நாட்டின் ஒத்துழைப்பால் செழிக்கும். வளம் பெறும், மக்கள் நலம் பெறுவர். ஆனால் அவருடைய மகள் சசி, அவளுடைய குழந்தைகள்?

அமைதியை வேண்டித் தம் அறையினுள் வந்தார் பரசுநாத். சொக்கலிங்கத்தின் கீதைப் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார். டார்ச் விளக்கைப் பிடித்தபடி தயங்கித் தயங்கிச் சுபேதார் தர்மராஜனின் பங்கரை அணுகினார்.

''சுபேதார் சாஹிப்!'' — பதில் இல்லை. இன்னும் சற்று உரக்க குரல் கொடுத்தார் பரசுநாத். ''சுபேதார் தர்மராஜன் சாஹிப்!''

துள்ளிக்கொண்டு கொசுவலையை நீக்கியவாறு எழுந்திருந்தார் தர்மராஜன். ''யாரது?'' அவருடைய குரல் நடுங்கிற்று. தம்முடைய பங்கரிலிருந்த அரிக்கன் விளக்கைப் பற்றவைக்க முற்பட்டார்.

''மன்னிக்க வேண்டும். நான்தான் பரசுநாத். ஒரு முக்கிய காரியமாக வந்தேன்.'' அவருடைய குரல் தெளிவாக இருந்தது. டோக்ரா தர்மராஜனை அணுகினார்.

''சற்று இருங்கள், இந்த விளக்கைப் பற்றவைக்கிறேன்.'' தீக்குச்சி உராயும் ஒலி. அறையில் மஞ்சள் இருள் சூழ்ந்தது.

பரசுநாத் தம்மிடமிருந்த கீதைப் புத்தகத்தைப் புரட்டினார். அதனுடைய முதல் பக்கத்தைத் தர்மராஜனிடம் காட்டினார். ''இந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுக்கு முன்பு சொக்கலிங்கம் தம்முடைய பாஷையில் இதில் ஏதோ எழுதினார். அது என்னவென்று சொல்ல முடியுமா?''

தர்மராஜனுக்குச் சற்று வியப்பாக இருந்தது. ''இதற்காகவா இந்த நள்ளிரவில் வந்தீர்கள்?'' என்று கேட்க வாயெடுத்தவர் பரசுநாத்தின் முக பாவத்தைக் கண்டு மேலே ஏதும் பேசாமல் அந்த நூலை வாங்கி விளக்கின் மஞ்சள் ஒளியில் பிடித்தார்.

அதைப் படித்ததும் அவருடைய உடம்பே புல்லரித்தது. தெளிவான எழுத்துக்களில் அதில் எழுதியிருந்தார் சொக்கலிங்கம்:

'பார்த்தனுக்காக மட்டும் அன்று!'

அதை மொழிபெயர்த்து ஹிந்தியில் விளக்கும்போது தர்மராஜனின் குரல் கமறியது.

''அப்படியா, அப்படியா?'' சுபேதார் மேஜர் தலையை ஆட்டிக் கொண்டே வியப்புடன் வினவினார். பிறகு தணிந்த குரலில் தமக்குத்தாமே பேசிக் கொள்வது போல் உரை செய்தார்.

''உண்மைதான் தர்மராஜன் சாஹிப்!- இந்த நூலில் அடங்கியுள்ளவை பார்த்தனுக்காக மட்டுமன்று, எனக்கும்தான். ஏன், உலகத்தில் எல்லோருக்கும்தான்!''

சுபேதார் மேஜரின் நிழல் விரிந்து விசுவரூபம் எடுத்து மறைந்தது.

சத்வைத்தியசாலை, நஞ்சன்கூடு. ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

பிரசவத்திற்குப் பிறகு ஜீரண-லேகியம்

டோனடெல்

குழந்தைகளுக்கு

காஸ்மஸ் — கஸ்தூரி மாத்திரை | கர்ஜன் — கோரோஜனை மாத்திரை | பாலக்ஸ் — பேதியாக மாத்திரை | சிசுராக் — ஜீரண டானிக்

சோல் ஏஜண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, சென்னை-1 (மதுரை, குடந்தை, கோவை)

''பயிற்றிப் பல கல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்
வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் - இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்......''

என்று அளப்பருங் கருணையுடன் பாடிய மகாகவி பாரதி இன்று நம்மிடையே இருந்தால் அவருக்கு எண்பத்துநாலு வயது. அந்தக் கவிஞர் பெருமானுக்கு நாடு முழுவதும் எண்பத்து நாலாவது ஜயந்தியைக் கொண்டாடி அஞ்சலி செலுத்தும் இவ் வேளையிலே, பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்கள் எழுதும் ''கத்தும் குயிலோசை'' என்னும் காவிய நயம் ததும்பும் கவினுறு கட்டுரையை வெளியிடுவதில் மகிழ்கிறோம். -ஆசிரியர்



கத்தும் குயிலோசை



பதினாறு ஆண்டுகளுக்கு முன் நடந்தது. பாரதியாரின் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாடலைத் திரும்பவும் படித்துக் கொண்டிருந்தேன். நன்றாகத் தெரிந்த பாடல், பழக்கமான சொற்கள். ஆகவே பழைய பாதை ஒன்றில் நடக்கும் அலட்சியத்தோடு, என்னுடைய மனம் மேலெழுந்தவாறாக, பாடல் மேல் ஊர்ந்து சென்றது. காணி நிலம், துய்ய நிறத்தொரு மாளிகை, கேணி, தென்னை மரக்கீற்று, இளநீர் — இவையெல்லாம் மங்கலாக நிழலாடின. சோம்பலாக, அடுத்து வரும் அடிகளின் மீது என் மனம் உலாவியது.

பத்துப் பன்னிரண்டு — தென்னைமரம்
பக்கத்திலே வேண்டும்

முதற் பகுதியில் தென்னை மரக் கீற்று ஒன்று போதும் என்று எண்ணிய பாரதியார், இப்போது பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்களல்லவா கேட்கிறார், பராசக்தி கொடுக்கத் தொடங்கினால், கவிஞனுடைய திருப்திகூடக் குலைந்து, ஆசை தலைதூக்கும் போல் இருக்கிறது என்று நினைத்து, எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன். போகட்டும், அப்படியும் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள்தானே கேட்கிறார், பராசக்திதான் கொடுக்கட்டுமே, உலகெல்லாம் உடையவளான அவளுக்குக் குறைந்தாவிடப் போகிறது என்று பாரதியார் முதுகிலே தட்டிக் கொடுக்கின்ற பாவனையில் எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

பாடல் தொடர்ந்தது.

— நல்ல
முத்துச் சுடர்போலே — நிலாவொளி
முன்பு வரவேணும்

வரட்டுமே, யாருக்கு என்ன செலவு, முத்துக்கள் வேண்டும் என்று கேட்கவில்லையே, முத்துச் சுடர் போல் வரும் நிலவைத்தானே கவிஞர் விரும்புகிறார்? பராசக்தி தன் சூலத்தால் மேகங்களை ஒதுக்கிவிட்டு, தெளிந்த மறுவில்லாத நிலவைத் தரமாட்டாளா, தருவாள் என்று ͼ ணமிட்டேன். நிலவை வேண்டுகிறாரே, அதுதான் தவறாமல் தானே 'வருமே வேண்டுவானேன், ஒருசமயம் நிலவை வரவேற்கும் மனத்தை வேண்டுகிறாரோ என்ற திறனாய்வுக் குயுக்தி ஒன்றைச் செய்து, 'பலே, ஆராய்ச்சி அபாரம்' என்று சொல்லி முடிப்பதற்குள்,

கத்தும் குயிலோசை — சற்றே வந்து
காதிற் படவேண்டும்

என்று பாரதியார் பேசினார்.

அதுவரை சோம்பலாக ஊர்ந்து சென்ற என் மனம் பளிச்சென்று நிமிர்ந்தது. 'குயில் கத்துமா', அதன் குரல் 'ஓசையா?' இனிமைக்கு எடுத்துக்காட்டாகவே, தமிழ்க் கவிதை மரபில் குயிலின் குரல் இடம் பெற்றிருக்க இந்தக் கவிஞர் மட்டும் குயில் கத்தும் என்கிறாரே, இது என்ன வேடிக்கை! 'கீதம் இனிய குயிலே', 'பொழில்கள் தோறும் குயில் கூவ', 'களித்திசை பாடும் குயிலே', 'குயிலினம் கூவும் சோலை', இப்படியெல்லாம் கவிஞர்கள் பேசியிருக்க, இந்த இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் குயிலுக்குக் கத்துகின்ற தனிப் பெருமையைக் கற்பித்திருக்கிறாரே, இதுதான் 'புதிய' கவிதையோ? அல்லது, பத்து, முத்து என்ற சொற்களுக்கு எதுகை தேடி, 'கத்தும்' என்று போட்டு வைத்தாரோ? அப்படியானால் 'கத்தும் குயில் ஓசை' என்று கத்தலோடு விடாமல் ஓசையை வேறு சேர்த்துக்கொண்டதன் பொருளென்ன?

தவிர, குயில் இரவிலே குரலெழுப்பும் பறவையா, இல்லையே! நிலவிலே குயில் சத்தம் கொடுத்ததாகப் பாரதியார் பேசுகிறாரே!

ஆங்கிலத்திலே சொல்வதுண்டு: **'Even Homer nods'** ஹோமர் என்ற பெரும் புலவனும் தூங்கி வழியலாம், இடறி விழலாம் என்று. தமிழிலே 'யானைக்கும் அடி சறுக்கும்' என்று சொல்லி வைப்போம். பாரதியார் சிறந்த கவிஞர்தான். ஆனாலும் அவருக்கும் இங்கே அடி சறுக்கியது போல் இருக்கிறது. ஆமாம், அப்படித்தான் என்று முடிவு கட்டி, பாரதியாரிடம் கூடக் குறை கண்ட என்னுடைய நக்கீரத்தை நானே பாராட்டிக் கொண்டு... இதற்குப் பிறகு, பாட்டை யாராவது படிப்பார்களா? 'காணி நில'த்தை ஒதுக்கி வைத்தேன்.



கு. ஸ்ரீநிவாசராகவன்

இது நடந்த இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு, ஒருநாள் இரவு. காற்றுக்காக வாசலில் வந்து, என்னுடைய கித்தான் நாற்காலி சிம்மாதனத்தில் வீற்றிருந்தேன். பொழுது சாய்ந்து ஏழெட்டு நாழிகைக்கு மேலிருக்கும். அன்று நல்ல நிலா. என் சிறு வீட்டை அடுத்துக் கிழக்கே அடர்ந்த தென்னந் தோப்பில் நிலா திட்டுத் திட்டாகத் தேங்கிக் கிடந்தது; தென்னை மட்டைகளின் மேல் உருக்கிய வெள்ளியாக வழிந்தோடியது. சுவர்க் கோழியின் சத்தத்தைக் காணோம். ஒரே மோனம். ஏதோ குருட்டு யோசனையில் ஆழ்ந்தேன். தெளிவற்ற எண்ணச் சிதர்கள் ஏதேதோ தலைதூக்கின. இனங் காண்பதற்குள் ஓடி மறைந்தன. நிலா, நிழல், ஓடிய வெள்ளி, உறைந்து சிலிர்த்த இரும்பு, மேலே ஓரிரு பொன் தாரகை, அமைதி.

சரேலென அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு வந்தது ஒரு வேதனைக் குரல். பறவையின் குரல்தான். தோப்பின் உள்ளிருந்து வந்த அந்தக் குரல், குயிலின் கூவல் என்று தெரிந்து கொள்வதற்கு ஒரு நிமிஷம் ஆயிற்று, அப்படி உருமாறிப் போயிருந்தது. அதற்குள் நாலைந்து முறை அந்தக் குயில் கூவி விட்டது.

குயில் கூவுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். 'அக்கூ' என்று மெல்லத் தொடங்கி, படிப்படியாக மேலே ஏறி, கடைசியில் நின்றுவிடும். மறுபடியும் கீழேயிருந்து தொடங்கும். வேனிற் காலத்துப் பிற்பகல் மோனத்தில் மாந்தோப்பிலிருந்து வரும் இந்த அற்புத இசையில் மயங்காதவர் உண்டோ? கடைசிவரையில் எவ்வளவு உயர்ந்த ஸ்தாயியை எட்டிப் பிடித்தாலும் குயிலின் குரலில் தெளிவு, இனிமை, கனிப்பு, பிசிறில்லாத நாதம், இவையே நிறைந்திருக்கும்.

ஆனல், அன்றிரவு என் வீட்டை அடுத்த தோப்பில் நிலவிலே, அந்தக் குயில் கூவவில்லை. கத்தியது. ஆம். கத்தியது. நாலைந்து முறை உச்ச ஸ்தாயியில் கத்திக் கத்தி முடிவில் குரல் உடைந்து, கரகரத்து விம்மியது. சிறிது நேரம் மோனம். பிறகு மறுபடியும் அந்தக் கதறல். பாரதியாரின் சொற்கள் நினைவுக்கு வந்தன.

கத்தும் குயிலோசை —
சற்றே வந்து
காதிற் படவேணும்

எனக்குப் புல்லரித்தது. குயிலும் கூட, கத்தும் போலிருக்கிறதே, ஏன் இந்தக் குயில் இப்படி இரவிலே குரல் எழுப்பியது? குயில் கூவுவது நமக்கு இனிமையானஇசையை வழங்கவா? இல்லை. அது தன் பெடையை அழைக்கிறது. அந்தக் காதற் குரலே நாம் கேட்கும் குயிலின் 'இனிய' கீதம். பகல் முழுதும் பெடையைத் தேடித் தேடி அழைத்து, ஏமாந்து, இரவு வந்த பின்னும் அழைத்து வெந்தது போலிருக்கிறது, அந்த அப்பாவிக் குயில். இல்லாவிட்டால் இரவில் குரல் கொடுக்குமா? இப்போது தாபம், ஏமாற்றம், சோர்வு, வேதனை, அனைத்தும் கலந்த வெறியல்லவா குயிலின் குரலில் பேசுகிறது? அந்தக் குரல் கத்தலாக இல்லாமல், கரகரத்து, ஒடிந்து மடியாமல், வேறு எவ்விதமாக அமையும்?

'கத்தும் குயிலோசை'. பாரதியார் கவிதை மரபை விட்டு விலகிப் போயிருக்கிறார். உண்மைதான். ஆனல் உண்மையை விட்டு விலகவில்லை. என்றோ ஒரு நாள், இரவில், நிலவில், குயில் கத்திக் கத்தி அலமருவதை அவர் கேட்டிருக்கிறார், நெஞ்சில் வாங்கியிருக்கிறார். ஆகவேதான், 'கத்தும் குயிலோசை'

என்று பாடுகிறார். 'கத்தும்' என்பது எதுகைக் காக வரவில்லை, அப்பனே, அது கவிதைக் காக வந்தது என்று ஒரு குட்டுக் குட்டிக் கொண்டேன்.

அது சரிதான். ஆனால் 'காணி நிலம் ஒன்றிலே இன்பச் சூழல் ஒன்றை அமைத்துத் 'தா' ' என்று பராசக்தியை வேண்டும் இந்தக் கவிஞர், மாளிகையும், தென்னை மரமும், கேணியும், முத்துச் சுடர்போல நிலவும் வேண் டும் என்று வரம் கேட்கும் இவர், எதற் காக வேதனை நிறைந்த குயிலின் கத்தல் தமது காதிற்பட வேண்டும் என்று கேட் கிறார். அவர் விரும்பும் அந்தக் காணி நிலச் சொர்க்கத்தின் கலப்பற்ற இன்பத்தை இந்தச் சோகக் குரல் சிதைத்து விடாதா?

கலப்பற்ற இன்பம் என்பது உண்டா? அது துயரிலே உழல்கின்ற மனிதனுடைய கற்பனை. இன்பமும், துன்பமும், ஒளியும் நிழலும் போல; சூரியனும் சாயாதேவியும் போல; அவற்றைப் பிரிக்க முடியாது.

'துன்பு உளது எனில் அன்றோ சுகம் உளது' என்று கவிச் சக்கரவர்த்தி கம்பன் பேசும் போது, இந்த உலகின் மாறா நியதி ஒன் றையே நமக்கு நினைவுபடுத்துகிறான். துன்பம் இருப்பதால்தான் இன்பம்.

இதைத் தெரிந்துதான் பாரதியார் தம்முடைய காணி நிலத்தில் குயிலின் வேதனைக் குரல் வடிவத்தில், துன்பத்துக்கு இடந் தருகிறாரோ? ஆனால் அந்தத் துன்பம் பெருவெள்ளமாக வந்தால் காணி நிலத்தில் அவர் கட்டுகின்ற இன்பம் சிதறிப் போகுமே! ஆகவே, குயிலின் கதறல் சிறிது காதில் விழுந்தால் போதும்,

**சற்றே வந்து
காதிற்பட வேணும்**

என்று பாடுகிறாரோ? எங்கோ தொலைவில் துன்பம் இருக்கிறது. ஆனால் இருக்கிறது என்ற உணர்வுதான், காணி நிலத்துக் களிப் புக்கு அழுத்தம் தருகிறதோ, அதற்காகத் தான் அதைத் தமது பாட்டில் பாரதியார் கொண்டு வந்தாரோ என்றெல்லாம் நினைத்தேன்.

ஆனாலும், கவிஞனுடைய பரிவு, இதை எப்படி அனுமதித்தது? உலகில் தோல்வியும், ஏமாற்றமும் துன்பமும் உள்ளன என்பதைக் கவிஞன் மறப்பதில்லை. ஆனால் அதற்காக அந்தத் துன்பத்தைத் தன்னுடைய இன்பத் தைத் தூக்கிக் காட்டும் சாதனமாகவா கவிஞன் பயன்படுத்த வேண்டும்? பாரதியா ருடைய காணி நிலப் பாயசத்திற்கு, குயிலின் வேதனைக் கதறலா ஊறுகாயாக அமைய வேண்டும் ?

அப்படித்தான் என்று பாட்டைச் சொல் லிப் பார்த்துக் கொண்ட எனக்கு முதலில் தோன்றியது. இல்லாவிட்டால், குயிலின் கத்தல் சற்றே வந்து காதிற்பட வேண்டும் என்று சொல்லிவிட்டு, தாம் வேண்டும் இன்பத்தின் மற்றைய அம்சங்களைக் கவிஞர் அடுக்கிக் கொண்டு போயிருப்பாரா? இவ் வளவு கடின இதயமா பாரதியாருக்கு?

**சித்தம் மகிழ்ந்திடவே — நன்றாய் இளந்
தென்றல் வர வேணும்
பாட்டுக் கலந்திடவே — அங்கே ஒரு
பத்தினிப் பெண் வேண்டும் — எங்கள்
கூட்டுக் களியினிலே — கவிதைகள்
கொண்டு தர வேணும்**

தென்றல், பத்தினிப் பெண்ணோடு கூட்டுக் களி — ஆனால் தொலைவிலிருந்து, நிலவிலே பெடைக்காக ஏங்கும் அந்தக் குயிலின் குரல். பிறகு, அந்தக் குரலைப் பற்றிப் பேச்சே இல்லை. ஒரு சமயம் அது நின்று விட்டதோ. இல்லை, பாரதியார்தான் தமது இன்பத்திலே அமுழ்ந்தி விட்டாரோ ?

குயிலின் குரல் ஓய்ந்ததோ, இல்லையோ, அதன் எதிரொலி பாரதியாரின் நெஞ்சிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது என்பதை அடுத்து வரும் அவருடைய சொற்கள் காட்டுகின்றன. குயிலின் ஓசையாக, இருக் கிறேன் என்று தொலைவிலிருந்து எச்சரிக்கை கொடுக்கும் துன்பம், காணி நிலத்துக் குள்ளே, அதன் தித்திப்பில் கசப்புப் பெருங் கடலாக வருவதற்கு எவ்வளவு நேரமாகும் ? வந்தால், எப்படிக் காத்துக் கொள்வது, வராமலிருக்கும்படி அதைத் தடுக்கும் அணை எது? பராசக்தியின் அருள்தான்.

**காட்டு வெளியினிலே — அம்மா, நின்றன்
காவலுற வேணும்**

இந்தக் காவலின் அரவணைப்பில், துன்பம் இருக்கிறது என்றாலும் நம்மை அணுகாது என்ற நம்பிக்கையில், காணி நிலத்திலிருந்து, அந்தத் துன்பம் அனைத்தையும் ஒழிக்கும் பாடல்களை ஏன் வீசப்படாது?

**—என்றன்
பாட்டுத் திறத்தாலே — இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்**

இல்லை, பாட்டின் முடிவிலே, காணி நிலத் தையே வீசி எறிந்துவிட்டு வையத்தைப் பாலிக்க, பாட்டைக் கையிலேந்தி — அதுவும் பராசக்தி தந்த பரிசுதானே — பாரதியார் புறப்படுகிறார் என்றே எனக்குத் தோன்றியது.

'கத்தும் குயிலோசை' என்பது பாட்டின் திருப்பு மையம். அது வரையில், இந்த உலக சுகம்; அதன் பகைப்புலமாக, அதை எடுத்துக் காட்டும் கருவியாகவருகிறது குயிலின் கத்தல். ஆனால் துன்பத்தின் சின்னமாக ஒலிக்கும் அது, வர வர நெருங்கி வளர்ந்து வளர்ந்து கவிஞருடைய நெஞ்சு முழுதையுமே நிறைத்து, பராசக்தியிடம் பெற்ற கவிதை களையே படையாகக் கொண்டு, அவரை உலக மென்ற துன்பக் களத்துக்குப் போக வைக் கிறது. இப்படி யெல்லாம் எண்ணினேன்.

சரிதானோ? மேலே ஒன்றிரண்டு மேகங்கள் மிதந்து வந்தன. நிலவு மங்கியது. காற்று, குருடனைப் போல் தட்டித் தடவி என்னைச் சுற்றித் தடுமாறி விட்டுத் தோப்பிருளில் எதையோ தேடிச் சென்றது. தென்னையின் சலசலப்பு, 'ஏன் வந்தாய்' என்று காற்றைக் கேட்டது. குயிலின் குரல் ஒடுங்கி விட்டது. சுவர்க்கோழிகள் தமது ஓயா நெடும் சுருதியை மீட்டத் தொடங்கின. அந்தச் சுருதியோடு ஒன்றிப் பாரதியாரின் 'காணி நிலம்'—எளிமை யின் எல்லை நிலத்து மையத்திலே கவிதையின் இதயத்தைக் காட்டும் அந்த அற்புதப் படைப்பு — என் நெஞ்சிலே ஒலித்தது. இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

நாரதர் தீர்ப்பு



இராமலிங்கையர் பிராமணர். பிதுரார்ஜிதச் சொத்து கொஞ்சம் உண்டு. ஆயினும் வியாபாரத்தில் இறங்கினார். பிதுரார்ஜிதமானபுத்தியும், சாமர்த்தியமும் இருந்தபடியால் வெற்றியுடன் வியாபாரம் நடந்தது. வியாபாரத் துறையிலும் அந்தப் பிராமணப் பிதுரார்ஜிதம் பயன்பட்டது. ஆனால் இப்படி வழிமாறிப் பயன்பட்ட தனம் செலவழிந்து போய் ஒன்றும் மிச்சம் இராது. பிறகு ஆள் அடையாளமே தெரியாது. அதர்மத்தில் செலவழிந்த புத்தியும் சாமர்த்தியமும் பெருகும்;- குறையாது; அழியாது. அது கிடக்கட்டும். இராமலிங்கையர் ஊரில் பெரிய வியாபாரியாகப் போய்விட்டார். பலர் அவருடைய உதவியினால் நன்மை அடைந்தார்கள். சிலரை மிகவும் கடுமையாக நடத்தினார். ஆனபடியால் இராமலிங்கையரைப் போற்றுபவர்களும் உண்டு; திட்டுகிறவர்களும் இருந்தார்கள்.

அவரைப் பற்றி ஒரு சர்ச்சை, இரண்டு பெரிய அத்துவைத வித்துவான்களிடையே நடந்தது—அவர் ராட்சசரா, தெய்வ ஜாதியா என்று. அவர் ராட்சசர் என்பதற்கு வித்துவான் கிருஷ்ணையர் நல்ல சான்றுகளும் வாதங்களும் சமர்ப்பித்தார். கிருஷ்ணையருடைய சீடர்கள் கரகோஷம் செய்தார்கள். இதற்கு மாறாகச் சாம்பசிவ சாஸ்திரிகள் மிக நல்ல வாதங்கள் எடுத்துச் சொல்லித் தம்முடைய சீடர்களின் கரகோஷங்களைப் பெற்றார்.

இந்திரன் தவறு செய்தான் அல்லவா? அதனால் அவன் தேவஜாதி அல்லாமல் போனானா? வாயு பகவான் ரிஷியின் புத்திரிகளை அவமதித்தும் தேவனாகவே இருந்தான். இப்படியே சூரியனும் மற்றவர்களும்; இராமலிங்கையர் தேவ ஜாதிதான் என்று வன்மையாகச் சாம்பசிவ சாஸ்திரிகள் வாதித்தார். நாரதர் வந்து சேர்ந்தார். ''கொல்'' என்று சபை நடுவில் குதித்துச் சிரித்தார். ''பண்டித மூடர்களே! இராமலிங்கையர் தேவ ஜாதியுமல்ல, ராட்சச குலமுமல்ல. இவருடைய தாய் தகப்பன்மாரை எனக்கு நன்றாகத் தெரியும்.. இவர் மனித ஜாதி'' என்று சாட்சியம் சொல்லிவிட்டு வீணையுடன் மறைந்துவிட்டார்.

சாம்பசிவ சாஸ்திரிகளும் வித்துவான் கிருஷ்ணையரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு மயக்கமாகப் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். நாரத

முனிவருடைய தேஜஸின் பிரபாவமே அந்த மயக்கத்துக்கும் பிரமைக்கும் காரணம்.

''இந்தச் சர்ச்சை முனிவருக்குப் பிடிக்க வில்லை போல் இருக்கிறது'' என்றார் சாம்பசிவ சாஸ்திரிகள்.

''அப்படித்தான் தோன்றுகிறது'' என்றார் கிருஷ்ணையர்.

''என்ன ஆயிற்று சாஸ்திரவிசாரம்?'' என்று இராமலிங்கையர் சாஸ்திரிகளைக் கேட்டார்.

''அது என்ன என்கிறீர்? தங்களுடைய குணாதிசயங்களைப் பற்றித் தர்க்கம் நடந்து வருவதை அறிந்து நாரத முனிவரே — சாட்சாத் முனிவரே — வந்து தீர்ப்புச் சொல்லி விட்டுப் போய்விட்டார்'' என்றார் சாஸ்திரிகள்.

பக்தி ஒன்று போதும் நமக்கு. கலிகாலத்துக்கு இது சாஸ்திரம்'' என்றார் சாஸ்திரிகள்.

''ஆனபடியால் என்னைப் போன்ற பிராமணனுக்கும் கதி உண்டு.''

''உண்டு! உண்டு! அதற்கு என்ன சந்தேகம்?'' என்றார் சாஸ்திரிகள், கதையில் பேசிய கிளியைப் போல். ''அது என்ன கிளிக் கதை?'' என்று கேட்கா தீர்கள். அது ஓர் ஈசாப் கதை. யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



[தேனாம்பேட்டை பால சுப்பிரமணிய சுவாமி கும் பாபிஷேக மலரிலிருந்து]

''என்ன சொன்னார்? என்ன சொன்னார்?'' என்று வெகு ஆசையுடன் கேட்டார் இராமலிங்கையர்.

'' 'நீங்கள் மனித ஜாதி. தேவ ஜாதியும் அல்ல, ராட்சச ஜாதியும் அல்ல' என்று விவாதத்தைத் தடை செய்து விட்டு மறைந்து போனார்'' என்று விஷயத்தை விளக்கினார் சாஸ்திரிகள்.

''இப்படித்தான் இந்த முனிவருடைய காரியங்கள். அத்துவைத துவைத வாதங்களையும் இவர் நிறுத்தி விடுவார் போலிருக்கிறது. இனிமேல் படிப்பு ஏது, வேதாந்தப் பயிற்சி ஏது? எல்லாம் சூனியமாய்ப் போய்விடும்'' என்றார் இராமலிங்கையர்.

''அப்படி அல்ல, ஐயர்வாள்! பக்தி ஒன்று இருந்தால் போதும். துவைதமும் தவறு அல்ல; அத்துவைதமும் தவறு அல்ல. பக்தியே ஞானம், பக்தியே கர்மமும்.

காட்சி 2

(ஹோட்டல் வாசல். '[illegible] விட்டு' என்று பாடியபடி சுப்பாமணி சொகுசு நடையுடன் நுழைகிறுன்.)

கிரு: டேய் சுப்பாமணி, என்னடாது கூப் பாடு. ஜோலிக்கு வர்ற நேரமா?

சுப்பா: என் சங்கீதம் கூப்பாடா? ஐயோ ரஸிக ரத்தினமே!

கிரு: என்னடா லேட்டு?

சுப்பா: என்ன செய்யறது அண்ணு, இன்னிக்கு நாடக ஒத்திகை!

கிரு: என்னடா நாடகம் போடமுய்?

சுப்பா: நாடகமில்லே சுவாமி, நிஜம்தான். நான் நாடகக் கம்பெனியிலே சேர்ந்துடப் போறேன். நம்ம சீட்டைக் கிழியுங்க. சம்பளம் பட்டுவாடாப் பண்ணுங்கோ.

காட்சி 3

(நாடக அரங்கம். ஒத்திகை நடக்கிறது.)

டைரக்டர்: இன்னும் எங்கே ஹீரோயினைக் காணோம்?

பாலு: ஹீரோயின் இல்லாட்டி என்ன சார்? நம்ம சுந்தரத்தை டம்மியா வச்சு நடிக்கச் சொல்லுங்க.

எவ்வாறு ஒப்பாரி வைப்பேன்? என்ன செய்வேன்? நாமோ பிள்ளை குட்டிக்காரன். ஆறு குழந்தைகள். ஏழாவது பிரசவத்துக்கு மனைவியை காந்தி ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' செய்திருக்கிறேன். அதற்கு அட்வான்ஸ்...!

டை: சட், நான்ஸென்ஸ். என்னய்யா வசனம்? சொந்தச் சரடு விடறே.

சுப்பா: மன்னிக்கணும் டைரக்டர் சார். எங்க ஹோட்டல்லே அடிக்கடி இந்த வசனம் பேசி அதுவே ஞாபகம்.

காட்சி 4

(கிருஷ்ணய்யர் ஹோட்டல்.)

சுப்பா: நமஸ்காரம் அண்ணு.

கிரு: யாருடா அது? வாங்கோ. நடிகர் திலகமா, குங்குமமா?

சுப்பா: ஐயோ அண்ணு! அதுக்கொரு கும்பிடு போட்டாச்சு. உங்க கிட்ட பழைய படி ஸர்வரா....

கிரு: ஊஹூம். அது நடக்காது. இந்தக் கிருஷ்ணய்யர் பறைஞ்சா பறைஞ்சதுதான்.

சுப்பா (நகர்ந்தபடி): இது என்ன உலக மடா? இந்த இடத்திலே தினம் நடிச்சேன்.





சுப்பா: நீ என்னய்யா பேத்தறே! நமக்கு ஹீரோயின் இல்லாட்டி டயலாக் பேச வராது. டல்லடிக்கும்.

டை: சரி, அவரைப் பக்கத்திலே வச்சுக் கிட்டு ஒத்திகை பாரும். நீர் யாரு தெரியுமா? மிருகண்டு முனிவர். அது உம்ம சம்சாரம் மருத்துவதி. குழந்தை பிறக்கவில்லேன்னு கவலேப்படற கட்டம்.

சுப்பா: சார், இந்தக் கதை காலத்துக்கு ஒத்தமாதிரி இல்லே.

டை: என்ணு மேன் கண்டுட்டே நீ?

சுப்பா: இல்லே. இப்ப எல்லாம் குடும்பக் கட்டுப்பாட்டு 'தீம்'தான் ரொம்ப சக்ஸஸ் புல். அதுக்கு எதிரா நம்ம காட்சி அமைச்சா, சென்ஸார் கத்திரிக்கோல் போட்டாலும் போடுவாங்க.

டை: அது இருக்கட்டும். மிஸ்டர் மிரு கண்டு, வசனம் சொல்லும். ''மனைவி மருத்துவதியே! நம்முடைய பிள்ளையில்லாக் குறையை எப்படி வெளியிடுவேன்? உன்னுடைய முகார விந்தத்தில் கவலேயின் பந்தம் கூடிச் சந்தம் பாடுவதைக் கண்டு அந்தரம்...''

சுப்பா: சார், டயலாக் அரிசிக் 'க்யூ' மாதிரி ரொம்ப நீளம்.

டை: கத்துக்குட்டி, வசன சீர்திருத்தம் வேறே செய்ய வந்துட்டியா?

சுப்பா: ஸாரி. மனைவி மருத்துவச்சியே! நம்முடைய குழந்தை இல்லாக் குறையை

இப்ப இவருகிட்ட உண்மையைச் சொன்னு நம்ப மறுக்கிருர். நடிப்பு என்கிருர். உலகமே நாடக மேடை. வாழ்க்கையே ஒரு நாடகம். சரி, இவருகிட்ட நடிச்சாத்தான் காரியம் நடக்கும். அண்ணு, கடைசியா ஒரு வேண்டுகோள்.

கிரு: என்னடா நோட்டீஸ் விடறே?

சுப்பா: அதெல்லாம் இல்லே அண்ணு. ஒரு கப் காப்பி... அதுவும் அண்ணு கையாலே...

கிரு: சரி, சரி. டேய் சாமு, ஸ்டிராங்கா ஒரு கப் காப்பி கொண்டுவா.

சுப்பா (கண்ணே இலேசாக விழித்து, ஈன ஸ்வரத்தில்): அண்ணு, குடித்த காப்பி நுரை சத்தியமாய்ச் சொல்லுகிறேன். எனக்கு வேலே தராட்டா இந்த மருந்தையும் குடிச்சு, 'உண்'விலே விஷம்'னு புரளி கட்டி விடப் போறேன். அப்புறம் நாலு நாளைக்கு.... அதுவும் விசேஷ தினம் வர்றது. பிஸினஸ் க்ளோஸ் ஆயிடும்.... என்ன சொல்றேன்?

கிரு: அடப் பாவி! எழுந்து உட்காருடா கூத்தாடி. என் கடையிலேயே நாடகமா? பழி, இன்னெரு கப் காப்பி குடிச்சுத் தொலேச்சுட்டு, அந்த டேபிளைக் கவனி.... ஹூம், குருவாயூரப்பா!

சுப்பா: வாழ்க முதலாளி! நமக்கு மேடையிலே நடிக்க யோகமில்லே. கடையிலேதான் நம்ம நாடகம். உத்தியோகம் போனதும் நடிப்பாலே... வந்ததும் நடிப்பாலே!



மூத்த பிள்ளை

துரோணன்

மாலை ஏழு மணி சுமாருக்குத் தெற்கேயிருந்து வரும் பாசஞ்சர் வண்டி, முதலாம் பிளாட்பாரத்தில் வந்து நிற்கிறது. ஒரு மூன்றாம் வகுப்புப் பெட்டியின் கதவைத் திறந்துகொண்டு மெலிந்த உருவமொன்று அவசரம் அவசரமாகக் கீழே இறங்குகிறது. அப்படி இறங்கினவுடனேயே, அது ஓட்டமும் நடையுமாகச் சென்று கையிலுள்ள மூட்டை, பைகள் இரண்டையும் பிரயாணிகள் தங்குமிடத்தின் தூண் அடியில் கொண்டு வந்து போட்டுவிட்டு, மீண்டும் ரயிலை நோக்கி ஓடுகிறது. அங்கே — இறங்கின பாதையோரத்துக்கு இரண்டு கைகளையும் நீட்டி; ஒரு மனித உருவத்தைத் தூக்க மாட்டாமல் தூக்கிக்கொண்டு பைகள் இருக்குமிடத்துக்கு விரைகிறது. ரயிலுக்கும், இந்த இடத்துக்கும் இடையில் உள்ள தூரம், சற்றேறக் குறைய நூறடி இருக்கும். கையில் தூக்கிவிட்ட உயிர்ச் சுமையைக் கொண்டு வந்து இடத்தில் சேர்ப்பதற்குள்ளாக, வழியில் எத்தனை இடர்கள்? குறுக்கும் நெடுக்குமாக ஓடும் பிரயாணிகள், கூவிச் செல்லும் விற்பனையாளர்கள், வழியடைத்து நின்று வேடிக்கை பார்ப்பவர்கள், வியப்புடன் விசாரணை புரிபவர்கள், காலைத் தடுமாற வைக்கும் சாமான்கள்—இவ்வளவையும் சமாளித்துக்கொண்டு, அவ்வுருவம் ஓட்டமாக வந்து கைப் பளுவைப் பொறுமையாகக் கீழே இறக்கி அமர்த்தி விட்டு, பொத்தெனத் தரையில் சாய்கிறது. அப்புறம்அதற்கு மேல் மூச்சுக்களின் வேகமும், இரைப்புக்களும் அடங்கி நிதானத்துக்கு வரக் கால் மணி நேரமாகிறது.

இப்படி — ஆரம்பத்திலேயே ஒரு மனிதனை - அதிலும் அறிவாளியான யோகியை ஓர் அஃறிணைப் பொருளாக அறிமுகப்படுத்துவதன் காரணம் — அம்மனிதன் விசை கொடுக்கப்பட்ட இயந்திரமாக இருக்கிறானே, அதனால் தான். உயிரும் பேச்சுமுள்ள ஜீவனென்று சுமையாகத் தூக்கி வரப்படும் நிலையில் அதுவும் அஃறிணையாகத்தானே மாறுகிறது? தூக்கப்படும் உயிர்ச் சுமையான குழந்தையும் இப்படித்தானே?

அவன்தான் ரங்கண்ணா! அவனால் தூக்கப்பட்டு வரும் பொருள் அவனைப் பெற்ற தாயார்தான், வேறு யாருமில்லை — அவனையே பெற்ற அன்னை!

இடது கால் தொடை முதல் பாதம்வரையில் வெண்ணிறக் கவசத்தைப் பூட்டி வைத்தது போன்ற கட்டுடன், கால் நீட்டின வாக்கிலேயே இருக்க, சுமக்கப்பட்டு வரும் அறுபது வயதான பெண் கட்டை அவனுடைய அன்னை. உள்ளே நொறுங்கிப் போயிருக்கும் கால் எலும்புகள் குணமாகிக் கூடி, இனி பழைய உருவாக வேண்டும். இதற்கான இரண்டாம் பயணத்தில்தான் ரங்கண்ணாவை இங்கே சந்திக்கிறோம்.

ரங்கண்ணாவுக்கு இப்போது நாற்பத்திரண்டு வயது. அவளுக்குத் தலைச்சன் பிள்ளை! இந்த வயதிலுள்ளவர்கள் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க தோற்றமும் வலிவுமாக எவ்வளவோ பேர்கள் இல்லையா? அது தனியொரு பாக்கியம் — ரங்கண்ணாவுக்குச் சம்பந்தமில்லை! அவனுடைய அவல



வாழ்வு, அவனை வயதுக்கு மேல் மூப்புள்ளவனாகத்தான் காட்டிற்று. இப்போது என்ன, அவனுடைய இருபத்தைந்தாம் வயதிலேயே நரைக்க ஆரம்பித்துவிட்டிருந்த தலைமயிர் இப்போது பேர்பாதி உதிர்ந்தும், உதிர இருப்பவை வெளுத்தும் இருக்கும் கிராப்புத் தலை. குழி விழுந்த கண்கள், முகவாய்க்கட்டை நீண்டு சப்பைப் பட்டிருக்கும் கன்னங்கள். இப்படிப் பட்ட உருவமாக உள்ள ரங்கண்ணா தான் ஒரு காலத்தில் அமெச்சூர் நாடக சபாவில் அழகான கிருஷ்ணன், அர்ஜுனன், முருகன் வேஷங்களிலெல்லாம் வந்தவன் என்ற உண்மையைச் சொன்னால் யாராவது நம்புவார்களா? அவனுடைய அழகு, தெம்பு எல்லாவற்றையும் உழைப்பு குடித்து விட்டது—பொறுப்பு அழித்து விட்டது! இப்போது—

ரங்கண்ணாவின் சட்டையிலும், உடையிலும் இரண்டொரு கிழிசலையும், தையலையும் காணலாமே தவிர, அவற்றின் நிறத்தில் அப்பழுக்கைக் காண முடியாதே! அப்படித் தானிருந்தது அவனுடைய கறையற்ற உள்ளமும்.

ஒருக்களித்துக் கிடக்கும் ரங்கண்ணா, உடம்பைப் புரட்டி நெட்டி முறிக்கிறான். கைகளை உதறி விட்டுக் கொள்ளுகிறான்.

''ஐயோ பாவம்! நீங்க இன்னா சாமி? நாங்க இந்த டேஷனிலே எத்தினி பேரு இருக்கோம் — ஒரு வார்த்தை கூப்புடக் கூடாது? அம்மாவை சௌரியமாத் தூக்கி வந்து உடுவோமில்லே? ஒன்னாலே முடியுமா இவங்களைத் தூக்க? —'' இவ்வாறாகக் கேட்டபடி நீலச் சட்டையும், சிவப்புத் தலைப்பாகையுமாக வந்து நிற்கிறான் ஒரு கிழப் போர்ட்டர்.

ஒரு கனவான் ரங்கண்ணாவைப் பார்த்தபடி, ''ஸார், இந்த மாதிரி 'பேஷண்ட்களுக்காகவே புக்கிங் ஆபீசிலே நாற்காலி, ஸ்ட்ரெச்சர் எல்லாம் உண்டு ஸார். நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் போதுமே — போர்ட்டர்கள் தானாகவே எடுத்து வருவார்களே? உங்களுக்குக் கொஞ்சம் கூடச் சிரமமில்லை.—விஷயம் தெரியாதா?'' என்றார்.

''இவனுக்கு நீங்கதான் புத்தி சொல்லுங்கோ! என் வார்த்தை அவனுக்குக் காதிலியே ஏற மாட்டேங்கறது!'' என அங்கலாய்ப்புப் பொங்க ஓலமிடுகிறாள் தாய்.

ரங்கண்ணா பதிலே சொல்லவில்லை! யோசனை தெரிவித்த கனவானையும், முறையீடு செய்த தாயாரையும் ஒரு முறை பார்த்துவிட்டு அசட்டுச் சிரிப்புடன் பெருமூச்சு விடுகிறான்.

அவனுக்குத் தெரியாத புது விஷயமோ இது? ஒரு தடவை ரயிலை விட்டு இறக்க — ஏற்ற முழுசாக ஒரு ரூபாய்க் கூலி! இது — உயிர்ச் சுமையாயிற்றே! இந்த ஒரு ரூபாய்க்காக ரங்கண்ணா பட்ட பாடு — படும் பாடு — படைத்தவனுக்கே தெரியும். அதிலும் இப்போது நாற்காலியுடன் வருவதானால் இரண்டு பக்கத்துக்குமாக, இரண்டு பேர்கள் — இரண்டு ரூபாய் தளர்த்தியாக வேண்டும். வாய் வார்த்தை அநுதாபிகளுக்கு ரங்கண்ணாவின் மௌன பதில் எப்படிப் புரியும்? அவர்களுக்குப் புரியாமல் இருப்பது சகஜம். ஆனால் புரிந்தும், தெரிந்துமாகப் பக்கத்திலேயேவுள்ள ஆத்மாவுக்கு?

''ஏண்டா பையா! வண்டி வர இன்னும் மூணு மணி தேசகாலம் கிடக்கு. நீ கார்த்தாலே ஒன்பதரை மணிக்கு வாயைத் திறந்தவன். மாயவரம் ஸ்டேஷனிலேகூட, நீ ஒன்றும் சாப்பிடாமல் எனக்கு வாங்கித்தொலைச்சே. உன் கண்ணும் மூஞ்சியும் கிடங்கிலே கிடக்கு. நீயும் போய் ஏதாவது ஆகாரம் பண்ணிட்டு வாயேன்.'' தாயார் சொல்லுகிறாள். ரங்கண்ணா பெருமூச்சு விடுகிறான். இந்த ஜாடையைப் புரிந்துகொள்ள வில்லையானால், ரங்கண்ணா அவளுடைய பிள்ளையாகவே இருக்க முடியாதே! சட்டென்று எழுந்திருக்கிறான். கையில் கூஜாவையும் பிளாஸ்கையும் எடுத்துக் கொண்டு சட்டைப் பையைப் பார்த்துக் கொண்டே சாப்பாட்டறையை நோக்கி நடக்கிறான். சற்று நேரத்துக்கெல்லாம் கையில் இரண்டு பொட்டணங்கள், கூஜாவில் வெந்நீர், பிளாஸ்கில் காப்பி — இவற்றுடன் வந்து சேருகிறான்.

தாயார் ஒரு கவளம் விழுங்குகிறாள். அதே சமயம் எங்கிருந்தோ வந்து சேரும் பகாசூர நாய்களில் இரண்டு, சொறி பிடித்த நோஞ்சானில் ஒன்று ஆக மூன்று ஜீவன்களோ பங்கு வசூலிக்க நெருங்குகின்றன.

ரங்கண்ணு எழுந்து நின்று நாய்களை விரட்டிவிட்டு அமருகிறான். தாயார் மறு பொட்டலம் பிரிக்கிறாள். ''ஏண்டாப்பா, நீ சாப்பிட்டியா-உப்புமா, இட்டிலி-ஏதாவது?''

அவன், ''ஊம்'' என்று தலையாட்டிக் கொண்டே கூஜாவில் உள்ள வெந்நீரை டம்ளரில் விட்டுக் கொடுக்கிறான்.

''நீ நிஜமாகத்தான் சாப்பிட்டயா, இல்லே, எனக்காகப் பொய் சொல்றேயா?''

''இல்லேம்மா, நானும் சாப்பிட்டேன்!'' என்று முகம் மலரக் கூறிக் கொண்டே பொட்டலச் சருகுகளைச் சுருட்டி எடுத்துக் கொண்டு கூஜாவுடன் அப்பால் நகருகிறான் ரங்கண்ணு. அப்போது அவன் உள் மனம் கணக்குப் போடுகிறது. இந்த இரண்டு கவளம் உப்புமா, இரண்டு இட்டிலி ஒரு கப் காப்பி—இவற்றுக்குக் கட்டணம் அறுபது பைசா. அவன் சாப்பிட்டிருந்த ஒரு கப் டீக்குமாகச் சேர்த்து எழுபத்தைந்து பைசா—முக்கால் ரூபாய். ஊர் ஸ்டேஷனிலிருந்து இதுவரைக்கும் வழிச் செலவு மாத்திரம் மூன்று ரூபாய்! குழாயில் கையலம்பிக் கொண்டே ஒரு பெரு மூச்சையும் விடுகிறான். மேற்கொண்டு நடக்க வேண்டிய செலவுகள்?

முதலில் இதைவிட்டு நான்காவது பிளாட்பாரம் போய்ச் சேர்ந்தாக வேண்டும்—பதினைந்து தண்டவாளங்களைக் கடந்து. அப்புறம் ஏறக்கூடப் பாதையில்லாமல் அடைத்துக் கிடக்கும் ரயிலுக்குள் ஏறி, இடம் கிடைத்தாக வேண்டும். இந்தக் காரியம் தன் ஒண்டியால் சாத்தியமாகுமா? வேறு என்ன செய்வது? போர்ட்டர், நாற்காலி உதவியில்லாமல் முடியாது. இதற்குச் செலவுத் தொகை?

அப்புறம், ரயில் சென்னை ஸ்டேஷனை அடைவதற்குள் தாயாருக்கு என்னென்ன தேவைகள் எங்கெங்கே ஏற்படுமோ? எழும்பூரை அடைந்ததும், ஸ்டேஷனை விட்டு வெளிப்பக்கம் போய்ச் சேரும் வரையில் போர்ட்டர் கூலி, காலே ஆகாரச் செலவு—அதற்கு மேல் ஆஸ்பத்திரி போய்ச் சேர வாடகைக் காருக்குச் செலவு -- அங்கே என்னென்ன விதமான செலவுகள் காத்திருக்கின்றனவோ? எத்தனை நாட்கள் தங்கும்படியிருக்குமோ? இவற்றுக்கெல்லாம் பிற்பாடாக, இதே பிரயாணச் செலவுகளுடன் ஊர்திரும்பி வீடு சேர்ந்தாக வேண்டும்!

கடந்த பத்து நாட்களாக முழுசாக ஓர் ஐந்து ரூபாய் கிடைக்காத காரணத்தால் தானே அந்த மிக்சர் மருந்தை வாங்கிச் சாப்பிட முடியவில்லே? இப்போது? ஒரு ஐந்து ரூபாயா? பலப்பல ஐந்துக்கள்—பலப்பல இரண்டுகள் — பலப் பல ஒன்றுகள்! பெரும் பிரயாசையாக இறைபட்ட கிணற்று நீர் ஒன்றுக்கும் உதவாமல் சாக்கடைக் குட்டைக்குப் போய்ச் சேருகிறதே -- அம்மாதிரி தான் இவற்றின் கதி. ரூபாய் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ஐந்து பைசா வட்டி; சம்மதிக்கவில்லேயானல் மார்வாடிக் கடைப் பணம் மடிக்கு வந்து சேருகிறதா? அந்த மாதிரி சம்மதித்து, மதுரம் இணங்கித் தூண்டி விட்டாளே — அப்படியில்லேயானல் இப்போது-வண்டிக்காரன், ஹோட்டல்காரன் ரயில்காரன், போர்ட்டர் என்றெல்லாம் வீச முடியுமா? இன்னும் நாளை இதே போன்ற வகைகளில் பாக்கியும் இருக்கிறது!

பணம் ரங்கண்ணுவின் சட்டைப் பையில் தான் இருக்கிறது. அவனுடைய பொருளாதார நிலைமை இப்போதுள்ள பட்ஜெட் நிலவரம்—இவற்றின் எதிரே அவனுடைய வாயும் வயிறுமா முக்கியம்? அவற்றை அவன் எதிரியாகக் கருதி, கட்டுப்படுத்தி எவ்வளவோ காலமாகி விட்டனவே!

கையில் கூஜா நீருடன் திரும்பி வருகிறான் ரங்கண்ணு.

''ஏண்டாப்பா, அந்த மாத்திரையை யாவது கையிலே கொண்டு வந்தியா? இப்படி இரும ஆரம்பிச்சுட்டியே?'' என்கிறாள் தாய்.

''ஓ, ஆமாம்மா, மறந்தே போய் விட்டேன்; மதுரம் எடுத்து வைத்திருக்கிறாள்'' என்று சொல்லிக் கொண்டே பையைத் திறந்து, அதற்குள்ளிருந்து ஒரு டப்பியை எடுக்கிறான். அதிலிருந்து ஒரு மாத்திரையை எடுத்து, வாயில் போட்டுக்கொண்டு இரண்டு வாய்தண்ணீரையும் உட்கொள்கிறான். அதன் பின்னர் எழுந்து ஸ்டேஷன் மாஸ்டரிடம் போகிறான். சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு சிவப்பு முண்டாசு போர்ட்டர், அவன் எடுத்து வரும் பிரம்பு சாய்வு நாற்காலி—இவற்றுடன் திரும்பி வந்து சேருகிறான்.

''ஏன் ஸாமி, இந்த மாதிரி ஊனப்பட்ட வங்களை வண்டி ஏத்தறத்துக்கு இன்னோர் ஆளு இல்லாம முடியுங்களா? நீங்க இன்னுடான்னு ஒரே புடிவாதமா அவனை வேண்டான்னு போகச் சொன்னீங்களே? என்கூட இன்னொரு பக்கம் புடிச்சுத் தூக்கிக்கிட்டு நாலாவது பிளாட்பாரம் வரையிலே வர முடியுங்களா உங்களாலே? ரயில் வந்து நின்னதும் மறுபடியும் தூக்கிக்கிட்டுக் கோடிக்குக் கோடியா ஓடி இடம் பார்த்துப் புடிச்சாகணும். உங்களாலே முடியுங்களா?'' இவ்வாறு மீசையைத் தடவியபடி சவால் விடுகிறான் கூலிக்காரப் போர்ட்டர்.

''ஏண்டாப்பா, நானும் உன்னுட்டம் மனுசன்தானே? ஆண்டவன் கொடுத்திருக்கிற கை எனக்கும் இருக்குதல்ல?'' எனப் பதில் சவால் விடுத்தபடி ஒரு தடவை இருமுகிறான் ரங்கண்ணு.

''ஏண்டா ரங்கா, நீ செய்கிற காரியம் உனக்குத்தான் நல்லா இருக்கா? இந்த உடம்போட கூட நீ இப்படி அலட்டிக் கொண்டால் அப்புறம்...''

''அம்மா, நீ பேசாமலிரேன் — உனக்கு ஒன்றும் தெரியாது!'' என வெகு சாந்தமாகப் பதிலளித்துக் கொண்டே அவளது பின்பக்கம் சென்று இடுப்பில் கைகளைக் கொடுத்துத் தூக்குகிறான். கால்கள் இரண்டையும் போர்ட்டர் தாங்கிக் கொள்ள, இருவருமாக அவளை நாற்காலியில் அமர்த்துகிறார்கள். பைகள் இரண்டையும் கூட அவளுக்குப் பக்கத்திலேயே பொருத்துகிறார்கள். பின்னர் போர்ட்டருடன் தொடரும். போர்ட்டராகவே, கைச்சுமையமுக்க, மேல் மூச்சு இரைக்க ரங்கண்ணு நான்காம்

சிறப்புச் சிறுகதை

அந்த வீட்டின் மூத்த பிள்ளை அவன். அவனுக்கேற்பட்ட துயரங்களையும் சோதனைகளையும் நெஞ்சைப் பிழியும்படியாக வர்ணிக்கிறார் துரோணன். கடைசியில் மூத்த பிள்ளைக்கு விடிவு பிறக்கிறது. — எப்படி? கதையைப் படியுங்கள், தெரியும்!

பிளாட்பாரம் வந்து சேருவதற்குள்ளாக நாலிடத்தில் வைத்து வைத்துத் தூக்கும்படியாகிவிடுகிறது. போர்ட்டர் கேலி விடுக்கிறான். ஆனால் அவை ரங்கண்ணாவின் கவனத்தில் உறைத்தால்தானே?

சற்று நேரத்துக்கெல்லாம் போர்ட்டர் விடுத்த சவால் உண்மையான அனுபவம்தான் என்பதை ரயிலைப் பார்த்ததும் உணருகிறான் ரங்கண்ணா. என்ஜினை அடுத்த பெட்டி முதல் கடைசிப் பெட்டி வரையில் அடி வைக்க இடமின்றி வழிந்து கிடக்கும் கும்பல்கள். முதற் கோடியிலிருந்து மறுகோடி வரையில் தூக்கிய சுமையுடன் போர்ட்டரின் வேகத்தையொட்டி ஓடுகிறான் ரங்கண்ணா. முடிவாக ஒரு பெட்டியில் உள்ள கருணையாளர்கள் இந்தப் பரிதாபத்துக்கு இரங்கிச் சற்றே ஒண்டி நிற்கிறார்கள். அங்கே—கழிவு அறைக் கதவோரத்தில், கீழ்த் தரையிலே இடம் கிடைக்கிறது. ரங்கண்ணாவுக்கு விழி பதற, மேல் மூச்சும் இரைப்பும் உடலை உலுப்பி எடுக்கின்றன. பையிலுள்ள பர்சை எடுத்துத் திறந்து ஒரு ரூபாய் நோட்டை நிரடி எடுத்துப் பார்த்துப் போர்ட்டரிடம் கொடுக்கிறான்.

“நீ இன்னா ஸாமி! பலே சாமர்த்தியமா பண்ணறே?”—ஓவெனக் கத்தியபடி போர்ட்டர் அதை வாங்கவே மறுக்கிறான். நல்லகாலமாக ரயில் வேகமாக நகர்ந்து கொடுத்து ரங்கண்ணாவின் மானத்தைக் காப்பாற்றுகிறது. வெகு அலட்சியமாக இடது கையால் அந்த நோட்டைப் பெற்றுக் கொண்டு அந்தப் போர்ட்டர் நிற்கிறான். ரங்கண்ணாவின் மனம் விம்முகிறது. ஆனாலும் நஷ்டத்திலும் லாபமாக அவனுடைய பிரயாசைக்கு ஒரு ரூபாய் மிச்சம்!

ரங்கண்ணா தாயாருக்குத் தலைப் பிள்ளையாக, குடும்பத்துக்கு ‘மூத்த அண்ணா’வாக இருக்கிறானே, அது அவன் செய்திருந்த பாபமோ, புண்ணியமோ, தலைவிதியோ எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆனால் வெளியுலகத்தின் பார்வையிலே-அவன் ஒருவனே அவளுக்குப் பிள்ளையாகக் காட்சியளிக்கிறானே, இதை மட்டிலும் யாரும் மறுத்துக் கூற முடியாது! அவள்-மகராஜியாக வாழ்ந்து பெற்றிருந்த வாரிசுகளில், போனதெல்லாம் போக, இப்போது எண்மருக்குத் தாயாக இருக்கும் செய்தியை அவளாகக் கூறினாலொழிய, உலகத்தாருக்குத் தெரியப் போவதில்லை. அவ்வளவும் மூத்த அண்ணாவான ரங்கண்ணாவைப் பொறுத்த வரையில் உதவாக்கரைகள்தான்.

அவன் — பத்தொன்பதாம் வயதிலேயே கையில் பேனாவும், ஏடுமாக உத்தியோக வாழ்வைத் தேடிக் கொண்டவன். அவனுடைய அலுவலக வருஷங்கள் விளையாட்டுப்போல் இருபத்து மூன்றாகி விட்டன. கட்டிக் கொடுத்துள்ள டிபன் பொட்டணத்தையும் மறக்குமளவுக்கு இரவு எட்டு மணி வரையில் மன்றாடிவிட்டு, வீட்டு ஞாபகம் ஏற்பட்டவுடன் திரும்பி வரும் ஓர் ஆபீஸ் குமாஸ்தாவுக்கு, மாதம் பிறந்ததும், உருவாகக் கையில் கிடைக்கும் ஊதியம் என்னவாக இருக்கும்? இதில்தான், ‘நான்கு பிளஸ் மூன்று’ என்ற ரேஷன் கணக்குடன் அவனுடைய குடும்பம் நடக்க வேண்டியிருக்கிறது. இதிலேயே பண்டிகைகள், விருந்து, மருந்து, கலியாணம் என்றெல்லாம் உலகத்தாரைப் போல் நடத்தியாக வேண்டும்.

அவனுக்குத் தீராதவொன்றாக, மார்புவலி நோய் பீடித்து வருஷம் மூன்றாகி விட்டது. வியாதியைப் பாராட்டாமலேயேயிருந்தவன் தான் அவன். நோய் கடுமையடைந்த பின்னர்தானே கவலையும் கருத்தும் கண்ணைத் திறந்து வைக்கின்றன? ஆறு மாதங்களாவது பூரண ஓய்விலிருந்தாலொழிய மருந்துக்கும், மருத்துவத்துக்கும் பயனில்லை என்ற நிலையைப் படம் பிடித்துக் காட்டி விளக்கிவிட்டார் டாக்டர். அதற்குப் பிற்பாடுதான், தொடர்ந்தாற்போல் நான்கு மாத ஓய்வு காலத்தைப் பெற்று வீட்டையடைந்திருக்கிறான்.

இரண்டு மாதங்கள் ஓடியிருக்கின்றன. இடுப்புத் துணியையும் கசக்கிக் கட்டத் தெம்பில்லாத நிலையில் உள்ளவனை, இரும்புக் கல்லாய் மாறி, இரவு பகலின்றி உழல வைத்து விட்டதே அவனுடைய விதி? அவனுடைய வியாதி — ?

ஏதோ தாயார் கேட்கிறாள் — சகபாடிகளின் துணையுடன் திருப்பதி யாத்திரை போய் வருவதற்கு. போகச் சம்மதமளிப்பதிலும் சங்கடம், வேண்டாமெனத் தடுப்பதிலும் தடுமாற்றம். எப்படியோ வகையும் செய்து கொடுத்து அவளைப் போகச் செய்தானே, அதற்குப் பலன் என்ன ஆயிற்று? எங்கேயோ போனாள் — சம்பந்தமில்லாத ஊரில் படிக்கட்டிலிருந்து விழுந்து கால் எலும்புகளை நொறுக்கிக் கொண்டாள்— ஆஸ்பத்திரிக்கும் போய்ச் சேர்ந்தாள். யாரோ அடித்த தந்திச் செய்தி வந்து சேர்ந்தது. படுக்கையில் கிடந்த மனிதன்

பதறினன். பணத்துக்கும் காசுக்கும் பஞ்சாய்ப் பறந்து தயார்ப்படுத்திக் கொண்டு ஓடினன். கையில் உள்ள காசுகளைக் கரைத்து விட்டு, காலில் போட்ட கட்டுடன் தாயாரை வீடு கொண்டு வந்து சேர்ப்பித்தான். இப்படி நடந்தது அந்த முதலாம் பயணம். அன்று முதல் அவளுடைய உடைகளையும் அன்றடம் துவைப்பதிலும், அவளுடைய தேவைகளைப் பூர்த்தி செய்விப்பதிலுமாக அவனுடைய ஓய்வுநாட்கள் பயன்பட்டன. இத்துடன் விட்டதா? கட்டின கட்டைப் பிரித்து, எலும்பைச் சோதித்தாகவேண்டுமே? அதற்காகத்தான் இந்த இரண்டாம் பயணத்தையும் ஏற்றுக் கொண்டான்.

இப்போது ?

மூன்று நாட்கள், காலையும், மாலையுமாகப் பழிகிடந்த பிறகுதான், இந்த இரு ஆத்மாக்களின் பரிதாபம் அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் புரிந்தது. இந்த மூன்று நாட்களும் மூன்று ஜன்மங்களுக்கோ, அல்லது முந்நூறு ஆண்டுகளுக்கோ பெறக்கூடிய தண்டனையாகக் கழிந்தது ரங்கண்ணுவுக்கு. கடைசியாகப் படம் பிடித்துப் பார்த்தார்கள். எலும்புகள் இப்போதுதான் கூடி வரும் விவரத்தை எடுத்துக் கூறி, மறுபடியும் அதே கட்டு, அதே கெடு முப்பது நாட்களில் வந்து சேருமாறு எழுதியும் கொடுத்துப் போகும்படி செய்தார்கள். இந்த ஐந்து நாட்களின் அநுபவத்தில் ரங்கண்ணு உலகத்தை எவ்வளவோ கண்டு விட்டான்.

நடுக் கூடத்தில் சாய்வுநாற்காலியில் சாய்ந்திருக்கும் ரங்கண்ணு, இருமி இருமிக் குமைந்துவிட்டு, முடிவாக நீண்ட பெருமூச்சுடன் நிமிர்ந்து அமருகிறன். எதிர்ப்பக்கம் காமிரா உள்ளில் மிக சுவாரசியமான பேச்சுக்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எதிர் வீட்டில் குடியிருக்கும் வம்புக்கார ஸ்திரீ தாயாருக்கு வெகு நாளைய சிநேகம். நடுவில் கொஞ்ச காலம் பேசாமலே யிருந்தவள், இப்போது வலிய வந்து சேர்ந்திருக்கிறளே— இனி அம்மாவின் பேச்சுக்கு முடிவு எப்படி ஏற்படும்? அப்பேச்சுக்கள் ரங்கண்ணுவின் செவிகளிலும் விழுந்து கொண்டிருக்கின்றன.

''ஏன் சீதா, நீயும்தான் பார்க்கிறயே, இந்த வீட்டில் எனக்கென்ன சுவாதீனமிருக்கிறது? உலகத்தாரைப் போலத் தாயாரிடம் நாலு காசு பணம் இருக்கணும்—''

ரங்கண்ணுவின் நெஞ்சில் சுரீலெனத் தைக்கிறது ! இந்த வீட்டில் அம்மாவின் சுவாதீனம் என்ன விதத்தில் குறைந்திருக்கிறது? அவனே, மதுரமோ அவளுடைய தேவைகளில் எதை நிவர்த்திக்க வில்லை? அவளிடம் காசு பணம் இல்லாததைப் பற்றி எவருமே கனவிலும் கருதினதில்லையே — ? கடன் இன்ன இடத்தில்தான் இன்ன வேளையில்தான் வாங்குவது என்றில்லை. அப்படி வாங்கியவற்றைத் திருப்பிக் கொடுப்பதைப் பற்றி அவன் நினைத்துப் பார்க்கவே யில்லை. அப்படியெல்லாம் ஜாடையறிந்து செய்தும், அம்மாவின் நெஞ்சைத் திருப்தி செய்விக்க முடியவில்லையே! பக்கத்துப் பெஞ்சியில் நான்கு கடிதங்கள் கிடந்தன. அவை வருவதற்கு முன்பாகவே அவற்றின் சாராம்சம் என்னவா யிருக்கும் என்பது அவனுக்குத் தெரிந்ததுதான். அவனுடைய உடன் பிறப்புக்களைப் பற்றி இனிமேலா அவன் புதிதாகத் தெரிந்துகொள்ள வேண்டும்? அவனுடைய மன அளவில், அவன் யாருக்குமே கடிதம் எழுதி, அம்மாவுக்கு நேரிட்டுள்ள இந்தக் கல்யாணச் செய்தியை அறிவிக்க விரும்ப வில்லை. ஆனல், எழுதாமல்தான் நிம்மதியாக இருந்துவிட முடியுமா வீட்டில்? ஏழு பத்து பைசாக்கள் செலவு! பலன்?

ரங்கண்ணு மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டு மீண்டும் அவற்றை நோக்குகிறன்.

கையில் எடுத்துள்ள இந்த முதல் கடிதம் தம்பி தாமோதரன் எழுதியுள்ளது —

''ரங்கண்ணுவுக்கு அநேக நமஸ்காரம். உன் கடிதம் கிடைத்தது. நம் தாயார் இப்படித் திடீரென எங்கேயோ போய்க் காலை முறித்துக் கொண்டு ஆபத்தான நிலையில் இருக்கிறள் என்ற செய்தியைப் பார்த்ததும் எங்களுக்கு மனம் படும் பாடு சொல்லி முடியாது. போட்டதைச் சாப்பிட்டு விட்டு, கிருஷ்ணு, ராமா என்று வீட்டோடு இராமல் அவள் ஏன் இப்படியெல்லாம் கஷ்டத்தைக் கொடுக்கிறள்? உனக்கும் மூன்று மாதங்களாக உடம்பு சௌகரியமில்லை என்று எழுதியிருந்தாய். இந்த நிலைமையில் நீ அவளைப் பட்டணம் ஆஸ்பத்திரிக்குத் தூக்கி, எடுத்து அழைத்துப் போயிருக்கிறய் என்பதறிந்து மிக வருத்தமாக இருக்கிறது. அம்மாவை இங்கேயாவது அழைத்து வந்து வைத்தியம் செய்வோமென்று பார்த்தால், அவள் ஒப்புக் கொள்ள மாட்டாள்.....''

ரங்கண்ணு இவ்வளவுதான் படித்தான். அதற்கு மேல் படிப்பதற்குத்தான் என்ன இருக்கிறது? போகட்டும், இந்த மட்டில் செய்தி தெரிந்து கொண்டிருந்த அளவுக்கு ஒரு பதிலாவது போட்டானே!

அடுத்த கடிதம் சகோதரிகளில் முதல்வளான பார்வதியிடமிருந்து வந்திருந்தது.

''......உன் கடிதத்தைப் பார்த்ததும் ஒன்றுமே புரியவில்லை, கதி கலங்கி விட்டது. அம்மாவுக்கு இப்படி ஆபத்து நேர்ந்துவிட்டதை இனி பகவான்தான் உன் பங்கிலிருந்து குணப்படுத்தி வைக்க வேண்டும். நானும் அங்கே வந்து பத்து நாட்களாவது இருந்து டாக்டர் சுந்தரத்திடம் கையைக் காண்பித்து வைத்தியம் செய்து கொள்ளலாமென்றுதான் இரண்டு தடவை கிளம்பினேன். முடியவில்லை. உன் கடிதம் வருவதற்கு முதல்நாள்கூடக் கிளம்பினவளுக்கு — சகுனம் சரியாகவில்லை. சோதனை போல் அம்மாவைப் பற்றின சேதியுடன் உன் கடிதமும் வந்து சேர்ந்தது. பாவம், மன்னிக்குத்தான் ரொம்ப கஷ்டம். குழந்தைகளின் துணிமணிகள், அத்தைக் கிழத்தின் சுமைத் துணி — எல்லாம் தினசரி தோய்த்துப் போட்டு, அடுப்படியிலும் மன்றடுவது போதாதென்று, இப்போது அம்மாவுக்கும் எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நானும் அங்கே வந்து—''

இந்தக் கடிதத்தையும் இதற்கு மேல் படிப்பானேன்? தன் உடம்பு, தன் புருஷன், குழந்தை குட்டிகளின் தேகங்கள்தான் மனித தேகங்கள். இவற்றுக்குத்தான் களைப்பு, சோர்வு, நலக் குறைவுகள் என் றெல்லாம் வர முடியும்; பாக்கியெல்லாம் இரும்பாலோ, சிமிட்டிச் சாந்தாலோ ஆனவை என்ற கொள்கையை அநுபவ பூர்வமாகக் காட்டி வருபவளிடமிருந்து, இதற்கு மேலும் அவன் என்ன பதிலை எதிர் பார்க்க முடியும்? எப்படியாவது அம்மா திருப்தியடைந்தாளானால் சரி!

கூடத்தறையிலிருந்து அம்மாவின் பேச்சு காதில் விழுகிறது —

''என்ன பண்றதும்மா? நான் வந்த வழியை அநுபவிச்சுத்தானே ஆகணும்? காலானால், குத்தலும், குடையலும், எரிச்சலுமாக, உயிரே போய் வருகிறது. மறு படியும் பட்டணம் போயாகணும்—இன்னும் மூணே நாள்தான் இருக்கு. என்ன செய்யப் போகிறானே?''

ரங்கண்ணா நீண்ட பெருமூச்சை விடுத்த படியே கல்லாய்ச் சமைந்து கிடக்கிறான் சிறிது நேரம். மீண்டும் அம்மாவின் பேச்சு —

''நான் என்னத்தைச் சொல்ல? ஒவ் வொண்ணும் ஒவ்வொரு தினுசாகக் கஷ்டப் படறதுகள். எல்லாம் கண்ணீர் விட்டு எழுதியிருக்கிறதுகள்.''

ரங்கண்ணாவின் நெஞ்சை விட்டுப் 'பக்' கென்ற ஒரு சிரிப்பு எழுந்து, உள்ளூறவே அமுங்கியும் விடுகிறது. அந்த மூன்றும் கடிதம் — கண்ணனால் எழுதப்பட்டிருந்தவற் றில் இரண்டே வரிகள்தான் அவனது விழி களில் படுகின்றன —

''....... இந்தச் சந்தர்ப்பத்தில் ஏதாவது பணமாவது அனுப்பி வைக்கலாம் என்று பார்த்தால் தோதுப்படவில்லை. எனக்கு நாளை முதல் 'அவுட்டோர் ஷூட்டிங்' மும் முரம். இப்போது கிளம்பிக் கொண்டிருக் கிறேன். நான் போய்க் கொண்டிருக்கும் விலாசம் எனக்கே தெரியாது!''

பாவம், எவ்வளவு கஷ்டங்கள்! இந்தப் பதில் எழுதுவதற்காவது அவனுக்குச் சந்தர்ப்பம் இருந்ததே, அதைப் பாராட்ட வேண்டுமில்லையா? அத்துடன் 'பணம் அனுப்புவது' என்ற நூதனமான இரண்டு வார்த்தைகளையும் எழுதத் தோன்றிற்றே, இந்த மட்டில் அம்மா பாக்கியசாலிதான்!

மற்றொரு கடிதம்—? அது கடிதமாகவா இருக்கிறது? நெஞ்சை விட்டுச் சீறிப் பறந்து வந்து படிந்துள்ள தணல் பொறிகள் அதி லுள்ள எழுத்துக்கள். அம்மாவின் பாசம் அத்தனைக்கும் முழு உரிமையுள்ள கடைக் குட்டியல்லவா கமலம்? அவள் விடுத்திருக் கிறாள் பலப்பல கேள்விகள் —

''.....அம்மா எங்கே போயிருந்தாள்? ஏன் போனாள்? உன் குடும்பத்தை விட்டு அம்மா போகும்படி அங்கே என்ன நடந்தது? ஏன், அவளை வைத்து ஆதரிக்க வேண்டியது உங்களுடைய கடமையில்லையா? உங்களுக் கும் குழந்தை குட்டிகள் உண்டு என்பதை நினைத்துப் பார்த்து அவளுக்குச் செய்ய வேண்டும். உலகத்திலே எல்லாம் கிடைக் கும் — அம்மா கிடைக்க மாட்டாள். அவ ளுடைய காலை நன்றாகக் கவனிச்சு....

''கல்யாணம் ஆனது முதல் நீங்கள் என்னை அழைத்துச் செய்யாததால், இவ் விடம் என் மாமியார் என்னைக் கொத்தி யெடுக்கிறாள். ஆகவே.......''

கடிதத்தைச் சட்டென்று மூடிப் போட்டு விட்டுத் தன் கைகளால் மண்டையை அமுக்கிப் பிடித்தபடி நாற்காலியில் சாய் கிறான் ரங்கண்ணா. ஏறக்குறைய இருபத் திரண்டு வயது வித்தியாசத்தில் உள்ள தங்கை இவள்! தகப்பனாரின் முகத்தையும் சரிவரப் பார்த்தவளில்லை. அண்ணாவின் ஆதரவிலும், மன்னியின் போஷிப்பிலு மாகவே வளர்ந்து, நாலெழுத்துப் படித்து அவர்களாலேயே கல்யாணமும் ஆகி, கண்ணனை கணவனையும் அடைந்திருப்பவள் எழுதியிருக்கும் கடிதம் இது! இவ்வளவுக் கும் காரணம் — அம்மாவின் மீதுள்ள பாசம்! இவன் மூத்த அண்ணா!

''என்ன ஸீதா, நீதான் சொல்—இது நியாயமா? கல்யாணமாகி வீட்டை விட்டுப் போன பெண் அது. இன்னமும் — வருஷம் இரண்டாகப் போகிறது. வீட்டுக்கு அழைத் தோம், ஒரு நல்லதைச் செய்தோம் என்று உண்டா அந்தக் குழந்தைக்கு? தாயார் நான் ஒரு கட்டையிருக்கிறேனே? அது மூணு மாச மாகக் குளிக்காமல் இருக்காம் — ''

ரங்கண்ணாவின் இதயத்தை விட்டுப் பலப் பல பெருமூச்சுக்கள் அதிர்ந்து கொண்டிருக் கின்றன. இந்தக் கமலாவின் கலியாணத் துக்காகப் பட்ட கடன்கள்தானே அவனை இன்னமும் நிமிர விடவில்லை? பிராவிடன்ட் பண்டு, பண்டகசாலை, நண்பர்கள் என்று இனி ஒரு வழியிலும் கைநீட்டி வாங்க வழி யில்லை. இப்போது மறுபடியும் பண மூட்டை யுடன் பட்டணம் கிளம்பியாக வேண்டுமே?

மறுபடியும், தாயாரின் குரல் — தகிப்பாக எழுந்து எதிரொலிக்கிறது — ''ஐயையோ? மதுரமா — இவளா? நாலு மாசமாச்சா? எனக்குத் தெரியவில்லையே! ஐயையோ! அவ ளுடைய அக்காளைக் கொண்டிருக்கிறாளோ, என்னவோ... வருஷத்துக்கொண்ணாக...''

அடுத்த கணம், ரங்கண்ணா வெகுண்டு அதிர்ந்தவண்ணம் நிமிருகிறான்.

மதுரம் இப்போது நான்காம் குழந்தைக் குத் தாயாகிக் கொண்டிருக்கும் செய்தியைப் பற்றின கருத்துத்தான் தாயாரிடமிருந்து வெளியாயிற்று — இப்படி.

ரங்கண்ணா பதைக்கிறான். தாய்க் குலத் துக்கே தலை குனிவான ஏளன இழிவை அம்மாவா கூறுகிறாள்? அவள் வாயால் வெளியாகக் கூடிய வார்த்தைகளா இவை?

ஐந்து குழந்தைகளுக்குத் தாயாகிவிட்ட தன் வினைவாக, அவளுடைய அக்காள் ஒரு குற்றவாளி — அக்குற்றவாளியின் தங்கையாக உள்ள இவளும் அதே குற்றவாளி! ஏன், மூத்த பிள்ளையாகப் பிறந்திருக்கும் ரங்கண் ணாவே ஓர் ஆயுள் குற்றவாளிதானே? அவ னுக்கு வந்திருப்பவளும்கூட!

ஒரு வழியாக அன்றைய உரையாடல் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு எதிர் வீட்டுக்காரி வெளியேறுகிருள்.

மூன்று நாட்களாக வானம் இடியும் புடையுமாகக் காட்சியளிப்பதில் மும்முரப் பட்டு விட்டது. அதற்குப் போட்டியாகவே அலறி எழும் குளிர் காற்று குரல் வளையைப் பிடித்து நெரிக்கிறது.

ஆஸ்பத்திரி வாசலில் அடர்ந்து நிற்கும் ஆலமரத்தடியில் அநாதை போல் கிடக்கிறது அவ்வொற்றை மாட்டு வண்டி. அவ்வண்டியின் எஜமான், அதனுள்ளேயே அடைபட்டு அசந்து கிடக்கிருன். அச்சந்தர்ப்பத்தில் வண்டி தேவைப்பட்ட கிராக்கியொன்று வந்து அவனைத் தட்டி எழுப்பிப் பேரம் பேசுகிறது.

முக்கால் தூக்கத்தில் உள்ளவன் முனகிய படியே விசாரிக்கிருன். ''எங்கே, மோட்டுத் தெருவுக்கா போகணும்? ஏன், முடிஞ்சு போன கேசோ ?''

''என்னய்யா இது? இப்படிக் கேட்கிறே?''

நீண்ட பெருமூச்சுடன் கிராக்கிப் பதிலளிக்கிறது. ''இல்லேப்பா, இல்லே. எங்க அம்மாவைத் தூக்கி வெளிக் கட்டாந் தரையிலே போட்டுட்டானுங்க. டாக்டரை நேரிடப் பார்த்து நியாயம் கேட்கலாம்னு காத்துக்கிட்டிருந்தேன்; நியாயம் கிடைக்கல்லே—இப்போ போகணும்—''

''சரி, மூணு ரூவா குடுப்பியாய்யா?''

''ஐயோ, மூணு ரூவாயா?''

''பின்னே இன்னு? மூணு ரூவாயிருந்தால் பாரு, இல்லாட்டி நடையைக் கட்டய்யா!''—இத்தகைய பதிலளித்துவிட்டு மீண்டும் முக்காடிட்டு முடங்கி விட்டான் வண்டி எஜமான்.

மறு நிமிஷமே சவாரி கேட்டவன் சலிப்புடன் மறைகிருன்.

ஆள் அரவமற்ற படுசூன்ய வேளை —

புதுக் கப்பி போடுவதற்காகக் குறுக்கே சங்கிலி போட்டுக் கட்டி, சிவப்புவிளக்குகள் போடப்பட்டிருக்கும் சாலை. கீழே—கொத்திப் போடப்பட்ட கருங்கல் கப்பிகள் மழைநீரில் மஞ்சனமாடிக் கொடுவாளாக நீட்டிக் கொண்டிருக்கின்றன. ஓரப் பாதைகள் இரண்டிலும் முட்டு முட்டான சல்லிக் குவியல்கள் சரிந்து கிடக்கின்றன. அரை மைல் தூரத்துக்கு அடி வைக்கப் பாதையில்லே.

ஓர் உருவம் — ஆமாம், அந்தக் கருமை இருளிலும், மனிதனு, பூதமா என்று புலப்படாத வகையில் அசைந்தாடி வருவதை, 'ஓர் உருவம்' என்று குறிப்பிடுவதுதானே பொருத்தம்? அது தலைமுதல், கால் வரையில் சாக்குப் போர்வையால் மூடியிருந்தும் சொட்ட நனைந்து, தோளில் உள்ள சுமையைத் தூக்கமாட்டாமல் தூக்கிக் கொண்டு ஆவேச நடை போட்டு வருகிறது. காலில் குத்தும் கப்பிக் கல்லின் வலி தாளாமல்; 'ஐயோ, அப்பா, அம்மா!' என்று விடுக்கும் அதன் முனகலை யார் கேட்கிருர்கள்?

இதே சமயத்தில் ரங்கண்ணுவின் வீடு கலியாணக் களேபரமாக கலகலப்பைக் கொண்டிருக்கிறது. சகோதரர்கள், கண்ணன் தாமோதரன், ராஜா — இப்படி யெல்லாம் ஒரே சமயத்தில் எதிர்பாராமல் கூடிவிட்டதன் பலனுக அங்கே — கலியாணம் போலிராதா?

''ஏண்டா, உனக்கு இப்போது ரயிலேது ?'' என்று தாமோதரன் கேட்கிருன் கண்ணனிடம்.

''நான் ரயிலில் வரவில்லையண்ணு, ஸ்டுடியோ 'வான்' வந்தது. நாளைக்குத் திருக்காட்டூரிலே ஷூட்டிங். வண்டியிலேயிருந்த பெட்ரோல், டீசல் எல்லாம் தீர்ந்து போய் விட்டது. அதற்காக, இங்கே திருப்பினுன். நானும் அம்மாவைப் பார்த்து விட்டுப் போகலாமேன்னுதான் ஒரு 'பிளையிங் விஸிட்டி'லே வந்திருக்கேன். நாளைக் காலையிலே எட்டாவது மணிக்கு நான் திருக்காட்டூரிலே இருந்தாகணும்!''—இந்தப் பதிலை அளித்து விட்டுத் திருப்பிக் கேட்கிருன் கண்ணன். ''நீ எப்போது—எட்டு மணிக்கு செங்கோட்டா வருகிறதே, அதில் வந்தயா?''

''ஆமாம்; இங்கே எட்டரை மணிக்கு வந்து சேர்ந்தேன் — இரண்டு ரூபாய் வண்டிச் சத்தம் ஸ்டேஷனிலேயிருந்து. நாளைக்கு என் மைத்துனன் பெண்ணுக்குக் கலியாணம் நிச்சயமாகிறது. பதினையாயிரம் ரூபாய் எஸ்டிமேட்டிலே கலியாணம்! எல்லாம் நான்தான் இருந்து நடத்தியாகணும்.''—தாமோதரனின் செய்தி இது!

அதுவும் நஷ்டம்

காலையில் மின்சார வண்டியில் வந்தேன். என் காலடியில் ஓர் ஐந்து ரூபாய் நோட்டு கிடந்தது. யாருடையது என்று எல்லோரையும் கேட்டேன். யாரும் முன்வரவில்லே. இறங்கும் போது என்னேடு ஒருவர் மட்டும் பின்தொடர்ந்தார். கடைசியில் அந்த நோட்டை ஆளுக்குப் பாதிச் சில்லறை மாற்றி எடுத்துக் கொண்டோம். வீடு போன பிறகு அது என்னுடைய சொந்த நோட்டுத்தான் என்பது ருஜு ஆயிற்று. 'போகிறது, படிக்குப் பாதியாவது தேறிற்றே!' என்று எண்ணினேன். உண்மை என்ன தெரியுமோ? எனக்குக் கிடைத்ததிலே இரண்டு ரூபாய் நோட்டு செல்லாத கள்ள நோட்டு!



''நாம்ப இரண்டு பேரும் இங்கே வந்திருப்பதுகூட அதிசயமில்லை; இந்த ராஜாப் பயலும் வந்து விட்டானே, இதுதான் ஆச்சரியம்! அம்மாவுக்கு இவன் பேரிலும் கமலத்தின் பேரிலும்தான் ரொம்ப உயிர்! கடைக் குட்டிகள் இல்லையா?''

''நான் வந்த செங்கோட்டா வண்டியிலே தான் அவனும் வந்திருக்கிறான். மன்னி கைவற்றல் குழம்பு, ஜீரக ரசம், வடாம், எல்லாத்தையும் ஓர் இறுக்கல் இறுக்கி விட்டுப் படுத்து விட்டான் நிம்மதியாக!''

''மன்னியின் வற்றல் குழம்புன்னால், அது ஒரு தினுசாகப் போதையடிக்கத்தான் செய்யறது. இப்போது எனக்குக்கூட--'' கண்ணன் ஒரு நீண்ட ஏப்பத்துடன் வார்த்தையை முடித்துக் கொண்டு கொட்டாவி விடுகிறான்.

''அப்பா தாமோதரா! நீ எங்கே வாங்கினேயோ, இந்த வாழைப் பழத்தைப் போல் என் ஆயுசிலேயே தின்னதில்லை. அவ்வளவு ருசி ! இன்னுமிருந்தால் இரண்டு கொடுக்கச் சொல்லேன்!'' கொல்லை இடைகழிப் புறத்திலிருக்கும் தொண்ணூறு வயது அத்தைக் கிழம் தீர்க்கக் குரலில் தேவையை விடுக்கிறது!

''ஐயோ, பாவம்! சாகப் போகிற கிழவி! குடு, மன்னி, குடு!'' — தாமோதரனின் சிபாரிசும் எழுகிறது.

மதுரம் சமையலறையை விட்டு எழுந்து போய் இரண்டு பழங்களைக் கொடுத்துவிட்டுத் திரும்புகிறாள்.

''ஏன், மன்னி, இதென்ன இப்படி நாழியாகிறதே? அண்ணா எத்தனை மணிக்குப் போனான், எங்கே போனான்? ஆஸ்பத்திரிக்குப் போகிறதாகச் சொன்னானா? ஊரெல்லாம் இருண்டு கிடக்கு; குளிரானால் தாங்கவே முடியல்லே —?''

''அவர் போனதே எனக்குத் தெரியாது. ஏழு மணிக்கு வாசல் பக்கம் போனார். என்னிடம் சொல்லவும் இல்லை. அவருக்காக வைத்த கஷாயம் கிடக்கு, கஞ்சி கிடக்கு. அம்மாவுக்கு ஜுரமாம். ஆஸ்பத்திரிக்குத் தான் போயிருக்கணும்.''

''என்னது? அம்மாவுக்கு ஜுரமா? கால் கட்டுப் பிரிச்சு எத்தனை நாளாகிறது?''

''மூணு நாளாகிறது; எலும்பு கூடி விட்டது, இனி மேல் பயமில்லையாம்.''

வாசற் கதவு 'தடா'லென்ற மோதல் சப்தத்துடன் திறக்கப்படுகிறது. கூடத்துப் பக்கமிருக்கும் அனைவரும் அரிக்கேன் விளக்கின் ஒளியைப் பெரிதாக்கிக் கொண்டு எதிர்ச் செல்கிறார்கள். தோளிலிருந்து தொங்கும் உயிர்ச் சுமையுடன், மூச்சு இரைக்கும் நிலையில் இடித்து மோதிக் கொண்டு பேய்க் கோலமாக உள்ளே நுழைகிறான் ரங்கண்ணா.

''அண்ணா! அண்ணா!''

''அண்ணா! அம்மா!''

''அண்ணா, இதென்ன, ஆஸ்பத்திரியிலேருந்து நீயா தூக்கிக்கிண்டு வரே? ஐயோ, ஒரு வண்டி வைத்துக் கொண்டு வரக் கூடாதா? அம்மா — அம்மா!''

மூவர் உதவியுடன் தோளின் சுமையைக் கூடத்துக் கோடியில் இறக்கிக் கிடத்துகிறான் ரங்கண்ணா. பின்னர், மேல் மூச்சும் சுவாசமும், உலுப்ப, கையால் சுட்டிக் காட்டி விட்டு, கூடத்து மறு கோடிக்குப் போய்த் தரையில் படுக்கிறான். மதுரம் பரபரப்பாக அம்மாவின் மேலுள்ள ஈர உடைகளைக் களைந்து விட்டு வேறு துணிகளை எடுத்துத் துவட்டிவிட்டுப் போர்த்துகிறாள். அதே சமயம் தூக்கத்திலிருக்கும் ராஜா எழுந்து ஓடி வந்து அம்மாவின் முகத்தருகே அமருகிறான். மற்ற இருவரும் அம்மாவின் உடம்பைத் தொட்டு அசக்குகிறார்கள். அவளுடம்பு நெருப்பாகக் கொதிக்கிறது. கட்டுப் போட்டிருந்த கால் புனர் ஜன்மம் எடுத்துவிட்டது.

மதுரம் பிளாஸ்கிலிருந்த காப்பியைப் பாத்திரத்தில் விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக அவளது வாயில் வார்க்கிறாள். மூன்று விழுங்குகள் — அம்மா கண்ணைத் திறக்கிறாள்.

''அம்மா, இதோ பாரு, நாங்கள் வந்திருக்கிறோம். ராஜா வந்திருக்கிறான் பாரு...''

''அம்மா, நான் வந்திருக்கிறேனே, தெரிகிறதா?''

அம்மா உன்னிப்பாக யாவரையும் பார்க்கிறாள். அடுத்த விநாடியே, ''அட கண்ணே! ராஜா, நீ வந்தியாடா, என் கண்ணே! இனி, நான் பிழைச்சுடுவேன்'' எனத் தலையசைத்துக் கூறிக் கொண்டே, கையை நீட்டி அவனது முகத்தைப் பற்றுகிறாள். கூடத்து நடுவில் படுத்திருந்த குழந்தைகள் மூவரும் எழுந்து வந்து, பாட்டியை நெருங்குகிறார்கள்.

''அம்மா, அப்பா எங்கேம்மா?'' நடுப் பயல் ரகு மட்டிலும் அப்பாவைத் தேடுகிறான். அவனுக்கு அம்மாவிடம் இல்லாத பாசம் அப்பாவிடம்!

அதே சமயம் கூடம், தாழ்வாரங்களில் அணைந்து கிடந்திருந்த மின்விளக்குகள் திடீரெனப் புத்துயிர் பெற்று எரிகின்றன. எங்கிலும் ஒளி வெள்ளம். மின்னலுக்கு இரக்கம் வந்து விட்டது.

கூடத்து மறுகோடியில் வந்து படுத்தானே ரங்கண்ணா — அவன் இன்னமும் எழுந்திருக்கவில்லை. மதுரமும் குழந்தைகளும் அவனை நெருங்குகிறார்கள்.

''அப்போவ்!'' எனக் கூவிக் கொண்டே அவனை நெருங்குகிறான் ரகு.

ரங்கண்ணா நீண்டு படுத்திருக்கிறான். அவனிடமிருந்து பதிலில்லை. அவன் உடல் நேர் வாட்டத்திலேயே படுத்திருந்தும், முகம் மட்டிலும் பக்கவாட்டிலே சாய்ந்து கிடைக்கிறது. மதுரமும் கல்யாணியும் அவனது முகத்தைப் பற்றித் திருப்புகின்றனர். அசையாப் பார்வையாக நிலைத்து நிற்கும் அவனுடைய விழிகளிலே ஓர் ஒளி — செம்மைச் சாயம் படிந்திருந்த உதடுகளிலே தவழும் புன்னகை யொன்று! அடுத்த விநாடியிலே தாய், மகள், இருவர் குரலிலிருந்தும், 'ஐயையோ' என்ற பெருத்த ஓலம் ஒன்றாக வெளிப்படுகிறது.

ரங்கண்ணாவுக்கு உலக வாழ்வு முடிந்து விட்டது! அவனுக்கு விடுதலை, அவனுடைய கட்டைக்கும் பூரண ஓய்வு!

—

நெடுங்கதை

குத்துவிளக்கு

வ. சா. நாகராஜன்

தேவகி, உஸ்மான் ரோடு முனையில் பஸ்ஸிலிருந்து இறங்கி ரங்கநாதம் தெருவில் காய்கறிகள் வாங்கிக் கொண்டு ஒரு கையில் கறிகாய்ப் பையும் மற்றொரு கையில் பிளாஸ்டிக் கூடையில் புத்தகங்கள், டிபன் பாக்ஸ் மற்றும் ஏதேதோ சாமான்களுமாகத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு மாம்பலம் ஸ்டேஷன் கீழ்ப் படியில் ஒரு பெருமூச்சுடன் ஏறிக் கொண்டிருந்தாள். இன்னும் மாடிப் படி ஏறி இறங்கி, மின்சார ரயிலின் நெரிசலில் வேறு இடிபட வேண்டுமே என்ற நினைவின் அலுப்பு எழுந்த போதுதான் அம்மாவுக்கு உஸ்மான் ரோடு மருந்துக் கடையில் மாத்திரை வாங்கி வர மறந்து விட்டது நினைவுக்கு வந்தது. எதிரில் இருந்த படிக்கட்டுகளில் மேல்மூச்சு வாங்க ஏறி அந்தப் பக்கம் இறங்குவதில் உள்ள சிரமம் குறைவா, அல்லது மீண்டும் ரங்கநாதம் தெருவைக் கடந்து உஸ்மான் ரோடு மருந்துக் கடைக்கு நடப்பதில் உள்ள சிரமம் குறைவா என்று ஒரு கணம் யோசித்தாள்.

ஸ்டேஷன் படியேறிய பெண்ணை அவள் சற்றுத் தாமதமாகவேதான் கவனித்தாள். பார்வை பட்ட கணத்தில் பாம்பு கடித்த பதற்றத்துடன் உடல் எல்லாம் திடீரென்று பற்றி எரியும் வேகத்தில் தன் நிலையை மறந்த அவளுக்கு, டாக்ஸியில் கொண்டு விட்டுப் போன ஆண் பிள்ளையைக் கவனிக்கத் தோன்றவில்லை. டாக்ஸியும் ஒரு வட்டம் அடித்துவிட்டுத் திரும்பி விட்டது.

டாக்ஸியிலிருந்து இறங்கிய ராதா, அமைதியாகப் படி ஏறி, டிக்கட் கொடுக்கும் இடத்துக்குச் சென்றாள். ஆண்கள் நிற்கும் 'க்யூ' வரிசைக்கு எதிர்ப்புறத்தில், பெண்மைப் பிறப்பின் பலவீனத்தை இதற்கு மாத்திரம் பயன்படுத்திக் கொண்டு முதலில் டிக்கட் வாங்கிச் சில்லறையையும் டிக்கட்டையும் பையில் போட்டு விட்டுத் திரும்பினாள். அப்போது எதிரே வெற்றிலை விற்கும் கடையில் குனிந்த தலையுடன் பேரம் பண்ணிக் கொண்டிருந்த தேவகியைக் கவனித்துவிட்டு, ''தேவகி...'' என்று உரக்க அழைக்க நினைத்தவள், 'தே...' இரு செயல்களுமே இரு பெரும் பாறாங்கற்களாகக் கழுத்தில் இறங்குவதை உணர்ந்து, எதைச் செய்வது என்று தீர்மானிக்க முடியாமல் படிக்கட்டில் வெற்றிலை விற்கும் கடையில் வைத்திருந்த மாலைப் பத்திரிகைகளின் தலைப்புகளைப் படிக்கிற மாதிரியும் வெற்றிலை வாங்கக் காத்திருக்கிற பாவனையிலுமாகப் பைகளைக் கீழே வைத்து விட்டுக் கிடைத்த மூன்று நிமிஷ ஓய்வை அநுபவித்துக் கொண்டிருந்தாள்.

அப்போது சற்றுத் தள்ளி ஸ்டேஷனுள் நுழையும் அடுத்த வாசல் அருகில் வந்து நின்று விட்டுக் கிளம்பிய டாக்ஸிக் கதவின் 'படீர்' என்ற ஒலி தேவகியின் கவனத்தைத் திருப்பியது. டாக்ஸியினுள்ளிருந்து ஓர் ஆணின் கை வெளியில் நீண்டு, ''டாட்டா'' காண்பிக்கும் பாவனையில் ஆட்டியதைக் கவனித்தாள். சோர்ந்து போயிருந்த மனசில் பார்வையிலேயே தீட்சண்யம் குறைந்திருந்ததால், டாக்ஸியிலிருந்து இறங்கி யுடன் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றாள். பார்த்த கணத்தில் கலவரம் எழுந்தாலும் சமாளித்துக் கொண்டு 'தேவகி கவனித்திருக்க மாட்டாள்' என்ற தைரியத்துடன், ''தேவகி! ஏன் லேட் உனக்கு இன்றைக்கு?'' என்று குரலில் சாதாரணக் குழைவை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் ராதா.

தான் வேறு மாதிரி கேட்க வேண்டிய கேள்வியை ராதாவே தன்னிடம் மாற்றிக் கேட்கும் நிலையையும் ஒரு கணம் முன்னால் ராதாவின் முகத்தில் ஓடி மறந்த கலவரத்தையும் உணர்ந்த தேவகி, ''மயிலாப்பூருக்குப் போயிட்டு வரேன். போகலாமா?'' என்று கூறி நடக்க ஆரம்பித்தாள். பிறகு, ''நீ எப்படி இங்கு மாம்பலத்தில் வந்து ரயில் ஏறுகிறே?'' என்று கேட்டாள்.

எல்லாம் தெரிந்து கொண்டுதான் ஒன்றும் தெரியாதது மாதிரி இவள் கேட்கிறாளோ என்ற சந்தேகப் பார்வை ராதாவின் முகத்



''பெண்கள் எல்லோரும் குத்து விளக்கு மாதிரி இருக்கணும்.
அப்படியென்றால் என்ன தெரியுமா?.....
குத்துவிளக்கு மெதுவாக, அடக்கமாக, அலுங்காமல் அழகாக எரியும்.
குத்துவிளக்கு பந்தம் மாதிரி எரியலாமா?.....

தில் முடியாது. ஆனாலும், "சீ, இவள் கவனித்திருக்க மாட்டாள்" என்ற தைரியத்துடன், "பீச்சிலேதான் ரயில் ஏறினேன். கோமதி இல்லே, அவள் வந்தாள். இரண்டு பேரும் இங்கே இறங்கி ஒரு கப் காப்பி குடித்துவிட்டு வந்தோம்" என்று சொல்லிவிட்டுச் சகோதரியின் கையிலிருந்து ஒரு பையை வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள். கறிகாய்ப் பை உண்மையாகவே தூக்க முடியாமல் கனத்தது.

"என்ன தேவகி இது, பஸ்ஸிலேதானே வந்தே? இறங்கிய உடனே எதிரில் இருக்கும் கடையில் வாங்கவா மறந்து விடும்? இப்போது மறுபடியும் ஒரு தடவை உஸ்மான் ரோட்டுக்குப் போகணுமா?" என்று அலுத்துக் கொண்ட ராதாவின் குரலில், "நீ சொன்னாலும் நான் போகத் தயாரில்லே" என்ற அலுப்புத் தெரிந்தது.

"ஆமாம், ராதா! இன்றைக்கு எனக்கு ரொம்பக் களைப்பாக இருக்கு. மயிலாப்பூருக்கு வேறே போயிட்டு வந்தேன். நீ கொஞ்சம் போய் மாத்திரையை வாங்கிக் கொண்டு வந்து விடு" என்று சொல்லித் தேவகி மீண்டும் கறிகாய்ப் பையை வாங்கிக் கொண்டாள்.

"மயிலாப்பூர்" என்றதுமே ராதாவுக்கு வழக்கம் போல் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. "உன்னை யார் மயிலாப்பூருக்குப் போகச் சொன்னது? எத்தனை தடவை பட்டாலும் உங்களுக்குப் புத்தி வராது" என்று சொல்லிவிட்டு, அவள் திரும்பி ரங்கநாதம் தெருவில் மருந்துக் கடையை நோக்கி நடந்தாள்.

ஒரே கணத்தில் குணமே மாறி, ஆத்திரத்துடன் படபடக்கும் தங்கையை நினைத்துச் சிரித்துக் கொண்ட தேவகி, அடுத்து அவள் டாக்ஸியில் வந்து இறங்கிய நினைவு வந்ததும், 'ராதாவா இப்படிச் செய்கிறாள்? தன்னுடன் ஒரே வயிற்றில் பிறந்த தங்கையா? வெட்கம், மானம் எல்லாவற்றையும் துறந்து விட்டு..... ராதாவா?.... ராதாவா?" என்று மயங்கிக் கதிகலங்கி நின்றாள்.

நினைக்க நினைக்கத் தேவகிக்கு நெஞ்சு வலித்தது. 'அவன் யாராக இருக்கும்? எத்தனை நாட்களாக இப்படிக் கொண்டு விடுகிறான்? பீச் ஸ்டேஷனில் ரயில் ஏற வேண்டிய ராதா எங்கே போய் இவனைப் பார்த்து?...' தேவகி சுவரைப் பிடித்துக் கொண்டு தன்னை மறந்து நின்று கொண்டிருந்தாள்.

தேவகியின் சிந்தனை சுழன்றது. ராதா யாருடனோ டாக்ஸியில் வந்து இறங்கிய சமாசாரத்தை அம்மாவிடம் தெரிவிப்பதா வேண்டாமா? அம்மாவுக்கு இருக்கும் கவலைகளில் இதை வேறு போட்டு அவளை இன்னும் வறுத்து எடுக்க வேண்டுமா என்று குழம்பிக் கொண்டிருந்த போது ஒரு வழியாக ராதா வந்து சேர்ந்தாள்.

2

பல்லாவரம் ஸ்டேஷனில் இறங்கித் தெரு முனை திரும்பியதும், ஆபீசுக்குப் போன பெண்கள் இருட்டிய பிறகும் வராத கவலையினால் அம்மா வாசலில் காத்துக் கொண்டு நின்றது தெரிந்தது. அம்மா கேட்பதற்கு முன்னாலேயே, "உனக்கு மாத்திரை வாங்கிக் கொண்டு வந்து விட்டேனம்மா. மயிலாப்பூருக்குப் போயிருந்தேன். அத்திம்பேர் போன் பண்ணினார். முரளிக்கு இரண்டு நாட்களாக உடம்பு சரியாக இல்லையாம். பார்த்து விட்டு வந்தேன்" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் தேவகி.

"ஆமாம். இவள் பெரிய டாக்டர். அந்தப் பெரியவர் சொல்லியனுப்பியவுடனே போய்ப் பார்த்து 'டெஸ்டு' பண்ணி, மருந்து எழுதிக் கொடுத்து விட்டு வந்து விட்டாள்" என்று ராதா எரிச்சலுடன் சொன்னதை அம்மாவும் தேவகியும் சட்டை செய்யவில்லை.

"என்ன உடம்பு? இப்போ எப்படி இருக்கிறது?" என்ற அம்மாவின் கேள்விக்கு, "இப்போ தேவலை. நேற்று ராத்திரிதான் ரொம்பக் கவலையாக இருந்ததாம்" என்ற தேவகி, பைகளை அப்படியே போட்டுவிட்டு, மொட்டை மாடியில் ஈஸிசேரில் படுத்துக் கொண்டிருந்த அப்பாவின் அருகில் போய், 'அப்பாடா!' என்று தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

பெண் வந்து உட்கார்ந்ததைப் பார்த்ததும் மனசில் எந்தவிதச் சலனமும் இல்லாமல் பேப்பரில் மூழ்கியிருந்த அப்பாவைப் பார்க்கப் பார்க்கத் தேவகிக்கு மனம் வலித்தது. அம்மா இவ்வளவு உடல் பலவீனத்திலும் மனத் தெம்பையும் பற்றையும் ஆசையையும் விடவில்லை. ஆனால் அப்பாவோ,—

முதல் இரண்டு பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்து, அடுத்து வந்த விசேஷங்களுக்கெல்லாம் புரோ நோட்டில் வட்டிக்கு வரவு வைப்பது மாதிரி மூச்சைப் பிடித்துக் கொண்டு செய்தும் எதிலும் திருப்தி அடையாத மாப்பிள்ளைகளின் மனோபாவங்கள்; அடுத்து உள்ள இரு பெண்களை எந்தத் தலைமுறையிலும் இல்லாத வழக்கமாக வேலை என்று வெளியில் அனுப்ப நேர்ந்த நிலை; இடையில் இருந்த பிள்ளைகள், உலகத்தின் எந்த விதக் கவலைகளும் தெரியாமல் கிரிக்கெட், சினிமா என்ற இரண்டு பந்தங்களில் சிக்கி, மீள முடியாமல் அதன் விளைவாக வகுப்புக்கு இரண்டிரண்டு வருஷங்கள் என்ற கணக்கில் முக்கி முனகிக் கொண்டு இப்போதுதான் பி. யு. ஸி.யிலும் ஒன்பதாவதிலும் அமர்ந்திருக்கும் விமரிசை — ஆகிய குடும்பப் பெருமைகள் அவரைக் 'கவலை என்பது நினைத்துப் பார்த்தால்தான்' என்ற முடிவுக்கு வரச் செய்து, கூடியவரையில் அது தம்மிடம் அணுகாமல் பார்த்துக் கொண்டு, தாமுண்டு தம் ஆபீஸ் வேலைகள் பேப்பர், ஈஸிசேர் உண்டு என்று ஆக்கி விட்டன.

கவலைகள் தலைக்கு மேல் இருந்த போதிலும் தேவகியும் ராதாவும் கொண்டு வரும் இருநூறு, நூற்றி ஐம்பது ரூபாயிலும் அப்படி இப்படி என்று எப்படியோ கொஞ்சம் மிச்சப்படுத்தி, அப்பா ஆபீஸ் கடன் [illegible]
ஆபீஸ் [illegible]



அதனுடன் ஒட்டி மேலும் எதிர்பார்க்கக் கூடிய வரவுகளுக்கும் கணக்குப் போட்டுப் பார்த்து அந்தத் தைரியத்தில் தேவகிக்குக் கல்யாணம் என்ற ஏற்பாட்டின் முதல் அங்கமாகப் பெண் பார்க்க என்று ஒரு கோஷ்டியைச் சென்ற மாதம் வரவழைத் தார்கள். குற்றம் சொல்ல முடியாத தேவகி யின் குணத்திலும் அழகிலும் பற்று வைத்த போதிலும் 'மேற்கொண்டு நடந்த பேச்சில்' ஓர் ஆயிரம் ரூபாய்க்கு உதைத்துக்கொண்டது.

''ஒரு 'ஆறு' ரூபாய்க்குக் கூடச் செய்யா விட்டால், அப்புறம் எங்களை நாலு பேர்கள் நாலு சொல்வார்கள். மூத்த பிள்ளைகளுக்கு 'ஏழு' ரூபாய் 'எட்டு' ரூபாய் என்று வந்த இடத்தில் செய்து விட்டு, இவனுக்கு மாத் திரம் குறைத்தால் பின்னால் இவனும் வருத்த படுவான்......'' என்று பிள்ளை வீட்டுக் காரர்களின் பேச்சுப் போய்க் கொண் டிருந்தது.

அப்பா பதில் சொல்லத் தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டிருந்தார். அம்மாதான் தாக்குப் பிடித்துக் கொண் டிருந்தாள். ''இவ்வளவுதானே வித்தியாசம்? இன்னும் எவ்வளவோ வரும். நாங்கள்

ஒன்றையும் குறைந்துச் செய்ய மாட்டோம். அப்படிச் செய்வது எங்களுக்குத் தெரியாது. முதல் இரண்டு பெண்களைக் கொடுத்திருக்கும் இடங்களில் கேட்டுப் பாருங்கள்......'' என்று சொன்ன அம்மா இன்னும் எப்படி முட்டுக் கொடுத்துப் பார்க்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

பிள்ளையைப் பெற்ற புண்ணியவதி, ''அந்தப் பேச்செல்லாம் வேண்டாம். நீங்கள் இப்பவே கஷ்டத்தோடு கஷ்டமாக இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தால் தான் உண்டு. பின்னாடி உங்களை ஒன்றும் கேட்க முடியாது. உங்கள் குடும்ப நிலைமை எங்களுக்கு நன்றாகத் தெரிகிறது'' என்று சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த ராதாவுக்கு அடிவயிற்றிலிருந்து ஆத்திரம் வந்து விட்டது. மூத்த சகோதரிகளைக் கொடுத்திருந்த இடங்களில் வாங்கிக் கட்டிக் கொண்ட பேச்சுக்கள் தேவகியின் கல்யாணத்துக்கு முன்னாலேயே எழுந்தும், தங்கள் கையாலாகாத்தனத்தை இவ்வளவு விண்டு நேரிடையாக இடித்துக் காண்பிக்கிற மாதிரி பேசும் மனிதர்களின் ஈவிரக்கமற்ற தன்மையும் அவர்கள் கேட்கும் ஆயிரம் ரூபாய் இருக்கும் திசையறியாத பிரமையும் சேர்ந்து, ராதாவைத் தன் நிலை மறக்கச் செய்தது. அடிபட்ட புலி போல் அவள் சீறினாள். அது அவள் சுபாவம். ''எங்களை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்? உங்களைத்தான் என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்? உங்கள் வீட்டிலும் பெண்கள் இருந்து கேவலம் ஆயிரம் ரூபாய்ப் பணத்தில் அவர்கள் வாழ்க்கையே ஊசலாடுவதை உணர்ந்து பார்க்கும் சக்தி உங்களுக்கு ஏற்படவில்லை..... போகட்டும்; இதோ மகாலக்ஷ்மி மாதிரி எங்கள் தேவகி நிற்கிறாள். எங்களால் செய்ய முடிந்தது இவ்வளவுதான். இதைச் செய்வதற்கும் நாங்கள் எந்தெந்த விதத்தில் ஏற்பாடுகள் செய்ய நேர்ந்தது என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. எங்கள் நிலையைப் பற்றி நாங்கள் வெட்கப்படவும் இல்லை. நிலைமை இதுதான். உங்களுக்கு மனசு இருந்தால் செய்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் உங்களுக்குப் 'பெரிய ஆறு ரூபாயோ ஏழு ரூபாயோ' கிடைக்கிற இடத்தில் கறுப்போ, சிவப்போ, நொண்டியோ, முடமோ பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வளவுதான்!'' — ஆவேசம் வந்தது மாதிரி முழங்கிய ராதா பதிலுக்கு நிற்காமல் எதிர்ப்புறத்து அறைக்குப் போய்க் கட்டிலில் விழுந்தாள்.

ராதாவை மடக்கிப் பேச ஒருவருக்குமே துணிவில்லை. அம்மாவுக்கும் தகதகவென்று ஒளிவிடும் தேவகியைப் பார்த்து, வந்திருக்கும் மனிதர்களின் மன நிலையையும் பார்த்து மனம் வெறுத்து விட்டது. அப்பாவோ தம் பெண் இத்தனை வேகமாகப் பேசுவதைப் பார்த்து, 'அதுவும் நியாயம்தான்' என்ற நிலையை அனுசரித்தார். வந்தவர்கள் எழுந்தார்கள். ''நல்ல வேளை; தங்கைக்கே இவ்வளவு வாய் இருந்தால் பெரியவளுக்கு எவ்வளவு இருக்குமோ?'' என்று சொல்லாமல் சொல்லிக் கிளப்பி விட்டார்கள்.

அம்மா ராதாவின் அறைக்குச் சென்றாள். ராதா குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். ஆனால் அம்மா வந்து தொட்டதும் அவள் அழுகை ஓய்ந்து விட்டது. அம்மா சொன்னாள்: ''நீ வீணாகக் கலங்காதே ராதா! உனக்கு ஏன் இப்படிக் கோபம் வருகிறது? கல்யாணம் ஆகாத பெண்ணுக்கு இப்படிக் கோபம் வரலாமோ? பெண்கள் எல்லாரும் குத்துவிளக்கு மாதிரி இருக்கணும். அப்படி என்றால் என்ன தெரியுமா? குத்துவிளக்கு மெதுவாக, அடக்கமாக, அலுங்காமல், அழகாக எரியும். குத்துவிளக்கு, பந்தம் மாதிரி எரியலாமா? அப்படி எரிந்தால் அது அழகு என்று ஒருவருமே சொல்ல மாட்டார்கள். அதன் தலையில் தண்ணீரைக் கொட்டி அணைத்து விடுவார்கள்.''

3

காரியாலயத்தில் தேவகிக்கு வேலையே ஓடவில்லை. இத்தனை நாட்களாக இத்தனை ஆண் பிள்ளைகளுக்கு நடுவில் உட்கார்ந்து வேலை செய்தும் அவளுக்கு இது வரை எந்த விதமான பய உணர்ச்சியும் தோன்றியதில்லை. புகுந்த வீட்டுக் குடும்ப பந்தத்தை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டிய வயதில் பிறந்த வீட்டின் அத்தியாவசியத் தேவை என்ற ஒன்று தன்னைக் காரியாலயத்துக்கு விரட்டியிருப்பதையும், தன்னைப் போல நூற்றுக் கணக்கான பெண்கள் தாம்பரத்திலிருந்தும் மாம்பலத்திலிருந்தும் மின்சார ரயிலில் ஏறி இடிபட்டு, நசுங்கிக் காரியாலயம் என்ற அந்தக் கூண்டில் அடைபடுவதையும் அந்த வேதனையில் அங்கே பால் உணர்ச்சிகூட ஓரளவுக்கு மங்கிவிடுவதையும் அவள் உணர்ந்திருந்தாள். தானும் தன்னுடன் வேலை செய்யும் தோழிகளும் உணரும் உணர்வுதான் தன் கூடப் பிறந்த தங்கைக்கும் இருக்கும் என்று நினைத்திருந்த தேவகிக்கு முதல் நாள் மாலையில் ஓர் ஆண்பிள்ளை அவளைக் காரில் கொண்டு வந்துவிட்ட நிகழ்ச்சி நினைவுக்கு வர, தன்னைச் சுற்றியுள்ள ஆண்களையே என்றுமில்லாத பயங்கர உணர்ச்சியுடன் பார்த்தாள். தன் ஆபீஸிலும் ஓரிரண்டு பெண்களின் பெயர்கள் பட்டும் படாததுமாக ஆண் பிள்ளைகளின் பெயர்களுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு அடிபடுவது நினைவுக்கு வந்ததும், தன் தங்கையைப் பற்றியும் அப்படி நாலு பேர்கள் ரகசியப் பேச்சுப் பேசுவார்களோ என்ற நினைவில் தேவகி கூசிக் குறுகினாள். அவளுக்குக் காரியாலயத்தில் இருக்கவே பிடிக்கவில்லை. அது ஒரு சிறையாகவே அவளுக்குத் தோன்றியது. இந்தச் சிறையிலிருந்து எப்படி விடுபட்டு எங்கே போவது? வீட்டுக்கா?... ராதாவைக் கொண்டுவந்து விட்டது யாராக இருக்கும்? அவள் காரியாலயத்தைச் சேர்ந்தவனாகவே இருக்குமா? ஆண்பிள்ளைகள் என்றாலே அற்பமானவர்களாக நினைத்து ஆத்திரத்துடன் பேசும் ராதாவா இப்படி வெட்கம், மானம் எல்லாவற்றையும் துறந்து, எதற்கும் கவலைப் படாமல் ஆண்பிள்ளை ஒருவன் கொண்டு

வந்து விட, நிர்ப்பயமாக டாக்ஸியிலிருந்து இறங்குகிறாள்?

இதுவரை வாழ்க்கை என்பது எல்லையற்ற தூரவெளியாக இருந்தது தேவகிக்கு. இப்போது வாழ்க்கை என்பது பயங்கரமான இருள் சூழ்ந்த காடாகத் தோன்றியது.

நடுப்பகலில் சிற்றுண்டி அருந்தும் வேளையில் எல்லாப் பெண்களும் கூடி உட்கார்ந்து கொட்டியளக்கும் நேரத்தில்கூடத் தேவகி தனித்தே நின்றாள். மாலை நேரம் நெருங்க நெருங்க, தன்னுள்ளேயே இனந் தெரியாத திகில் மூள்வதை அவள் உணர்ந்தாள். இன்றும் ராதா அவனுடன் டாக்ஸியில் மாம்பலம் ஸ்டேஷனுக்கு அருகில் வந்து இறங்குவாளோ என்ற எண்ணத்தை அவளால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை. அந்தப் பயம் அவள் மனசில் பூதமாய்ப் பயமுறுத்த அன்று ஒரு மணி முன்னதாகவே வீட்டுக்கு ஓடித் தாயின் மடியில் விழுந்தாள்.

இரண்டு மூன்று நாட்கள் ஆன பிறகு அவளுக்குப் பரபரப்பு ஒருவாறு அடங்கியது. மூத்தவளாகிய தான், தங்கையைக் கண்காணித்து அவளுடன் கூட வரும் அந்த ஆண் பிள்ளை யார் என்று பார்த்தாக வேண்டும் என்று தீர்மானித்தாள்.

அன்று மாலை நாலரை மணிக்கே தன் காரியாலயத்திலிருந்து கிளம்பி ராதாவின் ஆபீஸ் வாசலுக்கு எதிர்ப்புற நடைபாதையில் நின்றுகொண்டு உள்ளேயிருந்து வருபவர்களைக் கவனித்தாள். மணி ஐந்து அடித்ததும் பெண்களின் கூட்டத்தோடு கூட்டமாக ராதா சிரித்து முழக்கிக் கொண்டு நடுநாயகமாக எல்லோரையும் இழுத்துக் கொண்டு வருகிற மாதிரி வருவதையும், அவள் ரயிலில் போகும் தோழிகளுடன் பீச் ஸ்டேஷனுக்குப் போய் ரயில் ஏறிப் பல்லாவரத்தில் இறங்கி வீடு நோக்கி நடப்பதையும் பின்னாலேயே வந்து கண்காணித்த தேவகிக்கு ஏமாற்றமாக இருந்தது.

இரண்டு மூன்று நாட்கள் இப்படியே நடந்தது. நான்காவது நாள். இனி இந்த மாதிரி வேவு பார்க்கும்வேலை தன்னால் முடியாதுஎன்று நினைத்தபடி தேவகி, ராதாவின் ஆபீஸின் எதிர்ப்புற நடைபாதையில் நின்றுகொண்டு உள்ளிருந்து வருபவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள். மணி இன்னும் ஐந்து அடிக்கவில்லை. பத்து நிமிஷம் பாக்கியிருந்தது. ராதா உள்ளே யிருந்து வேகமாக வருவது தெரிந்தது. அவள் வாசலுக்கு வந்து நின்றது தான் தெரியும். ரோட்டில் வேகமாக வந்த டாக்ஸி ராதாவின் ஆபீஸை ஒட்டி நின்றது. ராதா பாய்ந்து சென்று அதில் ஏறிக்கொண்டாள். டிரைவருக்குப் பக்கத்தில் இருந்த முன் சீட்டில் ஓர் ஆண் உட்கார்ந்திருந்ததும் தேவகிக்குத் தெரிந்தது. யாரைக் கவனிக்க வேண்டும் என்று தேவகி நாலு நாட்களாகத் தவித்துக் கொண்டிருந்தாளோ, அவனைக் கவனிக்க வேண்டிய அந்தக் கணத்தில், ராதா ஓடிவந்து டாக்ஸியில் ஏறிய வேகத்தைப் பார்த்த அதிர்ச்சியில் உடல் நடுங்கி, தலை சுற்றி, கண் மயங்கி, அப்படியே சுவரைப் பிடித்துக் கொண்டு நின்ற நிலையில் தன் நினைவையே சில நிமிஷங்கள் இழந்திருந்தாள். டாக்ஸி பறந்து விட்டது. தேவகி ஐந்து நிமிஷங்கள் கழித்துத்தான் தன் நினைவுக்கு மீண்டாள். உடல் சோர, உள்ளம் கொதிக்க அவள் கால்கள் அவளை பீச் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றன. வீட்டுக்குப் போனதும் அம்மாவுக்கு எதிரில் நிற்கும்போது எரியும் நெருப்புக்கு முன்னால் இருப்பதாக உணர்ந்தாள். அந்த உணர்வில் அவளுக்கு அம்மாவிடம் எதுவும் சொல்ல வாய் எழவே இல்லை.

வழக்கம் போல இரண்டு மூன்று நாட்கள் கழிந்ததும் அவளுக்குத் தைரியம் வந்தது. தன் பயத்தை நினைத்து வெட்கி மேலே தான் செய்ய வேண்டியதை யோசித்தாள்.

நான்கைந்து நாட்கள் ராதா ஐந்து மணிக்கு எல்லாருடனும் வெளியில் வந்து நேராக பீச் ஸ்டேஷனுக்கு நடந்தாள்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

கண்களை நம்பாதே!



'ரம்யன்'

ஜேம்ஸ் தர்பர் என்ற நகைச்சுவையாளருக்குக் கண் பார்வை மங்கிவிட்ட பிறகு காது மிகவும் கூர்மையாகி விட்டது. எவ்வளவு சிறிய முணுமுணுப்பும் அவருக்குத் தெளிவாகக் கேட்கும்.

ஒரு சமயம் அவர் விருந்தொன்றுக்குச் சென்றிருந்தார். அதில் கலந்து கொண்ட ஓர் இளம் ஜோடியைப் பற்றி, ''அவர்கள் சீக்கிரத்தில் பிரிந்து விடுவார்கள்'' என்று சொன்னார். இதைக் கேட்ட அவருடைய நண்பர்கள், அவருக்குப் பார்வையோடு மூளையும் பழுதாகி விட்டதென்று எண்ணிக் கொண்டார்கள். ''எவ்வளவு ஆனந்தமான ஜோடி; இவர்களா பிரியப் போகிறார்கள்...?'' என்று பரிகசித்தார்கள்.

''உண்மைதான். நீங்கள் கண்களால் அவர்களைப் பார்க்கிறீர்கள்; நான் காதுகளால் அவர்களைக் கேட்கிறேன்...!'' என்றார் ஜேம்ஸ்.

ஆறு மாத காலத்தில் அந்த ஜோடி விவாகரத்து செய்து கொண்டது!

★—★—★—★—★—★

வெண்ணெய்க் கோபுரம்



பிரான்சு நாட்டில் நாட்டர்டேம் டி ரூவன் என்ற இடத்தில் சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் தேவாலயம் ஒன்று கட்ட ஆரம்பித்தார்கள். வேலை நடந்து கொண்டிருந்தபொழுதுதான் அதைப் பூர்த்தி செய்யப் பல ஆண்டுகள் பிடிக்கும் என்பதும் அதற்குப் போதிய பண வசதி கிடையாது என்பதும் தெரிய வந்தன. அதனால் மனம் ஒடிந்துபோய் அந்த வேலையை இடையில் அப்படியே நிறுத்தி விட்டார்கள். பூர்வாங்கமாகச் சில பணிகள் மட்டுமே நிறைவேறியிருந்தன.

ஆண்கள் அயர்ந்து விட்டுவிட்ட இந்த லட்சியத்தை நிறைவேற்ற ரூவன் மாதர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். ஒரு நாள் அவர்கள் கூட்டமாகக் கூடி, தியாகம் செய்யச் சங்கல்பம் எடுத்துக் கொண்டார்கள். தேவாலயம் கட்டி முடிக்கப்படும்வரை யாரும் வெண்ணெய் வாங்குவது இல்லை என்பதுதான் இந்தப் பிரதிக்ஞை. வெண்ணெய் வாங்கும் பணத்தை இந்தப் புனித பணிக்கென்று தனியே ஒதுக்கி வைத்தார்கள். ஆரம்பத்தில் பால் பண்ணைக்காரர்கள் இதைப் பரிகசித்தார்கள். 'வெண்ணெய் வாங்கும் பணம் எவ்வளவு சேர்ந்துவிடப் போகிறது?' என்று பேசினார்கள். ஆனால் பெண்கள் தங்களது உறுதியில் விடாப் பிடியாக இருந்தார்கள்.

அதன் பலன் ஐந்தே ஆண்டுகளில் தெரிந்து விட்டது. அழகான கோபுரத்துடன் தேவாலயம் கம்பீரமாக எழுந்து நின்றது. அதைப் பார்த்துப் பிரமித்த மக்கள் அன்று முதல் இதை 'வெண்ணெய்க் கோபுரம்' என்று அழைக்கலானார்கள்.

— மு. முத்துக்காளத்தி

★—★—★—★—★—★

ஆறாவது நாள். ஐந்து அடிக்கப் பத்து நிமிஷம் இருக்கும்போதே ராதா வெளியில் வருவதைக் கவனித்த தேவகி தன் பக்கம் போன டாக்ஸியைக் கூப்பிட்டு நிறுத்தி ஏறிக் கொண்டாள். சொல்லி வைத்தது போல் எதிர்ப்புறம் ஒரு டாக்ஸி வந்து நிற்க, ராதா ஏறிக்கொள்ள அது நகர்ந்தது. தான் ஏறிய டாக்ஸியிடம் தேவகி அந்த டாக்ஸியின் பின்னால் போகச் சொன்னாள். தேவகியின் டாக்ஸி டிரைவர் எல்லாம் தெரிந்துகொண்ட பாவனையில் பதிலே பேசாமல் முன் பக்கத்து டாக்ஸியைப் பின் தொடர்ந்தான். தேவகிக்கு டாக்ஸி எந்தச் சாலையில் எந்தப் பக்கம் போகிறது என்ற நினைவே எழவில்லை. அவள் கண்ணுக்கும் மனசுக்கும் தெரிந்ததெல்லாம் முன்பக்கத்து டாக்ஸியும், அதனுள் முன் பக்கத்து ஸீட்டிலும் பின் ஸீட்டிலும் உட்கார்ந்திருந்த இரு உருவங்களும்தான்.

ஒரு குலுக்கலுடன் கார் நின்றதும் தேவகி தன் நினைவுக்கு வந்து வெளியில் பார்த்தாள். அந்த இடம் மௌண்ட்ரோடின் ஆரம்பம் என்பதை உணர்ந்தாள். முன்னால் போன டாக்ஸியிலிருந்து இறங்கிய ராதாவும் அந்த ஆண்பிள்ளையும் எதிரிலிருந்த பூங்காவுக்குள் நுழைவதைக் கண்டாள். தானும் இயந்திரம் இயங்குவது மாதிரி டாக்ஸிக்காரனுக்குரிய ரூபாயைக் கொடுத்துவிட்டு அவர்களையே பின்தொடர்ந்தாள். அவளுக்கு ஒரு மயக்க நிலை. அந்த நிலை ஏதோ கனவின் தொடர்ச்சி மாதிரித் தோன்றியதேயன்றி நேரில் நடப்பதாகவே தோன்றவில்லை.

பூங்காவினுள் நுழைந்த தேவகி சிறிது தூரம் நடந்து மரங்களின் மறைவில் தள்ளியிருந்த பெஞ்சியில் உட்கார்ந்திருந்த அந்த ஆண்பிள்ளையின் முகத்தை எட்டி நின்று பார்த்ததும்,—

பார்த்த உணர்வு அவள் மூளையைத் தாக்கிய அந்தக் கணத்தில்—தன் உடல், உள்ளம், உலகம் யாவும் யுத்த களத்தில் பொழிந்த குண்டு மாரியில் தகர்ந்து எறியும் வேகத்தில் சிக்கியதை உணர்ந்தாள்.

அந்த ஆண்மகன்,—

எதற்குமே கவலையோ, சந்தோஷமோ பட முடியாமல் யோகியாகிவிட்ட தந்தையின் மனசில் ஒரு துளி சலனமாவது ஏற்படும்; கஷ்டம், துக்கம் என்ற இரண்டையே மாற்றி மாற்றி அனுபவித்துக் கொண்டிருந்த அம்மாவின் நினைவுகளில் ஒரு துளி நிம்மதி உண்டாகும்; படபடவென்று எதிலும் நிதானம், யோசனை இல்லாமல் பறக்கும் ராதாவுக்கும் பொறுப்பு என்ற ஒன்றை எதிர்நோக்கக் கூடிய காலம் வரும் — அவை எல்லாவற்றுக்கும் இதுதான் ஆரம்பம் என்ற ஒரே நினைவில் எந்த ஆண்மகன் தன்னைக் கைதூக்கி விடுவான் என்று நினைத்து அவன் கால்களில் விழுந்து வணங்கி, தவித்து, உருகி நின்றாளோ அந்தப் பாவி—

எந்தப் பாவியின் கண்ணுக்குத் தராசில் குற்றமற்ற ஒரு பெண்ணின் நிறையை விட ஓர் ஆயிரம் ரூபாய்க் காகித நோட்டின் நிறை அதிகமாகத் தெரிந்ததோ,—

அதே அவன்தான்!

தேவகிக்கு வழக்கம் போல் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு, அடுத்தபடி யோசனை செய்யக் கூடிய நிதானம் ஏற்படவில்லை. தன் நினைவிழந்து, நிலையிழந்து, மீண்டும் மௌண்ட் ரோடு முனைக்கு வந்து, எதிர்ப்பட்ட டாக்ஸியில் ஏறி ஸ்டேஷனுக்கு வந்து ரயில் ஏறி, நினைவு மறக்காமல் பல்லாவரத்தில் இறங்கித் தாயின்மடியை நினைத்து வீட்டுக்கு ஓடி வந்தபோது,—

அம்மா ஒரு கையில் கடிதத்துடன் படியில் காத்துக் கொண்டு நின்றாள்.

அம்மா அம்மா என்று தன்னை மீறி வரும் குரலை அடக்க வகையறியாமல் ஓடிவந்த தேவகி அம்மாவைக் கண்டதும் அடங்கி விட்டாள்.

சாதாரண நாட்களாக இருந்திருந்தால் தேவகியின் கலவரத்தை அம்மா புரிந்து கொண்டிருப்பாள். ஆனால் அம்மா இருந்த மன நிலையில் இன்று தேவகியின் நிலையைப் பற்றி நினைக்க அவளுக்கு நேரமில்லை. கடிதத்தை நீட்டிய அம்மாவிடம் தேவகியே கேட்டாள்: ''என்ன கடிதாசு, அம்மா? நீயே சொல்லிவிடு.''

அம்மா சொன்னாள்: ''மணி போட்டிருக்கிறான். ஜானத்துக்குக் குறைப் பிரசவம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறாளாம். உன்னையாவது ராதாவையாவது இன்றைக்கு ராத்திரி கிளம்பி வரச் சொல்லி எழுதியிருக்கிறாள்.''

சித்தியின் ஊருக்குப் போகலாம் என்று நினைத்ததும் தேவகிக்கு ஒரே கணத்தில் குதூகலம் எழுந்தது. அம்மாவுடன் கூடப் பிறந்த ஜானம் சித்தியின் கிராமம், தேவகிக்கும் ராதா





வுக்கும் காஷ்மீர், ஊட்டி, குற்றாலம் எல்லாம் சேர்ந்த இடம். நல்ல வசதி படைத்தும் பெண் இல்லாக் குறை படைத்த சித்திக்குத் தேவகியிடமும் ராதாவிடமும் உயிர்தான்.

தன் நினைவுக்கு மீண்ட தேவகி சொன்னாள்: ''என்றால் இன்றைக்குக் கிளம்ப முடியாது, அம்மா. ஆபீஸில் அப்படி வேலை. ராதாதான் போகணும். அவள்தான் லீவு போடப் போவதாக ஒரு மாசமாகச் சொல்லிக்கொண்டிருந்தாள்.''

''யாரோ ஒருத்தி இன்றைக்கு ராத்திரியே கிளம்பணும். கடிதாசைப் பாரேன்...''

ராதாவும் வந்து சேர்ந்தாள். அவளைப் பார்த்த கணத்தில் தேவகிக்கு எரிமலையின் எதிரில் நிற்கும் உணர்வு எழுந்தது. அவள் இன்று ராத்திரி ஊருக்குப் போய்விடப் போகிறாள் என்றநினைவு தாற்காலிக சாந்தியாக எழுந்தது.

ஆனால் ராதாவோ உடனேயே ஊருக்குக் கிளம்பச் சம்மதிக்கவில்லை. முக்கியமான சில வேலைகளை முடித்துக் கொண்டு இரண்டு நாட்களில் கிளம்புவதாகச் சொல்லிப் பார்த்தாள். எப்படியோ அவளைச் சமாதானப் படுத்தி அன்று இரவே கிளம்பும்படியாகச் செய்தாள். ஒன்பதரை மணி ரயிலுக்கு அப்பாவின் துணையுடன் தேவகியும் எழும்பூர் ஸ்டேஷனுக்குப் போனாள்.

ரயில் கிளம்ப பத்து நிமிஷங்கள் இருக்கும் போதுதான் அவர்களால் எழும்பூர் ஸ்டேஷனுக்கு வர முடிந்தது. ராதாவைப் பெண்கள் வண்டியில் ஏற்றிவிட்டு விட்டு அப்பா டிக்கட் வாங்கி வர வெளியில் சென்றார். அப்பொழுது தான் ராதா தன்னிடம் தனியாக அகப்பட்டுக் கொண்டதால் சாயங்

காலத்திலிருந்து இத்தனை நேரமாக அழுத்தி வைத்துக் கொண்டிருந்த ஆத்திரம் மேலெழுமபத் தேவகி வெறிபிடித்தவள் போல அவளைப் பார்க்க ஆரம்பித்தாள். ஆனால் தேவகி சற்றும் எதிர்பாராதபடி ராதா மிக அமைதியுடன் பேச ஆரம்பித்தாள்.

''தேவகி, உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்லணும். அதை இத்தனை நாளாக உன்னிடம் சொல்லாமலே வைத்துக் கொண்டிருந்ததற்கு உன்னிடம் மன்னிப்புக் கேட்கணும். மேலும் இந்த விஷயம் முக்கியமாக உன்னைப் பாதிக்கிற விஷயமானதால் உன்னுடைய அநுமதி வாங்கிக் கொள்ளாமல் நான் இதில் இறங்கியது உனக்கு அவமானமாகக் கூட இருக்கும். வந்து,...'' என்று எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் தவிக்கும் ராதாவைப் பார்க்கப் பார்க்கத் தேவகிக்கு எரிச்சல் தான் அதிகமாகியது.

''என்னை மன்னித்துவிடு, தேவகி, உனக்கு, உன்னுடைய தன்மதிப்புக்கு நான் துரோகம் இழைத்தது மாதிரி கூடத் தோன்றும். ஆனால்....?

''அடேடே! தேவகியும் ராதாவுமா? எங்கே இப்படி?... ஊருக்கா? இரண்டு பேருமா?... எதுவரையில்? நாங்களும் வரலாமா?'' என்று முழங்கிக் கொண்டே இரண்டு மூன்று சிநேகிதிகள் வண்டிக்குள் ஏற, அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லி ஒருவாறு ஓய்வதற்குள் அப்பா டிக்கட்டுடன் வர, மணி அடிக்க, ரயில் கூவென்று கிளம்பியது. ராதா சொல்ல வந்த விஷயத்தைச் சொல்ல முடியவில்லை. எல்லா விவரங்களையும் தெரிந்து வைத்துக்கொண்டிருந்த தேவகிக்கும் ராதா சொல்லி முடிக்காதது குறையாகத் தோன்றவில்லை. ரயில் பிளாட்பாரத்தைத் தாண்டியதும் சில நாட்களுக்குப் பிறகு அன்றுதான் தேவகி நிம்மதியாக மூச்சு விட்டாள்.

4

ராதா ஊருக்குப் போய் ஒரு மாதம் ஆகிவிட்டது. சித்திக்கு இன்னும் உடல்நிலை சரியாகவில்லையாம். இன்னும் ஒரு மாதத்துக்குத் துணை வேண்டுமாம். தேவகியை வரச் சொல்லிக் கடிதம் வந்தது. அவளும் லீவு வாங்கிக் கொண்டு புறப்படத் தயாரானாள்.

அன்றைக்கு இரவு ரயிலில் தேவகி ஊருக்குப் போக வேண்டும். மறுநாள் ராதா வந்து விடுவாள். தேவகி குழம்பித் தவித்தாள். ஊருக்குப் போனதும் உடனேயே ஆற்றில் குளிக்கப் போகும் சாக்கில் ராதாவைத் தனியாக அழைத்துக் கொண்டுபோய்க் கண்டித்து, 'இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். குடும்பத்துக்கு அவப்பெயர் தேடிவைக்காமல் இருக்க வேண்டும்' என்று கூறுவதென்று தீர்மானித்துக் கொண்டாள். தேவகிக்கு இப்போது முழுத் தைரியம் வந்துவிட்டது. ராதாவிடம் எப்படிப் பேசிக் கண்டிக்க வேண்டும் என்பதைப் பத்துத் தடவை சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

பிற்பகல் மணி மூன்று இருக்கும். நபால்காரன் ஒரு கடிதத்தைத் தேவகியின் பெயரைச் சொல்லிக் கொடுத்துவிட்டுப் போனான். தன் பெயருக்கு ஆபீஸ் விலாசத்துக்குக் கடிதம் வரவே பதற்றத்துடன் அவள் பிரித்துப் பார்த்தாள். மேலே யிருந்த பெயரையும், கீழே யிருந்த கையெழுத்தையும், கடிதத்தின் முதல் இரண்டு வரிகளையும் படித்ததும் தேவகிக்கு நூறு தேள்களும் ஆயிரம் பாம்புகளும் ஒன்றாகப் பிடுங்குவது போல் இருந்தது.

''அன்புடைய தேவகிக்கு...'' என்று ஆரம்பித்திருந்த அந்தக் கடிதம் அந்த ராகவனிடமிருந்து தான் வந்திருந்தது.

''எனக்கு இப்போது கோயமுத்தூருக்கு மாற்றலாகி யிருப்பது உனக்குத் தெரிந்திருக்கும். ராதா உன்னிடம் எல்லாம் கூறி யிருப்பாள் என நினைக்கிறேன். ஒரு மாதமாக நான்கைந்து தடவைகள் சென்னைக்கு வந்தும் ராதாவைப் பார்க்க முடியவில்லை. இந்தத் தடவை உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று நினைத்து இதை எழுதுகிறேன். இன்று சாயங்காலம் ஆபீஸ் முடிந்ததும் மௌண்ட் ரோடு நேப்பியர் பூங்காவுக்கு வர முடியுமா? ராதா உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லி யிருப்பாள் என்றாலும் உன்னையும் நேரில் பார்த்து உன் சம்மதத்தையும் கேட்க வேண்டும்.—**ராகவன்.**''

கடிதத்தைப் படித்து முடித்த தேவகி, அதை எட்டாக மடித்துக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் எறிந்தாள். 'ஒரு பெண்ணைத் தனியாக வரச் சொல்லி எழுதக் கூடிய தைரியம் உடையவன் எதற்கும் துணிந்தவனாகத் தான் இருப்பான். அவன் முகத்தில் விழிப்பதுகூடப் பாவம்தான்!'

மாலை ஆபீஸ் நேரம் முடிந்ததும் 'அவனைப் போய் ஒரு பார்வையா?' என்று முதலில் நினைத்தவள், பிறகு ராதாவைப் பார்ப்பதற்கு முன்னால் அவனையும் பார்த்து ஆத்திரம் தீரச் சாடிவிட்டுப் போகத் தீர்மானித்தாள். இத்தனை நாட்களாக இல்லாமல் இன்று தைரியத்தை யெல்லாம் திரட்டிக் கொண்டு பூங்காவுக்குள் நுழைந்தபோது தேவகி, தேவகியாக இல்லை.

அந்தப் பழைய பெஞ்சில் உட்கார்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த அவன் தேவகியைக் கண்டதும், ''ஓ...வா...'' என்று பரபரப்புடன் எழுந்து நின்றான்.

தேவகி வாயைத் திறக்கவில்லை. அவனை நிமிர்ந்து பார்க்கவும் இல்லை.

''உட்காரேன்...'' என்று பெஞ்சின் கோடியைக் காண்பித்துவிட்டு அவன் நின்று கொண்டே யிருந்தான்.

'நெஞ்சே, தைரியமாக இரு. பயம் என்ன? யாரிடம் பயம் வேண்டும்? பால் போலிருந்த தங்கையின் மனசைக் கலைத்த பாவியிடமா பயம்? இல்லை... எனக்குப் பயமே இல்லை... தேவகிக்குப் பயம் இருந்தாலும் ராதாவின் அக்காவுக்குப் பயம் இருக்கலாமா?'

''ராதா உன்னிடம் எல்லாம் சொல்லி யிருப்பாள்...''

''அவள் சொல்லித்தான் எனக்குத் தெரிய வேண்டும் என்று இல்லை. நானே எல்லாம் தெரிந்து கொண்டேன்.''

''உனக்குத் தெரியுமா?... அப்போ...நான் எடுத்துக் கொண்ட முறை ஒருவேளை தவறாக இருக்கலாம்... ஆனால் நீங்கள் எல்லாம் வீட்டில் இருக்கும் பெண்களாக இல்லாமல் வேலைக்காக வெளியில் வந்த பெண்களாக...''

எந்த வார்த்தை தேவகிக்கு வேம்பாகக் கசந்ததோ அந்த வார்த்தையை அவன் சொல்லிவிட்டான். தேவகி சீறி எழுந்தாள். ''நாங்கள் வேலைக்கு வந்துவிட்டோம் வெட்கம், மானம் எல்லாவற்றையும் துறந்து விட்டு. நீங்கள் எல்லாம் பார்க் என்றால் பார்க்குக்கு, பீச் என்றால் பீச்சுக்கு, சினிமா என்றால் சினிமாவுக்கு என்று உங்களுடன் ஓடி வர நாங்கள் வேலை என்ற போர்வையைப் போர்த்திக் கொண்டு விட்டோம். அது தானே உங்கள் நினைப்பு? அது இல்லை. இதோ நான் சொல்லுகிறேன். நாங்கள் வேலைக்கு வந்து நிற்பது உங்களைப் போலொத்தவர்களுடன் சம உரிமை கொண்டாடவோ அல்லது நாங்கள் ஏதோ தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற எண்ணத்தினாலோ இல்லை. தெரிந்து கொள்ளுங்கள். சமூகத்தில் வேர் பாய்ச்சிவிட்ட விஷம் போன்ற பழக்கத்தை விட்டுவிடத் தைரியம் இல்லாத உங்களைப் போன்ற கோழைகளால்தான் நாங்கள் நானூறு ஆண்பிள்ளைகளுக்கு நடுவில் எங்கள் உருவ லட்சணம், கால் அமைப்பு, கை அமைப்பு என்று பேசப்படும் நிலையிலும் ராதாவைப் போல் முன் பின் தெரியாதவர்களுடன் டாக்ஸியில் போய்ச் சந்தி சிரிக்கும் நிலையிலும் நிற்கிறோம். மனம் என்று ஏதாவது இருந்தால் யோசனை செய்து பார்த்துக் கொள்ளுங்கள். மற்றபடி இனிமேல் ராதாவைக் கூப்பிட்டால்; ராதா தேவகியைக் கூப்பிட்டால் தேவகி-இப்படி எல்லாரும் ஓடி வருவார்கள் என்று நினைக்க வேண்டாம். இனிமேல் ராதாவைத் தனியாகச் சந்திக்க முயன்றால் போலீஸில் சொல்லி நடவடிக்கை எடுக்கச் செய்வேன். தெரிந்து கொள்ளுங்கள். இதைச் சொல்லி விட்டுப் போகத்தான் வந்தேன். அவ்வளவுதான்!'' அவன் முகத்தைக்கூடப் பார்க்காமல் தேவகி விடுவிடுவென்று வெளியேறினாள்.

மழை பெய்து வெளிவாங்கிய வானம் போல் இருந்த அவள் மனத்தில் ஒரு தெளிவு பிறந்தது. தங்கையைப் பார்த்துத் திட்டுவதைவிட ஒரு மூன்றாவது மனிதனைப் பார்த்து ஆத்திரம் தீரக் கொட்டுவது சுலபமாக இருந்தது. இனிக் கவலையில்லை. ராதாவிடம் அமைதியாகவே சொல்லலாம். அம்மாவிடம் கூடச் சொல்லலாம்.

இரவு ரயில் பிரயாணம் தேவகிக்கு நிம்மதியாக இருந்தது.

5

ரயிலிலிருந்து இறங்கியதும் மணி சொன்ன செய்தி தேவகிக்குச் சற்று ஏமாற்றமாக இருந்தது. அது, ராதா முதல் நாள் இரவே நல்ல துணை கிடைத்ததென்று அவர்களுடன் சென்



''உன்னிடம் மிகச்சிறப்பாக இருப்பதை உலகுக்கு அளி; மிகச் சிறந்தது உனக்குத் திரும்பி வரும்'' என்ற மேற்கோள் வாசகம் கொண்ட பள்ளியில், அந்த மாணவன் படித்துத் தேறியவன். அச்சிறுவன் ஒன்பது வயதில் செய்த வேலை: டெக்ஸாஸ் நகர சலூன் ஒன்றில் காலணி துடைப்பது!

அதன் பின்னர் பதினைந்து வயதில் உயர்நிலைப் பள்ளியில் தேர்வு பெற்ற பின் சாலை அமைக்கும் தொழிலாளர் குழுவில் பணி! உழைப்பில் கிடைக்கும் ஊதியத்தைச் சேமித்துக் கொண்டே கலிபோர்னியா வந்து சேர்ந்தான். வழியில் கிடைத்த வேலைகளையெல்லாம் செய்தான்.

இது மட்டுமா? இல்லை. அச்சிறுவன் செய்த வேலைகளின் பட்டியல் வளர்ந்தது. லிப்ட் இயக்கும் வேலை, மோட்டார் வண்டி கழுவுதல், ஹோட்டலில் எடுபிடி வேலைகள்... இப்படிப் பல வேலைகளைச் செய்து கொண்டே கல்வி கற்று வந்தான். தகுந்த கல்வி இல்லாவிடில் வாழ்க்கையில் முன்னேற முடியாது என்பதை உணர்ந்திருந்தான், அந்த ஊக்கம் குறையா மாணவன். அப்படியும் வருவாய் பற்றாக்குறை.

ஓய்வு நேர வாயிற் காப்போன், வீட்டுக்கு வீடு ஏறி விற்கும் விற்பனையாளன், கல்லூரித் தலைவருக்குக் காரியதரிசி—இப்படிப் பல விதமாகவும் பணியாற்றி, தன் இருபத்து இரண்டாவது வயதில் விஞ்ஞானத்தில் பி. எஸ்ஸி. பட்டம் பெற்றான் அந்த மாணவன்.

வாழ்க்கைப் போராட்டத்தில் அங்குலம் அங்குலமாக வெற்றி பெற்ற அந்த மாணவன் யார் தெரியுமா?

அமெரிக்காவின் முப்பத்தி ஆறாவது ஜனாதிபதியாக இன்று பதவி வகிக்கும் லிண்டன் பேன்ஸ் ஜான்ஸன் அவர்கள்தான்!

ஆதாரம்: 'அமெரிக்க ஜனாதிபதி'

தகவல்: ஏ. சுவாமிநாதன்.

வாழ்க்கையில் வெற்றி !

ரைக்குத் திரும்பிவிட்டாள் என்பதுதான். நல்ல வேளை; அவனை முதல் நாள் சந்தித்து விட்டு வந்தது நல்லதாகப் போய்விட்டது. இல்லாவிட்டால் இப்போது ராதாவையும் பார்க்க முடியாத நிலையில் மிகவும் சிரம மாகியிருக்கும் என்று தேவகி நினைத்துக் கொண்டாள்.

கிராமவாசத்தில்தான் எவ்வளவு நிம்மதி! காலைவேளையில் தெளிந்த நீரோட்டத்தில் அமிழ்ந்து குளித்தெழலாம். ஆபீஸுக்குப் போக வேண்டும் என்ற அவசரத்தில் ஈரத் தலையை அப்படியே பின்னிக் கொண்டு கிளம்ப வேண்டாம், எதிலுமே ஒரு பர பரப்போ அவசரமோ இல்லை. கறிகாய்களை நூறு கிராம், இருநூறு கிராம் என்று பெரிய பெயரில் வாங்கி ஒரு கறிக்குக்கூடக் காணாத கஷ்டம் இல்லை. கூடை கூடை யாக வயல் கரைகளிலிருந்து ஆட்கள் கொண்டு வரும் கறிகாய் வகைகளில் எதைச் சமைப்பது என்று புரியாத தவிப்பும், பிற்பகலில் ஒரு கவலை இல்லாமல் ஊஞ்சலில் ஆடி ஆடித் தூங்கும் அமைதியும், கோயிலில் ஆளுயரக் குத்து விளக்கின் ஆடாத அசையாத ஜோதியில் புன்னகை புரியும் அம்பிகையின் சந்நிதியில் நிற்கும் நிம்மதியும் சேர்ந்து கிராம வாசம் தேவகிக்குச் சொர்க்கவாசமாக இருந் தது. மாலை வேளைகளில் அவளைப் பார்த்துப் பேச வரும் கிராமப் பெண்கள் அவள் சென்னை யில் உத்தியோகம் பார்க்கிருள் என்பதினால் அவளை ஏதோ ஒரு பெரிய அந்தஸ்துக்கு உயர்த்தி வைத்து 'ஆ'வென்று வாய் திறந்து நின்றபடி அவளது ஒரு சொல்லுக்குக் காத் திருந்தார்கள்.

ஒரு மாதம் ஓடி ஒளிந்தது.

மீண்டும் சென்னைக்குத் திரும்பியதும் பழைய ஆபீஸ் வாழ்க்கை முறைகூட ஒரு மாத மாறுதலினால் சற்றுப் புதுமையாகவே இருந்தது.

நான்கைந்து நாட்கள் கழித்து ஒரு நாள் சாயங்காலம் தேவகி வீட்டுக்குத் திரும்பி வந்து அம்மா கொடுத்த டிபனைச் சாப் பிட்டு விட்டு மொட்டை மாடிக்குப் போய் 'அப்பாடா' என்று உட்கார்ந்தாள். சிறிது நேரம் கழித்து மாடிக்கு வந்த ராதாவை அவள் பார்த்தும் களைப்பாலும் அலுப் பாலும் எதுவும் பேசாமல் கையிலிருந்த புத்த கத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப் போது ராதா தன்னையே உற்று நோக்கிக் கொண்டிருப்பதை உணர்ந்து, நிமிர்ந்து பார்த் தவளுக்கு ராதாவின் பார்வை விசித்திரமாக இருந்தது. வெகு நேரம் அவள் பேசவில்லை. கடைசியில் திடுமென்று ராதா கேட்டாள். ''நான் ஊருக்குப் போயிருந்த போது அவர் உன்னைத் தனியாகச் சந்தித்தாரா?''

தேவகிக்கு முதலில் தூக்கிவாரிப் போட் டது. ''யார், ராதா? என்ன இது?'' என்று வியப்புடன் கேட்டாள்.

''யார் என்று உனக்குத் தெரியாதா? இந்தா!'' என்று சொல்லி ஒரு கல்யாணப் பத்திரிகையைத் தேவகியிடம் எடுத்துக் கொடுத்தாள் அவள்.

''யாருடைய பத்திரிகை இது?'' என்று சொல்லிக் கொண்டே அதைப் பிரித்த தேவகி, மணமகன் பெயரைப் பார்த்து விட்டு ராதாவை நிமிர்ந்து நோக்கினாள். அந்தக் கணத்தில் அவள் கண்களில் தோன்றிய உணர்ச்சி ஆத்திரமா, கோபமா என்று சொல்ல முடியவில்லை.

மௌனமாக நின்ற தேவகியிடம், ராதாவே மீண்டும் கேட்டாள். ''அவர் உன்னைச் சந்தித்தாரா—?''

தேவகிக்கு இப்போது தன் தங்கையே தன்னைக் குறுக்கு விசாரணை செய்வதைப் பார்த்து எரிச்சல் வந்தது. ''உம்'' என்றாள்.

''நீ அவரை எங்கே பார்த்தாய்? என்ன சொன்னாய்?''

''நான் அவரைப் பார்க்க வில்லை. காறித் துப்பினேன். ராதா, உன்னிடம் நான் பேசத் தயாராக இல்லை. உனக்கு அவரைப் பிடித்திருந்தது என்றால் அவருடன் கண்ட படி காரில் சுற்றலாம் என்று எண்ணிக் கொள்ளாதே! நம் குடும்பம் அவ்வளவு கேவலமான குடும்பம் இல்லை. தெரிந்ததா?''

''தேவகி—''

''முதலில் நான். பிறகு நீ; நீ ஊரில் இல்லா விட்டால் மறுபடியும் நான். இரண்டு பேருமே கிடைக்கா விட்டால் வேறு எவளோ ஒருத்தி! இப்பொழுது கேட்கிறேன். எனக்கு எல்லாம் தெரியும். முன்பின் தெரியாத ஆண் பிள்ளை ஒருவனுடன் ஒரே டாக்ஸியில் போக உனக்கு அவமானமாக இல்லை? அவனைத் தனியாகப் பார்க்கில் சந்தித்துப் பேசும்போது உன் மனசும் உடம்பும் துடிக்க வில்லை?''

''தேவகி—''

''போதும் ராதா! இதைப் பற்றி இன்ன மும் உன்னுடன் நான் பேசத் தயாராக இல்லை. ஒரு வழியாகக் கல்யாணம் என்று ஆகி அவன் ஒழிந்தான். இதோ பார் ராதா. ஏதோ இல்லாத கொடுமை என்ற ஒன்று நம்மையெல்லாம் வேலையை நம்பி வீட்டை விட்டு வெளியே போகச் செய்திருக்கிறது. என்னையும் அம்மாவையும் தலை குனியச் செய்து விடாதே ராதா....''

இருவருமே கண்களில் கண்ணீர் தளும்பச் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தனர். ராதா தான் மறுபடியும் ஆரம்பித்தாள். ''நீ ஒன்றையுமே புரிந்து கொள்ள வில்லை, தேவகி. நான் அவருடன் டாக்ஸியில் போவதையும் பார்க்கில் பேசுவதையும் எங்கேயோ நின்று பார்த்து விட்டுத் தவறாக நினைத்து விட்டாய். ஆனால் உண்மையில் நடந்தது என்ன என்று தெரியுமா?''

''..............''

''நான் எதற்காக அவருடன் சுற்றி னேன் தெரியுமா? என் ஆபீஸிலேயே பலர் என்னைப் பற்றி இழிவாகப் பேசுவது தெரிந் தும் நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன் தெரியுமா? உனக்காக. ஆம், உனக்காக.''

''................''

''ஆமாம், தேவகி! அவர் உன்னை வந்து பார்த்து விட்டுப் போனதற்குச் சில நாட் களுக்குப் பிறகு ஒரு நாள் [illegible]

பீச் ஸ்டேஷனில் அவர் என்னைப் பார்த்தார். அவருடைய நிலையை விளக்கிச் சொன்ஞர். அப்புறம் என்ன சொன்ஞர் தெரியுமா? 'உன் அக்காவை எனக்குப் பிடிக்கவில்லை என்று நான் சொல்ல வில்லை. ஆனுலும் உன் தைரியமும் பேச்சும் எனக்கும் அம்மாவுக்கும் பிடித்திருக்கின்றன. நீ என்ன சொல்கிருய்?' என்று கேட்டார். 'அக்காவுக்குக் கல்யாணம் ஆகாமல் என் கல்யாணத்தைப் பற்றி எப்படி யோசிக்க முடியும்?' என்றேன். அதற்கு அவர் 'நான் காத்திருக்கிறேன்' என்ருர். 'காத்திருந்து பிரயோசனம் இல்லை. தேவகியிடம் என்ன குறை? என்னைப் பற்றிக் கல்யாணம் என்ற நினைவில் நான் யோசிக்கவே முடியாது என்று சொன்னேன். கடைசியில் அவர் உன்னையே கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதித்தார். அவர் மறுபடியும் நம் அப்பாவைப் பார்த்து, விட்ட பேச்சைத் தொடர்வதற்கு முன்ஞல் உன்னையும் ஒரு தடவை தனியாகப் பார்த்து உன் சம்மதத்தை உன் வாயாலேயே கேட்டுத் தெரிந்து கொள்ள நினைத்தார். நான் ஊருக்குக் கிளம்பினேனே, அன்றுதான் அவரைப் பார்க்கில் சந்தித்து உன்னைச் சந்திக்கவும் ஏற்பாடு செய்வதாக வாக்குக் கொடுத்துவிட்டு வந்தேன். ஆனல் நீயும் அம்மாவுமோ, நான் வீட்டுக்கு வந்ததும் வராததுமாக உடனேயே மூட்டை கட்டி என்னை ஊருக்கு அனுப்பி விட்டீர்கள். எழும்பூர் ஸ்டேஷனிலாவது உன்னிடம் முழுதும் சொல்லி உன்னைத் தயார்ப்படுத்தி வைக்க வேண்டும் என்று நினைத்தேன்......''

''ராதா.....!'' என்ற ஒரு சொல்லைத் தவிர தேவகியினிடமிருந்து வேறு வார்த்தையே வரவில்லை.

ராதா பத்திரிகையுடன் வந்த கடிதத்தையும் தேவகியிடம் கொடுத்தாள்:

''கல்யாணப் பத்திரிகையை அனுப்பாமல் இருக்கமுடியவில்லை. இரண்டு தடவை நம்பிக்கைவைத்து இரண்டுதடவையும் தோல்வி அடைந்து விட்டேன். பார்த்தால் பசுவாக இருக்கும் உன் சகோதரி பாய்ந்தால் புலியாக இருப்பாள் என்று எனக்குத் தெரியவே இல்லை. அன்றைக்குப் பார்க்கில் அவள் கத்தின கத்தலில் எட்டி நின்றவர்கள்கூட வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். எப்படியோ ஆரம்பித்து எப்படியோ முடிந்து விட்டது. பெண்கள் வேலைக்குப் போவது என்பது என்னதான் அவசியத் தேவை என்ருலும் அது எப்படி இயற்கைக்கு விரோதமோ, அப்படித்தான் அவர்களைத் தனியாகச் சந்தித்து அவர்கள் மனநிலையை அறிந்து கொள்வதும், இயற்கைக்கு விரோதமாகி விட்டது. எப்படியிருந்தாலும் பத்திரிகையை உங்களுக்கு அனுப்பி இறைவன் அருள் உங்கள் இருவருக்கும் கிடைக்க வேண்டும் என்று என்ஞல் பிரார்த்திக்காமல் இருக்க முடியவில்லை. ஏனென்ருல், நான் மேற்கொண்ட முயற்சி இயற்கைக்கு மாறுபட்டதாஞலும் நான் நேர்மைக்கு மாருனவன் என்று என்னைப் பற்றி நானே நினைத்துக் கொள்ள முடியவில்லை.

—ராகவன்''

திருமணம் என்ற நிகழ்ச்சி எவ்வளவுதான் படிப்பு, வேலை என்ற மாற்று உணர்ச்சிகளிஞல் மங்கிப் போனது போல் காட்சியளித்தாலும் அது தாஞகவே நெருங்கி வந்து, கைக்குள்ளேயே சிக்கியும் எப்படியோ தப்பி, எங்கோ நழுவிவிட்டதைக் கண் முன்ஞலேயே கண்ட அந்த இரு கன்னியரும் மொட்டை மாடியின் குளிர்ந்த காற்றில் உஷ்ணப் பெருமூச்சுகளாக விட்டு விட்டுத் தங்கள் உள்ளச் சுமையைக் குறைக்க முயன்று கொண்டிருந்தனர்.

தங்களுக்குச் சொந்தமான ஒரு மாந்தோப்பை யாருக்குக் குத்தகை விடுவது என்பது பற்றிய சர்ச்சையில் ஒரு நாள் நாலு சகோதரர்கள் இறங்கிஞர்கள். அந்தச் சர்ச்சை சிறிது நேரத்துக்கெல்லாம் சண்டையாக மாறி, கடைசியில் ஒருவரையொருவர் அடித்துக் கொள்வதில் வந்து நின்றது.

ஒரு மரத்தின் கிளையில் உட்கார்ந்தபடி அந்தச் சண்டையை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு கிளி, ''மாமரமே, மாமரமே! இந்த வேடிக்கையைப் பார்த்தாயா?'' என்றது.

''எந்த வேடிக்கையை?'' என்று கேட்டது மாமரம்.

''கீழே நடக்கும் வேடிக்கையைத் தான்!''

''ஓ! அதுவா? அது எப்போதும் நடப்பதுதானே? அதில் என்ன வேடிக்கை இருக்கிறது?'' என்றது மாமரம்.

''ஏன் இல்லை? உங்களில் ஒரு மரத்துக் காய் புளித்தால் எல்லாக் காய்களுமே புளிக்கின்றன; இன்னெரு மரத்துக் காய் இனித்தால் எல்லாக் காய்களுமே இனிக்கின்றன. அதே மாதிரி ஒரு தாய் வயிற்று மக்களான இவர்களும் ஏன் ஒரே குணத்துடன் இருக்கக் கூடாதாம்?'' என்று கேட்டது கிளி.


மாமரம் சொல்லிற்று:

''அப்படி இருந்தால் மரத்துக்கும் மனிதர்களுக்கும் இடையில் என்ன வித்தியாசமாம்?''



குண பேதம் !

— விந்தன்



பாஷாங்க ராகம்

தி. ஜானகிராமன்

அம்மா இப்போது சாதாரண மனுஷியாகி விட்டாள். இதுவரை பார்யா தர்மம், ஸ்திரீ தர்மம், இல்லாள் கடமை என்று புத்தகங்களில் எழுதியிருக்கும் பெண்மணிமாதிரி இருந்தாள். இப்போது திடீரென்று நினைத்துக் கொண்டு சாதாரண மனுஷியாகி விட்டாள்.

சிறப்புச் சிறுகதை

"...என் தாயாருக்கு நீங்கள் அனுப்பிய அனுதாபச் செய்தி கிடைத்தது. 'நிறைந்த சங்கீத அறிவுடன், ரசிக சிரோமணியாகத் திகழ்ந்தார் தங்கள் கணவர் ஸ்ரீ பலராமன். பயமின்றியும், பாரபட்சமின்றியும் அவர் சங்கீத விமர்சனம் செய்து வந்ததே, சங்கீதமே மூச்சாக அவர் வாழ்ந்த லட்சிய நோக்குக்குச் சான்றாகும். அவர் மறைவைச் செவியுற்று இசையுலகம் துயரில் ஆழ்ந்து கிடக்கிறது. அன்புக் கணவரைப் பிரிந்து துயரெனும் இருளில் தவிக்கும் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் தன் ஆழ்ந்த அனுதாபத்தை எங்கள் பிருங்கி சங்கீத சபை தெரிவித்துக் கொள்கிறது' என்று எழுதியிருக்கிறீர்கள்.

அம்மா அதைப் படித்து விட்டுச் சிறிது நேரம் எங்கோ பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். "நன்றி, என்று ஒரு வார்த்தை பதில் எழுதிப் போட்டு விடட்டுமா?" என்று கேட்டேன். "இத்தனை தப்பு இருக்கிற கடுதாசுக்கு விவரமாகத்தான் எழுதிப் போடேன்" என்று சொல்லிப் போய்விட்டாள். போகுமுன் வாசல் படியில் நின்று, "இந்தக் கடுதாசு உனக்குச் சரியாகப்படறதா?" என்று கேட்டாள்.

மறுபடியும் படித்து, ஒவ்வொரு வார்த்தையாக எடை போட்டுப் பார்த்தேன். அநேகமாக எல்லாமே தவறு என்று தோன்றிற்று. அம்மாவிடம் அதைச் சொல்லியும் விட்டேன். "அப்படீன்னா பொய்யைக் கழுத்தை முறிச்சுப் போடு" என்று சொல்லிவிட்டு வாசற்படி இறங்கிப்போனாள்.

மறுபடியும் உங்கள் கடிதத்தைப் படித்தேன். அப்பாவின் கெட்டிக்காரத்தனத்தை நினைத்துச் சிரிப்பு வந்தது. முரட்டு ரசிகர்களான பிருங்கி சபையார் கண்ணில் மண்ணைப் போட்டு விட்டாரே என்று தோன்றிற்று. அப்பா ரசிகரும் இல்லை. சிரோமணியுமில்லை. பயந்து பயந்து தான் பொழுதைப் போக்கினார் அவர். அவருடைய லட்சியம் சங்கீதமல்ல. பக்ஷயம்தான். காலட்சேப பாகவதர்கள் அடுக்குகிற அறுபது சுவை ஸ்வரங்களுக்குச் சுத்தம், சாதாரணம், அந்தரம், சதுச்ருதி, த்ரிச்ருதி, ஷட்ச்ருதி, கோமளம், தீவிரம் என்றெல்லாம் அடைமொழிகளுடன் வேறுபாடுகள் இருப்பது போல், (ஒவ்வொரு சுவைக்கும் பன்னிரண்டு வகைகள் உண்டு என்று அவர் கட்சி) உண்டி வகைகளை உண்பதுதான் அவருடைய பரம புருஷார்த்தம். அம்மாவுக்கும் அவருக்கும் இடையே எந்தவித அன்பும் மலர்ந்திருந்ததாகத் தெரியவில்லை. இருந்தால் மொட்டிலேயே கருகியிருக்க வேண்டும். துயரெனும் இருளில் அம்மாவோ நாங்களோ தட்டித் தடவி நடக்கவில்லை. நான் மனையியலையும் சங்கீதத்தையும் விசேஷ பாடமாக எடுத்துக் கொண்டு ஆனர்ஸ் படித்துக் கொண்டிருக்கிறேன். என் தம்பி கெமிஸ்டாக ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறான். நானும் அவனும் வில்லி பார்லாவில் குடியிருக்கிறோம். அம்மா — கோரேகானில் அன்புக் கணவரோடு — இந்த நாள் கணவரோடு — சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். அப்பாவின் மனைவியாக இல்லை. போலீஸ்காரர்கள் வந்து அவரைப் பைத்திய ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போய்ச் சேர்த்த பிறகுதான் அம்மாவுக்கு ஆறுதல் கிடைத்தது; அன்பும் கிடைத்தது. மூன்று வருஷங்கள் கழித்துச் சட்டப்படி விவாக ரத்து செய்து கொண்டு வேறு கலியாணம் செய்து கொண்டு விட்டாள்.

மாதா பிதா பாவம் மக்கள் தலையிலே என்பார்கள். அந்தப் பாவத்தை என் அப்பா தம் தலையில் சுமந்து கொண்டு அலைந்தார். கடைசியில் அது அவர் தலைக்குள் இருப்பதையே பாதித்துவிட்டது. அவருடைய பிதா (என் தாத்தா) செய்த பாவம் பிள்ளைக்குச் சங்கீதம் கற்பிக்க முயன்றது. மாதா (என் பாட்டி) செய்த பாவம் அதைத் தடுத்து நிறுத்தாமல் போனது. அதனால் ஒரொரு வேளை அப்பாவை நினைக்கும் போது வருத்தமாயிருக்கும்.



தாத்தாவுக்கு மூன்று பிள்ளைகள். முதல் இரண்டு பிள்ளைகளும் திவ்வியமாகப் பாடுவார்களாம். பள்ளிக் கூடத்துத் தலைமை ஆசிரியராக இருந்த தாத்தா, சங்கீதத்திலும் கரை கண்டவர். கரையைக் கண்டு விட்டாலும் எப்போதும் அதிலேயே நீந்திக்கொண்டிருப்பாராம். பிள்ளைகள் பாடுவதைப் பார்த்து உடம்பே வெடிக்கும்போல் பூரித்துக் கொண்டிருப்பாராம். தக்க வயது வந்ததும் சங்கீத இலக்கண இலக்கியங்களை யெல்லாம் கரைத்துப் புகட்டி விடுவோம் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாராம். ஆனால் அவர் இதயமே வெடிக்கிற சம்பவம் நிகழ்ந்தது. அந்த முதல் இரண்டு பிள்ளைகளும் ஒரு சாதாரண ஆற்றில் நீந்தப் போய், உயிரை ஆற்றிடம் தந்து, உடம்பாக எங்கோ அகப்பட்டார்களாம்.' தாத்தாவுக்குத் துயரம் தாங்கவில்லை. தம் சங்கீத சொத்தை அவர் இனி மேல் யாருக்கு எழுதி வைப்பார்? மூன்றாவது பிள்ளைக்குத்தானே? வேறுவாரிசு ஏது? எனவே, என்னுடைய அப்பாவுக்கு ஏழு வயதிலிருந்தே சங்கீதம் சொல்லிக் கொடுக்கத் தொடங்கினார். வாழ்வின் அநித்தியத்தை எண்ணி, சங்கீத இலக்கண சாஸ்திரங்கள், வரலாற்று நூல்கள் எல்லாவற்றையும் அவசரம் அவசரமாகப் பாடம் சொன்னார். என் அப்பாவுக்குப் பாட்டு வரா விட்டாலும் கடம் நன்றாக வரும். எத்தனை பெரிய புத்தகமானாலும் கடம் போட்டு விடுவார். கேட்ட இடத்தில் தலையில் பிரம்ம தண்டத்தை வைத்தாற் போல் கடகடவென்று ஒப்பிப்பார். பாடத்தான் வரவில்லை. தாத்தா அவரை அடியோ அடி என்று அடித்தார். உள்ளங்கை என்ன, முஷ்டி என்ன, பாக்குவெட்டி என்ன, புத்தகம் என்ன, டம்ளர் என்ன, டபரா என்ன—இப்படிப் பல ஆயுதங்களை அவர் மீது கண்ணை மூடிக் கொண்டு பிரயோகம் செய்வார். இப்படி வெகு காலம் வரையில் இந்த சிட்சை நடந்தது. இதற்கிடையில் என் அப்பாவுக்குக் கல்யாணமும் நடந்தது. ஆனால் இசைப் பயிற்சியும் தொடர்ந்த வண்ணமே யிருந்தது. அதனுடைய பிரிக்க முடியாத அங்கமான வசவுகளும் தொடர்ந்து பொழிந்து கொண்டிருந்தன. எத்தனை பொழிந்தும் விளைச்சலில்லை. கட்டாந்தரையில் சங்கீதம் எப்படி முளைக்கும்? அப்பா சங்கீத சாஸ்திரங்களை நெட்டுருப் போட்டதனைத்தும் பாத்தியில் எருவாகக் குவிந்திருந்தது. ஆனால் பாத்தி கருங்கல். பாட்டு வரவில்லை. தாத்தா அடிக்கடி பெருமூச்சுவிட்டு ஓய ஆரம்பித்தார். ''அட, பாஷாங்க சனியனே!'' என்று அடிக்கடி பிள்ளையை ஒரு புது முறையில் விரக்தியுடன் திட்ட ஆரம்பித்தாராம். ''நீ எங்கேடா இங்கே வந்து பிறந்தே?'' என்று பெருமூச்சு விடுவாராம்.

இதை என் அம்மா கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் சின்னப் பெண். சாந்திக் கல்யாணம் ஆகவில்லை. ஆகாவிட்டாலும் புருஷன் வீட்டுக்குப் பெண்ணை ஒரு மாசம் கொண்டு விடுவதும் அழைத்துப் போவதும் அந்தக் காலத்து வழக்கம். ''பாஷாங்க சனியனே!'' என்றால் என்ன என்று அவளுக்கு அப்பொழுது புரிய வில்லை. பாஷாணம் என்பதை அப்படித் தவறிச் சொல்கிறாரோ என்று தோன்றுமாம். கடைசியில் ஒரு நாள், ''பாஷாங்க ராக்ஷசப் பயலே.... ஒழி' என்று ஆசீர்வாதத்துடன் சங்கீதப் பயிற்சிக்கு மங்களம் பாடி முடித்து விட்டாராம் தாத்தா,

தாத்தா பிறகு அதிக காலம் ஜீவித்திருக்கவில்லை. ஒரு நாள் இகவாழ்வை நீத்தார். நீக்கும் போது அவரால் பாட முடியவில்லை. பிள்ளையைப் பார்த்துக் கண்ணீர் வடித்தாராம்.

அவர் போனதும் என் அப்பா 'கூகூ' என்று பச்சைக் குழந்தை மாதிரி அழுதாராம். தம் தந்தையார் கடைசியில் பார்த்துப் பார்த்துப் பேச முடியாமல் கண்ணீர்விட்டதின் அர்த்தத்தை ஆராய முனைந்தார். கண்டு பிடித்து விட்டார். ''என் கோட்டை யெல்லாம் தகர்ந்து விட்டதே'' என்று தான் அவர் வெம்பியிருக்க வேண்டும் என்று அப்பாவுக்குப் புரிந்து விட்டது. அந்தக் கணமே, இனி வேலைக்குப் போவதில்லை, சங்கீதத்துக்கே உழைப்பது என்று தீர்மானம் செய்து விட்டார்.

சங்கீதத்தைப் பற்றியே பேச ஆரம்பித்தார் என் தந்தை. வீட்டில் பேசுவார். வெளியில் பேசுவார். ஹோட்டலில் பேசுவார், ரயிலடியில் பேசுவார். நண்பர்களோடு பேசுவார். சங்கீதக் கச்சேரிக்கு யாராவது நிர்ப்பந்தமாகக் கூப்பிட்டுப் போனால், வெளியே உட்கார்ந்து சங்கீதத்தைப் பற்றிப் பேசிவிட்டு வந்து விடுவார். அதனால் அவரைப் பார்த்து எல்லோரும் பயப்பட ஆரம்பித்தார்கள். 'வலமோ இடமோ போகட்டும். மேலே விழுந்து பிடுங்காமல் போனால் சரி' என்று

சங்கீத வித்துவான்கள் ஓடி ஒளிந்தார்கள். அதற்காக அவருக்கு நண்பர்களில்லாமல் போய்விடுவார்களா? அவரைப்போலவே நாலு பேர்கள் சேர்ந்து கொண்டார்கள். காசுள்ள ஆசாமி என்றால் விடுவார்களா? அவரோடேயே சாப்பாட்டுக்கும் வந்து விடுவார்கள். இரண்டு கறி, கூட்டுகள், பிட்லை, ஆமவடை பாயஸம் இப்படி அம்மா சாப்பாடு பண்ணிப் போடுவாள். அந்தச் சிரமங்களைக் கூட அவள் சட்டை செய்யவில்லை. கூடத்திலிருந்து வருகிற அப்பா பேசுகிற மாவு மிஷின் குரலையும் நண்பர்களின் குரலையும்தான் அவளால் சகிக்க முடியவில்லை. சில சமயம் குஷி தாங்காமல் அப்பா பாடிக்கூடக் காட்ட ஆரம்பித்து விடுவார். அம்மாவின் முகத்தில் அப்போது ஒரு பேயறைந்த கிலி வந்து படர்வதைப் பார்த்தால் பாவமாக இருக்கும். நண்பர்கள் வந்தாலும் வராவிட்டாலும் அப்பாவுக்கு நாலு கறியில்லாமல் சாப்பிடத் தெரியாது. அப்பளத்தைச் சுட்டால் பிடிக்காது. காலையில் இட்டிலி அல்லது பொங்கல் காப்பி, எட்டு மணிக்கு ஒரு காப்பி, பத்து மணிக்கு இரண்டு பிஸ்கட் காப்பி, பன்னிரண்டு மணிக்குச் சாப்பாடு, இரண்டு மணிக்குக் காப்பி, நான்கு மணிக்கு டிபன் காப்பி, ஆறு மணிக்குக் காப்பி, எட்டு மணிக்குச் சாப்பாடு, பத்து மணிக்கு டீ, பன்னிரண்டு மணிக்கு ஓமப்பொடி, கீமப் பொடியோடு இஞ்சி இடித்த கொத்தமல்லிக் காப்பி. நடுநடுவே ஹோட்டல் டிபன் வேறு. எப்படி இந்த மாதிரி சாப்பிட முடிகிறதென்று அம்மா பயந்து போய் விட்டாள். வர வர அந்தப் பயம் எப்படி இனிமேல் இத்தனையும் பண்ணிப் போடப் போகிறோம் என்ற மலைப்பாக மாறி விட்டது. ஏனென்றால், அப்பாவின் சொத்து எப்பொழுதும் குட்டி போட்டுக் கொண்டேயிருக்கிற பணக்காரச் சொத்து இல்லை. தாத்தாவின் பிராவிடண்ட் பணம், ஊரிலிருந்த வீடு, சாப்பாட்டு நிலம் எல்லாம் இந்தச் சாப்பாட்டிலேயே கரைந்து போய் விட்டன.

இப்போது சங்கீத வித்துவான்களுக்குக் கடிதம் எழுத ஆரம்பித்தார். உங்களைப் போல் பாடுகிறவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம் என்று ஒரு நூறு பேருக்குக் கடுதாசு போட்டு விட்டார். சிலர் நன்றி தெரிவிக்க நேரிலேயே வந்தார்கள். சிலரிடம் இவரே போனார். எதற்கு? கடன் வாங்க. ஓர் இருபது பேரிடம் பலித்தது. ஆனால் அதற்குள் சங்கீதக்காரர்களுக்கு அடிக்கடி கூடிப் பேசுகிற சந்தர்ப்பங்கள் இருப்பதால், ''எனக்கு மட்டும் எழுதியிருக்கிறார்'' என்று அவர்கள் குடுமியில் அப்பா சுற்றியிருந்த பூ வாடி விட்டது. பயந்து கொண்டிருந்தவர்கள் இப்போது சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

நாலு கறி, கூட்டு பச்சடி, ஒரு கறியாகவும் வற்றல் குழம்பாகவும் குறைந்து விட்டன.

''என்னடீ! உங்க அப்பாவாத்துச் சமையல் மாதிரி ஆயிட்டுது!'' என்று ஆரம்பித்தார் அப்பா.

உண்மையில் அம்மா இப்போது அவள் அப்பா அம்மா வீட்டிலிருந்து சாமான் சஜ்ஜாவெல்லாம் வரவழைத்துக் கொண்டிருந்தாள். அதுதான் எத்தனை நாட்கள் நடக்கும்? அவள் அப்பா அம்மா மட்டும் என்ன சிரஞ்சீவிகளா? அவர்களும் போய்ச் சேர்ந்தார்கள். அம்மாவின் அண்ணன் தம்பிகள் சும்மா இருந்தால் அவர்களுடைய மனைவிகள் சும்மா இருப்பார்களோ ?

''உங்க அப்பன் மாதிரின்னு நெனச்சிண்டியோன்னேன்'' என்று அம்மாவைப் பார்த்து அடிக்கடி குத்தி நெருடிக் கொண்டேயிருப்பார் அப்பா.

''உங்கப்பாவுக்கு நானும் அவர் மாதிரி பணம் பணம்னு பறக்காம இருக்கேனேன்னு குறை? பணம்னு சம்பாதிக்காவிட்டாலும் வரவா போறவா குறைச்சல் இல்லை. பத்து பணக்காரனுக்குச் சமமா காய்தா பண்றானே மாப்பிளை, அப்படீன்னு வேறே ஆதங்கம். செத்துப் போகிற வரைக்கும் திரிசமனும் ஜாடையுமா இதைச் சொல்லிக் காமிச்சிண்டேயிருந்தார். இப்பதான் அவர் ஆத்மா சாந்தியடைஞ்சிருக்கும். இப்ப நிஜமாவே நான் இல்லாமல் கஷ்டப்படறேனோல்லியோ?'' என்றார் அப்பா ஒரு நாள். அதைக் கேட்டு அம்மா பிழிந்து பிழிந்து அழுதாள். வெகு நாட்கள் பொறுத்துக் கொண்டேயிருந்தாள். கடைசியில் ஒரு நாள் திடீரென்று ஆவேசம் வந்தாற்போல் ஒரு கூச்சல் போட்டாளே பார்ப்போம். ''போரும், அப்பாவைப் பத்தி இனிமே பேச வாண்டாம்!'' என்று பீறின அந்தக் கூச்சல் ஏழு வீட்டுக்குக் கேட்டது. அப்பா அப்படியே வெல வெலவென்று தொய்ந்து போனார். சற்று நேரம் பேசாமல் நின்றார். பிறகு வாசல் பக்கம் போய்விட்டார் அவர்.

அம்மா இப்போது சாதாரண மனுஷியாகி விட்டாள். இதுவரை பார்யா தர்மம், ஸ்திரீ தர்மம், இல்லாள் கடமை என்று புத்தகங்களில் எழுதியிருக்கும் பெண்மணி மாதிரி இருந்தாள். இப்போது திடீரென்று நினைத்துக் கொண்டு சாதாரண மனுஷியாகி விட்டாள்.

அப்போதுதான் விஜயராகவன் அப்பாவுக்குச் சிநேகிதம் ஆனார். அப்பா மாதிரி அவர் அழுக்காக இருக்க மாட்டார். அழுக்கு வேட்டி கட்ட மாட்டார். சுருக்கு சுருக்கென்று பேச மாட்டார். சும்மாச் சும்மா தின்று கொண்டேயிருக்க மாட்டார். இருந்தாலும் அப்பாவோடு சிநேகிதமாயிருந்தார். அவர் ஒரு நாளைக்குக் கூடத்தில் அப்பாவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''நீங்க எத்தனை நாட்கள் சார், இப்படியே இருக்கப் போறேள்? ஏதாவது சம்பாதிக்க வழி பண்ணிக்க வேண்டாமா?''

''எனக்கு என்னய்யா, இப்ப குறை ? நான் சந்தோஷமாகத்தான் இருக்கேன்.''

''சம்பாத்தியம்......?''

''அதுதானே? நான் உண்மைக்காகப் பாடுபடறேன். இந்த மாதிரி மனுஷாள்ளாம் பட்டினி கிடந்துதான் செத்துப் போயிருக்கா. கலையோட சரித்திரத்தை எடுத்துப் பார்த்தீர்னா தெரியும்.''

''கலியாணத்தைப் பண்ணிண்டு, ஒரு குடும்பத்தை உண்டாக்கிப்பிட்டு -- ''

''அதுக்கு நான் என்ன பண்ணுவேன்! அவாளுக்கு இதையெல்லாம் தாங்கிக்கி பலமில்லேன்னு நான் என்ன செய்ய றது?''

''நீ வாழ்ந்தே'' என்றாள் உள்ளே காப்பி போட்டுக் கொண்டிருந்த அம்மா. இருபது பலம் காப்பிப் பொடியை அன்று காலையில் தான் விஜயராகவன் கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போனார்.

''கடனுக்கு லாயர் நோட்டீஸ் நாலஞ்சு போர்கிட்டேயிருந்து வந்துட்டுதே.''

''வரட்டுமே. இருந்தால்தானே கொடுப் பேன்....''

''கடனைத் திருப்பிக் கொடுக்க முயற்சி பண்ண வாண்டாமா ?''

''திருப்பித் தரும் யோசனையோடு நான் வாங்கலியே, விஜயராகவன், பணம் வாங் கினால் திருப்பிக் கொடுத்துடணும் என்கிற நேர்மை எல்லாம் பாமர மனுஷாளுக்கு ஏற்பட்ட சட்டமில்லையோ?''

''உவா'' என்று உள்ளே குமட்டினாள் அம்மா.

''பெரிய கலைஞர்கள், மேதாவிகள் எல்லாம் தான் இதெல்லாம் பார்க்க மாட்டார்கள் என்று சொல்லுகிற வழக்கம்...''

''அப்படி இங்கே ஒண்ணும் இல்லேன்னு சொல்றீமாக்கும்! நீ ஒப்புக்காட்டா என் னய்யா? நான் கலைஞன் இல்லேன்னு ஆயிடுமா ?'' என்றார் அப்பா.

''இதைக் கொண்டு மாமாகிட்ட கொடுத் துட்டு வா'' என்று காப்பியைக் கொடுத் தாள் அம்மா. கொடுத்துவிட்டு வந்தேன். பிறகு அப்பாவுக்கும் காப்பி கொடுத்தாள். அதையும் கொடுத்துவிட்டு வந்தேன்.

''ஐயோ, ரதீ! சர்க்கரையே போடலியே!'' என்று அப்பாவின் குரல் கத்திற்று.

சர்க்கரை டப்பாவை எடுத்ததும், ''வைடீ, கீழே!'' என்று உருட்டி விழித் தாள் அம்மா. உடனே கூடத்து நிலையண்டை போய் நின்று கொண்டாள். ''கலைஞருக்குச் சர்க்கரை என்னத்துக்கு?'' என்று ஒரு சிரிப்புச் சிரித்தாள். இதைச் சொல்லச் சிரிப்பா னேன் என்று குழம்பின எனக்கு அந்தச் சிரிப்பைக் கேட்டு நடுநிசியில் இருட்டின நிசப் தத்தில் ஏதோ உறுமலைக் கேட்பது போல் இருந்தது. அம்மா உள்ளே போய்விட்டாள்.

ஒரு நாளைக்கு நான் சமையல் அறைக்கு அப்பால் உள்ள திறப்பில் உட்கார்ந்து பாடம் படித்துக் கொண்டிருந்தேன். விஜயராகவ மாமாவோடு அம்மா கூடத்தில் பேசிக்கொண் டிருந்தாள். அரை மணி கழித்து அப்பாவின் குரல் கேட்டது. அம்மா உள்ளே வந்தாள்.

''கழுகுக்கு மூக்கிலே வேர்க்கிறுப்பல இருக்கே இது?'' என்று அப்பாவின் குரல் கேட்டது.

''என்ன?'' — விஜயராகவ மாமாவின் குரல்.

'' நான் இல்லாத சமயம் பார்த்தே வறீமேன்னேன் ?''

''வந்தா என்ன?''

''வந்தா என்னவா!.... கெட் ஔட்.''— அப்பாவின் குரல். அம்மா நிலையண்டை



விரைந்தாள். நானும் போய் நின்றேன். விஜயராகவ மாமா நாற்காலியை விட்டு எழுந்திருக்க வில்லை. அப்பாவையே அசை யாமல் பார்த்துக் கொண்டிருந்தார். மர வட்டையையோ, எட்டுக்கால் பூச்சியையோ பார்க்கிற மாதிரி இருந்தது. அப்பா அம்மா வைப் பார்த்தார். விறுவிறு வென்று செருப் பைக்கூட மாட்டிக் கொள்ளாமல் வாசலில் இறங்கிப் போய் விட்டார். விஜயராகவ மாமா படத்தில் எழுதின சமுத்திர அலை மாதிரி உட்கார்ந்திருந்தார். ஐந்து நிமிஷங்கள் கழித்துச் சமுத்திர அலை அசைந்தது. எழுந்து வெளியே போய் விட்டது.

ஆறு மணிக்கு அப்பா வந்தார். சமையல் அறைக்கு வந்தார்.

''ஓகோ — நான் வருவேன்னு தெரிஞ்சு போயிட்டுதாக்கும்?'' என்று பொதுவாகச் சுவரைப் பார்த்துக் கொண்டு சொன்னார்.

''இந்தக் கிறுதக்குப் பேச்செல்லாம் வாண்டாம். இன்னிக்கு ரண்டிலே ஒண்ணு தீரணும்'' என்றாள் அம்மா.

''அப்படியா?.... என்னத்துக்கு விஜய ராகவன் வெறுமனே நான் இல்லாதபோது வர்றான் ?''

''என்னத்துக்கா? சொல்லட்டுமா ?''— என்று ஒரே ஒரு வாய்க்கடையால் சிரித்தாள் அம்மா.

''பயமுறுத்தறியே.''

''அது உங்க வேலைன்னு. நான் பாடகன் இல்லை, உங்களைக் கண்டு பயப்படறதுக்கு. நீங்கதான் இப்ப பயப்படப் போறேள்.''

''சும்மா மிரட்டாதே. அவன் எதுக்கு வரான் அதைச் சொல்லு, கிடக்கட்டும்.''

''பாஷாங்க ராகத்துக்கு வேற ஸ்வரம் எதுக்கு வரும்?''

''—''

''எதுக்கு வரும்னு கேட்டால் சொல்லுங்க ளேன்.''

அப்பா நிமிர்ந்து ஒரு நிமிஷம் பார்த்தார். பார்த்துக் கொண்டேயிருந்தார்.



சந்துருவுக்கு ஒரு வழி

பி.எஸ். ராமையா

'உனக்கு அவரை நன்றாகத் தெரியுமாமே, அண்ணா ! அவரிடம் சொல்லிச் சந்துருவுக்கு ஒரு வழி செய்யக் கூடாதா நீ?'' என்று கனிவுடன் கேட்டாள் என் உடன் பிறந்தாள்.

சந்துருவும் ''நீங்கள் சொன்னால் நிச்சயமாக நடந்து விடும், மாமா. அவருக்கு உங்களிடம் அவ்வளவு மதிப்பு. அவருடைய மகன் கோபுவே சொல்லியிருக்கிறான்'' என்றான். அவன் தொடர்ந்து, ''புதிதாகத் தொடங்கியிருக்கும் ஒரு கம்பெனியிலும் அவர் ஒரு டைரக்டர். அந்தக் கம்பெனிக்கு இப்போது தான் ஆள் சேர்க்கிறார்கள். அவர் ஒரு வார்த்தை சொன்னால் உடனே வேலையாகி விடும்'' என்றான்.

திரு ஜகந்நாதனை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் என்னிடம் பழகும் முறையைக் கண்டு நானே கூச்சப்பட்டிருக்கிறேன். என்னை யாரோ ஓர் உயர்ந்த பிறவியாகக் கருதுவது போலப் பேசுவார், நடந்து கொள்வார். ஆனால் அவர் வைத்திருக்கும் அந்த மதிப்பில் அவரிடம் போய் என் மருமகனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடு என்று கேட்பதற்கு இடமுண்டா என்றுதான் தயங்கினேன்.

ஜயத்தின் குடும்ப நிலைமை மனத்தைக் கலக்குவதாக இருந்தது. அவளுடைய கணவர் காலமான போது, ''சந்துரு பி. எஸ்ஸி. படிக்கிறான். இன்னும் ஒரு வருஷத்தில் முடித்து விடுவான். அவன் மாதம் இருநூறு ரூபாய் சம்பாதிக்காமலா இருந்து விடுவான் ? அவள் காலம் நிம்மதியாக ஓடிவிடும்'' என்றுதான் கருதினேன்.

ஆனால் மகாதேவன் காலமாகிப் பதினைந்து நாட்களானவுடன் அவருக்கு நிறையக் கடன் தான் இருக்கிறது, பையன் படிப்பைக்கூட முடிக்க இயலாது என்று அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். என் சொந்தக் குடும்பச் சுமையுடன் அந்தக் குடும்பத்தின் சுமையையும் நானே ஏற்றுக் கொண்டேன். சந்துரு பி. எஸ்ஸி.யை முடித்து வர வழி செய்தேன்.

அவன் படிப்பை முடித்து மூன்று ஆண்டுகளாகி விட்டன. இன்னும் அவனுக்கு ஒரு வேலை குதிர்ந்து வரமாட்டேன் என்கிறது. இடையில் இரண்டு தடவைகள் ஏதோ வேலைகளில் சேர்ந்தான். இரண்டும், 'டெம்ப்ரரி'. நூறோ இருநூறோ பணத்துடன் வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

அவனுக்கு நிலையான வேலை ஏதாவது கிடைத்தால் என் உடன்பிறந்தாள் நிலைமை திருந்திவிடும் என்பதைவிட என்னை அழுத்திக் கொண்டிருந்த பெரும் பளுவில் பாதி இறங்கி விடுமே என்ற எண்ணம்தான் என்னைத் திரு ஜகந்நாதனிடம் போய்க் கேட்டு விடுவது என்ற முடிவுக்குக் கொண்டு வந்தது.

சந்துருவையும் அழைத்துக் கொண்டு போனேன். போகும் வழியில் அவன், ''கோபு என்னுடன் கல்லூரியில் படித்த போது அவனுடைய தந்தைக்கு என் அப்பாவைப் பற்றித் தெரியும் என்று சொல்லி யிருக்கிறான். ஆனால் எப்படி என்ற விவரம் அவனுக்குத் தெரியவில்லை. ஏதோ பேச்சில் என்னைப் பற்றிச் சொன்னபோது அவர், 'யார் அவன் சந்துரு?' என்று கேட்டாராம். அவன் அப்பா பேரைச் சொல்லி 'அவருடைய மகன்' என்றானாம். அவர் 'எந்த மகாதேவன்? சங்கிலிபுரம் மகாதேவனா?' என்று கேட்டாராம். அவன் ஆம் என்றவுடன், அவர் 'மகாதேவனுக்குக் கல்லூரியில் படிக்கும் மகன் இருக்கிறானா?' என்று கேட்டாராம். இப்போது நீங்களும் சொன்னால் அவர் கட்டாயம் உதவி செய்வார் என்றுதான் படுகிறது'' என்றான்.

நாங்கள் போனபோது திரு ஜகந்நாதன் பங்களாவில்தான் இருந்தார். பெரிய பங்களா. முன்னால் விசாலமான தோட்டம். நவீன பாணியில் பல நிற சிமிட்டிகளைக் கொண்டு ஆக்கப்பட்ட கட்டிடம்.

முன் வாயில் தாழ்வாரத்தை அடைந்தவுடன் என்னை நன்றாக அறிந்திருந்த அவருடைய காரியதரிசி ராமதாஸ் மலர்ந்த முகத்துடன் வந்து, ''வாருங்கள். இருக்கிறார். வெளியே புறப்பட இன்னும் அரை மணி நேரமாவது ஆகும். நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று சொல்லுகிறேன்'' என்று பேசிக் கொண்டே வந்தவன் என்னுடன்

சிறப்புச் சிறுகதை

திரு ஜகந்நாதனை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் என்னிடம் பழகும் முறையைக் கண்டு நானே கூச்சப்படுகிறேன். என்னை யாரோ ஓர் உயர்ந்த பிறவியாகக் கருதுவது போலப் பேசுவார், நடந்து கொள்வார்.......

இப்போது நான்தான் அவரை ஓர் உயர்ந்த பிறவி, எனக்குக் கிடைக்க முடியாத நட்பு என்று கருதி அவருடன் பழகுகிறேன்,

இருந்து சந்துருவைப் பார்த்த வுடன், ''என்ன விஷயமாகப் பார்க்க வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால் நல்லது'' என்றான். அவன் முகமலர்ச்சியும் மாறி விட்டது.

''இது என் உடன் பிறந்தாள் மகன் சந்திரமௌலி. அவரைப் பார்க்க வந்திருக்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள்'' என்றேன் நான்.

ராமதாஸ் எங்களை முன் தாழ்வாரத்திலேயே உட்கார்ந் திருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனான். நான் சந்துருவிடம், ''ராமதாஸுக்கு உன்னைத் தெரி யுமா?'' என்று கேட்டேன். அவன் தெரிந்திருக்க இடமே இல்லை என்றான்.

இரண்டு நிமிஷங்களில் திரும்பி வந்து ராமதாஸ் ''வாருங்கள்'' என்று எங்களை மாடிக்கு அழைத் துக் கொண்டு போனான்.

நான் அந்தப் பங்களாவுக்கு எத் தனையோ தடவை போயிருக்கி றேன். ஆனால் அதற்கு முன் ஒரு தடவைகூட அங்கே பளிச்சிட்டுக் கொண்டிருந்த செல்வச் செழிப்பு என் மனத்தில் பதியவேயில்லை.

திரு ஜகந்நாதன் தொழில் வர்த்தகத் துறையில் மிக மிக உயர்ந்த எல்லையை எட்டிப் பிடித்திருப்பவர் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். எட்டுக் கம்பெனிகளில் அவர் டைரக்டர். இரண்டில் டைரக்டர் போர்டின் தலைவரும்கூட. ஒரு தடவை என்னிடம் பேசிக் கொண்டிருந்த போது அவர் லட்சக் கணக்கில் வருமான வரி கட்ட வேண்டியிருந்ததைப் பற்றியும் பேசியிருக்கிறார்.


அன்று சந்துரு என் உடன் இருந்ததனாலோ, அல்லது அவனுக்கும் அவன் தாய்க்கும் தேவையான மாதம் இரண்டு அல்லது மூன்று நூறு ரூபாய்களைப் படியளப்பது திரு ஜகந்நாதனுக்கு ஒரு பெரிய பாரமாக இருக்குமா என்ற எண்ண ஓட்டத்தின் பயனாகவோ அவருடைய இல்லத்தில் தாண்டவமாடிய செல்வத்தின் ஒளி என் கண்ணைக் கூச வைத்தது.

திரு ஜகந்நாதன் வழக்கம் போல் ரொம்ப மரியாதை யுடனும் மகிழ்ச்சியுடனும் என்னை வரவேற்று, ''ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்னால் வந்திருக்கக் கூடாதா? இருவரும் சேர்ந்து பலகாரம் சாப்பிட்டிருக்கலாமே. முதலில் அந்த வேலை முடியட்டும். உட்காருங்கள்'' என்று உபசரித்தார்.

நாங்கள் உள்ளே நுழைந்தபோது அவருடைய பார்வை சந்துருவின் புறம் ஒருமுறை ஓடித் திரும் பியது. அதன் பிறகு நாங்கள் காப்பியை முடிக்கும் வரையில் அவர் அவன் பக்கம் பார்க்கவேயில்லை.

அந்த உபசரிப்பு நிறைவேறியவுடன் அவர் சந்துருவை இரண்டாவது முறையாகப் பார்த்துவிட்டு என்னிடம், ''இந்த நேரத்தில் நீங்கள் இங்கே வந்தது இதுதான் முதல் தடவை. சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

நான் திடுக்கிட்டு விட்டேன். நான் அவரிடம் உதவி கோரி, தயவை நாடித்தான் வந்திருக்கிறேன் என்பதை அவர் எப்படிக் கண்டுகொண்டிருப்பார்! அவசரமாகச் சந்துருவைப் பார்த்தேன். அவன் தோற்றத்திலும் உடையிலும் அவர் அப்படி ஊகிக்கும்படி ஏதும் தெரிய வில்லை என் கண்களுக்கு. ஒருவேளை அவன் யார் என்பது



அவருக்குத் தெரிந்திருக்கலாம்... அதனால் சந்துரு அவரை அதற்கு முன்னால் நேருக்கு நேர் பார்த்ததில்லை; 'அறிமுகம் கிடையாது என்று சொல்லி யிருக்கிறான்.

சந்துருவை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தேன். ''இவன் என் உடன்பிறந்தாள் மகன் சந்திரமௌலி. இவன் தந்தையை உங்களுக்குத் தெரியுமென்று தோன்றுகிறது. சங்கிலிபுரம் மகாதேவன். அவர் காலமாகி நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. இவன் பி. எஸ்ஸி. தேறியிருக்கிறான். இவனைப் பற்றித்தான் வந்திருக்கிறேன்'' என்றேன்.

ஜகந்நாதன் சந்துருவிடம், ''அவருக்கு எத்தனை குழந்தைகள்? நீதான் மூத்தவனா?'' என்று நேரடியாகக் கேட்டார்.

சந்துரு, ''ஆமாம். ஒரு தங்கை இருக்கிறாள். அப்பாவே அவளுக்குக் கலியாணம் செய்து வைத்து விட்டார். அவள் கணவருடன் நாகபுரியில் இருக்கிறாள்'' என்றான்.

ஜகந்நாதன் என்னிடம், ''எனக்கு மகாதேவனை ரொம்ப நன்றாகத் தெரியும். அவன் இந்த ஊரிலேயேதான் இருக்கிறான் என்பதும் தெரியும். நானாகவே அவனைப் போய்ப் பார்க்க வேண்டும் என்றுகூட இரண்டொரு தடவை நினைத்ததுண்டு. எப்படியோ அந்த நினைப்பு செயலாகவில்லை'' என்றார்.

அவர் பேசிக் கொண்டிருந்தபோது அவருடைய மனைவி பாக்கியலட்சுமி உள்ளே வந்தாள். அந்த அம்மாளுக்கு என்னை நன்றாகத் தெரியும். என்னைக் கண்டவுடன் முகமலர்ச்சியுடன் கைகூப்பி, ''வாருங்கள், சௌக்கியமா?'' என்று கேட்டுவிட்டுத் தன் கணவரிடம் ''நீங்கள் வெளியே புறப்பட இன்னும் அரை மணி நேரமாகுமா? சுமிதா வீட்டுக்குப் போக வேண்டுமாம். வண்டியை அனுப்பலாமா?'' என்று கேட்டாள்.

ஜகந்நாதன், ''அனுப்பேன். பத்து நிமிஷம் கழித்துப் போனால் போச்சு'' என்றார். பாக்யம் திரும்பினாள் போவதற்கு. அவர், ''பாக்யம்! அதோ அந்தப் பையன் சங்கிலிபுரம் மகாதேவன் மகன். இவருடைய உடன்பிறந்தாளைத்தான் அவர் கலியாணம் செய்து கொண்டிருந்தாராம்'' என்றார்.

பாக்யலக்ஷ்மி சந்துருவை நிமிர்ந்து பார்த்தாள். நாலைந்து விநாடிகள் வரை அவனை எடை போடுவது போல் அளந்து பார்த்துவிட்டு, ''கொஞ்சம், கொஞ்சம் முகஜாடை இருக்கிறது. ஆனால் பார்த்தவுடனே கண்டு கொள்ளும்படி இல்லை. உன் பேரென்ன?'' என்று கேட்டாள்.

சந்துரு பெயரைச் சொன்னவுடன், ''உங்கள் அப்பா போய்விட்டாராமே,- அம்மா எல்லாம் சௌக்கியமா?'' என்று விசாரித்தாள். பிறகு, ''நான் போய்ச் சுமிதாவை அனுப்பி வைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனாள்.

பாக்யலக்ஷ்மி உள்ளே போனவுடன் நான், ''இவன் விஷயமாகத்தான் உங்களைப் பார்க்க...'' என்று தொடங்கினேன்.

அவர் இடைமறித்து, ''மகாதேவனும் நானும் பள்ளித் தோழர்கள். சங்கிலிபுரத்திலிருந்து மூன்று மைல் தொலைவில் எங்கள் கிராமம். நானும் சங்கிலிபுரம் உயர்தரப் பள்ளியில்தான் படித்தேன். பள்ளிப் படிப்புக்குப் பிறகு இருவரும் பிரிந்து விட்டோம். அவனுடைய தந்தையிடம் வசதி இருந்தது. மகாதேவன் கல்லூரிப் படிப்புக்குப் போய்ச் சேர்ந்தான். எனக்கும் மேலே படிக்க ஆசைதான். ஆனால் எங்களுக்கு அதற்கு வசதி இல்லை. எனவே, நான் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். இங்கே வந்தவுடனேயே மவுண்ட் ரோட்டில் ஒரு வெள்ளைக்காரன் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர்ந்தேன். தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் கற்றால் சம்பளம் உயரும் என்று புரிந்துகொண்டு அவற்றைக் கற்றேன். சம்பளம் உயர்ந்தது. உயர்வு என்றால் இந்தக் காலத்தில் போல நூறும் இருநூறுமல்ல. எனக்குத் தொடக்கச் சம்பளம் மாதம் முப்பது ரூபாய். அதையெல்லாம் கற்றுத் தேர்ந்தவுடன் அது ஐம்பதாக உயர்ந்தது. அந்த நாளில் மாதம் ஐம்பது ரூபாய் சம்பாதிப்பவனுக்கு இந்த நாளில் ஒரு தாசில்தாருக்கு உள்ள மதிப்பு இருந்தது.

''மகாதேவன் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டுச் சர்க்கார் வேலையில் சேர்ந்திருக்கிறான் என்று அறிந்தேன்.

''மகாதேவனுக்கு ஓர் அத்தை மகள் இருந்தாள். அவனுடைய தந்தைக்கு உடன்பிறந்த சொந்தத் தங்கையின் மகள். அந்தப் பெண்ணை அவனுக்கு மணம் முடித்து வைக்க விரும்பினார் அவனுடைய தந்தை.

''அந்தப் பெண்ணின் பெயர் அலமேலு. அவள் பிறந்த நேரத்தின் கோளாறோ, வேறு எதுவோ அவளுக்குத் துடைகாலி என்று ஒரு பட்டப் பெயர் ஒட்டிக் கொண்டுவிட்டது. அவள் பிறந்த இரண்டாம் நாள் அவளுடைய தாய் இறந்து விட்டாள். அவளுடைய மூன்றாவது வயதில் அவளுடைய தந்தை எங்கேயோ தடுக்கி விழுந்து அடிபட்டு அதனாலேயே காலமாகி விட்டார்.

''அலமேலு அவளுடைய சிறிய தகப்பனார் வீட்டில் போய் வளர்ந்தாள். அவள் போய்ச் சேர்ந்த ஒரு மாதத்துக்குள் அந்தச் சிற்றப்பா வீட்டில் திருடர்கள் புகுந்து நகை நட்டுக்களையெல்லாம் அள்ளிக் கொண்டு போய்விட்டார்கள். அவளுடைய சித்தி 'இந்தத் துடைகாலி வீட்டில் காலடி வைத்த வேளைதான் இப்படி நேர்ந்து விட்டது' என்று அலமேலுவைக் காரணம் காட்டினாள். அவள் சூட்டியதுதான் அலமேலுவுக்குத் துடைகாலிப் பட்டம். அலமேலுவின் சிற்றப்பா மனத்திலும் அந்தக் கருத்து உறுத்தியிருக்கலாம். ஆனாலும் அவர் அதற்காக அலமேலுவைக் கைவிட இசையவில்லை. 'நம்முடைய அஜாக்கிரதைக்கு அவள் என்ன செய்வாள்? நம்மை விட்டால் அவளுக்கு வேறு கதி யார் இருக்கிறார்கள்?' என்று அவர் தம் மனைவியை அடக்கினார். அவருடைய மனைவி, அலமேலுவை அவளுடைய மாமன் வீட்டுக்குத் தள்ளிவிட, அதாவது மகாதேவனின் தந்தையிடம் அனுப்பிவிட

எவ்வளவோ முயன்ருள். சிற்றப்பா உறுதியாக இருந்து விட்டார்.

''அந்தப் பெண்ணைத்தான் மகாதேவனுக்குக் கல்யாணம் செய்து வைக்க விரும்பினுர் அவனுடைய தந்தை. தன் தங்கையின் மகள். தாய் தந்தையை இழந்தவள். அவளைக் கைவிடுவது தவறு, பாவம் என்று கருதித்தான் அவர் அந்த முடிவுக்கு வந்தார். அந்தப் பெண்ணின் பிறவியிலிருந்த வேளைக் கோளாறு பற்றி மகாதேவனுக்கும் தெரியும். இருந்தும் தந்தையின் சொல்லை மீற முடியாமல் அதற்கு இசைந்தான்.

முகூர்த்தத்துக்குத் தேதி வைத்த அடுத்த வாரமே அவன் வேலையில் ஏதோ தவறு கண்டு பிடிக்கப்பட்டு, அவனுக்கு 'சஸ்பெண்ட்' உத்தரவு வந்து விட்டது. 'நிச்சயமாக இது என் தவறு இல்லை. என் மேல் பொருமையினுல் இலாகாவில் யாரோ இதை ஜோடித்திருக்கிருர்கள்' என்று அவன் விளக்கம் எழுதினுன். மேலதிகாரியிடம் போய் முறையிட்டான்.

''அந்த நிகழ்ச்சி அலமேலுவின் வாழ்க்கையைப் பாதித்தது. அவளை மணம் செய்து கொள்ள இசைந்த குற்றத்துக்குத்தான் எனக்கு இப்படி ஒரு தண்டனை கிடைத்திருக்கிறது. அந்தத் துடைகாலி எனக்கு வேண்டாம்' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான் மகாதேவன்.

''மகாதேவனுடைய அந்தக் கருத்தில் உண்மை இருந்தது என்று கருதும்படி அவனுடைய வேலைக்கு வந்த விபத்து தானுக விலகி விட்டது. ஆறு மாத விசாரணைக்குப் பிறகு அவனுடைய வேலையில் காணப்பட்ட தவறுக்கு அவன் எந்த வகையிலும் பொறுப்பில்லை என்று முடிவு கட்டப்பட்டு, அவனை மறுபடியும் வேலையில் சேர்ந்து கொள்ளும்படி உத்தரவு வந்தது.

''அலமேலுவை மணம் செய்துகொள்ளாமல் விலகிக் கொண்டதால்தான் அந்த விபத்து விலகி விட்டது என்று அவன் கருதினுன். ஆனுல் அவனுடைய தந்தை 'அதற்கும் அந்தப் பெண்ணுக்கும் என்னடா சம்பந்தம்? ஏதோ வேளைக் கோளாறு. அவளை நாம் கைவிடுவது பாவம். நீதான் அவளைக் கலியாணம் செய்து கொண்டாக வேண்டும். அவள் என் சொந்தத் தங்கையின் மகள்' என்று வாதாடி வற்புறுத்தினுர். ஆனுல் மகாதேவன் கண்டிப்பாக முடியாதென்று மறுத்து விட்டான்.

''கடைசியில் தன்னுடைய பெற்ருேர்கள், உறவினர்கள் எல்லாரையும் பகைத்துக் கொண்டு அவன் உங்கள் உடன்பிறந்தாளை மணந்து கொண்டான்'' என்று சொல்லி நிறுத்தினுர் ஜகந்நாதன்.

நான், ''ஆமாம், என் தந்தைதான் ஜயத்துக்கு வரன் தேடி மகாதேவனைக் கண்டு பிடித்தார். கலியாணத்துக்கு அவனுடைய உறவினர்களில் யாருமே வரவில்லை. என் தந்தையும் ஒரு விபரீதப் போக்குக்காரர். அவனுடைய மனிதர்கள் யாரும் வரவில்லை என்பதை அவர் பாராட்டவே யில்லை.

சுவர்க்கமும் நரகமும்!



ஒரு நாள் சுவர்க்கத்தில் ஓர் அழகிய ஏரிக் கரையில் பகவான் புத்தர் உலாவிக் கொண்டிருந்தார்.

உலவிக் கொண்டிருந்த பகவான் திடீரென என்ன நினைத்தாரோ! ஸ்படிகம் போன்ற நீர் நிறைந்த அந்த ஏரியில் நீர்ப்பரப்புக்குக் கீழே பாதாளத்தில் நரகப் படுகுழி தெரிந்தது. அங்கே பாபாத்மாக்கள் தங்கள் துஷ்கர்மங்களின் பலன்களை அனுபவித்துக் கொண்டிருந்தனர். அங்கே அல்லல்பட்டுக்கொண்டிருந்த காந்தாதா என்ற ஒரு பிரபல கொள்ளைக்காரன் மீது பகவானின் பார்வை நிலைக்குத்தியது.

காந்தாதாவைப் பகவானுக்கு நன்கு தெரியும். அவன் தன் வாழ்வு முழுவதையும் கொள்ளையடிப்பதிலும் நிரபராதிகளைக் கொலை செய்வதிலும் செலவிட்டான். ஆனுல் இவ்வளவு கொடியவனுக இருந்தும் ஒரு நாள் ஒரு சிலந்திப்பூச்சியின் உயிரைக் காப்பாற்றினுன். அது இவ்விதம் நடந்தது:

ஒரு நாள் கொள்ளையடித்து முடித்துவிட்டுப் பெருமிதத்துடன் காட்டு வழியே திரும்பிக்கொண்டிருந்தான் காந்தாதா. அவன் திரும்பிய வழியில் இரண்டு செடிகளை இணைத்து ஒரு சிலந்தி, வலை பின்னிக் கொண்டிருந்தது. இந்தச் சிலந்திக் கூட்டைப் பிய்த்துச் சிலந்தியையும் நசுக்கக் கையெடுத்த காந்தாதா திடீரென என்ன நினைத்தானே, தன் கையை இழுத்துக் கொண்டான். சிலந்தியையோ சிலந்தி வலையையோ தொடாது ஒதுங்கிச் சென்ருன்.

இவ்விதம் அவன் செய்த ஜீவகாருண்யச் செயல் ஒன்று பகவானுக்கு நினைவு வரவே, அவனை நரகத்திலிருந்து எவ்விதம் வெளியேற்றலாம் என யோசித்தார். அப்பொழுது அவர் அருகே சிலந்தி கட்டிய பழைய வலை யொன்று இருந்தது. அதன் நூலைப் பிரித்து நரகத்தை நோக்கித் தொங்க விட்டார் பகவான்.

உடனே அந்த நூலைப் பற்றி விடுவிடுவென சுவர்க்கத்தை நோக்கி அவன் ஏறத் தொடங்கினுன்.

ஒரே மூச்சில் பாதித் தூரம் ஏறி வந்து விட்டான். அப்பொழுது சிறிது நேரம் இளைப்பாற வேண்டும் என அவனுக்குத் தோன்றியது. ஏறுவதை நிறுத்திக் கீழே நரகத்தை நோக்கினுன். என்ன! நரகத்தில் யாருமே இல்லையே! - அங்கிருந்தவர்கள் எல்லாம் அவனைப் பின்பற்றி அந்த நூலின் வழியாக மேல் நோக்கி ஏறி வந்து கொண்டிருந்தார்கள். இதைப் பார்த்த காந்தாதாவுக்குக் கோபம் பொங்கி வந்தது.

'நீங்கள் எல்லாம் இங்கே ஏன் ஏறி வருகிறீர்கள்? கீழே இறங்குங்கள். இல்லாது போனுல் நூலை அறுத்து விட்டுவிடுவேன். பாவிகளே! இறங்குங்கள்! இறங்குங்கள்!...' என அவன் கத்தினுன். அவ்வளவுதான். இவ்விதம் அவன் கூறியதும் நூல் திடீரென்று அறுந்தது. காந்தாதா உள்ளிட்ட எல்லோரும் மடமடவென நரகக் குழியில் சரிந்து விழுந்தார்கள்.

இதைப் பார்த்த பகவான் மிகவும் வருந்தினுர். அவர் கண்கள் இறுக மூடிக்கொண்டன.

- அ. ராம்கோபால்

(ஜப்பானிய பௌத்த திராவிடச் கதை)

மணத்தை நிறைவேற்றி வைத்து விட்டார். கலியாணமாகிப் பல ஆண்டுகள் ஆகியும் கூட மாப்பிள்ளையின் உறவினர்கள் யாரும் அவருடன் ஒட்டவேயில்லை'' என்றேன்.

அதுவரை வாயே திறவாமல் உட்கார்ந்திருந்த சந்துரு, அவன் உள்ளே நிகழ்ந்த உணர்ச்சிப் போராட்டத்தைக் காட்டும் குரலில் ஜகந்நாதனிடம் ''அந்த அலமேலுவின் கதி என்னவாயிற்று? அப்பாவும் கைவிட்ட பிறகு அவளுக்குக் கலியாணமே ஆகியிருக்காது இல்லையா?'' என்று கேட்டான்.

ஜகந்நாதன் புன்னகையுடன், ''அவள் பிறவியில் துடைகாலி என்பது அவருடைய உறவினர்களுக்கு மட்டும்தானே தெரியும்? அதை மறைத்து வைத்து அவளை ஒருவனுக்குக் கட்டி வைத்து விட்டார்கள். ஒருவனுக்கு என்ன? எனக்கேதான் கட்டிக் கொடுத்தார்கள்'' என்றார்.

நானும் சந்துருவும் திடுக்கிட்டுப் போனோம். சந்துரு தன்னை மறந்து குரலை உயர்த்தி, ''உங்களுக்குக் கலியாணம் செய்து வைத்தார்களா! உங்களுக்கா?'' என்று கூவினான்.

ஜகந்நாதன், பதில் சொன்னார்: ''ஆமாம், நான்தான் கலியாணம் செய்து கொண்டேன். ஆனால் அவளைப் பற்றிய அந்த விவரத்தை அறிந்து துணிச்சலுடன், தீரம் காட்டிச் செய்து கொண்டதல்ல. என் மனைவி பாக்யலக்ஷ்மிதான் அந்த அலமேலு. உன் தந்தை மகாதேவன்தான் முன்னின்று முயன்று இவளை நான் மணந்து கொள்ள வகை செய்தார்.

''மகாதேவன் உன் தாயை மணந்து நாலைந்து மாதங்களுக்குப் பிறகு சென்னைக்கு வந்திருந்தார். என்னைத் தற்செயலாகச் சந்தித்தார். இருவரும் பள்ளித் தோழமைக் காலம் பற்றி அளவளாவிக் கொண்டோம். மகாதேவன் என்னிடம், 'நீ ஏன் இன்னும் கலியாணம் செய்து கொள்ளாமலிருக்கிறாய்? என் அத்தை மகள் ஒருத்தி இருக்கிறாள். நியாயமாக நான்தான் அவளைக் கலியாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். அவளுடன் நான் உடன்பிறந்தவன் போலப் பழகி விட்டேன். அதனால் மனம் இடம் கொடுக்கவில்லை. அவளை நீ கலியாணம் செய்து கொண்டு விடேன்' என்றார்.''

சந்துரு உணர்ச்சிப் படபடப்புடன், ''அப்பா உங்களிடம் அப்படியா சொன்னார்? அந்தக் காரணத்துக்காகத்தான் அலமேலுவைத் தான் மணந்து கொள்ள இயலவில்லை என்று சொன்னார்?'' என்று கேட்டான்.

ஜகந்நாதன், தொடர்ந்தார்: ''ஆம். நீயே அவளை ஏன் மணந்து கொள்ளவில்லை என்று நான் கேட்கக்கூட இல்லை. தாமாகவேதான் சொன்னார். அப்போது என் தந்தையும் காலமாகி விட்டார். என் தாய் எனக்குப் பன்னிரண்டு வயதாக இருக்கும்போதே தவறி விட்டாள். ஆகையால் 'பெண்ணைப் பிடித்திருந்தால் செய்து கொள்கிறேன்' என்று சொல்லி விட்டேன்.

''மகாதேவன் அந்தப் பெண்ணை அவளுடைய சிற்றப்பாவுடன் சென்னைக்கே வரவழைத்தார். நான் போய்ப் பார்த்தேன். எனக்குப் பிடித்துப் போய் விட்டது. அவளை மணந்துகொள்ள இசைந்தேன். திருப்பதியில்தான் எங்கள் கலியாணம் நடந்தது. அலமேலுவின் சிற்றப்பா முனைந்து நின்று சென்னையில் ஒரு வீட்டில் ஒண்டுக் குடித்தனத்துக்கு இடம் பிடித்து எங்கள் குடும்பத்தை நிறுவி விட்டு ஊருக்குப் போனார்.''

என் மனக் குறுகுறுப்பை என்னால் அடக்க முடியவில்லை. ''உங்கள் மனைவியின் பிறவி வேளைக் கோளாறு உங்களையும் பாதித்ததா? அந்த அம்மாளுக்கு அப்படி ஒரு...'' என்று தயங்கினேன்.

ஜகந்நாதன் சிரித்தார். ''ஏன் தயங்குகிறீர்கள்? அவளுக்கு அப்படி ஒரு சாபக்கேடு இருந்தது என்பது எனக்கு எப்போது தெரிந்தது என்று தானே கேட்க விரும்புகிறீர்கள்? அவளுடைய உறவினால் நேர்ந்த ஒரு தீமை என்று நான் அதைக் கருதவில்லை. எங்கள் மணம் நடந்து ஒரு மாதத்துக்குள் நான் என் வேலையை விட்டு விலக வேண்டிய ஒரு நெருக்கடி நேர்ந்தது. கம்பெனியில் நியாயமாக எனக்குக் கிடைத்திருக்க வேண்டிய ஒரு வேலை உயர்வை, சிபாரிசுகளின் விளைவாக எனக்குப் பின்னால் வந்து சேர்ந்தவருக்குக் கொடுத்து விட்டனர். நான் பரபரத்து வேலையை விட்டு வெளியே வந்து விட்டேன்.

''அப்போதுதான் அலமேலுவே தன் மேல் ஒட்டிக் கொண்டிருந்த பட்டத்தைப் பற்றிச் சொன்னாள். அவள் கண்ணீருடன், 'உங்கள் கம்பெனியில் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய உயர்வை உங்களுக்கு இல்லாமல் செய்தவர் மேல் ஒரு குற்றமும் இல்லை.



இன்று மாலை சூரியன் மறைவதற்குள் நீங்கள் ஓடி முடிக்கும் நிலம் முழுவதும் உங்களுக்கே சொந்தம். ஆனால் சூரியன் மறைவதற்குள் குறிப்பிட்ட இடமாகிய ஆரம்ப நிலைக்குத் திரும்பி வந்துவிடவேண்டும் என்று அறிவித்தார் ஒருவர். பேராசைக்காரன் ஒருவன் ஓடினான், ஓடினான், கண்ணை மூடிக் கொண்டு ஓடினான். பல மைல் தூரம் கடந்துவிட்டான். நேரம் ஓடி விட்டதை உணர்ந்து திரும்பி ஓடி வந்தான். மெல்ல மெல்ல சூரியனும் மறைந்து கொண்டிருந்தான். சூரியன் மறைவதற்குச் சில விநாடிகளே இருந்தன. இந்த மனிதனும் நிலையைத் தொடுவதற்குச் சில கஜங்களே இருந்தன. இன்னும் ஒரு விநாடி.... மூச்சைப் பிடித்துக் கொண்டு தொட்டும் விட்டான். சூரியனும் மறைந்தான். வெற்றி பெற்றுவிட்டதாகவும், அவன் ஓடிய நிலம் முழுவதும் அவனுக்குச் சொந்தம் என்றும் அறிவித்தார்கள். ஆனால் -- அதைக் கேட்க அந்த மனிதன் இல்லை! எட்டடி நிலத்தில் தன்னையடைத்துக் கொண்டு கீழே உயிர் துறந்து கிடந்தான் அவன்!

- டால்ஸ்டாய் கதை

என்றால் உங்களுக்கு வந்த துர்ப்பாக்கியம் தான் இது'' என்று சொல்லிக் கதறி அவள் கதையை முழுதும் சொன்னாள்.

''அதைக் கேட்டு என் மனமும் ஒரு நொடி கடகடத்துப் போய் விட்டது. ஆனால்.... அதைத் தெய்வச் செயல் என்றுதான் சொல்ல வேண்டும். கொஞ்ச நேரத்தில் நானே சமாளித்துக் கொண்டு என் உள்ளத்தைப் பிடித்து நெரிக்க முயன்ற பய உணர்ச்சியை உதறி எறிந்து வெளிப்பட்டு விட்டேன்.

''அலமேலுவுக்கு ஆறுதல் சொன்னேன். ஆனால் உண்மையில் பயத்தால் ஆடிப் போயிருந்த என் மனத்துக்கு நானே சொல்லிக்கொண்ட தேறுதல்தான் அது. 'மற்றவர்கள் அதை நம்பினால் நம்பட்டும். அவர்கள் நம்புவது உண்மையாகவே இருந்தாலும் நான் அதை எதிர்த்துப் போராடப் போகிறேனே தவிர அதற்குப் பயந்து ஓடப்போவதில்லை. நானாகவேதான் இந்த வேலையை விட்டு விட்டு வந்தேன். அதில் உனக்கு ஒரு சம்பந்தமும் இல்லை. இருந்தாலும் இந்த வேலையுடன் அது எல்லாம் தீர்ந்து விட்டது. இதிலிருந்து நம் வாழ்வின் ஏறுமுகம் தொடங்கிவிட்டது. நான் சாதித்துக் காட்டுகிறேன் பார். ஒருவன் வாழ்க்கையில் முன்னேறி உயர்வதற்கு அவனுடைய நெஞ்சு உறுதி, வீம்பு, உழைப்பு மற்றவர்களுடன் பழகும் சமர்த்து, முக்கியமாக நாணயம் ஆகியவைதான் உதவியாக அமைகின்றன என்பதை நான் நிரூபித்துக் காட்டுவேன். அதற்கு ஆரம்பமாக இந்த நிமிஷத்திலிருந்து உன் பெயர் பாக்கியலக்ஷ்மி. வாழ்க்கையில் பெறக்கூடிய எல்லாப் பாக்கியங்களையும் கூட்டி வைக்க வந்துள்ள லக்ஷ்மி நீ'' என்று படபடப்புடன் பேசினேன்.

''அதற்கு அடுத்த நாள் தொடங்கியதுதான் என் வாழ்க்கைப் பந்தய ஓட்டம். இன்னும் ஓடிக்கொண்டேதான் இருக்கிறேன்'' என்று சொல்லி முடித்தார்.

அரை நிமிஷம் வரை எங்களில் யாருமே பேசவில்லை. அவரவர் உள்ளத்தில் எழுந்த சிந்தனைகள், உணர்ச்சிகளின் சுழல்களில் சிக்கி மௌனமாக உட்கார்ந்திருந்தோம். அந்தச் சிந்தனைச் சுழல்களின் இடையில் என் மனத்தில் 'அந்த மகாதேவனின் மகனுக்கு நீங்கள்தான் வாழ்வுக்கு வகை செய்ய வேண்டும் என்று கேட்பது சரிதானா, பொருந்துமா?' என்ற எண்ணம் சீறிக் கொண்டு எழுந்தது. சந்துருவைத் திரும்பிப் பார்த்தேன். அவன் மனத்திலும் அந்த மாதிரியான எண்ணம் எழுந்திருக்க வேண்டும். அவன் சட்டென்று எழுந்து நின்றான்.

ஜகந்நாதன், ''உட்காரு. இதை நான் உங்களிடம் சொன்னதற்குக் காரணம் இருக்கிறது. உன்னுடைய மாமா உன்னை அறிமுகம் செய்து வைத்த குரலிலேயே அவர் உனக்காக என்னிடம் உதவி கோரி வந்திருக்கிறார் என்பதை ஊகித்துக் கொண்டேன். உன் தந்தையின் மேல் எனக்குச் சிறிதுகூடக் கோபமோ வருத்தமோ இல்லை. மெய்யாகவே நான் அவருக்கு நன்றிக் கடன் பட்டிருப்பதாகவே நினைத்திருக்கிறேன் இந்தச் செல்[illegible] [illegible]வளவம் என் மனைவியினால்



சரக்கூடம்

இலக்கியம் ஒரு காலக் கண்ணாடிதானே? மிகப் பெரிய நவீனமானாலும் ஒரே ஒரு சிறந்த கதாபாத்திரத்தைக் கொண்டு விளங்குமானால் அந்த ஒரு கதாபாத்திரத்துக்காகவே அந்த நவீனம் பல நூற்றாண்டு காலம் நிலைத்திருக்கும் என்பது எத்தனை உண்மை?

ஸ்ரீமதி கிருஷ்ணா எழுதிய இந்நாவலை அன்றாட வாழ்வின் அடிப்படையில் நல்ல நடையோடு நெஞ்சில் நிலைத்து நிற்கக் கூடிய அனுபவம் முதிர்ந்த மொழிகளோடு அமைந்த அழகிய இலக்கியக் கோயில் என்று அறிமுகப்படுத்துகிறேன். அதன் அஸ்திவாரத்தின் வலிமையை (கதையை) நவீனத்தைப் படித்துப் பார்ப்பவர் அறிந்துகொள்ளுவது நல்லது. இந்த நவீனத்தில் பலரகப்பட்ட கதாபாத்திரங்கள் வருகின்றனர். குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்டு சிறைக்குச் செல்லும் ராமையா முதல் நவீன நாகரிகத்தின் பிடியில் சிக்கிச் சுழலும் ரம்யா வரை ஒவ்வொரு பாத்திரமும் வாசகர் நெஞ்சை விட்டு நீங்காத இடம் பெறுவர் என்று பதிப்பகத்தார் முன்னுரையாகக் கூறினாலும் நம் நினைவில் சுழன்று கொண்டிருக்கும் ஒரு பாத்திரம் மீனாதான்.

உள்ளத்து உணர்வுகளைத் தூண்டிவிடும் அழகிய கட்டங்கள் பல உண்டு இந்த நவீனத்தில். நவீனத்தைப் படித்து முடித்த பின்னரும் நினைவுகள் நவீனத்திலேயே சுழலுகின்றன.

'My never failing friends are They' என்று ஆங்கிலக் கவிஞன் சதே (Southey) புத்தகத்துக்கு விளக்கம் கொடுத்தாற் போல இந்த நவீனம் நம் மனத்துக்கு ஒருவித நிறைவைத் தருகிறது.

-எஸ். மோகன்

வெளியீடு: பசவேஸ்வரா பிரசுரம், தவுலதாபாத்


வந்த அதிர்ஷ்டம் என்று நான் நம்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு என்னிடம், ''சொல்லுங்கள், நான் என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்.

சந்துருவுக்கு ஒரு வேலை கிடைக்க வழி செய்ய வேண்டுமென்பதை நான் அவரிடம் எப்படிச் சொன்னேன், என்ன சொன்னேன் என்பது எனக்கு இன்றுவரை நினைவில் வரவில்லை. என் மனம் அப்படிக் குழம்பிப் போயிருந்தது. சந்துரு அவர் வாங்கிக் கொடுத்த வேலையில்தான் இருக்கிறான்.

நான் முன்பு ஜகந்நாதனுடன் பழகும் போது இருந்த மனக் கூச்சம் போய்விட்டது. அதற்குப் பதில் இப்போது வேறு விதமான கூச்சம் சேர்ந்திருக்கிறது. இப்போது நான் தான் அவரை ஓர் உயர்ந்த பிறவி, எனக்குக் கிடைக்க முடியாத நட்பு என்று கருதி அவருடன் பழகுகிறேன், அவரிடம் பேசுகிறேன்.

கண்களை இடுக்கிக் கொண்டு தெருவின் இரண்டு பக்கங்களிலும் பார்த்தேன். பிறகு பையிலிருந்த சில்லறையைப் பார்த்துக் கொண்டேன். 'ம்.... பணம் போதும். வாடகை மோட்டார் ஏதேனும் கிடைத்தால் ஏறிச் சென்றுவிட வேண்டியதுதான்' என்று தீர்மானித்துக் கொண்டேன். ஏனெனில், என்னால் நடக்க முடியவில்லை. பஸ்ஸிலும் அவதியுறத் தெம்பில்லை. வயது அறுபத்திரண்டு ஆகிறதென்பது ஒருபுறம் இருக்கட்டும். மனச் சோர்வும், உற்சாகமற்ற உள் நினைவுகளும், சென்றதிலேயே ஆழும் ஏக்கமும், எனக்கு உடல் முதுமையையும் மீறிய ஒரு மெலிவைத் தந்து விட்டிருந்தன.

''அட, எவன்யா அது! நடுத்தெருவிலே நின்னுக்கிட்டு! இன்னா பெரியவரே, வூட்டுலே சொல்லிக்கிட்டு







காருக்குப் பேசத் தெரியாதுதான, ஆனால் அவரது வாழ்விலே திருப்பத்தை ஏற்படுத்தி விட்டது. உள்ளத்தைத் தொடும் இந்தக் கதை புதிய கோணத்தில் செல்கிறது.

சிறப்புச் சிறுகதை

டாக்ஸி

ஆர். சூடாமணி

வந்துட்டியா?'' என்ற ஏளனக் குரலின் பக்க ஒலியோல் மோட்டா ரொன்று விர்ரென்று நாட்டியப் பெண் போம் நளினச் சத்தம் எழுப்பியவாறு என்னைத் தொட்டுத் தொடாமலும் தாண்டி ஏகிய பின்னர் தெருவின் ஓரமாய்ச் சென்று நின்றேன். உள்ளே குமுறியெழுந்த துக்கம் உதட்டளவில் துடித்தது.

இப்படி ஒரு காலமா எனக்கு? கண்டவனும் ஏசிப் போகிறான். வீட்டில்தான் இழிநிலை என்றால் சமூகத்தின் பிரதிபலிப்பாக எங்கும் எப்போதும் இந்த அலட்சியம் தான். என் சட்டை இப்போது கிழிந்திருப்பதால்தானே? அதில் போட்டுள்ள ஒட்டு கார்க்காரனின் கண்களுக்குத் தெரிந்திருக்குமோ? அதனால்தானே அந்த 'அட எவன்யா?'

சரிதான் போய்யா! உலகத்தில் இல்லாத அதிசயமாகக் கார் படைத்துவிட்டாயாக்கும்! உன்னைப் போலவே நானும் ஒரு மோட்டாருக்குச் சொந்தக்காரனாய் இருந்தேன் என்று உனக்குத் தெரியுமா? உன்னுடையதுகூட 'ஸ்டாண்டர்ட் டென்'தான், (அதை ஒரு நொடியில் கவனித்து விட்டேனாக்கும்!) என்னுடையதோ அம்பாஸடர்! கண்ணாடி மாளிகை போன்ற சொகுசான வாகனம். அதில் நான் மிடுக்காய் ஏறி அமர்ந்ததும் என்னிடம் ஊதியம் பெறும் சாரதி, மரியாதையுடன், ''எங்கே சார், போகணும்?'' என்று கேட்டுக் கதவை மூடிவிட்டு வண்டியைவெகு நாசூக்காய் ஓட்டத் தலைப்படுவான். கண்மூடித்தனமான வேகத்தில் வண்டியை விரட்டுவதோ, 'நியூட்ர'லுக்குக் கொண்டுவராமல் கிய'ரை ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குத் தடாலென்று மாற்றி உடல் குலுக்கல் விளைப்பதோ எனக்குப் பிடிக்காதென்பது அவனுக்குத் தெரியும். நைலானும் டெக்ரானும் டெர்ரிலினுமாய் வேளைக்கொரு வகை உடுப்பேன். கால்மேல் கால் போட்டுக்கொண்டு தங்கப் பூண் நடைக் கொம்பின் கரிய மழுமழுப்பை ஒரு கையால் தடவியவாறே, இன்னொரு கையால் மீசை மேல் விரல் போட்டு அதன் முறுக்கிய விறைப்பின் அதிகார முத்திரையைச் சரி செய்வேன். இப்போது அசட்டுச் சிரிப்புடன் கூழைக் கும்பிடு போடுகிறேனே, இப்படியா அப்போது? இல்லவே யில்லை! எளிதில் ஒரு புன்சிரிப்பைத் தந்து விடுவேனா என்ன, அதை எதிர்பார்த்து என் காலடியில் காத்திருப்போ

ருக்கு? எங்கள் வாணிபச் சரக்கைப் போல் அந்தச் சிரிப்பையும் அவர்கள் தவம் கிடந்தல்லவா பெற வேண்டும் ? இன்று எண்பதாகத் தெரிகிற என் அறுபதுக்கு அப்போது – ஐந்தே ஆண்டுகளுக்குமுன்–நாற்பது வயதுதானடா ! உனக்குத் தெரியுமா அது ? என் கார்.......

''தாத்தா! நம்ம கார் எங்கே? இப்போல்லாம் நாம் ஏன் நடந்தோ, பஸ்ஸிலேயோ போறோம் ?''

குழந்தை ராதாவுக்கு ஒன்பது வயதாகிறது. அவள் கேள்விக்கு நான் என்ன பதில் சொல்வேன் ? இதயத்தை மார்புக்குள்ளேயே அமுக்கி வைத்திருப்பதே ஒரு பிரயாசையாகி அசைவற்று நிற்கத்தான் முடியும் என்னால்.

அவளுக்கே உண்மையின் சம்சயம் தட்டுகிற பருவந்தான் என்று உணர்த்துவது போல் ராதா தயங்கியவாறு, ''கார் வந்து.... வந்து... 'ஸர்விஸிங்'குக்குப் போயிருக்கா?'' என்று கேட்பாள் தொடர்ந்து.

என்னிடம் மௌனம்தான். குழந்தை தன் பேச்சைத் தானே நம்பாத போது அந்த அவமானம் என் நெஞ்சுள் தகித்தது. என் மௌனத்தின் பொய்யே ஒரு வேளை அவள் என்னை இகழ்ச்சியுடன் நினைக்க ஏதுவாக அமைகிறதோ ?

''சொல்லேன், தாத்தா....''

''அது வந்தும்மா....!''

என் தயக்கத்தை மீறிக் கொண்டு வேறொரு குரல் இடையில் பாயும். ''என்னடி தொண தொணன்னு கேள்வி? உங்கள் தாத்தா அழகு சொட்ட வியாபாரம் செய்தாரோன்னோ? எல்லாத்தையும் தொலைச்சுப்பிட்டு நிற்கிறார். காரையும் முழுங்கியாச்சு...''



என் மருமகள் மைதிலியின் குரல்தான். நாளுக்கு நாள் கருமை மிகுந்து வரும் காப்பியை என் எதிரே கொட்டாத குறையாய் வைத்து விட்டு ராதாவிடம் பேசும் சாக்கில் என்னைப் புண்படுத்திப் போவாள்.

''காரை எப்படி முழுங்க முடியும்? கார் எத்தனை பெரிசு! வாய் சின்னதாச்சே!'' என்பாள் குழந்தை.

இம்மாதிரி ஏதாவது அன்றாடம் நடக்கும்.

என்னுள்ளே கொந்தளிக்கும் துன்பத்திலிருந்து என் முகம் எப்படி விகாரம் அடைதிருக்கிறது என்பது எனக்குப் புரியு



தொண்டைக் குண்டு வேகமாய் ஏறி இறங்கும். மருமகள் பேசுவதில் தவறென்ன? இப்போது எனக்குச் சோறிடுபவனின் மனைவி அவள். ஒரு காலத்தில் நான் லட்சக் கணக்கில் சம்பாதித்தபோது மகனையும் மருமகளையும் அவர்கள் குழந்தைகளையும் சம்ரட்சிக்கும் பெருமை எனக்கு இருந்தது. ''மாமாவுக்குச் சரியாய் மூணு மணிக்கெல்லாம் காப்பி கொண்டு போகணும்'' என ஆட்களுக்கு உத்தரவிடுவதோடு அவளே கொண்டு வந்து கொடுப்பாள். ''சூடு சரியா இருக்கா, மாமா? இன்னும் ஆற்றித் தரட்டுமா?'', ''நுரைதான் மாமா! அளவு ஒண்ணும் அதிகமில்லை. குடிச்சுடுங்கோ. உடம்புக்கும் பலம் வேணுமா?'', ''அடடா, பால் கொஞ்சம் குறைவாயிருக்கும் போலிருக்கே. கொஞ்சம் இருங்கோ, இதோ போய்க் கொண்டு வரேன்...''

இப்போதும் அந்தக் குரலும் உபசரிப்பும் என் காதுகளில் ஒலிக்கின்றன. அந்த முந்தைய அக்கறையைப் போலி எனச் சொல்ல முடியுமா? இன்று காட்டும் வெறுப்பைக் குற்றமென்று கொள்ளலாமா? இல்லை. இதுதான் மனித சுபாவம். அன்று நான் கொடுத்தேன், எனக்கு மரியாதை கிடைத்தது. இன்று நான் கை நீட்டுகிறேன். பிச்சையோடு திட்டும் கிடைக்கிறது. மைதிலிக்கு நான்கு குழந்தைகள். வளர்ந்தவர்கள் இருவரைத் தவிர ராதாவும் இளைய பையனும் இருக்

கிறார்கள். என் காப்பியில் ஊற்றக் கூடிய பாலை, உழைக்கும் கணவனுக்கோ தன் வயிற்றுச் செல்வங்களுக்கோ தரலாமே என்று அவள் எண்ணினால் அதில் வியப்பென்ன? பயனையும் நிலையையும் கருதாது, ஆண்டவனைப் போல் தனித்து நிற்கும் அன்பைச் செலுத்துவதற்குரிய மனப் பக்குவம் எல்லோருக்குமே வந்து



விடுவதில்லை. அது இல்லாததற்காக மைதிலியிடம் நான் வருத்தப்படுவது அறிவீனம். அருகில் அவசரமாக ஆபீசுக்குக் கிளம்பிக் கொண்டிருப்பானே என் மகன், அவன் என்னை எதுவும் ஏசமாட்டான். அவன் மௌனிதான் அப்போது. அந்த மௌனம்தான் என்னை அடித்து விடும். அவன் மௌனத்தை விடவா என்னை வருத்த முடியும் அவள் பேச்சு?

நெஞ்சுக் குழியில் ஏதோ சுருளாகப் புறப்பட்ட உணர்வில் கண்ணீர் வெளிப்பட்டு விடுமோ என்ற பயம் தோன்றும்.

''தாத்தா, அழறியா? அழாதே தாத்தா! நம்ம கார்... நம்ம கார் வந்துடும் பாரேன்!''

என் கண்களின் மீது பரிவாக ராதாவின் இளம் ஸ்பரிசம். என்ன இருந்தாலும் என் ரத்தமல்லவா? மருமகளுக்கு இரக்கம் இல்லாது போனாலென்ன? என் பேத்தியின் இரக்கத்தில் எனக்குப் பங்குண்டு...

''அழாதே தாத்தா!''

உள்ளே யிருந்து மைதிலியின் முணுமுணுப்பு ஒலிக்கும்.

இந்த ஏச்செல்லாம் இருக்கட்டும். என்னால் பொறுக்க முடியாத துன்பம் அதுவல்ல. என் நிலையில் ஏற்பட்ட இழிவு, என் வளம் மறைந்து நான் வறியனாய் நிற்பது, முந்தைய செழிப்பின் பொன்னொளி இன்றைய அவலத்தினால் பின்னும் ஒளி மிக்கதாகி என் உள்ளத்தையும் உயிரையும் இடையறாது துன்பத்திலாழ்த்தும் கொடுமை - இவற்றைத் தான் என்னால் தாங்க முடியவில்லை.

உத்தியோகத்திலிருந்த நான் இன்னும் காலம் இருக்கும்போதே ஓய்வு பெற்று வேறொருவன் பேச்சை நம்பிப் பெரியதொரு வணிகத் தொழிலில் ஈடுபட்டதும் அது சில ஆண்டுகள் சுபிட்சமளித்த பின் கூட்டாளியின் கடன் மோசடியால் முழுவதுமே நஷ்டமாகி நான் வறியவனாய் மிஞ்சியதும் என்கீழ் தொழிலில் ஈடுபட்டிருந்த என் மகன் பிறகு வேலை ஒன்று தேடிக் கொண்டதும் அவன் ஒருவனின் ஊதியத்தில் குடும்பம் அனைத்தும் தழைக்க முடியாமல் ஒவ்வொன்றாய் உடைமைகளைப் பணமாக்கியதும் ஒவ்வொரு பணியாளாகத் துறந்ததும், காரோட்டியை வேலையினின்று அனுப்பிய சிறிது காலத்துக்குள் காரையே விற்றுவிட்டதும் உடல் அலுங்காமல் வாழ்ந்திருந்த நிலை மாறி இப்போது தெருத் தெருவாய் நடப்பதும், பஸ்ஸுக்குக் காத்துக் கால் நோவதும்...! இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி ஆற்ற மாட்டாமல் மனம் புழுங்கிப் புரட்சி மிக்க நெஞ்சில் தன்னிரக்கம் நிறைந்து வாட்ட நான் துன்பமே வடிவாக இப்படி ஏன் ஆகியிருக்க வேண்டும்? என்னால் நிகழ்காலத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லையே, என்ன செய்வேன்! நினைவுகளிலேயே ஆழ்ந்து அவற்றின் இன்ப மயக்கில் இன்றைய குறைகளை மறக்கிறேன். அந்த நினைவுகள் இல்லையேல் என் கதி என்னவாகியிருக்குமோ! நிகழ் வாழ்வின் இந்த நரகத்தை என்னால் தாங்க இயலவில்லையே...

கட்டுமீறி ஓடும் எண்ணங்களை இழுத்துப்பிடிப்பதாக எதிரே ஒரு மோட்டார் வந்து கொண்டிருந்தது. பாதி கறுப்பு, பாதி மஞ்சள். சிவப்புக் குறி நேராயிருந்தது. நல்லவேளை, சமயத்தில் கவனித்தேன். இன்னும் சிறிது நேரம் என் எண்ணங்களிலேயே மூழ்கியிருந்தால் வண்டியைத் தவற விட்டு விட்டு இன்னும் எத்தனை நேரம் கால் கடுக்கக் காத்திருந்திருப்பேனோ! கணேசன் நான் வரவில்லையாக்கும் என்று எண்ணியிருப்பார்...

கைகளை உயர்த்தித் தட்டினேன்.

''டாக்ஸி! டாக்ஸி!''

வேகமாய்ப் பாய்ந்த வண்டி திடீரென்று 'பிரேக்' பிடிப்பில் கத்தியால் வெட்டுண்டது போல் நின்றது. காக்கியுடை அணிந்த சாரதி அமர்த்தலாய்த் தன் ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வண்டியின் பின் பக்கக் கதவைத் திறக்க ஓரடி முன்னால் சென்றேன். ஒரு தரம் வண்டியின் நம்பரின் மேல் கருத்தின்றி விழுந்து மீண்ட என் கண்கள் திடீரென்று விரிந்தன. ஏதோ பனிமூட்டம் விலகியதுபோன்ற திடீர்த் தெளிவில் உள்ளத் துடிப்பு வேகமாயிற்று. வெள்ளைத் தகட்டின் மீது இருந்த கறுப்பு எண்களையும், எழுத்துக்களையும் மீண்டும் விறைத்துப் பார்த்தேன். என்ன விந்தை இது! கனவு காண்கிறேனா? வண்டி கண்ணாடி மாளிகையாய் வெயிலில் பொலிந்த காட்சியும் இப்போதுதான் உணர்வாகியது. நிறம்தான் கறுப்பும் மஞ்சளுமாகி யிருந்தது, அந்தப் பழைய சிவப்புக்குப் பதிலாக.

அதே சமயம்.... இது என்ன, அதிசயத்தின் தொடர்ச்சியா? என் முகத்தைக் கவனித்துவிட்டு முன் ஆசனத்தினின்று துள்ளிக் கீழே குதித்துத் தலைக் குல்லாயை மரியாதைப் பாங்குடன் கழற்றி விந்தை படிந்த முகத்தில் வினயத்தை நிறைத்துப் பேசுபவன் உண்மையிலேயே என்னுடைய மாஜி டிரைவர் மாணிக்கம்தானா?

''ஸார், நீங்களா!''

சிறிது நேரம் ஒருவரை யொருவர் வெறித்த படி நின்றிருந்தோம். என் நெஞ்சு உணர்ச்சியில் நிறைந்து பொங்கி விம்மியது.

அவன் முகத்தில் ஆச்சரியம், கரிசனம், மரியாதை. ''நீங்கன்னு முதல்லே நான் கவனிக்கவே யில்லை ஸார்!'' சட்டென்று அவன் எனக்காகக் கதவைத் திறந்து பிடித்துக்கொண்டு ஒதுங்கி நின்றான். ''ஏறுங்க, ஸார்! நம்ம வண்டிதான். ஐயா வச்சிருந்த வண்டியேதான். இப்போ டாக்ஸியா ஓடுது. முதல்லே இந்த டாக்ஸிக்கே நான் டிரைவரா வந்தப்போ ஆச்சரியப்பட்டுட்டேன் ஸார்! ஆனா, நம்ப வண்டியில்லே! குழந்தையைத் தடவிக் கொடுக்கிற மாதிரி சும்மா கையை வச்சதுமே ஸர்ர்ர்னு பாயுது சார்!''

என் உடற் படபடப்பு மிதமிஞ்சி விட்டது. கண்கள் இருண்டன. விழுந்து விடுவோமோ என்ற அச்சத்துடன் காரின் கதவைப் பிடித்துக்கொண்டேன். என்ன கொடுமை இது! விதியின் எத்தகைய கோர பரிகாசம்! ஒரு காலத்தில் இந்த வண்டி எனக்குச் சொந்தம். இந்த ஆள் என் ஊழியன். இன்றோ சம்பந்த மற்றவனாக இதையே வாடகை வண்டியாய்க் கொண்டு அதிலேறிச் செல்லும் சந்தர்ப்பம்! இறங்கியதும் பணம் கொடுப்பேன், இந்த டிரைவருக்கு இனாம் தருவேன். என் சொந்தம் இதில் இல்லை. இது இரவல்! என் உடைமையாய் இருந்த ஒன்று இன்று எனக்கு இரவல்.

எப்படியோ ஒருவாறு வண்டியில் ஏறி அமர்ந்தேன். பழகிய அந்த அமைப்பிலே என்னை அறியாமலேயே ஒரு கால் மிடுக்காக இன்னொன்றின் மீது ஏற இருந்த செயலை நிறுத்திக் கொண்டேன். இப்போது என்

கள்ளனைப் பிடித்த கழுதை!

பாலைவனங்களில் ஒட்டகங்களுடன் திரியும் நாடோடிக் கும்பலுக்கு ஒரு தலைவன் இருந்தான். அவனுடன் நண்பனான ஒரு வைர வியாபாரியும் பயணம் செய்ய நேரிட்டது.

நாடோடித் தலைவன் ஒரு வெள்ளைக் கழுதையும் வைத்திருந்தான். அது மிகவும் புனிதமானது என்றும், அற்புதமான சக்தி வாய்ந்தது என்றும், தன் கும்பலை அவன் நம்ப வைத்திருந்தான். அந்த வெள்ளைக் கழுதைக்கென்று எப்போதும் தனிக் கூடாரம் உண்டு. அதுமட்டுமா? தினமும் இரவு வேளையில் வெள்ளைக் கழுதையின் வாலை நறுமணம் மிக்க வாசனைத் தைலத்தில் தோய்த்தெடுப்பான். தீய சக்திகள், தோஷங்கள் புனிதக் கழுதையைத் தாக்காமல் இருக்கவே அவன் இந்த மாதிரி செய்து வருவதாக நாடோடிகளிடம் நம்பிக்கை.

ஒரு நாள் விடியற்காலையில் கூட வந்த வைர வியாபாரி ஓவென்று அலறினான். அவனுடைய வைரங்கள் கொள்ளை போய் விட்டன! நிச்சயமாக நாடோடிக் கும்பலில் யாரோ தான் வைரங்களைத் திருடிக்கொண்டிருக்கிறார்கள் என்று அவன் கூறினான்.

''கவலைப்படாதீர்கள். என்னுடைய மந்திரக் கழுதை திருடனைப் பிடித்துத் தந்துவிடும்'' என்று ஆறுதல் சொன்ன தலைவன், தன் நாடோடித் தோழர்களை வரிசையாக நிறுத்தி வைத்தான். ''புனித வெள்ளைக் கழுதையின் கூடாரத்துக்குள் நீங்கள் ஒவ்வொருவராகச் செல்ல வேண்டும். ஒருத்தர் கூடாரத்தில் இருக்கும்போது இன்னொருத்தர் புகக் கூடாது. நுழைகிற ஒவ்வொருவரும் கழுதயின் வாலை மூன்று தரம் தொட்டு நீவ வேண்டும். வைரத்தைத் திருடியவன் தொட்டால் கழுதை கத்தும்!'' என்று கூறினான் நாடோடித் தலைவன்.

இதன்படியே ஒவ்வொருவனும் கூடாரத்துக்குள் நுழைந்து திரும்பினார்கள். கழுதை கத்தவேயில்லை. வைர வியாபாரிக்கு வெகு ஏமாற்றம்.

''நல்ல புனிதக் கழுதை! மடக் கழுதை!'' என்று சினந்தான் வியாபாரி. ஆனால் நாடோடித் தலைவன் திருடனைக் கண்டுபிடித்து விட்டான். எப்படி? சொல்லுங்கள் பார்க்கலாம்?



விடை :
அடுத்த பக்கம்

கைத்தடி வெறும் கொம்புதான். அதில் தங்கப் பூண் கிடையாது.

என் நிலையை நான் மறப்பது எங்ஙனம்?

''எங்கே ஸார் போகணும்?''

பழைய கேள்வி. எனக்கு உடம்பு குலுங்கி விட்டது. கனவு மீண்டும் கண் முன்னே பிரத்தியட்ச உரு எடுக்கிறதா?

''மயிலாப்பூர், கச்சேரி ரோடு.''

''ரைட் ஸார். வீட்டைச் சொல்லுங்க. வண்டியைக் கூட அங்கேயே வச்சிருக்கேன். ஐயா வேறே டாக்ஸிக்கு அலைய வேண்டாம். இதிலேயே திரும்பி விடலாம். இது ஐயா வண்டிதானுங்களே!''

என் வண்டியா! மரியாதைக்குத்தான் அவன் சொன்னாலும் அந்தச் சொற்களில் என்னுள் புதியதோர் உற்சாகமும் பெருமிதமும் கிளர்ந்தன. மாணிக்கம் கதவை மெதுவாக மூடிவிட்டு முன் ஆசனத்தில் அமர்ந்து 'வாடகைக்கு' என்ற அடையாளச் சின்னத்தைக் கீழே அமுக்கிவிட்டு மீட்டரைப் போட்டுக் கொண்டு வண்டியைக் கிளப்பினான். வண்டி இழைந்து செல்லலாயிற்று. அவன் சற்று நேரம் முன்பு ஓட்டி வந்த வேகம் எங்கே, இப்போதைய மெது எங்கே! எனக்கு வேகம் பிடிக்காதென்று இப்படிப் பக்குவமாய் ஓட்டுகிறான்: 'மாணிக்கம்! உனக்குத்தான் இன்னும் என்னிடம் எத்தனை விசுவாசமப்பா!' என் நெஞ்சு அவனை வாழ்த்தியது. கண்கள் அன்புக் கசிவில் ஈரம் கண்டன.

''நீங்க என்னை அனுப்பிச்ச பிறகு ஒரு பிரைவேட் வீட்டிலேதான் முதல்லே வேலைக்குப் போனேன், ஸார்! அப்புறம்தான் டாக்ஸி டிரைவராயிட்டேன்.''

''ஓகோ, அப்படியா?'' இத்தனை நேரம் அவனை விசாரிக்கவே யில்லையே என்ற உணர்வு தைக்கவும் குரலில் அக்கறை காட்டினேன்.

''அதுக்கப்புறம்தான் ஐயா காரை வித்துட்டாப்பலே இருக்குது.''

''ஆமாம்ப்பா.... நிலைமை....''

என்னை முடிக்க விடவில்லை அவன். என் இழிந்த கால நிலையை அறிந்தவனுதலால் முழு விளக்கத்தின் சிறுமையை எனக்கு அளிக்காமல் உற்சாகமாய், ''ஐயாவுடைய வண்டியை வாங்கினவங்க அதை டாக்ஸியாய் விட்டு, அதுக்கு நானே டிரைவராய் வந்து, ஐயாவுக்குச் சௌகரியமாய் இன்னிக்கு ஏத்திட்டுப் போக முடிஞ்சுது ரொம்ப ஆச்சரியமாய் இருக்குது ஸார், இல்லே?'' என்று கேட்டான்.

''ஆமாம்ப்பா. ரொம்ப ஆச்சரியம்தான்!'' என்றேன். குரல் தழுதழுத்தது. அவனைக் கும்பிட வேணும் போல் இருந்தது. மருமகளுக்கு மாமனார் பாரமாகி விட்ட பிறகுகூட முன்னாள் வேலையாள் அன்பு குன்றாமல் இருக்கிறான். பாசத்துக்கு விளைநிலமென்று தனியாய் ஒன்றேது?

போக வேண்டிய வீட்டு இலக்கத்தையும் நான் சொன்ன பிறகு அவன் ''இந்த இடம் நீங்க முந்திப் போய்க்கிட்டிருந்த எந்த இடமும் இல்லே போலிருக்குதே ஸார்? புது நண்பருங்களா?'' என்றான்.

''ஆமாம்.'' மேலே நான் விளக்கவில்லை. தெரிந்த ஒருவரின் சிபாரிசுக் கடிதத்தோடு மயிலைவாசி கணேசன் என்பாரிடம் அவரது சொந்தக் கம்பெனியில் எனக்கு ஒரு வேலை யாசிக்கச் சென்று கொண்டிருக்கிறேன் என் பதை இவனிடம் வெளியிட என்ன இருந்தாலும் மனம் இடம் தரவில்லை. என்னைச் செல்வாக்கின் உச்சத்தில் அறிந்தவன் இந்த மாணிக்கம். பணக்கார நண்பர்களின் வீடுகளுக்கு என்னைக் காரோட்டிச் சென்றவன். ஒரு நூறு ரூபாய் வேலை என் குடும்பத்தின் தற்போதைய நிலைக்கு மகனின் வருமானத்தோடு நல்லதொரு துணையாக அமையும் என்பதை இந்த அன்புடையானிடம் வெளியிடக் கூட நாக்கூசியது. இழிநிலையின் மிகப் பெரிய கொடுமை இத்தகைய மறைப்புக்கள் தாம் என்பதை உணர்ந்து உள்ளே மறுகுவதைத் தவிர வேறென்ன செய்வேன்? எனக்கு ஏன் இத்தகைய கதி வரவேண்டும்? சென்ற காலத்தின் இனிமையே நீடித்திருக்கலாகாதா? கடந்ததன் ஏக்கம் என்னை இரவு பகல் நோகச் செய்யும் வேதனையை யாரிடம் முறையிடுவேன்?

ஆனால் இப்போதைய இந்தச் சவாரி! என் கார், என் டிரைவர். என்னையறியாமல் மீண்டும் கால் மேல் கால் போடும் லாகவம் நிகழ்ந்து விட்டதை இரண்டாம் முறை நான் தடை செய்யவில்லை. வலது கை வெறுங்கோலைத் தடவ, இடக்கை லேசாக மீசையை வருடியது. புற உண்மையின் மாற்றங்களினின்று விடுபட்டுச் சிறிது நேரம் இதயம் பழைய வாழ்வில் சுருங்கிக் கொண்டது. சென்ற காலம் திரும்பி விட்டது. கிழிசல் சட்டைப் பையில் சில்லறையும் சிபாரிசுக் கடிதமும் மட்டும் கொண்டு செல்லும் வெறுங்கை வறியனில்லை இப்போது நான். என் அருகில் நாகரிகமான 'ஜிப்' தோல் பை இருக்கிறது. என் உடலில் டெரிலினின் சுருக்கமற்ற ஒளி பளீரிடுகிறது. மயக்கம் நீண்டது. கண் மூடி எனக்குள் அந்தரங்கமாய் விளைந்த சுகத்தில் ஆழ்ந்திருந்தேன். நெஞ்சப் படபடப்பும் தாழ்வு நிலையை ஏற்க மறுக்கும் புரட்சியின் துடிப்பும் சிறிது சிறிதாய்ச் சமனமுற்று மறைந்தன. நான் மீண்டும் லட்சாதிகாரி. நான் வாழ்வது பொற்பீடத்தில். அதை என்னால் மறக்க

விடை : நாடோடித் தலைவன் தன் தோழர்களை மறுபடியும் வரிசையாக நிறுத்தி வைத்து ஒவ்வொருவர் கையையும் முகர்ந்து பார்த்தான். எல்லோர் கையிலும் வாசனைத் தைலத்தின் நறுமணம் வீசியது. ஒரே ஒருத்தன் கையில் மட்டும் அது இல்லை. அவன் தான் திருடன்! புனிதக் கழுதைக்குப் பயந்து கொண்டு அதன் வாலையே அவன் தொடவில்லை. அதுவே அவனைக் காட்டிக் கொடுத்து விட்டது! — **காழி வ. மாணிக்கம்**



"எங்க வீட்டிலே, அப்பா - பிள்ளை ரெண்டு பேருக்குமே கிண்டிதான் உயிர்! என் கணவருக்கு ரேஸ் பைத்தியம். குழந்தை, கிண்டி இல்லேன்னு பால் சாப்பிட மாட்டான்!"

முடியுமோ? இறந்தது உயிருற்று வந்தாற் போல் சிறு பொழுது எனக்காகக் காலம் பின் நடந்து சென்று, முந்தைய நாளை என்முன் கொணர்ந்து காட்டும் இந்த அதிசயத்தையே, அதன் இனிமையின் லயத்தையே நான் இடையறாது அநுபவித்துக் கொண்டிருக்க வேண்டும்...

இழைந்து நெளிந்து ஓடிய வண்டியின் தாலாட்டு நின்றது.

"ஸார்!"

திடுக்கிட்டுப் பார்த்தேன். மாணிக்கம் எனக்காகக் கதவைத் திறந்து பிடித்தபடி நின்றிருந்தான். சிறிது நேரம் எனக்கு எதுவுமே புரியவில்லை. சுக நினைவோடு இழைந்து விட்ட போதையில் நான் உண்மை உலகுக்கு இறங்கி வரவில்லை. அர்த்தம் புரியாமல் விழித்துப் பார்த்தேன்.

"இறங்கறீங்களா ஸார்?"

"ம்?" நான் ஏன் வண்டியை விட்டு இறங்க வேண்டும் என்பதே புரியவில்லை.

"நீங்க சொன்ன வீடு வந்துட்டுது ஸார்! இறங்கிப் போய்ப் பேசிட்டு வாங்க. நான் காத்திருக்கிறேன்."

எனக்கு இன்னும் முழுத் தெளிவு ஏற்படவில்லை. கனவும் நினைவும் ஒன்றிவிட்ட மயக்கம் இன்னும் இழை பிரியவில்லை.

பக்கத்திலிருந்து மெதுவாய்ச் சிரிப்புச் சத்தம் வந்தது. தலையைத் திருப்பினேன். வண்டி நின்றிருந்த இடத்தின் அருகிலே வீட்டின் தோட்டத்து வேலி. அதை அடுத்து வீதி தெரிந்தது. அங்குதான் இரண்டு பேர் என் பக்கம் பார்த்துச் சிரித்தவாறு சென்று கொண்டிருந்தனர். ஒருவனின் பேச்சு என் காதில் விழுந்தது.

"நல்ல ஆளுதான்! டாக்ஸியிலிருந்து இறங்க மனசு வரல்லையாக்கும்!"

அந்த ஏளனத் தொனி தீக்கற்றையாய்க் காதில் விழவும் துடித்துக் கொண்டு கீழே இறங்கி நின்றேன். முழு விழிப்பு வந்துவிட்டாற்போல் என் கண்கள் விரிந்தன.

எனக்கு டாக்ஸியிலிருந்து இறங்க மனம் வரவில்லை! என்ன பேச்சு! ஐயோ, எத்தனை உண்மை! முன்காலச் சொந்தத்தை எண்ணி ஏக்க மயக்கத்தில் வண்டி என்னுடையதெனக் கற்பனை செய்துகொண்டே உள்ளே அமர்ந்திருந்தேனே, எத்தகைய கேலிக்கிடமான பைத்தியக்காரத்தனம்! அது வாடகை வண்டி. இரவல் பொருள். அதனின்று இறங்காமலேயே இருக்க முடியுமா?

சட்டென்று என் நெஞ்சம் ஸ்தம்பித்தது.

இறங்க எனக்கு மனமில்லை! இந்த டாக்ஸியிலிருந்து மட்டும்தானா?

ஏதேதோ எண்ணங்கள் என்னுள் குழம்பின. சென்றதிலேயே ஆழ்ந்திருப்பது மட்டும் அறிவீனமல்லவா, இப்போது இந்த டாக்ஸியிலிருந்து இறங்காமல் இருந்தது போல்? அடைந்ததில் திருப்திகொண்டு இன்று உள்ளதை உண்மையென ஏற்று அடுத்து வருவதை உற்சாகமாய் எதிர் கொள்வதல்லவா தெளிவுற்ற வாழ்க்கை? வாழ்வின் இன்ப துன்பங்கள் அனைத்தும் கடந்து செல்கின்ற இரவல் பொருள்கள்தாமே! அவை ஒவ்வொன்றினோடும் ஒட்டிக் கொண்டு, 'இதை விட்டுப் பிரிந்து வரமாட்டேன்' என்று அழுவது...! உண்மையாகத்தான் நான் கடந்த ஐந்தாண்டு காலமும் டாக்ஸியினின்று இறங்க மனமில்லாமலே இருந்திருக்கிறேனா?

தெளிவு முழுவதுமாய்ப் பிடிபடவில்லை. ஆனால் உள்ளத்தின் ஆழத்தில் புது விதக் குழப்பங்கள். இந்தக் குழப்பங்களினூடே நன்மை பிறக்கும் என்பதொரு வாக்குறுதி அவற்றில் இருப்பது போல, எதையோ புரிந்து கொள்ளத் தொடங்கும் கிளர்ச்சியை இதயத்துள் உணர்ந்து நெடுமூச்செறிந்தேன்.


பையிலிருந்து பர்சை எடுத்தவாறு "மீட்டரைப் பார்த்துச் சொல்லப்பா, என்ன சார்ஜ்?" என்றேன் சுருக்கமாக.

"திரும்பி உங்களை வீட்டிலே கொண்டு விட்டுட்டு ஒண்ணு வாங்கிக்கறேன், ஸார்! நீங்க உள்ளே போய் வரவரைக்கும் இங்கேயே காத்திருக்கேன். வெயிட்டிங் சார்ஜ் கூட நீங்க தரவாணும்."

"அதெல்லாம் வேணும் மாணிக்கம். அது நியாயமில்லை. நீ என்னைப் பத்திக் கவலையில்லாம கிளம்பிப் போ. நான் வேற டாக்ஸி புடிச்சுக்கிட்டுத் திரும்பிடறேன். நீ இருக்கேன்னு சொன்னதுக்கு ரொம்ப நன்றியப்பா! நீ பிள்ளை குட்டிகளோட நல்லாயிருக்கணும்."

பணத்தை அவனிடம் கொடுத்து விட்டுப் புது வாழ்வின் வாயிலென அந்த வீட்டினுள் நுழைந்தேன்.

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan



லட்சியத்திரு

கோமகள்

அட்டைப் படக் கதை

தி. நகர் பஸ் நிலையம் ஒரே பரபரப்பில் மூழ்கி யிருந்தது. அலுவலக நேரமில்லை என்றாலும்கூட இங்கு கூட்டத்துக்குக் குறைவில்லை. தூரப் பயணத்துக்கான பஸ் நிறுத்தத்தின் எதிரே இருந்த இடத்தில் நானும் மாலாவும் உட்கார்ந்து கொண்டோம். சாளரத்தின் வழியே வெளியே தெரிந்த பிரும்மாண்டமான சினிமா விளம்பரம், அதையடுத்துக் கியூவில் பிதுங்கி வழியும் கூட்டம்; கடைகளின் ஆரவாரம். கொளுத்தும் வெய்யிலில் உருகும் தாரின் பளபளப்பு, கானல் நீராக ஆடும் தரையைக் கிழித்துக் கொண்டு சற்றைக்கொரு தரம் வருவதும், புறப்படுவதுமாக இருந்த பஸ்கள்.

சரியாக மணி இரண்டு. நாகப்பட்டினம் பஸ் வரும் நேரத்தை அறிவிக்கும் பலகை மாட்டப்பட்டது.

''நம் பஸ் பாரிஸ் கார்னரை விட்டு இந்த நேரம் புறப்பட்டிருக்கும். இன்னும் இருபதே நிமிடங்களில் நாம் பஸ்ஸில் இருப்போம்'' என்றாள் மாலா.

''உம்! நிலையத்துக்கு வந்ததும் சொல்கிறேன் என்றாயே. யாராம் அந்தப் பையன்? என்ன படிப்பு? எங்கு வேலை? கடைசியில் வழிக்கு வந்து விட்டாயே? புகைப்படம் அனுப்பினார்களா? எனக்குக் காட்டவில்லையே நீ?'' என்று அடுக்கினேன் நான்.

சாவதானமாக ஒரு புன்னகை செய்தாள் மாலா. ''நாம்தான் மனம் விட்டுப் பேசி எத்தனை நாட்களாயிற்று? சொல்கிறேன். எல்லாவற்றையும் சொல்கிறேன். பையன் கிராஜுவேட் என்றார்கள். கண்ணுக்கு லட்சணமானவன் என்று அப்பா எழுதுகிறார். வசதியும் உள்ள குடும்பம் என்பது அம்மாவின் எண்ணம். ஏதோ ஒரு கம்பெனியில் இருக்கிறாராம். எனக்கு இதைப் பற்றி யெல்லாம் கவலையில்லை, சாந்தி. என் லட்சியங்களுக்கு அவர் ஒத்தவரா என்பதுதான் நான் அறிய வேண்டியது. மற்றத் தகுதிகள் நடுத்தரமாக இருந்தாலும் போதும். உயர்ந்த குணமும் மேன்மையான மனமும் இருந்தால் எனக்குப் பிடித்து விடும்.''

''ஓ! இப்போதும் நீ அரை மனத்தோடுதான் புறப்பட்டாயா? என்ன பெண்ணடி நீ? நம் பிரயாணம் வீணாயிடும் போலிருக்கே. என்னை வேறே மூன்று தினங்கள் அநாவசியமாக 'லீவ்' போட வச்சியேடீ...''

''நீதானே இப்போது ரொம்ப முக்கியம்! நீ அவரைச் சில கேள்விகள் கேட்டு அவரை எனக்கு உணர்த்தி, என்னை அவருக்கு உணர்த்தி ஒத்துப் போகுமா என்று பார்க்கப் போகிறாய்!''

''ஆனாலும் நீ பைத்தியக்காரிடி. யாரானும் கேட்ட பேர் சிரிக்கப் போகிறாங்க. பையனை மிரண்டு தோற்று ஓடி விடுவான்.''

''அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை.''

''உனக்கென்ன கவலை வந்தது? எல்லாவற்றையும் தூக்கி உங்கப்பா, அம்மா தலை மேலே வச்சிடப் போறே.''

''என்னை உனக்குப் புரியாது சாந்தி...''

''என்னடி இது புதுசாச் சொல்றே? உன்னையா எனக்குத் தெரியாதுங்கறே?''

''என்னைப் பத்தி என்ன புரிஞ்சுது? சொல்லேன்...'' என்று சீண்டினுள் மாலா.

''எதிலேயும் லட்சியம், கொள்கைன்னு ஒரு பிடிவாதம் உனக்கு. மணிமேகலைக் கொள்கையை ஆதரித்து வந்த நீ ஒரு படி கீழே இறங்கி வந்து, 'சரி! இப்படிப்பட்டவனுக இருந்தால் கல்யாணம் பண்ணிப்பேன்'னு சொல்றே'' என்றுள்.

''ரைட்டோ! உனக்கு அப்படியெல்லாம் மனசுக்குள் கொள்கை இல்லை...?''

''நிச்சயமா இல்லை...''

''சரி. இப்படித்தான் வரப் போகிறவர் இருக்கணும்னு நினைக்கல்லேங்கறே. இப்படிப் பட்டவரா இருக்கக் கூடாதுன்னு நினைக்கல்லையா?''

''நான் எதையும் நினைச்சதில்லையடி இவளே...''

''பொய்! பொய்! நீ நினைச்சதோடக் கூட மறுக்கவும் செய்திருக்கே...''

''என்னடி உளர்றே?''

''உளறல்லே சாந்தி. நீ இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்பட மறுத்து விட்டாய். உன் சகோதரியின் கணவராக இருந்தும் கூட. மண வாழ்வின் ஆரம்பத்திலேயே இரு குழந்தைகளையும் ஏற்று வளர்க்கப் பிரியப்படவில்லை. அவை உன் உடன் பிறந்த ரத்தத்தின் குழந்தைகளாக இருந்தும் கூட.''

''மாலா! நீ அளவு மீறி என்னைச் சீண்டுகிருய்....''

''நான் சீண்டவில்லையே. நீ எதை இல்லை என்றுயோ அதை உண்டு என்று நிரூபிக்கிறேன். உலகில் எல்லோருமே தானறியாமல் ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கவே செய்கிருர்கள். சிலர் என்னைப் போல் வெளியில் சொல்லி விடுவதால் தீவிரமாக இருப்பதாக நினைக்கிறோம். சிலர் உன்னைப் போல் மௌனமாகவே காரிய சாதனையில் ஈடுபடவோ, எதிர்க்கவோ செய்கின்றனர். இல்லையா, சாந்தி?''

நான் சிறிது நேரம் எதுவுமே பேசாமல் உட்கார்ந்திருந்தேன். எதிரே பஸ்களின் நெரிசலில் ஓர் உருவம் தெரிகிறது. ஆ! அது என் அக்காவின் கணவர் மாதவன். அக்கா இருந்தபோது எப்படி இருந்த அவர் எப்படி மாறி விட்டார்! சதா அவர் முகத்தில் குறுகுறுக்கும் புன்னகையும், பேச்சில் மிளிரும் குறும்பும் எங்கே போயின? உயிரான மனைவியை இழந்த துயர் இருக்காதா பின்னே? ஆனுல் கூடவே சின்னஞ் சிறு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு அவர் துன்பப்படுகிருர். அவர் மீது அன்பும், அநுதாபமும் எனக்கு உண்டுதான். இருந்தாலும் என் பெற்றோர் எனக்கு வரன் தேடுவதைச் சட்டென விட்டு விட்டு அவரைக் கைகாட்டிய போது நான் அயர்ந்து போய் நின்றேன். பிரமிப்பு நீங்கியதும் கோபம் குமுறியது. நான் எந்த விதமான லட்சியங்களையும் வளர்த்து வரவில்லை என்றுலும் அந்த முடிவை என்னுல் ஏற்க முடியவில்லை. போயும் போயும் இரண்டாந்தாரமாக, ஆரம்பத்திலேயே இரு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு...—அக்கா கணவர்தானென்றுலும் அவரது புதுமை உணர்வுகள் மங்கிய மண வாழ்வில் எனக்கு என்ன சுகம் கிடைத்துவிட முடியும்?

அதோ அவருக்குரிய பஸ் வந்துவிட்டது. அதில் அவர் ஏறி மறையும்போதுதான் எனக்குக் கொஞ்சம் நிம்மதி ஏற்படுகிறது. அவர் பார்வையில் பட்டுப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுவதை நான் விரும்பவில்லை.

எக்ஸ்பிரஸ் பஸ் தி.நகர் பஸ் ஸ்டாண்டை விட்டுப் புறப்பட்டதுமே பஸ்ஸில் பெருத்த குரலில் பேச்சும் சிரிப்பும் அமர்க்களப்பட்டன. சட்டெனத் திரும்பிப் பக்கவாட்டில் நோட்டமிட்டேன். நாலைந்து 'சீட்'டில் சேர்ந்தாற்போல் அமர்ந்திருந்த அத்தனை பேரும் என் அலுவலகத்தில் வேலை செய்யும் ஆட்கள். வேறு பிரிவு என்றுலும் தினசரி காண நேரும் என்பதால் அவர்களை நன்றுக அடையாளம் புரிந்தது. இத்தனைபேரும் ஒன்றுக எங்கே கிளம்பினுர்கள்? ஆபீஸுக்குக்கூட இவர்கள் சேர்ந்தாற்போல் வரமாட்டார்களே! என்ன பேச்சு, என்ன சிரிப்பு...

குனிந்த தலை நிமிராமல் போவார்களே இந்த ஜூனியர் இன்ஜினியர் குமாரும், டைப்பிஸ்ட் சங்கரனும். அவர்களும் கூட வல்லவா ஒரு மாதிரி பேசுவதும், சிரிப்பதுமாக உற்சாகம் பிடிபடாமல் துள்ளுகிருர்கள்!

''டேய்! இந்தப் பிரயாணம் நின்றிருக்க வேண்டியது. நம்ப சங்கரனுக்கு ஒரே பிடிவாதம்...'' என்றவாறே ரசனையோடு மூக்குப் பொடியை உள்ளுக்குள் இழுத்த ஆனந்த ரீங்காரத்துடன் பேசினுர் அக்கவுண்டெண்ட் வரதராஜன்.

''உங்களுக்குத் தெரியாதா சார்! ருசி கண்ட பூனை உறியைத் தாவிற்றும்?''

'ஓ...ஓ...ஹோ' வென்ற இரைச்சலான சிரிப்பு. எனக்கு நேர் எதிர் ஸீட்டில் அமர்ந்திருந்தவர் எழுந்து தம் மனைவியை ஜன்னலோரம் அமரச் செய்து தாம் ஓரச் சீட்டில் அமர்ந்தார். முடிந்த அளவு பிறர் கண் பார்வைக்குத் தப்ப வைத்த காவல் அது!

எந்தத் திரைப்படத்தில் எந்தக் கதாநாயகியின் கவர்ச்சி நடிப்பு இனிமையாக இருக்கிறது, எந்தக் கதாநாயகனும் கதாநாயகியும் நெருங்கி நடிப்பார்கள் என்ற சுவாரசியமான பேச்சில் ஆளுக்கு ஆள் மாறும் ரசனைகளைப் பரிமாறிக்கொண்டு பஸ்ஸிலிருந்த மற்றப் பெண்களை நோட்டமிட்டுவிட்டுப் பெருமிதத்தோடு பேச்சுக்குத் திரும்பிய வண்ணமிருந்தனர். என்னுள் எரிச்சல் மூண்டது. பஸ் பாலாற்றங்கரை ஹோட்டல் எதிரில் நின்றபோது எல்லோரும் இறங்கிச் செல்ல ஆரம்பித்தனர். எங்கள் எதிர் சீட்டு மனிதர் மட்டும் மனைவியை ''இறங்க வேண்டாம். உனக்குக் காப்பி வாங்கி வந்து தருகிறேன். சுத்தப் பொறுக்கிகள். குடும்பப் பெண்கள் இருப்பதை நினைக்கிருன்களா?'' என்று முணுமுணுத்தவாறே எரிந்து விழுந்து விட்டுப் போனுர்.

சிறப்புச் சிறுகதை

ஒரு தீமையைக் கொல்ல ஒரு நன்மையைத் தியாகம் செய்யணும். தீமை அழிந்த பின் எஞ்சிய எல்லாமே நன்மைதானே? கொட்டிலுக்கும், சாம்பிராணிப் புகைக்கும் உள்ள சம்பந்தம் போல்தான் இது. கொட்டிலுக்குச் சாம்பிராணியாகும் அவளும் கோவிலுக்குச் சூடமாகும் நானும் ஒன்ருக முடியுமா? இந்தப் புதிரை எத்தனை அழகாக விடுவிக்கிறது இந்தச் சிறப்புக் கதை :

நான் அப்போதுதான் மாலாவைப் பார்த்தேன். அவள் புத்தகத்தைப் புரட்டும் பாவனையில் அதைப் படிக்காமலேயே உட்கார்ந்திருந்தாள். ''உனக்குக் காப்பி வேண்டுமாடி இவளே...'' என்றேன் நான்.

''எனக்கு வேண்டாம். நீ வேண்டுமானுல் போய்ச் சாப்பிட்டுவிட்டு வா...''

''எனக்குத் தேவையில்லே. இந்தப் பிஸ்கட் வேணு சாப்பிடலாம்'' என்று பொட்டலத்தைப் பிரித்து அவளிடம் இரண்டைத் தந்துவிட்டு நானும் இரண்டு எடுத்துக்கொண்டேன். அதன் ஒரு மூலையைக் கடித்தவாறே ''பார்த்தாயல்லவா இந்த 'கேங்'கை. எல்லாம் என் ஆபீசைச் சேர்ந்ததுகள்'' என்றேன்.

''உன் ஆபீசைச் சேர்ந்தவர்களா? அப்படியானுல் அவர்களுக்கும் உன்னைத் தெரியும் என்று சொல்...''

''தெரிவதால் என்ன வந்தது? ஒவ்வொருத்தரும் தன்னையே பெரிய ஹீரோவா நினைக்கிற காலமில்லையா? இந்த செட்டில் ஒரு சில நல்லவர்களும் எப்படிச் சேர்ந்தார்கள்னு தெரியலே. பூவோடு சேர்ந்தால் நாருக்கு மணம் வரும். இதுகளோ பன்றியோடு சேர்ந்த கன்றுகளாகின்றன...''

''என்ன மோசம் சாந்தி? நம் நாட்டிலே படிச்சவங்க கூட ஒரு சராசரி மதிப்பீட்டிலே உயர முடியாமல் இப்படிக் கேவலமாக ஆகிப் போருங்க இல்லையா? ரொம்பப் பாவமாக இருக்கு இவர்களைப் பார்த்தால். சனி ஞாயிறு லீவுக்கு எக்ஸ்கர்ஷன் போருங்க போலேயிருக்கு...''

''எக்ஸ்கர்ஷனு? இந்த 'செட்' அப்படியே பாண்டி போகிறது.''

''நிஜம்மாவா சாந்தி?''

''ஏன் நீ பதற்றப்படறே? அவங்க பேசினதிலிருந்து ஊகிக்க முடியலியா?''

''நீ தப்பா சொல்றே, சாந்தி. அந்தச் செட்டிலே கொஞ்சம் வயசானவங்க இருக்காங்க; நடுத்தரம் இருக்கு. கல்யாணம் ஆகாதவங்களும் இருப்பாங்க போலிருக்கு...''

''நீ சொல்கிறது சரிதான் மாலா. ஒல்லியா உயரமா வழுக்கைத் தலையோட இருக்கிருரே ஒருத்தர். அவர்தான் அக்கவுண்டெண்ட். நாற்பத்தைந்து வயசிருக்கா்தா அவருக்கு? அவரோட அஸிஸ்டெண்ட் பக்கத்திலே இருந்தவர். அந்த அடுத்த சீட்டில் கட்டை குட்டையாக உட்கார்ந்திருந்தாரே அவர் லெட்ஜர் குமாஸ்தா ராமசாமி. அவர் அருகே இருந்தவர் ஸ்டோர் அஸிஸ்டெண்ட் ரங்கநாதன். இந்த நான்கு பேருக்குமே கிட்டத்தட்ட ஒரு வயசுதான். வீட்டிலே மனைவியோடும், நிறையக் குழந்தைகளோடும் வாழுகிறவங்கதான்...''

''எத்தனை பெரிய துரோகிகள்...!''

''சம்பாதிக்கிறதிலே ஒரு பகுதியை மனைவி குழந்தைகள் என்று நினைத்துத் தருகிருர்களே, அதுவே ஒரு பெரிய தியாகம் என்று வைத்துக் கொள் மாலா...''

''உம்! அந்த மற்றவர்கள் கூட உன் ஆபீஸ் தானு...?''

''ஆமாம், ஆமாம்! அவர்கள் பிரிவு வேறு. அவ்வளவுதான். இதோ இந்த சீட்டில் உட்கார்ந்திருந்தவர் உதவி குமாஸ்தா நீலகண்டம். அவர் பக்கத்தில் கறுப்பாக ஒல்லியாக ஒருத்தர் இருந்தாரே அவர்தான் டைப்பிஸ்ட் ரத்தினம். இந்த இரண்டு பேருக்கும் சின்ன வயசுதான். கலியாணமாகி விட்டது. மனைவிகளை பீச்சுக்கும், சினிமாவுக்கும் அழைச்சிண்டு போறதிலே குறைச்சல் இல்லே. அவர்கள் கிட்ட என்ன காரணத்தைச் சொல்லிவிட்டு வந்தார்களோ..... அதோ அந்த முதல் சீட்டிலே ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந்தவர்தான் ஜூனியர் இன்ஜினியர் குமார். அடுத்து உட்கார்ந்திருந்தது டைப்பிஸ்ட் சங்கரன். இரண்டு பேரும் 'பேச்சிலர்ஸ்'. ரொம்ப நல்லவங்களாக இருந்தவங்க...''

''இருந்தவங்க என்ருல்...?''

''இப்போது இல்லைன்னு அர்த்தம்.''

''அதெப்படி நீ சொல்றே?''

''பேச்சின்போது சங்கரனுல்தான் இந்தப் பிரயாணம் ஸ்திரமாச்சுன்னு சொன்னுர்களே... அப்புறம் குமார் ஒருத்தர் பாக்கி. இந்தக் குழுவோட புறப்பட்டபோதே தெரியலியா அவர் வள்ளலும்...''

இதற்குள் எதிர்த்தசிட்டுக்காரர் மனைவிக்குக் காப்பி வாங்கித் தந்துவிட்டு வந்து உட்கார்ந்தார். ஹோட்டலை விட்டு அந்தக் குழு வெளியேறிக் கொஞ்சமும் சிரிப்பின் அட்டகாசம் குறையாமல், தம்மைச் சுற்றிலும் உண்டாகும் புகை மண்டலத்தைக் கருத்தில் கொள்ளாமல் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரத்திலேயே ஒவ்வொருத்தராகப் படியேறும் போதே உள்ளே இருந்த பெண்களை நோட்டமிட்டவாறே வந்து அமர்ந்தனர். இப்போது எங்கள் பக்கவாட்டு ஆசனத்தில் டைப்பிஸ்ட் சங்கரனும், ஜூனியர் இன்ஜினியர் குமாரும் உட்கார்ந்திருந்தனர். அந்தக் குழுவின் மற்றவர்கள் எங்களையும் அவர்கள் இருவரையும் பார்ப்பதையும், ஒருவருக்கொருவர் கண் சிமிட்டியவாறே கீழ்த்தரமான சமிக்ஞைகள் செய்வதுமாக இருந்தனர். மாலா முகத்தைச் சுளித்துக் கொண்டாள்.

''பாவம் குமார்! இன்னிக்கு அவனுக்குப் பாண்டியிலே ஜோலி யில்லே. நேரே கடலூர் போருர்....'' என்று அநுதாபக் கணை விடுத்தார் உதவிக் குமாஸ்தா நீலகண்டம்.

''ஆனல் பாருங்க நீலகண்டம், இன்றைக்கே அவன் பெயருக்கு அறை எடுக்கச் சொல்ருன். நாளைக்குக் கிடைக்காதோ என்ற பயம்....''

''ஓ...கோ...கோ... அப்படியா? ராத்திரிக்கு உனக்குத் தூக்கம் வராதே குமார்... மை ஹார்ட்டி கண்டலென்ஸஸ் டு யூ...!''

''குமார், நாளை ராத்திரி வந்துட முடியுமா?''

''நிச்சயம் வந்துடுவேன்.''

''நாளைக்கே முகூர்த்தத் தேதி வைச்சாக்கூடப் பயல் இந்த மூலை நோக்கித்தான் ஓடி வருவான்'' என்று முதுகைத் தட்டிக் கொடுத்தான் சங்கரன்.

''அந்தக் குறிப்பிட்ட கடையில் குறிப்பிட்ட விஷயத்தைக் கூட முன்னதாக வாங்கி வைக்கச் சொல்லி யிருக்கானே குமார்....''

'சர்' என்ற ஒலியோடு நாங்கள் சென்று கொண்டிருந்த பஸ் நின்றுவிட்டது. டிரைவர் பரபரப்போடு இறங்கினர். கண்டக்டரும் ஓடினர்.

இரவு நேரத்தில் வீடு போய்ச் சேர வேண்டிய மற்றப் பிரயாணிகளெல்லாம் பொறுமையோடிருக்க, பாண்டிக் குழு பொறுமையின்றித் தவித்தது.

''என்னப்பா ரிப்பேர்? பஸ் புறப்படுமா? புறப்படாதா?'' என்று கேட்டவாறே தபதப வெனக் கீழே இறங்கினர்.

''பத்தே நிமிஷங்கள், ஸார்'' என்று விடை வந்தது.

''அடடா! நல்ல பஸ். சரியாக ஐந்துக்கெல்லாம் பாண்டி சேர்ந்துடலாமுன்னு நெனச்சோமே... மணி நாலரை ஆகிவிட்டதே. திண்டிவனம் தாண்டவில்லையே.. என்னப்பா டிரைவர்....''

''இதோ ஆச்சு ஸார்!''

கிட்டத்தட்ட அரை மணி நேரமாகிவிட்டது பஸ் கிளம்ப. சுற்றிலும் இருள் சூழ ஆரம்பித்து விட்டது. மாலா தலையைப் பற்றியவாறே சாய்ந்து விட்டாள்.

''தலையை வலிக்கிறதா மாலா?''

''இந்த நிஜ இளைஞர்களும், போலி இளைஞர்களும் போடும் கூச்சலில் தலை மட்டுமா வலிக்கும், மனம் கூட வலிக்கிறது, சாந்தி...''

''உனக்கேன் இந்தக் கவலை? உலகின் ஒரு பகுதியில் இப்படிப்பட்ட ஏடாகூடமான செயல்கள் மலிந்திருக்கவே செய்யும்.''

''பவித்திரமான அர்ப்பணத்துக்காக ஒரு பெண் தன்னைச் சமர்ப்பிக்க ஓர் ஆடவன் வாழ்வில் வருகிருள். அவளே தன்னைப் பாதுகாத்துக் கொண்டு அவனுக்காக எதிர்பார்த்துக் காத்திருப்பதில்லை. அவனுக்குரிய கட்டுப்பாடும், சட்டதிட்டங்களும் குறைவு என்பதால் தன் சூழ்நிலைக் கேற்ப மனத்தை அலைய விடுவதும், தறிகெட்டுப் போவதும் சரிதானு?''

''ஏதேது? நீ இந்தக் குழுவை வைத்து எல்லா ஆடவரையும் ஒரு சமத்தில் பேசுகிருயா...?''

''தீமைகளுக்கு வெற்றி சீக்கிரம் கிட்டுவது போல் இந்தக் குழு முழுவதும் சேர்ந்தால், இதைப் போல ஒரு பத்துக் குழுக்களை நாசமாக்கிவிடும் சாந்தி...''

''அதற்காக நாம் என்ன செய்ய முடியும்? இதற்கென்று ஒரு சீர்திருத்தத்தைத் தனியாக ஆரம்பித்து நடத்த நம்மாலாகுமா? பெண்களடி நாம்...!''

''இப்படி ஆண்கள் மாறிப்போக ஓரளவு பெண்கள்தான் காரணம் என்றும் சொல்லலாம். மணமாகிக் குழந்தை குட்டிகள் உள்ள ஆடவரும் இப்படிப் போலியான ஒரு சுவையைத் தேடி வருவதென்ருல், அவன் உல்லாசத்துக்கு மனைவி ஒத்து வரவில்லை என்று தானே பொருள்? கணவனின் விவகாரங்களில் சம பங்கு எடுத்து உதவவோ, உல்லாசத்துக்கு ஒத்து வரவோ இல்லாமல் தனித்துக் குடும்பம், குழந்தைகள் என்று நின்று விடுவதால் குடும்பம் தனி, குடும்பத் தலைவனின் நடத்தை தனி என்று வேருகி விடுகின்றன.''

''எந்தப் பிரச்னைக்குமே நீ ஒரு கோணலான வழி காண்பாய். எனக்குப் புரியாதம்மா...''

அதோ பாண்டியின் 'ஹோப்பித்தால்' தெரிகிறது. பாதையில் நெரிசல் காண்பதால் எக்ஸ்பிரஸின் வேகம் கொஞ்சம் குறைகிறது. மறுபடியும் அந்தக் குழுவினர் முணுமுணுக்கின்றனர்.

இப்போது வண்டி கடைத் தெருவில் ஓடியது. மதுபான வகைகளின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கடைகளின் பெயர்கள் ஒளி மயத்தில் பிரகாசித்தன. சங்கரன் அப்படிப்பட்ட ஒரு கடையருகே பஸ் மெல்ல ஊர்ந்தபோது, ''நான் புட்டியோடு வருகிறேன். நீங்கள் முன்னே போறீங்களா?'' என்று மட்டமான மகிழ்வு தோன்ற விரைவாக எழுந்தான்.

''ஓ, எஸ்!'' குழு குரல் கொடுத்தது.

''கண்டக்டர்! கொஞ்சம் கதவைத் திறந்து விடேன். 'மூவி'ங்லேயே இறங்கிக்கறேன். பஸ்ஸைத்தான் லேட்டாகக்கொண்டு வந்தே. இந்த உதவியாவது பண்ணேன்...''

''அது மட்டும் வேண்டாம். சட்ட விரோதம். இதோ பஸ் ஸ்டாண்ட் வந்துவிடும்.''

சங்கரன் முணுமுணுப்புடன் உட்கார்ந்து கொண்டான். பஸ் ஸ்டாண்ட் வந்ததும் எல்லோரும் இறங்கிக் கொண்டனர். ஜூனியர் இன்ஜினியர் குமார் மட்டும் உட்கார்ந்திருந்தான்.

''நாளைக்கு நிச்சயம் வந்து விடுவேன். விஷ்யூ ஆல் குட்லக்!'' என்று குமார் மற்றவர்களுக்குக் கையசைத்தான்.

இதுவரை சந்தையைப் போலிருந்த பஸ் ஆரவாரம் அடங்கி அமைதி கண்டது. அடுத்து பஸ் கடலூரில் நின்றபோது குமார் இறங்கிக் கொண்டான். கோஷ்டியைப் பிரிந்ததிலிருந்தே சாதுப்பிள்ளையாக மாறிவிட்டிருந்தான் அவன். கொஞ்ச நேர நிறுத்தத்துக்குப் பின் சிதம்பரம் பாதையில் பஸ் ஓடிக் கொண்டிருந்தது.

''அடி இவளே! உனக்கு ஒரு திடுக்கிடற விஷயம் சொல்லப்போகிறேன்'' என்று ஆரம்பித்தாள் மாலா.

''அது என்னடி அப்படிப்பட்ட விஷயம்?''

மாலா தன் கைப்பையைத் திறந்து உள்ளேயிருந்து ஒரு புகைப்படத்தை எடுத்துத் தந்தாள். சற்று முன் பஸ்ஸிலிருந்து இறங்கிப் போன குமாரின் படம் அது.

''இது ஏது உன்னிடம்?''

''எப்படி வந்திருக்கும். யோசித்துப் பாரேன்.''

''அப்படியானால்.... சற்று முன் அவர்கள் பேசியபோதுகூடத் தெரிந்ததே, அவன் பெண் பார்க்கப் போகிறான் என்று. ஓ! புரிந்து விட்டது. அவன் பார்க்கப் போகும் பெண்ணும் இதே பஸ்ஸில் பிரயாணம் செய்கிறாள் என்பது தெரியாது அவனுக்கு. அப்படித்தானே மாலா?''

''சந்தர்ப்பங்கள் என்னைச் சதிசெய்யவில்லை, சாந்தி. நான் தப்பித்துக்கொள்ள முடியும்.''

''ஏண்டி இதை முதலிலேயே என்னிடம் சொல்ல வில்லை?''

''உன்னிடம் முதலில் காட்டியிருந்தால் நீ அவனிடமே ஏதாவது கேட்டு வைப்பாயே என்ற பயம்தான்.''

''உண்மைதான். அப்படியும் செய்வேன். அதுதான் முதலில் நீ திடுக்கிட்டவாறே கேட்டாயா? இப்போது என்ன செய்யப் போகிறாய்? போனதும் உன் அப்பா, அம்மாவிடம் கூறிவிட வேண்டியதுதானே?''

''வேண்டாம். நாளை வரட்டும். நேரிலேயே கேட்டுவிடலாம். நம்மைக் கண்டதுமே அடையாளம் புரியாமலா போகும்?''

''அதுவும் சரிதான். எல்லாவற்றையும் கேட்டுவிடலாம். கொஞ்சம் அவமான உணர்ச்சியைத்தான் தூண்டி விடட்டுமே...''

நாங்கள் சிதம்பரத்தை அடைந்தபோது இருள் கோத்துக் கொண்டு விட்டது. மாலாவின் வீட்டுக்குப் போனதும் குளியல் சாப்பாடு எல்லாம் ஆனதும், படுத்தது தான் தெரியும். விடிந்த பொழுதின் மலர்ச்சியில்தான் கண் விழித்தேன். மாலா இரவில் சரியாகத் தூங்கவில்லை போலும். முகமெல்லாம் வாடி, கண்கள் சிவந்திருந்தன.

பூஜைக்குரிய மலர்களை நானும் மாலாவும் தொடுக்கவாரம்பித்தோம். உள்ளே மாலாவின் அம்மா ஏதேதோ பலகாரங்கள் செய்வதும், பரபரப்பாகக் காரியங்கள் செய்வதுமாக இருந்தாள். அவள் அப்பா அடுத்த வீட்டிலிருந்து இரவல் வாங்கிய நாற்காலிகளை ஓரிடத்தில் பாங்குற வைத்துக் கொண்டிருந்தார்.

''பாவம்! உன் பெற்றோர்கள்! அவன் வந்ததும் உன் பெற்றோர்கள் உபசரிப்பார்கள். நம்மைக் கண்டதும் மிரள்வான். நீ கேட்கும் கேள்வியில் அரண்டு விடுவான். உன் அப்பா அம்மாவுக்கு இந்த வரனும் இப்படிக் கை நழுவுகிறதே என்று இருக்கும்.''

''சாந்தி! இதைப் பற்றித்தான் நான் இரவு முழுதும் சிந்தித்துக் கொண்டிருந்தேன். நன்றாக யோசித்துப் பார்த்தால் இதில் மறுப்பதற்கே இடமில்லை போல் தோன்றுகிறது. நாம் நேற்று அந்த பஸ்ஸில் வராமலிருந்தால் குமாரைப் பற்றி எதுவுமே தெரி

மறைந்த பணப்பை

(சிங்காரத்தின் ஊகங்கள்)

1. பராங்குசத்தைத் தாக்கியவன் அந்த அறைக்குள் வாசல் வழியாக நுழைந்திருக்க முடியாது. ஏனென்றால் அந்த அறைக்குள் நுழையப் பராங்குசத்திடம் ஒரு சாவியும் ஹோட்டல் முதலாளியிடம் ஒரு சாவியும் இருந்தன. பராங்குசம் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்ததும் அவரது தலையின் பின் பக்கத்தில் தாக்கி யிருக்கிறான் திருடன். அப்போது அவர் கையிலிருந்த சாவி கீழே விழுந்திருக்கிறது. சிங்காரம் வந்தபோதும் அது அங்கேயே அப்படியே கிடப்பதைக் கண்டான். அப்படியானால் அவர் அடிபட்டு மயங்கி விழுந்ததும் உட்புறம் இருந்த திருடன் கதவைச் சாத்தி யிருக்க வேண்டும். அது மூடியதும் தானாகப் பூட்டிக்கொள்ளும் தன்மையுடைய கதவு. திருடன் சாவியை உபயோகித்து வெளியேற வில்லை என்பதை அங்கேயே கிடந்த அவரது சாவி கூறியது. ஆகவே திருடன் வேறு மார்க்கமாகவே உள்ளே வந்து வெளியேறி யிருக்கிறான்.

2. நுழைவாசல் வழியாக உள்ளே வரா விடில்? ஜன்னல் வழியாக உள்ளே புகுந்திருக்க வேண்டும். அது சாத்தியமா? நிர்மாணமாகிக் கொண்டிருக்கும் புதுக் கட்டிடத்தையும் தற்போதுள்ள கட்டிடத்தையும் இணைத்தது ஒரு குழாய்க் கம்பி. அதில் தொங்கும் விளம்பரப் பலகை. அதன் வழியே வருவது ஒன்று தான் சாத்தியம். இதைச் சாதாரண மனிதன் செய்திருக்க முடியாது. அப்படியானால்? கயிற்றில் நடக்கும் திறமை பெற்ற கலைஞனால்தான் முடியும் என்பது சிங்காரத்தின் ஊகமாகிறது.

3. கயிற்றில் நடப்பவர், தான் நிதானம் இழக்காதிருக்கக் கையில் ஒரு குச்சியை வைத்துக் கொண்டுதான் 'பாலன்ஸ்' பழகுவார்கள். பராங்குசத்தின் படுக்கை அறைக்கு நேர் எதிரேயுள்ள புதுக் கட்டிடத்தின் காலி அறையின் ஜன்னலருகே இந்தச் செயலுக்குப் பயன்படும் ஒரு கம்பு சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருந்தது, சிங்காரத்தின் ஊகத்தை உண்மையாக்கிவிட்டது. பராங்குசம் தன் நண்பர் வீட்டில் தாமதித்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பசுபதி அறைக்குள் புகுந்து அவர் வரவுக்காகக் காத்திருந்திருக்கிறான்.

யப் போவதில்லை. எனவே மணக்க ஒப்பி யிருப்பேன்...''

''அதுதான் தெரிந்து விட்டதேடி. இல் லேன்னுலும் என் ஆபீஸ்லே இருக்கிறவரைப் பற்றி நான் சொல்ல மாட்டேனு?''

''உனக்கும் தெரியாதவராக இருந்தால்?''

''சந்தர்ப்பங்கள் சதி செய்யவில்லை என் ருயே. தப்பித்துக் கொள்ளும் வாய்ப்புத் தான் கிட்டி விட்டதே...''

''நான் தப்பியதால் எவளோ ஒருத்திக்கு அந்த ஸ்தானம் காத்திருக்கிறது என்று தானே அர்த்தம்...?''

''அத்தனை தூரம் யோசிக்க என்ன வந்தது? பெண் குலத்துக்கே நீ பிரதிநிதியோ?''

''அப்படி அந்த இடத்துக்கு வரும் ஒருத்தி எப்படிப்பட்டவளோ? உன் ஆபீஸில் மற்ற வர்களைப் போல் குமாரும் மனைவியை வீட்டில் வைத்து ஏமாற்றிவிட்டு வாழ்பவ ஞக மாறலாம். அவனைத் திருத்தும் நோக் கமே இல்லாதவளாக அல்லது அவனைப் பற்றிய உண்மையே அறியாதவளாக இருக் கலாம். எனவே இப்படிப்பட்ட மனநிலை உள்ள ஆடவனைத் திருத்தி வாழ்வில் ஈடுபட வைத்துச் சமூகத்தையே கெடுக்கும் மற்ற வர்களுடன் சேராமல் வாழ வைக்க வேண் டும். இந்தத் திருத்தம் என்னல் இயலும் என்று நினைக்கிறேன். இதனுல் குமாரின் நடத்தை இதே அழுகலில் பண்பட்டு, இன்னும் எத்தனையோ பேரைக் கெடுக்க முடி யாதல்லவா?''

''மாலா! உளருதே! உன் லட்சியம் அது இது என்பதற்கெல்லாம் நாசம் என்ற ஒரே பொருள்தான் உண்டு போலிருக்கிறது. எந்த மாதிரி பயங்கர வாழ்க்கையை நீ மாதிரிக்கு எடுத்துக் கொண்டிருக்கிருய், தெரியுமா?''

''தெரியுமே. தெரிந்துதான் துணிந்தேன். என் லட்சியத்தில் என்றுமே எனக்கு நம் பிக்கை உண்டு. அவரை மணப்பேன், மாற்று வேன், இது நிச்சயம், பாரேன். எனக்கு ஏற் பட்ட வாழ்வைச் செம்மையாக்கிக்கொள் ளும் தைரியம் இருக்கிறது சாந்தி.''

நான் வாயடைத்தேன். என்னுல் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத தியாகம் அது.

''என்ன சாந்தி! வாயடைத்து விட்டாய். பெரிய அளவு பரவப் போகும் ஒரு தீமையை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடப் போகி றேன். ஒரு தீமையைக் கொல்ல ஒரு நன் மையைத் தியாகம் செய்யணும். தீமை யழிந்த பின் எஞ்சிய எல்லாமே நன்மை தானே? கொட்டிலுக்கும், சாம்பிராணிப் புகைக்கும் உள்ள சம்பந்தம் போல்தான் இது. கொட்டிலுக்குத்தான் சாம்பிராணிப் புகை வேண்டும் இல்லையா?''

''உன்னை ஆமோதிக்க என் மனத்திலும் அதீதமான லட்சியங்கள் அல்லவா குவிந் திருக்க வேண்டும்? நான் சாதாரணமான ஒருத்தி மாலா.''

அதன் பின் பெண் பார்க்க வந்த குமார் என்னையும், மாலாவையும் கண்டு திடுக் கிட்டதும், அவனைத் தனியில் சந்தித்துப் பேசிய மாலாவின் பேச்சில் அவன் கட்டுண்டு சம்மதம் அளித்ததும் 'சட்'டென்று நிகழ்ந்து போனவை. அவனிடம் வாக்குறுதிகள் பெற்றுக் கொஞ்சம் கூடச் சலனமில்லாமல் நம்பிவிட்டாள் மாலா.

ஒரு வாரத்துக்குப் பின் ஆபீஸில் குமா ரைப் பார்த்தபோது அவனிடம் மாற்றம் ஏற்பட்டிருப்பது புலப்பட்டது. மாலா அவ னைத் திருத்தும் முயற்சியில் வெற்றியடைந்து விடுவாள் என்று நம்பினேன்.

எனக்கு 'போன்' வந்திருப்பதாகச் சொன் னதும் வழக்கம் போல் மாலாதான் பேசுவாள் என்று எடுத்தேன்.

''நான் மாதவன் பேசறேன். குழந்தைகள் இரண்டு பேருக்குமே ஜுரம் வந்துவிட்டது. ஆபீஸில் முக்கியமான தணிக்கை ஒன்று இருக் கிறது. இன்று ஒரு நாள் லீவு எடுத்துக் கொண்டு வந்து குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளமுடியுமா?'' என்ற தணிவான குரல்.

''இப்போதே வருகிறேன், அத்தான்!'' என்று கூறிய சுவடோடு அவசரமாகப் புறப் பட்டேன்.

ஒரு மணி நேரத்தில் வீட்டை அடைந்து விட்டேன். ஆபீஸ் புறப்படத் தயாராக நின்றிருந்த அத்தான் குழந்தைகளுக்குரிய மருந்தைக் காட்டிவிட்டு அவசரமாக ஓடினுர். என் சகோதரி இல்லாத வீட்டில் ஓர் அந்நி யம் தெரியவே செய்தது. அதை உண்டாக் கியவள் நான்தான் என்று உள்ளம் இடித்துக் கூறியது. குழந்தைகள் இரண்டும் என்னைக் கண்டதும் சித்தி என்று கட்டிக் கொண்டன. அவர்களுக்குரிய மருந்தைத் தந்துவிட்டுக் குப்பையும் கூளமுமாகக் கிடந்த வீட்டைத் துப்புரவு செய்தேன். என் மனமும் துப்புர வாகி வந்தது.

''சித்தி இங்கேயே இரு'' என்று கெஞ்சின குழந்தைகள் பாலுவும் சுதாவும்.

மாலை அத்தான் திரும்பி வந்ததும் ''உனக்கு ரொம்ப சிரமம் சாந்தி. இனி நீ புறப்படலாம். நாளைக்கு 'லீவ்' போட்டு விட் டேன்'' என்ருர்.

''இனிமேல் திரும்புவதாக உத்தேசம் இல்லை அத்தான். என் தேவை இங்கே ஏற்படுகிறது என்று தெரியும்போது இத்தனை நாட்களும் அர்த்தமற்ற நினைவுகளால் அதைப் புரிந்து கொள்ளவில்லை என்று உணர்கிறேன். அப்பாவுக்கு எழுதிவிடுங்கள், அத்தான்....''

''அப்பா! சித்தி இனிமே நம்ப கூடத்தான் இருப்பா இல்லே, சித்தி?'' என்று நான் எதைக் கூற முயன்றேனே அதையே விளக்க மாகக் கூறினுன் பாலு.

''உனக்கு இஷ்டமில்லாததை ஏற்கவேண் டாம் சாந்தி.'' அத்தானின் குரலில் என் பழைய மறுப்பு சுட்டிக் காட்டப்பட்டது.

''எதற்கும் ஒரு நேரம் வரவேண்டாமா? அது வந்துவிட்டது அத்தான். அதைத் தடுத்து நிறுத்த வேண்டாம்.''

லட்சியத் திருவாக வழிகாட்டிய மாலா வால் என் மனமாற்றம் செயல்படுகிறதா? ஆனுலும் அது எத்தனை பெரிய தியாகம்! கொட்டிலுக்குச் சாம்பிராணியாகும் அவளும் கோவிலுக்குச் சூடமாகும் நானும் ஒன்ருக முடியுமா?

ரங்கனும் நானும்

ஜடாதரன்



மீசை வைத்துக் கொண்டபிறகு இந்த 'சுயக்ஷவர' வேலையே பெரும் தொல்லையாகப் போய்விட்டது. மீசையின் ஆசையைத் தியாகம் செய்யவும் மனமில்லை. 'நாற்பது வயதில் என்ன ஐயா, இந்தக் கண்ணறுவி வேண்டிக் கிடக்கிறது' என்று என்னுடைய புதுத் தோற்றத்தை வயதுடன் இணைத்துக் கண்டனம் செய்த 'மைனரிடி'களும் இருந்தனர். ஆனால் ரங்கனின் மனத்தில் உதித்த ஓர் 'ஐடியா'வை உதாசீனம் செய்ய நான் தயாராக இல்லை.

ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் அவனுடைய பிடிப்பில் நான் கட்டுண்டு கிடந்த போது, மீசைப் பகுதியை மாத்திரம் ஞாபகப் பிசகாய் 'ஸோப்' போடாமல் வழித்துக் கொண்டு வந்தவன் திடீரென்று ஒரு பேருண்மையைக் கண்டுபிடித்து விட்டவன் போல எனக்கு விளக்கினான்.

''ஸார்! இப்படியே விட்டுப் பாருங்களேன். உங்களுடைய முகத்துக்கு அலாதி களை கட்டுதே மீசை!''

நானும் பார்த்தேன். ஏதோ ஒரு புது மாதிரி 'பவிஷு' வந்துவிட்டாற்போலத் தோன்றியது. ஒட்டிய கன்னங்களுக்கும், நீண்ட மூஞ்சிக்கும் எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! நமக்கும் ஓர் அழகு வேண்டும் என்ற உள் மனத்தில் எழுந்த எண்ணத்தின்

பிரமையா? ரங்கன் கேலிக்காக எதையும் சொல்பவனல்ல. அவன் நட்பில் எனக்கு நம்பிக்கையுண்டு.

''ஓங்களுக்கு எடுப்பா அமைஞ்சு போச்சு, ஸார்! ஒரு நாலஞ்சு மாசங்களுக்கு 'ஸெல்ப்' செய்து கொள்கிற போதெல்லாம் மீசையை மாத்திரம் இங்கே வந்து 'டிரிம்' பண்ணிக்குங்க! இவ்வளவு வருஷங்களா எனக்கு எப்படி இந்த ஐடியா தோணுமல் போச்சு. அதான் ஸைக்கிள் இருக்குதே, வீடு ஊர்க் கோடியில் இருந்தாலும் ஒரு மிதி மிதிச்சால் வந்துடலாங்களே.''

வீட்டினுள் நுழைந்தபோது என் மனைவி 'இதென்ன கூத்து?' என்ற பல்லவியுடன் வரவேற்ருள். குழந்தைகளெல்லாம் புதிதாக. வந்த விருந்தாளியைப் பார்ப்பது போல் எட்ட நின்றே வளைய வந்தனர். காரியாலயத்தில் ஒரே பரபரப்பு. என் இடத்துக்கு வராத நண்பர்கள் எல்லாம் கும்பலாக விசாரித்து விட்டுப் போனுர்கள். வராந்தாவில் நடக்க முடியவில்லை. 'இப்பத்தான்யா நீ பார்க்கும்படியா இருக்கே' என்று இரண்டொருவர் பகிரங்கமாகவே என் இவ்வளவு வருஷத்திய தோற்றத்தை எத்தனை பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை வாய் விட்டுச் சொல்லிப் போயினர். ஜனநாயக ரீதியில் ரங்கன் வைத்த மீசை அங்கீகாரம் பெற்றுவிட்டது. ஆனுல்...? கிராமத்திலிருந்து அப்பா வந்தார். அன்று மாலை வீட்டினுள் நுழையும்போது, சின்னப் பையன்போல் அப்பாவுக்கு எதிரே எப்படித் தலை காட்டுவது என்ற தவிப்புடன் நுழைந்தேன்.

இதெல்லாம்தான் இப்போது 'பாஷனு'கப் போய்விட்டதே. அந்தக் காலத்தில் உன் சித்தப்பா பம்பாயிலே எல். எல். பி. படிக்கிற போது இப்படித்தான் இருப்பான்.''

அப்பா என்ருல் அப்பாதான். மீசை வைத்துக்கொண்டிருந்த சித்தப்பா வக்கீலுக்குப் படித்துவிட்டுத் திருச்சியில் ஏராளமாகச் சம்பாதித்த பின்னர் இளம் வயதிலேயே காலமாகி விட்டார். பல வருஷங்களுக்குப் பிறகு மீசையின் சாயலில் இழந்துவிட்ட தம்பியின் தோற்றத்தை ஒரே பிள்ளையான என்னிடம் நினைவுகூர்ந்து கண் கலங்கினுர்.

மாதம் ஒரு முறை கிராப்புக்காகத்தான் எங்கள் சந்திப்பு என்றிருந்தது போக, மூன்று நாட்களுக்கு ஒரு முறை ரங்கனிடம் ஆஜரானேன். ரங்கனைக் கிட்டத்தட்ட பதினைந்து வருஷங்களாகத் தெரியும் எனக்கு. பெரம்பூருக்கு வந்த புதிதில் அவனிடம்தான் என் தலையைக் கொடுத்து விட்டு நிம்மதியாக இருக்கத் தொடங்கினேன். முதல் சந்திப்பை இன்னமும் நான் மறக்கவில்லை.

ஸ்டேஷனுக்கு எதிரேயிருந்த 'ராயல் சலூனில்' அப்போது அவன் வேலை செய்துகொண்டிருந்தான். எந்தப் புத்தகத்தையும் படிக்காமலே 'நண்பர்களைச் சிநேகம் செய்துகொள்வதெப்படி' என்ற அருங் கலையைத் தன் தொழில் துறைக்காகத் தெரிந்து வைத்திருந்தான். என் பட்டணத்து முதல் 'கிராப்பை' அவன்தான் வெட்டினுன். என்னுடைய 'ரெட்டை' மண்டையிடம் எனக்கே ஒரு வெறுப்பு. குழந்தையாக இருந்தபோது எவ்வளவு வெந்நீர் ஊற்றிப் பிடித்துவிடப்



குழந்தைகள் எல்லோருமாகச் சேர்ந்து தாத்தாவுக்கு முன்கூட்டியே சொல்லி வைத்துவிட்டாற்போலத் தோன்றியது. வழக்கம்போல் அப்பா சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார். நான்தான் எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல், ''மீசை வைத்துக்கொண்டிருக்கிறேன் அப்பா! உங்களுக்கு ஒன்றும் ஆக்ஷேபம்...?'' என்று இழுத்தேன்.

எழுபது வயது அப்பா! உலகம் அறிந்தவர். சிரித்தார். ''எனக்கென்னடா ஆட்சேபம்?

பட்டிருந்த போதிலும் என் தலையெழுத்துடன் இரட்டை மண்டையும் சாசுவதமாகி விட்டது. பொறுமையுடன் கிராப் செய்தான் ரங்கன். கிளம்பும் போது வாத்ஸல்

சிறப்புச் சிறுகதை

'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்பார்கள்.
இந்தக் கதாசிரியருக்குக் கிடைத்த ஆப்த நண்பர் தனி ரகம்.
அவரது அனுபவத்தை விளக்கும் விதமே அலாதி.

யத்துடன் 'ரொம்பவும் அதிர்ஷ்டமா இருப்பீங்க, ஸார் நீங்க! தலையின் 'ஷேப்'பைப் பார்த்தே சொல்லி விடுவேன், ஸார்' என்ற புகழுரையையும் கூறி வைத்தான். முகஸ்துதிக்கு மசியாதவன் யார்? அந்த நிமிடம் முதலே என் ஆப்த நண்பனாகவே அவனைத் தீர்மானித்து விட்டேன். பிறகு யாரும் என் தலையைத் தொட விட்டதில்லை நான்.

என் அதிருஷ்டத்தில் என்னைவிட அவனுக்குத்தான் நம்பிக்கை அதிகம். எப்போதாவது நான் அபூர்வமாக எழுதும் கதைகளைப் படித்துவிட்டு, கிராப் செய்து கொள்ள வரும்போது மறக்காமல் பாராட்டி மகிழ்வான்.

''பிரமாதமாய் எழுதித் தள்ளிட்டீங்களே, ஸார்! ஒவ்வொருத்தன் எழுதறதைப் படிச்சா எனக்கு எப்படி வருது தெரியுமா? உங்களுக்கு நிச்சயம் என்னிக்காவது ஒரு 'சான்ஸ்' அடிக்கத்தான் போகுது, பாருங்களேன்'' என்று அங்கலாய்ப்பான்.

ரங்கன் பேசுவது ஒரு வேதாந்தியினுடைய பேச்சாகவே இருக்கும். ஆனால் லௌகீக வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற துடிப்பில்லாத மரக்கட்டை அல்ல அவன்.

ஹைரோடில் பத்து வருடங்களுக்கு முன்பு தனிக் கடை வைத்த பின் ஏழைப் பெண்ணைக் பார்த்து முறைப்படி கல்யாணம் செய்து கொண்டான் ரங்கன். இப்போது நான்கு குழந்தைகளுக்குத் தகப்பனாகவும் ஆகி விட்டான். குடும்பத்தைப் பாசத்துடன் போற்றிக் காப்பாற்றும் அவன் பாங்கே மிகவும் சிலாகிக்கக் கூடியது. கடைக்குப் பின்புறமே வீடு. தனிக் கடை வைத்துவிட்டோம் என்கிற கர்வத்தில் ஆடம்பரத்துக்கு ஆட்களை வைத்துக் கூத்தடிப்பவன் அல்ல அவன். உறவுப் பையன்கள் சிலரைப் பரிவுடன் தயார்செய்து, பேராசையால் அவர்கள் ஓடி விட்ட பிறகும் பரிவு காட்டும் சமரச நோக்கு அவனுடையது.

ரங்கனுக்குத் தெய்வ நம்பிக்கை அதிகம். கடையில் பெரிதாகப் பிள்ளையார் படம் ஊதுபத்தி மணத்துடன் கொலுவிருக்கும். ஒரு பக்கத்தில் வள்ளலார் ராமலிங்க அடிகளின் படம்; மற்றொருபுறம் மௌனசுவாமிகளின் உருவம் பூக்கோலத்துடன் திகழும்.

சின்ன வயதிலேயே குடும்பப் பொறுப்பு அவன் மேல் விழுந்து விட்டது. ஊரில் நோயாளியான அண்ணனின் குடும்பப் பராமரிப்பு அவனையே சார்ந்தது. தாய், தகப்பன் கிடையாது, ஒரு கிழப் பெரியப்பாதான்—அப்பனுடன் கூடப் பிறந்தவர்—ரங்கனுக்குக் கார்டியன். ரங்கனின் குழந்தைகளைக் கட்டி மேய்த்துக் கொண்டு கடை வாசலில் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்பதுதான் பெரியப்பாவின் வேலை. மனைவியைக் கொண்ட இடத்திலும் வசதியில்லை. அவர்களையும் விட்டுக் கொடுக்காமல் பார்த்துக் கொள்ளத் தயங்க மாட்டான். பீடி, சிகரெட் முதலிய கெட்ட பழக்கங்கள் அவனை அண்டுவதற்கே அஞ்சும். உழைத்துச் சம்பாதித்து உற்றாரையும், உறவினரையும் மகிழ்விப்பதையே ஒரு நிறைவாகக் கருதுவான்.

மெஷினும், கத்தியும், கத்தரியும், சீப்பும் அவன் கைகளின் லாகவத்தில் சிறப்பாகச் செயல்பட்டு ரங்கன் கிராப்புக்குத் தனி மவுசையே ஏற்படுத்தி யிருந்தன. அவரவர் அந்தஸ்துக்கேற்ப இதமாகப் பேசுவான். வாழ்க்கையின் கஷ்டங்களைக் கண்டு பொருமுவான்; வசதிகள் பெருகிவிட்ட நாகரிகத்தையும் மெச்சுவான். ரயில்வே ஒர்க்ஷாப், மில் தொழிலாள இளைஞர்களுக்கு 'ரங்கன்' என்றால் உயிர்.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு இருந்த பெரம்பூராகவா இருக்கிறது இப்போது? தொழிலகங்கள் பெருகி விட்டன; புதிய வீடுகள் ஏராளமாக முளைத்து விட்டன. நெரியும் ஜனத்திரளுக்கு ஏற்ப, புதிய சலூன்களும், லாண்டரிகளும், மற்றக் கடைகளும் வியாபாரத்தை அதிகமாக்கி என்றுமில்லாத அளவுக்கல்லவா சுறுசுறுப்பை உண்டுபண்ணி விட்டன?

ரங்கன் கடையிலும் கூட்டத்துக்குக் குறைவில்லை. அவனிடம் 'கிராப்' செய்துகொண்ட ஹைஸ்கூல் பையன்கள் மட மடவென்று வளர்ந்து, வேலைக்குப் போய் ஸ்கூட்டரிலும், மோட்டார் சைக்கிளிலும் புது உலகத் துடிப்பை உணர்ந்து கொண்டவர்களாய்ப் பறந்து கொண்டிருந்தனர்.

அதிக வருவாய்க்கேற்பச் செலவழித்துப் பழக்கப்பட்டுவிட்ட ரங்கனுக்குக் கையில் கொஞ்சம் காசு தங்கவில்லையே என்ற குறை இலேசாகத் தலைநீட்டியது. என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. கணிசமாகப் பணம் புரட்டி உறவுப் பையன் ஒருவனை வரவழைத்து மளிகைக் கடை ஒன்று போட்டான். போன வருஷம் நடந்தது இது. ஆறு மாதம் 'பிஸினஸ்' நடந்தது. போதிய அனுபவம் இல்லாமல் கடை நொடித்துப் போய்

விட்டது. 'இடி' விழுந்தது போல் ஆகி விட்டான் ரங்கன். ஆனால் பேச்சில் தைரியம் குறையவில்லை.

''என்ன ரங்கா, புதிய வியாபாரம் ஒன்றும் சரிப்பட்டு வரவில்லையா?'' என்று சமயசந்தர்ப்பம் தெரியாமல் கேட்டுவிட்டேன் அப்போது.

''அதெல்லாம் நமக்குச் சரிப்படாது ஸார்! நம்ப தொழில்தான் நமக்கு லாயக்கு. அதற்குக் கொடுப்பினை வேண்டும். ஸார், எல்லோரும் அவசரமாகப் பணம் பண்ணுகிறார்களே என்று நானும் ஆசைப்பட்டு ஒரு முயற்சி செய்தேன். தோற்றுப் போனேன். என் கத்திரியும், மிஷினும்தான் எனக்குச் சோறு போடும். மற்றவை வீண் ஆசை.''

அந்தத் தோல்வியை ஒரு பெரிய வாழ்க்கைப் படிப்பினையாக ஒப்புக் கொண்டுவிட்டவன் போலப் பேசினான். ஆனாலும் பணம் பண்ண வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு அந்த முயற்சியில் வீழ்ந்துவிட்ட அவனை உள்ளூற ஓர் ஏக்கமே பிடித்துக் கொண்டுவிட்டது போலத் தோன்றியது. எவ்வளவு வேகத்துடன் அந்த விபரீத ஆசை எழுந்ததோ, அதே வேகத்தில் வீழ்ச்சியையும் அது கொண்டு வந்து விட்டது.

கட்டை குட்டையான வாளிப்பான உடல் ரங்கனுக்கு. நோயே அறியாதவன். அடிக்கடி ஆயாசம் கொள்ளலானான். கடன் தொல்லை வேறு புதிதாக அழுத்தின. முன்போல் எல்லா வாடிக்கைக்காரர்களையும் அவனே கவனித்து அனுப்ப முடியவில்லை. அரை மனத்துடன் வேறு வழியின்றி ஓர் ஆளைக் கடையில் சேர்த்துக் கொண்டான்.

இந்தத் தடவை 'கிராப்பு'க்குச் சென்ற போது ரங்கனின் உடம்பைப் பார்த்ததும் எனக்கே 'பகீ'ரென்றது. உடம்பைப் பார்த்துக்கொள்ளுமாறு யோசனை கூறினேன். பதினைந்து வருடங்களுக்குப் பிறகு அவன் கண்ணெதிரிலேயே என் தலை அவனுடைய உதவியாளனுக்கு மாற்றப்பட்ட நிலைமையை வருத்தத்துடன் அங்கீகரித்து மூலையில் உட்கார்ந்து கொண்டான்.

''ஸாருக்குப் பார்த்துச் செய்யணும் கோவிந்தா, வேறு ஒருத்தர்கிட்டேயும் அவர் வெட்டிக்கிட்டதில்லை. இந்தப் பதினைஞ்சு வருஷங்களாய்'' என்றுபெருமையுடன் சொன்னவன், ''மீசையை மாத்திரம் நீ விட்டுவிடு. நான் கடைசியிலே சரி பார்த்து அனுப்பறேன்'' என்று கூறினான்.

அவன் குழந்தைகள் இருவர் 'நாஸ்தா'வுக்காகக் கடையினுள் ஓடி வந்தனர். நான் இதுவரை காணாத சலிப்புடன் அவர்களுக்குக் காசு கொடுத்து விரட்டினான். வேறொருவர் அப்போதுதான் 'கிராப்'பை முடித்துக் கொண்டு கிளம்பினார்.

''என்ன ரங்கா, இந்தத் தடவையிலேருந்து ஒண்ணே கால் ரூபாயா? வர வர என்ன ஏறிக்கிட்டே போகுது?''

ரங்கன் கோபப்படவில்லை; ஆனாலும் பெரிதாகக் கிண்டல் செய்ய ஆரம்பித்துவிட்டான் அந்த ஆயாசத்திலும்.

''இன்னும் பத்து வருஷங்கள் கழிச்சுப் பாருங்க, என்ன ஆகப் போவுதுன்னு. ஒரு கிராப்புக்கு ஐந்து ரூபாய். 'ஹேர் டிரஸ்ஸிங் கார்ப்பரேஷன்'னு ஒண்ணு வந்துடும். பெரிய கட்டடத்திலே ஏராளமான ஆட்கள் அவனவன் இஷ்டப்படி இருப்பானுங்க. தலைகளையெல்லாம் செடி வெட்டற மாதிரி வெட்டித் தள்ளிக்கிட்டு இருப்பானுங்க. ரங்கன் கை 'சொகுசு' கிராப்பெல்லாம் இன்னும் கொஞ்ச காலத்துக்குத்தான். என்னை மாதிரி ஆளுங்களெல்லாம் பெரிய ஹேர் டிரஸிங் ஆபீஸரா எழுநூறு, எண்ணூறு என்று சம்பளம் வாங்கிக்கிட்டு, தூரத்திலே நின்னபடியே-சாய்வாக ஒரு பார்வை பார்த்து, 'ஓ.கே.'ன்னு சொல்லிக்கிட்டிருப்போம். கவுண்டரிலே ஐந்து ரூபா செலுத்தி ரசீது வாங்கினாத்தான் நாற்காலியிலேயே ஒக்கார்த்தி வைப்பாங்க; அதுக்கு 'க்யூ'விலே நிக்கணும். அப்போ என்ன சொல்லப் போறீங்களோ, தெரியாது.''

சிரித்துக் கொண்டே போய்விட்டார் அந்த மனிதர். ஆனால் ரங்கனுடைய வர்ணனை ஒரு பெரும் காட்சியாக என் மனக் கண் முன்பு விரிந்தது. காலம் தலைதெறித்து ஓடுகிற வேகத்தில் அதை வெறுங் கற்பனையாகவே என்னால் பாவிக்க முடியவில்லை. சிரிப்பை என்னாலும் அடக்க முடியவில்லை. ரங்கன்

பித்தலாட்டம் பிறந்த விதம்!



பித்தளை போன்று, ஏறக்குறைய அதே நிறத்தில் இருப்பது தங்கம். தங்கத்தில் ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பநாதம் என நான்கு வகைத் தங்கம் உண்டு. அதில் ஆடகம் என்ற சொல்லுடன் பித்தளையைச் சேர்த்துப் பித்தளை ஆடகம் எனப்பட்டது! அதாவது பித்தளையைத் 'தங்கம்' எனக் கூறி ஏமாற்றுவது என்னும் பொருள்பட, 'பித்தளை +ஆடகம்' என்னும் சொல் 'பித்தலாட்டம்' என மருவி வழங்கலாயிற்று.

தகவல்: ப. சிங்காரவேலன்.

என்னையும் விடவில்லை. தொடர்ந்து கூறினுன்!

''என்ன ஸார், நான் சொல்றது நடக்காதுன்னுட்டா சிரிக்கிறீங்க. நானும் நீங்களும்தான் அன்னிக்கு இருந்த மாதிரியே இப்பவும் இருந்துக்கிட்டிருக்கோம். உலகம் எப்படிப் பறக்குது, தெரியுமா? நீங்க ஆபீசிலே இடுப்பை ஒடிச்சுக்கிட்டு ஓர் இருநூறு ரூபாயும், பத்தாமப் போனு முப்பதுக்கும், நாப்பதுக்கும் கதை எழுதி இன்னும் கொஞ்சமும் சம்பாதிப்பீங்க. நான் என்ன வாழ்ந்தேன்? எவ்வளவு சம்பாரிச்சிருப்பேன்? கையில் காலணு தங்கல்லே. ஆனு எதிர்காலம் இப்படியேஇருந்துடாது. சின்னச்சின்னத்தொழில்களுக்கெல்லாம் இனிமே எங்கே மவுசு? இப்பவே நம்ப பயலுக இந்தத் தொழிலுக்கு வர மாட்டேங்குது. அப்போ, ஹேர் டிரஸிங் கார்ப்பரேஷன்தான் பெரிசா வைப்பாங்க! என்னையெல்லாம் எழுநூறு, எண்ணூறுன்னு பெரியஹேர்டிரஸிங் ஆபீசராகப் போடாமெ, என்ன செய்வாங்க! எனக்கும் அந்த மாதிரி மொத்தமா ஏதாவது பார்த்தால்தான் விடியும் போல் தோணுது. ஏன் ஸார், நீங்களும் ஒரு நல்ல கதையா எழுதி 'சினிமா சான்ஸ்' தள்ளிட்டு நாலாயிரம், ஐயாயிரம் தட்டிக்கிட்டுப் போகப்படாது? எவ்வளவு நாட்களாச் சொல்லிக்கிட்டிருக்கேன், உங்ககிட்டே!''

ரங்கன் அதிகாரியாகிப் போய், நான் பின் தங்கிவிடப்போகிறேனே என்ற பச்சாத்தாபத்தில் என்னிடம் காட்டிய பரிவு, அவன் உள்ளத் தூய்மையை நினைத்து வியக்கச் செய்தது. மனிதர்களில் ரங்கன் எவ்வளவு உயர்ந்தவன்! மறக்காமல் அவன் தன் கையாலேயே மீசையை 'டிரிம்' செய்து அனுப்பினுன்.

பத்து நாட்களுக்கு அந்தப் பக்கமே தலை காட்டவில்லை நான். ரங்கனின் எச்சரிக்கையை மறந்து ரேஸரில் என் இஷ்டப்படி மீசையை அலங்கோலமாக்கிக் கொண்டு அதன் கோர சொரூபத்தைக் கண்ணுடியில் காணச் சகிக்காமல் மீண்டும் ரங்கனையே புகலடைய விழைந்தேன்.

கடை வாசலில் பெரியப்பா கிழவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். உள்ளே ரங்கனைக் காணும். யாருமே இல்லையா? அந்த மௌனமே என்னுள் ஒரு பயங்கர அவஸ்தையைத் தோற்றுவித்தது.

''பெரியவரே, ரங்கன் இல்லியா?'' கிழவர் எனக்குப் பதில் சொல்ல மெதுவாக எழுந்தார். கொஞ்சம் செவிடு வேறே.

''சாமி! உங்களுக்குத் தெரியாதுங்களா?''

நான் வாயடைத்து நின்றேன்.

''ரங்கன் போயிட்டானுங்க, சாமி! போயிட்டானுங்க. இன்னிக்கு அஞ்சு நாளாவுது. போன சனிக்கிழமை திடீர்னு வீட்டுலே மயக்கமா விழுந்துட்டான். ஆஸ்பத்திரி வண்டியிலே எடுத்துப் போட்டுக்கிட்டு, பெரிய ஆஸ்பத்திரிலே கொண்டு போய்ச் சேர்த்தோம். என்னமோ இருதய நோவுங்களாம். ரெண்டு நாளைக்கு உயிருக்கு மன்ருடிக்கிட்டுக் கிடந்தான். செவ்வாய்க் கிழமையண்ணிக்கு எல்லாம் அடங்கிப்போச்சுங்க. நாலு குழந்தைகளையும், அவளையும் இப்படி நிர்க்கதியா விட்டுட்டுப் போயிட்டானே சாமீ! உங்களுக்குத் தெரியாமப் போயிடுச்சுங்களா?''

வயதில் தளர்ந்த அந்த உடல் விம்மிக் கேவியது! உலகமே சுழல்வதுபோல் இருந்தது எனக்கு. ரங்கனுக்கு மரணமா? அதை எப்படி நான் நம்புவேன்? அவன் மனைவியும், குழந்தைகளும் இனி ஆதரவின்றித் தவிப்பார்களே?

எண்ணத்திலும், பேச்சிலும், செயலிலும் நல்லவனுக வாழ்வதையே உயர்ந்த லட்சியமாகக் கடைப்பிடித்த அந்தச் செயல் வீரனின் நிழலில் அண்டியிருந்தவர்களுக்குத் தவிப்பு ஏது?

உள்ளே கண்ணுடியில் தெரிந்த என் உருவம் கண் கலங்கி நின்றது. அழுவதற்குக் கூடத் தெம்பில்லையா? கோயில் கிளி மாதிரி மனம் மாத்திரம் 'ரங்கா, ரங்கா' என்று ஓயாது அலறியது. எனக்கு வரப்போகும் அதிருஷ்டத்தைக் காணுமல் எப்படி ரங்கன் என்னை விட்டுப் பிரிந்தான்? என் மீசையிலும் முகத்திலும் அழகைக் கண்ட அந்தக் கலைஞனை இனி எப்போது காண்பேன்?

வீட்டுக்குத் திரும்பியதும் முதல் காரியமாக மீசையை வழித்து எறிந்தேன். ரங்கனுடைய பிரிவின் துக்கத்தைக் கொண்டாடும் புனிதச் சடங்காகவே அதை மதித்தேன். களையிழந்த என்னுடைய முகம் கண்ணீரைக் கொட்டி அவன் ஞாபகத்துக்காக அழுது தீர்த்தது.

சத்வைத்தியசாலை, நஞ்சன்கூடு, ஆயுர்வேத வித்வான் B. V பண்டித அவர்களின்

50 ஆண்டுகளாக, லக்ஷக்கணக்கான குடும்பங்களில்

நஞ்சன்கூடு-பல்பொடி

ஐகோர்ட்டில் உரிமை தீர்ப்பு பெற்றது

போலிகள் செய்பவர்கள் இதைக் கவனிக்கவும்

குழந்தைகளுக்கு : காஸ்மஸ், கர்ஜன், பாலக்ஸ், பஞ்சவடி, சிசுராக் (டானிக்)

மாதர்களுக்கு : சதாவரி லேகியம், ஜீவனி, பூடிகுளல் (கர்ப்பிணிகள் டானிக்), டோனடெல்

மருந்துகள் விற்க விரும்புகிறவர்கள் விபரத்திற்கு 0-10 பைசா [illegible] தலையுடன் எழுதவும்

சோல் ஏஜன்டுகள்: [illegible], 64, பந்தர்தெரு, சென்னை-1 மதுரை கோவை [illegible]

வேலை மரணம் நோய்





ரஷ்யாவில் 1903ம் ஆண்டுக்கு முன்னால் கிஷிநோவ் என்ற நகரில் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இன்னும் பலவித அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டார்கள். அவற்றை டால்ஸ்டாய் மகான் வன்மையாகக் கண்டனம் செய்ததுடன், பாதிக்கப்பட்ட யூதர்களின் குடும்ப நிவாரணத்துக்கு நிதி திரட்டுவதற்காக மூன்று சிறுகதைகளையும் எழுதி உதவினர். அவற்றுள் ஒன்று இந்தக் கதை.





— டால்ஸ்டாய் —

தென் அமெரிக்க இந்தியர்களிடையே கீழ்க்கண்ட கதை வழங்கி வருகிறது.

வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லாமலும், இருப்பிடமோ, உடைகளோ தேவைப்படாதவாறும் கடவுள் முதன் முதலில் மனிதர்களைப் படைத்தார். அவர்கள் நூறு வயது வரை வாழ்ந்தார்கள். நோய் என்பதே அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது.

காலம் ஓடியது. மனிதர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காணக் கடவுள் ஒரு சமயம் விரும்பினர். அவர் வந்து பார்த்தபோது, மனிதர்கள் சந்தோஷமாக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொருவனும் தன்னைப் பற்றிய சிந்தனையிலேயே மூழ்கியிருந்தான். எல்லோரும் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதைக் கண்ட கடவுள், மனிதர்கள் வேலை செய்யாமல் வாழ முடியாத நிலையை உண்டு பண்ணினர்.

''உழைப்பு அவர்களை ஒன்று படுத்திவிடும். ஒருவன் தனியாக மரத்தை வெட்டவும், மரக் கட்டைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டு செல்லவும், வீடுகள் கட்டவும் முடியாது. அதே போல் ஒருவன் தானுகக் கருவிகள் தயாரித்துக் கொள்வதும், விதைப்பதும், அறுவடை செய்வதும் சாத்தியம் இல்லை. தனி ஒருவனுக நூற்று, நெசவு போட்டு, உடைகளைத் தைத்துக் கொள்ளவும் இயலாது. எவ்வளவுக்கு எவ்வளவு அதிக நேசத்தோடு ஒன்று கூடி உழைக்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகக் காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதையும் தங்கள் வாழ்க்கையும் நன்றாக இருக்கும் என்பதையும் அவர்கள் உணர்ந்தே தீருவார்கள். அது அவர்களை ஒன்றுபடுத்தி விடும்'' என்று நினைத்தார் கடவுள்.

மேலும் சிறிது காலம் சென்றது. மனிதர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதைக் காணக் கடவுள் திரும்பவும் வந்தார்.

இப்பொழுது முன்பைவிட மோசமாக மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து வேலை செய்தார்கள். ஆனால் எல்லோரும் ஒன்று சேராமல் சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து வேலை செய்தார்கள். ஒவ்வொரு கூட்டமும் மற்றொரு கூட்டத்தை வேலை செய்ய விடவில்லை. ஒருவருக்கொருவர் தடங்கல்களை உண்டுபண்ணிக் கொண்டிருந்தார்கள். சண்டை போடுவதிலேயே காலத்தையும் சக்தியையும் விரயமாக்கிக் கொண்டிருந்தார்கள். அது எல்லோருக்குமே கேடாக முடிந்தது.

இந்த நிலையும் சரியாக இல்லை என்பதைப் பார்த்த கடவுள், மனிதர்கள் தங்களுக்கு எந்த நிமிஷத்தில் மரணம் சம்பவிக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியாதவாறு செய்து, எந்த நிமிஷத்திலும் சாகக் கூடியவர்களாக அவர்கள் நிலையை மாற்றி அமைத்தார். இதை அவர் மனிதர்களுக்கு அறிவிக்கவும் செய்தார். 'இதனல் ஒருவர் மீது ஒருவர் துவேஷம் கொள்ள மாட்டார்கள், தங்களுக்குக் கிடைத்துள்ள வாழ்நாளைப் பாழாக்க மாட்டார்கள்' என்று கடவுள் நினைத்தார்.

ஆனல் நடைமுறை அப்படியில்லை. மனிதர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கக் கடவுள் திரும்பவும் வந்தபோது அவர்கள் வாழ்க்கை அபிவிருத்தி அடையவில்லை என்...

எந்த நேரத்திலும் மனிதர்கள் சாகக்கூடிய வர்களாக இருக்கும் நிலையைத் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொள்ள நினைத்து, மற்ற வர்களை விடப் பலசாலிகளாக இருந்தவர்கள் சிலரைக் 'கொன்றும், பிறரைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தியும், பலஹீனர்களைத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந் தார்கள். அதன் காரணமாகப் பின்கண்ட விதமான வாழ்க்கை உருவாகி விட்டது. பலம் மிகுந்தவர்களும், அவர்களுடைய சந்ததியார்களும் வேலையே செய்யவில்லை.. சோம்பேறித்தனத்தினால் பரிதாபகரமான நிலையை அடைந்தார்கள். பலம் குறைந் தவர்கள் சக்திக்கு மீறி அதிகப்படியாக வேலை செய்து, ஓய்வு கிடைக்காமல் மனம் உடைந்து போனார்கள். இரு சாராரும் பரஸ் பரம் ஒருவரையொருவர் வெறுத்தனர்; ஒரு வரை யொருவர் பார்த்துப் பயப்பட்டனர். மனிதர்களின் வாழ்க்கை இன்னும் துன்ப மயமாகி விட்டது.

கடவுள் இதைப் பார்த்தார். நிலைமையைச் சரிபண்ணுவதற்காக அவர் தம்முடைய கடைசி உபாயங்களைப் பிரயோகிக்கத் தீர் மானித்து, மனிதர்களுக்கு எல்லா விதமான நோய்களையும் கொடுத்தார். ''எல்லோரும் நோய்வாய்ப்படக் கூடியவர்களாக இருந்தால் ஆரோக்கியமாக இருப்பவர்கள் நோயாளி களைக் கண்டு இரக்கப்படுவார்கள், உதவி செய்வார்கள். பிறகு அவர்களே நோய்வாய்ப் படும்போது அவர்களுக்கு ஆரோக்கியமாக உள்ள மற்றவர்கள் உதவுவார்கள்'' என்று கடவுள் நினைத்தார்.



மனிதர்களை விட்டுக் கடவுள் போனார். ஆனால் அவர்கள் எப்படி வாழ்ந்து கொண் டிருக்கிறார்கள் என்பதைக் காண அவர் திரும் பவும் வந்தபோது, நோய்வாய்ப்படக் கூடிய வர்களாக ஆக்கப்பட்ட பின் மனிதர்களின் வாழ்க்கை இன்னும் மோசமாகி விட்டது.

எந்தக் கஷ்டங்கள் மனிதர்களை ஒன்று சேர்க்கும் என்று கடவுள் நினைத்தாரோ, அந்தக் கஷ்டங்களே அவர்களை மேலும் அதிக மாகப் பிரித்து விட்டன. பலத்தைப் பிர யோகித்து மற்றவர்களைத் தங்களுக்கு வேலை செய்ய வைத்த பலம் மிக்கவர்கள், இப் பொழுது தாங்கள் நோய்வாய்ப்பட்ட சமயத் தில் அதே போல் பலத்தைப் பிரயோகித்தே மற்றவர்களைத் தங்களுக்குச் சிசுருஷை பண் ணும்படியும் செய்தார்கள். ஆனால் அவர்கள் மட்டும் நோயாளிகளைப் பற்றிக் கவலைப்பட வில்லை. அதே சமயத்தில் நிர்ப்பந்தப்படுத்தப் பட்டு மற்றவர்களுக்காக வேலை செய்யவும் நோயாளிகளைக் கவனித்துக் கொள்ளவும் நேர்ந்தவர்கள் வேலை மிகுதியினால் களைத் துப் போய், தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த நோயாளிகளைக் கவனிக்க நேரமில்லாமல் அவர்களை நிராதரவாகக் கைவிட்டார்கள்.

இந்த நோயாளிகள் எதிரே வந்தால் பணக் காரர்களின் உல்லாசப் பொழுது போக்கு களுக்கு இடைஞ்சலாக இருக்கும் என்று நோயாளிகளுக்கு விடுதிகள் கட்டினார்கள். அங்கே இரக்கம் காட்டுகிறவர்கள் யாரும் இல்லை. கூலிக்கு நியமிக்கப்பட்ட ஆட்களே இருந்தார்கள். அவர்கள் இரக்க உணர்ச்சி இன்றி சிசுருஷை செய்து கொண்டிருந்ததோடு வெறுப்பும் வேறு காட்டினார்கள். அவர் களிடம் அகப்பட்டுக் கொண்டு நோயாளிகள் கஷ்டப்பட்டார்கள். இது ஒருபுறம் இருக்க, பெரும்பாலான நோய்கள் தொற்றக்கூடியவை என்பதைக் கண்டறிந்தார்கள். தங்களுக்கு நோய் தொற்றிவிடக் கூடாதே என்று பயந்து நோயாளிகளின் பக்கம் நெருங்காமலும், நோயாளிகள் தங்கள் அருகில் வந்தால் விலகிச் செல்வதுமாக இருந்தார்கள்.

அப்பொழுது கடவுள், ''இந்த உபாயத் தினால் மக்கள் தங்களுடைய சந்தோஷம் எதில் இருக்கிறது என்பதை உணரும்படி செய்ய என்னால் முடியாமல் போய்விட்டது. எனவே, அவர்களே அதைத் தங்கள் துன் பங்களின் மூலம் கண்டறியட்டும்'' என்றார்.

சந்தோஷமாக இருக்க முடியும் என்பதை யும், சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ப தையும் உணராமலே மனிதர்கள் தனித் தனி யாகப் பிரிந்து வெகு காலம் வாழ்ந்தார்கள். அப்புறம்தான், அவர்களில் சிலர், உழைப்பு என்பது சிலருக்கு ஒதுக்கித் தள்ளக் கூடிய பயங்கரமான விஷயமாகவும், மற்றவர் களுக்குக் கட்டாயக் கடுங்காவல் தண்டனை யாகவும் இருக்கக் கூடாது என்றும், அது எல்லோரையும் ஒன்று சேர்க்கும் பொதுவான இன்பகரமான காரியமாகவும் இருக்க வேண்டும் என்றும் உணரத்தொடங்கினார்கள். நோய் என்பது விலகி நிற்பதற்கான காரண மாக இல்லாமல், பரஸ்பரம் அன்போடு கூட்டுறவு கொள்வதற்கான ஒரு காரணமாக இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் உணரலானார்கள்.

—கு. அழகிரிசாமி

“என்ன பரிதாபமான காட்சி பார்த்தீர்களா?” என்று தனது வீணைக் குரல் துக்கத்தில் இடறக் கூறினாள் அம்பிகை ஈசுவரனிடம்.

கரும்பில் ஆங்காங்கு கணுக்கள் இருப்பது போல், அவள் குரல் வழுவழுப்பாக ஓடாமல் ஆங்காங்கு இடறியதும் அழகாகத்தான் இருந்தது.

ஈசுவரன் அவள் காட்டிய திசையில் நோக்கினான்.

அங்கே,

கமலி என்று ஓர் அம்மா; முப்பது வயசிருக்கலாம்.

உமா என்று அவளுடைய பெண்; பத்து பிராயம் இருக்கும்.

அந்தப் பத்து வயசு உமாவுக்குக் கமலி சபோட்டா துண்டுகளை வாயில் ஊட்டிக்கொண்டிருந்தாள். உமா ‘தூ, தூ’ என்று அவற்றைத் துப்பிக் கொண்டிருந்தாள்.

“ஐயோ, இந்த அசட்டுப் பெண் எப்போதுதான் சமர்த்தாகுமோ!” என்று குமுறினாள் கமலி. அவளுடைய கண்ணிமைக்குள்ளும் தொண்டைக்குள்ளும் எதுவோ இறுகிக் கனத்தது.

“ஏம்மா, குழந்தைக்கு.....?” என்று நிறுத்தினாள் சபோட்டா கூடைக்காரி. வியாபாரத்தை முடித்து விட்டு இலேசில் நகருகிற வழக்கம் அவளுக்குக் கிடையாது.

உமாவுக்கு என்ன கோளாறு என்பதைக் கமலி எப்படி வாய்விட்டுக் கூறமுடியும்?

உமா சமர்த்தானாள்!

ரா. கணபதி



மற்றவர்கள் 'அப்படி'த்தான் கூறினார்கள். அதுதான் உண்மை. ஆனாலும் கமலி 'அசடு' என்பதற்கு மேல் பெரிய வார்த்தையைச் சொல்ல மாட்டாள். ''சமர்த்தாக வேண்டுமே இந்தப் பெண்'' என்றுதான் சொல்வாளேயொழிய வேறு விதமாகப் பேசமாட்டாள். தாயல்லவா ?

ஆனால் மற்றவர்கள் சொன்னது உண்மை என்று அவளுக்குத் தெரியும். அவளுடைய கணவனுக்கும் தெரியும். நிறைய வைத்தியம் பார்த்தார்கள். பலனில்லை. உமா, கமலியின் பாஷையில், அசடாகவே இருந்தாள்.


''பெராத்தனை ஏதானும் சேஞ்சிக்கிடறதுதானேம்மா ?'' என்று பரிவுடன் கேட்டாள் சபோடாக்காரி.

''எல்லாம் வேணது செஞ்சாச்சு. தெய்வத்துக்குக் கண்ணில்லை''[என்றாள் கமலி.

அவளுக்குக் கண் இருந்தது; எனவே அது கண்ணீரும் வடித்தது.

'அவள் என்ன சொன்னாள் கேட்டாயா?' என்றான் கைலாசநாதன் கல்யாணியிடம். ''இரண்டு கண் போதாது என்று எனக்கு மூன்றாவது கண் வேறு இருக்கிறது. இவள் 'கண்ணில்லை' என்று சொல்லி விட்டாளே!'' என்றான்.

தேவியினால் துயரத்தைப் பொறுக்க முடியவில்லை. பதி



யிடம் கோபமும் வந்தது. அவளுடைய பச்சைப் பசும் முகத்தில் நாசி நுனியில் சிவப்பு ஏறிற்று. மூக்கில் பழுக்கத் தொடங்கியிருந்த மாங்கனி போல் மனோகரமாக விளங்கிய தேவியின் திருமுகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் பசுபதி. துக்கத்தில் அவளுடைய உதடுகள் துடித்தன. கோபத்தில் அவற்றினின்று வார்த்தைகளும் உதிர்ந்தன.

''மூன்றாவது கண் இருந்து என்ன பயன்? அதில் கண்ணீர் பிறந்தால்தானே கண் இருக்கும் பயன் பூர்த்தியாகும்? உங்கள் கண்ணில் தீயல்லவா பிறக்கிறது? இப்படி மக்களையெல்லாம் தீயில் வாட்டி வதக்குவதற்குத் தானே?'' என்று படபடத்தாள் பவானி.

''அதென்னமோ, இப்போது என்னிடம் தீயில்லையம்மா'' என்று குறும்பாகவே கூறினான் நீலகண்டன். அம்பிகை சுடச் சுட வார்த்தைகளை வீசியது கூடச் சூடான பூந்திகளை இட்டாற் போலத்தான் அவனுக்கு இனித்தது.

கயிலையில் சிறிது நேரம் மௌனம் நிலவியது.

அவன்தான் 'ராஜி' பேச முதலடி வைத்தான் — அப்படித்தான் வழக்கம்.

''தேவி, உனக்குத் தெரியாததா? எல்லாம் அறிந்தவள் நீ! ஞானம்பிகையாயிற்றே'' என்று உள்ளார்ந்த மதிப்புடன் கூறினான் மகாதேவன்.

''அதுசரி, அஞ்ஞானமும் நான்தானே!'' என்று பளிச்சென்று கேட்டாள் அன்னை.

''எல்லாம் நீதான்.''

''இப்போது நான் அஞ்ஞானம்பிகையாகத்தான் இருக்கப் போகிறேன். அப்போதுதான் இதயம் உருகுகிறது.''

''சரி, உன் பிடிவாதத்தை நான் எப்படி மாற்ற முடியும்? இருந்தாலும் என்னிடம் ஏன் குறைப்பட்டுக் கொள்கிறாய்? நீயேதான் எதையும் சாதித்துக் கொள்ள முடியுமே! நீதானே சக்தி!''

''அ—சக்தியும் நான்தானே?''

''எல்லாம் நீயேதான்.''

''இப்போது நான் அசக்தியாகத்தான் இருக்கப் போகிறேன் உங்களை எதிர் பார்த்து எனக்காகச் செயலில்லாமலிருந்தால்தான் பணிவாக இருக்க முடிகிறது. உங்களைத்தான் நான் நம்பியிருக்கிறேன் என்பதால் நீங்கள் இப்படிக் கருணையை அடியோடு துடைத்து விடலாமா? என்னிடம் கருணை காட்டாவிடினும் அந்தக் குழந்தை உமாவுக்கு நீங்கள் அருள் செய்துதானாக வேண்டும்.''

''நான் கருணையைத் துடைத்துவிட்டேன் என்கிறாய். உனக்கும்தான் என்னிடம் கருணை கிடையாது. இந்தக் குழந்தையிடம் உனக்குள்ள பரிவுகூட என்னிடம் கிடையாது. என்னையும்தான் எல்லோரும் பித்தன் என்கிறார்கள். 'பித்தா, பிறை சூடி' என்றே பாடி விட்டான் சுந்தரன். நீ கொஞ்சமாவது எனக்குக் கருணை காட்டியிருப்பாயா? ஆக, நமக்குள் ஒருவருக்கொருவர் கருணை காட்டாததில் சமமாகி விட்டோம். அதோ கருணையை அங்கே பார்'' என்று பூலோகத்தைக் காட்டினான் பசுபதி.

தேவி நோக்கினாள்.

சபோடாக்காரிக்குக் காசு எடுத்து வருவதற்காகக் கமலி உள்ளே சென்றிருந்தாள். உமா தனக்காக அவள் உரித்து வைத்திருந்த துண்டுகளையெல்லாம் பார்த்தாள். சபோடாக்காரியோடு தீனமான பசித்த கண்களுடன் உட்கார்ந்திருந்த அவளுடைய குழந்தையையும் பார்த்தாள். என்ன தோன்றிற்றோ, சபோடாத் துண்டுகளையெல்லாம் ''இந்தா, இந்தா'' என்று அந்தக் குழந்தையின் வாயிலேயே திணித்தாள்.

''அம்மா பாத்தாத் திட்டுவாங்கோ. பளத்தை நீயே வைச்சுக்கோ கொளந்தே'' என்று பழக்காரி மன்றாடியும் பயனில்லை.

வாய் நிறையத் திணிக்கப்பட்ட மதுரத்தைச் சுவைத்தது அவளுடைய குழந்தை.

''பார்த்தாயா கருணையை?'' என்றான் பராத்பரன்.

''இவ்வளவு நல்ல குழந்தையை நீங்கள் சோதிக்கலாமா?'' என்று புதிய முனையைப் பிடித்துக் கொண்டாள் கருணாகரி.

''அதில்தான் விஷயமே இருக்கிறது. சிந்தித்துப் பார்த்தால் உனக்கே தெரியும்.''

''நான் சிந்திக்க மாட்டேன். எனக்கு எதுவும் தெரிய வேண்டாம். இந்தக் குழந்தையை நீங்கள் சமர்த்தாக்க வேண்டும். அது ஒன்றுதான் இப்போது எனக்கு வேண்டியது....''

'சமர்த்தாக்க வேண்டும்' என்ற சிறிய வார்த்தையைத்தான் தேவியும் சொன்னாள்— கமலி போலவே. எல்லாத் தாயார்களும் ஒரே மாதிரிதான் பேசுவார்கள்.

''அப்படியே! உன் பிடிவாதத்துக்கு நான் எதிர் வாதம் செய்ய முடியுமோ?'' என்று விட்டுக் கொடுத்து விட்டான் ஐயன்.

தேவி பரம நிம்மதியுடன் ஆழ்ந்து ஒரு மூச்சு விட்டாள். ''ஆகா, என்ன சுகமான தென்றல் வீசுகிறது!'' என்று பூலோகத்தில் பேசிக் கொண்டார்கள்.

ஃ ஃ ஃ

பண்டிட் பிஷக்
சித்தக் கோளாறுகளை நீக்கும்
வைத்திய நிபுணர்

என்பதாகப் புதியதொரு பெயர்ப் பலகை அந்த ஊரில் தொங்கி, உமாவின் தகப்பனார் நாராயணனின் கண்களிலும் பட்டது. ஈசுவரன் செயல்!

நூறாயிரம் உணர்ச்சிகள் மோதக் கமலியும் நாராயணனும் குழந்தை உமாவைப் பண்டிட் பிஷக்கிடம் அழைத்து வந்தார்கள். வைத்தியத்துடன் மந்திரம், தந்திரம் எல்லாம் தெரிந்த அந்த வடக்கத்திக்காரர் ஏதோ அற்புத மூலிகை வைத்திருந்தாராம். நிச்சயமாகக் குழந்தையைக் குணப்படுத்திவிட முடியும் என்று நம்பிக்கை அளித்தார்.

மருந்துகள் வாங்கி வந்தார்கள்.

சிற்சில நாட்களிலேயே உமாவிடம் சிறு சிறு மாறுதல்கள் தோன்றி வந்தன. ஆனால்

பூரணமாகப் புத்தி தெளிந்துவிட்டதற்கு இந்த அறிகுறிகள் போதா என்றார் பிஷக்.

வைத்தியம் தொடர்ந்தது.

இப்போது அவர் வைத்தியராக மட்டுமின்றி அக் குடும்பத்தின் நண்பராகவும் ஆகிவிட்டார். அவர் ஒரு நாள் அவ் வீட்டுக்கு வந்திருக்கையிலேயே,—

சபோடாக்காரியும் வந்தாள்.

கமலி சபோடா வாங்கினாள்.

உமா ஒரு பழத்தைத் தானாகவே எடுத்து வாயில் வைத்துக் கடித்தாள்.

''பார்த்தீர்களா, பார்த்தீர்களா! முன்னெல்லாம் ஊட்டினால்கூட தின்னத் தெரியாது. இப்போ தானாவே எடுத்துத் தின்கிறாள்'' என்று வைத்தியரிடம் மகிழ்ச்சியுடன் கூறிய கமலி, குழந்தையிடம் திரும்பி ''இங்கே தாம்மா, நான் தோல் உரிச்சுத் தரேன்! அப்படியே சாப்பிடக் கூடாது'' என்று கையை நீட்டினாள்.

உமா பழத்தை அம்மாவின் கையில் வைத்தாள். கமலி அதை உரிப்பதையே பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னொரு பழத்தை எடுத்துத் தானும் அதே போல் உரிக்க முயன்றாள்.

''பண்டிட்ஜி, உங்களுக்குக் கோயில் கட்டிக் கும்பிடணும்'' என்றார்கள் கமலியும், நாராயணனும்.

''அதற்குள் அவசரப்பட்டு விடாதீர்கள்'' என்றார் பண்டிட் பிஷக்.

''என்ன பண்டிட்ஜி இப்படிச் சொல்கிறீர்கள்! இவ்வளவு தூரம் குணமாகியும் நீங்கள் இன்னும் திருப்திப் படவில்லையா? நீங்கள் அதிசய டாக்டர். நாங்கள் திருப்தியடைந்தால் கூட உங்கள் வைத்தியத்தில் நீங்களே திருப்திப்பட மாட்டேன் என்கிறீர்களே'' என்றான் நாராயணன்.

''நாராயண், இது ரொம்பச் சிக்கலான விஷயம். புத்தியின் பூரணப் பிரயோகமில்லாமலே உள்ளுணர்ச்சியின்மேல் பல காரியங்களைச் செய்துவிடலாம். அதேபோல் அறிவை முழுவதும் உபயோகிக்காமலே பிறர் செய்வதைப் பார்த்து அதேபோல் தானும் செய்ய முயலலாம். பசி ஓர் உள்ளுணர்ச்சி. இதனால்தான் உமா பழத்தைக் கடித்தாள். பிறகு உங்கள் மனைவி தோலை உரிப்பதைப் பார்த்தவுடன் அதைப் பார்த்துத் தானும் அப்படியே முயன்றாள். இவற்றைக் கொண்டு அவள் முற்றிலும் புத்தி பூர்வமாகச் செயல்படுகிறாள் என்று சொல்லிவிட முடியாது'' என்றார் பிஷக்.

'இன்ஸ்டிங்க்ட்', 'இமிடேஷன்', 'இன்டெலிஜென்ஸ்' இவைபற்றி யெல்லாம் தான் எப்போதோ படித்தது நாராயணனுக்கு நினைவு வந்தது.

''அதோ உமாவைப் பாருங்கள்'' என்றார் பிஷக்.

அன்று போலவே இன்றும் கமலி சில்லறை எடுத்து வரப் போயிருந்தாள். சபோடாக் காரியின் குழந்தைக்கு இன்னமும் பழைய நினைவு இருந்ததோ என்னவோ, அது உமாவைப் பார்த்துக் கையை நீட்டியது. உமா தன் வாய்வரை கொண்டு போயிருந்த சபோடாவை அந்தக் குழந்தையின் கையில் வைத்துவிட்டாள்.

பிஷக்கின் வைத்திய அறிவு இதற்கு விளக்கம் தந்தது: ''நாராயண், சற்று முன் உமா கையை நீட்டியவுடன் உங்கள் மனைவி அதில் சபோடாச் சுளையை வைத்தாள். அதன் நகலாகவே இப்போது உமாவும் இந்தக் குழந்தை கையை நீட்டியவுடன் அதில் சுளையைப் போடுகிறாள்; தான் உண்ண வேண்டுமென்ற அறிவுகூட மறந்துவிட்டது பாருங்கள். அதனால்தான் எனக்குக் கோயிலெடுக்க இன்னும் கொஞ்சம் பொறுங்கள் என்றேன்.''

அதுவரை நடைபெற்றதெல்லாம் அம்பிகைக்கு மனக் குளிர்ச்சியாக இருந்தது. கடைசியாக வைத்தியர் கூறியது



''உங்களுக்கு ரேடியோவில் பாட அரைமணி நேர சான்ஸ் தான் தருகிறோமென்று மிகவும் வருத்தப்பட்டீர்களே; அடுத்த மாதம் காலை 6 மணி முதல் 6 - 05 வரை, 10 மணி முதல் 10 - 05 வரை, பகல் 12 மணி முதல் 12 - 05 வரை, மாலை 3 மணி முதல் 3 - 05 வரை, 4 மணி முதல் 4 - 05 வரை, இரவு 11-55 மணி முதல் 12 - 00 வரை என்று முழு நாள் கச்சேரிக்கு சான்ஸ் தருகிறோம்!''

தான் அவளுக்குக் கடுத்தது. முகத்தில் கேள்விக் குறியுடன் ஈசுவரனைப் பார்த்தாள்.

''பிரபல வைத்தியர் — சித்தக் கோளாறுகளைத் தீர்ப்பதில் நிபுணர் — பண்டிட் பிஷக் சொன்னால் நாம் மறுக்க முடியுமா?'' என்று தோள்களைக் குலுக்கினான் தேவ தேவன்.

அம்பிகை யோசிக்கலானாள்.

ஃ ஃ ஃ

பிஷக்கின் வைத்தியம் தொடங்கி இப்போது ஒரு மண்டலம் முடிந்து விட்டது. சாதாரணமாக இதற்குள் எந்தச் சித்தக் கோளாறும் தீர்ந்திருக்க வேண்டும். நாற்பதாவது 'டோஸ்' அவரது அற்புத சஞ்சீவினியைச் சாப்பிட்டவுடனேயே திடீரென்று மேகம் விலகிச் சூரியன் பளிச்சிடுவது போல், கலக்கம் தெளிந்து, நரம்பு மண்டலம் சரிவரச் செயலாற்றத் தொடங்கி விடுமாம்.

இன்றும் அவரே நாராயணனின் வீட்டுக்கு வந்திருந்தார்.

குழந்தை உமாவைப் பரிசோதித்ததில் அவருக்கு முழுத் திருப்தி உண்டாகவில்லை.

''சரி, இன்றைக்கு வேறொரு ஸ்ட்ராங்க் கஷாயம் தருகிறேன். அதை மட்டும்தான் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். வேறு ஆகாரம் எதுவுமே கூடாது. தீர்த்தம் கூடத் தரப்படாது. நாளைக்குப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன்'' என்றார்.

இச்சமயத்தில் அந்த வீட்டை வாடிக்கை பிடித்துவிட்ட சபோட்டாக்காரியும் வாசலில் வந்து சேர்ந்தாள்.

''அவளைப் போகச் சொல், உமாவுக்கு இன்னிக்கு எந்த ஆகாரமும் தரப்படாதாம்'' என்றான் நாராயணன்.

''அதனாலென்ன! நீங்க அவளை உள்ளேயே பார்த்துக்கோங்கோ. நான் இன்னிக்குக் காமுப் பாட்டியைப் பார்த்துவிட்டு வரப் போறேன். பாட்டிக்குச் சபோட்டான்னா உசிரு. அவளுக்காகக் காதும் காதும் வச்சாப்போல பழம் வாங்கிண்டு வந்துடறேன். உமா வாசலுக்கு வராமே நீங்க கொஞ்சம் காபந்து பண்ணிக்கோங்கோ'' என்றாள் கமலி.

ஆனால் இன்றைக்குக் காதும் காதும் வைத்தாற்போல் காரியங்கள் நடக்க, சபோட்டாக்காரியின் குழந்தை அனுமதிக்கவில்லை. அவள் கூடையைக் கீழே இறக்கியவுடனேயே அது அழுது சண்டித்தனம் செய்யத் தொடங்கியது. கமலி ''குழந்தைக்குத்தான் ஒரு பழம் குடேண்டி'' என்று கூடைக்காரியிடம் ஆக்ஞாபித்தாள்.

''பெரிய டாக்டர் ஐயா வந்திருக்கார்டி! கொழந்தையை இப்படிக் கத்த விடாதே. அதன் அழுகையை நிறுத்திவிட்டு அப்புறம் வியாபாரம் பண்ணுவியாம்!'' என்றாள்.

வேறு வழியின்றி ஒரு பழத்தைக் குழந்தையின் கையில் எரிச்சலுடன் திணித்தாள் பழக்காரி. அது இன்னொரு கையையும் நீட்டியது. ''தொலைச்சுக்கோ'' என்று இன்னொன்றையும் மறு கையில் திணித்து விட்டுக் கமலியிடம் ஒரு டஜன் பழங்களை வைத்தாள்.

''துண்ணுக்கிட்டு இங்கேயே இரு. எதிர் வூட்டுக்கு, பக்கத்து வூட்டுக் செல்லாம் போய் விட்டு வந்து உன்னை இட்டுக்கிட்டுப் போறேன்'' என்று கூறிக் குழந்தையை அங்கேயே விட்டுச் சென்றாள் சபோட்டாக்காரி.

குழந்தை சபோட்டாவைக் கடித்து நுளசிற்று. அதன் மணம் உள்ளே ஹாலில் பரவியது. அங்கு நாராயணனின் அணைப்பிலிருந்த வாறு பண்டிட் பிஷக் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த உமாவின் நாசியில் சபோட்டா மணம் ஏறிற்று. சடக்கென அப்பாவின் பிடியிலிருந்து விடுபட்டு வாசலுக்கு ஓடினாள்.

வாசலில் சபோட்டாக்காரியைக் காணோம்! உடனே சமையல் உள்ளிலிருந்த அம்மாவிடம் திரும்பினாள் உமா. கமலி அவசர அவசரமாகச் சபோட்டாப் பழங்களை ஒரு கூடையால் மூடிவிட்டு, ''என்னடா கண்ணு?'' என்று கேட்டாள்.

''பழம்'' என்றாள் உமா.

''வாங்கலியேடி தங்கம். நாளைக்கு வாங்கித்தரேன்'' என்று கூறிவிட்டுக் கமலி வேறு காரியமாகப் பின்கட்டுக்குச் சென்றாள்.

உமா சமையல் உள்ளிலிருந்து வெளியே வந்தபோது அவள் கைகளில் சபோட்டா இருந்ததை பண்டிட் பிஷக்கும், நாராயணனும் பார்த்துவிட்டார்கள்.

''கமலிக்குத் தெரியாமல் எடுத்திருக்கிறாள்'' என்றான் நாராயணன்.

''இருக்கட்டும். இப்போது அவள் என்ன செய்கிறாள் என்று கவனிக்க வேண்டும். இது ஒரு நல்ல பரிசோதனைக்குரிய வாய்ப்பு. பழத்தைத் தின்றாலும் பரவாயில்லை. நாளைக்குப் புது மருந்தும் பத்தியமும் வைத்துக் கொள்வோம்'' என்றார் பிஷக்.

உமா யார் கண்ணிலும் படாமல் வாசலுக்கு ஓடினாள். அங்கு சபோட்டாக்காரியின் குழந்தையைப் பார்த்ததும் அதனிடம் சென்றாள்.

உமாவின் நடவடிக்கையை மறைவிலிருந்து பார்த்த நாராயணன், அவள் தனது கையிலிருந்த பழத்தைக் கூடைக்காரியின் குழந்தைக்குக் கொடுக்கப் போகிறாள் என்ற 'மாயை'த்தான் எதிர்பார்த்தான்.

ஆனால் நடந்தது முற்றிலும் வேறு!

உமா அந்தக் குழந்தையின் கையிலிருந்த இரண்டு பழங்களில் முழுசாக இருந்ததை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள்.. உள்ளே அவசரமாக ஓடிவந்தாள்.

சமையலறையில் சபோட்டாவை மூடி வைத்திருந்த கூடையை உமா தூக்கினாள். தன் கையில் — தானாக எடுத்துக்கொண்ட ஒரு பழமும், வாசலில் பிடுங்கியது ஒன்றுமாக மொத்தம் இருந்த இரண்டு பழங்களில் ஒன்றைக் கூடையினடியில் தள்ளி விட்டு மீண்டும் அதை முன்போலவே மூடினாள். பிறகு கையில் மீதமிருந்த பழத்தை உண்ணத் தொடங்கினாள்.

பிஷக் நாராயணனின் கையைப் பெருமையுடன் அழுத்தியபடி ஹாலுக்கு வந்தார்.

''பழம் தின்கிறாளே'' என்றான் நாராயணன்.

''தின்னட்டுமே! உமாவுக்குப் புது மருந்தும் வேண்டாம், பத்தியமும் வேண்டாம். அவள் அறிவைச் சரியாகப் பிரயோகிக்கத் தொடங்கி விட்டாள்; இனி எனக்குக் கோவில் கட்டலாம்'' என்றார் பண்டிட்ஜி மகிழ்ச்சியுடன்.

''தெய்வம் கண் திறந்து விட்டது'' என்றாள் அங்கு வந்து சேர்ந்த கமலி நெகிழ்ச்சியுடன். ''என் சமத்து உமாக் குட்டி'' என்று கூப்பிட்டவாறு தன் மாஜி 'அசட்டுப் பெண்'ணைத் தேடிச் சென்றாள்.

''கௌரி, கேட்டாயா? அன்று எனக்குக் கண் இல்லை என்று சொன்னவள் இன்று நான் கண் திறந்து விட்டதாக நற்சான்று தந்து விட்டாள்!'' என்றான் விசுவநாதன் தன்னையொட்டி அமர்ந்திருந்த ஜகன்மாதாவிடம்.

தேவி பேசவில்லை. அவளைச் சோகம் சூழ்ந்தது.

கண்ணீரின் ஈரத்தில் நனைந்த தேவியின் இமை வளைவில் அவளுடைய வைர நாசிகாபரணத்தின் சுடர் பட்டு ஏழு வண்ணங்களையும் சிதறவிட்டது.

''ஆகா, என்ன அழகான வான வில் தெரிகிறது!'' என்று பூலோகத்தில் பேசிக் கொண்டார்கள்.

பூசையை முடித்துத் தியானத்தில் ஆழ்ந்தான் பாலசுந்தரம். அவன் உள்ளம் அதில் லயிக்கவில்லை. எங்கெங்கோ ஓடி அவனை அலைக்கழித்தது.

மூடியிருந்த கண்ணைத் திறந்து தேவியின் திருமுகத்தை நோக்கினான். தேவி தன்னைப் பரிகசித்து முறுவலிப்பது போல் ஒரு தோற்றம். 'உன் திருவுள்ளம் இதுவானால் நான் என்ன செய்ய முடியும்?' என்றவாறு எழுந்தான். நெடுஞ்சாண்கிடையாக விழுந்து பணிந்தான். பூசை அலமாரியை மூடிவிட்டு அடுத்த அறைக்குச் சென்றான். ரத்தினக் கம்பளத்தை விரித்துப் பெரிய காகித உறையுடன் அமர்ந்தான்.



இலட்சியக் காதல்

• எல்லார்வி •

அந்தப் பெரிய காகித உறையினுள் சிறிய காகித உறைகளும் அச்சிட்ட அழைப்பிதழ்களும் முகவரிகள் அடங்கிய பட்டியல் ஒன்றும் இருந்தன. இன்னும் எழுதியாக வேண்டிய முகவரிகளையெல்லாம் அவன் எழுதத் தொடங்கினான்.

திருமணம் அவனுக்குத்தான். அவனே தான் அனைத்தும் செய்து கொள்ள வேண்டியிருந்தது. திருமணப் பேச்சுத் தொடங்கிய நாள் முதல், பூசை, தியானம் இவை மட்டும் என்ன? எதிலுமே அவன் உள்ளம் நிலைத்திருக்கவில்லை. ஏறக்குறைய ஒரு மாதமாக இதே நிலைதான்.

அன்று...

வழக்கம்போல் பாடத்தை முடித்துக் கொண்டு பாலசுந்தரம் கிளம்பினான். முரளி அவனிடம் வந்தான்.

''உங்கள் ஜாதகம் வேண்டும் ஸார்!''

பாலசுந்தரம் திடுக்கிட்டான். ''எதற்கு?'' என்றான்.

முரளி சிரித்தான். ''மணமாகாத ஒருவரின் ஜாதகத்தைக் கேட்டால், 'எதற்கு' என்று திருப்பிக் கேட்பவர் இந்நாளில் உண்டோ? ஜாதகம் கேட்டால் மறுக்கக் கூடாது என்பார்கள். எப்பொழுது உங்கள் அறைக்கு வர?''

''நீங்கள் வந்து அலைவானேன்? நாளை மறுநாள் பாடத்துக்கு வருகிறபோது நானே கொண்டு வந்து தருகிறேன்.''

''அது முறையன்று. நீங்கள் இருக்கும் இடம் தேடி வந்து, பெண் ஜாதகத்தை உங்களிடம் கொடுத்து, உங்கள் ஜாதகத்தைப் பெற்று வர வேண்டும்.''

''அட!...என் வயதை ஒத்த, பிரம்மச்சாரியான உங்களுக்கு இதெல்லாம் எப்படி...யார் சொல்லிக் கொடுத்தார்கள்?''

''அப்பா.''

பாலசுந்தரத்தின் கண்கள் வியப்பால் மலர்ந்தன. வேதாசலம் ஊரில் இல்லை என்பது அவனுக்கும் தெரியும்.

''அப்பாவா!... உம்... சரி; இன்றொரு பாடத்துக்குப் போக வேண்டும். அறைக்கு நான் திரும்ப இரவு ஒன்பது மணி ஆகும்.''

''நான் ஒன்பதே காலுக்கு வருகிறேன்'' என்றான் முரளி.

விடைபெற்றுப் பிரிந்த பாலசுந்தரத்தின் உள்ளம் அப்போது முதலே அலைபாயத் தொடங்கி விட்டது.

'முரளி தன் பொறுப்பில் ஜாதகம் கேட்கிறான் என்றால் ஏழைமை நிலையில் உள்ள நண்பன் ஒருவனின் தங்கைக்காக என்று கொள்ளலாம். முரளியோ, தகப்பனாரின் பெயரை இதில் இணைக்கிறான். அவர் வாங்கும்படி சொல்லி யிருப்பாரோ!... எளிய நிலையில் உள்ள அவருடைய நண்பர் ஒருவரின் பெண்ணுக்காக இருக்குமோ!...'

இப்படியெல்லாம் அவன் மனம் எண்ணிற்றே தவிர, முரளியின் குடும்பத்தோடு தன்னை இணைத்து எண்ணிப் பார்க்கவே இல்லை. ஆம். அப்படியெல்லாம் அசட்டுப் பிசட்டென்று பகற் கனவிலே மூழ்கும் பாமர

மனோபாவம் உடையவன் அல்லன அவன். அவர்கள் நிலை எங்கே, அவன் தகுதி எங்கே? இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவர்களிடையே ஏற்பட்ட தொடர்பு... அதை அவன் ஒரு நாளும் மறந்தவன் இல்லையே!

கையில் உள்ள குறிப்பையும், பங்களாவின் அமைப்பையும் ஒப்பிட்டுப் பார்த்த பால சுந்தரம் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். முன்புற அறையில் ஜன்னல் கட்டையில் அமர்ந்து, கையிலிருந்த புத்த கத்தில் கண்ணைப் பதித்திருந்த தங்கப் பதுமை தலை நிமிர்ந்தது. எழுந்து நின்ற அதன் கயல்விழிகள் மலர்ந்து ஒளி வீசு வதைப் பாலசுந்தரம் கண்டான். அசை வற்று அப்படியே நின்றான். ஒரு கணம் நான்கு கண்களும் கலந்தன.

'யாராவது பார்த்தால்?...'—இந்த நினைவு அவனிடம் சலனத்தை உண்டுபண்ணிற்று. ''ஸார் இருக்கிறாரா?'' என்று மெதுவாகக் கேட்டான்.

''இதோ வந்து விடுவார். ஹாலில் வந்து உட்காருங்கள்.''

பாலசுந்தரத்துக்குக் கூச்சமாக இருந்தது. ''பரவாயில்லை. போய்விட்டு அப்புறம் வரு கிறேன்'' என்று மென்று விழுங்கினான். அவள் கலகலவென்று சிரித்தாள்.

''அப்பாவும் அம்மாவும் ஓரிடத்துக்குக் கல் யாணம் விசாரிக்கப் போனார்கள். நீங்கள் வந்தால் இருக்கச் சொல்லும்படி அப்பா சொல்லிவிட்டுப் போனார். போய் அரை மணி ஆயிற்று. வருகிற நேரம்தான். இருப் பதும் போய் வருவதும் உங்கள் விருப்பம்.''

இப்படிக் கூறிவிட்டு அவள் அறைக்குள் சென்றாள். பாலசுந்தரம் ஹாலை அடைந்து சோபாவில் அமர்ந்தான். அழகும் அறிவும் நிரம்பிய பருவ மங்கை ஒருத்தியே நேருக்கு நேராக நிமிர்ந்து பார்த்துப் பேசிய புதிய அநுபவத்தின் அதிர்ச்சி அவனை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது.

அன்று காலையில் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. இந்தப் பங்களாவின் உரிமையாளர் வேதாசலம் அவனை அழைத்திருந்தார். கடிதத் தில் விவரம் எதுவும் இல்லை. குறித்த நேரத் தில் அவன் வந்தான்.

மிடுக்காகக் கேட்டைத் திறந்துகொண்டு துடுக்காக ஓடி வந்த சிறுமி ஹாலை அடைந்த தும் அவனை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து விட்டு உள்ளே சென்றாள். அறையில் மென் மையான பேச்சொலி எழவே, பாலசுந்தரம் திரும்பிப் பார்த்தான். அழகிய விழிகள் நான்கு அங்கிருந்து அவனை நோக்கின.

பங்களா வாசலில் கார் வந்து நின்றது. வேதாசலமும் அவர் மனைவி லட்சுமி அம்மா ளும் அதிலிருந்து இறங்கி உள்ளே வந்தார்கள். சௌந்தரியம், பெருந்தன்மை முதலிய சிறப்புக்கள் அவர்களிடம் சுடர் விசின. அவர்களைக் கண்டதும் பாலசுந்தரம் மரி யாதைக்கு எழுந்து நின்றான்.

''மன்னிக்கவேண்டும். பத்து நிமிஷங்கள் தாமதமாகி விட்டது.''

''பெரியவர்கள் அத்தனை பெரிய வார்த் தையை...''

''வாருங்கள், மேலே போகலாம்'' என்று வேதாசலம் மாடிப் படிக்கட்டில் ஏறினார். பாலசுந்தரம் அவரைப் பின்தொடர்ந்தான். அவர்கள் மேலே சென்று அமர்ந்ததும் இரு பெண்களும் சிற்றுண்டி, காப்பி கொண்டு போய்வைத்தார்கள். அசைப்பிலே திரும்பிய பாலசுந்தரத்தின் பார்வையில் பெண்களில் பெரியவளின் பார்வை கலந்தது. அவள் இதழ்களில் குறுநகை நெளிவதை அவன் கண்டான்.

''எனக்கு ஒரே பிள்ளையும் மூன்று பெண் களும். மூத்த பெண் பங்கஜா பம்பாயில் வாழ்கிறாள். இரண்டாமவள் பத்மஜா கல் லூரி மாணவி. கடைக்குட்டி ஜலஜா உயர் நிலைப் பள்ளியில் படித்து வருகிறாள்'' என்று அறிமுகம் செய்வித்தார் வேதாசலம். பெண்கள் பாலசுந்தரத்துக்கு வணக்கம் தெரிவித்துவிட்டுப் பதவிசாக இறங்கிக் கீழே சென்றார்கள். காப்பி அருந்தியானதும் வேதாசலம் பேச்சைத் தொடர்ந்தார்.

''எங்கள் குடும்பத்தில் எல்லோருக்குமே இசையில் ஆர்வம் உண்டு; பக்தி உண்டு. ஒரு சிறிது ஞானமும் உண்டு. பெரிய பெண் வீணை வாசிப்பாள். இரண்டாவது பெண் ணுக்குக் குரல் வளம் இல்லை. அவளுக்கு வாத்தியப் பயிற்சி அளிக்க முயன்றேன். குடும்ப டாக்டர் உதவாது என்றார். மூன்றா வது பெண்ணுக்கு அடிப்படைப் பயிற்சிகள் முடிந்திருக்கின்றன. பயிற்சி அளித்தவர் இசைக் கல்லூரி ஒன்றில் உத்தியோகம் ஏற்று வெளியூர் சென்றுவிட்டார். அவளுடைய பயிற்சி தொடர வேண்டும்.

''குடும்பத்தோடு ஆலயம் தொழுவது எங்கள் பழக்கங்களில் ஒன்று. 'பெரிய கோயிலில் முந்தைய நாள் மூன்றும் முறை யாக உங்கள் கச்சேரியைக் கேட்டோம். அப்போது என் உள்ளத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. அதே நேரத்தில் என் இரண்டா வது பெண் பத்மஜா சொன்னாள்: 'இவர் எவ்வளவு விதரணையாகப் பாடுகிறார் அப்பா! நம் ஜலஜாவுக்கு இவரைப் போல் ஒரு வாத்தியார் கிடைத்தால்!..... அவளுடைய குரலுக்கும் ஞானத்துக்கும் மிக விரைவி லேயே முன்னேறி, கச்சேரி செய்யும் தகுதி யைப் பெற்றுவிடுவாள் அப்பா!' என்று.

''எனக்கு வியப்பாக இருந்தது. 'நாம் நினைத்ததைக் குழந்தை சொல்கிறாளே!' என்று. ஜலஜாவைக் கேட்டவுடன் மகிழ்ச்சி யோடு தலையசைத்தாள். பையன் முரளி, 'வெரி குட் ஐடியா அப்பா!' என்றான். 'பாட்டில் மட்டுமின்றி, குணத்திலும் இவர் சிறந்தவராம்' என்று கூறினான். உங்கள் முகவரியை அறிந்து கடிதம் எழுதினேன். இப்போது உங்கள் கருத்தை அறிய விரும்பு கிறேன்'' என்று கூறி நிறுத்தினார்.

பாலசுந்தரத்துக்கு மூச்சுத் திணறியது. நீங்கள் என் தந்தைக்கு ஒப்பானவர். உங்கள் சொற்படி நடப்பது என் கடமை'' என்று அவன் தன் பேச்சை முடித்தான்.

நல்ல நாளில் ஜலஜாவின் இசைப் பயிற்சி தொடரலாயிற்று. அந்த வீட்டினர் பால சுந்தரத்தைப் பாட்டு வாத்தியார் என்று



எல்லையில்லாப் பெரு வெளியில் விரிந்து பரந்து நிறைந்துள்ள உன்னை நான் இந்த மனத்திலே எப்படி உள்ளடக்கிக் கொள்ள முடியும்?

ஆனல் நீயோ ஒரு மலரிலே உன் பெருமை முழுவதும் விளங்க வீற்றிருக்கும் தோற்றம் விந்தையானதாகவே உள்ளது.

மலர்களை நிரப்பி முழுமையாக்கி விடும் நீ இந்த மனத்தை மட்டும் ஏன் நிரப்ப முடியவில்லை? என்பது விந்தையாகவே உள்ளது.

நிறைவில்லாததில் வீற்றிருக்க விரும்பாததே உன் பெருமை. என் மனத்தையும் நிறைத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடுதான், நீ வருகின்ருய். ஆனல் ஆழம் காண முடியாத இந்த மனத்தின் பேராசையைக் கண்டு சிறு மலர்களை நாடிச் சென்று நீ பெருமையோடு வீற்றிருக்கின்ருய்.

என்னுடைய இந்தப் பேராசை பிடித்த மனத்தை ஒரு மலர் அரும்பைப் போல் சுருக்கி உன் திருக் கோயிலாக்கி வைக்க நான் என்றுதான் கற்றுக் கொள்ளப் போகிறேனே?

— க. ரத்தினம்

கருதவில்லை. அவனும் அப்படிப் பழகவில்லை. வற்புறுத்தலின்பேரில் பல முறை அவன் அவர்கள் இல்லத்தில் உணவு கொண்டிருக்கிருன்; தன்னைப் பற்றிய செய்திகள் முழுவதையும் சிறுகச் சிறுகச் சொல்லி யிருக்கிருன்.

மாலையில் பள்ளியிலிருந்து வந்த ஜலஜா எங்கே என்ன செய்து கொண்டிருப்பாளோ; ஐந்தே முக்காலுக்குக் கைகால் கழுவிக் கொண்டு முன் ஹாலுக்கு வந்து விரிப்பில் தம்பூராவுடன் தயாராகக் காத்திருப்பாள். பாலசுந்தரம் ஹாலில் காலடி வைப்பதைப் பார்த்து யாரும் கடிகாரத்தை ஆறு மணி என்று சீர்செய்து கொள்ளலாம்.

உடனே சுருதி ஒலிக்கும்; பாடம் தொடக்கமாகும். பாலசுந்தரம் கண்ணை மூடி இசையிலே லயித்தானனல் பாடம் முடிந்து எழுந்து போகிறபோதுதான் கண்ணைத் திறப்பான். ஏதாவது ஓர் அம்சம் நெருடாக இருந்து, ஜலஜாவுக்கு அது வரவில்லையானல் அவன் இலேசில் விடமாட்டான்.

பாடம் தொடங்கியதும் பத்மஜா அடுத்த அறைக்கு வந்து விடுவாள். கண்ணை மூடி, கருத்தை ஒன்றி இசையில் லயிப்பாள். பாலசுந்தரம் கம்பீரமாக அமர்ந்து பாடம் சொல்லும் முறையும், ஜலஜா பயபக்தியோடு பயிலும் அழகையும் பலகணி வழியே பார்த்து மகிழ்வாள். அப்போது அவள் உள்ளத்தில் உணர்ச்சிகள் அலை மோதும். எனினும் எதிலும் நிதானம் தவற மாட்டாள். அடிக்கடி பாலசுந்தரத்தின் எதிரே வந்து பல்லைக் காட்ட மாட்டாள். எப்போதாவது ஏதாவது கீர்த்தனங்கள் எழுதி வாங்கிக் கொள்வாள். யாவும் தங்கை மூலம்தான். இப்படிக் கௌரவமான முறையில் முழுசாக இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தன. இந்த நிலையில் அவன் எதைக் கொண்டு பகற் கனவு காண முடியும்?

"மிஸ்டர் பாலசுந்தரம்!..."

பாலசுந்தரம் கடிகாரத்தைப் பார்த்தான். 9–15. முரளி தந்த ஜாதகத்தை வாங்கி அம்மன் சந்நிதியில் வைத்து விட்டுத் தன் ஜாதகத்தை எடுத்துக் கொடுத்தான். இருவரும் அமர்ந்தனர். பிறகுதான் பாலசுந்தரம் முரளி தந்த ஜாதகத்தைப் பிரித்துப் பார்த்தான். உடனே மின் தாக்குதல் பெற்றவன் போல் ஆனன். 'வேதாசலத்தின் இரண்டாம் புதல்வி சௌ. பத்மஜாவின் ஜாதகம்' என்ற வரிகள்தாம் அவனை அப்படி மருள வைத்தன. முரளி சிரித்தான்.

"பாலசுந்தரம், எங்கள் அப்பா ஒரு சமதர்மவாதி..."

"இருக்கலாம்; ஆனல்...அதற்காக ஒரு பெண்ணை..."

" 'கட்டுப்படுத்தலாமா?' என்கிறீர்களா? இந்தக் கேஸ் அப்படி இல்லை; பெண்தான் அப்பாவைக் கட்டுப்படுத்தினள்; அண்ணன் வாய்க்கும் பூட்டிட்டு விட்டாள்!"

"அப்படியா!..." பாலசுந்தரம் மகிழ்ச்சியால் திணறினன்.

"ஆம். அம்மாவின் தூண்டுதலால் அப்பா பத்மஜாவுக்கு வரன் தேடத் தொடங்கினர். பத்மஜா என்னை அணுகி ஆதரவு நாடினள். நான் மறுத்தேன். அவள் வாதாடினள். மூன்று நாட்கள் தொடர்ந்து போராட்டம் நடந்தது.

" 'பித்தன், பேயன் என்ற பெயருடன் யாரும் விரும்பாத இடத்தில் வாழும் சிவனை விரும்பிய சிவையைப் போல் நீ ஆசைப்படுகிருயே! பாலசுந்தரம் ஏழை; பரம ஏழை. ஆங்கிலப் படிப்போ உத்தியோகமோ இல்லை. சங்கீதத் துறையில் கச்சேரி, புகழ், வருவாய் என்றெல்லாம் இல்லை...' என்று நான் கூறி முடிக்கு முன் அவள் கலீரெனச் சிரித்தாள்.

" 'எதிர்க் கட்சிக்கு வாதாடுகிருயே, அண்ணு! பாலசுந்தரத்தை நீ சிவனேடு ஒப்பிட்டது எவ்வளவு உயர்வு! அதைக் கேட்க என் உள்ளம் எத்தகைய மகிழ்ச்சியை அடைகிறது தெரியுமா?... ஏழையாவது பணக்காரராவது! யாரும் எதையும் கொண்டு வருவதும் இல்லை; கொண்டு போவதும் இல்லை; படிப்பும், உத்தியோகமும் பொருள் ஈட்டும் சாதனங்கள் தாமே! சங்கீதமும் ஒரு படிப்பே அல்லவா? கச்சேரி, வருவாய், புகழ்! — தகுதி இருக்கிறது, அதிர்ஷ்டம் கூடவில்லை. நாற்பது வயதுக்கு மேல் பிரகாசித்தவர்கள் இல்லையா? இவரும் ஒருநாள் புகழ் வானில் திகழலாம். இல்லாவிட்டால் பரவாயில்லை. ஆகா!... அவர் எப்படித்தான் பாடுகிருர்! அவர் இசையிலே நான் தெய்விகத்தைக் காண்கிறேன் அண்ணு. எப்படியும் சொத்திலே ஒரு பங்கு எனக்கு

அளிப்பீர்கள். ஆயிரக் கணக்கிலே வாரி இறைத்துத் திருமணம் நிகழ்த்த வேண்டாம். ஸ்ரீதனமாகக் கிடைப்பதைக் கொண்டு நாங்கள் அமைதியாக வாழ்கிறோமே! அப்பாவுக்கு இந்தக் கொள்கை பிடிக்கும். சரி என்பார். நீ குறுக்கே புகுந்து குளறினால் தான் உண்டு. எனவே, உன்னைச் சரிக்கட்டுவது முக்கியம் என்று முதலில் உன்னிடம் பேசுகிறேன்' என்றாள். அவளுடைய உறுதி என் உள்ளத்தைத் தொட்டது என்றாலும், மேலும் அவள் வாயைக் கிளறினேன்.

'' ஒருவேளை முன்பே அவருக்கு மணமாகியிருந்தால்?''

'' இல்லையென்று அப்பாவிடம் ஒரு நாள் சொன்னார்.''

'' ஜாதகங்கள் பொருந்தா விட்டால்?''

'' கட்டாயம் பொருந்தும்.''

''பாலசுந்தரம் உன்னை ஏற்க வேண்டுமே?''

''என் நினைவு புனிதமானது. இதன் பிரதிபலிப்பு அங்கேயும் இருந்தே தீரவேண்டும்.''

''அவள் இவ்வாறு கூறியதும், தகப்பனாரை அணுகி, அனைத்தும் சொன்னேன். அவர், 'வெரி குட் பிரபோஸல்!' என்றார். தாயார் என்றுமே நல்லவள். எங்கள் ஒருமித்த தீர்மானத்தை மறுக்கவில்லை. எனவே, அப்பா நேற்று ஊருக்குப் புறப்படுகையில் உங்கள் ஜாதகத்தை வாங்கச் சொன்னார்; வாங்கிவிட்டேன்; பத்மஜா சொன்னபடி இவை பொருந்தவும் பொருந்தும். விரைவில் கொட்டு மேளம்தான்!'' என்று சிரித்தான் முரளி. பாலசுந்தரம் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டான்.

முரளி விடைபெற்றுச் சென்றதும் பாலசுந்தரம் அம்மனை வணங்கி எழுந்தான். அவன் கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகிற்று. அவன் நிலைக்கு இவை யாவும் கனவுக்கும் அப்பாற்பட்டவை அல்லவா?

செயல்கள் மளமளவென்று முன்னேறின. இரு தரப்புக்களிலும் அழைப்பிதழ்கள் அச்சாகிவிட்டன. இன்னும் எட்டே நாட்களில் திருமணம். அழைப்பிதழ்களை அனைவருக்கும் அனுப்பிவிட்டு, ஊருக்குச் சென்று பாலசுந்தரம் தன் பெற்றோர்களை அழைத்து வர வேண்டியதுதான் பாக்கி. அவர்கள் வந்ததும் தங்க, பத்மஜாவோடு குடும்பம் நடத்த, சின்னஞ் சிறு வீடு ஒன்றையும் அவன் திட்டம் செய்துவிட்டான். இந்நிலையில் அவன் உள்ளம் அலைபாயாமல் என்ன செய்யும்?

தடதடவென்ற காலடி ஓசையின் இறுதியில் படபடவென்று கதவைத் தட்டும் ஒலி பிறந்து அதிர்ந்தது. பாலசுந்தரம் கதவைத் திறந்தான். முரளி தலைவிரிகோலமாக உள்ளே வந்தான். பொத்தென்று தரையில் அமர்ந்து சுவரில் சாய்ந்தான். ''என்ன முரளீ என்ன?... என்ன?'' என்று பாலசுந்தரம் பதறினான்.

''எங்கள் மாமா வீட்டில் நிகழ்ந்த சிறு வைபவம் ஒன்றுக்கு எங்கள் அம்மாவும் ஜலஜாவும் போயிருந்தார்கள் அல்லவா? அவர்களும் மாமா வீட்டினரும் சேர்ந்து இன்றிரவு திருச்சியிலிருந்து கிளம்பி நாளைக் காலை இங்கு வருவதாகத் திட்டம். ஆனால் ஒரு மணி நேரத்துக்கு முன் அம்மா மாரடைப்பால் காலமானதாக...''

''ஹா!...''

''நாங்கள் காரில் திருச்சி போகிறோம். இத்தனை நெருக்கடியில் நான் ஏன் இங்கே வந்தேன் என்றால், நாங்கள் இன்றும் யாருக்கும் அழைப்பிதழ் அனுப்பவில்லை. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்களோ தெரியாது.. இனியேனும் யாருக்கும் அனுப்ப வேண்டாம் என்று சொல்லத்தான் வந்தேன்.''

''இது கிடக்கிறது, முரளி; எதிர்பாராத இந்த இடி...''

''ஏற்பாடுகள் இப்படியே நிற்கட்டும்; பிறகு...''

''அதையெல்லாம் பற்றி இப்போது என்ன?''

''அப்பா சொல்லச் சொன்னார்!''

''ஹும்!..... இதன் பிறகுமா என் தொடர்பை விரும்...''

''இப்படி நீங்கள் ஏதாவது கிலேசப்படுவீர்கள் என்றுதான் அப்பா என்னை அனுப்பி இதைச் சொல்லச் சொன்னார். எங்கள் வினைக்கு நீங்களா பொறுப்பாளி?''

''இப்படி யாரும் எண்ணவே மாட்டார்கள் முரளி. 'துடைகாலி' என்றுதான் என்னைச் சொல்வார்கள். இத்தகைய தங்கமான மனிதர்களின் தொடர்பைப் பல பிறவிகளில் தவம் இயற்றிப் பெற வேண்டும். எனக்கு வாய்ப்பு இருந்தால் கிட்டட்டும். இந்தச் சூடு ஆறுகிற வரைக்கும் மட்டும் அல்ல; இதற்காக ஆயுட்காலம் முழுவதும் நான் காத்திருப்பேன் முரளி.''

முரளி விடைபெற்றுச் சென்றான்.

எதிரே ஆள் இருந்து பேசியவரையில் பாலசுந்தரத்துக்கு ஒன்றும் தோன்றவில்லை. முரளி சென்றபின் பாலசுந்தரம் வெலவெலத்துப் போய்ப் படுக்கையில் விழுந்தான். விரிப்பிலே பரவிக் கிடந்த அழைப்பிதழ்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன.

அன்று மாலையே அவனைத் தேடி இன்னொரு செய்தி வந்தது. ஊரில் அவன் தகப்பனார் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக அந்தச் செய்தி கூறிற்று. உடனே அவன் புறப்பட்டான்.

இதன் பின்னர் எல்லாம் எப்படி எப்படியோ நடந்தேறின. அவனுடைய தந்தை தேறி எழவில்லை. படுக்கையில் கிடந்த அவரை அவன் பிரியவும் முடியவில்லை; சென்னைக்கு அழைத்து வரும் நிலையிலும் அவர் இல்லை. இப்படிச் சிலகாலம் அல்ல; பல மாதங்கள்.

பாலசுந்தரம் வேதாசலத்துக்கு ஒரு கடிதம் எழுதினான். அவருக்கும் முரளிக்கும், பெண்களுக்கும் ஆறுதல் கூறித் தன் நிலைமையையும் அதில் விளக்கியிருந்தான். முகவரிக்கு உரியவர் இல்லை என்று கடிதம் அவனுக்கே திரும்பி வந்து விட்டது. அவன் வேதனை அடைந்தான்.

பெரியவர் பிழைத்தெழுந்து தெம்பும் திடமுமாய் நடமாடலானார். இனிமேல் கவலை இல்லை என்ற நிலை ஏற்பட்டதும் பால

சுந்தரம் பரபரப்புடன் சென்னைக்கு வந்தான். அங்கே அவனுக்குக் கிடைத்த செய்திகள்!

அவனுடைய முதல் கடிதப்படி ஹோட்டல் முதலாளி அவன் அறையைக் காலி செய்து வேறு ஒருவருக்கு விட்டிருந்தார். புதுக் குடித்தனத்துக்கென்று திட்டம் செய் திருந்த சிறு வீடும் அப்படியே பிறர் வசம் ஆகியிருந்தது. அவன் சொல்லி வந்த பாடங் களும் கைமாறியிருந்தன. இவையெல்லாம் கூட ஒரு பொருட்டாக இல்லை அவனுக்கு; வேதாசலத்தின் பங்களாவில் வேற்று மனிதர் வசித்ததுதான் பெரும் ஏமாற்றமாக இருந்தது. தமிழ் தெரியாத அவர்களிட மிருந்து ஆங்கிலம் அறியாத இவன் விவரம் எதுவும் அறிந்து கொள்ள முடியவில்லை. நயமற்ற அவர்கள் பேச்சிலிருந்து அந்தப் பங்களாவை வேதாசலத்தினிட மிருந்து அவர்கள் வக்கீல் ஒருவர் மூலம் வாங்கி யிருக்கிறார்கள் என்பதை மட்டுமே தெரிந்து கொள்ள முடிந்தது.

கடல் போன்ற நகரத்திலே அவன் வேதாசலத்தையும் அவர் குடும்பத்தினரை யும் எங்கே என்று தேடுவான்? அவனுக்குச் சென்னை கசந்தது; சங்கீதம் கசந்தது; வாழ்க்கை கசந்தது; எல்லாமே கசந்தது.

'ஊருக்குப் போவோம்; பெற்றோருடன் இருப்போம்' என எண்ணினான்; அவ் வாறே கிளம்பினான். சாமான்களைக் கட்டுகிற போது அழைப்பிதழ்கள் அடங்கிய பெரிய காகித உறை கண்ணில் பட்டு அவன் நெஞ்சத்தைப் பிழிந்தெடுத்தது.

யோகம் எப்போது வரும்? யாராலும் அறுதியிட்டுக் கூற முடியாத புதிர். பால சுந்தரத்தின் கலை வாழ்க்கையில் அது புரியாத புதிராகவே இருந்து வந்தது. அவன் முயன்ற போது யோகம் ஒளிந்து விளை யாடிற்று; அவன் வாழ்க்கையையே வெறுத்த போது அந்த யோகம் அவனைத் தேடி வந்து மாலையிட்டது. மெல்ல மெல்ல மேடைக் கச்சேரிகள் தொடரலாயின. புகழ் எங்கும் பரவலாயிற்று. சம்மானமும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போயிற்று. ஆனால்.... அவனிடம் உற்சாகம் அணுவும் இல்லை.

கோயமுத்தூரில் ஒரு திருமணம். அதில் பாலசுந்தரத்தின் கச்சேரி. தக்க வாத்தியங் களுடன் அவன் சென்றான். ரயில் தாம தித்துச் சென்றதால் உரிய நேரம் கடந்து விட்டது. அதனால் அங்கே இங்கே தங்காமல், அலங்காரம் எதுவும் இல்லாமல், சிற்றுண்டி காப்பிகூட அருந்தாமல் கலைஞர்கள் நேரே மேடையை அடைய வேண்டியதாயிற்று. அந்தப் பரபரப்பில் பாலசுந்தரம் யாரையும் பார்க்க வில்லை; எதையுமே கவனிக்கவில்லை. பந்தல் முகப்பில் வரவேற்பு நிகழ்ச்சியை முன்னிட்டுச் சோபாவில் அமர்ந்திருந்த திருமணத் தம்பதிகளையும் அவன் ஏறிட்டுப் பார்க்கவில்லை.

கச்சேரி முடிந்தது. திருமண நிர்வாகி களில் ஒருவர் வந்து கலைஞர்களுக்காகத் திட்டம் செய்திருந்த விடுதிக்கு அவர்களை அழைத்துச் சென்றார். நிர்வாகி, பக்க வாத்திய வித்துவான்கள், பாலசுந்தரம்— இப்படி வரிசையாகப் பந்தலில் போய்க் கொண்டிருக்கையில் முதிய ரசிகப் பிரமுகர் ஒருவர் குறுக்கிட்டு, பாலசுந்தரத்தின் இசை யைப் பாராட்டினார். மற்றவர்கள் போய் விட்டார்கள். ரசிகப் பிரமுகரும் நகர்ந்தபின் பாலசுந்தரம் நடக்கலானான். அப்போது...

அழகே வடிவான அணங்கு ஒருத்தி அவனை அணுகினாள்; வணக்கம் தெரிவித்து அடக்கமாக நின்றாள். அவளை அங்கே கண்ட தும் அவன் திகைத்தே போனான். ''யாரம்மா? ஜலஜாவா?.... இங்கே எங்கே வந்தாய்?'' என்றான். மூன்று ஆண்டுகளுக்குப்பின் அவன் முகத்தில் ஒரு மலர்ச்சி; உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சி.

ஜலஜா இலேசாகச் சிரித்தாள். ''கச் சேரிக்கு ஏற்பாடு செய்தவர்கள் உங்களுக்கு அழைப்பிதழ் அனுப்பவில்லையா?'' என்று கேட்டுக் கொண்டே அவள் தனி இடம் நோக்கி நடந்தாள்; அவன் அவளைத் தொடர்ந்தான்.

''கச்சேரி முந்தா நாள்தான் தந்தி மூலம் உறுதியாயிற்று. அழைப்பிதழில் என் கச்சேரி என்று அச்சிட வாய்ப்பு இல்லாததாலோ, நெருக்கடி காரணமாகவோ எனக்கு அவர்கள் அழைப்பிதழ் அனுப்ப வில்லை என்று நினைக் கிறேன்.''

''அதனாலேதான், 'இங்கே எங்கே வந் தாய்?' என்று நீங்கள் என்னைக் கேட்டீர்கள் போல் இருக்கிறது. திருமணத் தம்பதிகளை யும் நீங்கள் இது வரை பார்க்க வில்லையா? கல்யாணம் யாருக்குத் தெரியுமா?''

பாலசுந்தரம் தன் இதயப் பகுதியைக் கையால் அழுத்திக் கொண்டான்.

பாலசுந்தரம் பொறுமை இழந்தான். ''ஜலஜா...! இப்படி வம்பளக்கும் அள



என்னுடைய நண்பன் ஒருவன், அவன் பொழுது போக்கு ஸ்டாம்பு சேகரித்தல். அவனிடம் ஒரு நாள் உன்னிடம் எவ்வளவு ஸ்டாம்புகள் இருக்கின்றன என்று கேட் டேன்.

அவன் கூறிய பதில்: என்னிடமுள்ள தபால் தலைகளை 2ஆல் வகுத்தால் மீதி 1; 3ஆல் வகுத்தால் மீதி 2; 4ஆல் வகுத்தால் மீதி 3; 5 ஆல் வகுத்தால் மீதி 4; 6ஆல் வகுத் தால் மீதி 5; 7ஆல் வகுத்தால் மீதி 6; 8ஆல் வகுத்தால் மீதி 7; 9ஆல் வகுத்தால் மீதி 8 வரும். 10 ஆல் வகுத்தால் மீதி 9 என்று அடுக்கிச் சொன்னான். எங்கே நீங்கள் விடை சொல்லுங்கள், பார்க்கலாம்!

தகவல்: எஸ். கே. ஷண்முகம்
ஆதாரம்: 'காரவன்'.


விடை: 2519

வுக்கு உனக்கு எப்போது முதல் வாய் வளர்ந்தது?'' என்று கடிந்தான்.

அவள் கலகலவென்று சிரித்தாள். ''இவ்வளவு கோபமாகப் பேசும் பழக்கம் உங்களுக்கு எப்போது முதல் ஏற்பட்டது?.... அ.... அதோ பாருங்கள்!''

அவள் காட்டிய திசையில் அவன் பார்வையை ஓட்டினான். ஊருக்குச் செல்லப் புறப்படும் குடும்பத்தினரிடம் பேசிக் கொண்டிருந்தான் முரளி. அவன் கழுத்தில் மாலை இருந்தது. அவன் அருகே ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவள் கழுத்திலும் மாலை இருந்தது.

''கல்யாணம் முரளி அண்ணாவுக்குத் தான்!'' என்றாள் ஜலஜா. 'அப்பாடா!' என்றது பாலசுந்தரத்தின் உள்ளம்.



கொலம்பியா பல்கலைக் கழகத்துப் பேராசிரியரான வான் அம்ரிஞ்ச் சிறுவர்களையும் சிறுமிகளையும் ஒரே வகுப்பில் வைத்துக் கல்வி புகட்டக் கூடாது என்ற கொள்கையை உடையவர். 'வகுப்பில் ஒரு பெண் இருந்து விட்டால் பையனுக்குக் கணிதத்தைப் புரிய வைக்கவே முடியாது' என்றார்.

அப்போது அங்கேயிருந்த ஒருவன் ''பேராசிரியரே! எல்லாப் பையன்களும் நீங்கள் சொன்னபடியே இருப்பார்களா? அதற்கு விலக்காக இருக்கக் கூடிய பையனும் இருக்கத் தானே செய்வான்?'' என்று கேட்டான்.

அதற்குப் பேராசிரியர், 'இருக்கலாம். அப்படிப் பட்டவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவேண்டிய அவசியமில்லையே'! என்று பதில் சொன்னார்.

— பாலன்

''அவன்தான் என்னை உங்களிடம் அனுப்பினான்.''

''அப்படியா?....'' என்று பாலசுந்தரம் மீண்டும் முரளி இருந்த திசையை நோக்கினான். அங்கிருந்து ஒரு ஜோடிக் கயல் விழிகள் தன்னை ஊடுருவுவதைக் கண்டான். 'பத்மஜாவா இவள்! நலிந்து மெலிந்து உரு மாறி இருக்கிறாளே!' என்று எண்ணிக் கொண்டான். பலவித உணர்ச்சிகளின் மோதலினால் அவன் திணறினான். அதை உணர்ந்த ஜலஜா மேலும் பேசினாள்.

''இந்தக் கல்யாணத்தோடு எனக்கும் திருமணம் நடப்பதாக இருந்தது. பேச்சு வார்த்தை நின்று விட்டது.''

''அடடே.... உனக்குமா அப்படி? ஏன் ஜலஜா ?''

''முதலில் நான் மறுத்தேன். விவரம் தெரிந்தபின் அவர்களும் அந்த ஆசையை விட்டு விட்டார்கள். தமக்கை கன்னிக் கோலத்தில் நிற்க.....''

''ஓ!.... பத்மஜா இன்னமும்....''

''ஹூம். அவளுடைய உறுதி பாறையினும் கடினமாயிற்றே!''

பாலசுந்தரத்தினிடம் ஜிவ்வென்று ஓர் உணர்ச்சி பரவியது.

''உங்களைக் கண்டுபிடிக்க அண்ணா எவ்வளவோ முயன்றான்.''

''ஆமாம்; நீங்கள் ஏன் திடீரென்று பங்களாவை விற்றுவிட்டு.....?''

''கொள்கை, வேதாந்தம் எல்லாம் ஓர் அளவுக்கு மேல் நிலைப்பது கடினம்தானே? அம்மாவின் பிரிவால் அப்பா மனமுடைந்து போய் விட்டார். பல காலம் அவள் நடமாடிய பங்களாவில் அவரால் நிம்மதியாக வளையவர முடியவில்லை. மேலும் ஒரு மாதத்தில் 'ரிடையர்' ஆன அவர் படுக்கையில் வீழ்ந்தார். வர வர அவர் நிலை கவலைக்கு இடமாயிற்று. குடும்ப டாக்டரும் வற்புறுத்தவே பங்களாவை விற்று, சென்னையை விட்டு மதுரைக்குச் சென்றோம். அதுதான் எங்கள் ஊர். அங்கே நிலபுலன், வீடு வாசல் எல்லாம் உண்டு. அண்ணா மட்டும் ஹோட்டலில் தங்கிப் படிப்பைத் தொடர்ந்தான்; உங்களைத் தேடித் தெருத் தெருவாய் அலைந்தான்; பிறகு மதுரையை அடைந்து வேலையில் அமர்ந்தான். அம்மாவின் பிரிவுத் துயரம், பத்மஜாவின் கன்னிக் கோலம் இரண்டினாலும் அப்பா மிகவும்.....''

பாலசுந்தரம் பதைத்தான். ''அப்பா இப்பொழுது எங்கே ?''

''மாடியில் படுக்கையில் இருக்கிறார் ; வாருங்கள் போகலாம்.''

இருவரும் நடந்தார்கள். அவர்கள் பின்னே முரளி, அவன் மனைவி கிரிஜா, பத்மஜா மூவரும் சென்றார்கள். அங்கே பங்கஜாவும் அவள் கணவன் கல்யாணமும் வேதாசலத்திடம் பேசிக் கொண்டிருந்தார்கள். பாலசுந்தரத்தைப் பார்த்த வேதாசலம், ''கச்சேரி பிரமாதம்!'' என்றார்.

அவர் பேச்சைக் கேட்டு, அவர் முகத்திலே மலர்ச்சியைக் கண்டு, அனைவரும் மகிழ்ச்சி கொண்டு நெடுமூச்செறிந்தார்கள்.

'' இந்தப் பைத்தியக்காரப் பெண் பத்மஜா தன் உறுதியிலிருந்து தளரவே இல்லை பாலசுந்தரம். நீங்கள்.....''

'' எளியவனாகிய நானும் உங்கள் தொடர்பை விரும்பி மேற்கொண்ட தவ நிலையிலிருந்து பிறழவே இல்லை'' என்ற பாலசுந்தரம் லஜ்ஜையுடன் கூறி முடிப்பதற்குள் முரளி, ''அப்படியானால் அடுத்த முகூர்த்தத்தில், மதுரையில் 'ஜாம் ஜாம்' என்று திருமணம் நடத்த வேண்டியதுதான்!'' என்றவன் பத்மஜாவிடம், ''என்ன இருந்தாலும் இலட்சியக் காதல் தோல்வியுறுமா?'' என்றான். அவள் நாணித் தலை கவிழ்ந்தாள்.

சிறப்புச் சிறுகதை



கலிஃபோர்னியா கண்ட குத்து விளக்கு

இந்திரா பார்த்தசாரதி

பாரதத்தின் அறிவியற் கருவூலமாகிய உபநிடதங்களையும் மற்றும் அதன் பண்பாட்டைப் பற்றிப் பேசும் எல்லா இலக்கியங்களையும் நன்ருகக் கரைத்துக் குடித்த நார்மன் மெய்லர் பழம் பெரும் இந் நாகரிகத்தின் இக்காலச் சந்ததிகளைக் காணும் ஆவலினுல் உந்தப்பட்டு, கலிஃபோர்னியாவிலிருந்து குடவாசலுக்கு வந்தான்.

குடவாசலை அவன் தேர்ந்தெடுத்தது ஓர் எதேச்சையான முடிவு. பம்பாயிலிருந்து அவன் சென்னைக்கு வந்தபோது அவன் பக்கத்திலிருந்தவர் தாம் குடவாசலைச் சார்ந்தவர் என்று சொல்லிக் கொண்டார். ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தைப் பற்றி அறிய வேண்டுமானுல், அதன் உயிர்த் துடிப்பு கிராமத்தில் இருக்கிறது என்பதை உணர்ந்த அவன் ஏதாவது கிராமத்தில் சில நாட்கள் தங்கியிருக்க வேண்டுமென்று தீர்மானித்துத் தன்னுடன் பிரயாணம் செய்தவருடைய கிராமமாகிய குடவாசலில் இருக்க முடிவு செய்தான்.

கும்பகோணத்திலிருந்து திருவாரூருக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறி அவன் குடவாசலில் இறங்கியபோது, எங்கு தங்க வேண்டுமென்பதைப் பற்றி அவனுக்கு எந்த விதமான திட்டமும் இல்லை.

தனக்குத் தேவையான எல்லாப் பொருள்களையும் ஒரு பெரிய பையில் அடைத்துக் கொண்டு, அந்தப்பையை அவன் தன் தோளில் சுமந்து சென்றது, கடை வீதியில் சென்று கொண்டிருந்த யாவரையும் கவர்ந்தது.

குட வாசலிலுள்ள கல்வி யறிவில்லாத மக்களுக்குச் சட்ட ஆலோசகராகிய வீட்டுத் தரகர் பட்டு, தாம் பள்ளிக்கூடத்தில் எட்டாம் வகுப்பை மூன்று தடவை முற்றுகையிட்டபோது கற்றுக் கொண்ட அரைகுறை ஆங்கிலத்தில் கேட்டார்: ''யார் வேண்டும் உங்களுக்கு?'' என்று.

கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் சம்ஸ்கிருதத்தையும் தமிழையும் விரும்பிப் படித்துத் தேர்ந்து, அமெரிக்காவில் இந்தியத் தூதுவராலயங்களில் பணியாற்றிய தமிழரோடு அளவளாவித் தமிழில் நன்ருகப் பேசக் கற்றுக் கொண்ட நார்மன் மெய்லர் தனக்குத் தமிழ் தெரியுமென்று சொல்லிக் கொள்ள விரும்பவில்லை. அவர்கள் என்ன பேசிக் கொளளுகிருர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்பினுன். ஆகவே அவன், பட்டு பேசிய முறையைப் பின்பற்றிப் பாதி சைகையும், பாதி ஆங்கிலமுமாக, இதற்குப் பதில் கூறினுன்: ''என் பெயர் நார்மன் மெய்லர். எனக்கு இங்கே தங்கியிருக்க ஒரு வீடு வேண்டும். உங்கள் பெயர்?''

தரகர் பட்டு இதை எதிர்பார்க்கவில்லை. வெள்ளைக்காரன் ஒருவன் திடுதிப்பென்று வந்து தான் தங்குவதற்கு ஒரு வீடு வேண்டும் என்று கேட்டால் யாருக்குத்தான் தூக்கி வாரிப் போடாது?

கீழண்டை வீதியில் மைனர் ரங்குவின் வீடு பூட்டியே கிடக்கிறது. முன்பெல்லாம் அவன் அவ்வீட்டைத் தன் 'லீலை'களுக்குப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் எல்லாம் ஓய்ந்து இப்பொழுது அவன் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறான். நூறு ரூபாய் வாடகை கிடைக்குமென்றால் வேண்டாமென்றா சொல்லப் போகிறான்? வெள்ளைக்காரன், இவனுக்கு இந்தக் கிராமத்தில் வீட்டு வாடகையைப் பற்றி என்ன தெரியப் போகிறது? நூறு ரூபாய் இவனுக்கு நூறு காசு மாதிரி... நூறு ரூபாய்க்கு ஏற்பாடு செய்து விட்டால், ரங்குவிடமிருந்து பத்தோ இருபதோ புரட்டலாம். இவனோ இருக்கவே இருக்கிறான்..... நேற்று ஒப்பிலியப்பன் கோயில் போய்விட்டு வந்தது கைமேல் பலனைத் தருகிறதோ!....

தான் பேசியது அவருக்குப் புரியவில்லையோ என்று நினைத்த நார்மன் மெய்லர் மீண்டும் தான் சொன்னதை நிறுத்தித் தெளிவாக ஆங்கிலத்தில் கூறினான்.

''என் பெயர் பட்டு'' என்று சொன்ன அவர், ''உங்களுக்கு வீடா வேண்டும்?'' என்று கேட்டு விட்டுச் சிறிது நேரம் யோசித்தார்.

''கிடைப்பது கஷ்டமோ?''

பட்டு இடக்கை ஆள்காட்டி விரலை மூக்கின் நுனி மீது வைத்துக் கொண்டார். அவர் சிந்தித்துக் கொண்டிருப்பதற்கு இது அடையாளம் என்று புரிந்து கொண்ட நார்மன் அவர் முகத்தை ஆவலுடன் நோக்கினான்.

''எவ்வளவு வாடகை வேண்டுமானாலும் தருகிறேன்.....'' என்றான் நார்மன்.

''வாடகையைப் பற்றி இல்லை.... !'' என்று இழுத்த பட்டு தலையின் பின்புறம் காதருகே சொறிந்து கொண்டார்.

வெள்ளைக்காரன் ஒருவன் ஏதோ கேட்பதும், பட்டு தன் தலையைச் சொறிந்து கொண்டு நிற்பதும் அந்தப் பக்கம் சென்ற வாத்தியார் வைத்தியைக் கவர்ந்தன. அவர் அவர்கள் அருகில் சென்று கேட்டார்: ''என்னடா பட்டு, என்ன?''

இனித் தாமதித்தால் தொழிலுக்கு ஆபத்து என்றுணர்ந்த பட்டு, ''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை'' என்று அவசரம் அவசரமாகச் சொல்லியவாறு நார்மனிடம், ''வாருங்கள், வாருங்கள்'' என்று அழைத்துக் கொண்டே விரைவாக அவ்விடத்தை விட்டகன்றார்.

பட்டுவின் செயலில் காணப்பட்ட இந்தத் திடீர் சுறுசுறுப்பு நார்மனுக்கு வியப்பைத் தந்தது. வீடு ஏதேனும் நினைவுக்கு வந்த அவசரமா, அல்லது புதிதாக வந்தவருடன் பேச விருப்பமின்மையா?

சிறிது தூரம் சென்றதும் எதிரே முருகையன் வரக் கண்ட பட்டு நார்மனிடம் கூறினார்: ''அந்த மூட்டையை இவனிடத்தில் கொடுங்கள். எடுத்துக் கொண்டு வருவான்....''

முருகையன் தன் காவி ஏறிய பற்கள் வெளியே தெரியச் சிரித்துக் கொண்டே நார்மன் அருகில் வந்து நின்று அவனை நம்பிக்கையுடன் பார்த்தான்.

''பரவாயில்லை.... நானே தூக்கிக் கொண்டு வருகிறேன்'' என்றான் நார்மன்.

''அவனுக்கு ஒரு நாலணா கொடுத்தால் போதும்....'' என்று சொன்ன பட்டு, முருகையனைக் கேட்டார்: ''என்னடா, நாலணா வாங்கித் தரேன், சரிதானே....?''

''ஐயா இஷ்டம்.... அதுக்கு மேலே நான் என்ன சொல்றது?'' என்றான் முருகையன்.

நார்மன் முருகையனிடம் தன் பையைக் கொடுத்தான். நன்றி ததும்பிய முகத்துடன் முருகையன் அதை வாங்கிக் கொண்டான்.

இந்த வெள்ளைக்காரர்களே விசித்திரமான பேர்வழிகள் என்று பட்டது பட்டுவுக்கு.

கையில் ஏந்திய குத்துவிளக்குடன் சாரதா அப்பொழுது எதிரே வரக் கண்டார் பட்டு.

''எங்கே எடுத்துக் கொண்டு போகிறாய், அதை, விற்கவா?'' என்று பட்டு கேட்டார்.

நார்மன் அந்தப் பெண்ணை நோக்கினான். கீழ்நாட்டு மக்களுக்கே உரித்தான கருமை வாய்ந்த தீட்சண்யமான கண்கள். தாமரை மலரின் மணம் போன்ற ஆரவாரமற்ற அழகு.

அந்நியனைக் கண்ட கூச்சத்தால் முகம் சிவந்த சாரதா, நடுத் தெருவில் தன் வறுமை விளம்பரமாவதைக் கண்டு வெட்கப்பட்ட நிலையில், கீழே குனிந்து கொண்டே கூறினாள்: ''ஆமாம்....''

வெள்ளைக்காரர்களுக்கு இந்த மாதிரி பொருள்களில் ஈடுபாடுண்டு என்பதை உணர்ந்த பட்டு, அவளிடத்தில் கூறினார்: ''சரி, கொண்டா, அதை இப்படி....!''

பளபளப்பான 'நியான் சைன்' நாகரிகத்திலிருந்து வந்திருந்த நார்மனை இந்தக் குத்துவிளக்கு மிகவும் கவர்ந்தது. அவன் இந்த மாதிரியான விளக்கொன்றை கலிஃபோர்னியாவில் ஓர் இந்திய நண்பர் வீட்டில் பார்த்திருக்கிறான். பூஜைக்கு ஏற்றி வைக்கப்பட்டிருந்தது அது. ஆனால் தமிழ் நாட்டுக் கிராமமொன்றில் அதை விற்பதற்காக ஒரு பெண் தெருவில் எடுத்துச் செல்வாளென்று அவன் எதிர்பார்க்கவில்லை.

''உங்களுக்குப் பிடித்திருக்கிறதா இது?'' என்று கேட்டார் பட்டு.

''இது விலைக்கா....?'' என்று கேட்டான் நார்மன். தான் அவர்கள் பேசியதைப் புரிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ள அவன் விரும்பவில்லை.

''விலைக்குத்தான்'' என்று நார்மனிடம் கூறிய பட்டு, சாரதாவிடம் சொன்னார்: ''இது என்ன பத்து ரூபாய் பெறும். நீ அறுபது ரூபாய் விலை சொல்லு. உனக்கு முப்பது, எனக்கு முப்பது. சரிதானே...?''

தாம் தமிழில் கூறுவது நார்மனுக்குப் புரியாதென்ற நம்பிக்கையில் அவர் துணிந்து பேரம் பேசிக் கொண்டிருந்த செய்கை அவனுக்குச் சிறிது அதிர்ச்சியைத் தந்தது.

சாரதா பட்டுவை எரித்து விடுபவள் போல் பார்த்தாள். குத்துவிளக்கை விற்க நேர்ந்திருக்கிறதே என்று ஏற்கனவே மனம்

சிறப்புச் சிறுகதை

''வீட்டில் உள்ள குத்துவிளக்கை விற்பதென்பது செல்வத்தின் செல்வ மாகிய திருமகளை வெளியேற்றுவது மாதிரி...கல்யாணம் ஆகிச் செல்லும் பெண்ணுக்குக் குத்துவிளக்கு கொடுப்பது எங்கள் மரபு. கணவன் வீட்டுக்குச் சென்று ஒளியேற்றி வைக்க வேண்டும் என்பதுதான் இதன் அர்த்தம்'' என்கிறுள் சாரதா.

என்னதான் வறுமையில் உழன்றாலும் பாரதத்தின் பண்பு பண்புதான் என்பதை வலியுறுத்தும் இந்தச் சிறப்புச் சிறுகதை அட்டைப்படக் கதையாகவும் சிறக்கிறது.

நொந்திருந்த அவளுக்குப் பட்டுவின் 'பேரம்' அவமானமாக இருந்தது.

''உங்க மாதிரி எல்லாரையும் ஏமாத்த அவ்வளவு கீழ்த்தரமாகப் போயிடல்லே நான்..... குத்துவிளக்கைக் கொண்டாங்கோ இப்படி!'' என்று கூறிக் கொண்டே அதை அவர் கையினின்றும் 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டு சென்றாள்.

பட்டு நார்மனை நோக்கினார். அவன் நடந்ததைக் கவனிக்காதது போல் வேறு புறம் திரும்பிக் கொண்டிருந்தான்.

ஒரு நல்ல வியாபாரம் கைநழுவிப் போய் விட்டதே என்ற ஏமாற்றத்தால் தாக்குண்டபட்டு தமக்குள் படபடத்தார்.

''கழுதை.... இராத்திரிச் சாப்பாட்டுக்கு வழி இல்லே..... திமிர் அசாத்தியம். அப்பன் கடன் வாங்கியே செத்தான். அம்மா இருக்கிற ஒழுங்குக்கு நாக்கைப் பாரு, நாக்கை.... சாமானை வித்துச் சாப்பிடுவாளாம், தலை வணங்க மாட்டாளாம். அல்லி ராணி......!''

பட்டுவின் மனநிலையைப் புரிந்து கொண்ட நார்மன் ஒன்றும் பேசவில்லை.

அழிந்துபட்ட பட்டுவின் சுயகௌரவத்துக்கு மரியாதை செலுத்துவது போல் சில நிமிஷங்கள் அமைதி நிலவியது.

சிறிது தூரம் சென்றதும் நார்மன் கேட்டான் : ''இந்தப் பெண்ணுக்குத் திருமணம் ஆகவில்லையா....?''

''திருமணமா இவளுக்கு? இவள் அம்மா நடத்தை சரியில்லை....'' என்றார் பட்டு.

'பணம் இல்லாத காரணத்தினால் நடத்தை சரியில்லையா, அல்லது பணம் மிகுதியாக உள்ள காரணத்தினால் நடத்தை சரியில்லையா ?' என்று வினவினான் நார்மன். அந்தப் பெண்ணின் வறுமையைப் பற்றி அவன் தெரிந்து கொண்டானாயினும், இது அவன் தனக்குத் தானே கேட்டுக் கொண்ட கேள்வி.

வறுமையின் காரணமாக இந்தியாவில் ஒழுக்கம் குறைந்திருக்கிறது; அமெரிக்காவில் ? – செல்வ மிகுதியினால் ஒழுக்கம் குறைந்திருக்கிறது! இது தீராத புதிர்தான்.

''வறுமையின் காரணமாக ஒழுக்கம் குறைந்தால் அது தொழில். செல்வத்தின் காரணமாக ஒழுக்கம் குறைந்தால் அது விளையாட்டு......'' என்றார் பட்டு.

பட்டுவிடமிருந்து இக்கூற்றை எதிர்பார்க்காத நார்மன் ஒருகணம் அவரை வியப்புடன் நோக்கினான்.

''இந்தச் சாரதாவிடம் 'பேரம்' பேசுவதைவிட அவள் அம்மாவிடம் சென்று ஐம்பது ரூபாயை விட்டெறிந்து விட்டால் குத்துவிளக்கைத் தன்னால் தந்துவிட்டுப் போகிறாள். அவளுக்கு வேண்டியது பணம் தானே?'' என்று கூறினார் பட்டு. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை அநுபவத்தின் பலத்தினால் ஆராய்ந்து தம் கருத்தை வெளியிட்ட பட்டுவை மீண்டும் 'தொழில் நினைவு' பற்றிக் கொண்டது போலும் ! சாரதாவின் குத்துவிளக்கு அவருக்குக் கௌரவப் பிரச்னையோ ?

''எனக்கு அந்தக் குத்துவிளக்கு வேண்டுமென்ற அவசியமில்லை'' என்றான் நார்மன்.

''நீங்கள் சும்மா இருங்கள். உங்களுக்கு ஏற்பட்ட அவமானம் எனக்கில்லையா ?''

நார்மனுக்குத் தனக்கு என்ன அவமானம் ஏற்பட்டது என்று புரியவில்லை. தன்னையும் கட்சி சேர்த்துக் கொள்ளும் முயற்சி ! ஓர் ஏழைப் பெண்ணிடம் தன் கோபத்தைக் காட்டுவதிலா இவர் கௌரவத்தின் வரையறை அடங்கிக் கிடக்கிறது?

''இதுதான் மைனர் ரங்குவின் வீடு...... இவனைத்தான் வீடு கேட்கலாமென்று உங்களை அழைத்து வந்தேன். இவனுடைய இன்னொரு வீடு காலியாக இருக்கிறது......'' என்றார் பட்டு.

''மைனர்'' – என்று சொல்லிவிட்டுக் கொஞ்சம் திகைத்த நார்மன் பிறகு கேட்டான்: ''அவர் கிறிஸ்துவரா?''

''நோ....நோ....'' என்று பலமாகத் தலையசைத்த பட்டு கூறினார்: ''அவன் பிராமணன்.''

அவர் குரலில் கண்ட ஆக்ரோஷத்தைப் பார்த்தால் தான் ஒரு மாபெரும் குற்றம் இழைத்துவிட்டோம் போலிருக்கிறது என்று பட்டது நார்மனுக்கு.

'''மைனர்' என்றால் என்ன?'' என்று கேட்டான் நார்மன்.

''மைனர் என்றால்....'' – இதை எப்படி விளக்குவதென்று அவருக்குப் புரியவில்லை.

'நடத்தை சரியில்லை' என்று சொல்லிவிட்டு உள்ளே செல்ல முற்பட்ட பட்டுவுக்கு முருகையன் நினைவு வந்தது.

''இப்படி வையேண்டா, பையை'' என்று திண்ணையைக் காட்டினார்.

முருகையனிடம் ஓர் ஐந்து ரூபாயை நீட்டினான் நார்மன்.

''அவனிடம் சில்லறை இருக்காது. இது அமெரிக்கா இல்லே'' என்றார் பட்டு.

''சில்லறை வேண்டாம். அவனே எடுத்துக் கொள்ளட்டும்.''

பட்டுவுக்கு இதயம் நின்று விடும்போல் இருந்தது.

''அவனுக்கே ஐந்து ரூபாயா? நன்ருக இருக்கிறது. அத்தனையையும் அவன் குடித்துத் தொலைத்து விடுவான்....''

பணம் அவனுடைய ஒழுக்கத்தைக் கெடுத்து விடும் என்ற அவருடைய விசாரம் நார்மனுக்கு வேடிக்கையாக இருந்தது. அப்படி யென்ருல் இந்தியாவில் ஏழைமை தலைவிரித்தாடுவது ஒழுக்கத்தைக் காப்பாற்றத்தானே ? —

முருகையனுக்கு அவர்கள் பேசிக் கொண்டிருந்தது ஒன்றும் புரியவில்லை. அவன் தலையில் கட்டியிருந்த 'முண்டாசை' அவிழ்த்து இடுப்பில் கட்டிக் கொண்டு இருவரையும் பார்த்துக் கொண்டு நின்ருன்.

நார்மன் அவன் கையில் அந்த ஐந்து ரூபாயைத் திணித்துவிட்டுத் தலையை ஆட்டினுன்.

முருகையன் வாங்கிக் கொள்ளலாமா கூடாதா என்று விளங்காமல் பட்டுவை நோக்கினுன்.

''வாங்கிக்கோடா வாங்கிக்கோ. உன் காட்டிலே மழை.....'' என்ருர் பட்டு.

பட்டு உள்ளே சென்ருர்.

முருகையன் நார்மன் கொடுத்த ஐந்து ரூபாய் நோட்டை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு அப்படியே தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிடு போட்டுவிட்டு அகன்ருன்.

வாசல் முகப்பில் வண்ணக் கலவைகள் விளைவித்த சில சித்திரங்கள் காணப்பட்டன. தாமரை மலரில் வீற்றிருக்கும் அப்பெண்ணின் உருவம் செல்வத்தின் தெய்வமாகிய திருமகளைக் குறிக்கின்றது போலும். இரு மருங்கும் இரண்டு யானைகள் துதிக்கைகளை உயர்த்தி அஞ்சலி செலுத்துகின்றன.

டாலரே தெய்வம் என்று வணங்கும் அமெரிக்க நாகரிகத்துக்கும், தெய்வமே டாலரைத் தரும் என்ற பாரத நாட்டு நம்பிக்கைக்கும் எத்தனை வேறுபாடு ?

மைனர் ரங்குவுடன் பட்டு வெளியே வந்தார்.

ரங்குவின் கழுத்தை அலங்கரித்த புலி நகம் கோத்த 'மைனர்' சங்கிலி நார்மனின் கவனத்தைக் கவர்ந்தது. நார்மன் அதை உற்றுப் பார்ப்பதைக் கண்ட ரங்கு தேங்காய்ப் பூத் துவாலையினுல் உடலை மூடிக்கொண்டான்.

''வீட்டைப் பார்க்கப் போகலாமா ?'' என்று ரங்கு பட்டுவைப் பார்த்துக் கேட்டான்.

''ரொம்ப அவசரப்படாதேடா ,முட்டாள். யோசிச்சுச் சொல்ற மாதிரி சொல்லு....'' என்று தமிழில் கூறினுர்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் நார்மன். அவன் பட்டுவின் நாடகத்தை ரசிக்கத் தொடங்கி விட்டான். தனக்குத் தமிழ் தெரியுமென்று சொல்லி இதன் சுவையை அவன் கெடுக்க விரும்பவில்லை.

''அவனுக்கு இஷ்டமில்லை..... இருந்தாலும், நான் பேசி வாங்கிக் கொடுக்கிறேன்......'' என்ருர் பட்டு.

பட்டுவின் கட்டளைக்கிணங்க ரங்கு முகத்தைச் சிந்திப்பதுபோல் வைத்துக் கொண்டான். அவன் துவாலையினுல் முகத்தைத் துடைத்துக் கொண்டு தன் சுருள் மயிரைப் பின்புறம் கோதிக் கொண்டான்.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு ரங்கு கேட்டான்: ''சரி, போகலாமா?''

பட்டு மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டினுர். ''வீட்டைக் கொடுக்கச் சம்மதித்து விட்டான்..... வீட்டைப் போய்ப் பார்க்கலாம்.....''

நார்மன் திண்ணையின் மீதிருந்த தன்னுடைய பையை எடுத்துத் தோளின் மீது சாத்திக் கொண்டான்.

''ஐந்து ரூபாய் கொடுத்திருக்கிறீர்களே.... அவனைக் கூப்பிடட்டுமா, மறுபடியும்....'' என்று கேட்டுக் கொண்டே வாசலுக்குச் சென்ருர் பட்டு.

''வேண்டாம். நானே எடுத்துக் கொண்டு வருகிறேன். மீண்டும் நான் ஏதாவது பணம் கொடுத்தால், உலக ஒழுக்கத்தைப் பற்றிய உங்கள் சொற்பொழிவைக் கேட்க நேரிடும்'' என்ருன் நார்மன்.

போகும் போது ரங்கு பட்டுவிடம் சொன்னுன் : ''அந்த வீடு சௌகரியப்படுமோ என்னமோ அவனுக்கு? குளிக்கத் தனி அறை கிடையாது. கிணற்றங்கரையில் தான் குளிக்கனும்.....''

''ஆமாம்.... வெள்ளைக்காரன் குளிச்சு வாழ்ந்தான். நம்ப மாதிரியா, ஒரு நாளைக்கு முப்பது தரம் குளிக்க.... வருஷத்துக்கு ஒரு தடவை குளிக்கப் போருன்.....''

நார்மன் திகைத்து நின்ருன். பிறகு ஓரமாகச் சென்று கொண்டிருந்த அவர்கள் ஒரு வீட்டைக் கடக்கும்போது, அவ்வீட்டு வாசலிலிருந்து எறியப்பட்ட எச்சில் இலை அவனை உராய்ந்து கொண்டு சென்றது. அந்த இலை உற்பத்தியாகிவந்த மூலஸ்தானத்தைக் காண அவன் அந்த வீட்டை நோக்கினுன். நெற்றியில் பளிச்சென்ற திலகம். பட்டு கூறுவதுபோல் ஒரு நாளைக்கு முப்பது தடவை குளிப்பதினுலோ என்னவோ மிகத் தூய்மையான திருமேனி....

''கொஞ்சம் ஜாக்கிரதையாக வர வேண்டும். சாப்பாட்டு நேரம்'' என்ருர் பட்டு.

இது ஓர் இயற்கையான நிகழ்ச்சிபோல் இருக்கிறது. நார்மன் பதிலொன்றும் கூருமல் பட்டுவைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

ஒரு பெரிய மனைக்கட்டில் தாற்காலிகக் குடியிருப்பாக நிறுவப்பட்ட ரங்குவின் வீட்டைச் சுற்றிக் குப்பை கூளங்கள் வேலியாக அரண் செய்தன.

''இதுக்குப் போய் நூறு ரூபாய் கேட்பதா?'' என்ருன் ரங்கு. அவன் மனச்சாட்சி தொந்தரவு கொடுத்தது போலும்.

''நீ வாயை மூடிண்டிரு. நூறு ரூபாய் வாங்கித் தர நானுச்சு....''

வீட்டைத் திறந்து உள்ளே புகுந்ததும் பெரிய கூடம். சிகரெட் துண்டுகள் அங்கு மிங்கும் சிதறிக் கிடந்தன. ரங்கு இந்த வீட்டில் புழங்குவது உண்டு போலிருக்கிறது.

கூடத்தின் இடக்கோடியில் ஓர் அறை. அதை ரங்கு திறந்து காட்டினான்.

'டிஸ்டெம்பர்' செய்யப்பட்ட சுவரைக் கண்டு நார்மன் சிறிது பிரமித்தான். இது அந்த வீட்டுக்குப் பொருத்தமில்லாமல் காணப்பட்டது. ஆள் உயரத்துக்கு ஒரு நிலைக்கண்ணாடி இணைக்கப்பட்ட பீரோ ஒன்று அவ்வறையில் இருக்கக் கண்ட பட்டு ரங்குவைப் பார்த்துக் கேட்டார்: ''ஏண்டா, ரொம்ப ஏற்பாடா இருக்கே இந்த அறை...''

அவர் ரங்குவைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினார்.

''மாமா! அவன்கிட்டே சொல்லிடுங்கோ. இந்த பீரோ இங்கேதான் இருக்கும் என்று.''

''இந்தப் பீரோ இங்கேயே இருக்கும்'' என்றார் பட்டு.

''எனக்கு ஒரு ஆட்சேபணையுமில்லை'' என்று சொல்லிக் கொண்டே தோள்களைக் குலுக்கினான் நார்மன்.

வீட்டின் பின்புறம் கிணறு இருந்தது. கிணற்றிலிருந்து நீர் எடுப்பது எப்படி என்பதைப் பற்றி விஸ்தாரமாக விளக்கினார் பட்டு.

விண்வெளிக் கப்பலின் இயந்திர நுணுக்கங்களை எடுத்துக்காட்டி விட்டாற் போன்ற பெருமை அவர் முகத்தில் காணப்பட்டது.

''வீட்டுக்கு 'லைட்' கிடையாது. அதையும் சொல்லி விடுங்கள் அவனிடத்தில்...'' என்றான் ரங்கு.

பட்டு நார்மனிடம் இதைக் குறிப்பிட்டபோது அவன் புன்னகையுடன் கேட்டான்: ''வழியில் பார்த்தோமே, அந்தப் பெண் வைத்திருந்தாளே, அந்தமாதிரி விளக்கு கிடைக்குமல்லவா?''

சாரதாவின் நினைவினால் உந்தப்பட்டுப் பட்டு ஆவேசத்துடன் கூறினார்: ''அதே விளக்கை வாங்கித் தருகிறேன். அவ்வளவு தானே?.....''

''அவனுக்கு வீடு பிடிச்சிருக்கான்னு கேளுங்கோ....'' என்று ரங்கு கேட்டான்.

பட்டு நார்மனைக் கேட்டார்: ''வீடு பிடித்திருக்கிறதா?....''

''இந்த வீடு போதும் எனக்கு. பிடித்திருக்கிறதா இல்லையா என்பது வேறு கேள்வி'' என்றான் நார்மன் சிரித்துக் கொண்டே.

''வாடகை வேண்டுமானால் ஐம்பது ரூபாய் சொல்லுங்கள் போதும்....'' என்றான் ரங்கு.

''நீ சும்மா இரு'' என்று அவனை அதட்டிய பட்டு நார்மனைப் பார்த்துக் கொண்டே ஆங்கிலத்தில் சொன்னார்: ''என்ன நூற்றைம்பதா இந்த வீட்டுக்கு? நோ நோ.... எழுபத்தைந்துதான் தர முடியும்....!''

ரங்குவுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. அவன் பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

''முட்டாளே, நூற்றிருபத்தைந்து சொல்லுடா, இங்கிலீஷில்....'' என்றார் பட்டு அவனிடம்.

நார்மனுக்கு ரங்குவைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது.



''ஸார்! நான் பழம்பெரும் நடிகன்! பிரபலமாவதற்கு ஏதாவது வழி சொல்லுங்களேன்!''

''ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்து விடுங்கள்! உங்களுக்கு வரவேற்பு கூட்டம் போட்டு பப்ளிஸிட்டி பண்ணுவாங்க!''

''நூற்றிருபத்தைந்து ரூபாய்'' என்றான் ரங்கு பலவீனமான குரலில்.

''நூற்றிருபத்தைந்தா? நோ.... நோ...'' என்று சொன்ன பட்டு, நார்மனைத் தனியே அழைத்துச் சென்றார்.

''நூறு சொல்லட்டுமா?'' என்று மெதுவாகக் கேட்டார்.

''சொல்லுங்கள்!'' என்றான் அவன்.

பட்டு அவன் மதிப்பில் உயர்ந்து கொண்டே போனார். கலிஃபோர்னியா 'ரியல் எஸ்டேட் ஏஜெண்டுகள்' இவரிடம் பிச்சை வாங்க வேண்டும் என்று தோன்றிற்று அவனுக்கு.

பட்டு ரங்குவை அழைத்துக் கொண்டு போய்ச் சிறிது நேரம் ஆவலுடன் பேசினார்.

அவர் நார்மனிடம் திரும்பி உற்சாகத்துடன் வந்தார். ''நூறு ரூபாய்க்குச் சம்மதித்து விட்டான். ஆனால் கொஞ்சம் 'அட்வான்ஸ்' வேண்டுமாம்......''

''இருநூறு போதுமா?'' என்று ரங்குவை ஆங்கிலத்தில் கேட்டார் பட்டு.

அவன் தலையை ஆட்டினான்.

இருநூறு ரூபாயை ரங்குவின் கையில் திணித்த பட்டு சொன்னார்: ''முருகையனுக்கு அஞ்சு ரூபாய் கொடுத்தான். வாடகை நூறு கேட்கக் கூடாதா? சும்மாவா கேட்கிறோம்?''

''வீட்டைப் பெருக்கிச் சுத்தப்படுத்த ஆள் அனுப்பறேன்னு சொல்லுங்கோ....'' என்றான் ரங்கு.

பட்டு இதை நார்மனிடம் கூறியபோது அவன் பலமாகத் தலையை ஆட்டினான். ''நோ....நோ.... ஆள் எதுக்கு? நானே செய்து கொள்ளுகிறேன்......''

''விசித்திரமான ஆசாமிகள் இவங்க! மூட்டை தூக்கறது, வீட்டைப் பெருக்கறது, கக்கூஸை அலம்பறது எல்லாம் அவனவனே செஞ்சுக்கறாங்களே, அந்தஸ்து, கிந்தஸ்து

ஒண்ணும் கிடையாதோ் இவங்களுக்கு.....''
என்றார் பட்டு.

தொழில் வேற்றுமையின் காரணமாகக் கற்பிக்கப்பட்ட ஜாதி ஏற்றத் தாழ்வுகள் இவர்கள் இரத்தத்தில் எப்படி ஊறிக் கிடக்கின்றன என்பதை நார்மன் இப்பொழுது தான் உணர்ந்தான்.

''சரி..... நாங்கள் வருகிறோம்.....'' என்றார் பட்டு.

நார்மன் அவரிடம் ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களை எண்ணிக் கொடுத்தான்.

''இது எதுக்கு?'' என்று கேட்டார் பட்டு. அவருக்கு நார்மன் மீது சிறிது கோபம் ஏற்பட்டது. ரங்குவின் எதிரில் சுளையாக ஐம்பது ரூபாயை எண்ணிக் கொடுக்கிறானே?.... இனி ரங்குவிடமிருந்து பணம் புரட்டுவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டும். அப்புறம் வந்து வாங்கிக் கொள்ளலாம் என்று திட்டமிட்டிருக்கும் போது, அத்தனையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டானே! இப்பொழுது வேண்டாமென்று மறுத்து விட்டால், பிறகு வந்து கேட்பது நன்றாக இருக்குமா? சரி, சரி ரங்குதானே!.... சமாளித்துக் கொள்ளலாம்..... இப்பொழுது வாங்கிக் கொள்ளுவதுதான் நல்லது....

''உங்கள் கமிஷன்....''என்றான் நார்மன்.

''நல்ல கமிஷன்.....'' என்று சொல்லிக் கொண்டே பணத்தை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டார் பட்டு.

''சாப்பாட்டுக்கு என்ன ஏற்பாடுன்னு கேளுங்கோ....'' என்றான் ரங்கு.

''ஆமாம்... மறந்தே போய்விட்டேனே'' என்று சொல்லிக் கொண்டே பட்டு நார்மனைக் கேட்டார். ''சாப்பாடு?''

''கவலைப்பட வேண்டாம். எல்லாம் என்னிடம் இருக்கிறது....'' என்று சொன்ன அவன், தன் பையைத் திறந்து அதிலிருந்து ஒரு பெட்டியை எடுத்து, அதற்குள்ளிருந்து ஐந்தாறு 'டின்'களைக் காட்டினான்.

''இது போதுமா?'' என்று கேட்டார் பட்டு. ரங்கு ஒரு குழந்தையின் அதிசய உணர்ச்சி முகத்தில் தோன்ற அந்த 'டின்'களைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சாப்பிடுகிறீர்களா?'' என்று ரங்குவைக் கேட்டான் நார்மன்.

''மாமிசமா?'' என்று வினவினார் பட்டு. நார்மன் சிரித்துக் கொண்டே இலேசாகத் தலையசைத்தான்.

''ராம.... ராம.... அது ஒண்ணுதான் குறைச்சல்......!'' என்ற பட்டு ரங்குவைக் கேட்டார்: ''உனக்கு உண்டோ, இந்தப் பழக்கம்? ஒரு பிடி பிடிக்கிறயா?''

ரங்கு பதிலொன்றும் கூறாமல் மௌனமாகச் சிரித்தான்.

''பசுமாட்டையே 'டின்'லே அடைச்சுண்டு வந்திருக்கானே, படுபாவி.....'' என்று சொல்லிக் கொண்டார் பட்டு.

நார்மன் இரண்டு மதுப் புட்டிகளை எடுத்து வெளியே வைத்தான்.

ரங்குவும் பட்டுவும் வெளியே போனார்கள்.

யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. நார்மன் மதுப் பாட்டில்களை அறைக்குள் கொண்டு வைத்து விட்டுத் தம்ளர்களைக் கதவோரமாக நகர்த்தியபிறகு, வாசலுக்குச் சென்று கதவைத் திறந்தான்.

சாரதா குத்துவிளக்கைக் கையில் ஏந்தியவாறு நின்று கொண்டிருந்தாள். ''உள்ளே வாருங்கள்'' என்றான் நார்மன் தமிழில்.

சாரதாவின் கண்களில் வியப்பு மலராய்ப் பூத்தது. அந்நியன் ஒருவன் இலக்கணமாய்த் தமிழ் பேசியது அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

''பட்டுவைத் தேடிக் கொண்டு வந்தீர்களா?'' என்று கேட்டான் நார்மன்.

''இல்லை..... உங்களைத்தான்.....''

''என்னையா?'' — நார்மனுக்கு ஒன்றும் விளங்க வில்லை. ''சரி, உள்ளே வாருங்கள். ஒரு கௌரவம் வாய்ந்த பெண்ணை வரவேற்கும் நிலையில் இந்த அறை இருக்கிறது என்று என்னால் உறுதி கூற முடியாது....''

''இந்த அறை எப்பொழுதுமே அப்படி இருந்ததில்லை. மைனர் ரங்கு வீடுதானே இது?'' என்றாள் சாரதா.

''ரங்குவின் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது.... நான்

உங்கள் கூந்தல் விருத்திக்குத் தைலம் நீங்களே செய்து கொள்ளலாம்



நீங்கள் வழக்கமாக கூந்தலுக்கு உபயோகிக்கும் 300 கிராம் எண்ணெயில் (12 அவுன்சு), ஒரு அட்டைப் பெட்டியில் உள்ள ''காஷ்மீர் - குஸும்'' என்பதைச் சேர்த்து, 3 நாட்கள் சூரிய வெப்பத்தில் ஊறவைத்த பிறகு, எண்ணெயில் வாசனையைச் சேர்க்கவும். மேல் உள்ள எண்ணெயை தினம் நன்றாக சிரசில் தேய்த்து கூந்தலைக் காக்கவும். வடிகட்டாமல், ஊறிக்கொண்டிருக்கட்டும். (விலை சுமார் 0-90) போலிகளை மறுக்கவும். போலிகளால் கூந்தலுக்கே அபாயம்.

சோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை-1

டாக்ஸி விபத்து

(சிங்காரத்தின் ஊகங்கள்)

சற்றே திறந்திருந்த அறைக் கதவின் வழியாகச் சிங்காரம் ஒரு காட்சியைக் காணுகிறான். அங்கு ஒரு நாய் தன் முன்னங்கால்களைத் தூக்கிக் கொண்டு நிற்கிறது. உள்ளே யாரோ இருக்கிறார்கள், அவர்களிடம் எதையோ எதிர்பார்த்தே அது அப்படி நிற்கிறது என்று சிங்காரம் ஊகிக்கிறான். வெளியில் வந்துள்ள அன்னியர்களைக் கூடச் சட்டை செய்யாமல் அந்த நாய் அங்கு அப்படி நிற்க வேண்டுமானால் அது வீட்டின் எஜமானனைத் தானிருக்க வேண்டும். சிங்காரத்தின் முடிவு என்றுமே தவறாக இருந்ததில்லை.

இந்தப் புழுதிக்காகச் சொன்னேன்!'' என்றான் நார்மன்.

''இந்தப் புழுதி வீட்டில் மட்டிலுமா? சமூகத்திலும் ஏறிக் கிடக்கிறது!'' என்றாள் சாரதா.

நார்மன் பதிலொன்றும் கூறவில்லை. திட சித்தத்துடன் காணப்பட்ட ஒரு பெண்ணின் கோபம் இயற்கையான ஆவேசம்....

''மன்னிக்க வேண்டும்.... உங்களுக்கு இந்தக் குத்துவிளக்கு வேண்டுமா?.... இதன் விலை ரூபாய் பத்துதான். அறுபது என்று பட்டு சொல்லியிருந்தால் அது பொய்.... அது கிடக்கட்டும், உங்களுக்குத் தமிழ் தெரியுமென்று அவருக்கு இன்னமும் தெரியாதா?''

''தெரியாது.... காலையில் அவர் உங்களுடன் பேசியது எனக்குப் புரிந்திருக்காது என்று அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார்.''

சாரதாவின் முகத்தில் புன்னகை.

''அப்படியானால் நீங்கள் அவரை நன்றாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள்....''

நார்மனின் முகத்தில் புன்னகை.

''என்னைப் பற்றி ஏதாவது சொன்னாரா?''

''எதற்குக் கேட்கிறீர்கள்?''

''அவர் என்னைப் பற்றி என்ன சொல்லியிருந்தாலும் சரி, அது உண்மை... ஆமாம். நான் கர்வம் பிடித்தவள்தான்.... என் அம்மாவைப் பற்றியும் சொல்லியிருப்பார். அதுவும் வாஸ்தவம்தான்.... கையில் காசில்லாமல், படிப்பும் இல்லாமல் போலிக் கட்டுப்பாடுகளுடன் கூடிய இந்தச் சமூகத்தில், கணவனை இழந்த எந்தப் பெண்ணும் கௌரவமாக வாழ முடியாது.... நான் கொஞ்சம் படித்திருக்கிறேன். என்னைக் காத்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

''நீங்கள் உங்கள் நாட்டுப் பண்பாட்டின் உண்மையான பிரதிநிதி என்று நினைக்கிறேன்'' என்றான் நார்மன்.

''நான் பாராட்டுப் பெற இங்கு வரவில்லை. மனத்தில் தோன்றியதைச் சொல்ல வந்தேன். அவ்வளவுதான்....!''

நார்மன் சாரதாவைக் கண்கொட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். 'சக்தி வழிபாடு பாரத கலாசாரத்தின் உயிர் நாடி. சக்தியின் சீற்றம்தான், இதோ, கண்ணெதிரே தோன்றும் காட்சியோ....?'

''வீட்டில் உள்ள குத்துவிளக்கை விற்பதென்பது செல்வத்தின் செல்வமாகிய திருமகளை வெளியேற்றுவது மாதிரி.... கல்யாணம் ஆகிச் செல்லும் பெண்ணுக்குக் குத்துவிளக்கு கொடுப்பது எங்கள் மரபு. கணவன் வீட்டுக்குச் சென்று ஒளியேற்றி வைக்க வேண்டுமென்பதுதான் இதன் அர்த்தம். ஆனால் வீட்டில் உள்ள குத்து விளக்கை விற்கும் நிலையில் நாங்கள் இருக்கிறோம்....'' சாரதாவின் கண்களில் நீர் கசிந்தது.

வாசலில் யாரோ வரும் அரவம் கேட்டது. கோபக் கனல் வீசப் பட்டு உள்ளே வந்தார். அவருடன் ஒரு பெண்மணியும் வந்தாள்.

''பாத்தியா உன் பெண்ணுக்கு இருக்கிற ஆணவத்தை! – வெள்ளைக்காரன் கிட்ட வியாபாரம் பண்ணத் தனியே வந்துட்டா... நான் அப்பவே சொன்னேனே கேட்டியா.... கழுதையைக் கட்டிப்போடாமே, படிக்கவைச்சே! பாரு, அவ யோக்கியதையை!''

''என்னடி இது.... ஏற்கனவே நமக்கு இருக்கிற பேர் போறாதுன்னு......'' – சாரதாவின் தாயினால் அதற்கு மேல் பேச முடியவில்லை. தொண்டை அடைத்துக்கொண்டது.

''மிஸ்டர் பட்டு, இந்தக் குத்து விளக்கை நான் வாங்கிக் கொள்ளுகிறேன்... விலை அறுபது ரூபாய்தானே?'' என்றான் நார்மன் தமிழில்.

நார்மன் தமிழ் பேசக் கேட்ட பட்டு, பேயைக் கண்டுவிட்டாற் போன்ற பரபரப்புடன் நின்றார்.

''உங்களுக்கு முப்பது... சாரதாவின் தாய்தானே இந்த அம்மா? – இவர்களுக்கு முப்பது....அப்படித்தானே?''

''அறுபது ரூபாய் வேண்டாம். இதன் விலை பத்து ரூபாய்தான்'' என்றாள் சாரதா.


''இல்லை... அறுபதே இருக்கட்டும்.... ஆனால் ஒரு நிபந்தனை. நீங்கள்தான் இந்தக் குத்துவிளக்கை இனி ஏற்றி வைக்க வேண்டும்...'' என்று புன்னகை செய்தான் நார்மன் மெய்லர்.

சாரதா அவனை ஏறிட்டு நோக்கினாள். அவள் கண்கள் கோபத்தால் சிவந்தன.

''பணத்தை அதிகப்படுத்தி எங்கள் பண்பாட்டைப் பேரம் கொள்ள முடியும் என்று நீங்கள் நினைப்பது தவறு. நான் இங்கு வந்ததற்காக வருந்துகிறேன்...''

இவ்வாறு சொல்லி விட்டு வெளியே சென்ற சாரதாவைப் பார்த்துக் கொண்டே வாயடைத்து நின்றான் நார்மன் மெய்லர்.

குறுநாவல்



'டொக், டொக், டொக்!' —இந்த ஒலியுடன் ஒரு நீண்ட விசில் சத்தம்.

இரவு மணி ஒன்று? கடிகாரத்தைப் பார்க்க வேண்டியதில்லை. அதோ, ராம்பகதூர்சிங் வருகிறான். அந்தத் தெரு முனையில் அவனுடைய கனத்த பூட்சுகளின் காலடி ஓசை கேட்டாலுமே மணி ஒன்று என்று தீர்மானித்துக் கொள்ளலாம். அவ்வோசையைத் தொடர்ந்து அவன் கையிலிருக்கும் குறுந்தடியால் தரையைத் தட்டும் 'டொக், டொக்' ஒலியும், நீண்ட விசில் சத்தமும் சேர்ந்து அதை உறுதிப்படுத்தி விடும்.

கடிகாரம் என்ன, கடிகாரம்! சாவி கொடுத்தால்தான் அது சரியாக மணி காட்டும். சாவி கொடுத்துச் சரியான நிலையில் வைக்கப்படும் உயர்தரக் கடிகாரங்கள்கூடச் சில சமயம் குளிர் பிடித்துக் கொண்டு காலத்தைக் கோட்டை விடுவதும் உண்டு. ஆனால், ராம்பகதூர் சிங்? காலத்தின் எந்த ருதுக்களாலும் பாதிக்கப்பட முடியாத மகா யந்திரம் அவன்!

இரண்டு பெரிய சாலைகள், ஐந்தாறு தெருக்கள், ஏழெட்டுச் சந்துகள் கொண்ட அந்த வட்டாரம் அவனுடைய கண்காணிப்புக்கு உட்பட்டது. அதிகாரபூர்வமல்லாமல் தன்னைத் தானே இராக் காவல்காரனாக நியமனம் செய்து கொண்ட அவன், அவ்வேலையைத் தினமும் இரவு பதினொரு மணிக்குத் தொடங்கி விடியற்காலை நாலு மணியோடு முடித்துக் கொள்வான். கடுமையான சட்ட திட்டங்களுடன் இயங்கும் அலுவலகங்களில் வேலை பார்ப்பவர்கள்கூட ஐந்து பத்து நிமிடங்கள் தாமதமாகப் போவதைப் பார்க்கலாம்; ஆனால் இந்தக் கூர்க்கா ராம்சிங் தன் வேலையைத் தொடங்குவதில் ஒரு விநாடி நேரத்தையும் முன்பின்னாக்கி விடத் தன்னை அனுமதிக்க மாட்டான். அவனுக்கு அவன்தான் எஜமானன். அந்த 'எஜமானனை'ப் போல் அத்தனை கண்டிப்பான, கடின சித்தம் கொண்ட ஒருவனை எங்கு தேடினாலும் காண முடியாது. 'அவன்' இவனை அவ்வளவு கறாராக வேலை வாங்குவான். மளிகைக் கடையில் பொட்டலம் மடிக்கும் பையனுக்குக்கூட 'ஷாப் ஆக்ட்'டின் படி ஒரு நாள் லீவு கொடுத்தாக வேண்டும். ஆனால் இந்த 'எஜமான'னிடம் இவன் லீவு என்ற பேச்சே பேசக் கூடாது. எப்போதாவது சில சமயம் 'பிரஞ்சு லீவ்' போட்டு விடலாமா என்று அவனுக்குத் தோன்றும். அப்படி எண்ணியதுமே அந்த 'எஜமானன்' விசுவரூபமெடுத்து, 'ஆமாம்; இன்றைக்கு ஒரு நாள் நீ லீவு போட்டு விட்டால் உன்னை யாரும் ஏன் என்று கேட்கப் போவதில்லை. ஆனால் மாதம் பிறந்து ஒன்றிரண்டு தேதியானதும் ஒவ்வொரு வீட்டின் வாசலிலும் போய் நிற்பாயே, அப்போது உன்னால் கம்பீரமாகத் தலை நிமிர்ந்து மிடுக்குடன் சல்யூட் அடிக்க முடியுமா? ஏதோ யாசகம் கேட்பவனைப் போலல்லவா அங்கு நிற்க வேண்டியதாகி விடும்? அவ்வாறு நிற்பது உனக்கு அவமானமாக, வெட்கமாக, கடமையில் தவறிய





அவன் வருவான்!

ஜெகசிற்பியன்

குற்றமாக இராதா?' என்றெல்லாம் எச்சரிக்க ஆரம்பித்து விடுவான். உடனே, குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு நிமிடமும் தாமதம் செய்யாமல், குறுந்தடி, டார்ச் லைட், ஊது குழல் சகிதம் இராக் காவல் உலா வரப் புறப்பட்டு விடுவான் ராம்சிங்.

தனக்குத் தன்னையே எஜமானனுக்கிக் கொள்வதில்தான் எவ்வளவு சுகங்கள், சுதந்திரங்கள் பறி போய் விடுகின்றன.

அந்தத் தெருவின் இடது புற வரிசையில் ஏழாவது வீடாக ஒரு மாடி வீடு. சாம்பல் நிற டிஸ்டம்பர் அடிக்கப்பெற்ற அவ்வீடு ரொம்பப் பெரிசுமில்லை; சிறிசுமில்லை. வீட்டெதிரே சிறிய அளவில் அழகிய பூந்தோட்டம். வலது பக்கவாட்டில் – மதில் சுவரை ஒட்டினுற்போல் – கார் ஷெட். டாக்டர் வாசுதேவன் வீடு அது.

அவருக்கு வயசு நாற்பத்தைந்து இருக்கும். மனைவியும், ஒரே ஒரு பெண்ணும் இருக்கிறுர்கள். அந்தப்பெண் இப்போது மருத்துவக் கல்லூரியில் படிக்கிருள்; இரண்டாவ
வருடம்.

வாசுதேவன் தம் வீட்டிலேயே சிற
டிஸ்பென்சரி ஒன்றை வைத்துக் கொ
டிருக்கிறுர். காலை ஒன்பது முதல் பத்தும
வரையிலும், மாலை நான்கு முதல் ஐ
மணி வரையிலும் மட்டுமே அது தி
திருக்கும். சஸ்திர சிகிச்சையில் வல்லவ
கைராசியும் உண்டு. ஆனுல் குடத்திலிட
விளக்காக இருப்பவர். அவருடைய போ
அப்படி. நகரில் உள்ள பெரிய மருத்துவ ம
யொன்றில் கௌரவ சர்ஜனுகவும் இ
கிறுர். அவரது திறமையை அந்த மருத்
மனை நன்கு பயன்படுத்தி வந்தது.

அவருக்கு இன்றிரவு எட்டு மணி மு
பன்னிரண்டரை மணி வரையில் 'டியூட்
இன்னும் வீட்டுக்கு வரவில்லை; வரு
நேரம்தான். அவர் வரும் வரையில் தூ
காமல் விழித்திருப்பது அவருடைய சக
மிணி விசாலாட்சியின் வெகு காலப் ப
கம். இன்றும் அப்படித்தான் கூட
அறையிலே சும்மா படுத்
கொண்டிருக்கிருள். மகள் காம
மாடியில் படித்துக் கொண்டி
கிருள்.

'டொக், டொக், டொக்!'

வாரிச் சுருட்டிக் கொ
எழுந்தாள் விசாலாட்சி. சு
கடிகாரத்தைப் பார்த்தாள். ப
ஒன்று ஆகி ஐந்து நிமிட
நெற்றித் திலகம் கலைந்து விடா
மிகவும் ஜாக்கிரதையாக மு
தைத் துடைத்துக் கொ
அவள் விரைந்து போய் வா
கதவைத் திறப்பதற்கும், டா
ரின் கார் வாசலில் வந்து ந
தற்கும் சரியாக இருந்தது. இ
மட்டும் நடக்கும் அதிசயம
இது; டாக்டர் இரவு 'டியூட்
குப் போகும் ஒவ்வொரு தின
தவருமல் நடப்பதுதான்.
தேவன் காரை ஷெட்டில் விட



பூட்டிக் கொண்டு ஒரு கையில் ஸ்டெதாஸ் கோப்பும், மறு கையில் கார் சாவியுமாக வீட்டுக்குள் வந்து மாடிப்படிகளில் ஏறினார்.

''உங்களையும் அந்தக் கூர்க்காவையும் ஒரே வீட்டில்தான் வைக்க வேண்டும்; ரெண்டு பேருமே கடிகார முள்ளிலிருந்து ஒரு நிமிஷம்கூட அப்படி இப்படித் தவறுகிறதில்லை... !''


களைத்துப் போயிருந்த டாக்டர் மெல்லப் பின்னால் திரும்பி, வாசல் கதவைச் சாத்திக் கொண்டிருந்த தம் மனைவியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்துவிட்டு மௌனமாக மேலே ஏறிச் சென்றார்.

''டொக், டொக், டொக்!''

கூர்க்கா ராம்சிங் டாக்டர் வீட்டின் இரும்பு 'கேட்'டைத் தட்டினான். பிறகு மதில் சுவரைத் தட்டிக் கொண்டே நீண்ட ஓசையாக ஊதுகுழலை ஊதினான். கையிலிருந்த டார்ச் லைட்டின் ஒளி, கார் ஷெட் பக்கமும் தோட்டத்துப் பக்கமும் ஊடுருவிப் பாய்ந்து பின் அணைந்தது. மீண்டும் குறுந்தடியால் தரையைத் தட்டிக் கொண்டே மேலே நடக்கலானான். விளக்கு எரிந்து கொண்டிருக்கும் வீடுகளில் அவன் கொஞ்சம் அதிகமாகவே விசில் ஊதித் தரையைத் தட்டி ஜபர்தஸ்து செய்வது வழக்கம். ஏனென்றால், தான் தினமும் தவறாமல் ரோந்து காவல் வருவதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக!

டாக்டரின் வீட்டுக்கு அடுத்தது ஒரு பங்களா. விற்பனை வரி அதிகாரி ஒருவர் அதில் வாசம் செய்கிறார். மிகவும் தடபுடலான வாழ்க்கை. இரண்டு கார்கள், பெரிய தோட்டம், டென்னிஸ் கோர்ட் எல்லாம் உண்டு. மனைவி, மக்கள், உறவினர்கள் என்று ஒரு பெரிய பட்டாளமே அங்கு இருக்கிறது. பற்றாக்குறைக்கு மூன்று வேலைக்காரர்கள், ஒரு தோட்டக்காரன். இவர்களும் போதாதென்று ஒரு நாய் வேறு. 'லாபரடர்' இனத்தைச் சேர்ந்த நல்ல ஜாதி நாய். பௌருஷம் சிதைக்கப்படாத ஆண் நாய் அது. பங்களாவில் செல்லமாக வளருவதால் இதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. மாசம் எழுபது எண்பது ரூபாய்க்கு மேல் அதற்குச் செலவு. இரவு நேரத்தில் மட்டுமே அது அவிழ்த்து விடப்படும். அப்படி அவிழ்த்து விட்டாலும் பங்களாவைச் சுற்றி வராது. போர்ட்டிகோவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் பெரிய காரின் 'பானட்' மேல் ஏறிச் சுகமாகப் படுத்துக் கொள்ளும்.

கூர்க்கா ராம்சிங் அந்தப் பங்களாவின் 'கேட்'டையோ, மதில் சுவரையோ தட்டாமல் வெறும் தரையை மட்டும் தட்டிக் கொண்டு நடந்தான். காரணம், அங்கே அவனுடைய சேவை ஏற்கப்படவில்லை. ஆரம்பத்தில் இரண்டொரு மாதங்கள் மற்ற வீடுகளைப் போல் அந்தப் பங்களாவையும் கண்காணிப்புச் செய்து கொண்டுதான் வந்தான். மாதம் பிறந்து முதல் வாரத்தில் தன் 'கௌரவ சம்பளத்'துக்காகப் போய் நின்ற போது, 'உண்டு, இல்லை' என்று பதில் சொல்லக்கூட யாரும் வெளியே வரவில்லை. நின்று நின்று



பார்த்து விட்டுப் போய் விட்டான். அடுத்த நாள் வந்த போது வாசலில் ஒதுங்கி நின்றிருந்த ஒருவன், ''போய்யா, போ! நீ வேறே வந்துட்டே! நாங்கதான் இங்கே ராவும் பகலுமா காவல் காத்துக்கிட்டுக் கெடக்கிறோமே, தெரியலை?'' என்றான் எரிச்சலுடன்.

அவன் சர்க்காரிடம் சம்பளம் வாங்குகிற பியூன். அன்று முதல் ராம்சிங்கின் கணக்கிலிருந்து அந்தப் பங்களா கழிந்தது. ஆனாலும் தினமும் அவ்வழியாகப் போகும் போது தரையை மட்டும் தட்ட மறப்பதில்லை. 'கேட்'டையும் மதில்சுவரையும்கூடத் தட்டி, விசில் ஊதிவிட்டுப் போக அவனுக்கு விருப்பம் தான்; ஆனால் அந்தப் பங்களா தோட்டக்காரன் ஒரு நாள் அவனைக் கூப்பிட்டு, — ''இங்கே வரும்போது விசில் ஊதாதே! ஆபீஸர் தூக்கம் கெட்டுப் போகிறதாம்; கோபித்துக் கொள்கிறார்!'' என்று எச்சரித்திருந்தான். இது தவிர, அந்த நாய் இருக்கிறதே, அது ரொம்பவும் பொல்லாதது; அவனைக் கண்டாலே அதற்கு ஏனோ ஆவதில்லை. அவனது குறுந்தடி சத்தம் கேட்ட மாத்திரத்தில் அது 'உர்ர்'ரென்று உறும ஆரம்பித்து விடும்.

''டொக், டொக், டொக்!''

படியேறி மாடி வராந்தாவுக்கு வந்த டாக்டர் வாசுதேவன் சற்றே நின்று தெருப் பக்கமாகத் தம் பார்வையைச் செலுத்தினார். அங்கே, தெரு விளக்கின் மங்கலான வெளிச்சத்தில், கூர்க்கா ராம்சிங் கம்பீரமாக இராணுவ வீரனைப் போல் நடந்து செல்வது தெரிந்தது.

குள்ளமான — ஆனால் திடகாத்திரம் வாய்ந்த — உருவம். வயசு இருபத்தேழு அல்லது இருபத்தெட்டுதான் இருக்கும். காக்கிச் சட்டை, காக்கி அரைக்கால் சராய், காக்கி நிற மேஜோடு, கனத்த பூட்ஸ், இடுப்பில் பளபளப்பான பெல்ட், அதிலே உறையிட்டுத் தொங்கிய குறுவாள். தலையில் கூர்க்கா தொப்பி. ஒரு கையில் குறுந்தடி; மறு கையில் டார்ச் லைட். அவன் பீடி குடிக்கும் பழக்கம் உள்ளவன்; ஆனால் ரோந்து சுற்றும் போது அதைத் தொடுவதில்லை. அதிலேகூட அவனுக்கு அவனே செய்து கொண்ட ஒரு கட்டுப்பாடு.

ஏதோ சிந்தனையில் நின்ற டாக்டர் மெல்லப் பெருமூச்சு விட்டவாறு தம் அறைக்குச் சென்று உடைகளைக் களைந்து விட்டுப் பனியனும் வேஷ்டியுமாக வந்து சாய்வுநாற்காலியில் சாய்ந்தார். இனி அவர், அன்று தபாலில் வந்த வைத்திய சம்பந்தமான சஞ்சிகைகளைப் பார்த்து விட்டுப் படுக்கைக்குப் போக மணி இரண்டாகிவிடும்.

இரண்டு மலை வாழைப் பழங்களும், தம்ளரில் பாலும் எடுத்துக் கொண்டு மாடிக்கு வந்தாள் விசாலாட்சி. இவை தாம் டாக்டரின் இரவு உணவு.

வாசுதேவன் பழங்களை உரித்து வாயில் போட்டுக் கொண்டு பால் தம்ளரை எடுத்த போது பக்கத்து அறையிலிருந்து 'களுக்' என்ற சிரிப்பொலி கேட்டு வியப்புடன் திரும்பிப் பார்த்தார்.

இவ்வளவு நேரம் அந்த அறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்த அவருடைய மகள் காயத்ரி சிரிப்பை அடக்க மாட்டாமல் மீண்டும் சிரித்துக் கொண்டே எழுந்து தன் பெற்றோர் இருந்த அறைக்கு வந்தாள்.

மருத்துவக் கல்வி நூலில் சிரிப்பதற்குரிய ஹாஸ்ய விஷயம் எதுவும் இருக்காதே என்று எண்ணியவர்போல் மகளை ஏறிட்டு நோக்கினார் டாக்டர். விசாலாட்சியும் ஒன்றும் புரியாமல் தன் பெண்ணைப் பார்த்தாள்.

''இல்லை, அப்பா! இந்தக் கூர்க்காவை நினைத்துக் கொண்டேன்; சிரிப்பு வந்து விட்டது'' என்றவாறு வந்த காயத்ரி ஒரு மோடாவை இழுத்துப் போட்டு உட்கார்ந்து கொண்டாள். ''பாருங்களேன்! அவன் விசில் ஊதுவதும், விளக்கு அடித்துப் பார்ப்பதும், தரையை, 'கேட்'டை, மதில் சுவரைத் தட்டுவதும் — திருடனைப் பிடிக்கிற லட்சணமா இது?''

''ஓ.... விஷயம் அதுவா.....? உன் அம்மா முன்பு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்ததைத்தான் இப்போது நீயும் சொல்கிறாய்!'' என்று சிரித்த டாக்டர் சாய்வு நாற்காலியில் வசதியாகச் சாய்ந்தார். ''ஆமாம்; அவன் திருடனைப் பிடிக்க வருகிறான் என்று உனக்கு யார் சொன்னது?''

''வேறெதற்காம்?'' என்று கேட்டாள் காயத்ரி கேலியாக.

''திருடர்களை உஷார்ப்படுத்தி விரட்ட!''

''அதைத்தான் நானும் சொல்கிறேன். 'ஏ, திருடர்களே! நான் வரும்போது திருடாதீர்கள்; அப்படியே திருட வந்திருந்தாலும் என் சத்தத்தைக் கேட்டு எங்காவது பதுங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்லாமல் சொல்லத்தான் அவன் தரையையும் சுவரையும் தட்டி, விசில் ஊதி ஆர்ப்பாட்டம் பண்ணுகிறான்; இல்லையா, அப்பா?''— காயத்ரிக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது.

''அப்படி அல்ல, காயத்ரி!'' என்று நிமிர்ந்து உட்கார்ந்தார் டாக்டர். ''நீ மனோதத்துவம் படித்தவள். என்னதான் நெஞ்சுரம் வாய்ந்த பக்காத் திருடர்களாக இருந்தாலும் காரியத்தில் ஈடுபடும்போது அவர்களுக்கும் உள்ளூற ஒரு பயம் இருக்கத்தான் செய்யும். 'டொக்' என்ற சிறு சப்தம் கூட அவர்களை வெகுவாக உலுக்கிக் குலுக்கி விடும். இந்த அடிப்படை விஷயத்தை மனத்தில் வைத்துக் கொண்டு அந்தக் கூர்க்காவின் செயலைச் சிந்தித்துப் பார்.''

''போங்களப்பா! இந்தக் காலத்துத் திருடர்கள் வானமே இடிந்து விழுந்தாலும் முன் வைத்த காலைப் பின் வைக்க மாட்டார்கள்!''

''அப்படித்தான் இருக்கட்டுமே? 'அவனுடைய செய்கை திருடர்களை உஷார்ப் படுத்திவிடும்; அதனால் அது பயனில்லை' என்று ஏன் நாம் நினைக்க வேண்டும்? நம்மையே' அவன் உஷார்ப்படுத்துவதாக எண்ணிக் கொள்வோமே! 'ஊர் கெட்டுக் கிடக்கிறது; இரவில் ஒரேயடியாய்த் தூங்கித் தொலையாதீர்கள்; அவ்வப்போது கொஞ்சம் கண் விழியுங்கள்' என்று நமக்குத் தினமும் நினைவூட்டுவதற்காகவும் அப்படிச் செய்யலாம். அதுவே பெரிய பயனுள்ள காரியம் அல்லவா?

''ஹே!...அப்பா குயுக்தி வாதம் செய்ய ஆரம்பிச்சுட்டார்!'' என்று கை கொட்டி நகைத்தாள் காயத்ரி. ''குடுகுடுப்பைக் காரர்கள் எதையாவது சொல்லிப் பயமுறுத்திக் காசு பறித்துக் கொண்டு போகிறார்களே, அப்படித்தான் இரவு ரோந்துக்கு வருகிற இந்தக் கூர்க்கா விஷயமும். காவல் காக்கிறதாகப் பேர் பண்ணிவிட்டு மாசா மாசம் காசு வாங்கிக் கொண்டு போகிறான். நகரில் நடக்கும் எத்தனையோவிதமான நாகரிக ஏமாற்றுக்களில் இதுவும் ஒன்று. தங்கள் வீட்டுக்கும் கூர்க்கா காவல் இருக்கிறான் என்ற ஒரு போலிப் பெருமைக்காகவோ என்னவோ ஜனங்களும் அவனுக்குப் பணம் கொடுக்கிறார்கள். இதுதான் உண்மை.''

டாக்டர் மெல்லச் சிரித்துக் கொண்டார். ''இங்கே பார், காயத்ரி! நீ சொல்லுகிறதெல்லாம் சரியாகவே இருக்கலாம். அந்தக் கூர்க்கா பயனற்ற ஒரு காரியத்தைச் செய்து பணம் பெற்றுக் கொண்டு போகிறான் என்பதும் சரிதான். ஆனால் அதிலே மதிப்புக்குரிய உண்மை ஒன்று புதைந்திருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதாவது எத்தனையோ நூறு மைல்களுக்கு அப்பாலிருந்து பிழைப்புத் தேடி இங்கு வருகின்றனர். அப்படி வந்த பின் வேலை கிடைக்கவில்லையே என்பதற்காக ஒரு கூர்க்கா எங்காவது பிச்சைக்கு நிற்கிறானா? நீ பார்த்திருக்கிறாயா? தம் வறுமை நிலையை அவர்கள் வாயால் மட்டுமல்ல, நடை உடை பாவனைகளாலும்கூட வெளிக் காட்டுவதில்லை. அத்தனை தன்மான நெஞ்சம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் அவர்கள். அதனால்தான் நிலையான வேலையொன்று கிடைக்கும்வரையில் தமக்குத் தெரிந்த ஒரு காரியத்தைத் தாமே வலிந்து செய்கிறார்கள். அது மற்றவர்களுக்குப் பயனாகிறதோ, இல்லையோ; ஆனால் அது ஒரு காரியம் என்ற வகையிலாவது அதனை ஏற்கத்தானே வேண்டும்? அதற்காக அவர்கள் இரவில் பல மணி நேரம் கண் விழிக்கிறார்களே! கால் கடுக்க நடக்கிறார்களே! அவற்றைச் சொல்லிக் கூலி கேட்பதில் என்ன தவறு? இது ஏமாற்று ஆகுமா? தம் வயிற்றுப்பாட்டை எவ்வளவு கௌரவமாக அவர்கள் தீர்க்கநினைக்கிறார்கள்! இந்தக் கண்ணியமான நினைப்புக்கேனும் நாம் மதிப்புத் தர வேண்டாமா?''

வாயடைத்துப் போன நிலையில் தன் தந்தையையே பார்த்துக் கொண்டிருந்தாள் காயத்ரி. புன்னகையுடன் தலையாட்டிக் கொண்ட டாக்டர் மேலும் சொன்னார்: ''சரி; இன்னொரு விஷயத்தையும் கேள், காயத்ரி! நம்மவர்கள் பர்மாவுக்கோ, மலாயாவுக்கோ, இலங்கைக்கோ (இப்போது அல்ல) போய்ச் சில குறிப்பிட்ட தொழில்களையே மேற்கொண்டு அவற்றில் ஒரு 'ரெக்கார்டை'யும் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் அல்லவா? பர்மாவில் தேக்கு மர வியாபாரம் வட்டிக்





கடை ; மலேயாவில் ரப்பர்த் தோட்ட வேலை; வட்டிக்கடை, க்ஷவரக் கடை; இலங்கையில் தேயிலைத் தோட்டவேலை. இப்படி இங்கேயும் அண்டை நாட்டவர்கள் வந்து குறிப்பிட்ட சில தொழில்களில் கொடி நாட்டி யிருக்கிறார்கள். காபூலிலிருந்து வரும் பட்டாணியர்கள் வட்டித் தொழில்; சீனர்கள் பொய்ப் பல் கட்டும் தொழில்; பர்மியர்கள் தொப்பி, காகிதப் பூக்கள் முதலானவை செய்யும் தொழில். இந்தவிதமாக நேப்பாளத்திலிருந்து வரும் கூர்க்காக்கள் மேற்கொள்ளும் ஒரே தொழில் காவல் காப்பது. இதிலே மற்றவர்களுக்கும் இந்தக் கூர்க்காக்களுக்கும் ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அதாவது இங்கிருந்து போகிற நம்மவர்களா யிருந்தாலும் சரி, வெளியிலிருந்து வருகிற அயலார்களா யிருந்தாலும் சரி — அவர்களிடம் பணம் இருக்கலாம், கல்வியறிவு இருக்கலாம், தொழில் நுணுக்கத் திறமை இருக்கலாம், வியாபார வித்தாரத்தனம் இருக்கலாம். உழைப்பாளிகளாகவும் இருக்கலாம். ஆனால் ஒழுக்க நெறி உபாசனை உள்ளவர்கள் என்று மட்டும் அவர்களுக்கு உத்தரவாதம் அளித்துவிட முடியாது — அவர்களேகூட! இந்தக் கூர்க்காக்களோ இதற்கு முற்றிலும் வேறுபட்டவர்கள். இவர்களிடம் கல்வி யறிவு கிடையாது; தொழில் திறமையும் குறைவு; வியாபார சாமர்த்தியம் அறவே இல்லாதவர்கள்; உடலை வருத்தி உழைக்கவும் பயிற்சியற்றவர்கள்; ஒருவகையில் இவர்களைச் சோம்பேறிகள் என்றுகூடச் சொல்லலாம். ஆனால் இவற்றுக்கெல்லாம் மேலான ஒன்று இவர்களின் உயிரோடு, உடலோடு, இரத்தத்தோடு கலந்திருக்கிறது. அதுதான் சத்தியத்தின் மறுபுறமான 'நேர்மை!' இவை இரண்டின் சேர்க்கையால் உருவாகும் அஞ்சா நெஞ்சம்! இந்த அரிய செல்வங்களை மூலதனமாகக் கொண்டே பல நூறு மைல்களுக்கு அப்பாலிருந்து இங்கு வந்து பிழைப்பு நடத்துகிறார்கள். பணம் சம்பாதித்துத் தமது பெற்றோர், பெண்டு பிள்ளைகளுக்கு அனுப்பி வைக்கிறார்கள். இன்னொன்றையும் கேள், காயத்ரி! ஊர்க் காவல், உடைமைக் காவல், உயிர்க் காவல் இம்மூன்றுக்கும் உத்தரவாதம் அளிக்க வேண்டிய கடமை அரசாங்கத்தைச் சேர்ந்தது. அந்தக் கடமையைச் சரிவர ஆற்றப் போலீஸ் இலாகா என்ற ஒன்றைச் சிருஷ்டித்து, அதனிடம் அப்பெரும் பொறுப்புக்களை அது ஒப்படைத்திருக்கிறது. அத்தகைய வலிமை வாய்ந்த போலீஸ் இலாகாவே அந்த முப்பெரும் பொறுப்புக்களைத் தாமாக ஏற்றுத் தனிப்பட்ட முறையில் பணிபுரிய வரும் இந்தக் கூர்க்காக்களை— அவர்கள் ஓர் அந்நிய தேசப் பிரஜைகளாயிருந்தும் கூட — தடை செய்யாமல் நம்பிக் கையோடு அநுமதித்து விட்டிருக்கிறதென்றால், அவர்களிடமுள்ள நேர்மைக்கும், உண்மைக்கும், சத்திய உணர்ச்சிக்கும் வேறு என்ன சான்று வேண்டும்?''

டாக்டர் வாசுதேவன் சாய்வு நாற்காலியை விட்டு மெல்ல எழுந்தார். தொலைதூரத்தில் 'டொக், டொக்' என்ற ஒலியும், ஊது குழல் சப்தமும், நாய்களின் குரைப்பொலியும், சேர்ந்து ஏக கோஷமாகக் கேட்டுக் கொண்டிருந்தது. காயத்ரி அவ்வொலிகளைக் கூர்ந்து செவிமடுப்பவள் போல் எங்கோ பார்த்தவாறு உட்கார்ந்திருந்தாள். விசாலாட்சி அங்கேயே படுத்து நல்ல தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டிருந்தாள்.

இரவு மணி இரண்டு. அந்தத் தெருவைக் கடந்து, அடுத்த தெருவில் திரும்பி வழக்கம் போல் தன் காரியத்தைச் செய்துகொண்டே நடந்த ராம்சிங் ஒரு விறகுத் தொட்டிக்கு எதிரில் போய் நின்று சாத்திக் கிடந்த மூங்கில் படல் கதவைக் குறுந்தடியால் தட்டினான். உள்ளே யிருந்து இருமும் சத்தம் கேட்டது. அவ்வொலி வந்த பக்கம் டார்ச் விளக்கைத் திருப்பினான். அடுப்புக் கரி மூட்டைகளுக்கு அருகில் கன்னங்கரேலென்று ஒருவன் கட்டைத் துண்டு மாதிரி குத்துக்காலிட்டு உட்கார்ந்து பீடி குடித்துக் கொண்டிருந்தான். அவன் அந்த விறகுத் தொட்டியில் கட்டை பிளப்பவன். அவனுக்கு வீடு, வாசல் எதுவும் கிடையாது. வேலை, வசிப்பு எல்லாம் அங்கேதான். தொட்டிக்குக் காவலாக இருக்கட்டும் என்று அதன் முதலாளி அவனை அங்கேயே தங்கிக் கொள்ளும்படி அனுமதித்திருந்தான். ஆயினும் கூர்க்கா ராம்சிங்குக்கு அந்தத் தொட்டியிலிருந்து மாதம் ஒரு ரூபாய் கிடைத்து வந்தது.

''கியாஜீ! தூக்கம் பண்ணலியா?''— தனக்குத் தெரிந்த அரை குறைத் தமிழில் கேட்டான் ராம்சிங்.

சற்று நேரம் கழித்து, ''ஊம்! ஊம்!'' என்று அலட்சியமாகக் குரல் கொடுத்தான் விறகுவெட்டி.

நீண்ட விசில் ஊதிக் கொண்டே அங்கிருந்து நடந்த ராம்சிங், அந்த விறகுத் தொட்டிக்குப் பக்கத்தில் — வேலிப் படலோரம் தழைத்துப் பம்மலாக வளர்ந்து நின்ற வேப்ப மரத்தை 'டொக், டொக்' என்று இரண்டு முறை தட்டினான்.

முதலில் நாய் ஒன்றின் உறுமல் சத்தம் கேட்டது. பிறகு, ''இன்னா கூர்க்கா! இப்பத்தான் போறியா?... மணி இன்னா?'' என்று இருள் கவிந்திருந்த வேப்ப மரத்தடியிலிருந்து ஒரு பெண்ணின் குரல் எழுந்தது. அதைத் தொடர்ந்து சிறு பிள்ளை ஒன்றின் அழுகை முனகல் ஓசை.

''கண்மாவா?... தோ பஜே!... ஸோஜா, ஸோஜா!'' ராம்சிங் தரையைத் தட்டிக் கொண்டு மேலே நடந்தான்.

விறகுத் தொட்டியின் வேலியோரம் படுத்து உறுமிக் கொண்டிருந்த கறுப்பு நாய் மெல்ல எழுந்து வந்து அவன் கால்களை முகர்ந்து பார்த்துவிட்டுப் பிறகு முன்னால் சென்று வாலைக் குழைத்தபடி குதித்தது.

எலிக்குப் பூனையும், கீரிக்குப் பாம்பும், கோழிக்குப் பருந்தும் எதிரிகளாக இருப்பது போல் நரிக் குறவர்களுக்கும் கூர்க்காக்களுக்கும் நாய்கள் எதிரி. நரிக்குறவர்களாவது பகலில் நடமாடுகிறவர்கள். கூர்க்காக்களோ இரவில் சுற்றுகிறவர்கள். அதனால் அவர்களுக்குத்தான் அவற்றால் அதிகத் தொல்லை. அதிலும் நடுத்தர வர்க்கத்தினர் குடியிருக்கும்

தெருக்களில் மனிதர்களின் சம எண்ணிக்கைக்கு நாய்களும் இருக்கும். ஆனால் அந்தப் பகுதிகளில்தான் கூர்க்காக்களுக்கு அதிக வரும்படி. ஐந்தாறு குடித்தனங்களுள்ள ஒரு வீட்டில் குடித்தனம் ஒன்றுக்கு எட்டணு என்ருலும் மொத்தம் மூன்று ரூபாய் கிடைக்கும் அல்லவா? எனவே, இரவில் ரோந்து சுற்றும் வேலையை மேற்கொள்ளும் எந்த ஒரு கூர்க்காவும் முதலில் தெரு நாய்களைச் சமாளிப்பது பற்றித்தான் கற்றுக் கொள்வான். பிறகே மனிதர்கள்! ராம்சிங் இதில் வல்லவன். ஒரு பட்டாளம் நாய்களே திரளாக வந்தாலும் அவன் அஞ்சுவதில்லை. கைத்தடியைப் பின்னல் வைத்துக்கொண்டு நின்று நிதானித்து அவற்றை நேரிட்டுப் பார்த்தானுனல் ஏதோ மந்திரத்தில் கட்டுண்டவை போல் அவை பின்தங்கி விடும்.

இதற்கெல்லாம் நேர்மாருக இந்த ஒரு நாய்தான் அவனிடம் நட்புப் பாராட்டியது. அது பெட்டை நாய். அவனை எங்கே கண்டாலும் ஓடி வந்து வாலைக் குழைத்துக்கொண்டு கூத்தாடும். அவனும் அதனிடம் ''கியா, சோட்டி குத்தா, கைஸே ஹை?... சலோ! சலோ!'' என்று அன்போடு பேசிவிட்டுப் போவான். இந்த அன்புக்கு அந்த நாயின் சொந்தக்காரியான கண்ணம்மாவும் ஒரு காரணம் எனலாம். அவள்தான் சற்று முன் வேப்பமரத்தடியிலிருந்து குரல்கொடுத்தவள்.

அவளைக் கண்ணம்மா என்று சொல்வதை விட 'கன்னம்மா' என்ருல் மிகப் பொருத்தமாக இருக்கும். காரணம் அவளுடைய வலது கன்னத்துப் பகுதி இடது கன்னத்தை விட இரண்டத்தனை உப்பலாக இருந்தது. அசைப்பிலே பார்த்தால் ஏதோ அடிபட்டு வீங்கிப் போன மாதிரி தோன்றும். ஆனால் அப்படி அல்ல. அது பிறவிக் கோளாறு. அவளைப் பார்க்க வேண்டுமானல் இடது புறம் நின்று பார்க்க வேண்டும். நேரே பார்த்தால் இன்னும் விசித்திரமான — விகாரமான — ஒரு முக வடிவம் காட்சி தரும். பிரம்மா அவளைப் படைக்கும்போது கன்னத்தில் பூசி மெழுக வேண்டிய ஏதோ ஒரு 'கலவைப் பொருள்' அவருக்குப் பற்றாக்குறையாகி யிருக்கலாம்; அல்லது அவளது உருவத்தைச் செய்து அவள் நன்கு உலரா முன்பே பூமியில் ஒருக்களித்துப் போட்டு அதனுல் ஒரு கன்னப் பகுதி அழுந்திச் சப்பையாகி, மறு கன்னம் உப்பி விட்டுமிருக்கலாம். எது எப்படி இருந்தாலும் அவளிடம் இப்போது இளமை இருந்தது. வயசு இருபத்தைந்துதான். நல்ல கருமை நிறம். கழுத்துக்குக் கீழே கால் வரையில் அவளைப் பார்த்தால் கருவேல மரத்தில் செதுக்கிய ரதியின் சிலை போலவே காட்சியளிப்பாள்.

நான்கு வருடங்களுக்கு முன்னல் எவனே ஒருவன் இருட்டிலே — நல்ல உறக்கத்திலே— அவள் கிடந்தபோது, அவளுடைய குரூப முகத்தை மறந்து, கழுத்து முதல் கால் வரையில் மட்டும் ரதியின் சிலையாக ரசித்துப் பார்த்துவிட்டுப் போனதன் பிண்டப் பிரமாணமாகத்தான் இதோ, இன்று அவளது பக்கத்தில் அந்த வேப்ப மரத்தடியில் மூன்று வயதுப் பாலகனுன ரங்கன் படுத்துக் கொண்டிருக்கிருன். தூக்கத்திலும் தன் பசியை மறக்காமல் அழுது முனகிக் கொண்டே!



மற்றவர்களுக்கு எப்படியோ? கண்ணம்மாவுக்கு அதெல்லாம் பெரிய விஷயமாகி விடவில்லை. ஏனென்ருல், அதற்காக அவள் பல நாட்கள், பல மாதங்கள் தன் அப்பனிடம் அடியும் உதையும் பட்டு, ஏச்சுக்களும் பேச்சுக்களும் வாங்கி, துக்கமும் துயரமும் அடைந்து, விம்மியும் தேம்பியும் பொருமியும், புலம்பியும் அழுது கடைசியில் ஓய்ந்தே போனுள், — ரங்கன் அவளுடைய கையணைப்புக்குள் வந்த அன்று! ஆகவே, அவளைப் பொறுத்தவரையில் அது ஒரு தீய கனவாகத் தீர்ந்து போன விஷயமாயிற்று. ஆனால் இப்போது மறுபடியும் அதே போன்ற 'தீய கனவு' கண்டு கொண்டிருந்த சமயம் பார்த்துத்தானு இந்தக் கூர்க்கா ராம்சிங் வந்து வேப்பமரத்தைத் தட்டி அவளை எழுப்பிவிட வேண்டும்?

கட்டைத் தொட்டியில் உறக்கம் பிடிக்காமல் உட்கார்ந்து கொண்டிருந்த விறகு வெட்டி இருமும் சத்தம் கேட்டது!...

ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னல் எங்கோ ஒரு கிராமத்திலிருந்து கண்ணப்ப நாயக்கனும் அவன் மகள் கண்ணம்மாவும் பிழைப்புக்காகப் பட்டணம் வந்தார்கள். கண்ணப்பனின் மனைவி அதற்கு முன்பே காலமாகி விட்டாள். பட்டணத்து மேற்கு எல்லையிலிருந்த ஒரு செங்கல் சூளையில் அவனுக்குக் கல் அறுக்கும் வேலை கிடைத்தது. அங்கேயே சிறு குடிசையொன்று போட்டுக் கொண்டு தந்தையும் மகளும் அமைதியாக நாட்களைக் கடத்தி வந்தனர். ஒரு சமயம் பெய்த மழையால் வேகப் போட்டிருந்த செங்கல் சூளை அழிந்து பெரு நஷ்டம் ஏற்பட்டுவிடவே அதன் முதலாளி அந்தத் தொழிலையே விட்டு விட்டான். அதனல் வேலையற்றுப் போன கண்ணப்ப நாயக்கன் வேறு ஏதேதோ கூலி வேலைகளெல்லாம் செய்து பார்த்து விட்டுக் கடைசியில் இந்த விறகுத் தொட்டியிலே கட்டை பிளப்பவனுக வந்து சேர்ந்தான். ஒரு குண்டு விறகு பிளந்தால் இரண்டணு கூலி. நாளொன்றுக்கு ஒன்றரை அல்லது ஒன்றே முக்கால் ரூபாய் கிடைக்கும். அத்துடன் கண்ணம்மா வீடுகளுக்கு விறகு தூக்கிக் கொண்டு போய்ப் போட்டு ஐந்தாறணு சம்பாதிப்பாள். கடை முதலாளி அவர்களைத் தொட்டியிலேயே தங்கிக் கொள்ள அனுமதித்தான் — இரவு நேரங்களில் காவலாக இருக்கட்டும் என்று. ஆனால் சோருக்கும் வேலை மட்டும் உள்ளே நடக்கக் கூடாது. வெளியே வேப்ப மரத்தடியில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது உத்தரவு. விறகுத்தொட்டி அல்லவா! நிம்மதியாகத்தான் அவர்களுடைய நாட்கள் சென்று கொண்டிருந்தன.

கண்ணப்ப நாயக்கனேடு இன்னெருவனும் கட்டை பிளக்க வந்து சேர்ந்தான். அவனுல் அங்கே ஆறு மாசத்துக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஓடிவிட்டான். அப்படி ஓடும்போது சும்மா ஓடவில்லை. கல்யாணம் பண்ணி வைக்க வக்கில்லாமலும், மாப்பிள்ளை கிடைக்காமலும், கட்டை பாய்ந்



மதர்த்துக் கிடந்த கண்ணம்மாவின் மடியில் ரங்கனைத் தன் நினைவுச் சின்னமாகப் போட்டு விட்டு ஓடிப் போனான்! விலாசம் தெரியாமல் அவன் ஓடிப் போன ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள் கண்ணப்ப நாயக்கன் விறகு பிளக்கும்போது கோடரியைத் தன் கணுக் காலில் போட்டுக் கொண்டு பலத்த காய மடைந்தான். அதற்குச் சரியாக மருந்து போட்டுக் கவனித்திருந்தால் அந்த வெட்டுக் காயம் ஆறிப் போயிருக்கும். கவனிக்க வில்லை. வெட்டுப் புண் சீழ் பிடித்துப் புடம் வைத்தது. வீங்கியது. ஜுரம் வந்தது. ஐந்து நாட்கள் படுக்கைக்குப் பின் ஆள் எழுந் திருக்கவில்லை; போய்விட்டான் — போயே விட்டான். தன் மகளுக்கென்று அவன் விட்டுச் சென்ற ஒரே துணை அந்தக் கறுப்பு நாய்தான்.

கண்ணம்மா அநாதையானாள். தாங்கு வார் யாரும் இல்லை. ஆனாலும் அவள் தவித்து விடவில்லை. விறகு சுமந்து போடும் வேலையைத் தொடர்ந்தாள். அதுவே இப் போது அவளையும் அவளது பிள்ளையையும் ஜீவிக்க வைத்து வருகிறது. அந்த வேப்ப மரத்தடிதான் அவளுடைய வாசஸ்தலம். பொங்குவது, உண்பது, உட்காருவது, உறங் குவது எல்லாம் அங்கேதான்.

கண்ணப்ப நாயக்கன் காலமானதும் அவ் விறகுத் தொட்டியில் கட்டை பிளக்க இன் னொருவன் வந்து சேர்ந்தான். அவனும் ஏகாங்கிதான். அதோ, பீடி குடித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பவனே அவன்!...

இதெல்லாம் இருக்கட்டும். கூர்க்கா ராம்சிங்கிடம் கண்ணம்மாவும் அவளுடைய நாயும் பரிச்சயமாகிக் கொண்டது எப்படி?

ராம்சிங் இரவில் ரோந்து சுற்றுவதோடு தன் கடமை தீர்ந்து விட்டதாக நினைப்ப தில்லை. வாரத்தில் ஒரு நாளோ இரண்டு நாட்களோ, மாலை வேளைகளில் தான் ரோந்து பார்க்கும் ரோடுகள், தெருக்கள், வழியே உலா வருவான். ஒவ்வொரு வீட்டுக் கும் சென்று தன் 'சா(ஹப்)ப்'களுக்கு சலாம் அடித்து விட்டுப் போவான். எல்லாம் காரணமாகத்தான்!

அப்படி ஒரு நாள் அவன் காலை உலா வரும் போது, தெருப் புழுதியில் விளையாடிக் கொண்டிருந்த கண்ணம்மாவின் மகன் ரங் கன் எழுந்து நின்று, ''சலாம், கூர்க்கா!'' என்றான் மழலை மொழியில். விறகுத் தொட்டி யின் முதலாளிக்கு ராம்சிங் சல்யூட் அடிப் பதைப் பல நாட்கள் பார்த்துக்கொண்டிருந்த தாலேயே அந்தச் சிறுவனும் அவனுக்கு அவ்வாறு செய்தான்.

அதைக் கண்ட ராம் சிங்குக்கு ரொம்பவும் குஷியாகி விட்டது. அவனும் பதிலுக்கு சலாம் செய்தான். ரங்கனுக்கு ஒரே மகிழ்ச்சி, பெருமை! அன்று முதல் ரங்கனுடன் விளை யாடும் மற்றச் சிறுவர்களும் சேர்ந்து ராம் சிங்கை எங்கே கண்டாலும், ''சலாம், கூர்க்கா!'' என்று கத்த ஆரம்பித்து விட் டார்கள். அவனுக்கு இது நல்ல பொழுது போக்காக இருந்தது. தயங்காமல், சுணங் காமல் சிரித்த முகத்துடன் அச்சிறுவர்கள் ஒவ்வொருவருக்கும் பதில் சலாம் சொல்லிக் கொண்டே போவான். அதிலும், பிறந்த மேனியாய், பரட்டைத் தலையும், தெருப் புழுதியுமாகத் தளர் நடையிட்டு ஓடிவந்து ஒரு சிப்பாயைப் போல் நிமிர்ந்து நின்று சலாம் செய்யும் ரங்கனைக் கண்டாலே அவனுக்கு உற்சாகம் பிறந்து விடும். தன் ஜேபியில் நொறுவைத் தீனியாகப் போட்டுக் கொண்டு வரும் ரொட்டித் துண்டையும், வேக வைத்த உருளைக் கிழங்கையும் எடுத்து அச்சிறுவனிடம் கொடுத்துவிட்டுப் போவான். இப்படி ஒரு நாள் ரங்கனுக்கு ரொட்டி கொடுக்கும்போது பக்கத்தில் அந்தக் கறுப்பு நாய் நின்றிருக்க, அதற்கும் ஒரு துண்டு கிள்ளிப் போட்ட நாளிலிருந்துதான் அது அவனோடு நட்புப் பாராட்டத் தொடங்கி விட்டது.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டு வந்த கண்ணம்மாவுக்கும் அவனிடம் ஏதா வது பேச வேண்டும் போல் தோன்றியது. பேசிச் சிரிக்க ஆரம்பித்தாள். பேச்சு என்றால் என்ன பேச்சு? மாலை நேரங்களில் —

''இன்னா கூர்க்கா, சோறு துண்ணியா?''

''ஹா(ங்)! தும் கானா காயா?''

''இன்னாயா சொல்றே? பாட்டுப் பாடவா சொல்றே? எனக்குப் பாட்டுப் பாடத் தெரி யாதே!''

சிரிப்பு, சிரிப்பு. இரவில் ரோந்து வரும் போது—

''இன்னா கூர்க்கா. இப்ப மணி இன்னா?''

''கண்மாவா?... தோ பஜே!...ஸோஜா, ஸோஜா!''

இவ்வளவுதான் பேச்சு. இதிலேயே அவன் மீது அவளுக்கு ஒரு பிரியம். சங்கோசம் இல்லாத நேச உணர்ச்சி ஏற்பட்டிருந்தது. அவனுக்கும் அவள் மேல் ஒருவித அநுதாபம், பரிவு. அதனாலேயே அவன் தினமும் இரவில் அவளுக்குப் பாதுகாப்புத் தருவது போல் அந்த வேப்ப மரத்தைத் தட்டிவிட்டுப் போவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அவள் காட்டும் நேசத்துக்குப் பிரதியுபகார

மாக அவனுல் செய்யக் கூடியது அது ஒன்றுதானே?

விடியற்காலை மணி நான்கு ஆகிவிட்டது. நல்ல பனி மூட்டம். ரோந்து சுற்றலை முடித்துக் கொண்ட கூர்க்கா ராம்சிங் ஒரு டீக்கடையில் வந்து உட்கார்ந்தான். அந்தக் கடை திறக்கும்போது அவன்தான் தினமும் முதல் போணி. ஸ்ட்ராங்காக சிங்கிள் சாயா வாங்கிச் சுவைத்துப் பருகிவிட்டு, பீடி பற்ற வைத்துக்கொண்டு வெகு நிதானமாக எழுந்து தன் இருப்பிடம் நோக்கி நடந்தான். நடையில் தெம்பு இல்லை; விறைப்பு இல்லை. இலேசான தள்ளாடல். மனித உடம்புதானே?

அந்த மெயின் ரோட்டில் தெற்குப் பார்த்து அமைந்த ஒரு பழைய ஓட்டுக் கூரை வீடு. அவ்வீட்டின் திண்ணைத் தாழ்வாரத்துக்கு இடது புறம் கடை வைக்கத்தோதாக ஒதுக்கி விடப்பட்ட ஒரு சிறு பகுதி. எட்டுக்குப் பத்தடி அகல நீளம் கொண்ட ஒரே அறைதான் அது. சன்னல் கின்னல் எதுவும் கிடையாது. கதவுக்குப் பதிலாக முகப்புச் சுவரில் நீள வாட்டத்தில் ஐந்து செருகுப் பலகைகள் போடப்பட்டிருந்தன. தேவைக்குத் தகுந்த அளவில் அவற்றைக் கழற்றிக் கொள்ளலாம். முழுவதுமாக மூட வேண்டுமானுல் எல்லாப் பலகைகளையும் நம்பர் பிசகின்றிச் செருகி, குறுக்கே ஓர் இரும்புச் சட்டத்தைப் போட்டுப் பூட்டி விட வேண்டும். நல்ல பாதுகாப்பான அறைதான்.

அதிலே முதலில் ஒரு தையல் கடை இருந்தது. பிறகு லாண்டிரியாக மாறியது. அப்புறம் 'முடி திருத்த நிலையம்' வந்தது. அதன் பின் சினிமாப் படப்பிடிப்பாளர்களுக்குக் காகிதப் பூக்கள் தயாரித்து விநியோகம் செய்யும் 'சினி ஆர்ட் கார்ட'ளுகை விளங்கிக் கடைசியில் அது கடந்த இரண்டு வருட காலமாகக் கூர்க்கா ராம்பகதூர் சிங்கின் குடியிருப்பு அறையாக இருந்து வருகிறது. அதற்கு மாத வாடகை ரூபாய் பத்து.

ஆனுல் அந்தப் பத்து ரூபாய் வாடகையில் ராம்சிங் கொடுப்பது இரண்டே ரூபாய்தான். மீதப் பணம் எட்டு ரூபாயை இன்னும் நான்கு கூர்க்காக்கள் பகிர்ந்து கொண்டு கொடுக்கிருர்கள். ஆக, அவ்வறையில் குடியிருப்போர் ஐவர்.

அந்த ஐந்து பேர்களையும் சேர்ந்தாற்போல் ஒருநாளும் அங்கு பார்க்க முடியாது. காலையில் மூன்று பேர் இருப்பார்கள். மாலையில் மூன்று பேர்களைக் காணலாம். இரவில் யாருமே இருக்க மாட்டார்கள். ஆனுல் காலையிலும் மாலையிலும் வந்து போகிறவர்களோடு மூன்ருமவனுக ராம்சிங்கை மட்டும் எப்போதும் பார்க்கலாம். அதற்குக் காரணம் –

ஒரு கூர்க்கா பாங்க் ஒன்றில் காவல் வேலை பார்த்து வந்தான்; இன்னெருவனுக்கு ஒரு பெரிய தொழிற்சாலையில் கேட் – கீப்பர் வேலை; மற்றெருவன் சினிமா நடிகை ஒருத்தியின் வீட்டுக் காவலாளி. பிறிதொருவனுக்குப் பிரபல காமிராக் கம்பெனி ஒன்றில் காவல் பணி. ராம் சிங் ஒருவன்தான் இந்த வட்டாரத்தில் இரவு ரோந்து சுற்றும் வேலை செய்பவன். எனவே அவன் பகலெல்லாம் தன் அறையிலேயே இருக்க வேண்டியவனுனன். அதனுல் அவனுக்கு ஒன்றும் கஷ்டமாக இல்லை. காரணம் அவன்தான் தன்னையும் சேர்த்துத் தன் சகாக்களுக்கெல்லாம் உணவு தயாரிப்பவன்.

ராம்சிங் ரொட்டி சுடுவதில் கைதேர்ந்தவன். ஒவ்வொரு ரொட்டியும் ஒரு பூரண சந்திரன் போல் அவ்வளவு பெரிதாக, அழகாக இருக்கும். அந்த அறையில் ஒரு மூலையில் கோதுமை மாவு நிறைந்த பெரிய டின், பச்சை மிளகாய், இஞ்சி, உருளைக் கிழங்கு, வெங்காயம், பருப்பு நெய் இவற்றை எப்போதும் குறைவில்லாமல் காணலாம். விடியற்காலை ரோந்து சுற்றி விட்டுத் திரும்பி வந்ததும் கொஞ்ச நேரம் படுத்தெழுந்து குளித்துப் பத்துமணி வாக்கில் ரொட்டி சுட ஆரம்பித்தானுனல் பிற்பகல் இரண்டு மணிக்கு ஒருவாறு அவ்வேலை முடிவடையும். உடன் இருப்பவர்களும் உதவி செய்வார்கள். அப்புறம் ஒரு சின்னத் தூக்கம். மாலை ஆறு மணிக்கெல்லாம் இரவு உணவை முடித்துக் கொண்டு தன் உத்தி



யோக உடைகளை அணிய ஆரம்பித்துவிடுவான் அதற்கு மட்டும் அவனுக்குக் குறைந்த பட்சம் ஒன்றரை மணி நேரம் தேவை. அந்த விஷயத்தில் அவன் எப்போதுமே மிகமிக நிதானம். அதை நிதானம் என்று சொல்வதை விடக் கவனப் பொறுப்பு என்பதே பொருந்தும். இதில் அவன்தான் இப்படி என்றில்லை; அவனுடைய சகாக்களின் விஷயமும் இதுவே. தங்கள் உத்தியோக ஆடை அணிகளில் கவனம் செலுத்துவதிலே இராணுவ அதிகாரிகளையும் இவர்கள் மிஞ்சக் கூடியவர்கள்.

அறையில் எத்தனை பேர்கள் இருந்தாலும் அவர்களிடையே பேச்சு மிகவும் குறைவாகவே இருக்கும். ஹாஸ்யப் பேச்சு அதை விடக் குறைவு. காரியத் தேவைக்காக இரண்டொரு வார்த்தைகள். அதற்கு மேல் எல்லாம் செயல்தான். அல்லது சிந்தையை அடக்கிச் சும்மாயிருத்தல்.

ராம்சிங்கின் சகாக்கள் பெரும்பாலும் தூங்குவதற்காகத்தான் இந்த அறைக்கு வருவார்கள். தூங்கின நேரம் போக மற்ற நேரங்களில் பூட்சுகளுக்கும் இடுப்பு பெல்ட்களுக்கும் பாலிஷ் போடுதல், துணி துவைத்தல், கிழிந்த ஆடைகளைத் தைத்தல், முக க்ஷவரம் செய்து கொள்ளுதல் இத்தியாதி வேலைகளில் ஈடுபடுவார்கள். இவை முடிந்து இன்னும் நேரமிருந்தால் தங்கள் ஊரிலிருந்து எப்போதாவது வந்த ஒரு பழைய கார்டுக் கடிதாசியை எடுத்து வைத்துக் கொண்டு அதை மணிக்கணக்கில் படித்துக் கொண்டிருப்பார்கள். ரொட்டி தின்பதற்கு மட்டும் ஒரு நேரம் வேளை என்று கிடையாது. தேவையான போது தேவையான அளவு தாமே எடுத்து வைத்துக் கொண்டு உண்பார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு டிரங்க் பெட்டி உண்டு. அதன் மேல் அவனவனுடைய மாற்றுப் பூட்சுகள், பெல்ட்டுகள், மாற்றுடைகள் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கும். படுக்கை ஜமுக்காளமும் தனித்தனிதான். இவற்றுடன் ஒரு முக்கியமான வஸ்துவும் அவனவன் பெட்டிக்கு அடியிலே இருக்கும். அதுதான் மணியார்டர் ஃபாரம்!

தன் சகாக்களுக்கும் சேர்த்து ரொட்டி சுடுவதான அதிகப்படி வேலையை ராம்சிங் மட்டும் செய்வானேன்? அந்த அறையை அவனே அதிக நேரம் உபயோகப்படுத்திக் கொள்கிறான் என்பதினாலா? அல்ல. அது அவர்களுக்குள் வகுத்துக் கொண்டிருக்கும் ஓர் ஒழுங்கு நியதியை ஒட்டிய விஷயம்.

ஆமாம்; அந்த நான்கு கூர்க்காக்களும் தங்கள் காவல் தொழிலில் சீனியராகி விட்டவர்கள்; ராம்சிங் மட்டுமே ஜூனியராக இருப்பவன். இது எப்படி நிர்ணயமாகிறது? எங்காவது ஒரு தொழிற்சாலையிலோ, வியாபார ஸ்தாபனத்திலோ, பாங்கிலோ அல்லது பங்களாவிலோ மாதச் சம்பளத்தில் காவல் வேலைக்கு அமர்கிறவன் சீனியர்; சம்பளம் என்றில்லாமல், நியமன வேலை என்றும் இல்லாமல் இரவு ரோந்து சுற்றலை மேற்கொள்கிறவன் ஜூனியர். எந்த ஒரு கூர்க்காவும் முதலில் ஏதேனும் ஒரு வட்டாரத்தில் இரவு ரோந்து வேலை பார்த்து விட்டுப் பிறகே மாதச் சம்பள வேலைக்குப் போவான். அவனுடைய தொழிலுக்கு அதுதான் ஆரம்பப் பயிற்சிக் களம்.

மௌண்ட் ரோட்டிலுள்ள பிரபல கடிகாரக் கம்பெனியொன்றின் பக்கத்தில் ஒரு சிறிய சந்து. அதில் இரண்டு மூன்று கூர்க்காக் குடும்பங்கள் வசிக்கின்றன, மனைவி மக்கள் சகிதம். அவர்களில் யாரோ ஒருவன் சென்னை நகரில் உள்ள கூர்க்காக்களுக்கெல்லாம் தலைவனாக இருக்க வேண்டும். ஏனென்றால், அங்கே எப்போதும் ஒரு பெரிய கூர்க்காக் கும்பலைப் பார்க்கலாம். எங்கெங்கே காவல் வேலைக்கு ஆள் தேவை என்ற விவரத்தை அந்தத் தலைவன் முதலில் தெரிந்து கொள்வான். அவனிடம் ஜூனியர் கூர்க்காக்களின் பெயர் பட்டியல் ஒன்று இருக்கும். அதன் வரிசைப் பிரகாரம், காவல் ஆள் தேவைப்படுகிற இடங்களுக்கு ஒவ்வொருவனாக அனுப்பி வைப்பான். அப்படி அனுப்பப்படுகிறவனுக்கு வேலை கிடைத்து விட்டால், அவன் அதுவரை செய்து வந்த இரவு ரோந்து வேலைக்கு 'ரிஸர்வில்' இருக்கும் புது ஆள் ஒருவனை நியமிப்பான். சீனியராகப் போகிறவன் அந்த ஜூனியரை அழைத்துக் கொண்டு, தான் ரோந்து சுற்றிய ரோடுகளையும், தெருக்களையும், அவற்றிலுள்ள கடைகளையும் வீடுகளையும் அவனுக்குக் காட்டி, சில கடைக்காரர்களிடமும் அவனை அறிமுகப்படுத்தி விட்டுப் போவான். அன்று முதல் அந்தப் புதிய கூர்க்கா தன்னை அவ்வட்டாரத்தில் காவல்காரனாக நியமனம் செய்து கொண்டவனாவான். இப்படி இங்கு வந்தவன்தான் ராம்சிங்!

நேப்பாளத்தின் தலைநகரான காட்மண்டுவிலிருந்து வந்த ராம்சிங்குக்குத் தாயும், மனைவியும், மூன்று வயசில் ஓர் ஆண் குழந்தையும் அங்கே இருக்கிறார்கள். இங்கு அவன் வந்து இரண்டு ஆண்டுகளாகியும் இன்னும் ஒரு முறைகூடத் தன் சொந்த நாட்டுக்குப் போகவில்லை; போகக் கூடிய வசதி ஏற்படாததால். எனினும் மாதம் பிறந்து பதினைந்து தேதிக்குள் ஊருக்கு இருபது ரூபாய் மணியார்டர் அனுப்ப அவன் இதுவரையில் தவறியதில்லை!

சித்திரை மாசத்து இரண்டாம் வாரத்தில் ஒரு நாள். வழக்கம் போல் இரவு பதினொரு மணிக்கு ரோந்து சுற்றி வரப் புறப்பட்டான் ராம் சிங்.

மெயின் ரோட்டில் சாவதானமாக நடந்து வந்து கொண்டிருந்த ராம் சிங்கை, எதிரே வந்த இன்னொரு கூர்க்கா கையைப் பிடித்து நிறுத்திக் குசலம் விசாரிக்க ஆரம்பித்தான். ராம்சிங்குக்கு அவனைக் கண்டாலே பிடிப்பதில்லை. எங்காவது பார்த்தாலும் பார்க்காதவன் போல் போய் விடுவான். இப்போது நேரில் வந்து கையைப் பிடித்து விட்டதால் நிற்க வேண்டியதாகி விட்டது.

பொதுவாகவே கூர்க்காக்கள் தமக்குள்ளே எவ்வித பகையோ, பொறாமையோ வைத்துக் கொள்வதில்லை. எல்லோரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போலவே இருப்பார்கள் — உருவத் தோற்றத்திலும் நடை உடை பாவனைகளிலும் மட்டுமல்ல; நேச உறவிலும் கூட! இந்தப் பண்பு அவர்களிடம் ஒரு கலையாகவே உருவாகியிருந்தது. இப்

சிறப்புக் கதை

குண இயல்புகளை எழுத்தோவியமாக்கிக் காட்டுவதில் வல்லவர் திரு ஜெகசிற்பியன். நகர்ப்புறத்தில் வாழ்பவர்கள் கூர்க்காக்களைத் தினமும் பார்க்கிறார்கள். ஆனால் ஜெகசிற்பியன் பார்ப்பதுடன் நின்றுவிடவில்லை; அவர்களைப் பற்றிக் கண்டறிந்து, கூர்க்கா ஒருவனுடைய வாழ்க்கைக் கதையை மிகச் சுவைபட நமக்கு அளிக்கிறார் இந்த வெள்ளி விழா விசேஷ இதழிலே.

படிப்பட்டவர்களில் ஒருவனான ராம்சிங் தன் இனத்தவனான இவனை மட்டும் வெறுக்கக் காரணம் என்ன?

அவன் பெயர் துளசிகிரி. அவனும் ஒரு காலத்தில் ராம்சிங்கைப் போல் இரவு ரோந்து சுற்றியவன்தான் இன்னொரு வட்டாரத்தில். அவன் அங்கே செய்த ஒரு காரியமே ராம் சிங்கும் மற்ற கூர்க்காக்களும் அவனை வெறுத்து ஒதுக்கச் செய்து விட்டது.

துளசிகிரி ரோந்து சுற்றிய வட்டாரத்தின் தெரு ஒன்றிலிருந்த வீட்டார் அவனுக்குப் பணம் தர மறுத்தார்கள்; அத்துடன் அவனுடைய காவல் சேவை தங்களுக்கு வேண்டியதில்லை என்றும் வாதாடினார்கள். அதனால் கோபமடைந்த அவன், டீக்கடைகளில் நட்புப் பழக்கமான உள்ளூர்க் கேடிகள் இருவரைப் பிடித்து அவர்களுக்கு உளவும் சொல்லிக் கொடுத்து, அவ்வீட்டிலே புகுந்து வாழைக் குலை, கொடிக் கயிற்றில் காயப் போட்டிருந்த நைலான் புடவை, கிணற்றடியிலிருந்த ஒரு பித்தளைக் குடம் ஆகியவற்றைத் திருடிக் கொண்டு போகச் செய்து தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டான். மறுநாள், ஒன்றும் தெரியாதவன் மாதிரி அந்தத் தெருவில் போய் இராஜ நடை போட்டு நடந்திருக்கிறான். பொருள்களைப் பறிகொடுத்துவிட்டுத் தவித்துக் கொண்டிருந்த வீட்டார் அவனைப் பார்த்ததும் ஓடி வந்து, தங்கள் வீட்டையும் இரவு நேரத்தில் கண்காணிக்கும்படி கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொண்டார்கள். அடுத்த வீட்டார் கொடுப்பதை விட இரண்டு மடங்கு அதிகமாகப் பணம் தருவதாகவும் சொன்னார்கள். மறுபடியும் திருட்டுப் போய்விடுமோ என்ற பயம் அவர்களுக்கு. அதைத்தானே அவனும் எதிர்பார்த்து அந்தக் காரியத்தைச் செய்தான்!

இந்த விஷயம் வெளியில் தெரியாமல் போனாலும், மற்ற கூர்க்காக்களுக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அவர்கள் அவனை மிகக் கடுமையாகக் கண்டித்து, அவன் செய்து வந்த ரோந்து வேலையையும் செய்யக் கூடாதெனத் தடுத்து விரட்டி விட்டார்கள். அதற்காகத் துளசிகிரி பயந்துவிடவில்லை. கொஞ்ச நாட்கள் அங்குமிங்குமாகச் சுற்றிக்கொண்டிருந்து விட்டுப் பிறகு எப்படியோ ஒரு சினிமாத் தியேட்டரில் காவல்காரனாக வேலைக்கு அமர்ந்து விட்டான்.

இவ்விவரங்களை யெல்லாம் தம் சகாக்களின் மூலம் கேள்விப்பட்டிருந்ததாலேயே ராம்சிங் அவனை வெறுக்கத் தொடங்கினான். தன் இனத்தான் ஒருவன் இப்படித் தவறாக நடந்து விட்டானே என்பதற்காக அல்ல; அவனுடைய அந்த நம்பிக்கைத் துரோகமான செயல் மற்ற கூர்க்காக்கள் மீதும் தப்பபிப்பிராயம் கொள்ள வழி கோலி, அதனால் அவர்களுடைய பிழைப்புத் தொழிலுக்கே பாதகம் நேர்ந்துவிடுமோ என்ற கவலையாலேயே அவனை இவன் பகைத்து ஒதுக்கினான்.

ஆனால் துளசிகிரி எப்போதும்போல் குஷியாகவே ராம்சிங்கிடம் பேசுவான். இப்போது பேச வந்த காரணம், தான் சினிமாத் தியேட்டரில் செய்யும் காவல் வேலையை விட்டுவிடப் போவதாகவும், அந்த வேலைக்கு அவன் போவதானால் போகலாம் என்றும் சொல்லத்தான்.

ராம்சிங் சுருக்கமாக, ''எனக்கு அங்கெல்லாம் வேலை செய்யப் பிரியமில்லை'' என்று தன் தாய்மொழியில் அலட்சியமாகப் பதில் சொல்லி விட்டு வேகமாக மேலே நடந்தான்.

உண்மையில் அவனுக்கு அந்த வேலை மட்டுமல்ல; வேறு நல்ல இடங்களில் – பெரிய கம்பெனிகளில்—வேலைக்கு அமர வேண்டும் என்ற நோக்கமும் கிடையாது. அதற்குக் காரணம், அவன் மனத்தில் ஒரு பெரிய ஆசை இருந்தது. அதுவே அவனுடைய வாழ்க்கையின் இலட்சியம் என்றும் கூறலாம். அதாவது, இங்கிலாந்தில், லண்டன் மாநகரில், பிரிட்டிஷ் அரசியின் விசேஷப் படைகளில் ஒன்றான கூர்க்காப் படைப் பிரிவில் அவனது உடன் பிறந்த சகோதரன் ஒருவன் சிப்பாயாக இருக்கிறான்; அவனைப் போலத் தானும் அந்தப் படையில் சேர வேண்டும் என்பதுதான் அது! இவ்வாசை நிறைவேறுவது அவ்வளவு எளிதல்ல என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் அதிலே ஒரு நம்பிக்கை. அதற்காக அவன் தன் சகோதரனுக்குக் கடிதங்களும் எழுதிக் கொண்டிருந்தான். 'என்றைக்காவது ஒருநாள் லண்டன் நகர் வீதியிலே நான் வீர நடை போட்டு நடக்கத்தான் போகிறேன்!'

இப்போது அவன் டாக்டர் வாசுதேவன் வாசம் செய்யும் தெருவில் நடந்துகொண்டிருந்தான்.

'டொக், டொக், டொக்!'

மணி ஒன்று. டாக்டரின் வீட்டெதிரே வந்து கேட்டையும், மதில் சுவரையும் தட்டி விசில் ஊதினான் ராம்சிங். அன்று டாக்டருக்கு ஆஸ்பத்திரியில் இரவு 'டியூட்டி' இல்லை போலும். அவருடைய கார் ஷெட்டில் இருந்தது. மாடி அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவன் அங்கிருந்து நடந்தான்.

அடுத்தது விற்பனை வரி அதிகாரியின் பங்களா. அந்தப் பங்களா காம்பவுண்ட் கேட் வழக்கம் போல் சாத்தியிருந்தது. அகலப் போக்கில் அமைந்த இரட்டைக் கேட்

அது. உயரம் குறைவு. யாரும் எளிதில் அதை எகிறித் தாண்டிவிடலாம். ராம்சிங் ஞாபகமாக அங்கு விசில் ஊதவில்லை. தெருவின் தார் போட்ட தரையை மட்டும் இலேசாகத் தட்டினான். அப்படித் தட்டிக் கொண்டே சென்றவன் சட்டென்று நின்றான். அவனுடைய கூரிய பார்வை அந்த இரும்புக் 'கேட்'டை நோக்கிச் சென்றது.

அங்கே, 'கேட்'டுக்கு வெளியே — அதன் ஓரமாக — தெருச் சுற்றி நாய் ஒன்று படுத்துக் கொண்டிருந்தது. கண்ணம்மாவின் கறுப்பு நாய் அல்லவா அது? ஆமாம்; அதுவேதான். அடுத்த தெருவிலிருந்து இங்கு ஏன் வந்திருக்கிறது?

'கேட்'டுக்கு உட்புறம் இன்னொரு நாய் நின்று கொண்டிருந்தது. அந்தப் பங்களாக்காரர்கள் வளர்க்கும் செல்ல நாய் அது. பார்க்கவே பயங்கரமான தோற்றம். அந்த நாய் அங்கே சும்மா நிற்கவில்லை; வெளியில் படுத்திருந்த கறுப்பு நாயுடன் காதல் விளையாட்டு விளையாடத் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தது. குறுக்கே இரும்பு கேட் இருக்கிறதே! அதுதான் அதற்குப் பெரிய தடையாக இருந்தது.

மாடி வீட்டு மன்மதன் குச்சு வீட்டு ரதியைக் காதலிப்பதென்பது மனிதர்களுக்கு மட்டுமே ஏகபோக உரிமை விஷயமா என்ன? சீர்திருத்தம், புரட்சி, முற்போக்கு என்பதெல்லாம் துள்ளிக் குதித்துப் பாய்ந்தோட ஒரு வழிப் பாதையா அமைக்கப் பட்டிருக்கிறது? அல்லது அவை ஓரின உரிமைச் சாஸனங்களா?

ராம்சிங்குக்குச் சிரிப்பு வந்து விட்டது. அவன் சிரிப்பதே அபூர்வம்; இப்போது சிரித்தான்.

''ஹே, குத்தே!...இதர் கியா கர்த்தாஹை?... சலோ, சலோ!'' என்று சொல்லிக் கொண்டே தன் குறுந்தடியால் அந்தக் கறுப்பு நாயை மெல்லத் தட்டினான். அதுவும் எழுந்து வாலைக் குழைத்து ஆட்டியவாறு அங்கிருந்து போக முற்பட்டது. அடுத்த கணம் —

இரும்பு கேட்டுக்கு உட்புறமிருந்த பெரிய நாய் ஒரு பயங்கர உறுமலுடன் பின்னால் சரிந்து, அதே வேகத்தில் சடாரென உயரே தாவிப் பாய்ந்து வெளியே குதித்து எழுந்து ராம்சிங்கின் வலது கால் தொடையை ஒரே கவ்வாகக் கவ்வியது!

இந்த எதிர்பாராத தாக்குதலால் பயந்து பதறிப்போன ராம்சிங் 'ஓ'வென அலறிக் கூவினான். நாயும் தன் கவ்வலை விடாமல் அவனைக் கீழே தள்ளி உருட்டிப் புரட்டியது.

நடுநிசியின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு எழுந்த இந்தப் பயங்கர அலறல் ஒலியால் அந்தத் தெருவே விழித்துக்கொண்டது. மூலைக்கு ஒருவராய் ஓடி வந்தனர். டாக்டர் வாசுதேவனும் மாடியிலிருந்து இறங்கி வந்தார். இத்தனை அமளிக்கும் அந்தப் பங்களா வாசல் கதவு மட்டும் திறக்கப்படவே யில்லை. ஜனக் கூட்டத்தைப் பார்த்துப் பீதியடைந்ததாலோ என்னவோ, ராம் சிங்கை விட்டு விட்டு முன்போல் 'கேட்டைத் தாண்டி உள்ளே குதித்து ஓடி, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரின் முகப்பு மேல் ஏறி உட்கார்ந்து கொண்டது அந்த நாய். கீழே விழுந்து கிடந்த ராம்சிங் தட்டுத் தடுமாறி எழுந்து நின்றான். அவனுடைய கால் தொடையில் நாயின் இரண்டு பற்கள் ஆழப் பதிந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

ஜனக் கும்பலை விலக்கிக் கொண்டு வந்த டாக்டர் வாசுதேவன், மிரண்டு போயிருந்த கூர்க்கா ராம்சிங்கை கைத்தாங்கலாகத் தம் வீட்டுக்கு நடத்தி அழைத்துக் கொண்டு போனார். உடனடியாக அவனுக்கு நாய்க்கடி ஊசி மருந்து செலுத்தப்பட்டது. பிறகு இரத்தக் காயத்துக்கும் மருந்து பூசிக் கட்டுக் கட்டிய டாக்டர் அவனை மறுநாள் காலை தம் காரிலேயே ஏற்றிக் கொண்டு போய் அவன் அறையில் விட்டு விட்டு வந்தார்.

இந்தச் சம்பவம் நடந்து சரியாக ஏழு நாட்கள் ஓடி மறைந்தன. எட்டாம் நாள் இரவு ஒரு மணி.

'டொக், டொக், டொக்!'

கூடத்து அறையில் படுத்திருந்த விசாலாட்சி அவசரமாக எழுந்து போய்க் கதவைத் திறந்தாள். அப்போதுதான் காரை விட்டு இறங்கி வந்த டாக்டர் வாசுதேவன், மாடிப் படிகளில் ஏறிக் கொண்டே மெல்லத் தம் பார்வையைத் தெருப் பக்கம் செலுத்தினார்.

''சலாம், சாப்!'' — விறைத்து நின்று சல்யூட் அடித்த ராம்பகதூர் சிங் 'கேட்'டையும், மதில் சுவரையும் தட்டிக் கொண்டே கம்பீரமாக ஒரு ராணுவ வீரன் போல் நடந்து சென்றான்.

களைத்துப் போயிருந்த டாக்டரின் முகத்தில் இளநகை தவழ்ந்தது.

மாதங்கள் ஐந்து முறிந்து விழுந்தன. புரட்டாசி மாசம் முதல் வாரத்தில் ஒருநாள்.

மாலை ஐந்து மணி வாக்கில் தம் டிஸ்பென்சரியை மூடிவிட்டுக் காப்பி சாப்பிடுவதற்காக வந்தார் டாக்டர் வாசுதேவன்.

''உங்களுக்கு ஒரு விஷயம் தெரியுமோ?'' என்று கேட்டவாறு காப்பி தம்ளரை நீட்டினாள் விசாலாட்சி.

'என்ன?' என்பது போல் அவளை ஏறிட்டுப் பார்த்தார் டாக்டர்.


''கடந்த ஒரு வாரமாக ஏக ரகளை செய்து கத்திக் கொண்டு கிடந்த பக்கத்து வீட்டு நாயின் குரல் இன்று முழுதும் கேட்கவில்லை.''

''இது ஒரு பெரிய விஷயமா?'' என்று நகைத்தார் வாசு.

''நான் சொல்வது அதில்லை. இன்று மத்தியானம் அவர்கள் வீட்டுத் தோட்டத்திலிருக்கும் மாமரத்துக்கு அடியில் பெரிய குழி ஒன்று தோண்டிக் கொண்டிருந்தார்கள்... மாடிக்குப் போனபோது பார்த்தேன்.''

டாக்டரின் முகம் ஜிவ்வென்று வெளிறிச் சிறுத்தது. அவர் பதிலேதும் பேசாமல் மௌனமாகச் சோபாவில் சாய்ந்து கண்களை இலேசாக மூடிக் கொண்டார்.

அன்றிரவு வழக்கம் போல் ரோந்து சுற்றி வரக் கிளம்பிய ராம்சிங் சரியாக ஒரு மணிக்கு வந்து டாக்டர் வாசுதேவன் வீட்டு மதில் சுவரையும், வாயில் கதவையும் தட்டி, டார்ச் விளக்கின் ஒளியை அங்குமிங்கும்



பாய்ச்சிவிட்டு ஒரு நீண்ட விசில் ஊதியவாறு மேலே நடந்தான்.

பகலெல்லாம் சுமாரான வெயிலே காய்ந்தது. என்ருலும் பொழுது சாய்ந்தது முதல் ஒரேபுழுக்கமாக இருந்தது. காற்று மண்டலமே வற்றிவிட்டாற் போன்ற குமைச்சல். அந்த நிலே இப்போது அடியோடு மாறி, சில்லென்ற குளிர் காற்று வீசியது. சற்றைக்கெல்லாம் வானத்தில் மினுக்கிக் கொண்டிருந்த நட்சத்திரங்கள் மறைந்தன. எங்கிருந்தோ திமு திமுவெனக் கரியமேகங்கள் வந்து சூழ்ந்து விண் வெளியை இருட்காடாக்கின. இதொன்றையுமே கவனியாமல் சாவதானமாக நடந்து கொண்டிருந்த கூர்க்கா ராம்சிங் அந்தத் தெருவைத் தாண்டி அடுத்த தெருவுக்குத் திரும்பிஞன்.

இருண்டு கிடந்த மேற்கு வான் சரிவில் திடீரென்று ஒரு மின்னற் பாளம் கொடிகளே வீசிப் பிளந்து மீண்டும் தைத்து விட்டு மறைந்தது. அதைத் தொடர்ந்து பிரும்மாண்டமான மரம் ஒன்று முறிந்து சாய்வது போன்ற பேரொலியுடன் ஓர் இடி இடித்தது. அடுத்த சில நிமிடங்களுக்கெல்லாம் சட சட வென்று மழை கொட்ட ஆரம்பித்து விட்டது.

தரையைத் தட்டியவாறு நடந்து கொண்டிருந்த ராம் சிங், தெருவின் இடதுபுறத்தில் சாத்திக் கிடந்த ஒரு 'பங்க்' கடையை நோக்கி ஓடி, ஒண்டி நின்று கொண்டான். அந்த 'பங்க்'குக்கு 'மங்கி டாப்' போடப்பட்டிருந்ததால் நிற்பதற்கு ரொம்பவும் சௌகரியமாக இருந்தது. மழை ஓயும்வரையில் அவன் அங்கு நனேயாமல் நிற்கலாம்.

விநாடிக்கு விநாடி மழை வலுத்துச் சாடியது. இடியும் மின்னலும் வெறியாட்டம் போட்டன.

'' அம்மாவ் !.... அம்மோவ்!....''

மழையின் பேரிரைச்சலே மேவிக் கொண்டு சின்னஞ்சிறு குரல் ஒன்று எழுந்து ஒலித்தது.

கண்ணேப் பறிக்கும் ஒரு மின்னல். பயங்கரமானதொரு பேரிடி.

'' அம்மாவ் !... அம்மோவ் !...''— மீண்டும் அதே தீனக் குரல். அலறி அழும் ஓசை. கடையில் ஒண்டி நின்ற ராம்சிங் அவசரமாகச் சுற்று முற்றும் பார்த்தான். அவன் நின்றிருந்த கடைக்குப் பக்கத்தில் ஒரு மொட்டை மாடி வீடு. அதற்கு அடுத்து அந்தக் காலி மனே. அதில் தான் விறகுத் தொட்டி இருக்கிறது. அவ் விறகுத் தொட்டியின் ஓரத்தில் வேப்ப மரம். கண்ணம்மாவின் வாசஸ்தலம் அது. அங்கிருந்து தான் அழுகைக் குரல் வருகிறது. அதோ, அந்தமரத் தடியில் சிறிய கரிய உருவம்ஒன்றுதெரிகிறதே!...

'' அம்மாவ் !... அம்மோவ்!...''

வருண பகவானின் வயிறு வெடித்து விட்டதோ? அட்டகாசப் பேரோசையுடன் பொழிந்தது மழை.

ராம்சிங் தன் பார்வையை இன்னும் கூர்மையாக்கி அவ்வேப்ப மரத்தடியை நோக்கிச் செலுத்திஞன். 'அது கண்ணம்மாவின் பிள்ளே ரங்கனின் அழுகுரல் அல்லவா? அந்தப்



"பத்து மாதத்துக்கு முன்னே ராமு, பத்தாயிரம் ரூபாய்க்கு செகண்ட் ஹாண்ட் கார் வாங்கினான். ரெண்டு மாதம் கழித்து அதை, கோபு வாங்கி மூன்று மாதம் பொறுத்து நச்சுவுக்கு விற்றான். அதைப் போன மாதம் பூபாலன் வாங்கினான். இப்ப அதே செகண்ட் ஹாண்ட் கார் பதினெட்டாயிரம் ரூபாய் விலைக்கு வந்திருக்கு. வேணுமா?"

பாலகனை விட்டு விட்டு அவள் எங்கே போனாள்? அங்கேயே இருந்தால் குழந்தைப் பையன் அவளை ஏன் கூப்பிட்டுக் கொண்டு அழ வேண்டும்?'

கூர்க்காவின் மனம் குழம்பியது. 'சலாம், கூர்க்கா!' என்று அச்சிறுவன் பிறந்த மேனியாகவும், பரட்டைத் தலையுடனும் விறைத்து நின்று சல்யூட் அடிப்பானே அந்தக் காட்சி அவன் மனக் கண்ணில் தோன்றி மறைந்தது.

வேப்ப மரத்தடியில் சிறுவன் ரங்கன் மட்டுமே தனியாக மழையில் நனைந்து நின்று அழுது கொண்டிருந்தான்.

''ரங்கா! இதர் கியா கர்த்தா ஹை?.... ஆவ், ஆவ்!''

தப தபவென்று ஓடி வந்த ராம்சிங், குழந்தைப் பையனை அப்படியே தூக்கி அணைத்துக் கொண்டு விறகுத் தொட்டியண்டை விரைந்தான். மூங்கில் படல் கதவு கொஞ்சமாக ஒருக்களித்துத் திறந்திருந்தது.

''கண்மா!.... ஹே, கண்மா!''

கூர்க்கா கூவினான். பதில் இல்லை. ஆனால் தொட்டியின் உள்ளே கரி மூட்டைகளுக்கு அப்பால் இருவர் மெல்லப் பேசிச் சிரிக்கும் ஒலி கேட்டது. கடை முதலாளி உட்காரும் இடத்தில் மேசைக்கு அடியிலே படுத்திருந்த அந்தக் கறுப்பு நாய் மட்டும் உடனே எழுந்து வாலை ஆட்டிக் கொண்டு அவனைப் பார்த்து மகிழ்ச்சி முனகலிட்டது.

''ரங்கா! அந்தர் சலோ! சலோ, பச்சா!''

சிறுவனை விறகுத் தொட்டிக்குள் விட்டுப் போகச் சொல்லிவிட்டு வேகமாகத் திரும்பி நடந்தான். இப்போது அவன் தெப்பமாக நனைந்து விட்டான். இனிமேல் எங்கேயும் ஒதுங்கி நின்று பயனில்லை. நேரே தன் இருப்பிடம் நோக்கி நடக்க வேண்டியதுதான்.

ராம்சிங் அந்தத் தெருவைக் கடந்து, இன்னொரு தெருவில் இறங்கி மெயின் சாலையில் ஏறித் தன் அறையை நெருங்கின சமயம், திடீரென்று அப்படியே விறைத்து நின்றான். ஒரு பயங்கரமான காட்டுக் கூச்சல். அவன்தான் அப்படிக் கத்தினான். பிறகு நாய் மாதிரி குலைத்து ஊளையிட்டுக் கொண்டே அறைக்கு எதிரில் போய்த் தட்டுத் தடுமாறிச் சுருண்டு விழுந்தான்.

மழை ஓய்ந்தது.

மறுநாள் இரவு. வாசலில் கார் ஹாரன் ஒலி கேட்டுப் பாதித் தூக்கத்தில் கூடத்து அறையிலே படுத்துக் கிடந்த விசாலாட்சி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்றரை.

'இன்றைக்கு அந்தக் கூர்க்கா வரவில்லையோ? வந்த சத்தமே கேட்கவில்லையே! அவன் வரும்போது நான் தூங்கிவிட்டிருப்பேனோ?' — இவ்வாறெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே அவசரமாய்ப் போய்க் கதவைத் திறந்தாள் விசாலாட்சி.

காரை ஷெட்டில் விட்டு விட்டுக் கதவைக் கூடப் பூட்டாமல் ஏதோ சிந்தனையுடன் தம் வழுக்கைத் தலையைத் தடவியவாறு உள்ளே வந்தார் டாக்டர் வாசுதேவன்.

''ஏன் இவ்வளவு தாமதம்? மணி ஒன்றரை ஆகிறது'' — விசாலாட்சி கேட்டாள்.

மாடிப் படி ஏறப் போன டாக்டர் தயங்கி நின்று தம் மனைவியை ஏறிட்டுப் பார்த்தார். பிறகு ''முடிந்து போன கேஸ் ஒன்றின் சர்ட்டிஃபிகேட்டில் கையெழுத்துப் போட வேண்டியிருந்தது. அதனால் கொஞ்சம் லேட்'' என்றார் கரகரத்த குரலில்.

விசாலாட்சி, டாக்டரின் மனைவி அல்லவா? அவர் சொன்னதைப் புரிந்துகொண்டாள்.

''இன்றைக்கு நீங்கள் மட்டும் லேட் இல்லை; கூர்க்கா ராம்சிங்கூட லேட்தான். இன்னும் அவன் ரோந்துக்கு வரவில்லை'' மெல்லச் சிரித்தாள் விசாலாட்சி.

டாக்டர் மௌனமாக நின்றார்.

''அவன் ஏன் வரவில்லையோ? இப்படி ஒரு நாளும் தாமதமானதில்லையே.''

சட்டென்று திரும்பிய டாக்டர், ''அவன் ஏன் வரவேண்டும்?'' என்று கேட்டார்.

''என்ன இது கேள்வி? எப்போதும் தவறாமல் வருகிறவன்; அவன் வரமாட்டானா?''

டாக்டர் வாசுதேவனின் கண்கள் கலங்கின. தெருவைப் பார்த்துக்கொண்டு அமைதியாக நின்ற அவர் சில வினாடிகளுக்குப் பின் ஏதோ சொல்ல வாயெடுத்தார். ஆனால் தாம் நினைத்ததைச் சொல்ல விரும்பாதவர் போல் மெல்லத் தலையசைத்துக்கொண்டு ''அவன் வருவான்!'' என்று முணுமுணுத்தவாறே மாடிப் படிகளில் ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்து ஏறினார்.



மாமனார் வீடு சொர்க்கம்.... ஆனால்!

தமிழ் நாட்டில் ஆடி மாதத்தில் மாப்பிள்ளைகளை அழைப்பது போல் வங்காளிகள் வருடத்துக்கு ஒரு தினம் மாப்பிள்ளை தினம் (ஜமாய் ஷஷ்டி) கொண்டாடுகிறார்கள். இதைப் பற்றி ஒரு வேடிக்கைக் கதை உண்டு. ''ஜமாய் ஷஷ்டி'' தினத்துக்கென்று மாமனார் வீடு வந்த மாப்பிள்ளை ஒருவர் தடபுடலான விருந்தைப் பார்த்து அங்கேயே சில நாட்கள் தங்கிவிட்டார். ஒரு நாள் அவர் உண்ட மயக்கத்தில் சுவரில் ''சொசுர்பாடி சொர்க்கவாசி'' என்று எழுதினார்.

ஏற்கனவே மாமனார், மாப்பிள்ளை அதிகம் தங்கியது குறித்துச் செய்வதறியாமல் தவித்துக் கொண்டிருந்தார். எரிகிற அடுப்பில் எண்ணெய் ஊற்றியது போல் மாப்பிள்ளை சுவரில் எழுதியதைப் பார்த்ததும் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது மாமனாருக்கு. மாமனார் கொட்டை எழுத்தில் எழுதினார்: ''ஜோதி சார் தின் தாகே.''

வெளியில் சென்றிருந்த மாப்பிள்ளை வந்ததும், முதலில் அவர் கண்ணில் பட்டது மாமனார் எழுதியிருந்ததுதான். வந்தது ரோஷம். சாமான்களைக் கட்டிக் கொண்டு ஊருக்குக் கிளம்பி விட்டார்.

மாப்பிள்ளை கிளம்பும்படி அப்படி என்ன மந்திரத்தை மாமனார் எழுதினார்? மாப்பிள்ளை உண்ட மயக்கத்தில் எழுதியது: ''மாமனார் வீடு சொர்க்கம்!'' அதைத் தொடர்ந்து, மாமனார் எழுதியது: ''ஆனால் நான்கு நாட்கள் தங்கினால்மட்டுமே!''-தகவல்: கவிதா

நத்தை வேகம்!

உலகில் மிக மிக மெதுவாக நகரும் ஜீவராசி நத்தையாகும். நத்தை ஒரு மைல் தூரத்தைக் கடக்கும் நேரம் 2857 மணி 8 நிமிடம், 34 விநாடி. ஒரு மைல் தூரம் செல்ல நான்குமாதமாகும் என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டறிந்த முடிவாகும்.

- ஓமலூர் இரா. சங்கரன்

பாவம் மாணவர்கள்!

மாணவர்கள் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று பாடம் படிக்கும் பொருட்டு அண்மையில் பிரஞ்சு அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்துள்ளது. அதன்படி, தகுந்த காரணமின்றிப் பள்ளி மாணவர்கள் அடிக்கடி 'டிமிக்கி' கொடுத்தால் அபராதம் விதிக்கப்படும் - மாணவர்களுக்கு அல்ல - அவர்களின் பெற்றோர்களுக்கு! இந்த அபராதம் அதிகபட்சம் 2,000 பிராங்குகள் வரையில் இருக்கும்.



அதுமட்டுமின்றி, பள்ளி நேரங்களில் பிரைமரி, செகண்டரி ஸ்கூல் சிறுவர்களைச் சினிமா தியேட்டர்களில் பார்த்தால், அவர்களைப் பிடித்து அருகில் உள்ள பள்ளியில் கொண்டு போய்ச் சேர்க்கவும் போலீசாருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது இச்சட்டம். பாவம்பிரான்சு நாட்டு மாணவர்கள்! -ஏ.கே.

என்ன கவலையோ?

